13. ஆனால் இந்த சூழலில் யாருமே எதிர்பாராத தருணத்தில், பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் 27.09.2014 அன்று அக்காவையும், என்னையும், திரு.சுதாகரன் மற்றும் திருமதி. இளவரசியையும் தண்டித்து தீர்பளித்தது. எங்கள் மீது தொடரப்பட்டது பொய் வழக்கு என்பதாலும், மிகைப்படுத்தபட்ட காரணிகளை அந்த பொய் வழக்கு கொண்டிருந்ததாலும், நாங்கள் வழக்கை நன்றாக நடத்திய காரணத்தாலும் எந்த வகையிலும் குற்ற தீர்ப்பு அளிக்க இயலாது எனும் நம்பிக்கையில் நாங்கள் அனைவரும் இருந்து வந்தோம். சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்த வழக்குகள் பொய்யானவை என சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நாங்கள் நிரூபித்திருந்த சூழலில் பெரும் அதிர்ச்சி தரும் விதமாக 27.09.2014 அன்று பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் எங்களுக்கு எதிரான வகையில் தீர்பளித்து நால்வரையும் சிறையில் அடைத்தது. தமிழக முதல்வராக தமிழகத்தை விட்டு கிளம்பி சென்ற அக்கா பெங்களூரு பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டார்.

14. இதன் காரணமாக அக்கா பெரும் மன அழுத்தத்திற்கு ஆளானார். சட்டபடியாக போராடி அந்த களங்கத்தை துடைக்க வேண்டும் எனும் வைராக்கியத்தோடு அக்கா இருந்து வந்தார். சுமார் 22 நாட்கள் சிறையில் இருந்து நீதிமன்ற பிணை உத்தரவு பெற்று அக்கா தமிழகம் திரும்பினார். அதன் பின்னர் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் எங்களின் மேல்முறையீட்டு வழக்குகளின் விசாரணை நடந்து வந்தது. இந்த காலக்கட்டத்தில் அக்கா மனரீதியாக பெரும் போராட்டத்தை எதிர் கொண்டு வந்தார். தமிழக மக்கள் மற்றும் இந்திய அளவிலான அரசியல் பார்வையில் திமுக தனக்கு பெரும் களங்கத்தை சுமத்தி விட்டது எனும் பெரும் வருத்தம் அவரை வாட்டி வதைத்து வந்தது. இதன் காரணமாக

"Before me

[illegible]
Asst. Sec. [illegible]
Central [illegible]

அக்காவுக்கு ஏற்கனவே இருந்து வந்த உயர் ரத்த அழுத்தமும், உயர் சர்க்கரை அளவும் கூடுதலானது. மன அழுத்தம் அதிகமாக இருந்து வந்ததால் அக்காவின் உடல் நிலையும் அவ்வப்போது சரியில்லாமல் போனது. அதன் பின்னர் பலகட்ட கர்நாடக உயர்நீதிமன்ற விசாரணைக்கு பிறகு, "27.09.2014 அன்று பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை" ரத்து செய்து, எங்கள் நால்வரையும் 11.05.2015 அன்று நிரபராதிகள் என கர்நாடக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

15. தன் மீது திமுகவும் அதோடு கைகோர்த்தவர்கள் சுமத்திய பழியிலிருந்து மீண்டு விட்டோம் எனும் மனநிறைவில் அக்கா இருந்து வந்தார். ஆனாலும் மேற்படி கர்நாடக உயர்நீதிமன்றம் தந்த "குற்றமற்றவர்கள்" எனும் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடுகள் மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. நாங்களும் சட்டரீதியாக அந்த வழக்குகளில் எதிர்வழக்காடினோம். பெங்களூர் சிறைக்கு சென்று பிணையில் வெளிவந்த பின்னர் அக்காவின் உடல் நிலை அவ்வப்போது சீர்கெட்ட காரணத்தினால், பல சிறப்பு மருத்துவர்கள் அக்காவுக்கு போயஸ் தோட்ட இல்லத்தில் வந்து மருத்துவ ஆலோசனையும் சிகிச்சையும் கொடுத்தார்கள். அக்காவுக்கு பல வருடங்களாகவே அவ்வப்போது வயிற்று போக்கு இருந்து வந்தது. அது 2014 இறுதியிலிருந்து அக்காவுக்கு மன அழுத்தம் கூடுதலான பிறகு வயிற்று போக்கு அடிக்கடி ஏற்பட ஆரம்பித்தது. (இதன் காரணமாய் கட்டுபாடில்லாமல் அவ்வப்போது மலம் வெளியேறும். அதற்காக அக்கா டையபர் அணிவார்) இது தவிர அவ்வப்போது அக்காவின் உடலில் அரிப்புகளும் வரத்தொடங்கியது. "மன அழுத்தம் மற்றும் மன கவலை இல்லாத வாழ்க்கை முறைக்கு மாற வேண்டும்" என பல சிறப்பு மருத்துவர்கள் அக்காவுக்கு ஆலோசனை வழங்கினார்கள். ஆனாலும் தமிழக நலனும், தமிழக மக்களின் நலனுமே என் வாழ்க்கையின் நோக்கம் எனும் அடிப்படையில் அக்கா தமிழக முதல்வராக அயராது உழைத்து வந்தார்.

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

16. கர்நாடக உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு சென்னை டாக்டர் R.K. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.P.வெற்றிவேல் இராஜினாமா செய்ய, அங்கு 27.06.2015 அன்று நடைபெற்ற இடைத்தேர்தலில், "தமிழக மக்களின் விருப்பத்தின்படியும், 1½ கோடி அதிஅதிமுக தொண்டர்களின் வாழ்த்துக்களோடும், தெய்வ அருளோடும் அக்கா மாபெரும் வெற்றி பெற்றார். 2016 பிப்ரவரி/ மார்ச் மாதக்காலக்கட்டத்தில் அக்காவுக்கு நடப்பதில் சில சிரமங்கள் ஏற்பட்டன. அது தொடர்பான பிரச்சினைகளின் காரணமாகவும் அக்காவின் உடல்நிலை அவ்வப்போது சரியில்லாமல் போனது. அதற்கு தேவையான சிகிச்சைகளையும் அக்கா எடுத்துக் கொண்டார். அக்காவை பொறுத்தவரை எந்த ஒரு மருத்துவர் தரும் ஆலோசனையும் திரும்ப கேள்விகள் கேட்டு திருப்தி அடைந்த பின்னரே ஏற்றுக்கொள்வார். சிகிச்சை பிடிக்கவில்லை என்றால் அதை தொடர மாட்டார். இது ஆரம்ப காலம் முதலே அக்காவின் சுபாவமாகும். அக்காவுக்கு தேவையான மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சை தரும் அனைத்து மருத்துவர்களையும் ஒருங்கிணைக்கும் பணியை எனது உறவினரான டாக்டர். சிவக்குமார் அவர்கள் செய்ய வேண்டும் என அக்கா பணித்திருந்தார். 2000 காலக்கட்டதிலிருந்தே மேற்படி மருத்துவ சிகிச்சை ஒருங்கிணைப்பு பணியை அக்காவின் விருப்பத்தின்படி டாக்டர். சிவக்குமார் செய்து வந்தார்.

17. மே 2016 பொதுத்தேர்தலுக்கு முன்பாக அக்காவுக்கு நடப்பதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு அடியையும் மிகுந்த வலியுடன் சிரமப்பட்டே அக்கா எடுத்து வைப்பார். அதன் காரணமாக அக்கா அவரது வாகனத்திலிருந்து இறங்கும் படிகட்டு, படிக்கட்டுகளை தவிர்த்து நடப்பதற்கு ஏதுவாக கைப்பிடியுடன் கூடிய நடைமேடைகள், சிறப்பு நாற்காலி, அக்கா கலந்து கொள்ளும் விழா ஏற்பாடுகள் மற்றும் மேடைகள் என பார்த்துப்பார்த்து நான் உரிய நபர்களுக்கு அறிவுரை தந்து தேவையான வசதிகளை செய்து வந்தேன். போயஸ் தோட்டத்திலும் அதன்படியே அக்காவுக்கான வசதிகளை நான் செய்து வந்தேன்.

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE

மேலும் இந்த நடைபிரச்சினைக்காகவும் சிறப்பு மருத்துவர்கள் அக்காவை போயஸ் தோட்டத்தில் வந்து பார்த்தார்கள். இது தவிர அக்கா நடக்கும் போது உடலில் ஒரு சிறு அதிர்வு அவ்வப்போது வந்து போகிறது என்றும் சொல்வார். அதற்கும் வெளிமாநில மருத்துவர்களை கொண்டு உரிய சிகிச்சையும் மருத்துவ ஆலோசனையும் பெறப்பட்டது.

18. அதே போல அக்காவின் சர்க்கரை அளவை அறிய டாக்டர்.சாந்தாராம் அவர்களும் மற்றும் டாக்டர்.ஜெயஸ்ரீ அவர்களும் ஆலோசனை வழங்கியபடி அக்காவின் கையில் ஆடைக்குள் வெளியே தெரியாத விதமாக Flash Glucose Accounting System எனும் கருவியை கட்டி இருப்பார். சுமார் 35 நாட்களுக்கு ஒரு முறை அந்த கருவி அக்காவின் சர்க்கரை அளவுகளை பதிவு செய்யும். அதன்படி 2015 - 2016 காலக்கட்டத்தில் அக்காவுக்கு சர்க்கரை அளவுகளை அறிய அந்த கருவி மருத்துவர்களுக்கு பெருமளவில் உதவியது. சுமார் 7 அல்லது 8 கருவிகளை அக்கா அவ்வாறு பயன்படுத்தினார். அதனடிப்படையில் அக்காவுக்கு சிகிச்சைகளை மேற்படி மருத்துவர்கள் கொடுத்து வந்தனர்.

19. மே 2016 தமிழக சட்டமன்ற பொதுத்தேர்தலில் அஇஅதிமுக போட்டியிட்ட 234 இடங்களில் 2 தொகுதிகளுக்கான தேர்தல் இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது. மீதமுள்ள தமிழகத்தின் 232 தொகுதிகளில் 134 தொகுதிகளில் அஇஅதிமுகவை மாபெரும் வரலாற்று வெற்றி பெற செய்து, அக்கா மீண்டும் ஆட்சியை தக்க வைத்தார். அதேபோல மே 2016 சட்டமன்ற பொதுதேர்தலில் மீண்டும் அக்கா அவர்கள் சென்னை டாக்டர் R.K. நகர் சட்டமன்ற தொகுதியில் நின்று தொகுதி மக்களின் பேராதரவுடன் வெற்றி பெற்றார். அக்காவின் உடல்நிலை காரணமாகத்தான், ஒவ்வொரு தேர்தலிலும் தமிழகத்தின் ஏதாவது ஒரு மாவட்ட தொகுதியில், அக்கா தேர்தலில் நிற்கும் வழக்கத்தை மாற்றி சென்னையிலேயே தேர்தலில் நிற்கும் சூழல்

"Before me"
Asst. Superintendent
Central Prison
BANGALORE.

ஏற்பட்டது. மேலும் 2016 மே மாதம் நடந்த பொதுதேர்தல் சுற்றுபயணம் மற்றும் ஏற்பாடுகள் கூட அக்கா அவர்களின், உடல்நிலையை கருத்தில் கொண்டே சில மாற்றங்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கா இரண்டு முறை வெற்றி பெற்ற "டாக்டர் R.K. நகர் சட்டமன்ற தொகுதி" ன் பொறுப்பாளராக அஇஅதிமுக வடசென்னை வடக்கு மாவட்ட செயலாளரான திரு.P.வெற்றிவேல் இருந்து வந்தார்.

20. தமிழக நலனுக்காகவும், மகளிரின் மேம்பாட்டுக்காகவும், மாணவர்களின் நலனுக்காகவும், தொழிலாளர்கள் நலன் மற்றும் வர்த்தகம் தழைத்து ஓங்க, உறுதியான நிலைபாட்டுடன் திறமையான ஆட்சியை தமிழகத்தில் அக்கா புரிந்து வந்தார். மத்திய அரசின் பல திட்டங்கள், தமிழக மக்களின் நலனை பெருமளவில் பாதிக்கும் எனும் சூழலில் அவ்வகை திட்டங்களை அக்கா பலமாக எதிர்த்து வந்தார்.

21. நான் அக்காவின் அரசியல் மற்றும் நிர்வாக விஷயங்களில் எப்போதும் தலையிடுவதில்லை. அக்காவே அதிகாரிகளை அழைத்து விவாதித்து உரிய ஆலோசனைகளை வழங்குவார். கட்சி ரீதியான விஷயங்களை என் மூலமாக இரண்டாம் கட்ட தலைவர்களுக்கு அக்கா விவரம் கூற சொல்லுவார். அக்காவின் அறிவுறுத்தலின் பேரில் அது போன்ற கட்சி ரீதியான விஷயங்களில் நான் செயல்படுவேன். தமிழக மக்களின் நலனை பேணி பாதுகாக்க தனது உடல்நிலையை சற்றும் பொருட்படுத்தாமல் அக்கா, தனது அயராத பணியின் காரணமாக தமிழக முதல்வராக சிறப்பாக செயல்பட்டு வந்தார். அக்கா அதிக மன உறுதியும், தளராத மனமும், பிடிவாத குணமும் கொண்டவர். தான் எடுத்த முடிவிலிருந்து அதிகம் மாறாதவர். நான் என்னால் இயன்றவரை அக்காவின் நலனை பேணி பாதுகாக்க என் வாழ்க்கையையே அர்பணித்தவள்.

22. 2014 இறுதிக்கு பிறகு அக்கா உடல் நலமில்லாமல் போன விஷயம் அக்கா அவர்களிடம் பணியாற்றிய அனைத்து அரசு அதிகாரிகள், காவல்துறை தனி பாதுகாப்பு அதிகாரிகள், தேசிய

Before me
Asst. Superintendent
Central Prison
BANGALORE

பாதுகாப்புபடை கமோண்டோக்கள் போன்ற அனைவருக்கும் நன்றாகவே தெரியும். நானும் என்னாலான அனைத்து ஆலோசனைகளை வழங்கி அக்கா அவர்களின் விருப்பத்தின் பேரில் பல சிறப்பு மருத்துவர்களை வரவழைத்து அக்காவுக்கு மருத்துவ ஆலோசனை பெற உறுதுணையாய் இருந்துள்ளேன். எனக்கும் ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை வியாதி போன்ற பிரச்சினைகள் இருந்து வந்ததால் நானும் அக்காவும் மூன்று மாதத்துக்கு ஒருமுறை அப்பல்லோ மருத்துவமனையில் அனைத்து மருத்துவ பரிசோதனைகளையும் தொடர்ந்து எடுத்து வந்தோம். அப்பல்லோ மருத்துவமனையிலிருந்து போயஸ் தோட்ட இல்லத்திற்கு வந்து பரிசோதனைக்கான மாதிரிகளை எடுத்து செல்வார்கள்.

23. அப்பல்லோ மருத்துவமனையின் உயர் சிகிச்சை தரத்தின் மீது எப்போதும் அக்கா பெரும் நம்பிக்கை கொண்டவர். அதனாலயே தனது அனைத்து மருத்துவ பரிசோதனைகளையும் அப்பல்லோ மருத்துவ மனையிலேயே தொடர்ந்து செய்து வந்தார். தவிர அவருக்கு 2014 இறுதியிலிருந்து சிகிச்சை அளித்த பெரும்பான்மையான மருத்துவர்கள் அப்பல்லோ மருத்துவமனை சார்ந்தவர்களே. அக்கா தனது மருத்துவ குறிப்புகளை (அதாவது அன்றாட ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவுகளை) தன் கையாலேயே எழுதி வைக்கும் பழக்கம் கொண்டவர். அதே போல தான் அன்றாடம் என்ன சாப்பிட்டார் எத்தனை மணிக்கு சாப்பிட்டார் போன்ற விவரங்களையும் அக்கா கைப்பட எழுதி வைக்கும் பழக்கம் கொண்டவர். இது தவிர 2014 இறுதிக்கு பிறகு அக்கா அவர்களுக்கு போயஸ் தோட்டத்துக்கு வந்து சிகிச்சை அளித்த மருத்துவர்கள், தங்களின் மருத்துவ குறிப்புகளை மருத்துவர்கள் தங்கள் கையால் எழுதுவதற்காகவே ஒரு நோட்டு புத்தகத்தை அக்கா நேரடியாக பராமரித்து வந்தார். மேற்படி அக்கா எழுதிய அனைத்து குறிப்புகளும், மருத்துவர்கள் எழுதி வைத்த நோட்டு புத்தகமும் போயஸ் தோட்ட இல்லத்தில் அக்காவின் அறையில் தான் வைக்கப்பட்டுள்ளது. மேலும் மே 2016 சட்டமன்ற பொதுத்தேர்தலுக்கு முன்பாக அக்காவுக்கு போயஸ் தோட்டத்தில்

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகளை, அக்காவே வீடியோ எடுக்கச் சொல்லி நான் எடுத்த வீடியோக்களும் அக்காவின் அறையில் தான் உள்ளன.

24. 2014 இறுதியிலிருந்து ஜீன் 2016 வரை அக்கா அவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களின் விவரம் கீழ்கண்ட அட்டவணைபடியாகும்.

| வரிசை எண். | மருத்துவரின் பெயர் | மருத்துவ துறை | மருத்துவமனை பெயர் |
|---|---|---|---|
| 1. | டாக்டர்.சாந்தாராம் | டயபெட்டாலாஜிஸ்ட் | அப்பல்லோ மருத்துவமனை |
| 2. | டாக்டர். ஜெயஸ்ரீ கோபால் | டயபெட்டாலாஜிஸ்ட் மற்றும் தைராய்டு | அப்பல்லோ மருத்துவமனை |
| 3. | டாக்டர். சோனாலி | டயபெட்டாலாஜிஸ்ட் | மும்பை |
| 4. | டாக்டர்.இராமசந்திரன் | டயபெட்டாலாஜிஸ்ட் | டையபெட்டிக் சென்டர்,கிண்டி. |
| 5. | டாக்டர். முத்து செல்வம் | பிஸிசியன் | அரசாங்க மருத்துவர் |
| 6. | டாக்டர். பாலசுப்ரமணியம் | பிஸிசியன் | அப்பல்லோ மருத்துவமனை |
| 7. | டாக்டர். முரளிதர் இராஜகோபால் | டர்மெட்டாலாஜிஸ்ட் | அப்பல்லோ மருத்துவமனை |
| 8. | டாக்டர். இரவிசந்திரன் | டர்மெட்டாலாஜிஸ்ட் | அப்பல்லோ மருத்துவமனை |
| 9. | டாக்டர். பார்வதி | டர்மெட்டாலாஜிஸ்ட் | தனியார் மருத்துவமனை |
| 10. | டாக்டர். இரவிந்திரன் | கண் மருத்துவர் | உதி கண் மருத்துவமனை |
| 11. | டாக்டர். குணசீலன் | டென்டிஸ்ட் | டாக்டர். பிபி இராஜன் மருத்துவமனை |

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE

| வரிசை எண். | மருத்துவரின் பெயர் | மருத்துவ துறை | மருத்துவமனை பெயர் |
|---|---|---|---|
| 12. | டாக்டர். அருள் செல்வன் | நியூரோலாஜிஸ்ட் | அப்பல்லோ மருத்துவமனை |
| 13. | டாக்டர். சாருலதா | நியூரோலாஜிஸ்ட் | மும்பை/ |
| 14. | டாக்டர். மீனாட்சி சுந்தரம் | நியூரோலாஜிஸ்ட் | அப்பல்லோ மற்றும் இராமசந்திரா மருத்துவமனை |
| 15. | டாக்டர். சரிதா | நெப்ரோலாஜிஸ்ட் | தனியார் மருத்துவமனை |
| 16. | டாக்டர். சிவஞானசுந்தரம் | தைராய்டு | அப்பல்லோ மருத்துவமனை |
| 17. | டாக்டர். ஷாஜன் ஹெக்டே | ஆர்தோ | அப்பல்லோ மருத்துவமனை |
| 18. | டாக்டர். பாபு மனோகர் | இ.என்.டி | அப்பல்லோ மருத்துவமனை |
| 19. | டாக்டர். அனிர்பன் பிஸ்வாஸ் | இ.என்.டி | கல்கத்தா |
| 20. | டாக்டர். பிர்மாநந்தம் | கார்டியோலாஜிஸ்ட் | தனியார் மருத்துவமனை |

25. ஜீன் 2016 காலக்கட்டத்திலிருந்து அக்காவுக்கு உடம்பில் பல இடங்களில் கொப்புளங்களும், அரிப்புகளும், தடிப்புகளும் உண்டாக தொடங்கின. இதன் காரணமாய் அக்கா மிகவும் சிரமப்பட்டு வந்தார். அதற்காக மேற்சொன்ன மருத்துவர்களில் சிலரை அக்காவே நேரில் வரவழைத்து கலந்தாலோசித்தார். மேற்படி தோல் பிரச்சினையினால் அக்கா தனது அன்றாட அரசு பணிகளை கூட மிகவும் சிரமப்பட்டே செய்து வந்தார். இந்த நிலையில் மேற்படி டாக்டர். இரவிசந்திரன் மற்றும் டாக்டர். பார்வதி இருவரும்

"Before me"

Asst. Superintendent
Central Prison
...ALORE

செப்டம்பர் 2016 முதல் வார வாக்கில் போயஸ் தோட்டத்துக்கு வந்து அக்காவுக்கு சிகிச்சை அளித்தனர். தோல் பிரச்சினையிலிருந்து அக்காவுக்கு நிவாரணம் வேண்டும் என்பதற்காக சிறிது காலத்துக்கு சிறிதளவில் ஸ்டிராய்டு கொடுக்க முடிவெடுத்தார்கள். அவர்களின் ஆலோசனைப்படி ஸ்டிராய்டு மாத்திரைகள் கொடுக்கப்பட்டது. அதனால் தோல் பிரச்சினையிலிருந்து நிவாரணம் கிடைத்தது. அதன் பிறகு அந்த மருத்துவர்கள் ஸ்டிராய்டு மருந்தின் அளவை படிப்படியாக குறைத்தார்கள்.

26. இந்த நிலையில் 19.09.2016 தேதியிலிருந்து அக்கா அவர்களுக்கு காய்ச்சல் விட்டுவிட்டு வந்தது. அப்போது டாக்டர்.சிவக்குமார் அவர்கள் சபரிமலைக்கு போயிருந்தார். நான் அவரை தொடர்பு கொண்டு பேசி அக்காவுக்கு உடல்நலமில்லை என்றேன். அவர் உடனடியாக அப்பல்லோவிலிருந்து போயஸ் கார்டன் வந்து ரத்தம் மற்றும் சிறுநீர் மருத்துவ பரிசோதனைகள் மேற்க்கொள்ள ஏற்பாடு செய்தார்.

27. 21.09.2016 காலையிலிருந்தே அக்காவுக்கு காய்ச்சல் அதிகரித்தது. நான் அக்காவிடம், "இன்றைய அலுவல்களை தயவு செய்து ரத்து செய்து விடுங்கள்" என சொன்னேன். அதற்கு அக்கா, "மத்திய அமைச்சர் திரு.வெங்கய்யா நாயுடு மெட்ரோ ரெயில் விழாவிற்கு வருகிறார். ஆகவே நான் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்" என பிடிவாதத்துடன் விழாவிற்கு கிளம்பி சென்றார். விழாவின் போதே அக்காவுக்கு அதிக உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் அக்கா விழா முடிந்த பிறகு உடனடியாக போயஸ் தோட்டத்துக்கு வந்து விட்டார். வந்த உடனேயே படுக்க போகிறேன் என சொல்லி விட்டு ஓய்வு எடுத்தார். ஓய்வு எடுத்த பிறகு அவரது உடல்நிலை சரியாகி விட்டது என்று கூறினார். டாக்டர் சிவக்குமார் மூலமாக மருத்துவர்களிடம் ஆலோசனை பெறப்பட்டது. மறுநாள் ஓய்வு தேவை என மருத்துவர்கள் அக்காவுக்கு ஆலோசனை வழங்கவே, அக்கா 22.09.2016 தேதியன்று தலைமைச் செயலகத்திற்கு செல்லாமல் அரசு

Before me

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

செயலாளர்கள் கொண்டு வந்த பைல்களை போயஸ் தோட்டத்தில் வைத்து பார்த்தார். ஓய்வும் எடுத்தார். டாக்டர். சிவக்குமார் அன்று காலை மற்றும் மாலை இரண்டு முறை அக்காவை வந்து பார்த்து சென்றார்.

28. 22.09.2016 மாலையிலிருந்து அக்கா மிகவும் சோர்வாக இருந்தார். அதனால் நான் மிகவும் கலக்கமடைந்தேன். ஏனெனில் அக்கா ஒரு போதும் அந்த அளவுக்கு தளர்வடைந்ததில்லை. "மருத்துவமனைக்கு வாங்க அக்கா போகலாம். அங்கு போய் வந்தால் எல்லாம் சரியாகிவிடும்" என அக்காவை கட்டாயப்படுத்தினேன். ஆனாலும் அக்கா, "நான் தூங்கினால் சரியாகிவிடுவேன். மருத்துவமனைக்கு போனால் அட்மிட் ஆக சொல்லுவார்கள். அதெல்லாம் வேண்டியதில்லை" என என்னிடம் கோபமாக சொன்னார். நான் எவ்வளவோ கேட்டும் கூட அக்கா மருத்துவமனைக்கு போக ஒத்துக்கொள்ளவில்லை. இந்த சூழலில் சிறிது நேரத்தில் அக்காவுக்கு காய்ச்சலும் குறைந்தது. அக்காவை பார்க்க டாக்டர். சிவக்குமார் இரவு போயஸ் தோட்டத்திற்கு சுமார் 9 மணியளவில் வந்தார்.

29. இந்த நிலையில் இரவு சுமார் 09:30 மணியளவில் நான் அக்காவுடன் முதல் தளத்தில் உள்ள அறையில் இருந்தபோது, படுப்பதற்கு முன்பாக எப்போதும் போல பல் துலக்க குளியலறைக்கு மெதுவாகச் சென்றார். அங்கு அக்கா அவர்கள் பல்துலக்கி மவுத் வாஷ் செய்துவிட்டு அங்கிருந்தபடியே "சசி மயக்கமாக இருக்கிறது இங்கே வா" என்றார். நான் உடனே குளியலறைக்குள் சென்று அக்காவை அழைத்து வந்து கட்டிலில் உட்கார வைத்து நானும் அருகில் உட்கார்ந்தேன். அப்போது திடீரென அக்கா மயங்கிய நிலையில் என் தோளில் சாய்ந்தார். அப்போது டாக்டர் சிவக்குமார் அக்காவின் அறைக்குள் வந்தார். நான் பதட்டத்துடன் அக்காவை தாங்கி பிடித்துக் கொண்டே, காலால் அருகிலிருந்த டிராலியை இழுத்து, அதிலிருந்த அழைப்பு மணியை பலமாக அழுத்தி, "உதவிக்கு யாராவது வாங்க" என உரத்த குரலில் சத்தமிட்டேன். டாக்டர்.சிவக்குமாரும் அக்காவின்

"Before me"

Asst. Superintendent
Central Prison

கைகளையும் கால்களையும் தேய்த்து உஷ்ணமாக்கி கொண்டே உடனடியாக அப்பல்லோ மருத்துவமனை நிர்வாக இயக்குநர் திருமதி.பிரிதா ரெட்டியின் கணவர் திரு.விஜயகுமார் ரெட்டி அவர்களை தொடர்பு கொண்டு "முதல்வர் அவர்கள் திடிரென மயக்கமடைந்துள்ளார், அவசர மருத்துவ உதவி தேவை உடனடியாக ஏற்பாடு செய்யுங்கள்" என தெரிவித்தார்.

30. நான் பதட்டமாகி, அக்கா அக்கா என அழைத்தும் அக்கா கண் திறக்கவில்லை. நான் போட்ட சத்தத்தில் கீழ்தளத்திலிருந்த அக்காவின் தனிபாதுகாவல் அதிகாரிகள் திரு.வீரப்பெருமாள், திரு.கந்தசாமி, அக்காவின் கார் ஓட்டுநர் திரு.கண்ணன் மற்றும் மேலும் சில பாதுகாப்பு அதிகாரிகளும் எங்கள் வீட்டில் பணியிலிருந்த பணியாட்களும் அக்காவின் அறைக்குள் வந்தனர். அக்காவை அவரது நாற்காலியில் உட்கார வைத்து படிகட்டுகளின் வழியே முதல் தளத்திலிருந்து கீழ்த்தளத்திற்கு கொண்டு வர நாங்கள் முயற்ச்சி செய்தோம். அதற்கிடையில் டாக்டர். சிவக்குமார் தேவையான முதல் உதவி மருத்துவ சிகிச்சைகளை அக்காவுக்கு அளித்துக் கொண்டிருந்தார். நான் அக்கா அவர்கள் மயங்கியதை பார்த்து மிகவும் கலக்கமடைந்தேன்.

31. சுமார் 10 - 15 நிமிடங்களில் இரண்டு அப்பல்லோ மருத்துவமனை (கிரீம்ஸ் ரோடு மற்றும் தேனாம்பேட்டை அப்பல்லோ மருத்துவமனைகளிலிருந்து) ஆம்புலன்ஸ்கள் போயஸ் தோட்டத்துக்கு அடுத்தடுத்து வந்தன. அந்த ஆம்புலன்ஸ்களில் ஒரு ஆண் மருத்துவர், ஒரு பெண் மருத்துவர், டெக்னிசியன் மற்றும் செவிலியர்கள் அடங்கிய அவசர சிகிச்சை பிரிவினர் ஸ்டிரெச்சர் மற்றும் மருத்துவ உபகரணங்களுடன் வந்தனர். உடனே ஸ்டிரெச்சரில் அக்காவை படுக்க வைத்து அக்காவின் தனி பாதுகாவல் அதிகாரி திரு.வீரப்பெருமாள், கார் ஓட்டுநர் திரு.கண்ணன் மற்றும் ஆம்புலன்ஸில் வந்தவர்கள் உதவியுடன் முதல் தளத்தில் இருந்து தூக்கி கொண்டு ஆம்புலன்சில் ஏற்றினோம். அக்காவுடன் நானும் டாக்டர்.சிவக்குமாரும் ஆயிரம் விளக்கு கிரீம்ஸ் ரோடில் உள்ள மெயின் அப்பல்லோவிற்கு

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

ஆம்புலன்ஸில் விரைந்தோம். ஆம்புலன்ஸில் வந்த அவசர சிகிச்சை பிரிவினர் அக்காவுக்கு ஆக்ஸிஜன் கொடுத்தார்கள். அக்கா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும் விவரம் காவல்துறைக்கு அக்காவின் தனி பாதுகாப்பு அதிகாரிகளால் சொல்லப்பட்டதால் சாலை போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டு விரைவாக நாங்கள் சுமார் 10 - 15 நிமிடங்களில் கிரீம்ஸ் ரோடு அப்பல்லோ மருத்துவமனைக்கு இரவு 10:20 மணியளவில் சென்றடைந்தோம். ஆம்புலன்ஸ் விரைவாக கிரீம்ஸ் ரோட்டில் திரும்பிய போது, அக்கா சட்டென கண் விழித்து என்னை பார்த்து, "எங்கிருக்கிறேன்" என்றார். அப்போது தான் எனக்கு உயிரே வந்தது போலிருந்தது. அக்காவிடம் "அப்பல்லோ ஹாஸ்பிட்டலுக்கு போயிட்டு இருக்கோம். கவலைப்படாதிங்க" என்றேன். என் கையை தன் விரல்களால் அக்கா இறுக்கமாக பிடித்துக்கொண்டார்.

32. அப்பல்லோ மருத்துவமனைக்கு நாங்கள் சென்றடைந்த போது அங்கு மருத்துவர்கள் வாசலிலேயே நின்று அக்காவை ஸ்டிரெச்சரிலிருந்து இறக்கி தரை தளத்திலுள்ள அவசர சிகிச்சை பிரிவுக்கு கொண்டு சென்றனர். அங்கு பல சிறப்பு மருத்துவர்கள் வந்து அக்காவுக்கு சிகிச்சை அளித்தனர். கொஞ்ச நேரத்திலேயே அக்கா மயக்கம் தெளிந்து சகஜ நிலைக்கு திரும்பினார். அன்று நள்ளிரவில் அக்காவை தரை தளத்திலுள்ள அவசர சிகிச்சை பிரிவிலிருந்து இரண்டாம் தளத்திலுள்ள MDCCU பிரிவிற்கு மருத்துவர்கள் மாற்றினார்கள். அக்காவை ஸ்டிரச்சரில் சாய்வாக உட்கார வைத்து மருத்துவ குழுவினர் தள்ளி கொண்டு வந்தனர். அவசர சிகிச்சை பிரிவிலிருந்து அக்கா வெளியே வந்த போது அரசு தலைமை செயலாளர் திரு.இராம மோகனராவ், முதல்வரின் அரசு ஆலோசகர் திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன், தனிச் செயலாளர்கள் திரு.வெங்கட்ராமன், திரு.இராமலிங்கம், திருமதி.ஜெயஸ்ரீ முரளிதரன், தனி பாதுகாவலர்கள் திரு.வீரபெருமாள், திரு.கந்தசாமி, திரு.கனகராஜ், திரு.கருப்பசாமி, காவல்துறை சார்ந்த உயர் அதிகாரிகள், அப்பல்லோ மருத்துவமனை நிர்வாக இயக்குநர் திருமதி.பிரீத்தா ரெட்டி, உட்பட பலரும் அவசர சிகிச்சை பிரிவின் வாசலிலேயே நின்றிருந்தனர். அக்காவை பார்த்து கைகூப்பி வணக்கம் சொன்னார்கள். அக்கா அனைவரையும் பார்த்து தலையசைத்து விட்டு சென்றார்.

"Before me"



Asst. Superintendent
Central Prison

33. அடுத்த நாள் 23.09.2016 காலை முதலே அக்கா நன்றாக பேசத் தொடங்கினார். மேலும் அங்கிருந்த மருத்துவர்களிடம், "சசி நேற்று காலையில் இருந்தே ஆஸ்பிட்டலுக்கு போகலாம்னு என்னை கட்டாயப்படுத்திட்டு தான் இருந்தா. நான் தான் வேண்டாம்னு சொன்னேன். நேத்துக்கூட நான் மயக்கமா இல்லேன்னா என்னை இங்க கூட்டிட்டு வந்திருக்க முடியுமா" என அக்கா சிரித்துக்கொண்டே சொன்னார். அக்கா அன்று இரவே வீட்டுக்கு போக வேண்டும் என மருத்துவர்களிடம் கூறினார். அக்கா போயஸ் தோட்டத்துக்கு திரும்புவதில் பிடிவாதமாக இருந்தார். ஆனால் மருத்துவர்கள் "3 அல்லது 4 நாட்கள் நீங்கள் மருத்துவமனையில் அப்சர்வேஷனில் இருக்க வேண்டும்" என்றார்கள். "எனக்கு ஏராளமான அரசு வேலைகள் இருக்கின்றன இதனால் மக்கள் பணி பாதிப்படையும்" என அக்கா பதிலுக்கு சொன்னார். ஆனாலும் மருத்துவர்கள், "நீங்கள் இங்கிருந்தே உங்கள் பணிகளை தொடரலாம். 3 அல்லது 4 நாட்களில் நீங்கள் பூரண குணமடைந்து வீட்டுக்கு போகலாம்" என வலியுறுத்தியதால் அக்கா மருத்துவமனையில் தங்கி இருக்க ஒத்துக்கொண்டார்.

34. அந்த சூழலில் ஸ்கேன் எடுப்பதற்காக அக்காவை இரண்டாம் தளத்திலுள்ள MDCCU வார்டிலிருந்து தரைதளத்திற்கு அழைத்து சென்றார்கள். அப்போது வெளியே நின்று கொண்டிருந்த அக்காவின் தனிபாதுகாவல் அதிகாரிகள் திரு.வீரப்பெருமாள் மற்றும் திரு.பெருமாள்சுவாமியை பார்த்து "நான் சரியாயிட்டேன். யாரும் கவலைப்படாதிங்க. டாக்டர்கள் இங்கு சில நாட்கள் தங்கி இருக்க சொல்லி இருக்காங்க விரைவில் வீட்டுக்கு போயிடலாம்" என புன்னகையுடன் கூறினார். அக்கா பேசியதை வெகு தூரத்திலிருந்து அப்போதைய அமைச்சர்கள் திரு.ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர் திரு.விஜய பாஸ்கர் மற்றும் நாடாளுமன்ற துணை சபாநாயகர் திரு.தம்பிதுரை உள்ளிட்ட சில கழக நிர்வாகிகளும் பார்த்து கொண்டிருந்தனர்.

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

35. அந்த காலக்கட்டத்தில் அக்கா, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் முன்னிலையில் அரசு அதிகாரிகளை பலமுறை சந்தித்து பேசினார். அரசு தொடர்பான நடைமுறைகளில் உயர் அதிகாரிகளிடம் கலந்துரையாடி தேவையான அறிவுரைகளையும் அக்கா வழங்கினார். எப்போதும் போல சாப்பிடும் உணவுகளையே அக்கா சாப்பிட்டு வந்தார். 27.09.2016 அன்று காலையில் காவிரி நதி நீர் பங்கீடு தொடர்பான ஆலோசனை பெற அதிகாரிகள் தொடர்பு கொள்கிறார்கள் என அக்காவின் தனி பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள், அக்காவின் உதவியாளர்களில் ஒருவரான திருபூங்குன்றனிடம் கூற, அவர் என்னிடம் சொல்ல, நான் அக்காவிடம் தெரிவித்தேன். அக்கா அதிகாரிகளை அவர் சிகிச்சை பெறும் அறைக்கு வரச்சொன்னார். அதன்படி அக்கா சிகிச்சை பெற்று வந்த அறையிலேயே அந்த ஆலோசனை கூட்டம் மாலை சுமார் 04:30 மணியளவில் நடந்தது. அதில் கலந்து கொண்ட அரசு உயர் அதிகாரிகள் கீழ்க்கண்டவாறு.

| வரிசை எண். | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | திரு.P.இராம மோகன ராவ் IAS | தமிழக அரசு தலைமை செயலாளர் |
| 3. | திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன் | தமிழக அரசு ஆலோசகர் |
| 3. | திரு.K.N.வெங்கடராமன் | முதல்வர் தனி செயலாளர் 1 |
| 4. | திரு.A.இராமலிங்கம் IAS | முதல்வர் தனி செயலாளர் IV. |
| 5. | திரு.R.முத்து குமாரசாமி | அரசு தலைமை வழக்கறிஞர் |

36. அப்போது மருத்துவர்களும், செவிலியர்களும், டாக்டர். சிவக்குமார் அவர்களும் மற்றும் நானும் சற்று தள்ளி இருந்தோம். அக்கா மேற்படி ஆலோசனை கூட்டத்திற்கு வந்த அதிகாரிகளுக்கு

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

உரிய ஆலோசனைகளை வழங்கினார். அக்கா சொல்லசொல்ல அதிகாரிகளால் குறிப்புகள் எடுக்கப்பட்டன. அக்கா கைப்படவே அதில் சில திருத்தங்களையும் செய்தார். அந்த கூட்டத்திற்கு சற்று தாமதமாக வந்த தலைமை அரசு வழக்கறிஞர் திரு.முத்துகுமாரசாமி அவர்களை பார்த்து, அவரது உடல் நலன் பற்றி அக்கா விசாரித்தார். அக்காவிடம் ஆலோசனைகள் பெற்ற பிறகு "காவிரி ஆலோசனை கூட்டம்" நிறைவுபெற்றது. அந்த ஆலோசனை கூட்டம் சுமார் ஒரு மணி நேரம் நடந்திருக்கும். அந்த ஆலோசனை கூட்டம் தொடர்பாக முதல்வர் அவர்களுடன் அதிகாரிகள் இருக்கும் போட்டோ எடுக்க வேண்டும் என அதிகாரிகள் சிலர் சொல்ல, முதலில் ஏற்றுக் கொண்ட அக்கா பிறகு யோசித்துவிட்டு, "விரைவில் வீடு திரும்ப போகிறோம். ஆகவே மருத்துவமனையில் இருப்பது போன்ற போட்டோ வேண்டாம்" என்றார்.

37. அன்று நள்ளிரவில் அக்காவுக்கு பேசும் போதும், மூச்சு எடுக்கும்போதும் சிறிது சிரமம் ஏற்பட்டது. உடனடியாக மருத்துவர்கள் வந்து அக்காவை பார்த்தார்கள். டாக்டர் சிவக்குமார் அவர்களும் தேவையான சிறப்பு மருத்துவர்களிடம் பேசி அது தொடர்பான உரிய சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார். மூச்சு பிரச்சினையின் காரணமாக அக்காவுக்கு சிகிச்சை அளித்த அப்பல்லோ மருத்துவ குழுவினரின் ஆலோசனைப்படி அக்காவுக்கு வெண்டிலேட்டர் கருவியின் மூலம் சுவாசத்திற்கு ஏற்பாடு செய்ய மருத்துவர்களால் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி 28.09.2016 அன்று அக்காவுக்கு வெண்டிலேட்டர் கருவி பொருத்தப்பட்டது.

38. இந்த காலக்கட்டத்தில் தமிழக பொறுப்பு ஆளுநர் உயர்திரு. வித்யாசாகர் ராவ் அப்பல்லோ மருத்துவமனைக்கு 01.10.2016 அன்று வந்து அக்காவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த அறை கண்ணாடி வழியாக அக்காவை பார்த்தார். அக்காவுக்கு தொற்று எதுவும் பரவி விடக்கூடாது எனும் நோக்கில் வெளிநபர்கள் யாரும் அறையினுள் செல்ல அப்பல்லோ மருத்துவமனை நிர்வாகம் அனுமதி வழங்கவில்லை. ஒவ்வொரு நாளும் மருத்துவமனைக்கு வரும் தமிழக அரசின் முதல்வர்

"Before me"
Asst. Superintendent
Central Prison
BANGALORE.

அலுவலக உயர் அதிகாரிகளும், தமிழக அமைச்சர் பெருமக்களும், சுகாதாரதுறை செயலாளர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்களும் மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகிகளும் அப்பல்லோ மருத்துவமனையின் சேர்மன் அவர்களது அறையில் நடக்கும் "அக்காவின் உடல் நிலை குறித்த சிகிச்சைகள்" தொடர்பாக அப்பல்லோ மருத்துவமனை நிர்வாகம் அளிக்கும் அன்றாட விளக்க கூட்டத்தில் பங்கேற்பார்கள். இன்று தமிழக முதல்வராக இருக்கும் திரு.எடப்பாடி கே. பழனிச்சாமி, துணை முதல்வர் திரு.ஓ.பன்னீர் செல்வம், பாராளுமன்ற துணை சபாநாயகர் திரு.தம்பிதுரை மற்றும் பெரும்பாலான அமைச்சர்களும் அந்த சிகிச்சை விளக்க கூட்டத்தில் நேரில் கலந்து விவாதிப்பார்கள்.

39. இது தவிர அப்பல்லோ மருத்துவமனையில் எல்லா சிகிச்சை விவரங்களையும் தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் திரு.விஜயபாஸ்கர் மற்றும் தமிழக அரசின் சுகாதார துறை செயலாளர் திரு.இராதாகிருஷ்ணன் அவர்களும் மற்றும் பாராளுமன்ற துணை சபாநாயகர் திரு.தம்பிதுரை அவர்களும் அவ்வப்போது நேரடியாக தெரிந்து கொண்டு, அக்காவின் உடல் நிலை பற்றி அறிய அப்பல்லோ வரும் முக்கியஸ்தர்களிடமும் பிற கட்சி தலைவர்களிடமும் அப்பல்லோ கீழ்தளத்தில் உள்ள சந்திப்பு அறையில் நேரில் விளக்கமளித்து வந்தார்கள். முக்கியஸ்தர்கள் மற்றும் பிற அரசியல் கட்சி தலைவர்கள் வந்த போது, என்னை பார்க்க விரும்பிய நபர்களை நான் MDCCU வார்டுக்கு அருகில் சந்தித்துள்ளேன்.

40. அக்கா அவர்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பற்றி நான் மருத்துவ குழுவின் கலந்தாய்வில் கேட்ட போது அக்கா அவர்களுக்கு நோய் தொற்று உள்ளதாகவும் அதற்கான காரணமாக அக்கா நீண்ட காலமாக டையபர் அணிவதென்றும் சிறுநீர் பாதையில் இருந்த தொற்று இரத்தத்தில் கலந்திருக்கலாம் என்று தெரிவித்தனர். அதற்கும் சிகிச்சை அளிக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்கள்.

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

41. அதன் பிறகு மத்திய அரசின் AIIMs மருத்துவமனையிலிருந்து வந்த கீழ்கண்ட மருத்துவர்கள் குழு அக்காவை பார்த்து உரிய சிகிச்சை அளித்தது மற்றும் அக்காவுக்கு தொடர்ந்து அளிக்க வேண்டிய மருத்துவ ஆலோசனைகளையும் வழங்கினார்கள்.

| வரிசை எண். | பெயர் | துறை |
|---|---|---|
| 1. | டாக்டர்.G.C.கிலானி | பேராசிரியர், பல்மினாரித்துறை |
| 2. | டாக்டர். அன்ஜன் ட்டிரிக்கா | பேராசிரியர், அனஸ்தியாலாஜி |
| 3. | டாக்டர்.நித்திஸ் நாயக் | பேராசிரியர் கார்டியாலாஜி |
| 4. | டாக்டர். நிக்கில் டான்டன் | பேராசிரியர் மற்றும் துறை தலைவர் என்டோகிரைனாலஜிஸ்ட் |

42. மேற்படி AIIMs மருத்துவர்கள் அறிவுரைப்படி, அக்கா நீண்ட நாள் வெண்டிலேட்டரில் இருந்தால் நோய் தொற்று, சுவாசக்குழாய் மூலமாக ஏற்படும் எனக் கூறியதின் பேரில் டிரைகாஸ்டமி கருவி 07.10.2016 தேதியன்று அவர்களுக்கு பொருத்தப்பட்டது. கவனமாக அக்காவுக்கு அது தொடர்பான சிகிச்சைகள் வழங்கப்பட்டன. தேவைப்படும் தருணங்களில் என்னை மருத்துவர்கள் அழைக்கும் போது நான் கீழே போய் பார்த்து விட்டு வருவேன்.

43. இந்த நிலையில் அப்பல்லோ மருத்துவமனையின் ஆலோசனையின்படி அக்காவின் உடல்நிலையை கருத்தில் கொண்டு லண்டனில் உள்ள "கய்ஸ் அண்ட் செயனட் தாமஸ் மருத்துவமனையை" சேர்ந்த மருத்துவர் ரிச்சர்ட் பீலேவை அழைத்து அக்காவுக்கு சிகிச்சை அளிக்க முடிவெடுக்கப்பட்டது. மருத்துவர் ரிச்சர்ட் பீலே "தீவிர சிகிச்சை நோய் பிரிவில் நிபுணத்துவம் பெற்றவர் என அப்பல்லோ மருத்துவமனை நிர்வாகத்தினர் என்னிடம் கூறினார்கள். எப்பாடுபட்டாவது அக்காவின் உடல் நலனை சரி செய்ய நான் அவரை சென்னைக்கு வரவழைக்க ஒத்துக் கொண்டேன்.

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

44. அதன்படி மருத்துவர் ரிச்சர்ட் பீலே சென்னைக்கு வந்தார். அக்காவின் உடல் நலன் பற்றி அப்பல்லோ மருத்துவ குழுவினரிடம் விவாதித்து விவரங்களை தெரிந்து கொண்டார். அக்காவுக்கு சிகிச்சை அளித்த அப்பல்லோ மருத்துவ குழுவினருடன் பல கட்ட ஆலோசனைகள் நடத்தினார். "முதலில் உரிய உடனடி சிகிச்சைகளை நான் இங்கேயே ஆரம்பிக்கிறேன். நான் எனது நாட்டிற்கு திரும்பிய பிறகு என்ன சிகிச்சைகள் செய்ய வேண்டும் என்பதையும் அங்கிருந்து தெரிவிக்கிறேன். அதன்படி முதல்வருக்கு சிகிச்சைகள் தொடரட்டும். முதல்வர் அவர்கள் பயணம் செய்யும் அளவிற்கு உடல் நலன் தயாரான உடன் நானே வந்து என்னுடன் லண்டன் மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளிக்கிறேன். நீண்ட தூர விமான பயணத்தின் போது எந்த வித சிறு இடருஞ்சலும் அவருக்கு வந்து விடக்கூடாது. அதற்கு உடம்பு தயாராக வேண்டும்" என்று சொன்னார். அப்பல்லோ மருத்துவமனை மருத்துவர்கள், நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள், தமிழ் தவிர, பிற மொழி பேசும் முக்கியஸ்தர்கள் மற்றும் பிறமொழி பேசும் அரசியல் தலைவர்கள் ஆகியோர்கள் என்னிடம் கூறுவதை தமிழில் மொழி பெயர்த்து டாக்டர். சிவக்குமார், திரு.தம்பிதுரை மற்றும் உடன் இருக்கும் அப்பல்லோ மருத்துவர்கள் எனக்கு தெரிவிப்பார்கள்.

45. மருத்துவர் ரிச்சர்ட் பீலே சிகிச்சை ஆலோசனைகளை அப்பல்லோ மருத்துவர்களிடம் வழங்கிவிட்டு அவரது நாட்டுக்கு போய்விட்டார். திரு. ரிச்சர்ட் பீலேயிடம் தொடர்பு கொண்டு அவரது மருத்துவ ஆலோசனைகளின்படியும், AIIMS மருத்துவக் குழுவினரின் ஆலோசனைப்படியும் அக்காவுக்கு தொடர் சிகிச்சைகள் அப்பல்லோ மருத்துவக் குழுவினால் அளிக்கப்பட்டது. அக்காவின் வைராக்கியம், தன்னம்பிக்கை மற்றும் மன உறுதி 1 ½ கோடி அஇஅதிமுக உண்மை தொண்டர்கள் அக்கா மீது கொண்ட அபிமானம் மற்றும் தமிழக மக்களின் பிரார்த்தனைகளினாலும் அக்காவின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது.

"Before me"

A.sst. Superintendent
Central Prison
BANGALORE.

46. தமிழகம் முழுவதும் அஇஅதிமுக நிர்வாகிகள் அனைத்து மத ஆலயங்கள் தோறும், எல்லாவிதமான மதவழிபாடுகள் செய்தும் கூட்டு பிரார்த்தனைகள், யாகங்கள் போன்றவைகளை செய்து வந்தனர். இதையெல்லாம் பத்திரிக்கை செய்திகள், வீடியோக்கள் வாயிலாக அக்காவின் உதவியாளர்களில் ஒருவரான திரு.கார்த்திகேயனின் மூலமாக நான் தெரிந்து கொள்வேன். அதே போல அக்காவின் சிகிச்சை தொடர்பாக அஇஅதிமுக நிர்வாகிகள், தமிழக அமைச்சர்கள் மற்றும் பிற அரசியல் கட்சி தலைவர்கள் பேசிய வீடியோக்களையும் நான் மேற்படி திரு.கார்த்திகேயன் தந்த டிவிடிகள் வாயிலாக தெரிந்து கொண்டேன். அக்காவின் தொகுதி பொறுப்பாளரான திரு.P.வெற்றிவேல் அக்கா பூரண உடல் நலத்துடன் விரைவில் வீடு திரும்ப பல சிறப்பு யாகங்கள் கூட்டு பிரார்த்தனைகள் என தொடர்ச்சியாக சென்னையில் செய்து வந்த விவரங்களும் எனக்கு தெரியும்.

47. இந்த நிலையில் மருத்துவர் ரிச்சர்ட் பீலே மீண்டும் சென்னை வந்தார். அக்காவின் உடல் நலனை பரிசோதித்து, "முதல்வரின் உடல் நிலையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதிநவீன கருவிகளை கொண்டு அப்பல்லோ மருத்துவமனை உயர்தர சிகிச்சை அளித்து வருகிறது. அதன் காரணமாய் முதல்வர் அவர்கள் விரைவாகவும் சீராகவும் உடல் நலன் முன்னேறி வருகிறார். அதனால் வெளிநாட்டு சிகிச்சை தற்போது தேவையில்லை. இங்கு முதல்வருக்கு கொடுக்கப்படும் சிகிச்சைக்குண்டான அதிநவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் கருவிகள் எங்கள் மருத்துவமனைகளில் கூட இல்லை" என்று கூறினார்.

48. அதே போல AIIMS மருத்துவமனை குழுவினரும் அக்காவின் சிகிச்சை தொடர்பாக சென்னைக்கு அவ்வப்போது வந்து அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சையும் உரிய ஆலோசனைகளும் தொடர்ந்து வழங்கி வந்தார்கள்.

"Before me"

A.sst. Superintendent
Central Prison
BANGALORE

49. மேலும் "சிங்கபூரிலுள்ள மவுண்ட் எலிசபத் மருத்துவமனையில்" இருந்து பிஸியோதெரபி மருத்துவ குழுவினர் (திருமதி.சீமா, திருமதி.தீப்பா மற்றும் திருமதி.மேரி) ஆகியோர் அப்பல்லோ மருத்துவ மனையினர் வேண்டுகோளின்படி சென்னை வந்து தங்கி அப்பல்லோ மருத்துவமனை பிஸியோதெரபி குழுவினருடன் இணைந்து அக்காவுக்கு தொடர் சிகிச்சை அளித்து வந்தார்கள். மேலும் அக்காவுக்கு டியூப் வழியாக திரவ உணவு அப்பல்லோ மருத்துவர்கள் கண்காணிப்பில் கொடுக்கப்பட்டு வந்தது. டிரைகாஸ்டமி பொருத்தப்பட்ட சுமார் 10 நாட்களில் அக்கா அவர்கள் அவருக்கு பொருத்தப்பட்டிருந்த உணவு குழாயை அவராகவே எடுத்து விட்டார். அசௌரியமாக இருக்கிறது என்று மருத்துவர்களிடம் தெரிவித்தார். அவர்களும் அதன்பிறகு அக்கா வாய்வழியாகவே திட மற்றும் திரவ உணவுகளை உட்கொள்ள அனுமதித்தினர். அதன்படி அப்பல்லோ மருத்துவமனை சமையலறையில் இருந்து சிறிதளவு இட்லி, பொங்கல் மற்றும் வடை போன்றவைகள் அக்காவின் விருப்பத்தின் பேரில் மருத்துவ கண்காணிப்பின் மூலமாக கொடுக்கப்பட்டது.

50. தமிழக பொறுப்பு ஆளுநர் திரு.வித்யாசகர் ராவ் மீண்டும் 22.10.2016 தேதியன்று அப்பல்லோ வந்து அக்காவை கண்ணாடி வழியாக பார்த்தார். அக்காவும் ஆளுநர் அவர்களை பார்த்து கையை உயர்த்தி காண்பித்தார். இதுபற்றி பின்னர் ஆளுநர் தான் எழுதிய "THOSE EVENTFUL DAYS" என்ற புத்தகத்தில் அப்பல்லோ மருத்துவமனையில் அக்காவை பார்த்தது பற்றியும், அக்கா, அவருக்கு கை தூக்கி காட்டியது பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். 22.10.2016 அன்று கவர்னர் அக்காவை பார்க்க வந்தபோது அக்காவுக்கு அளிக்கும் சிகிச்சை விவரங்களை நேரடியாக தெரிந்து கொண்டும் அதன் பின்னர் என்னையும் சந்தித்து பேசி விட்டு சென்றார்.

51. MDCCU வார்டில் இருந்த போது அக்காவுக்கு விருப்பமான பக்தி பாடல்கள் பென்டிரைவில் அக்காவின் உதவியாளர் திரு.கார்த்திகேயன் பதிவு செய்து கொடுத்தார். அக்கா அவர்கள்

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

அவ்வப்போது அவற்றை கேட்டு வந்தார். அக்காவுக்கு டிரைகாஸ்டமி பொருத்தப்பட்டிருந்ததால் சரளமாக பேசுவதற்காக உரிய பேச்சு பயிற்சியும் உரிய மருத்துவர்களால் வழங்கப்பட்டது. அக்கா நன்றாக பேசத் தொடங்கினார். அக்கா முதன் முதலாக பேசிய போது அவர் வழிபடும் இஷ்ட தெய்வங்களின் பெயர்களை ஒவ்வொன்றாக சொன்னார். மேலும் அவர் மருத்துவமனையில் இருந்த MDCCU வார்டின் படுக்கையின் அருகில் அவர் வழிபடும் விருப்பமான இஷ்ட தெய்வங்களின் A4 அளவு கலர் புகைப்படங்கள் அக்காவின் உதவியாளர் திரு.கார்த்திகேயன் மூலமாக கொண்டுவரப்பட்டு ஒட்டப்பட்டன. இது அக்காவின் விருப்பத்தின் அடிப்படையிலேயே வழிபடுவதற்காக ஒட்டப்பட்டன.

52. 23.09.2016 காலகட்டத்திலிருந்து 27.09.2016 வரை நான் இரண்டாம் தளத்தில் MDCCU க்கு அருகிலேயே ஒரு அறையில் தங்கியிருந்தேன். 28.09.2016 லிருந்து அக்கா என்னை பார்க்க விரும்பும் தருணங்களில் மருத்துவர்கள் என்னை அழைக்கும் போதெல்லாம் அக்காவை நான் தங்கியிருந்த மூன்றாவது தளத்தில் ஒதுக்கப்பட்டிருந்த அறையில் இருந்து கீழ போய் பார்த்து வருவேன். 19.11.2016க்கு பிறகு அக்காவுக்கு இரண்டாவது தளத்தில் தனி அறை கொடுக்கப்பட்டது. அக்கா சிகிச்சை பெற்று வந்த இரண்டாம் தளத்திலுள்ள தனி அறைக்கு அருகிலேயே எனக்கு ஒரு சிறிய அறையை அப்பல்லோ மருத்துவமனையினர் ஒதுக்கினார்கள். அக்காவை பார்க்க வருபவர்களினால் அக்காவுக்கு தொற்று எதுவும் பரவிடாத வகையில் சிகிச்சை பெறும் அறை கண்ணாடி வழியே பார்க்கும் ஏற்பாடு மருத்துவமனையால் செய்யப்பட்டிருந்தது. அக்காவின் பார்வைக்கு பசுமையாக இருக்க அக்கா விரும்பியபடி பிளாஸ்டிக் செடி மரங்களை அக்கா கண் பார்வை படும்படி அக்காவின் அறைக்கருகில் வைக்க நான் ஏற்பாடு செய்தேன். அந்த அறையில் அக்காவின் படுக்கை தலை பகுதியிலும் அக்காவின் பார்வை படும் வகையிலும் அவரது இஷ்ட தெய்வ படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. தனி வார்டில் டி.வி. மற்றும் டாட்டா ஸ்கை செட் அப் பாக்ஸ் வசதி அக்கா அவர்களது விருப்பப்படி மருத்துவமனை அனுமதியோடு அமைத்து கொடுக்கப்பட்டது.

"Reference"

Asst. Superintendent
Central Prison
BANGALORE

53. அக்காவின் அனுமதியுடன் அக்கா விரும்பிய நபர்களும் அந்த அறையின் கண்ணாடி வழியே பார்த்தனர். அக்கா அறையிலேயே எப்போதும் இரண்டு செவிலியர்கள் ஷிப்ட் அடிப்படையில் பணியில் இருப்பார்கள். அறையின் வாயிலை ஒட்டியே ஒரு மருத்துவரும், ஒரு செவிலியரும் 24 மணி நேரத்திற்கும் ஷிப்ட் முறையில் சிகிச்சை கொடுத்தும், கண்காணிக்கும் வகையில் அப்பல்லோ மருத்துவமனை ஏற்பாடு செய்திருந்தது. அடிக்கடி சிறப்பு மருத்துவர்களும் MDCCU கன்சல்டன்ட்களும் வந்து அக்காவை பார்த்து கொண்டு இருந்தனர். நல்ல சிகிச்சை அக்காவுக்கு வழங்கப்பட்டு வந்தது. அக்காவின் உடல் நிலை மிகவும் நல்லமுறையில் தேறி வந்தது.

54. அப்பல்லோவில் சிகிச்சை பெற்று வந்த மொத்த காலக்கட்டத்தில் அந்த அறை வாசலிலும் அந்த தளத்திலும் அக்காவின் காவல்துறை தனி பாதுகாப்பு அதிகாரிகள் திரு.பெருமாள்சாமி, திரு.வீரப்பெருமாள், திரு.ராஜா மற்றும் அவர்களின் கீழ் தனிபாதுகாப்பு பிரிவு அதிகாரிகளும் 24 மணிநேரமும் ஷிப்ட் படி கண்காணிப்பு பணியில் இருந்தார்கள். பாதுகாப்பு குறித்து காவல்துறை இயக்குநர், சென்னை மாநகர காவல்துறை ஆணையர் போன்றவர்கள் மற்றும் பிற காவல்துறை உயர் அதிகாரிகள் அவ்வப்போது வருவார்கள். மத்திய அரசின் பாதுகாப்பு அதிகாரிகள் அக்காவின் "மோபைல் டிரான்ஸ்போர்ட் செக்யூரிட்டிக்கு" மட்டுமே வருபவர்கள் என்பதால், அக்கா அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற போது அவர்கள் உடன் இருக்க இல்லை. ஏனெனில் அக்காவின் வழிபயண மற்றும் அதன் தொடர்புடைய பாதுகாப்பு பணிக்கு மட்டுமே மத்திய அரசின் பாதுகாப்பு அதிகாரிகள் உடன் வருவார்கள். போயஸ் தோட்ட இல்லத்திற்குள் கூட அவர்கள் பாதுகாப்புக்கு வரமாட்டார்கள். அதே போல தலைமை செயலகத்திற்குள், அக்கா வாகனத்தை விட்டு இறங்கிய உடன் அவர்கள் அங்கு வாயிலிலேயே காத்திருப்பார்கள். மத்திய அரசின் பாதுகாப்பு அலுவலர்களுக்கு முன்னதாகவே அக்காவின் ப்ரோகிராம்கள் பற்றி தெரிவிப்பது அக்காவின் காவல்துறை தனி பாதுகாப்பு அதிகாரிகளையே சாரும்.

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

55. என்ன சிகிச்சை வழங்கப்படுகிறது என்பதனை தெரிந்து கொள்ள தனிப்பட்ட முறையில் அக்கா என்னை விடியோ எடுக்க சொல்லுவது வழக்கம். அதன்படி அப்பல்லோ மருத்துவமனையில் அக்கா சிகிச்சை பெற்று வந்த காலகட்டத்தில் 3 கட்டங்களாக வீடியோ கேமரா மூலமாக அக்காவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை முறைகளை நான் விடியோ எடுத்தேன். அக்கா அடிக்கடி மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு போக வேண்டும் என அவரிடம் சொல்லி வந்தார். ஆனால் நாஙும் மருத்துவர்களும் அக்கா பூரண குணமடைந்த பிறகே வீட்டிற்கு போக வேண்டும் என சொல்லி வந்தோம். ஆனாலும் வீட்டில் மருத்துவமனையில் இருப்பது போன்ற நவீன மருத்துவ சிகிச்சை கருவிகளை நாம் வைக்க இயலாது என அக்காவுக்கு காட்டி புரிய வைப்பதற்காகவும் மருத்துவமனையிலேயே சிகிச்சை எடுத்து பூரண நலம் பெற்ற பிறகு அக்கா வீடு திரும்ப அவரின் சம்மதத்தை பெறவும் நான் அந்த விடியோக்களை எடுத்தேன். மேலும் அந்த விடியோக்களில் ஒரு விடியோவை அக்காவே "சசி விடியோ எடு. கழுத்தில் டிரைகாஸ்டமி இருப்பதால் என்னால் கழுத்தை திருப்பி பின்னாடி பார்க்கமுடியவில்லை." என்று சொன்னார். எடுக்கப்பட்ட விடியோக்களை அக்கா அவர்களும் பார்த்தார். மேலும் சிங்கப்பூரிலிருந்து வந்த மவுண்ட் எலிஸபத் மருத்துவமனையில் இருந்து வந்த பிஸியோதெரபி மருத்துவர்கள், அக்கா என்ன மாதிரியான உடற்பயிற்ச்சிகளை தினமும் செய்ய வேண்டும் என அறிவுரை மற்றும் பயிற்சி வழங்கிய விடியோக்களையும் நான் பதிவு செய்தேன். அந்த விடியோக்களையும் அக்கா அவர்கள் பார்த்தார். இந்த சூழலில் அக்கா படிப்படியாக மருத்துவர்களின் ஆலோசனையின்படி, நின்று நடக்க ஆரம்பித்தார் மூச்சுபயிற்சியையும் நல்ல முறையில் செய்து வந்தார். ஆனாலும் நுரையீரல் தொற்றுக்காக சிகிச்சை தொடர்ந்து அப்பல்லோ மருத்துவ குழுவினரால் அளிக்கப்பட்டு வந்தது. அவ்வப்போது அக்காவின் நுரையீரலிருந்து மருத்துவர்கள் சேர்ந்து வரும் திரவத்தை வெளியேற்றுவார்கள்.

"Before me"
Asst. Superintendent
Central Prison
BANGALORE.

56. அப்பல்லோ மருத்துவ குழுவினரின் ஆலோசனைப்படி அக்காவுக்கு ஊட்டச்சத்து கூடுதலாக உண்டாக்கும் வகையில் "ப்ரோட்டின் சப்ளிமெண்ட்" டை வாங்கி அக்காவுக்கு அப்பல்லோ மருத்துவமனையில் திரவமாக நவம்பர் 2016 லிருந்து கொடுத்து வந்தனர். அதே போல அக்காவின் விருப்பத்திற்கு ஏற்ப மருத்துவர்களின் அறிவுரையோடு அப்பல்லோ மருத்துவமனை சமையலறையிலிருந்தே உணவுகள் தயாரிக்கப்பட்டு அக்காவுக்கு வழங்கப்பட்டன. அக்காவின் உடல் நலன் குறித்து விசாரிக்க வந்த நபர்கள் பற்றி நான் அவ்வப்போது அக்காவிடம் தெரிவித்து வந்தேன். வீடு திரும்பிய பிறகு அனைவருக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும் என என்னிடம் அக்கா சொன்னார்.

57. இந்த நிலையில் இந்திய தலைமை தேர்தல் ஆணையம், ரத்து செய்யப்பட்ட அரவக்குறிச்சி, தஞ்சாவூர் தொகுதிகளுக்கும் திருப்பரங்குன்றம் தொகுதியின் வெற்றி வேட்பாளரின் திடீர் மறைவுக்கு பின்னர் வந்த இடைத் தேர்தல் தேதியையும் அறிவித்தது. ஏற்கனவே அரவக்குறிச்சியில் அஇஅதிமுக வேட்பாளராய் தேர்தலில் நின்ற திரு.செந்தில் பாலாஜி அவர்களையும் மற்றும் தஞ்சாவூர் தேர்தலில் அஇஅதிமுக வேட்பாளராக தேர்தலில் நின்ற திரு.ரெங்கசாமி அவர்களையும் மற்றும் திருப்பரங்குன்றம் இடைத்தேர்தலில் அக்கா வேட்பாளராய் தேர்ந்தெடுத்த திரு.போஸ் அவர்களையும் அஇஅதிமுகவின் அதிகாரபூர்வ வேட்பாளர்களாய் அக்கா அறிவித்தார். அந்த காலகட்டத்தில் அக்காவுக்கு அளிக்கப்பட்டு வந்த சிகிச்சைகள் காரணமாகவும் மற்றும் நீண்ட நாட்களாக கை நரம்புகளின் வழியாக செலுத்தப்பட்டிருந்த சலைன் ட்யூப்களினால் கைகளில் வீக்கம் இருந்ததால் அக்காவினால் கையெழுத்துகள் சரியாக போடமுடியாத நிலையில் 27.10.2016 ம் தேதியன்று அரசு மருத்துவரான டாக்டர் பாலாஜியின் முன்னிலையில் அக்கா பார்ம் A மற்றும் பார்ம் B படிவங்களில் மூன்று தொகுதிகளுக்கும் மற்றும் பாண்டிச்சேரி நெல்லித் தோப்பு சட்டமன்ற தொகுதி தேர்தலுக்கு தனது கைரேகைகளை பதிய வைத்தார். அந்த படிவங்களை அஇஅதிமுகவின் அப்போதைய அவைத்தலைவர் திரு.மதுசூதனன்

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

தமிழக தேர்தல் அலுவலகத்தில் உரிய தேர்தல் அலுவலர்கள் வழியாக சேர்த்தார். அதன்படி 19.11.2016 ல் நடந்த மேற்படி மூன்று தமிழகத்தின் இடை தேர்தல்களிலும் அதிஅதிமுகவின் வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர்.

58. அக்கா தனி அறைக்கு மாற்றப்பட்ட பிறகு நான் எவ்வளவோ வேண்டுகோள் வைத்தும் கூட அக்கா வெளிநாட்டுக்கு சென்று மேல் சிகிச்சை பெற்றுக்கொள்ள ஒத்துக்கொள்ளவில்லை. நான் வெளிநாடு போகலாம் என அக்காவிடம் கூறிய போதேல்லாம், "எனக்கு சரியாகிவிட்டது. நடக்க, உடற்பயிற்சி செய்ய ஆரம்பித்துவிட்டேன் அதெல்லாம் தேவையில்லை" என்று கூறி பிடிவாதமாக மறுத்துவிட்டார். அந்தக்காலக்கட்டத்தில் பாராளுமன்றத்தில் அதிஅதிமுகவினர் மத்திய அரசின் செயல்பாட்டிற்கு எதிராக தமிழக நலனை கருத்தில் கொண்டு எப்படி செயல்படவேண்டும் என நவம்பர் 2016 இரண்டாம் வாரத்தில் அதிஅதிமுக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கைப்பட ஒரு குறிப்பு எழுதினார். அந்த குறிப்பும் அவர் கையில் மருத்துவமனையில் எழுதிய சில குறிப்புகளும் அக்காவின் அறையில் உள்ளது. அக்காவின் அறிவுரை படியே பாராளுமன்றத்தில் மேற்படி விஷயத்தில் அதிஅதிமுக பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்டனர்.

59. மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி போயஸ் தோட்டத்துக்கு போக 29.12.2016ம் தேதியை நல்ல நாள் என அக்கா முடிவெடுத்தார். மருத்துவர்களும் அதனை ஏற்றுக் கொண்டனர். நானும் வாரம் ஒரு முறை போயஸ் தோட்ட வீட்டுக்கு போய் அக்காவின் விருப்பப்படி வீட்டு பூஜையறையில் விளக்கு போட்டு, பூஜை செய்து வழிபட்டு வந்தேன். அக்கா போயஸ் தோட்ட வீட்டுக்கு திரும்பிய பிறகு வீட்டில் படியேறாமல் இருக்க போதுமான அளவில் பெரிய லிப்ட் வசதிக்கு ஏற்பாடு செய்தேன். அக்கா மருத்துவ சிகிச்சைக்கு பிறகு ஓய்வு எடுக்க உரிய வசதிகளையும் வீட்டில் செய்து வைத்தேன். மருத்துவமனையில் அக்காவுக்கு தேவையான மருத்துவ சிகிச்சைக்கான உடைகள்

"Before me"
Asst. Superintendent
Central Prison
BANGALORE.

விஷேமாக வைக்கப்பட்டன. அக்காவின் தனி பாதுகாப்பு பிரிவு உதவி அதிகாரி திரு.அசோகன், அக்கா மருத்துவமனையில் உட்கார்ந்து பிஸியோதெரபி பயிற்சி செய்ய, பெரிய மேஜை மற்றும் பெரிய இருக்கை செய்ய அளவு எடுத்து புதிதாக இருக்கை செய்து மருத்துவமனைக்கு கொண்டு வந்தார். தமிழக அரசின் தலைமைசெயலாளர் திரு.ராம மோகனராவ் அவ்வப்போது அக்காவின் அறை கதவை திறந்து அக்காவுக்கு வணக்கம் சொல்வார். அக்காவும் புன்முறுவலோடு அவரின் வணக்கத்தை ஏற்றுக் கொள்வார். சிகிச்சை அளித்த மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை அழைத்து அக்கா பலமுறை பேசியுள்ளார். போயஸ் தோட்டத்தில் பணி புரிந்தவர்கள், உதவியாளர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளும் அக்காவை தனி அறையிலிருந்த கண்ணாடி வழியாக பார்த்துள்ளார்கள்.

60. அக்காவை இரண்டாவது தளத்தில் உள்ள MDCCU லிருந்து தனி வார்டுக்கு மாற்றப்பட்டபோது திருமதிநிலோபர் கபில் உட்பட சில அமைச்சர்களும், திரு.தம்பித்துரையும் அக்காவை பார்த்தனர். ஸ்கேன் எடுக்கவும் தனி அறைக்கு மாற்றிய சமையங்களில் எல்லாம் அக்காவின் தனி பாதுகாவல் அதிகாரிகள் பலரும் அக்காவை பார்த்துள்ளனர். அக்காவை பார்க்க வேண்டும் என விரும்பியவர்கள் பற்றிய விவரத்தை அக்காவிடம் கூறிய போது, "நான் பெங்களூர் சிறையிலிருந்து ஜாமினில் வந்த பின்பு, கட்சியினர் யாரையும் பார்க்காமல் கர்நாடக உயர்நீதிமன்ற விடுதலை உத்தரவிற்கு பிறகு எப்படி அனைவரையும் பார்த்தேனோ, அது போல நான் பூரண உடல் நலம் பெற்று போயஸ் கார்டன் திரும்பும் போது எல்லாரையும் பார்க்கிறேன். அதன் பிறகு போயஸ் கார்டனுக்கு கட்சியினர் அனைவரையும் வரச் சொல்லி பார்க்கிறேன். அதுவரையில் என்னை யாரும் வந்து பார்க்க வேண்டாம்" என்றார். அக்கா விரும்பினால் மட்டுமே அக்காவை யாரும் சந்திக்க முடியும், பேச முடியும். அக்காவின் முடிவில் நான் உட்பட யாரும் தலையிடமுடியாது. இது அவரைபற்றி தெரிந்தவர்கள் அனைவருக்கும் நன்கு தெரியும்.

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE

61. அக்கா ஜெயா டிவியில் ஒளிபரப்பபட்ட "ஜெய வீர ஹனுமான்" சீரியல்களையும் அக்கா அவர்களுக்கு பிடித்த பழைய பாடல்களையும் பென்டிரைவிலும் டிவிடியிலும் அக்காவின் உதவியாளர் திரு.கார்த்திகேயன் மூலமாக கொண்டு வரச்சொல்லி டிவியில் பார்த்து வந்தார். அவருக்கு விருப்பமான ஆன்மிக பாடல்களையும் காலை மற்றும் மாலையிலும் அக்கா கேட்டு வந்தார். மேலும் திரு.கார்த்திகேயன் ஏற்கனவே என்னிடம் கொடுத்த, அக்கா அவர்களின் சிகிச்சை தொடர்பாக அஇஅதிமுக நிர்வாகிகள், தமிழக அமைச்சர்கள் மற்றும் பிற அரசியல் கட்சி தலைவர்கள் பேசிய வீடியோக்களை அக்கா அவர்களுக்கு நான் போட்டு காண்பித்துள்ளேன்.

62. 2016 நவம்பர் இறுதி வாரத்தில் இதய நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர். சமீன் சர்மா (நியூயார்க் - அமெரிக்கா) என்பவரும் அக்காவை வந்து பார்த்து அப்பல்லோ மருத்துவ குழுவினர்களுடன் ஆலோசித்தார். அதன் பின்னர் எப்போதும் வரும் AIIMS மருத்துவக் குழுவினர் வந்தனர். வந்து அக்காவை பார்த்த பிறகு என்னை சந்தித்து, முதல்வர் நன்றாக நலம் அடைந்துள்ளார். அவரது மன திடமே இந்த முன்னேற்றத்திற்கு காரணம். வீட்டிற்கு போன பிறகு நீங்கள் ஒரு டாக்டர் போல செயல்படவேண்டும். இனி அவருக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்று என்னிடம் கூறினார்கள்.

63. இப்படி எல்லாம் நன்றாகவே போய்க்கொண்டிருந்த போது 04.12.2016 மாலை சுமார் 04:20 மணியளவில் அக்கா கேட்ட பன் மற்றும் காபியை மருத்துவமனை செவிலியர் டிராலியில் வைத்து அக்கா அறைக்கு கொண்டு வந்தார். அக்கா கட்டிலில் கால் நீட்டி உட்கார்ந்து, கண்ணாடி போட்டுக் கொண்டு டிவியில் "ஜெய வீர ஹனுமான்" சீரியல் பார்த்துக்கொண்டே "அருகில் வை சீரியல் முடிஞ்சதும் எடுத்துக்கறேன்" என்றார். "அக்கா சூடு ஆறிவிடும்" என்றேன். கை அசைத்து, "சற்று பொறு சசி" என்றார். சிறிது நேரத்திலேயே சீரியல் முடிந்த உடன் தன் கையிலிருந்த ரிமோட்டை அக்கா ஆப் செய்தார். நான் டிராலியை அருகில் வைக்க

Asst. Superintendent
Central Prison
BANGALORE

முயன்றேன். அப்போது அக்காவுக்கு அருகில் ஒரு பெண் மருத்துவரும், செவிலியர் ஒருவரும் நின்று கொண்டிருந்தார்கள். அறைக்கு வெளியே மருத்துவர் டாக்டர்.ரமேஷ் வெங்கட்ராமன் அமர்ந்து இருந்தார். திடிரென அக்கா அவர்களின் உடலில் ஒரு பெரிய நடுக்கம் ஏற்பட்டது. அக்கா அவர்களின் நாக்கு ஒரு பக்கமாக துறுத்த, பல்லை கடித்துகொண்டே அக்கா அவர்கள் ஏதோ சத்தமிட்டார். நான் உடனே அக்கா, அக்கா என கத்த தொடங்க, அக்கா அவர்கள் என்னையே பார்த்துக்கொண்டு தனது இருகரங்களையும் உயர தூக்கி என்னை நோக்கி கொண்டுவந்தார். நான் கதறி கொண்டே, அக்கா அவர்களை தாவி பிடித்தேன். அக்கா அவர்கள் என்னை பார்த்துக்கொண்டே படுக்கையில் சாய்ந்தார். அங்கிருந்த டாக்டர்களும் செவிலியர்களும் துரிதகதியில் சிகிச்சை கொடுக்க ஆரம்பித்தனர்.

64. உடனடியாய் தகவல் தெரிவிக்கப்பட்டதால் சிறப்பு மருத்துவர்கள் அக்காவின் அறைக்கு விரைந்து வந்தனர். அங்கிருந்த மருத்துவர் ஒருவர் என்னை அக்காவின் காதுக்கு அருகில் இருந்து சத்தமாக அக்காவை கூப்பிடச்சொன்னார். நான் அக்கா, அக்கா என பலமாக கத்த தொடங்க, இருமுறை என்னை அக்கா அவர்கள் பார்த்தார். பிறகு அக்கா கண்களை மூடிவிட்டார். சிகிச்சையளித்த மருத்துவர்கள் அக்காவுக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டுள்ளது உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என என்னை வெளியே போகச்சொல்லிவிட்டனர். தாங்க முடியாத கவலையில் கத்தி கூச்சலிட்டு நான் மயங்கிவிட்டேன். நான் மயக்கம் தெளிந்த போது அக்கா அவர்களுக்கு எக்மோ கருவி பொருத்தப்பட்டு தீவிர சிகிச்சைகள் நடந்து வந்தது. ஏராளமான மருத்துவர்கள் அங்கு வந்து சிகிச்சை அளித்து வந்தனர். அதன் பிறகு இரண்டாம் தளத்திலுள்ள அறுவை சிகிச்சை அறைக்கு அக்காவை கொண்டு சென்று அங்கு தொடர் சிகிச்சை அளித்து வந்தனர்.

65. "AIIMS மருத்துவக்குழு மற்றும் டாக்டர். ரிச்சர்ட் பீலே குழுவை தொடர்பு கொண்டு சிகிச்சை நடந்து வருகிறது. எக்மோ கருவியை இணைத்துள்ளோம். இதனால் செயலிழந்த இதயத்

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

செயல்படக்கூடும்" என என்னிடம் அங்கிருந்த மருத்துவர்கள் கூறினார்கள். "அக்கா எப்படியும் பிழைத்து விடுவார். அதிசயம் நடக்கும் நம்பிக்கையோடு சிகிச்சை அளியுங்கள்" என நான் சொன்னேன். அக்காவுக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டது. அக்கா எப்படியும் மீண்டு வந்துவிடுவார் என நம்பியிருந்தேன். ஆனாலும் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. AIIMS மருத்துவ குழுவினர் மற்றும் டாக்டர் ரிச்சர்ட் பீலேயின் ஆலோசனைகளையும் அப்பல்லோ மருத்துவர்கள் பெற்று தொடர்ந்து செயல்பட்டு வருவதாக மருத்துவர்கள் அவ்வப்போது என்னிடம் சொன்னார்கள். இறுதியாக 05.12.2016 அன்று இரவு வரையில் எந்த ஒரு முன்னேற்றம் ஏற்படவில்லை. இதற்கு மேலும் முன்னேற்றம் ஏற்படாது எனும் அதிர்ச்சி செய்தியை அங்கிருந்த மருத்துவர்கள் என்னிடம் தயங்கி தயங்கி தெரிவித்தனர். AIIMS மருத்துவக்குழு மற்றும் டாக்டர். ரிச்சர்ட் பீலே மருத்துவரும் அவ்வாறே முடிவெடுத்ததாக என்னிடம் தெரிவித்தனர். அக்கா இறந்த தகவலை கேட்ட உடனேயே நான் அலறி, கதறி மீண்டும் மயக்கமானேன். மத்திய அமைச்சர் திரு.வெங்கய்யா நாயுடு மற்றும் பல முக்கியஸ்தர்கள் மருத்துவமனைக்கு வந்தார்கள்.

66. அதன்பிறகு அக்காவின் இறுதி சடங்கு மற்றும் சம்பிரதாய ஏற்பாடுகளை அரசு அதிகாரிகள் செய்ய தொடங்கினார். நடப்பது எல்லாம் என்னை பொறுத்தவரையில் கனவில் நடப்பது போலவே இருந்தது. எம்பார்மிங் செய்யப்பட்டபிறகு போயஸ் கார்டனிலிருந்து கொண்டு வரப்பட்ட அக்காவின் விருப்ப உடமைகள் அக்காவுக்கு அணிவிக்கப்பட்டன. போயஸ் தோட்டத்தில் இறுதி சம்பிரதாயங்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதன்பிறகு போயஸ் கார்டனுக்கு அக்காவின் உடல் கொண்டு செல்லப்பட்டு அங்கு அக்காவின் குடும்ப சம்பிரதாயங்கள் படி சடங்குகளை நானும் அக்காவின் அண்ணன் மகன் திரு.தீபக்கும் செய்தோம். பிறகு அரசு அதிகாரிகள் அக்காவின் உடலை ராஜாஜி அரங்கத்தில் பொதுமக்களின் பார்வைக்காக அஞ்சலி செலுத்த ஏற்பாடு நடவடிக்கைகளை எடுத்தனர்.

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

67. இதற்கிடையில் தமிழக அரசின் நலனுக்கு குந்தகம் ஏற்படுத்தாமல் இருக்க, நான் முக்கிய நிர்வாகிகளை அழைத்து அவர்கள் மூலமாக "தமிழக ஆளுநருக்கு முறையாக தகவல் கொடுக்க சொல்லி, புதிய அமைச்சரவை பதவி ஏற்கவும் திரு.ஓ.பன்னீர்செல்வத்தை முதல்வராக ஏற்றுக்கொண்டு ஒத்துழைப்பு கொடுக்க கட்சியினருக்கு வேண்டுகோள் வைத்தேன். என் வேண்டுகோளை அனைவரும் முழு மனதுடன் ஏற்றுக் கொண்டனர். 05.12.2016 நள்ளிரவில் ராஜ் பவனில் ஆளுநர் முன்னிலையில் திரு.ஓ.பன்னீர் செல்வம் முதல்வராக ஏற்கனவே இருந்த அமைச்சரவையில் பதவி ஏற்றுக் கொண்டார். பிற அமைச்சரவையினரும் பதவி ஏற்றுக் கொண்டனர்.

68. 06.12.2016 அதிகாலையில் ராஜாஜி ஹாலில் அக்கா அவர்களின் உடலை பொதுமக்கள் மற்றும் முக்கியஸ்தர்களின் அஞ்சலிக்காக போயஸ் கார்டனிலிருந்து கொண்டு சென்றோம். மாண்புமிகு பாரதப்பிரதமர், மத்திய அமைச்சர்கள், காங்கிரஸ் கட்சி தலைவர் திரு.ராகுல் காந்தி பிற மாநில முதல்வர்கள், எல்லா கட்சித்தலைவர்கள் மற்றும் அக்கா அவர்களின் உயிர் மூச்சான அஇஅதிமுக தொண்டர்களும், லட்சக்கணக்கான தமிழக மக்களும் அலைகடல் போல் நேரில் வந்து இறுதி அஞ்சலி செலுத்தினர். அன்று மாலை அக்கா அவர்களின் உடல் சென்னை கடற்கரை அருகில் அமைந்துள்ள புரட்சிதலைவர் எம்.ஜி.ஆர் சமாதியின் ஒரு பகுதியில் ராணுவ மரியாதையுடன் இறுதி சடங்குகள் நடத்தப்பட்டு, நல்லடக்கம் செய்யப்பட்டது. நல்லடக்கம் செய்யப்பட்ட பிறகு, அங்கிருந்து கிளம்பி நான் வந்தபோது ஒரு நடைபிணமாகத்தான் போயஸ்கார்டனுக்கு திரும்பினேன். அக்காவுக்கு அர்பணித்த எனது வாழ்க்கை அன்று வெறுமையாகி போய்விட்டது என்பதனை உணர்ந்தேன். அக்காவின் மரணத்தை என்னால் இன்றளவும் ஜீரணிக்க முடியவில்லை. அக்கா உயிரோடு இருந்த வரையில் அக்காவை ஒரு குழந்தையை போலவே ஒரு தாய் ஸ்தானத்தில் இருந்து நான் பார்த்து வந்தேன். அக்காவின் தேவைகள் தெரிந்து அவர் மனவிருப்பப்படி நான் செயல்பட்டு வந்தேன். உடல்நலமில்லாமல் அவசர சிகிச்சைக்காக மருத்துவமனையில்

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

சேர்ந்த பிறகு, குணமடைந்து, பிறகு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டு, நாளடைவில் பூரண குணமடைந்து விட்ட நிலையில் அதிர்ச்சியளிக்கும் வகையில் மாரடைப்பினால் ஏற்பட்ட அக்காவின் மரணம் எனக்கு எந்த வகையிலும் ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். அப்பல்லோவில் அக்காவுக்கு சிறப்பான சிகிச்சை அளித்தனர் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அக்காவை 2 முறை அப்பல்லோ மருத்துவமனையில் பார்த்த திரு.வெங்கய்யா நாயுடு அவர்களும் அக்காவின் இறப்பில் எந்த சந்தேகமும் இல்லை என தனது பேட்டிகளில் கூறியுள்ளார்.

69. 1990 லிருந்து 2011 இறுதிவரையில் எனக்கும் அக்காவிற்கும் இடையில் எந்த ஒரு பிரச்சினையும் இருந்ததில்லை. ஆனால் 2011 இறுதியில் அக்காவிடம் திரு.சோ இராமசாமி தவறாக கொடுத்த தகவல்கள் மற்றும் அவரது தூண்டுதலின்பேரில் செயல்பட்ட ஒரு சிலரின் நடவடிக்கையின் காரணமாக அக்கா மேற்படி திரு.சோவின் முன்னிலையில் என்னை அழைத்து "திரு.சோ சில தகவல்களை சொல்கிறார். அது பற்றி நான் முழுமையாக உனக்கு பிறகு சொல்கிறேன். அதுவரையில் நீ சென்று திநகரில் இரு" என்றார். அக்காவின் சொல்லுக்கு எப்போதும் மறுபேச்சு இல்லாமல் கட்டுபடும், நபராகிய நான், சரி அக்கா என்று சொன்னேன். நான் அங்கிருந்து கிளம்புவதற்கு முன்பாக, போயஸ் தோட்டத்தில் உள்ளவர்களை அழைத்து, அக்காவிற்கான தேவைகள் என்ன என்ன என்பதையும் எப்படி செய்யவேண்டும் என்பதையும் கூறிவிட்டு அங்கிருந்து வாகனத்தில் கிளம்பினேன். அக்கா வாசல் வரை வந்து கையசைத்து என்னை அனுப்பி வைத்தார். அப்போது அங்கு பணியில் இருந்தவர்களுக்கு இந்த விவரம் தெரியும். எனது குடும்பத்தினர் பற்றி பல அவதூறான தகவல்களை அக்காவிடம் திரு.சோவும், அவருடன் தொடர்பிலிருந்த நபர்களும் கூறியதால் என் குடும்பத்தினர் சிலர் மீது பல வழக்குகள் தொடரப்பட்டன என்பதை நான் தெரிந்து கொண்டேன். ஆனால் சிறிது நாட்களுக்குள்ளாகவே அக்கா என்னிடம் சகஜமாக தொலைபேசியில் பேசத் தொடங்கினார். நானும் தி.நகர் வீட்டிலிருந்தபடியே பெங்களூர் நீதிமன்றத்திற்கு தேவையான பதில்கள், வழக்கின் வாதத்துக்கு

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE

தேவையான தகவல்களை சேகரித்து, வழக்கறிஞர்களுடன் சேர்ந்து பலகட்ட ஆலோசனையில் ஈடுபட்டு வந்தேன். 2011 ஆரம்பம்/இடையிலான காலக்கட்டத்தில் கழகத்தின் நலனுக்கு எதிராக செயல்பட்ட நபர்களை அக்கா அவர்கள் ஒதுக்கிவைத்திருந்தார்கள். அவர்கள் எல்லாம் இந்த சமயத்தை பயன்படுத்தி எனக்கெதிராக பல பொய் செய்திகளை பரவலாக பரப்ப தொடங்கினார்கள். ஆனாலும் குறைந்த காலகட்டத்திலேயே அக்கா என் குடும்பத்தை பற்றி வந்த செய்திகளெல்லாம் பொய் என்பதனை கண்டறிந்தார்.

70. "எனக்கு வந்ததெல்லாம் தவறான தகவல்கள். உடனே நீ போயஸ் தோட்டத்துக்கு வா" என்று தொலைபேசியில் என்னுடன் பேசியபோது அக்கா கூறினார். மேலும் "சசி குடும்பத்தார் பற்றி வந்த செய்திகள் மற்றும் நீங்கள் தந்த தகவல்கள் எல்லாம் பொய் எனவே சசியை போயஸ் தோட்டத்திற்கு அழைக்க முடிவெடுத்துள்ளேன்" என அக்கா, திரு.சோவிடம் தெரிவித்தபோது, "30 வருடகாலமாக உங்கள் உடன் இருந்த சசிகலாவை நீங்கள் வெளியேற்றியது தவறு என்றும் நீங்கள் கட்சியிலிருந்து அவர்களை அவசரப்பட்டு நீக்கியதும் தவறு என்று வெளியில் பேசுவார்கள். ஆகவே சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினர் உங்களுக்கு மன்னிப்பு கடிதங்கள் கொடுத்தது போல கடிதங்கள் எழுதி வாங்குங்கள். அதன்பிறகு சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று திரு.சோ அவர்கள் அக்காவிடம் சொன்னதாக அக்கா என்னிடம் தொலைபேசியில் கூறினார்.

71. அதற்கு நான், "அக்கா உங்கள் மரியாதையே எனக்கு முக்கியம். நான் மன்னிப்பு கடிதம் கொடுக்க தயார். தயாரித்து தர சொல்லுங்கள்" என்றேன். ஆனால் அக்காவிடம் நான் ஒரு வேண்டுகோள் வைத்தேன். "எந்த ஒரு தவறான செயலும் புரியாத எனது குடும்பத்தார், பலரின் தூண்டுதலினால் வழக்குகளை சந்தித்து பல இன்னல்களை எதிர்கொண்டு கஷ்டப்பட்டுவிட்டனர். அவர்களை மீண்டும் சேர்த்து இதன் காரணத்தால் எதிர்காலத்தில் இன்னும் வேறு விதமான இன்னல்களை அவர்கள் சந்திக்க வேண்டி

"Before me"

Asst. Superintendent,
Central Prison
BANGALORE

நேரலாம். அதனால் அவர்கள் விலகியே இருக்கட்டும். உங்களுக்காக நான் என்ன செய்யவும் தயார்" என்றேன். அக்காவும் யோசித்து விட்டு நான் சொன்னதை ஏற்றுக் கொண்டு, "கொஞ்ச நாள் ஆகட்டும் எல்லாம் சரியாகி விடும்" என்றார். திரு.சோ தயாரித்து கொடுத்த கடிதத்தை அக்கா எனக்கு அனுப்ப, நான் அப்படியே அதில் கையெழுத்திட்டு 28.03.2012 அன்று கொடுத்தேன். அக்கா 31.03.2012 கடிதத்தின் மூலமாக என் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ரத்து செய்தார். பிறகு போயஸ் கார்டனுக்கு என்னை அக்கா அழைத்தபடி திரும்ப வந்துவிட்டேன். என்னை பொறுத்தவரையில் அக்காவின் மரியாதையும் கௌரவமும் தான் எனக்கு முக்கியம். எனக்கு எல்லாமே அக்கா மட்டும்தான். அதன்பின்னர் திரு.சோ மற்றும் சிலரின் தூண்டுதலினால் போலீஸார் போட்ட பொய்வழக்குகளிலிருந்து என் குடும்பத்தார் வழக்காடி வெளியே வந்தனர். பிறகு சில ஆண்டுகளில் அக்கா வற்புறுத்தி கூப்பிட்ட போது, என் குடும்பத்தின் உறுப்பினர்கள் சிலர் போயஸ் கார்டன் வந்து அக்காவை பார்த்து சென்றுள்ளனர். அதே போல அப்பல்லோவில் இருந்த போதும் உடல் நலமில்லாத அக்காவை என் குடும்ப உறுப்பினர்கள் பார்க்க விரும்பியதை அக்காவிடம் சொன்னபோது அவர்களை வந்து பார்த்து போகச் சொன்னார். அவர்களும் அக்காவை கண்ணாடி வழியாக பார்த்தனர். ஒரு சிலர் பார்த்ததை அக்காவும் பார்த்து கையசைத்துள்ளார். மேலும் என் தம்பி திரு.திவாகரனின் மகள் திருமதி.ராஜமாதங்கியும் மருமகன் திரு.விக்ரமும் அப்பல்லோவில் மருத்துவர்களாக பணி புரிந்து வந்தனர். மருத்துவ சிகிச்சையின் போது அவர்களுடன் அக்கா நன்றாக பேசி வந்தார். இது அப்பல்லோ மருத்துவமனை டாக்டர்கள் மற்றும் செவிலியர்களுக்கு நன்கு தெரியும்.

72. அக்கா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற போது தமிழக நலனை கருத்தில் கொண்டு தனது துறைகளை கவனிக்க திரு.ஓ.பன்னீர்செல்வத்தை நியமிக்க கழக மூத்த நிர்வாகிகளும் அமைச்சர்களும் என்னிடம் சொன்னார்கள். நானும் அக்காவிடம் அது பற்றி கேட்டேன். அக்காவும் சரி எனச் சொன்னார். அதன்படி ஆளுநருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தமிழக பொறுப்பு ஆளுநர்

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE

அதை ஏற்றுக்கொண்டு 11.10.2016 அன்று உரிய ஆணை பிறப்பித்தார். அதன்படி அக்கா அவர்கள் முதல்வராக இருந்து பார்த்து வந்த துறைகளை திரு.ஓ.பன்னீர்செல்வம் கவனிக்க தொடங்கினார்.

73. அக்கா அவர்கள் இறப்பதற்கு சுமார் ஒரு வாரத்துக்கு முன்பு வடசென்னை வடக்கு மாவட்ட செயலாளரும் பெரம்பூர் MLA வும் அக்கா அவர்களின் தொகுதியான டாக்டர் R.K. நகர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளரான திரு.P. வெற்றிவேலுக்கு பெரும் உடல் நலக் குறைவு ஏற்பட்டது. அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருதய அறுவை சிகிச்சை மேற்கொண்டார். அக்கா அவர்கள் இறந்த விவரம் கூட அவருக்கு தெரியாது. அவர் உடல் நலம் பெற்று 2016 டிசம்பர் மாத மூன்றாம் வாரம் போயஸ் தோட்டத்தில் சந்தித்து அழுது புலம்பி அக்கா அவர்கள் மீதுள்ள அவரது பாசத்தை வெளிப்படுத்தினார். நானும் அவருக்கும் அவரை போலவே அக்கா அவர்களை இழந்து தவித்த அதிஅதிமுக தொண்டர்களுக்கு ஆறுதல் கூறினேன்.

74. இந்த காலக்கட்டத்தில் ஒட்டு மொத்த அதிஅதிமுகவின் உண்மைத் தொண்டர்களும் நிர்வாகிகளும் வற்புறுத்தி, அக்கா அவர்கள் செய்த பணியை கட்டி காப்பாற்றிடவும், இது போன்ற சமயத்தை எதிர் பார்த்து காத்து கொண்டிருந்த திமுகவின் சூழ்ச்சியிலிருந்து கழகத்தை கட்டி காப்பாற்றிட என்னை கழக பொதுச்செயலாளர் ஆக்குவதற்கு என் சம்மதத்தை தொடர்ந்து வலியுறுத்தி கேட்டு வந்தனர். கழக மூத்த நிர்வாகிகள் முறைப்படி பொதுக்குழுவை கூட்டி, 29.12.2016 அன்று என்னை பொதுச்செயலாளர் ஆக்கி அந்த தீர்மானங்களை எடுத்து வந்து போயஸ் கார்டனில் என் சம்மதத்தையும் பெற்றனர். திரு. மதுசூதனன் தலைமையில் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் குறிப்பாக திரு.ஓ.பன்னீர்செல்வத்தின் பங்கு இதில் மிகவும் குறிப்பிடத்தக்கது. அக்கா அவர்களின் நினைவுகளுடனேயே என் மீதமுள்ள வாழ்க்கையை கழிக்க எண்ணிய எனக்கு, கழகத்தினை இந்த இக்கட்டான காலத்தில் காப்பாற்றிட வேண்டும் எனும் சூழல் எழுந்ததால் நான் அந்த பொறுப்பை

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

ஏற்றுக்கொண்டேன். ஆனாலும் அக்காவின் மரணத்துக்கு பின்னர் ஏதாவது ஒரு அசம்பாவிதம் அஇஅதிமுகவில் நடக்கும் என்றே நான் எதிர்பார்த்தேன். அது போலவே சில சம்பவங்கள் நடந்தது.

75. திரு.ஒ.பன்னீர்செல்வம் பல மறைமுக துரோக செயல்களில் ஈடுபட்டு திமுகவுடன் கைகோர்த்துள்ளார் என்பது கழகத்தின் பிரமுக்கிய நிர்வாகிகளின் மூலமும் மூத்த அமைச்சர்கள் மூலம் எனக்கு தெரிய வந்தது. அவர் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும், திரு.ஒ.பன்னீர்செல்வத்தை முதல்வர் பதவியிலிருந்து விலக்க வேண்டும் என அமைச்சர் பெருமக்களும் கழகத்தின் மூத்த நிர்வாகிகளும் ஒரே குரலாக அணி திரள, அதன்படி அனைவரும் கூடி முடிவெடுக்க, திரு.ஒ.பன்னீர்செல்வம் முதல்வர் பதவியிலிருந்து விலகுவதாக இராஜினாமா கடிதத்தை 05.02.2017 தேதியன்று கொடுத்தார். அந்த நிலையில் கழகத்தின் அனைத்து நிர்வாகிகளும் சட்டமன்ற உறுப்பினர்களும் என்னை வலியுறுத்தி அஇஅதிமுகவின் சட்டமன்ற கட்சிக்கு என்னை தலைவராக தேர்ந்தெடுத்தனர். இக்கட்டான அந்த சூழலில் அந்த பொறுப்பை என்னால் தட்டி கழிக்க இயலவில்லை. இந்த விவரங்கள் தமிழக பொறுப்பு ஆளுநருக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் அதன் பின்னர் ஏற்பட்ட பல அரசியல் விளையாட்டுகளாலும், துர்போதனையாலும் அஇஅதிமுகவின் அடிவேரையே அசைத்து பார்க்கும் வண்ணமாக நேரடி துரோக செயல்களில் திரு.ஒ.பன்னீர்செல்வம் ஈடுபட அடுத்தடுத்த பல திருப்பங்கள் தமிழக அரசியலில் ஏற்பட்டது. மத்திய அரசு மறைமுகமாக எங்களது கட்சி மற்றும் ஆட்சி விவகாரத்தில் தலையிடுவதாக பல தரப்பிலும் குற்றசாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

76. இந்த நிலையில் கர்நாடக உயர்நீதிமன்ற தீர்ப்பினால் நிரபராதிகள் என விடுவிக்கப்பட்ட அக்கா அவர்கள் உட்பட நாங்கள் நால்வரும் உச்சநீதிமன்ற வழக்குகளில் எதிர் வழக்காடி மேல்முறையிட்டு வழக்குகள் சரியானதல்ல என வெளிப்படுத்தி இருந்தோம்.அதன்படி 07.06.2016 அன்றே அனைத்து தரப்பு வாதங்கள் முடிவடைந்து மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் தீர்ப்புக்கு

"Before me"

Asst. Superintendent
Central Prison

என வழக்குகள் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் அக்கா அவர்கள் 05.12.2016 அன்று நிரபராதியாய் இறந்துவிட, அந்த சூழலில் மீண்டும் மீதமுள்ள எங்கள் மூவரின் தரப்பை அழைத்து விசாரிக்காமல் இயற்கை நீதியின் அடிப்படையிலும் சட்டங்கள் மற்றும் முன் தீர்ப்பின் அடிப்படையிலும் செயல்படாமல் மாண்புமிகு உச்சநீதிமன்றம் 14.02.2017 அன்று எந்தவித விசாரணையும் இன்றி, எங்களுக்கான வாய்ப்புகளை வழங்காமல் "மாறிவிட்ட சூழ்நிலைகளை" கருத்தில் கொள்ளாமல் தவறாக தண்டனை தீர்பளித்தது.

77. அந்த நிலையில் அதிஅதிமுகவின் எதிர்காலத்தை அசைத்து பார்க்க கூடிய அளவில் எழுந்த துரோகங்களை கட்டுபடுத்த முன் அனுபவமுள்ள, கழகத்தின் பல முக்கிய பொறுப்புகள் வகித்த, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கா அவர்களின் மூலம் நேரடி அரசியலுக்கு கொண்டு வரப்பட்ட எனது உறவினரான திரு.டிடிவி தினகரன் அவர்களை கட்சிக்குள் கொண்டு வர, தலைமை கழக நிர்வாகிகள், எடப்பாடி கே.பழனிச்சாமி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர். அதனால் நான் திரு.டிடிவி தினகரன் அவர்களை 14.02.2017 அன்று கழகத்தில் சேர்த்து 15.02.2017 அன்று கழகத்தின் துணை பொதுச்செயலாளர் ஆக்கினேன். மேலும் எனது ஆலோசனையின்படி திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி சட்டமன்ற குழு அதிஅதிமுக தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தனித்தனியாக ஒவ்வொரு அதிஅதிமுகவின் சட்டமன்ற உறுப்பினரிடமும் நான் பேசி அவருக்கு ஆதரவை தரச்சொன்னேன். எனது வழிகாட்டுதலின்படியும் எனது முடிவின்படி திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தலைமையிலான தமிழக அரசு செயல்பட தமிழக பொறுப்பு ஆளுநர் முறைப்படி அனுமதிக்கப்பட்டார்.

78. எனது வேண்டுகோளை ஏற்று திரு.எடப்பாடி கே.பழனிச்சாமியை அதிஅதிமுகவின் 122 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரித்தனர். திமுக உடன் கைகோர்த்து கொண்டு எப்படியாவது அக்கா அவர்கள் அதிக பெரும்பான்மையுடன் உருவாக்கிய ஆட்சியை அக்கா இறந்து விட்ட பிறகு நிர்மூலமாக்கும் கெட்ட

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE

நோக்கத்துடன் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு ஆதரவாக சட்டமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் திரு.ஓ.பன்னீர்செல்வமும் அவரது ஆதரவு எம்.எல்.ஏக்களும் எதிராக வாக்களித்தனர்.

79. அதன்பின்னர் அக்காவின் மறைவுக்கு பின்னர் காலியான டாக்டர்.RK நகர் சட்டமன்ற தொகுதிக்கு இந்திய தலைமை தேர்தல் ஆணையம் இடைத்தேர்தல் அறிவித்தது. என் முடிவின்படி அஇஅதிமுகவின் துணை பொதுச்செயலாளரான திரு.டிடிவி தினகரன் டாக்டர்.RK நகர் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் அஇஅதிமுக வேட்பாளராய் அறிவிக்கப்பட்டார். இதனை எதிர்த்து இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தில் திரு.மதுசூதனன், திரு.ஓ.பன்னீர்செல்வம் மற்றும் திரு.செம்மலை ஆகியோர் சேர்ந்து, எனக்கும், கழகத் துணை பொதுச்செயலாளருமான திரு.டிடிவி தினகரனுக்கு எதிராக ஒரு வழக்கினை தொடுத்தனர். மே 2014 ல் நடைபெற்ற தமிழக பாராளுமன்ற தேர்தலில் பிஜேபி அஇஅதிமுகவுடனான கூட்டணிக்கு எவ்வளவோ முயன்றும் கூட அக்கா அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. "மோடியா" அல்லது "லேடியா" எனும் கோஷத்தோடு பிரச்சாரம் செய்த அக்காவின் அணுகுமுறை யாவரும் அறிந்ததே. அக்காவின் பிரச்சாரத்தால் 37 தமிழக பாராளுமன்ற தொகுதிகளில் அஇஅதிமுக மகத்தான வெற்றியை பெற்றது. இதை மனதில் வைத்து மத்தியில் ஆளும் பிஜேபியும் அஇஅதிமுகாவை அழித்து தமிழகத்தில் கால் பதிக்க சரியான சமயம் பார்த்துகொண்டிருந்தது. திரு.ஓ.பன்னீர்செல்வம் அந்தக் காலக்கட்டத்தில் பிஜேபியிடம் சென்று சரண் அடைந்தார். மத்திய அரசின் ஆதரவோடு இதயதெய்வம் டாக்டர் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய மற்றும் அக்கா அவர்கள் வளர்த்த "அஇஅதிமுகாவின்" பெயரையும் "இரட்டை இலை" சின்னத்தையும் திரு.ஓ.பன்னீர் செல்வம் இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலமாக முடக்கினார். இந்திய தேர்தல் ஆணையம் எங்கள் தரப்பு மற்றும் திரு.ஓ.பன்னீர்செல்வம் தரப்பு இருவருக்கும் புதிய பெயர்களையும்

"Before me"

சின்னங்களையும் ஒதுக்கியது. எங்களுக்கு ஆதரவாய் இருந்த எம்பிக்கள், எம்.எல்.ஏக்களையும் பொதுக்குழு உறுப்பினர்களையும், 90% கழக உறுப்பினர்களையும் பொருட்படுத்தாமல் இந்திய தலைமை தேர்தல் ஆணையம் ஒரு தலை பட்சமாக திரு.ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு ஆதரவாக செயல்பட்டது.

80. இந்த காலக்கட்டத்தில் டாக்டர்.RK நகர் சட்டமன்ற பொறுப்பாளராக திரு.P.வெற்றிவேல் பணியாற்றினார். அப்பல்லோவில் அம்மா சிகிச்சை பெற்ற போது அக்கா அவர்கள் பார்பதற்காக மட்டும் என நான் எடுத்த விடியோக்கள் பற்றி அப்போது வெளியே தெரியவர திரு.P.வெற்றிவேல், "அம்மா அவர்களை கடைசிக்காலத்தில் நான் பார்க்கவில்லை, பார்க்க வேண்டும் விடியோவை தாருங்கள்" என கழக துணை பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் மூலமாக திரு.P.வெற்றிவேல் என்னிடம் கேட்டார். நானும் திரு.P.வெற்றிவேல் அக்கா மீது கொண்ட பாசத்தை பற்றி நன்கு தெரிந்திருந்ததால், அவரது கோரிக்கையை தவிர்க்க இயலாத சூழலில் எனது மைத்துனரான திரு.M.இராமச்சந்திரன் அவர்களிடம் நான் கொடுத்து வைத்திருந்த பென்டிரைவிலிருந்து "அக்காவின் சிகிச்சை விடியோக்களை" ஒரு காப்பி எடுத்து திரு.டிடிவி தினகரனிடம் கொடுக்க சொன்னேன். அதன்படி திரு.M.இராமச்சந்திரனும் 2017 ஏப்ரல் முதல் வாரத்தில் திரு.டிடிவி தினகரனிடம் அந்த பென்டிரைவை ஒப்படைக்க அவரிடமிருந்து, திரு.P.வெற்றிவேல் பெற்றுக்கொண்டுள்ளார். ஆனால் எந்த வகையிலும் திரு.P.வெற்றிவேல் வேறு யாரிடமும் அந்த விடியோவை காட்டக்கூடாது என நான் அறிவுறுத்த, அதன்படி திரு.டிடிவி தினகரனும் திரு.P.வெற்றிவேலிடம் பென்டிரைவை கொடுக்கும் போது சொன்னதாக திரு.டிடிவி தினகரன் என்னிடம் பின்னர் தெரிவித்தார்.

81. அதன்பிறகு டாக்டர்.RK நகர் சட்டமன்ற தேர்தல், 10.04.2017 அன்று இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தால் நிறுத்தப்பட்டது.

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE

இந்த நிலையில் திரு.ஓ.பன்னீர்செல்வமும் அவரை சார்ந்த சிலரும் என் மீது களங்கம் ஏற்படுத்தும் வண்ணமாக, அக்கா அவர்களின் மரணம் குறித்து பொதுவெளியிலும், பத்திரிக்கை மற்றும் டிவி ஊடகங்களிலும் பொய்யாக பேசி பிரச்சாரம் செய்து வந்தனர். அவர்களாகவே ஊருக்கு ஊர் எனக்கு எதிராக கலகம் செய்யும் நோக்கில் பல சட்டத்துக்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டனர்.

82. இதற்கிடையில் நான் எனது சீராய்வு மனுவினை மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அதில் எனக்கு வழங்கப்பட்ட 14.02.2017 தேதியிட்ட மேல்முறையீட்டு தீர்ப்பு சரியானதல்ல, தவறானது என்றும் சட்டப்படி ஒரு நபர் இறந்த பிறகு அவருக்கு எதிராக குற்ற தீர்ப்பளிக்க முடியாது எனும் வாதத்துடன் மேற்படி 14.02.2017 தீர்ப்பில் உள்ள குறைபாடுகளையும் பிற சட்ட பொருண்மைகளை நீண்ட நெடிய விவரங்களை மனுவில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் நான் தாக்கல் செய்த சீராய்வு மனுவை மாண்புமிகு உச்சநீதிமன்றம் எவ்வித வழக்கறிஞர் வாதத்துக்கு உட்படாமலேயே இரண்டு வரி தீர்ப்பில் 23.08.2017 தேதியன்று அந்த சீராய்வு மனுவை தள்ளுபடி செய்தது. விரைவில் நான் எனது "கியூரேட்டிவ்" மனுவை மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளேன். அந்த வாய்ப்பு எனக்கு உள்ளவரை நான் நிரபராதியே. இது தவிர அக்கா அவர்களின் சொத்தை கைப்பற்ற கர்நாடக அரசு தாக்கல் செய்திருந்த மனுவையும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. இது சட்டத்தின் பார்வையில் மிகவும் கவனத்துக்குரிய ஒன்றாகும்.

83. இந்த நிலையில் திரு.ஓ.பன்னீர்செல்வத்திற்கு முழு அளவில் மத்திய அரசு உதவுகிறது என்பது வெளிப்படையாகவே தெரிய ஆரம்பித்தது. அதுவரையில் எங்களுடன் இருந்த, என்னால் முதல்வராக்கப்பட்ட திரு.எடப்பாடி கே.பழனிச்சாமியும் திரு.ஓ.பன்னீர் செல்வத்துடன் சேர்ந்து சந்தர்ப்பவாத அரசியல் செய்ய தொடங்கினார். அக்காவின் மரணத்தை களங்கப்படுத்த முயன்ற திரு.ஓ.பன்னீர்செல்வத்துடன் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கைகோர்த்து கொண்டு அவரை தமிழக அரசில் 21.08.2017 அன்று

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE

துணை முதல்வராக்கினார். மத்திய அரசின் தலையீட்டினால், அக்கா அவர்களின் கொள்கையான மாநில சுயாட்சிக்கு எதிராக திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி பலவகையில் அக்கா எதிர்த்த திட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்தும் மேல் ஊழல் நடவடிக்கையில் ஈடுபட தொடங்கினார். மேற்படி செயல்களை எதிர்த்து, கட்சி தலைமையின் உத்தரவுப்படி மாண்புமிகு தமிழக பொறுப்பு ஆளுநரை 22.08.2017 அன்று பார்த்த 18 சட்டமன்ற உறுப்பினர்களை, இயற்கை நியதிக்கு எதிரான வகையில் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமியும் மற்றும் திரு.ஓ.பன்னீர்செல்வமும் சட்டமன்ற அவைத்தலைவர் திரு.தனபால் உதவியுடன் சட்டத்துக்கு முரணான வகையில் சட்டமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து 18.09.2017 அன்று நீக்கம் செய்தனர்.

84. மேலும் எங்களுக்கு ஆதரவாக இந்திய தேர்தல் ஆணையத்தில் திரு.ஓ.பன்னீர்செல்வம் தாக்கல் செய்த வழக்கில் ஏற்கனவே எங்கள் தரப்பில் தாக்கல் செய்த சத்தியபிரமாண வாக்குமூலங்களுக்கு முரணாக, மீண்டும் போலியான மற்றும் பொய்யான சங்கதிகளை கொண்ட சத்யபிரமாண வாக்குமூலங்களை திரு.எடப்பாடி கே.பழனிசாமி தாக்கல் செய்தார். தமிழக முதல்வராக இருந்ததால் அவர் அதிகார துஷ்பிரயோகம் செய்தும் பல சட்டவிரோத செயல்களை செய்தும் பல போலியான ஆவணங்களையும் தயாரித்தும் மற்றும் அடக்கு முறையை கையாண்டு ஆயிரக்கணக்கானவர்களை அச்சுறுத்தி உண்மைக்கு மாறான பொய் விவரங்களை கொண்ட மற்றும் போலியாக சத்ய பிரமாண ஆவணங்களை இந்திய தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்தார். அதன் அடிப்படையில் ஒன்றரை கோடி கழக தொண்டர்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்காமல் அஇஅதிமுகாவை கட்சி விதிமுறைகளுக்கு எதிராக நடத்தப்பட்ட சட்டவிரோத கூட்டத்தையும் போலி சத்யபிரமாண ஆவணங்களையும் கருத்தில் கொண்டு 23.11.2017 அன்று இந்திய தேர்தல் ஆணையம் கட்சி பெயர் மற்றும் சின்னம் தொடர்பாக சட்டத்துக்கு புறம்பான வகையில் உத்தரவை வழங்கியது.

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

85. அது தொடர்பாகவும் மற்றும் மேற்படி நபர்களின் சட்டவிரோத செயல்களுக்கு எதிராகவும் பல வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நடந்து வருகின்றன. இந்திய தேர்தல் ஆணையம் சட்டத்துக்கு புறம்பாக ஒரு தலைபட்சமாக செயல்பட்டு வழங்கிய 23.11.2017 உத்தரவுக்கு எதிராகவும் மாண்புமிகு டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் நடந்து வருகிறது.

86. இந்திய தலைமை தேர்தல் ஆணையம் 23.11.2017 அன்று உத்தரவு பிறப்பித்த மறுநாளே அதாவது 24.11.2017 அன்றே அவசர கதியில் இந்திய தலைமை தேர்தல் ஆணையம் டாக்டர் RK நகர் சட்டமன்ற இடைத்தேர்தலை அறிவித்தது. போதிய அவகாசம் இல்லாத நிலையில் திரு.டிடிவி தினகரன் சுயேட்சை வேட்பாளராக களம் இறங்கி 21.12.2017 அன்று நடைபெற்ற தேர்தலில் மக்களின் அமோக ஆதரவுடன் மாபெரும் சாதனை வெற்றியை பெற்றார். சுமார் 40000 வாக்குகள் வித்தியாசத்தில் திரு.டிடிவி தினகரன் பெற்ற வெற்றியும், சுமார் 90000 வாக்குகளை அவர் பெற்றதுமே, அஇஅதிமுகவின் உண்மை தொண்டர்கள் எங்கள் பக்கமே என்பதனை பறைசாற்றும் வண்ணமாக வெளிப்பட்டது. மேற்படி தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக 19.12.2017 அன்று அக்கா அவர்கள் பாடையில் உள்ளது போன்ற ஒரு படத்தை போட்டு பொய்யான தகவல்களை கொண்ட ஒரு அறிக்கையினை திரு.மதுசூதனனுக்கு ஆதரவாக திரு.ஓ.பன்னீர்செல்வமும் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமியும் டாக்டர் RK நகர் சட்டமன்ற தொகுதி முழுக்க விநியோகித்துள்ளனர். இதனால் மனம் உடைந்த திரு.P.வெற்றிவேல் தன்னிச்சையாக என் அனுமதியின்றியும் திரு.டிடிவி தினகரன் அவர்களின் அனுமதியின்றி, எங்கள் வார்த்தைகளை மீறி ஏப்ரல் 2017 முதல் தன் வசம் வைத்திருந்த "அக்கா அவர்கள் அப்பல்லோவில் சிகிச்சை பெற்ற போது எடுத்த விடியோ பதிவுகள் சிலவற்றை ஒருபென்டிரைவில் காப்பி செய்து 20.11.2017 அன்று சட்டமன்ற வளாகத்தில் ஊடகங்களில் வெளியிட்டுள்ளார்.

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

87. இதை கேள்விப்பட்டு திருடிடிவி தினகரன் திரு. P.வெற்றிவேலிடம் கோபப்பட, திருடிடிவி தினகரனிடம் பெற்ற பென்டிரைவை திரு. P.வெற்றிவேல் ஒப்படைத்துள்ளார். மேலும் "மன உளைச்சலில் இவ்வாறு செய்து விட்டேன். அம்மாவின் மரணத்தை தொடர்ந்து கொச்சை படுத்தி வருகின்றனர். என்னால் தாங்க முடியவில்லை. அம்மாவின் காலை வெட்டிவிட்டனர். அம்மா செத்த பிறகு சிகிச்சை என நடிக்கின்றனர் என எதிர் தரப்பினர் பொய் பிரச்சாரம் செய்கின்றனர். அம்மாவின் உண்மை தொண்டனான என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அதேபோல என் தாய்க்கு நிகராக நான் நினைக்கும் பொதுச்செயலாளர் சின்னம்மா மீது பழி சுமத்துவதை என்னால் தாங்கமுடியவில்லை." எனவே நீங்களும் பொதுச்செயலாளரும் என்னை மன்னித்துவிடுங்கள்" என திரு.P. வெற்றிவேல் கூறியுள்ளார். அதன்பிறகு தேர்தல் ஆணையமும், இந்த ஆணையமும் ஒரே நாளில் (20.11.2017) மேற்படி ஒரே விஷயத்தில் இரண்டு புகார்களை இரண்டு காவல்நிலையங்களில் திரு.P. வெற்றிவேலுக்கு எதிராக புகார்களை தாக்கல் செய்தன. அதன்பிறகு திரு.P.வெற்றிவேலும், திரு.TTV தினகரனும் தத்தம் வசம் இருந்த பென்டிரைவ்களை இந்த ஆணையம் அவர்களுக்கு வழங்கிய சம்மன் அடிப்படையில் வழக்கறிஞர் மூலமாக இந்த ஆணையத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

88. வீடியோ வெளியான செய்தி தெரிந்த உடன் நான் மிகுந்த மனவேதனை அடைந்தேன். ஆனாலும் அதன்பின்னர் செய்திகள் மூலமாகவும் தொலைகாட்சி நிகழ்ச்சிகள் மூலமாகவும், "அக்காவின் மரணத்தை கொச்சை படுத்தி வந்த நபர்களின் சூழ்ச்சியை புரிந்து கொண்ட தமிழக மக்களின் மன ஓட்டத்தையும் உணர்வுகளையும்" நான் அறிந்து என்னை சமாதானம் செய்து கொண்டேன். ஆனாலும் அக்கா நைட்டியுடன் உள்ள வீடியோ வெளியானது எனக்கு வருத்தமே. என்னை பொறுத்தவரையில் அது அக்காவுக்கு தரும் சிகிச்சை தொடர்பானவற்றை அக்காவே எடுக்க சொன்ன, அக்கா பார்பதற்காக எடுக்கப்பட்ட வீடியோக்கள். நான் எந்த சூழலிலும் அந்த வீடியோக்களை வெளியிட்டிருக்க மாட்டேன். என்னை

"Before me"

Asst. Superintendent,
Central Prison

சிறையில் சந்தித்தபோது மேலே சொன்ன முழு விவரங்களையும் திரு.P.வெற்றிவேல் மூலமாக நான் தெரிந்துகொண்டேன். அக்கா அவர்கள் நைட்டியுடன் உள்ள வீடியோ பொதுவெளியில் வெளியானது எனக்கு வருத்தமாக இருந்தாலும் அக்கா அவர்களின் மரண விஷயத்தில் களங்கம் ஏற்படுத்திய நபர்களின் முகத்திரையை உரித்த வகையிலும் அக்கா அவர்களின் ஆன்மா கட்டாயம் சந்தோஷப்படும் என்றே நான் நம்புகிறேன்.

89. அக்கா அவர்களின் மரணம் தொடர்பாக இன்னும் எஞ்சியுள்ள சிலரின் சந்தேகத்தை போக்கும் விதமாக, இந்த ஆணையம் அமைக்கப்பட்டதில் எனக்கோ என்னை சார்ந்தவர்கள் யாருக்கும் எவ்வித மாற்று கருத்தும் இல்லை. ஆனால் இதை தொடர்ந்து அரசியலாக்க விரும்பிய மற்றும் இப்போது வரை அரசியலாக்க விரும்புகிறவர்களின் செயல்களின் மீது தான் எனக்கு மாற்று கருத்து உள்ளது.

90. அக்கா மறைவுக்கு பின்னர், திரு.ஓ.பன்னீர்செல்வம் முதல்வராக பணியாற்றிய போது அக்கா மரணத்தில் எந்தவிதமான சந்தேகமும் தனக்கு இல்லை என குறிப்பிட்டுள்ளார். அதன் பின்னர் முதல்வர் திரு.எடப்பாடி கே.பழனிசாமியும் பிற அமைச்சர்களும் அக்கா மரணத்தில் எந்த சந்தேகமும் இல்லை என குறிப்பிட்டுள்ளார்கள். மேற்படி விவரங்கள் தமிழக சட்டமன்ற அவைக்குறிப்பில் பதிவாகியுள்ளது. தற்போது திரு.ஓ.பன்னீர்செல்வம் மற்றும் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அரசியல் காரணங்களுக்காக முதல்வர் செல்வி.ஜெ.ஜெயலலிதா மரணத்தில் எங்களுக்கு எந்த சந்தேகமும் இல்லை. மக்களுக்கு சந்தேகம் இருக்கிறது அவற்றை தெளிவுபடுத்த தான் ஆணையம் அமைத்துள்ளோம் என்று கூறியுள்ளனர்.

"Before me"

Asst. Superintendent
Central Prison

91. அக்கா மரணத்தில் சந்தேகம் உள்ளது என்றும் சந்தேகம் இல்லை என்றும் பல அரசியல் கட்சி தலைவர்கள், முக்கியஸ்தர்கள் TV களில் பேசிய விவரத்தை அக்காவின் உதவியாளர்களில் ஒருவரான திரு.கார்த்திகேயன் என்னிடம் கூறினார். அதன் விவரங்கள் கீழ்கண்டவாறு.

| வரிசை எண். | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | திரு.வெங்கையா நாயுடு | இந்திய துணை குடியரசு தலைவர் |
| 2. | திரு.அமித் ஷா | பா.ஜ.க. தேசிய தலைவர் |
| 3. | திரு.அருண் ஜெட்லி | மத்திய நிதி அமைச்சர் |
| 4. | திரு.ஓ.பன்னீர்செல்வம் | தமிழக துணை முதலமைச்சர் |
| 5. | திரு.எடப்பாடி.கே.பழனிசாமி | தமிழக முதலமைச்சர் |
| 6. | திரு.பி.எச். பாண்டியன் | -------- |
| 7. | திரு.C.பொன்னையன் | -------- |
| 8. | திரு.D.ஜெயக்குமார் | தமிழக மீன் வளத்துறை அமைச்சர் |
| 9. | திரு.திண்டுக்கல் சீனிவாசன் | தமிழக வனத்துறை அமைச்சர் |
| 10. | திரு.தம்பிதுரை | பாராளுமன்ற துணை சபாநாயகர் |
| 11. | திரு.செங்கோட்டையன் | தமிழக பள்ளி, கல்வித்துறை அமைச்சர் |
| 12. | திரு.K.P.முனுசாமி | முன்னாள் அதிஅதிமுக சட்டமன்ற உறுப்பினர் |
| 13. | திரு.விஜய பாஸ்கர் | தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் |
| 14. | திரு.செல்லூர் ராஜீ | தமிழக கூட்டுறவு துறை அமைச்சர் |
| 15. | திரு.R.B.உதயகுமார் | தமிழக வருவாய்துறை அமைச்சர் |
| 16. | திரு.O.S.மணியன் | தமிழக கைத்தறிதுறை அமைச்சர் |
| 17. | செல்வி. கீதா | ------------ |
| 18. | திரு.வெங்கட சர்மா | கேரள நம்பூதரி |

"Before me"

Asst. Superintendent
Central Prison

92. இந்த ஆணையம், அக்கா அவர்களின் மறைவு தொடர்பாக நடத்தும் எந்த ஒரு சட்டபூர்வமான, நியாயமான விசாரணைக்கும் நான் முழுஅளவில் ஒத்துழைக்க தயாராக உள்ளேன். இனி ஆணையம் விசாரிக்க போகும் சாட்சிகளையும் ஏற்கனவே விசாரிக்கப்பட்ட சாட்சிகளை என் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஆணையம் உரிய கால அவகாசம் தர வேண்டும். அப்போது தான் என் வழக்கறிஞர் என்னுடன் கலந்தாலோசித்து அக்காவின் மரணம் மற்றும் என் மீது சுமத்த முயலும் களங்கங்களையும் பொய் குற்றச்சாட்டு வைப்பவர்களின் உண்மைத் தன்மையை கொண்டு வர முடியும். அதற்கான வாய்ப்பை எனக்கு இந்த ஆணையம் **"விசாரணை ஆணையங்கள்"** சட்ட விதிகளின் படி மறுக்காமல் வழங்க வேண்டும். எப்போதெல்லாம் சாட்சிகள் விசாரிக்கப்பட உள்ளனர் என்பதனை என் வழக்கறிஞருக்கு முன் கூட்டியே அறிவிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். 06.03.2018 தேதியிட்ட உத்தரவில் இந்த ஆணையம் குறிப்பிட்டுள்ள சட்டத்துக்கு மாறான சங்கதிகளை பொறுத்த உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க நான் என் உரிமையை செயல்படுத்த உள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

93. மேலும் 12.02.2018 தேதியன்று 110 பக்கங்கள் கொண்ட ஆவணங்களை எனது வழக்கறிஞரிடம் இந்த ஆணையம் வழங்கியது. தவிர 26.02.2018 தேதியன்று தான் 2956 பக்கங்கள் கொண்ட ஆவணங்களை இந்த ஆணையம் வழங்கியுள்ளது. எனக்கெதிராக சாட்சியம் அளித்தவர்கள், எனக்கெதிராக தாக்கல் செய்த மனுக்கள், புகார்கள் மற்றும் குறியீடு செய்த ஆவணங்கள் பற்றி என்னால் முழுமையாக புரிந்து கொள்ள போதுமான கால அவகாசம் இல்லாத நிலையில் இந்த ஆணையம் அவசரகதியில் பிறப்பிக்கும் உத்தரவுகளினால் எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படாத வண்ணம் மேற்சொன்ன வரைக்குமான இந்த சத்திய பிரமாண வாக்குமூலத்தை நான் தாக்கல் செய்கிறேன்.

94. அக்காவின் மரணத்தை களங்க படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடும் எனது நற்பெயருக்கு ஊறுவிளைவிக்கும் நோக்கத்தோடு சிலர் நேரடியாகவும் பலர் பிறரின் தூண்டுதலின்

"Before me"
Asst. Superintendent
Central Prison
BANGALORE

பேரிலும் பொய்யான புகார்களை எந்த அடிப்படை ஆதாரமுமின்றி அளித்துள்ளனர். பெயர் இல்லாமல் ஒரு புகார் தயாரிக்கப்பட்டு 302 புகார்கள் நகல்களாக அப்படியே அச்சு அசல் மாறாமல் பிரதிகளாக எடுக்கப்பட்டு அதில் வெவ்வேறு பெயர்களில் புகார்கள் அளிக்கப்பட்டுள்ளன (1208 பக்கங்கள்). அக்காவின் மரணம் தொடர்பாக மற்றும் பிற சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வழக்குகளாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்குகளில் நீதிமன்றம் உத்தரவுகள் பிறப்பித்து தலையிடாத சூழலில் அந்த விவரங்களை கொண்டே இந்த ஆணையத்தில் புகார்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (47 பக்கங்கள்) அதையெல்லாம் இந்த ஆணையம் கருத்தில் கொள்ள வேண்டும்.

95. அக்கா அவர்களின் அண்ணன் மகள் திருமதி.ஜெ.தீபா காழ்ப்புணர்வோடு என் மீது பொய்யான விவரங்களை இந்த ஆணையத்தில் கூறியுள்ளார். அவரது குற்றச்சாட்டுகள் அனைத்தும் எவ்விதமான அடிப்படை ஆதாரமும் இன்றி வெறும் ஐயத்தின் பால் சுமத்தப்பட்டுள்ளது. அக்கா அவர்கள் உயிரோடு இருந்த கால கட்டம் வரையில் ஜெ.தீபா மீது, அக்கா நல்ல மதிப்பு கொண்டிருக்கவில்லை. அதற்கு காரணம் திருமதி.ஜெ.தீபா அவரது தாயாரை போன்றே நடந்து கொள்கிறார் என்று அக்கா பலமுறை என்னிடம் சொல்லியதுண்டு. ஜெ.தீபா அவர்களின் தாயார் திருமதி. ஜெ.விஜயலட்சுமி பாரத பிரதமராக திரு.நரச்சிம்ம ராவ் அவர்கள் இருந்தபோது அக்காவின் நன்மதிப்பிற்கு கேடு விளைவிக்கும் வகையில் உயிருக்கு ஆபத்து எனவும் மற்றும் பாதுகாப்பு தேவை எனவும் பொய்புகார் கொடுத்தார். அதே போல தி.மு.க தலைவர் திரு.மு.கருணாநிதி மற்றும் காங்கிரஸ் தலைவர் திரு.வாழப்பாடி இராமமூர்த்தி ஆகியோரை சந்தித்து அக்காவுக்கு எதிராக செயல்பட்டார். திருமதி.ஜெ.விஜயலட்சுமி போன்றே குணநலன்களை ஜெ.தீபாவும் கொண்டிருக்கிறார் என்பதே அக்கா அவர்களின் எண்ணம். அதன் காரணமாக ஜெ.தீபாவிடமிருந்து அக்கா அவர்கள் விலகியே இருந்து வந்தார். அதற்கு காரணம் நான் தான் என எண்ணிக்கொண்டு ஜெ.தீபா காழ்ப்புணர்வு கொண்டு இருந்திருக்கிறார். அதனால் என் மீது திருமதி.ஜெ.தீபா பொய் குற்றச்சாட்டுக்களை இந்த ஆணையத்தில் அடுக்கியுள்ளார்.

"Before me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE

96. ஆனாலும் திரு.ஜெ.திபக் அவரது அப்பா திரு.ஜெயக்குமாரை போன்றவர் என்று அக்கா அடிக்கடி கூறுவார். திரு.ஜெ.திபக் அக்காவுடன் எப்போதும் அனுசரணையாக நடந்து கொள்வார். அதே போன்று நவம்பர் 2016 திருப்பரங்குன்றம் இடைத்தேர்தலில் அஇஅதிமுக கழக வேட்பாளர் திரு.போஸ் அவர்களிடம் தோற்றுப்போன திமுக வேட்பாளர் டாக்டர் சரவணன் இந்த ஆணையத்தில் கூறிய குற்றச்சாட்டுகளும் அரசியல் உள்நோக்கம் கொண்டவையே. நான் எப்படி அக்கா அவர்களை கண்ணின் இமை போல் வைத்து பார்த்து கொண்டேன் என்பது போயஸ் கார்டனில் நீண்ட காலமாக பணியாற்றிய அனைவருக்கும் தெரியும். அக்காவின் இறப்பினால் ஏற்பட்ட துக்கத்திலிருந்து நான் இன்னும் முழுமையாக மீண்டு வரவில்லை. 05.12.2016 அன்று இறந்த அக்காவின் மரணத்திற்கான உண்மை காரணத்தை, நான் மேலே குறிப்பிட்டுள்ள நபர்களும், முக்கியஸ்தர்களும், மருத்துவர்களும் மற்றும் மருத்துவ ஆவணங்களுமே வெளிப்படுத்தும்.

97. தவிர என் மீது பொய் புகார்களும், பொய் சாட்சிகளும் பொய்யான விவரங்களை கொண்ட குறியீடு தாக்கல் செய்தவர்கள் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களையும் மற்றும் 30.01.2018க்கு பின்பாக இந்த ஆணையம் விசாரித்து வரும் நபர்களின் சாட்சியங்கள் குறியீடு செய்யும் ஆவணங்கள் பற்றியும் நான் கூடுதல் சத்தியபிரமாண வாக்குமூலத்தின் மூலமாக எதிர்காலத்தில் உரிய நேரத்தில் தாக்கல் செய்கிறேன் என்பதனையும் இந்த ஆணையத்தின் முன்பு நான் தெரிவித்துக்கொள்கிறேன். விரைவாக இந்த ஆணையம் செயல்பட்டு அக்காவின் மரணம் தொடர்பான பொய்யான குற்றச்சாட்டுகளுக்கும் அவதூறு ஏற்படுத்தும் செயல்பாடுகளுக்கும் பொய்யான ஆதாரபூர்வமற்ற கேள்விகளுக்கும் நடுநிலையோடு, ஒரு தலைபட்சமாக செயல்படாமல், முறையாக விசாரித்து, அவசரப்பட்டு ஏற்கனவே வழிகாட்டுதல் படி செய்ய வகுக்கப்பட்ட கோட்பாடுகளின் தீர்மானிக்கப்பட்ட முடிவுகளாக எடுக்காமல், அக்காவின் மரணத்தை களங்கப்படுத்தும் வண்ணமாக செயல்படும் நபர்களின் உள்நோக்கத்தினை வெளிக்கொணர வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

"Before me"
Asst. Superintendent
Central Prison

98. 15.02.2017 முதலே நான் சிறையில் இருக்கின்ற காரணத்தால் இந்த சத்யபிரமாண வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ள பெயர்கள் மற்றும் தேதிகள் எனது ஞாபசக்தி திறனை கொண்டு உத்தேசமாக தயாரிக்கப்பட்டது என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி காரணத்தால் ஒரு சில விவரங்களையும் பெயர்களையும் நான் குறிப்பிடாமலும் விட்டிருக்கலாம் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

99. மேற்படி அனைத்து விவரங்களையும் என்னை சந்தித்த எனது வழக்கறிஞர் திரு.ந.இராஜா செந்தூர் பாண்டியனிடம் நான் கூற, அவர் குறிப்பெடுத்து என்னிடம் பிரமாண வாக்குமூலம் மாதிரியாக தயாரித்து மீண்டும் சரிபார்க்க என்னிடம் காண்பிக்க, அதன்படி

நான் அவரிடம் சொன்ன திருத்தங்கள் சரிசெய்யப்பட்டு பிறகு கணினி மூலமாக பிரிண்ட் செய்து என்னிடம் பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறைத்துறை அதிகாரியின் முன்பு வழங்கப்பட்டது. நான் படித்து பார்த்து எல்லாம் நான் சொன்னபடி சரியாக இருக்க 55 பக்கங்கள் கொண்ட இந்த சத்யபிரமாண வாக்குமூலத்தை மேற்படி சிறைதுறை அதிகாரியின் முன்னிலையில் இன்று 09.03.2018 அன்று சிறைத்துறை அதிகாரி முன்னிலையில் நான் கையொப்பமிட்டு தங்கள் ஆணையத்தின் முன் என் வழக்கறிஞர் மூலமாகவும் மற்றும் விரைவு தபால் மூலமாகவும் நான் சமர்பிக்கிறேன்.

இப்படிக்கு,

(V.K.சசிகலா)

"Berore me"

Asst. Superintendent
Central Prison
BANGALORE.

மாண்புமிகு நீதியரசர் திரு
அ.ஆறுமுகசாமி விசாரணை ஆணையம்,
முதல் தளம் கலச மகால் புராதான
கட்டிடம், சேப்பாக்கம்,
சென்னை - 600 005.

CW.NO.16/AAJCOI/2017

DATED: 21.12.2017

திருமதி.V.K.சசிகலா,
த/பெ.லேட்.விவேகானந்தன்,
நிரந்தர முகவரி
எண்.81, போயஸ் கார்டன்,
சென்னை - 600 086,
தற்போது
மத்திய சிறைச்சாலை,
கைதி எண்.9234,
பரப்பன அக்ரஹார சிறைச்சாலை,
பெங்களூர், கர்நாடகா - 560 100.

..... விண்ணப்பதாரர்

## சத்தியபிரமாண வாக்குமூலம்

திரு. ந.இராஜா செந்தூர் பாண்டியன்,
(84/1998)
செ.சுப்பிரமணியன்,(3649/2010)
எஸ்.வி.ஆர்.சுப்பிரமணியம் (1985/2011)

விண்ணப்பதாரரின் வழக்கறிஞர்கள்

## <u>9. R.2 - அப்போலோ மருத்துவமனையால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு பிரமாணப் பத்திரங்கள்</u>

***9.1.*** *R.2 மருத்துவமனையால் பெறப்பட்ட அழைப்பாணைகளின்படி, டாக்டர் பிரதாப் சி. ரெட்டி மற்றும் டாக்டர் ப்ரீத்தா ரெட்டி ஆகியோர் கையெழுத்திட்ட பிரமாணப் பத்திரங்கள், 12.01.2018 அன்று திருமதி. மைமூனா பாட்ஷாவால் தாக்கல் செய்யப்பட்டது. அதில் மறைந்த முதல்வருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை விவரங்கள் சுருக்கமாக வழங்கப்பட்டுள்ளன. டாக்டர் பிரதாப் சி. ரெட்டியால் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரம் பின்வருமாறு:-*

***<u>டாக்டர் பிரதாப் சி. ரெட்டியால் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரம்</u>***

*மாண்புமிகு நீதியரசர் திரு. அ. ஆறுமுகசாமி விசாரணை*
*ஆணையத்தின் முன்*
*முதல் தளம்**,** கலச மகால் புராதன கட்டடம்**,** சேப்பாக்கம்**,***
*சென்னை-**05.***
***C.W. 14/AAJCOI/2017 ,** நாள்: **21.12.2017.***
***(25.09.2017** ஆம் நாளிட்ட எண் **817 -** ஆம் நிலை அரசாணை)*

*நான், டாக்டர். பிரதாப் சி.ரெட்டி, த/பெ மறைந்த ஸ்ரீ ராகவ ரெட்டி, வயது 84. எனது அலுவலக முகவரி, எண்.21, கிரீம்ஸ் லேன், ஆஃப் கிரீம்ஸ் சாலை, சென்னை 600 006ஆகும். நான் இதன் மூலம் கீழ்க்கண்டவாறு பணிவுடன் உளமாற உறுதியளிக்கிறேன்:*

1. *நான், 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட, அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் என்டர்பிரைஸ் நிறுவனத்தின் தலைவராவேன். தமிழ்நாடு அரசு பொதுத் ( 8C ) துறையின் 25.09.2017 ஆம் நாளிட்ட 817 ஆம் நிலை எண் அரசாணையின் வாயிலாக மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22.09.2016 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கான சூழ்நிலைகள் மற்றும் 05.12.2016 அன்று அவர் மறையும் வரை அளிக்கப்பட்ட சிகிச்சை தொடர்பாக விசாரிப்பதற்காக மாண்புமிகு நீதியரசர் திரு. A. ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்தினை அமைத்தது.*
2. *இந்த மாண்புமிகு ஆணையத்திடமிருந்து 21.12.2017 ஆம் நாளிட்ட அழைப்பாணைகளைப் பெற்றுள்ளேன், மேலும் விசாரணைக்காக சாட்சியாக அழைக்கப்பட்டு அதில் பங்கேற்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டேன். ஆணையத்தில் விசாரிக்கப்பட்ட சில சாட்சிகள் எனது நலனைப் பாதிக்கும் வகையில் சாட்சியங்களை அளித்ததாகவும், நான் இல்லாத நிலையில் ஆணையத்தில் குறிப்பிடப்பட்டதற்கு ஏற்ப சாட்சியம் அளித்ததாகவும் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*28.12.2017 ஆம் நாளிட்ட மனு எண்கள் 1/2018 , 2/2018 வாயிலாக எங்கள் தரப்பு வழக்கறிஞர் எங்கள் உரிமைகளைப் பாதிக்கக்கூடிய சாட்சிகள், ஆவணங்கள், வாக்குமூலங்கள் போன்றவற்றின் பட்டியலுக்கு விண்ணப்பிக்கவும், பெறவும் இந்த மாண்புமிகு ஆணையத்தின் அனுமதியைக் கோரியுள்ளார். 03.01.2018 அன்று, எனது வழக்கறிஞர் சமர்ப்பித்ததன் பேரில், இந்த மாண்புமிகு*

ஆணையம் மனுவை மேலும் விசாரணைக்காக 31.01.2018 ஆம் நாள் அன்றைக்கு ஒத்திவைத்தது. இருப்பினும், 03.01.2018 ஆம் நாளிட்ட ஆணையின்படி, 22.09.2016 முதல் 05.12.2016 வரையிலான காலத்தில், மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தொடர்பான மருத்துவப் பதிவேடுகளை அசலாக மற்றும் விரிவான பிரமாணப் பத்திரங்களில் சமர்ப்பிக்குமாறு 12.01.2017 அன்று இந்த மாண்புமிகு ஆணையம் மருத்துவமனைக்கு உத்தரவிட்டது. எனவே, மனு எண்கள் 1/2018, 2/2018 இல் கோரிய ஆவணங்கள் / விவரங்கள் கிடைத்தவுடன் கூடுதல் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்வதற்கான எனது உரிமைகளுக்குப் பாதிப்பின்றி இந்த பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்கிறேன்.

இந்த மாண்புமிகு ஆணையத்தின் ஆணையின்படி, சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் இல் (இனிமேல் "மருத்துவமனை" என குறிப்பிடப்படும்) மறைந்த மாண்புமிகு முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு 22.09.2016 ஆம் நாள் முதல் 05.12.2016ஆம் நாள் வரையில் அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை தொடர்பான அசல் மருத்துவப் பதிவுகள், இத்துடன் தொகுதி 1 முதல் தொகுதி 30 ஆக அளிக்கப்படுகிறது. அளிக்கப்பட்ட ஆவணங்களின் விரிவான பட்டியல் இந்த உறுதிமொழிப் பத்திரத்தின் இணைப்பு - 1 ஆக இத்துடன் அளிக்கப்பட்டுள்ளது. கீழே

குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகள் அவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

இருப்பினும், மறைந்த மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களின் மருத்துவ சிகிச்சையின் உண்மைப் பின்னணி மற்றும் அது தொடர்பான சூழ்நிலைகளை முன்வைப்பதற்கு முன் அப்போலோ மருத்துவமனை குழுவை உலகப் புகழ்பெற்ற மருத்துவமனையாக மாற்றியுள்ள அப்போலோ மருத்துவமனைகளின், உலகத்தரம் வாய்ந்த வசதிகள், மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித் துறையிலான சாதனைகள், மருத்துவர்களின் நற்சான்றிதழ்கள் மற்றும் அதிநவீன தொழில்நுட்பம், சமூக சேவைக்கான அர்ப்பணிப்பு மற்றும் இலவச சிகிச்சை, ஆகியவற்றைப் பற்றிய விளக்கத்தை பதிவு செய்ய விரும்புகிறேன். அப்போலோ மருத்துவமனை குழுவில் தற்போது 7500 மருத்துவர்களும் 10,000க்கும் மேற்பட்ட செவிலியர்களும் கொண்ட 70 மருத்துவமனைகள் இணைந்து 33 வருட சிறந்த மருத்துவ வரலாற்றைக் கொண்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில், அவர்களின் முன்னோடி உணர்வு, சுகாதாரம் மற்றும் தேசத்திற்கான சேவைக்கான அர்ப்பணிப்பைப் பாராட்டி இந்திய அரசு அப்போலோ மருத்துவமனை குழுமத்தை 'அப்போலோ நினைவு முத்திரை' வழங்கி கௌரவித்தது. மேலும், மதிப்புமிக்க ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் அவர்களின் வரலாறு ஒரு வழக்கு ஆய்வாகக் கற்பிக்கப்பட்டது என்பதிலிருந்து, அப்போலோ

மருத்துவமனை குழுமத்தின் நற்பெயர் மற்றும் உலகம் முழுவதும் அதன் மீதான நல்லெண்ணம் குறித்து தெளிவாகிறது. அப்போலோ மருத்துவமனை குழுமம் 2017 ஆம் நிதியாண்டில் 60,000 இதய அறுவை சிகிச்சைகள், 5600 க்கும் மேற்பட்ட மொத்த மூட்டு மாற்று சிகிச்சைகள், 1250 திட உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள், 14,000 நரம்பியல் அறுவை சிகிச்சைகள் செய்துள்ளது. புற்றுநோய்க்கான ஆராய்ச்சி மற்றும் சிகிச்சைக்காக தெற்காசியாவிலேயே முதன்முறையாக சென்னையில் முதன்முதலாக புரோட்டான் புற்றுநோய் மையத்தை அமைத்துள்ளது. இது உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் விரிவான திட உறுப்பு மாற்றுத் திட்டத்தைக் கொண்டுள்ளது மற்றும் 2017 ஆம் ஆண்டில் மட்டும் 1250 திட உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை செய்துள்ளது. சென்னையில் உள்ள அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் ரோபோடிக் சர்ஜரி மட்டுமே முதுகுத்தண்டு அறுவை சிகிச்சைக்காக வடிவமைக்கப்பட்ட தொழில்நுட்பமாகும் மற்றும் தெற்காசியாவிலேயே முதன்முதலாக மினிமல் இன்வேஸிவ் ரோபோடிக் வழிகாட்டி முறையில் முதுகெலும்பு அறுவை சிகிச்சை முறையையும் வழங்குகிறது. மருத்துவத்தின் பல சிறப்புத் துறைகளில் இது போன்ற பல சாதனைகளைப் படைத்துள்ளது. இந்த மைல்கற்கள் அனைத்தும் அனுபவம் வாய்ந்த மற்றும் உலகப் புகழ்பெற்ற மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ஆரோக்கியம்

மற்றும் நல்வாழ்வின் பாதுகாவலர்களாக இருக்க உறுதிபூண்டுள்ள நிர்வாகத்தின் கூட்டு முயற்சியால் அடையப்பட்டுள்ளன. அப்போலோ ஹாஸ்பிடல்ஸ், சென்னை, இந்தியாவின் தரவரிசையில் # 1 டாப் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை தரம் பெற்றுள்ளது மற்றும் ஐசிஐசிஐ லோம்பார்ட் & சிஎன்பிசி டிவி18 இந்தியா ஹெல்த்கேர் விருதுகள் 2016 இல் மல்டி-ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல் மெகாபோலிஸ் இன் தி கன்ட்ரி விருதை வென்றுள்ளது.

மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித் துறையில் இந்த சாதனைகள் மற்றும் பாராட்டுக்களுக்கு கூடுதலாக, அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் எண்டர்பிரைஸ் லிமிடெட், கார்ப்பரேட் ஆளுகையின் சட்டப்பூர்வ தேவைகளான நெறிமுறைகள், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பு, பணியாளர் நல்வாழ்வு, பணியாளர்களுக்கிடையேயான தொடர்பு, மனித உரிமைகளைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழலுக்கான அக்கறை ஆகியவற்றிற்கும் இணங்குகிறது.

அப்போலோ மருத்துவமனை குழு கிராமப்புற வளர்ச்சியில் பாதுகாப்பான குடிநீர், சுகாதார வசதிகள், சத்துணவு மையங்கள் அமைத்தல், மருத்துவ முகாம்கள் நடத்துதல் ஆகியவற்றால் 2017 ஆம் ஆண்டில் மட்டும் 55,192 நபர்களுக்கு உதவியது. இதயம் நோய் உள்ள குழந்தைகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சை, ஆதரவற்ற குழந்தைகளுக்கான ஆரம்பப் பள்ளியை நிறுவுதல் மற்றும் நடத்துதல்,

சித்தூர் மாவட்டம் தவணாம்பள்ளே மண்டலத்தில் முழு சமூகத்திற்கும் சுகாதார சேவையை வழங்குவதற்காக 2013 இல் ”முழு சுகாதார” அறக்கட்டளை நிறுவப்பட்டது. எனவே, ஆதரவற்றோர் மற்றும் மருத்துவ சேவையை எளிதில் அணுக முடியாதவர்களுக்கு ஆதரவான மருத்துவ சேவையை வழங்குவதில் தன்னை ஒருங்கிணைத்துக்கொள்வதற்கும் அப்போலோ மருத்துவமனை குழுமம் அர்ப்பணிப்புடன் உள்ளது. மேலும் , மருத்துவமனை , அப்போலோ மருத்துவமனை , சென்னை , ஜாயின்ட் கமிஷன் இன்டர்நேஷனல் (ஜேசிஐ) அங்கீகாரம் பெற்றது. JCI என்பது உலகின் மிகப்பெரிய சுகாதாரப் பாதுகாப்பு அங்கீகாரமாகும். பாதுகாப்பு பெறுபவர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான ஆபத்தை குறைக்கும், செயல்திறனை மேம்படுத்தும், விளைவுகளை மேம்படுத்துதல் மற்றும் நோயாளியின் மனநிறைவளித்தல் மற்றும் அங்கீகாரம் பெற்ற மருத்துவமனைகளுக்கு அவர்களின் சாதனைகள் மற்றும் சிறப்பான அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்கு பொது அங்கீகாரம் வழங்கி, பாதுகாப்பான சூழலை உறுதிசெய்ய, இது போன்ற பல்வேறு வடிவமைக்கப்பட்ட நிலைகளைக் கொண்டுள்ளது. JCI தரநிலைகள் 329 தரநிலைகள் மற்றும் 1196 அளவிடக்கூடிய கூறுகளைக் கடைபிடிப்பதை உறுதி செய்வதன் மூலம் பாதுகாப்பான அமைப்புகளை வழங்குகின்றன. சென்னை அப்போலோ மருத்துவமனை, இந்த தரநிலைகளைக் கடைபிடித்து

*வருவதுடன் 2006 ஆம் ஆண்டு முதல் JC-யால் அங்கீகாரம் பெற்றதும் ஆகும். JCI மருத்துவமனை தரநிலைகள், சர்வதேச நோயாளிகளின் பாதுகாப்பு இலக்குகள், கவனிப்புக்கான அணுகல் மற்றும் கவனிப்பின் தொடர்ச்சி, நோயாளி மற்றும் குடும்ப உரிமைகள், நோயாளிகளின் பராமரிப்பு மற்றும் நோய்த்தொற்றுகளைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளைக் குறிப்பிடுகின்றன. மருத்துவமனை, JCI ஆல் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு தணிக்கை செய்யப்படுகிறது. JCI ஆய்வுக் குழுவில் இரண்டு மருத்துவர்கள் மற்றும் ஒரு செவிலியர் உள்ளனர் மற்றும் மறு அங்கீகாரத்திற்காக ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் 6 நாட்களுக்கு தணிக்கை நடத்தப்படுகிறது. JCI சான்றிதழ் நடைமுறையில் உள்ளது மற்றும் 16.12.2020 அன்று வரை செல்லுபடியாகும். அங்கீகாரச் சான்றிதழின் உண்மையான நகல் காட்சியாவணம் - 1, தொகுதி - 1 என இத்துடன் அளிக்கப்படுகிறது.*

*இதற்கு முன்னர் சிறந்த வசதிகளைக் கொண்டிருப்பதாக நம்பப்பட்டு நோயாளிகள் வெளிநாட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற நிலைமையிருந்தது அதற்கு மாறாக, அப்போலோ மருத்துவமனை தன்னம்பிக்கையுடன் நோய்களையும் மருத்துவ நிலைமைகளையும் கையாளுவதற்குத் தயாராக இருப்பதால் இந்தப்பிண்ணியில் நான் அதைச் சமர்ப்பிக்கிறேன்.*

இன்று, அப்போலோ மருத்துவமனை அந்த இடைவெளியைக் குறைத்து, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு நபரின் வீட்டு வாசலில் அத்தகைய கவனிப்பு வழங்கப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. அதேபோல், மருத்துவமனையும் அதன் மருத்துவர்களும் தங்களது நிபுணத்துவம் மற்றும் வசதிகளை மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உயிரைக் காப்பாற்றவும், சிறந்த மருத்துவத்திற்கான நெறிமுறைகள் மற்றும் ஒருமைப்பாட்டுக்கு இணங்கி ஒவ்வொரு அர்ப்பணிப்புடனும் வழங்கினர்.

இதற்கு முன்னர் சிறந்த வசதிகளைக் கொண்டிருப்பதாக நம்பப்பட்டு நோயாளிகள் வெளிநாட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கட வேண்டும் என்ற நிலைமையிருந்தது அதற்கு மாறாக அப்போலோ மருத்துவமனை தன்னம்பிக்கையுடன் நோய்கள் மற்றும் மருத்துவ நிலைமைகளையும் கையாளுவதற்குத் தயாராக இருப்பதால் இந்தப்பிண்ணியில் நான் அதைச் சமர்ப்பிக்கிறேன்.

இன்று, அப்போலோ மருத்துவமனை அந்த இடைவெளியைக் குறைத்து, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு நபரின் வீட்டு வாசலில் அத்தகைய கவனிப்பு வழங்கப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. அதேபோல், மருத்துவமனையும் அதன் மருத்துவர்களும் தங்களது நிபுணத்துவம் மற்றும் வசதிகளை மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உயிரைக் காப்பாற்றவும், சிறந்த மருத்துவத்திற்கான நெறிமுறைகள் மற்றும்

ஒருமைப்பாட்டுக்கு இணங்கி ஒவ்வொரு அர்ப்பணிப்புடனும் வழங்கினர்.

*10. மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது தொடர்பாக, சுமார் 10:00 மணியளவில் மருத்துவமனைக்கு அழைப்பு வந்ததாகச் சமர்ப்பிக்கிறேன். 22.09.2016 அன்று மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இல்லத்தில் இருந்து அவர் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக தகவல் தெரிவித்து மருத்துவமனை ஆம்புலன்ஸ் அங்கு சென்றபோது மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறைந்த ஆக்ஸிஜன் செறிவூட்டலுடன் மூச்சுத்திணறல் ஏற்பட்டதைக் கண்டார்கள். உடனடியாக 10.25 மணியளவில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 22.09.2016 அன்று அவரது உடல்நிலையைக் கண்டறியவும், தகுந்த மருத்துவ சிகிச்சையை முடிவு செய்யவும் பல்வேறு சிறப்பு மருத்துவர்களைக் கொண்ட குழு ஒன்று கலந்துகொண்டது. நோய்த்தொற்று, நீரிழப்பு மற்றும் சுவாசக் கோளாறு ஆகியவற்றின் ஆரம்ப நோயறிதல் செய்யப்பட்டது.*

*11. மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22.09.2016 அன்று அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து, 75 நாட்களுக்கு, 05.12.2016 அன்று அவர் மறைந்த நாள் வரை, அவருக்கு . கிரிட்டிகல் கேர் குரூப், மூத்த இருதயநோய் மருத்துவர்கள், மூத்த சுவாச மருத்துவர்கள், தொற்று நோய்த் துறையின்*

*ஆலோசகர்கள், மூத்த நாளமில்லாச் சுரப்பி நிபுணர்கள் மற்றும் நீரிழிவு நிபுணர்கள் அடங்கிய மருத்துவமனையின் நிபுணர்கள் மற்றும் நிபுணர்கள் குழு, ஆகியவர்களால் மிக உயர்ந்த தரமான மருத்துவ சிகிச்சை வழங்கியதாக நான் தெரிவிக்கிறேன். உணவுத் துறையின் மூத்த ஆலோசகர்களும் கலந்து கொண்டனர். மருத்துவமனை மற்றும் சிங்கப்பூர் மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையிலிருந்து பிசியோதெரபிஸ்டுகள் மூலம் பிசியோதெரபி வழங்கப்பட்டது. மாண்புமிகு மறைந்த தமிழக முதலமைச்சருக்கு அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சையின் விரிவான அறிக்கை 07.12.2016 ஆம் நாளிட்ட இறப்புச் சுருக்கத்தில் அளிக்கப்பட்டுள்ளது. கோரிக்கையின் பேரில் 06.03.2017 அன்று மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. மாநில அரசு இறப்புச் சுருக்கத்தை சுற்றனுப்பியது மற்றும் இப்போது பொது களத்தில் கிடைக்கிறது. 07.12.2016 ஆம் நாளிட்ட இறப்புச் சுருக்கத்தின் உண்மையான நகல் காட்சியாவணம் - 2, தொகுதி I என இத்துடன் அளிக்கப்பட்டு, மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெற்ற சிகிச்சையின் சுருக்கத்தை இதில் காணலாம்.*

*12. தமிழ்நாடு அரசு 30.09.2016 ஆம் நாளிட்ட அரசாணை(ப) எண். 1368-இன் படி, மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வருக்கு சிகிச்சை அளிக்கும் நிபுணர்கள் குழுவுக்குத் தேவையான*

உதவிகளை வழங்குவதற்காக, மருத்துவமனையில் இருக்கும் வகையிலான அரசு சிறப்பு மருத்துவர்களைக் கொண்ட ஐவர் குழுவை அமைத்தது. அரசு சிறப்பு மருத்துவர்களுக்கு தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் மருத்துவமனை எல்லா நேரங்களிலும் வழங்கியதுடன், மறைந்த மாண்புமிகு முதலமைச்சரை பரிசோதிக்கவும், அவர்களின் மருத்துவ கருத்தை தெரிவிக்கவும் சுதந்திரமானவர்களாக இருந்தனர்.

13. சர்வதேச நிபுணரும், கய்ஸ் மற்றும் செயின்ட் தாமஸ் என்எச்எஸ் அறக்கட்டளை மற்றும் லண்டன் கிங்ஸ் கல்லூரியின் பேராசிரியரும், தீவிர சிகிச்சை மருத்துவருமான டாக்டர் ரிச்சர்ட் பீலே-வுடன் ஆலோசனை நடத்தவும் மருத்துவமனை முயற்சி எடுத்தது. 30 செப்டம்பர் 2016 மற்றும் 1 அக்டோபர் 2016-க்கும் இடையில் மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வரின் உடல்நிலையை மதிப்பாய்வு செய்யவும், கண்காணிக்கவும் டாக்டர். பீலே மருத்துவமனைக்கு வருகை தந்தார். மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவமனையில் சிறந்த மருத்துவ சிகிச்சை பெற்று வருவதைக் கண்டார். மருத்துவமனையின் சிறந்த மருத்துவப் பராமரிப்பு, சிகிச்சையளிக்கும் அனைத்து மருத்துவர்கள் பின்பற்றும் சிகிச்சை முறையுடனும் அவர் உடன்பட்டார். மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வரின் மருத்துவ சிகிச்சையில் மிக உயர்தர சிகிச்சை

பின்பற்றப்பட்டது என்பது அவரது கருத்தாகும். 01.10.2016 ஆம் நாளிட்ட டாக்டர் ரிச்சர்ட் பீலே-வின் அறிக்கை இத்துடன் Exhibit- 3, தொகுதி 1-ஆக இணைக்கப்பட்டுள்ளது.

14. மேலும், மத்திய அரசிடம் தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, நுரையீரல் மருத்துவம் மற்றும் தூக்கக் கோளாறு துறை பேராசிரியர் டாக்டர் ஜி.சி. கில்னானி தலைமையில் மாண்புமிகு மறைந்த தமிழக முதலமைச்சரின் உடல்நிலையை மதிப்பீடு செய்வதற்காக, புது தில்லி அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தால் ( AIIMS ) ஒரு மருத்துவக் குழு நியமிக்கப்பட்டது. அனைத்து AIIMS மருத்துவர்கள் குழு, மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருக்கு மருத்துவ பரிசோதனை செய்து, அவரது உடல்நிலை மற்றும் மருத்துவமனையால் அளிக்கப்பட்டுவரும் சிகிச்சையை பல முறை மதிப்பாய்வு செய்து, தொடர்ந்து மருத்துவமனையால் அளிக்கப்பட்ட சிகிச்சை முறைகளை ஏற்றுக்கொண்டது. AIIMS-லிருந்து நிபுணர்கள் வருகை தந்த நாட்களின் விவரங்கள் மற்றும் அவர்களின் அறிக்கைகள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

| **தொ. எண்.** | **நாள்** | **குழு** |
|---|---|---|
| 1. | 5 அக்டோபர் முதல் 7 | 1. பேராசிரியர் டாக்டர் ஜி.சி. கில்னானி, பேராசிரியர், |

| | | |
|---|---|---|
| | அக்டோபர் 2016 வரை | நுரையீரல் மருத்துவம் & தூக்கக் கோளாறு துறை<br>2. பேராசிரியர் டாக்டர் அஞ்சன் ட்ரிகா, பேராசிரியர், மயக்கவியல் துறை, வலி, மருத்துவம் மற்றும் அவசர சிகிச்சை.<br>3. பேராசிரியர் டாக்டர் நிதிஷ் நாயக், இதயவியல் பேராசிரியர்.<br>வருகை பற்றிய அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அது *Exhibit-4*, தொகுதி *I* |
| *2.* | *9* அக்டோபர் முதல் *10* அக்டோபர் *2016* வரை | பேராசிரியர் டாக்டர் ஜி.சி. கில்னானி, பேராசிரியர், நுரையீரல் மருத்துவம் & தூக்கக் கோளாறு துறை<br>வருகை பற்றிய அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அது *Exhibit-5*, தொகுதி *I* |
| *3.* | *13* அக்டோபர் முதல் *15* அக்டோபர் *2016* வரை | 1. பேராசிரியர் டாக்டர் ஜி.சி. கில்னானி, பேராசிரியர், நுரையீரல் மருத்துவம் & தூக்கக் கோளாறு துறை<br>2. பேராசிரியர் டாக்டர் அஞ்சன் ட்ரிகா, பேராசிரியர், மயக்கவியல் துறை, வலி, மருத்துவம் மற்றும் அவசர சிகிச்சை. |

| | | |
|---|---|---|
| | | 3. பேராசிரியர் டாக்டர் நிதிஷ் நாயக், இதயவியல் பேராசிரியர்.<br>வருகை பற்றிய அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அது *Exhibit-6*, தொகுதி *I* |
| *4.* | டிசம்பர் *2* முதல் *3* வரை, டிசம்பர் *2016* | 1. பேராசிரியர் டாக்டர் ஜி.சி. கில்னானி, பேராசிரியர், நுரையீரல் மருத்துவம் & தூக்கக் கோளாறு துறை<br>2. பேராசிரியர் டாக்டர் அஞ்சன் ட்ரிகா, பேராசிரியர், மயக்கவியல் துறை, வலி, மருத்துவம் மற்றும் அவசர சிகிச்சை.<br>3. பேராசிரியர் டாக்டர் நிதிஷ் நாயக், இதயவியல் பேராசிரியர்.<br>4. பேராசிரியர், நிகில் டாண்டன் உட்சுரப்பியல் துறை<br>வருகை பற்றிய அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அது *Exhibit-7*, தொகுதி *I* |
| *5.* | டிசம்பர் *5, 2016* | 1. பேராசிரியர் டாக்டர் ஜி.சி. கில்னானி, பேராசிரியர், |

| | | |
|---|---|---|
| | | நுரையீரல் மருத்துவம் & தூக்கக் கோளாறு துறை<br>2. பேராசிரியர் டாக்டர் அஞ்சன் ட்ரிகா, பேராசிரியர், மயக்கவியல் துறை, வலி, மருத்துவம் மற்றும் அவசர சிகிச்சை.<br>3. பேராசிரியர் தேவககௌரவ், இதயவியல் பேராசிரியர்.<br>4. டாக்டர் ராஜீவ் நரங் கார்டியோ தொராசிக் அறுவை சிகிச்சை.<br>வருகை பற்றிய அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அது Exhibit-8, தொகுதி I |

15. மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு சிகிச்சை அளித்து வரும் சிறப்பு மருத்துவர்கள் குழு, மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வரின் உடல்நிலை குறித்து மாநில அரசின் பிரதிநிதிகள் மற்றும் தலைவர்களுக்கு விளக்கமளிக்க, தினமும் காலை மற்றும் மாலை நேரங்களில் மருத்துவமனையில் சந்திப்பு நிகழ்ந்தது. இந்தக் சந்திப்புகளில் மாநில அரசின் பிரதிநிதிகளான திரு. ராம மோகன ராவ், திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன், திருமதி. சாந்தா ஷீலா நாயர், செல்வி ஜெய்ஸ்ரீ, திரு. விஜய பாஸ்கர், சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ராதாகிருஷ்ணன், சுகாதாரத் துறைச் செயலாளர் திரு.

வெங்கடராமன் திரு ராமலிங்கம், திரு தம்பிதுரை ஆகியோர் கலந்துகொண்டனர். மேற்கண்டவர்களில் குறிப்பாக, திரு ராம மோகன ராவ், திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், திருமதி சாந்தா ஷீலா நாயர், திரு விஜய பாஸ்கர், சுகாதாரத்துறை அமைச்சர் மற்றும் திரு தம்பிதுரை ஆகியோர் அனைத்துக் கூட்டங்களிலும் கலந்து கொண்டனர். அப்போதைய முதல்வர் திரு. ஓ.பன்னீர்செல்வமும் சில கூட்டங்களில் கலந்து கொண்டார். ஆகவே, மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வரின் உடல்நிலை குறித்து மருத்துவமனை அனைத்து நேரங்களிலும் மாநில அரசுக்கு தெரிவித்தது.

16. மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு மருத்துவமனை மருத்துவர்கள் மட்டுமின்றி, மத்திய அரசு மற்றும் பன்னாட்டு நிபுணர்களால் பரிந்துரைக்கப்பட்ட மருத்துவர்களின் சிறந்த மருத்துவச் சேவையை வழங்குவதற்கு கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மருத்துவமனையில் நிபுணத்துவம் மிக்க மற்றும் அதிநவீன மருத்துவ வசதிகள் இருந்தாலும், இறுதிவரை தமிழ்நாட்டின் மறைந்த மாண்புமிகு முதலமைச்சரின் உயிரைக் காப்பதற்காக சிகிச்சை அளிப்பதில் எவ்விதமான முயற்சியும் விட்டுவிடப்படவில்லை. எந்த நேரத்திலும் அவரது உடல்நலம் அல்லது சிகிச்சை எந்த வகையிலும் சமரசம் செய்யப்படவில்லை மற்றும் வழங்கப்பட்ட சிகிச்சை முறை இந்தியாவிலும் பன்னாட்டு அளவிலும் உள்ள மற்ற சிறப்பு மருத்துவர்களால்

*சரிபார்க்கப்பட்டது. சந்தேகத்திற்கிடமின்றி, பல நோய்களின் காரணமாக, மறைந்த மாண்புமிகு முதலமைச்சரின் உடல்நிலை சிகிச்சையளிப்பதற்கு சவாலானதாக இருந்ததுடன், அதற்கு பல்வேறு நிபுணர்களின் ஒருங்கிணைந்த மருத்துவ கவனிப்பும் தேவைப்பட்டது. இதில் உள்ள ஆபத்துக்கள், மாநில அரசின் பிரதிநிதிகளுக்கும் எல்லா நேரத்திலும் தெரிவிக்கப்பட்டது.*

*17. 04.12.2016 அன்று மாலை 4:20 மணிக்கு, மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மூச்சுத் திணறல் இருப்பதாக புகார் எழுந்ததால், உடனடியாக அவர் மீண்டும் வென்டிலேட்டருடன் இணைக்கப்பட்டார். தீவிர சிகிச்சை மருத்துவரால் பரிசோதிக்கப்பட்டதில், அவருக்கு மூச்சுத்திணறல் இருப்பது கண்டறியப்பட்டது மற்றும் மூச்சுக்குழாய் அழற்சியின் உடனடி நெபுலைசேஷன் தொடங்கியது மற்றும் ஒரு டோஸ் டையூரிடிக் செலுத்தப்பட்டது. இருப்பினும், மாண்புமிகு முதலமைச்சரின் சுவாசக் கோளாறு தொடர்ந்தது மற்றும் மானிட்டரில் வென்ட்ரிகுலர் எக்டோபிக்ஸ் இருக்கத் தொடங்கியது, இது வென்ட்ரிகுலர் ஃபைப்ரிலேஷன் மற்றும் கார்டியாக் அரெஸ்ட் என விரைவாக மோசமடைந்தது, இந்த கண்டறியப்பட்ட cardiac arrest-இற்காக நவீன உயிர் காப்பு முயற்சிகளின்படி, Cardiopulmonary Resuscitation(CPR) உடனடியாகத் தொடங்கப்பட்டன. தொடர் முயற்சிகள் இருந்தபோதிலும், தன்னிச்சையான சுழற்சியை அடைய முடியவில்லை*

மற்றும் கூடுதல் உடல் சவ்வு ஆக்ஸிஜனேற்றத்தில் (ECMO) வைக்க ஒருமித்த முடிவு எடுக்கப்பட்டது மேலும் 4 டிசம்பர் 2016 மாலை 5:30 மணிக்கு அவசரமாக veno-arterial, Extra Corporeal Membrane Oxygenation ECMO தொடங்கப்பட்டது. நாட்டிலுள்ள மிகச் சில மருத்துவமனைகளில் தான் ECMO போன்ற உயிர்காக்கும் வசதி உள்ளது என்பதும், இந்த மருத்துவமனையில் அத்தகைய வசதி உள்ளது என்பதும், மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் காப்பாற்ற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்யும் வகையில் அதை வழங்க முடிந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 05.12.2016 வரை கண் அசைவு, இதயத் துடிப்பு மற்றும் gag reflex போன்ற அறிகுறிகள் தொடர்ந்து தென்பட்டன. இருப்பினும், மருத்துவக் குழுவின் மதிப்பீட்டின்படி, அவரது முன்னேற்றம் திருப்திகரமாக இல்லை. இரவு 7.00 மணி மற்றும் இரவு 9:00 மணிக்கு, கார்டியோ தொராசிக், ECMO குழுவால் அவர் பரிசோதிக்கப்பட்டு, மேலும் அவர் பியூபில்லரி ரிஃப்ளெக்ஸில் மூளைத் தண்டு செயல்பாடு மிகக் குறைவாக இருந்தது மற்றும் mild gag reflex, கண் மற்றும் corneal reflex இல்லாதது கவனிக்கப்பட்டது. அவருடைய இதயத்தின் செயல்பாடு மோசமடைந்தது. இந்த கண்டுபிடிப்புகளின் முக்கியத்துவம் குழுவால் விவாதிக்கப்பட்டு, 24 மணிநேர ECMO ஆதரவு இருந்தபோதிலும் அவரது

*intrinsic heart beat* திரும்பவில்லை என்று அவர்கள் ஒப்புக்கொண்டனர். *Extra corporeal support* – ஐத் தொடர்வதன் பலன் விவாதத்திற்குரியது. இருப்பினும், இது *AIMS* மருத்துவர்களுடன் விவாதிக்கப்பட வேண்டும் என்று குழு கருதியது. இரவு *10.00* மணியளவில் டாக்டர்.கில்னானி தலைமையிலான எய்ம்ஸ் குழுவினர் மறைந்த மாண்புமிகு முதலமைச்சரை எங்கள் குழுவினருடன் இணைந்து பரிசோதனை செய்தனர். இரவு *7:00* மணிக்கும் *8:00* மணிக்கும் இதய செயல்பாடு சரியாக இருந்தது. எய்ம்ஸ் குழுவுடன் அடுத்த நிலை குறித்து விரிவான கலந்துரையாடல் நடத்தப்பட்டது. *AIMS* குழு உட்பட, நாங்கள் அனைவரும் *ECMO*-வைத் தொடரலாம் எனவும், ஏனைய *ventilator and renal replacement therapy* போன்ற *organ spportive care* பயனற்றதாக இருக்கலாம் என்ற கருத்தில் உடன்பட்டோம். மேலும், மருத்துவ ரீதியாக *24* மணிநேரத்திற்கு மேல் *ECMO*-வைத் தொடர இயலாது. இது முதலில் தலைமைச் செயலாளர் தலைமையிலான அரசு செயலாளர்களுக்கும், பொறுப்பு முதல்வர் திரு.ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அமைச்சர்களுக்கும் மற்றும் மக்களவை துணை சபாநாயகர் திரு தம்பிதுரை அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. உயிர் காப்பு கருவிகளை திரும்ப எடுக்க திருமதி சசிகலா அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டதுடன் நாங்கள் திரும்ப எடுப்பதற்கான செயல்முறை மற்றும் அதன் விளைவுகளும் தெரிவிக்கப்பட்டன. அவர்கள்

*திரும்ப எடுப்பதை ஒப்புக்கொண்டனர் மற்றும் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் 05.12.2016 இரவு 11:30 மணியளவில் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.*

*18. என்னால் பெறப்பட்ட, 21.12.2017-ஆம் நாளிட்ட அழைப்பாணையில், சில சாட்சிகள் இந்த மாண்புமிகு ஆணையத்தின் முன் எனது உரிமைகளைப் பாரபட்சமாக பாதிக்கும் வகையில் சாட்சியமளித்ததாகக் கூறப்பட்டுள்ளது. மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 22.09.2016 அன்று அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது, அவர் உடல்நிலை கவலைக்கிடமாக இருந்தது குறித்து, 17.12.2017 அன்று நான் செய்தியாளர்களிடம் அறிக்கை அளித்துள்ளேன் என்றும் அழைப்பாணையில் கூறப்பட்டுள்ளது.*

*National Institute of Advanced Studies மற்றும் Apollo இணைந்து National Design and research Forum Institution of Engineers(India)-உடன் International workshop on Futuristic Healthcare Technology: Emerging Trends Telemedicine and medical Drone என்ற பன்னாட்டுப் பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் அளிக்கிறேன். பத்திரிகை செய்தியின் குறுந்தகடு Exhibit - 9, Volume I இணைக்கப்பட்டுள்ளது.*

*19. பயிலரங்கிற்கு நான் தலைமை விருந்தினராக இருந்தேன்; இந்த பயிலரங்கத்தின் போது தான் பத்திரிக்கையாளர்கள் மறைந்த மாண்புமிகு தமிழக*

*முதல்வர் பற்றிய கேள்விகளை கேட்டனர் என்பதை சமர்ப்பிக்கிறேன். மாண்புமிகு நீதியரசர் A. ஆறுமுகசாமி தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையத்தில் விசாரணை நடந்து வருவதாகவும், மறைந்த தமிழக முதல்வர் J. ஜெயலலிதா உடல் நலக்குறைவால் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டதையும் மீண்டும் வலியுறுத்தினேன். பின்னர் அவரிடம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்தது. ஆனால் கடுமையான சுவாசக் கோளாறு நோய் அறிகுறி (acute respiratory distress syndrome) காரணமாக அவர் இறந்துவிட்டார். எனவே, 17.12.2017 அன்று இந்த விசாரணை தொடர்புடையதாக நடந்த இந்த செய்தியாளர் சந்திப்பில் நான் எந்த எதிர்மறையான அறிக்கையையும் வெளியிடவில்லை என்று சமர்ப்பிக்கப்படுகிறது.*

*20. மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விவரங்கள், மருத்துவ வரலாறு மற்றும் மருத்துவப் பராமரிப்பு ஆகியவற்றின் ஒவ்வொரு விவரத்தையும் அசல் மற்றும் ஆவணத்தில் தயாரிக்கப்பட்ட மருத்துவப் பதிவுகளின் முழு தொகுப்பும், இந்த மாண்புமிகு ஆணையத்திற்கு உதவுவதற்காக பதிவு செய்யப்படலாம் என்று சமர்ப்பிக்கப்படுகிறது.*

*உறுதிமொழி அளிப்பவர், ஜனவரி 11, 2018 அன்று சென்னையில் என் முன்னிலையில் தனது பெயரில் கையொப்பமிட்டுள்ளார் என பணிவுடன் உறுதியளிக்கப்பட்டது.”*

**<u>டாக்டர் பிரிதா. ரெட்டியால் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரம் பின்வருமாறு:-</u>**

*மாண்புமிகு நீதியரசர் திரு. **A.** ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்தின் முன்*

*முதல் தளம், கலச மகால் புராதன கட்டடம், சேப்பாக்கம், சென்னை-**05.***

***C.W. 14/AAJCOI/2017** , நாள்: **21.12.2017.***

***(25.09.2017** ஆம் நாளிட்ட எண் **817** ஆம் நிலை அரசாணை**)***

*நான், திருமதி. ப்ரீதா ரெட்டி, க/பெ ஸ்ரீ விஜய்குமார் ரெட்டி, வயது 60. எனது அலுவலக முகவரி, எண்.21, கிரீம்ஸ் லேன், ஆஃப் கிரீம்ஸ் சாலை, சென்னை 600 006ஆகும். நான் இதன் மூலம் கீழ்க்கண்டவாறு பணிவுடன் உளமாற உறுதியளிக்கிறேன்:*

*நான் 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் என்டர்பிரைஸ் நிறுவனத்தின் துணைத்தலைவராவேன். தமிழ்நாடு அரசு பொதுத் ( 8C ) துறையின் 25.09.2017 ஆம் நாளிட்ட 817 ஆம் நிலை எண் அரசாணையின் வாயிலாக மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22.09.2016 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கான சூழ்நிலைகள் மற்றும் 05.12.2016 அன்று அவர் மறையும் வரை அளிக்கப்பட்ட சிகிச்சை தொடர்பாக விசாரிப்பதற்காக, மாண்புமிகு நீதியரசர் திரு. A. ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்தினை அமைத்தது.*

*இந்த மாண்புமிகு ஆணையத்திடமிருந்து 21.12.2017 ஆம் நாளிட்ட அழைப்பாணைகளைப் பெற்றுள்ளேன், மேலும் விசாரணைக்காக சாட்சியாக அழைக்கப்பட்டுள்ளேன்.*

*இந்த மாண்புமிகு ஆணையத்தின் ஆணையின்படி, சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் இல் (இனிமேல் "மருத்துவமனை" என குறிப்பிடப்படும்) மறைந்த மாண்புமிகு முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு 22.09.2016 ஆம் நாள் முதல் 05.12.2016ஆம் நாள் வரையில் அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை தொடர்பான அசல் மருத்துவப் பதிவுகள், இத்துடன் தொகுதி 1 முதல் தொகுதி 30 ஆக அளிக்கப்படுகிறது. அளிக்கப்பட்ட ஆவணங்களின் விரிவான பட்டியல் இந்த உறுதிமொழிப் பத்திரத்தின் இணைப்பு - 1 ஆக இத்துடன் அளிக்கப்பட்டுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகள் அவற்றை அடிப்படையாகக் கொண்டவை.*

*இருப்பினும், மறைந்த மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களின் மருத்துவ சிகிச்சையின் உண்மைப் பின்னணி மற்றும் அது தொடர்பான சூழ்நிலைகளை முன்வைப்பதற்கு முன் அப்போலோ மருத்துவமனை குழுவை உலகப் புகழ்பெற்ற மருத்துவமனையாக மாற்றியுள்ள அப்போலோ மருத்துவமனைகளின், உலகத்தரம் வாய்ந்த வசதிகள், மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித் துறையிலான சாதனைகள், மருத்துவர்களின் நற்சான்றிதழ்கள் மற்றும் அதிநவீன*

தொழில்நுட்பம், சமூக சேவைக்கான அர்ப்பணிப்பு மற்றும் இலவச சிகிச்சை, ஆகியவற்றைப் பற்றிய விளக்கத்தை பதிவு செய்ய விரும்புகிறேன். அப்போலோ மருத்துவமனை குழுவில் தற்போது 7500 மருத்துவர்களும் 10,000க்கும் மேற்பட்ட செவிலியர்களும் கொண்ட 70 மருத்துவமனைகள் இணைந்து 33 வருட சிறந்த மருத்துவ வரலாற்றைக் கொண்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில், அவர்களின் முன்னோடி உணர்வு, சுகாதாரம் மற்றும் தேசத்திற்கான சேவைக்கான அர்ப்பணிப்பைப் பாராட்டி இந்திய அரசு அப்போலோ மருத்துவமனைகள் குழுமத்தை 'அப்போலோ நினைவு முத்திரை' வழங்கி கௌரவித்தது. மேலும், மதிப்புமிக்க ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் அவர்களின் வரலாறு ஒரு வழக்கு ஆய்வாகக் கற்பிக்கப்பட்டது என்பதிலிருந்து, அப்போலோ மருத்துவமனை குழுமத்தின் நற்பெயர் மற்றும் உலகம் முழுவதும் அதன் மீதான நல்லெண்ணம் குறித்து தெளிவாகிறது. அப்போலோ மருத்துவமனை குழுமம் 2017 ஆம் நிதியாண்டில் 60,000 இதய அறுவை சிகிச்சைகள், 5600 க்கும் மேற்பட்ட மொத்த மூட்டு மாற்று சிகிச்சைகள், 1250 திட உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள், 14,000 நரம்பியல் அறுவை சிகிச்சைகள் செய்துள்ளது. புற்றுநோய்க்கான ஆராய்ச்சி மற்றும் சிகிச்சைக்காக தெற்காசியாவிலேயே முதன்முறையாக சென்னையில் முதன்முதலாக புரோட்டான் புற்றுநோய் மையத்தை அமைத்துள்ளது. இது

உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் விரிவான திட உறுப்பு மாற்றுத் திட்டத்தைக் கொண்டுள்ளது மற்றும் *2017* ஆம் ஆண்டில் மட்டும் *1250* திட உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை செய்துள்ளது. சென்னையில் உள்ள அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் ரோபோடிக் சர்ஜரி மட்டுமே முதுகுத்தண்டு அறுவை சிகிச்சைக்காக வடிவமைக்கப்பட்ட தொழில்நுட்பமாகும் மற்றும் தெற்காசியாவிலேயே முதன்முதலாக மினிமல் இன்வேஸிவ் ரோபோடிக் வழிகாட்டி முறையில் முதுகெலும்பு அறுவை சிகிச்சை முறையையும் வழங்குகிறது. மருத்துவத்தின் பல சிறப்புத் துறைகளில் இது போன்ற பல சாதனைகளைப் படைத்துள்ளது. இந்த மைல்கற்கள் அனைத்தும் அனுபவம் வாய்ந்த மற்றும் உலகப் புகழ்பெற்ற மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ஆரோக்கியம், நல்வாழ்வின் பாதுகாவலர்களாக இருக்க உறுதிபூண்டுள்ள நிர்வாகத்தின் கூட்டு முயற்சியால் அடையப்பட்டுள்ளன. அப்போலோ ஹாஸ்பிடல்ஸ், சென்னை, இந்தியாவின் தரவரிசையில் *# 1* டாப் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை தரம் பெற்றுள்ளது மற்றும் ஐசிஐசிஐ லோம்பார்ட் *&* சிஎன்பிசி டிவி*18* இந்தியா ஹெல்த்கேர் விருதுகள் *2016* இல் மல்டி-ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல் மெகாபோலிஸ் இன் தி கன்ட்ரி விருதை வென்றுள்ளது.

மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித் துறையில் இந்த சாதனைகள் மற்றும் பாராட்டுக்களுக்கு கூடுதலாக,

அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் எண்டர்பிரைஸ் லிமிடெட், கார்ப்பரேட் ஆளுகையின் சட்டப்பூர்வ தேவைகளான நெறிமுறைகள், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பு, பணியாளர் நல்வாழ்வு, பணியாளர்களுக்கிடையேயான தொடர்பு, மனித உரிமைகளைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழலுக்கான அக்கறை ஆகியவற்றிற்கும் இணங்குகிறது.

1. அப்போலோ மருத்துவமனை குழு கிராமப்புற வளர்ச்சியில் பாதுகாப்பான குடிநீர், சுகாதார வசதிகள், சத்துணவு மையங்கள் அமைத்தல், மருத்துவ முகாம்கள் நடத்துதல் ஆகியவற்றால் 2017 ஆம் ஆண்டில் மட்டும் 55,192 நபர்களுக்கு உதவியது. இதய நோய் உள்ள குழந்தைகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சை, ஆதரவற்ற குழந்தைகளுக்கான ஆரம்பப்பள்ளியை நிறுவுதல் மற்றும் நடத்துதல், சித்தூர் மாவட்டம் தவணாம்பள்ளே மண்டலத்தில் முழு சமூகத்திற்கும் சுகாதார சேவையை வழங்குவதற்காக 2013 இல் ''முழு சுகாதார'' அறக்கட்டளை நிறுவப்பட்டது. எனவே, ஆதரவற்றோர் மற்றும் மருத்துவ சேவையை எளிதில் அணுக முடியாதவர்களுக்கு ஆதரவான மருத்துவ சேவையை வழங்குவதில் தன்னை ஒருங்கிணைத்துக் கொள்வதற்கும் அப்போலோ மருத்துவமனை குழுமம் அர்ப்பணிப்புடன் உள்ளது.

மேலும் , மருத்துவமனை , அப்போலோ மருத்துவமனை , சென்னை , ஜாயின்ட் கமிஷன் இன்டர்நேஷனல் (ஜேசிஐ) அங்கீகாரம் பெற்றது. JCI என்பது உலகின் மிகப்பெரிய சுகாதாரப் பாதுகாப்பு அங்கீகாரமாகும். பாதுகாப்பு பெறுபவர்கள் மற்றும்

பராமரிப்பாளர்களுக்கான ஆபத்தை குறைக்கும், செயல்திறனை மேம்படுத்தும், விளைவுகளை மேம்படுத்துதல் மற்றும் நோயாளியின் மனநிறைவளித்தல் மற்றும் அங்கீகாரம் பெற்ற மருத்துவமனைகளுக்கு அவர்களின் சாதனைகள் மற்றும் சிறப்பான அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்கு பொது அங்கீகாரம் வழங்கி, பாதுகாப்பான சூழலை உறுதிசெய்ய, இது போன்ற பல்வேறு வடிவமைக்கப்பட்ட நிலைகளைக் கொண்டுள்ளது. JCI தரநிலைகள் 329 தரநிலைகள் மற்றும் 1196 அளவிடக்கூடிய கூறுகளைக் கடைபிடிப்பதை உறுதி செய்வதன் மூலம் பாதுகாப்பான அமைப்புகளை வழங்குகின்றன. சென்னை அப்போலோ மருத்துவமனை, இந்த தரநிலைகளைக் கடைபிடித்து வருவதுடன் 2006 ஆம் ஆண்டு முதல் JC-யால் அங்கீகாரம் பெற்றதும் ஆகும். JCI மருத்துவமனை தரநிலைகள், சர்வதேச நோயாளிகளின் பாதுகாப்பு இலக்குகள், கவனிப்புக்கான அணுகல் மற்றும் கவனிப்பின் தொடர்ச்சி, நோயாளி மற்றும் குடும்ப உரிமைகள், நோயாளிகளின் பராமரிப்பு மற்றும் நோய்த்தொற்றுகளைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளைக் குறிப்பிடுகின்றன. மருத்துவமனை, JCI ஆல் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு தணிக்கை செய்யப்படுகிறது. JCI ஆய்வுக் குழுவில் இரண்டு மருத்துவர்கள் மற்றும் ஒரு செவிலியர் உள்ளனர் மற்றும் மறு அங்கீகாரத்திற்காக ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் 6 நாட்களுக்கு தணிக்கை

நடத்தப்படுகிறது. JCI சான்றிதழ் நடைமுறையில் உள்ளது மற்றும் 16.12.2020 அன்று வரை செல்லுபடியாகும். அங்கீகாரச் சான்றிதழின் உண்மையான நகல் காட்சியாவணம் - 1, தொகுதி - 1 என இத்துடன் அளிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் சிறந்த வசதிகளைக் கொண்டிருப்பதாக நம்பப்பட்டு நோயாளிகள் வெளிநாட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற நிலைமையிருந்தது அதற்கு மாறாக, அப்போலோ மருத்துவமனை தன்னம்பிக்கையுடன் நோய்களையும் மருத்துவ நிலைமைகளையும் கையாளுவதற்குத் தயாராக இருப்பதால் இந்தப்பிண்ணியில் நான் அதைச் சமர்ப்பிக்கிறேன். இன்று, அப்போலோ மருத்துவமனை அந்த இடைவெளியைக் குறைத்து, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு நபரின் வீட்டு வாசலில் அத்தகைய கவனிப்பு வழங்கப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. அதேபோல், மருத்துவமனையும் அதன் மருத்துவர்களும் தங்களது நிபுணத்துவம் மற்றும் வசதிகளை மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உயிரைக் காப்பாற்றவும், சிறந்த மருத்துவத்திற்கான நெறிமுறைகள் மற்றும் ஒருமைப்பாட்டுக்கு இணங்கி ஒவ்வொரு அர்ப்பணிப்புடனும் வழங்கினர்.

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது

*தொடர்பாக, சுமார் 10:00 மணியளவில் மருத்துவமனைக்கு அழைப்பு வந்ததாகச் சமர்ப்பிக்கிறேன். 22.09.2016 அன்று மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இல்லத்திலிருந்து அவர் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக தகவல் தெரிவித்து மருத்துவமனை ஆம்புலன்ஸ் அங்கு சென்றபோது மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறைந்த ஆக்ஸிஜன் செறிவூட்டலுடன் மூச்சுத்திணறல் ஏற்பட்டதைக் கண்டார்கள். உடனடியாக 10.25 மணியளவில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 22.09.2016 அன்று அவரது உடல்நிலையைக் கண்டறியவும், தகுந்த மருத்துவ சிகிச்சையை முடிவு செய்யவும் பல்வேறு சிறப்பு மருத்துவர்களைக் கொண்ட குழு ஒன்று கலந்துகொண்டது. நோய்த்தொற்று, நீரிழப்பு மற்றும் சுவாசக் கோளாறு ஆகியவற்றின் ஆரம்ப நோயறிதல் செய்யப்பட்டது.*

2. *மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22.09.2016 அன்று அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து, 75 நாட்களுக்கு, 05.12.2016 அன்று அவர் மறைந்த நாள் வரை, அவருக்கு . கிரிட்டிகல் கேர் குரூப், மூத்த இருதயநோய் மருத்துவர்கள், மூத்த சுவாச மருத்துவர்கள், தொற்று நோய்த் துறையின் ஆலோசகர்கள், மூத்த நாளமில்லாச் சுரப்பி நிபுணர்கள் மற்றும் நீரிழிவு நிபுணர்கள் அடங்கிய மருத்துவமனையின் நிபுணர்கள் மற்றும் நிபுணர்கள் குழு, ஆகியவர்களால் மிக உயர்ந்த தரமான மருத்துவ*

*சிகிச்சை வழங்கியதாக நான் தெரிவிக்கிறேன். உணவுத் துறையின் மூத்த ஆலோசகர்களும் கலந்து கொண்டனர். மருத்துவமனை மற்றும் சிங்கப்பூர் மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையிலிருந்து பிசியோதெரபிஸ்டுகள் மூலம் பிசியோதெரபி வழங்கப்பட்டது. மாண்புமிகு மறைந்த தமிழக முதலமைச்சருக்கு அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சையின் விரிவான அறிக்கை 07.12.2016 ஆம் நாளிட்ட இறப்புச் சுருக்கத்தில் அளிக்கப்பட்டுள்ளது. கோரிக்கையின் பேரில் 06.03.2017 அன்று மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. மாநில அரசு இறப்புச் சுருக்கத்தை சுற்றனுப்பியது மற்றும் இப்போது பொது களத்தில் கிடைக்கிறது. 07.12.2016 ஆம் நாளிட்ட இறப்புச் சுருக்கத்தின் உண்மையான நகல் காட்சியாவணம் - 2, தொகுதி I என இத்துடன் அளிக்கப்பட்டு, மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெற்ற சிகிச்சையின் சுருக்கத்தை இதில் காணலாம்.*

3. *தமிழ்நாடு அரசு 30.09.2016 ஆம் நாளிட்ட அரசாணை(ப) எண். 1368-இன் படி, மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வருக்கு சிகிச்சை அளிக்கும் நிபுணர்கள் குழுவுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்காக, மருத்துவமனையில் இருக்கும் வகையிலான அரசு சிறப்பு மருத்துவர்களைக் கொண்ட ஐவர் குழுவை அமைத்தது. அரசு சிறப்பு மருத்துவர்களுக்கு தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் மருத்துவமனை எல்லா நேரங்களிலும் வழங்கியதுடன், மறைந்த மாண்புமிகு முதலமைச்சரை*

பரிசோதிக்கவும், அவர்களின் மருத்துவ கருத்தை தெரிவிக்கவும் சுதந்திரமானவர்களாக இருந்தனர்.

4. சர்வதேச நிபுணரும், கய்ஸ் மற்றும் செயின்ட் தாமஸ் என்எச்எஸ் அறக்கட்டளை மற்றும் லண்டன் கிங்ஸ் கல்லூரியின் பேராசிரியரும், தீவிர சிகிச்சை மருத்துவருமான டாக்டர் ரிச்சர்ட் பீலே-வுடன் ஆலோசனை நடத்தவும் மருத்துவமனை முயற்சி எடுத்தது. 30 செப்டம்பர் 2016 மற்றும் 1 அக்டோபர் 2016-க்கும் இடையில் மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வரின் உடல்நிலையை மதிப்பாய்வு செய்யவும், கண்காணிக்கவும் டாக்டர். பீலே மருத்துவமனைக்கு வருகை தந்தார். மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவமனையில் சிறந்த மருத்துவ சிகிச்சை பெற்று வருவதைக் கண்டார். மருத்துவமனையின் சிறந்த மருத்துவப் பராமரிப்பு, சிகிச்சையளிக்கும் அனைத்து மருத்துவர்கள் பின்பற்றும் சிகிச்சை முறையுடனும் அவர் உடன்பட்டார். மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வரின் மருத்துவ சிகிச்சையில் மிக உயர்தர சிகிச்சை பின்பற்றப்பட்டது என்பது அவரது கருத்தாகும். 01.10.2016 ஆம் நாளிட்ட டாக்டர் ரிச்சர்ட் பீலே-வின் அறிக்கை இத்துடன் Exhibit- 3, தொகுதி 1-ஆக இணைக்கப்பட்டுள்ளது.

5. மேலும், மத்திய அரசிடம் தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, நுரையீரல் மருத்துவம் மற்றும் தூக்கக் கோளாறு துறை பேராசிரியர் டாக்டர் ஜி.சி. கில்னானி தலைமையில் மாண்புமிகு மறைந்த தமிழக முதலமைச்சரின் உடல்நிலையை மதிப்பீடு செய்வதற்காக, புது தில்லி அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தால் ( AIIMS ) ஒரு

மருத்துவக் குழு நியமிக்கப்பட்டது. அனைத்து AIlMS மருத்துவர்கள் குழு, மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருக்கு மருத்துவ பரிசோதனை செய்து, அவரது உடல்நிலை மற்றும் மருத்துவமனையால் அளிக்கப்பட்டுவரும் சிகிச்சையை பல முறை மதிப்பாய்வு செய்து, தொடர்ந்து மருத்துவமனையால் அளிக்கப்பட்ட சிகிச்சை முறைகளை ஏற்றுக்கொண்டது. AIIMS-லிருந்து நிபுணர்கள் வருகை தந்த நாட்களின் விவரங்கள் மற்றும் அவர்களின் அறிக்கைகள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

| த◌ொ.எண். | நாள் | குழு |
|---|---|---|
| 1. | 5 அக்டோபர் முதல் 7 அக்டோபர் 2016 வரை | 1. பேராசிரியர் டாக்டர் ஜி.சி. கில்னானி, பேராசிரியர், நுரையீரல் மருத்துவம் & தூக்கக் கோளாறு துறை<br>2. பேராசிரியர் டாக்டர் அஞ்சன் ட்ரிகா, பேராசிரியர், மயக்கவியல் துறை, வலி, மருத்துவம் மற்றும் அவசர சிகிச்சை.<br>3. பேராசிரியர் டாக்டர் நிதிஷ் நாயக், இதயவியல் பேராசிரியர்.<br>வருகை பற்றிய அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அது Exhibit-4, தொகுதி I |

| | | |
|---|---|---|
| *2.* | *9 அக்டோபர் முதல் 10 அக்டோபர் 2016 வரை* | *பேராசிரியர் டாக்டர் ஜி.சி. கில்னானி, பேராசிரியர், நுரையீரல் மருத்துவம் & தூக்கக் கோளாறு துறை*<br>*வருகை பற்றிய அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அது Exhibit-5, தொகுதி I* |
| *3.* | *13 அக்டோபர் முதல் 15 அக்டோபர் 2016 வரை* | *1. பேராசிரியர் டாக்டர் ஜி.சி. கில்னானி, பேராசிரியர், நுரையீரல் மருத்துவம் & தூக்கக் கோளாறு துறை*<br>*2. பேராசிரியர் டாக்டர் அஞ்சன் ட்ரிகா, பேராசிரியர், மயக்கவியல் துறை, வலி, மருத்துவம் மற்றும் அவசர சிகிச்சை.*<br>*3. பேராசிரியர் டாக்டர் நிதிஷ் நாயக், இதயவியல் பேராசிரியர்.*<br>*வருகை பற்றிய அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அது Exhibit-6, தொகுதி I* |

| | | |
|---|---|---|
| *4.* | *டிசம்பர் 2 முதல் 3 வரை, டிசம்பர் 2016* | *1. பேராசிரியர் டாக்டர் ஜி.சி. கில்னானி, பேராசிரியர், நுரையீரல் மருத்துவம் & தூக்கக் கோளாறு துறை*<br>*2. பேராசிரியர் டாக்டர் அஞ்சன் ட்ரிகா, பேராசிரியர், மயக்கவியல் துறை, வலி, மருத்துவம் மற்றும் அவசர சிகிச்சை.*<br>*3. பேராசிரியர் டாக்டர் நிதிஷ் நாயக், இதயவியல் பேராசிரியர்.*<br>*4. பேராசிரியர், நிகில் டாண்டன் உட்சுரப்பியல் துறை*<br>*வருகை பற்றிய அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அது Exhibit-7, தொகுதி I* |
| *5.* | *டிசம்பர் 5, 2016* | *1. பேராசிரியர் டாக்டர் ஜி.சி. கில்னானி, பேராசிரியர், நுரையீரல் மருத்துவம் & தூக்கக் கோளாறு துறை*<br>*2. பேராசிரியர் டாக்டர் அஞ்சன் ட்ரிகா, பேராசிரியர், மயக்கவியல்* |

| | | |
|---|---|---|
| | | துறை, வலி, மருத்துவம் மற்றும் அவசர சிகிச்சை.<br>3. பேராசிரியர் தேவககௌரவ், இதயவியல் பேராசிரியர்.<br>4. டாக்டர் ராஜீவ் நரங் கார்டியோ தொராசிக் அறுவை சிகிச்சை.<br>வருகை பற்றிய அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அது *Exhibit-8,* தொகுதி *I* |

14. மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு சிகிச்சை அளித்து வரும் சிறப்பு மருத்துவர்கள் குழு, மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வரின் உடல்நிலை குறித்து மாநில அரசின் பிரதிநிதிகள் மற்றும் தலைவர்களுக்கு விளக்கமளிக்க, தினமும் காலை மற்றும் மாலை நேரங்களில் மருத்துவமனையில் சந்திப்பு நிகழ்ந்தது. இந்தக் சந்திப்புகளில் மாநில அரசின் பிரதிநிதிகளான திரு. ராம மோகன ராவ், திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன், திருமதி. சாந்தா ஷீலா நாயர், செல்வி ஜெய்ஸ்ரீ, திரு. விஜய பாஸ்கர், சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ராதாகிருஷ்ணன், சுகாதாரத் துறைச் செயலாளர் திரு. வெங்கடராமன் திரு ராமலிங்கம், திரு தம்பிதுரை ஆகியோர் கலந்துகொண்டனர். மேற்கண்டவர்களில் குறிப்பாக, திரு ராம மோகன ராவ்,

திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், திருமதி சாந்தா ஷீலா நாயர், திரு விஜய பாஸ்கர், சுகாதாரத்துறை அமைச்சர் மற்றும் திரு தம்பிதுரை ஆகியோர் அனைத்துக் கூட்டங்களிலும் கலந்து கொண்டனர். அப்போதைய முதல்வர் திரு.ஓ.பன்னீர்செல்வமும் சில கூட்டங்களில் கலந்து கொண்டார். ஆகவே, மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வரின் உடல்நிலை குறித்து மருத்துவமனை அனைத்து நேரங்களிலும் மாநில அரசுக்கு தெரிவித்தது.

15. மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு மருத்துவமனை மருத்துவர்கள் மட்டுமின்றி, மத்திய அரசு மற்றும் பன்னாட்டு நிபுணர்களால் பரிந்துரைக்கப்பட்ட மருத்துவர்களின் சிறந்த மருத்துவச் சேவையை வழங்குவதற்கு கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மருத்துவமனையில் நிபுணத்துவம் மிக்க மற்றும் அதிநவீன மருத்துவ வசதிகள் இருந்தாலும், இறுதிவரை தமிழ்நாட்டின் மறைந்த மாண்புமிகு முதலமைச்சரின் உயிரைக் காப்பதற்காக சிகிச்சை அளிப்பதில் எவ்விதமான முயற்சியும் விட்டுவிடப்படவில்லை. எந்த நேரத்திலும் அவரது உடல்நலம் அல்லது சிகிச்சை எந்த வகையிலும் சமரசம் செய்யப்படவில்லை மற்றும் வழங்கப்பட்ட சிகிச்சை முறை இந்தியாவிலும் பன்னாட்டு அளவிலும் உள்ள மற்ற சிறப்பு மருத்துவர்களால் சரிபார்க்கப்பட்டது. சந்தேகத்திற்கிடமின்றி, பல நோய்களின் காரணமாக, மறைந்த மாண்புமிகு முதலமைச்சரின் உடல்நிலை சிகிச்சையளிப்பதற்கு சவாலானதாக இருந்ததுடன், அதற்கு பல்வேறு நிபுணர்களின் ஒருங்கிணைந்த மருத்துவ கவனிப்பும் தேவைப்பட்டது. இதில் உள்ள ஆபத்துக்கள்,

மாநில அரசின் பிரதிநிதிகளுக்கும் எல்லா நேரத்திலும் தெரிவிக்கப்பட்டது.

16. 04.12.2016 அன்று மாலை 4:20 மணிக்கு, மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மூச்சுத் திணறல் இருப்பதாக புகார் எழுந்ததால், உடனடியாக அவர் மீண்டும் வென்டிலேட்டருடன் இணைக்கப்பட்டார். தீவிர சிகிச்சை மருத்துவரால் பரிசோதிக்கப்பட்டதில், அவருக்கு மூச்சுத்திணறல் இருப்பது கண்டறியப்பட்டது மற்றும் மூச்சுக்குழாய் அழற்சியின் உடனடி நெபுலைசேஷன் தொடங்கியது மற்றும் ஒரு டோஸ் டையூரிடிக் செலுத்தப்பட்டது. இருப்பினும், மாண்புமிகு முதலமைச்சரின் சுவாசக் கோளாறு தொடர்ந்தது மற்றும் மானிட்டரில் வென்ட்ரிகுலர் எக்டோபிக்ஸ் இருக்கத் தொடங்கியது, இது வென்ட்ரிகுலர் ஃபைப்ரிலேஷன் மற்றும் கார்டியாக் அரெஸ்ட் என விரைவாக மோசமடைந்தது, இந்த கண்டறியப்பட்ட cardiac arrest-இற்காக நவீன உயிர் காப்பு முயற்சிகளின்படி, Cardiopulmonary Resuscitation(CPR) உடனடியாகத் தொடங்கப்பட்டன. தொடர் முயற்சிகள் இருந்தபோதிலும், தன்னிச்சையான சுழற்சியை அடைய முடியவில்லை மற்றும் கூடுதல் உடல் சவ்வு ஆக்ஸிஜனேற்றத்தில் (ECMO) வைக்க ஒருமித்த முடிவு எடுக்கப்பட்டது மேலும் 4 டிசம்பர் 2016 மாலை 5:30 மணிக்கு அவசரமாக *veno-arterial, Extra Corporeal Membrane Oxygenation ECMO* தொடங்கப்பட்டது. நாட்டிலுள்ள மிகச் சில மருத்துவமனைகளில் தான் ECMO போன்ற உயிர்காக்கும் வசதி உள்ளது என்பதும், இந்த

மருத்துவமனையில் அத்தகைய வசதி உள்ளது என்பதும், மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் காப்பாற்ற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்யும் வகையில் அதை வழங்க முடிந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 05.12.2016 வரை கண் அசைவு, இதயத் துடிப்பு மற்றும் gag reflex போன்ற அறிகுறிகள் தொடர்ந்து தென்பட்டன. இருப்பினும், மருத்துவக் குழுவின் மதிப்பீட்டின்படி, அவரது முன்னேற்றம் திருப்திகரமாக இல்லை. இரவு 7.00 மணி மற்றும் இரவு 9:00 மணிக்கு, கார்டியோ தொராசிக், ECMO குழுவால் அவர் பரிசோதிக்கப்பட்டு, மேலும் அவர் பியூபில்லரி ரிஃப்ளெக்ஸில் மூளைத் தண்டு செயல்பாடு மிகக் குறைவாக இருந்தது மற்றும் mild gag reflex, கண் மற்றும் *corneal reflex* இல்லாதது கவனிக்கப்பட்டது. அவருடைய இதயத்தின் செயல்பாடு மோசமடைந்தது. இந்த கண்டுபிடிப்புகளின் முக்கியத்துவம் குழுவால் விவாதிக்கப்பட்டு, 24 மணிநேர ECMO ஆதரவு இருந்தபோதிலும் அவரது intrinsic heart beat திரும்பவில்லை என்று அவர்கள் ஒப்புக்கொண்டனர். Extra *corporeal support* – ஐத் தொடர்வதன் பலன் விவாதத்திற்குரியது. இருப்பினும், இது AIMS மருத்துவர்களுடன் விவாதிக்கப்பட வேண்டும் என்று குழு கருதியது. இரவு 10.00 மணியளவில் டாக்டர்.கில்னானி தலைமையிலான எய்ம்ஸ் குழுவினர் மறைந்த மாண்புமிகு

முதலமைச்சரை எங்கள் குழுவினருடன் இணைந்து பரிசோதனை செய்தனர். இரவு 7:00 மணிக்கும் 8:00 மணிக்கும் இதய செயல்பாடு சரியாக இருந்தது. எய்ம்ஸ் குழுவுடன் அடுத்த நிலை குறித்து விரிவான கலந்துரையாடல் நடத்தப்பட்டது. AIMS குழு உட்பட, நாங்கள் அனைவரும் ECMO-வைத் தொடரலாம் எனவும், ஏனைய ventilator and renal replacement therapy போன்ற organ spportive care பயனற்றதாக இருக்கலாம் என்ற கருத்தில் உடன்பட்டோம். மேலும், மருத்துவ ரீதியாக 24 மணிநேரத்திற்கு மேல் ECMO-வைத் தொடர இயலாது. இது முதலில் தலைமைச் செயலாளர் தலைமையிலான அரசு செயலாளர்களுக்கும், பொறுப்பு முதல்வர் திரு.ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அமைச்சர்களுக்கும் மற்றும் மக்களவை துணை சபாநாயகர் திரு தம்பிதுரை அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. உயிர் காப்பு கருவிகளை திரும்ப எடுக்க திருமதி சசிகலா அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டதுடன் நாங்கள் திரும்ப எடுப்பதற்கான செயல்முறை மற்றும் அதன் விளைவுகளும் தெரிவிக்கப்பட்டன. அவர்கள் திரும்ப எடுப்பதை ஒப்புக்கொண்டனர் மற்றும் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் 05.12.2016 இரவு 11:30 மணியளவில் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

17. மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விவரங்கள், மருத்துவ வரலாறு மற்றும் மருத்துவப் பராமரிப்பு ஆகியவற்றின் ஒவ்வொரு விவரத்தையும் அசல் மற்றும் ஆவணத்தில் தயாரிக்கப்பட்ட

மருத்துவப் பதிவுகளின் முழு தொகுப்பும், இந்த மாண்புமிகு ஆணையத்திற்கு உதவுவதற்காக பதிவு செய்யப்படலாம் என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

*உறுதிமொழி அளிப்பவர், ஜனவரி 11, 2018 அன்று சென்னையில் என் முன்னிலையில் தனது பெயரில் கையொப்பமிட்டுள்ளார் என பணிவுடன் உறுதியளிக்கப்பட்டது.*

*பிற்சேர்க்கை – I*

| தொ. எண். | ஆவணங்களின் விளக்கம் | | பக்கங்கள் |
|---|---|---|---|
| *1.* | காட்சியாவணம் *– 1:* | *JCI (Joint Commission International)* அங்கீகார சான்றிதழின் உண்மை நகல் | *1 – 3* |
| | காட்சியாவணம் *– 2:* | *07-12-2016-*ஆம் நாளிட்ட இறப்புச் சுருக்கத்தின் நகல் | *1 - 12* |
| | காட்சியாவணம் *– 3:* | *01-10-2016-*ஆம் நாளிட்ட டாக்டர் ரிச்சர்ட் பீலே-யின் அறிக்கையின் நகல் | *1 - 6* |
| | காட்சியாவணம் | *AIIMS* மருத்துவர் குழுவின் முதலாம் அறிக்கையின் நகல் *(*நாள்*: 05-10-2016* முதல் *07-10-2016* வரை*)* | *1 – 2* |

| | | | |
|---|---|---|---|
| | *காட்சியாவணம் – 5:* | *AIIMS மருத்துவர் குழுவின் 2-ஆம் அறிக்கையின் நகல் (நாள்: 09-10-2016 முதல் 10-10-2016 வரை)* | *1* |
| | *காட்சியாவணம் – 6:* | *AIIMS மருத்துவர் குழுவின் 3-ஆம் அறிக்கையின் நகல் (நாள்: 13-10-2016 முதல் 15-10-2016 வரை)* | *1* |
| | *காட்சியாவணம் – 7:* | *AIIMS மருத்துவர் குழுவின் 4-ஆம் அறிக்கையின் நகல் (நாள்: 03-12-2016)* | *1* |
| | *காட்சியாவணம் – 8:* | *AIIMS மருத்துவர் குழுவின் 5-ஆம் அறிக்கையின் நகல் (நாள்: 05-12-2016))* | *1* |
| | *காட்சியாவணம் – 9:* | *செய்தி வெளியீட்டின் குறுந்தகடு (மூடிய உறை) (நாள்: 17-12-2017)* | *1* |
| *2.* | *அவசர சிகிச்சைப் பிரிவின் அறிக்கைகள்* | | *1 - 16* |

| | | |
|---|---|---|
| *3.* | கேஸ் ஷீட் *(*அன்றாட நடவடிக்கை அறிக்கைகள்*)* *&* அன்றாட முன்னேற்ற அறிக்கை | *1 – 40,*<br>*1 - 218* |
| *4.* | அன்றாட முன்னேற்ற அறிக்கை | *219–586* |
| *5.* | உள்நோயாளிகளுக்கான ஆலோசனை | *1 – 348* |
| *6.* | மருத்துவர் அறிவுறுத்தல் தாள் *(Doctor Instruction Sheet)* | *1 – 127* |
| *7.* | மருந்து விளக்கப்படம் பகுதி *I*<br>*(Drug Chart Medicine Part I )* | *1 – 98* |
| *8.* | மருந்து விளக்கப்படம் பகுதி *II*<br>*(Drug Chart Medicine Part II)* | *99 - 196* |
| *9.* | *CCU Master Part I* | *1 – 25* |
| *10.* | *CCU Master Part II* | *26 – 50* |
| *11.* | *CCU Master Part III* | *51 – 76* |
| *12.* | *Fall Risk Assessment Form (About Risk & fall of patient)* | *1 – 30* |
| *13.* | நீரிழிவு விளக்கப்படம்<br>*(Diabetic Chart )* | *1 – 92* |
| *14.* | ஒப்புதல் படிவங்கள்<br>*(Consent Forms)* | *1 – 65* |

| | | |
|---|---|---|
| *15.* | விசாரணை விளக்கப்படம் *(Investigation Chart )* | *1 – 162* |
| *16.* | நிலை விளக்கப்படம் (படுக்கையில் நோயாளியின் நிலையறிதலுக்கான)<br>*Position Chart (for position of patient in bed)* | *1 – 38* |
| *17.* | உணவு மற்றும் திரவ விளக்கப்படம் (உணவுமுறை)<br>*Food and Fluid Chart (Diet)* | *1 – 69* |
| *18.* | இடர் மதிப்பீடு மற்றும் சிகிச்சைக்கான பிரஷர் அல்சர் விளக்கப்படம்<br>*Pressure Ulcer for risk assessment & treatment Chart* | *1 – 22* |
| *19.* | தூக்க விளக்கப்படம் (நோயாளியின் தூக்க முறை பற்றி)<br>*Sleep Chart (about sleeping pattern of the patient)* | *1 - 60* |
| *20.* | இரத்தமாற்றம் பதிவு<br>*Blood Transfusion Record* | *1 – 12* |
| *21.* | இரத்த வாயு மற்றும் இரத்த கூறு அறிக்கை<br>*Blood Gas & Blood Component Report* | *1 – 39* |
| *22.* | உயிர்வேதியியல் அறிக்கைகள்<br>*Biochemistry Reports* | *1 – 261* |
| *23.* | இதயவியல் அறிக்கைகள் | *1 – 63* |

| | | |
|---|---|---|
| | *Cardiology Reports* | |
| *24.* | இரத்த அறிக்கைகள்<br><br>*Hematology Reports* | *1 – 126* |
| *25.* | நரம்பு வழி ஓட்டம் குறித்த விளக்கப்படம்<br><br>*Intravenous Flow Chart* | *1 – 32* |
| *26.* | நுண்ணுயிரியல் அறிக்கைகள் பகுதி *I*<br><br>*Microbiology Reports Part I* | *1 – 164* |
| *27.* | நுண்ணுயிரியல் அறிக்கைகள் பகுதி *II*<br><br>*Microbiology Reports Part II* | *165 – 391* |
| *28.* | கதிரியக்க அறிக்கைகள் *(CT &* மற்றவை*)*<br><br>*Radiology Reports (CT & Others)* | *1 – 68* |
| *29.* | கதிரியக்க அறிக்கைகள்<br><br>*Radiology Reports* | *1 – 35* |
| *30.* | *(ECG* அறிக்கைகள்*)*<br><br>*ECG Reports* | *1 - 28* |

## <u>*10. மூன்றாம் தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட ஆறு நீதிப்பேராணைகள் (PIL)*</u>

***10.1.*** *மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த காலத்தில், அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை மற்றும் அவரின் உடல் நலக்குறைவுகளை வெளியிடக் கோரி, உயர்நீதிமன்றத்தில் நான்கு பேரால் ஆறு ரிட் மனுக்கள்/ PIL தாக்கல் செய்யப்பட்டன. அவ்வகையில், டாக்டர் டிராபிக் K.R. இராமசாமி எனும் ஒரு மனுதாரர் W.P.எண்.35112/2016-ஐ தாக்கல் செய்து, முதலமைச்சரின் அப்போதைய உடல்நிலை குறித்த வதந்திகளைத் தடுக்க, மின்னஞ்சல் மற்றும் தொலைநகல் மூலம் அனுப்பிய, 01.10.2016-ஆம் நாளிட்ட மனுவைப் பரிசீலித்து,*

- ✓ *புகைப்படத்துடன் கூடிய விரிவான அறிக்கையை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமெனவும்,*
  - ✓ *உண்மையான உடல்நலப் பிரச்சினையை வெளியிடவும், அவர் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதையும் மற்றும் சுய நினைவுடன் இருப்பதை உறுதி செய்யவும்,*
    - *ஆளுநரின் முதன்மைச் செயலாளர், ராஜ்பவன், சென்னை-15*
    - *அரசு செயாலளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை-9 மற்றும்*

- *தலைவர், அப்போலோ மருத்துவமனை, சென்னை-6 ஆகியோருக்கு உத்தரவிடுமாறு கோரினார்.*

*அந்த ரிட் மனு, 06.10.2016-அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.*

***10.2.*** *14.11.2016, 15.11.2016, 21.11.2016 மற்றும் 23.11.2016-ஆம் நாளிட்ட மனுக்களைப் பரிசீலித்து, மறைந்த முதல்வருக்கு 22.9.2016-ஆம் நாள் முதல் அளிக்கப்பட்ட சிகிச்சையின் சரியான விவரம் குறித்து அறிக்கை வெளியிடுமாறும், மறைந்த முதல்வரின் உடல்நிலை குறித்த அன்றைய சரியான நிலை பற்றிய புகைப்படம்/வீடியோவை வெளியிடவும், மாண்புமிகு நீதிமன்றம் உத்தரவிட்ட 24 மணி நேரத்திற்குள் மேற்சொன்ன விவரங்கள் வெளியிடப்படவில்லையெனில், மாண்புமிகு பாரதப் பிரதமரால் சிபிஐ(CBI) விசாரணைக்கு ஆணை வழங்கப்படவேண்டுமென்றும், முதல்வருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால், அவரை அணுக முடியாத சூழலில் நிலவும் அரசியல் சாசன நெருக்கடியின் காரணமாக, அரசு நிர்வாகம் செய்ய முடியாததால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 356-ஆவது உறுப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, தமிழகத்தில் வெளிப்படையாகப் புறக்கணிக்கப்பட்ட மக்களாட்சி காப்பாற்றப்பட வேண்டுமாயின், ஆளும் கட்சியான அ.இ.அ.தி.மு.க.விலிருந்து ஒரு முதலமைச்சர் வரும் வரை, தமிழ்நாடு சட்டமன்றத்தை குறுகிய காலத்திற்கு முடக்கி, குடியரசுத்தலைவர் அவசர நிலையை பிரகடனப்படுத்த வேண்டுமெனவும், மனுதாரர்*

- *புது தில்லி, இந்திய குடியரசுத் தலைவரின் செயலாளர்,*
- *தமிழ்நாடு ஆளுநரின் செயலாளர், சென்னை-22, மற்றும்*
- *புது தில்லி, இந்தியப் பிரதமரின் செயலாளர்*

*ஆகியோரிடம் கோரியும், மின்னஞ்சல் மற்றும் தொலைநகல் அனுப்பிய பிறகும், அவர் மற்றொரு ரிட் மனு W.P.SR.எண்.145059/2016-ஐ தாக்கல் செய்தார். மேற்சொன்ன ரிட் மனு, SR நிலையில் 28.11.2016 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.*

***10.3.** (1) தமிழக முதல்வர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு அப்போலோ மருத்துவமனை அளிக்கும் சிகிச்சையை மதிப்பீடு செய்து கண்காணிக்கவும்,*

*(2) முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதாவுக்கு வெளிநாட்டில் அவசரகால சிறந்த மருத்துவ சிகிச்சை தேவையா என்பதை முடிவு செய்யவும்,*

*தமிழ்நாட்டின் அரசு மருத்துவமனைகளிலிருந்து மருத்துவ நிபுணர்கள், நீதித்துறையிலிருந்து ஒரு உறுப்பினர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சருக்கு நெருக்கமான இருவர் அடங்கிய, ஒரு நிபுணத்துவம் வாய்ந்த அவசரகால உயிர் காக்கும் குழுவினை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரின் தலைமையில் அமைக்கக் கோரி, சென்னை-09 தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளருக்கு அறிவுறுத்துமாறு, G. பிரவினா என்பவரால் தாக்கல்*

செய்யப்பட்ட W.P.No.36871/2016 மனு, 21.10.2016-அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

**10.4.** திரு. P.A.ஜோசப் PIL மூலம் இரண்டு தாக்கல் செய்யப்பட்டு முதலாவதாக தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு 44738/ 2016

நமது தேசிய தலைவர் நேதாஜி, சுபாஷ் சந்திரபோஸ் விவகாரத்தில் செய்தது போல, தமிழக முன்னாள் முதல்வர், செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களின் மரணம் குறித்து விசாரிக்கவும், உண்மையைக் கண்டறியவும், 1952-ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் விதிகளின் கீழ், மூன்று ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தலைமையிலான ஒரு ஆணையத்தை நியமிப்பதற்காக,

- புது தில்லி இந்தியப் பிரதமரின் முன்மைச் செயலாளர்,
- புது தில்லி நாடாளுமன்ற விவகார அமைச்சகத்தின் இயக்குநர்
- புது தில்லி உள்துறை அமைச்சகத்தின் உள்துறைச் செயலாளர் மற்றும்
- புது தில்லி சட்டம் மற்றும் நீதித்துறையின் செயலாளர் அவர்களுக்கும் அறிவுறுத்துமாறு தனது முதலாம் ரிட் மனு எண்.44738/2016-இல் தாக்கல் செய்தார்.

  - மத்தியப் புலனாய்வுத்துறை(CBI) இயக்குநர், புது தில்லி
  - தலைமைச் செயலாளர், சென்னை-9
  - உள்துறைச் செயலாளர், சென்னை-9

- *சட்டத்துறைச் செயலாளர், சென்னை-9*
- *சட்டத்துறைச் செயலாளர், சென்னை-9*
- *சட்ட மன்றப்பேரவைச் செயலாளர், சென்னை-9*
- *காவல்துறை தலைமை இயக்குநர், மயிலாப்பூர், சென்னை-4,*
- *காவல்துறை ஆணையர், வேப்பேரி, சென்னை-7*

*ஆகியோரை 5 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்களாகவும்,*

- *அப்போலோ மருத்துவமனைகளின் தலைவர், சென்னை-6, எதிர்மனுதாரர் எண்.12 எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த ஆணையம் நியமிக்கப்பட்டதால், ரிட் மனு செயலற்றது என 06.10.2017 -என்று நிராகரிக்கப்பட்டது.*

***10.5.** திரு. P.A. ஜோசப் என்பவர், பொதுத் துறையின் அரசு முதன்மைச் செயலாளரால் வெளியிடப்பட்ட 25.09.2017-ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.817 மற்றும் 27.09.2017-ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.829 ஆகியவை சட்டவிரோதமானது, சூழ்ச்சிகரமானது மற்றும் 1952-ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் 3-ஆம் பிரிவின் விதித்துறைகளுக்கு எதிரானது, மற்றும் இந்த ஆணையத்தின் அமைப்பு மற்றும் விதிமுறைகளுக்கு எதிரானது என்று அறிவிக்க வேண்டி, தனது இரண்டாவது ரிட் மனு எண்.25940/2017-ஐத் தாக்கல்*

செய்தார். மேற்படி ரிட் மனு, சென்னை உயர் நீதிமன்றத்தின் டிவிஷன் அமர்வினால் 04.10.2017-அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்கெதிராக, அவர் தாக்கல் செய்த SLP-யும் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த ஆணையத்திற்குத் தலைமை தாங்கும் நீதிபதிக்கு எதிராக, எதுவும் குற்றஞ்சாட்டவில்லை என இரு நீதிமன்றங்களிலும் தாமாகவே முன்வந்து கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. அமைச்சரவையின் அனுமதியின்றி, மாநில அரசின் அதிகாரங்களைக்கொண்டு ஒரு நபர் ஆணையத்தை அமைத்தது குறித்து கேள்வி எழுப்பிய திரு. P.A.ஜோசப் அவர்களின் ரிட் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**10.6.** முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதாவின் மர்ம மரணம் குறித்து விசாரிக்க, திரு. U. சகாயம் ,I.A.S., அவர்களின் தலைமையில் ஒரு விசாரணை ஆணையத்தை அமைக்க ஆணையிட வேண்டும் என்று திரு. B. பாலமுருகன் தனது ரிட் மனு W.P.No.9236/2017-இல் தாக்கல் செய்தார். அந்த ரிட் மனுவும் 6.10.2017-அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

**10.7.** மேற்சொன்ன மனுதாரர்கள், நீதிமன்றம் தங்களது குறைகளைத் தீர்க்கும் என்ற நம்பிக்கையில், ஜெ. ஜெயலலிதாவின் உடல்நிலை மற்றும் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் குறித்து அறிந்து கொள்வதற்காக மட்டுமே பொதுநல வழக்குகள் மூலம் ரிட் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். R.2-மருத்துவமனையின் உத்திரவாதத்தின் அடிப்படையில், அந்த ரிட் மனுக்கள் தள்ளுபடி

செய்யப்பட்டன. இந்த மனுதாரர்களின் உண்மையான முயற்சிகளை ஆணையம் இங்கு பதிவு செய்கிறது.

## <u>11. திரு. P.A. ஜோசப் (P.W.4) அவர்களின் கோரிக்கை</u>

***11.1.*** *திரு. P.A. ஜோசப், பொது அறிவிக்கையின்படி, பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்து, P.W.4-ஆக விசாரிக்கப்பட்டார். மறைந்த முதல்வர் மருத்துவமனையிலிருந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் சிகிச்சை பற்றிய விவரங்களை வெளியிட உத்தரவிடக் கோரி, மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்குகள் மூலம் இரண்டு ரிட் மனுக்களைத் தாக்கல் செய்ததாக அவர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். அந்த இரண்டு ரிட் மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன.*

***11.2.*** *R.2 மருத்துவமனையால் மருத்துவக் குழு அமைப்பதற்காக, தாக்கல் செய்யப்பட்ட 213/2022 மனுவிற்கெதிரான SLP மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. மருத்துவக் குழுவின் முன்னிலையில் விசாரணை நடத்த ஆணையத்திற்கு உத்தரவிடப்பட்டிருந்தது. அப்போது மனுதாரர் திரு பி.ஏ. ஜோசப் 14.03.2022 அன்று கீழ்க்கண்ட நிவாரணங்கள் கோரி, 19 முதல் 21/2022 ஆகிய மூன்று விண்ணப்பங்களைத் தாக்கல் செய்திருந்தார்.*

*அ) 19/2022- ஆம் எண் மனுவின் கோரிக்கையானது,*

*(1) தமிழ்நாட்டின் முன்னாள் துணை முதல்வர் - திரு.ஓ.பன்னீர்செல்வம்*

*(2) அப்போலோ மருத்துவமனைகளின் தலைவர் - திரு. பிரதாப் சி ரெட்டி*

*(3) திரு. இராம மோகன் ராவ் - தமிழ்நாடு முன்னாள் தலைமைச் செயலாளர் மற்றும்*

*(4) திருமதி. V.K.சசிகலா ஆகியோரால் ஆணையத்தில் தாக்கல் செய்யப்பட்ட/ தாக்கல் செய்யப்படவுள்ள பிரமாணப் பத்திரங்களின் நகல்களைப் பெற வேண்டும் என்பதாகும்.*

*(ஆ) 20/2022 - ஆம் எண் மனுவின் கோரிக்கையானது,*

*(1) தமிழ்நாட்டின் முன்னாள் துணை முதல்வர் - திரு.ஓ.பன்னீர்செல்வம்*

*(2) அப்போலோ மருத்துவமனைகளின் தலைவர் - திரு. பிரதாப் சி ரெட்டி*

*(3) திரு. இராம மோகன் ராவ் - தமிழ்நாடு முன்னாள் தலைமைச் செயலாளர் மற்றும்*

*(4) திருமதி. V.K.சசிகலா ஆகியோரைக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்பதாகும்.*

*கர்நாடகா, பெங்களூரு, பரப்பன அக்ரஹார மத்திய சிறையிலிருந்து அல்லது ஆதார் பதிவேட்டிலிருந்து, மறைந்த முதல்வர் செல்வி.ஜெ.ஜெயலலிதாவின் உண்மையான கட்டைவிரல் ரேகையை, 2016-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் அட்டவணையில், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் முன் அளிக்கப்பட்ட படிவங்கள் A மற்றும் B-யின் கட்டைவிரல் ரேகையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்பதே 21/22-ஆம் எண்*

மனுவின் கோரிக்கையாகும். மேலும், இந்த ஆணையம், மனுதாரர், *R.1, R.2* தரப்பு வழக்கறிஞர்கள் மற்றும் ஆணையத்தின் நிலையிற் வழக்குறைஞர் ஆகியோரிடமிருந்து விரிவான விளக்கத்தினைப் பெற்ற பின்னர், சாட்சிகளின் விசாரணை முடியும் வரை விண்ணப்பங்களை பரிசீலனைக்காக நிலுவையில் வைக்க *30.03.2022*-அன்று ஓர் இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தது. இந்த ஆணையம், *26.04.2022*-அன்று சாட்சிகளின் விசாரணையை முடித்திருந்த நிலையில், மனுதாரர் *27.04.2022* அன்று, மேற்கண்ட மூன்று மனுக்களின் உத்தரவு நகலைக் கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

***11.3.*** *19/2022*-ஆம் மனுவின் கோரிக்கையைப் பொறுத்தவரையில், முன்னாள் துணை முதல்வர் திரு.ஒ.பன்னீர்செல்வம் மற்றும் தமிழக முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. ராமமோகன ராவ் ஆகியோரால் இந்த ஆணையத்தில் பிரமாணப் பத்திரம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, இது தொடர்பாக, மனுதாரரின் கோரிக்கையை ஏற்க இயலாது. திருமதி *V.K.*சசிகலா மற்றும் அப்போலோ மருத்துவமனையின் தலைவர் திரு. பிரதாப் சி ரெட்டி ஆகியோரால் இந்த ஆணையத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரால் உரிய விண்ணப்பம் முறையாகத் தாக்கல் செய்யப்பட்டதால், மனுதாரரிடமிருந்து நகல்களுக்கான கட்டணங்கள் பெறப்பட்டு, மேற்கூறிய பிரமாணப் பத்திரங்களின் நகல்களை வழங்க அலுவலகத்திற்கு

*அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது.*

***11.4.*** *20/2022-ஆம் மனுவின் கோரிக்கையைப் பொறுத்தவரையில், மனுதாரர் ஆணையத்தின் செயல்முறைகளில் ஒரு தரப்பினர் அல்ல என்பதால், அவர் ஆணைய சட்டத்தின் 8-B பிரிவின் படி, சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யும் ஆணையத்தின் செயல்முறைகளில் பங்கேற்க அனுமதிக்க இயலாது. முன்னர், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட 113/2018, 114/2018-ஆம் எண் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. இந்த ஆணையத்தின் முன் அவர் ஒரு தரப்பினராக இருந்தாலும், டாக்டர் பிரதாப் சி ரெட்டி தாக்கல் செய்த பிரமாணப் பத்திரங்களின் நகல்களைப் பெறவும், அவரிடம் குறுக்கு விசாரணை செய்யவும், ஆணையத்தால் 113/2018 மற்றும் 114/2018 ஆகிய மனுக்களில் ஏற்கனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அவை தள்ளுபடி செய்யப்பட்டன.*

***11.5.*** *21/2022-ஆம் மனுவின் கோரிக்கையைப் பொறுத்தவரையில், தேர்தல் ஆணையத்தின் வேட்பாளருக்கான படிவம் A மற்றும் B-யில் உள்ள மறைந்த முதல்வரின் கட்டைவிரல் ரேகையை, கர்நாடகா, பரப்பன அக்ரஹாரா சிறையிலுள்ள அவரது கட்டைவிரல் ரேகையுடன் ஒப்பிட்டுப் பார்க்க மனுதாரர் கோரியிருந்தார்.*

***11.6.*** *இப்பொருண்மையில், இந்த ஆணையத்திற்கு மிகவும் குறைவான பங்கே உள்ளது. இக்குறிப்பில், அவரது கட்டைவிரல் ரேகை மருத்துவர்களின் முன்னிலையில் பதியப்பட்டதா என்பதை*

ஆணையம் ஆய்வு செய்ய வேண்டும். இதற்கான ஆதாரங்கள் உள்ளன; இது ஒரு தற்செயலான கேள்வியே. அவரது இறப்பு என்றைக்கு ஏற்பட்டதென்பது ஆணையத்தின் அறிக்கையின் வாயிலாகவே தெரியவரும். எனவே, தற்போது இதற்கான ஒப்பீடு தேவையில்லை. இக்குறிப்பிற்கு, இத்தகவல் போதுமானது. எனவே, மனு 09.05.2022-அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

## <u>12. திரு. வா. புகழேந்தியின் (P.W.8) கோரிக்கை</u>

***12.1.*** *அ.தி.மு.க. கட்சியின் செய்தித் தொடர்பாளராகவும், அ.தி.மு.க., கர்நாடக மாநிலப் பிரிவின் செயலாளராகவும் இருந்ததாகக் கூறிக்கொள்ளும் திரு. புகழேந்தி என்பவர் விசாரணை ஆணையத்தின் செயல்வரம்புகள் தொடர்பாக, தனக்கு தெரிந்தவற்றை வெளியிட விரும்பியதால், தன்னை விசாரிக்கக் கோரி பிரமாணப் பத்திரத்தை ஆணையத்துக்கு அனுப்பியிருந்தார். அவர், P.W.8-ஆக விசாரிக்கப்பட்டார். பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தின் தண்டனையைத் தொடர்ந்து, தமிழ்நாடு முன்னாள் முதல்வர் டாக்டர்.ஜெ.ஜெயலலிதாவுக்கு உச்ச நீதிமன்றம் ஜாமீன் வழங்கியபோது, அவர் மனைவி முதல்வரை பெங்களூரு பரப்பன அக்ரஹார சிறையிலிருந்து விடுவிப்பதற்கு தனது சொத்துக்களையும் வழங்கி ஜாமீன் பத்திரத்தை நிறைவேற்றினார். ஆனால் அவர் கூற்றை ஆதரிக்கும் வகையில் எந்த ஒரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. மேலும், அவர் 22.9.2016 முதல் 05.12.2016 வரை சிகிச்சை பெற்றுவந்த சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்போலோ மருத்துவமனைக்குத் தொடர்ந்து சென்று வந்ததாகவும் கூறினார்.*

***12.2.*** *அவர், முன்னாள் சுகாதாரத் துறைச் செயலாளர் J. இராதாகிருஷ்ணன் மற்றும் அப்போதைய தலைமைச் செயலாளர் ஆகியோருக்கு, பிரிவு 8-B அறிவிப்பு அளிக்கவும், பொதுத்துறையின்*

*முதன்மைச் செயலாளரை இந்த ஆணையத்தின் நடவடிக்கைகளில் எதிர்மனுதாரர்களாக வழக்கிற்கு உட்படுத்தவும் 18.04.2022-ஆம் நாளிட்ட மனுவைத் தாக்கல் செய்தார்,*

***12.3.*** *அவர், R.1 மற்றும் R.2 தரப்பு வழக்கறிஞர்கள் மற்றும் ஆணையத்தின் வழக்கறிஞர் ஆகியோருக்கு நகல்களை முறையாக வழங்கிய பின்னர், 22.04.2022-அன்று பிரமாணப் பத்திரம் மற்றும் கூடுதல் ஆவணங்களைத் தாக்கல் செய்தார். மேற்படி மனு எண்.49/2022 கருதிப்பார்க்கப்பட்டு, விசாரணைக்காக 26.04.2022-அன்று ஆணையத்தின் முன் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டு, அறிவிப்பு அனுப்பப்பட்டு P.W.8-ஆக விசாரிக்கப்பட்டார்.*

***12.4.*** *எனவே, இத்தருணத்தில், அப்போதைய சுகாதாரச் செயலாளர் மற்றும் அப்போதைய தலைமைச் செயலாளர் ஆகியோருக்கு சட்டத்தின் 8-B பிரிவின் கீழ் அறிவிப்பு அனுப்ப விண்ணப்பதாரர் கோரும் நிவாரணத்தை தற்போது வழங்க இயலாது. அப்படி அனுமதித்தால், ஆணையம், அவர்களுக்கு போதிய அவகாசம் வழங்கயிருக்க வேண்டும் என்பதாலும், அது முழு நடவடிக்கைகளையும் தாமதப்படுத்தியிருக்கும்.*

***12.5.*** *சட்டத்தின் 8-C பிரிவின்படி, திரு. எடப்பாடி K.பழனிசாமியிடம் குறுக்கு விசாரணை நடத்துவது தொடர்பாக, அவரை அழைப்பதற்கு மனுதாரர் போதுமான காரணங்களைத் தெரிவிக்கவில்லையெனவும், மூன்றாம் தரப்பினர் இது குறித்து ஆணையத்தை நினைவுபடுத்தத் தேவையில்லை என ஆணையம் கருதியது. எனவே, இந்நிலையில்*

*அவரை அழைப்பது குறித்த கேள்வி எழவில்லை. இது சட்டத்தின் 8-C பிரிவின் கீழான வழக்கு அல்ல. எனவே, அம்மனு 09.05.2022-அன்று முடிக்கப்பட்டது. செயல்வரம்புகள் தொடர்பாக, இவ்வாணையத்திற்கு உதவும் வகையில் ஒரு முடிவிற்கு வருமளவிற்கு தொடர்புடைய தகவல்கள் ஏதும் அவரது வாய்வழி சாட்சியத்தின் மூலம் கிடைக்கவில்லை.*

## *13. "துக்ளக்"-இல் வெளியிடப்பட்ட R.1 மற்றும் அவரது உறவினர்களின் சூழ்ச்சிகள் குறித்த குற்றச்சாட்டு*

***13.1.*** *ஆணைய சாட்சிகளில் ஒருவர், ஆணையத்தின் முன் தனது சாட்சியத்தில், தமிழ் வார இதழான துக்ளக்கில், R.1 மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களால் தீட்டப்பட்ட சதித்திட்டம் மறைந்த முதல்வரின் மரணத்திற்குக் காரணமாக இருக்கலாம் என்று இரண்டு கட்டுரைகள் வெளிவந்ததாக தெரிவித்தார். இது கடுமையான குற்றச்சாட்டு என்பதாலும், எளிதில் மறுக்க முடியாது என்பதாலும், துக்ளக் வார இதழின் ஆசிரியரை விசாரிக்க ஆணையம் கருதியது. எனவே, ஆணையம் "துக்ளக்" தமிழ் வார இதழின் ஆசிரியர் திரு.S.குருமூர்த்தியை, 28.06.2018 அன்று ஆணையத்தில் ஆஜராகுமாறு 20.06.2018 அன்று அழைப்பாணை அனுப்பியது. அவர் ஏற்கனவே ஒரு புனித யாத்திரைக்கு திட்டமிட்டிருந்ததால், அந்நாளில் வர இயலாது என 22.06.2018-ஆம் நாளிட்ட மின்னஞ்சலில் தெரிவித்திருந்தார். பின்னர், அவர், 12.07.2018-ஆம் நாளிட்ட தனது வாக்குமூலத்தை அனுப்பினார். 12.07.2018-இல் அனுப்பப்பட்ட இரண்டாவது அழைப்பாணைக்கு, 16.07.2018-ஆம் நாளிட்ட மின்னஞ்சலில் அவர், 12.07.2018-ஆம் நாளில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அதில், மறைந்த முதல்வரின் உடல்நிலை குறித்து தனிப்பட்ட முறையில் தனக்கு எதுவும்*

தெரியாது என்றும், அவரை மருத்துவமனையில் சந்திக்கவே இல்லை எனவும், தான் ஆணையத்தின் நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

***13.2.*** *அதன்பிறகு, திரு. குருமூர்த்தியின் வழக்கறிஞர் தாக்கல் செய்த மனுவில், 21.12.2016 மற்றும் 28.12.2016-ஆம் நாளிட்ட “துக்ளக்”-இன் வெளியீடுகள் தொடர்பாக, தான் ஆஜராவது அவசியமென ஆணையம் கருதும் நேர்வில், தான் ஆஜராகத் தயார் எனக்கூறினார். பிரமாணப் பத்திரத்தின் பொருள் மற்றும் திரு. குருமூர்த்தியின் கோரிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்த ஆணையம் அவரை ஆஜராகுமாறு வலியுறுத்தவில்லை. அதற்கு பதிலாக இந்த ஆணையம் "துக்ளக்" வெளியீட்டாளர் திரு. K.சுவாமிநாதனுக்கு அழைப்பாணை அனுப்பி, அவர் C.W.79-ஆக விசாரிக்கப்பட்டது. 21.12.2016-ஆம் நாளிட்ட துக்ளக் வெளியீட்டை Ex.C.17 எனவும் 28.12.2016ஆம் நாள் துக்ளக் வெளியீட்டை Ex.C.18 எனவும் குறியீடு செய்யப்பட்டது. முந்தைய இதழில், மறைந்த முதல்வரின் மறைவுக்குப் பின், அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக இராஜாஜி ஹாலில் வைக்கப்பட்ட போது, முன்னணியில் இருந்த 12 பேர் அவர் உயிருடன் இருந்த போது அவரால் வெளியேற்றப்பட்டவர்கள். உண்மையில், அவர்களில் சிலர் முன்னர் கைது செய்யப்பட்டவர்கள்; மேலும், இப்பன்னிருவரில் ஒரு சிலர், மாநில அமைச்சர்களுக்கு ஆணையிட்டுக்கொண்டிருந்தனர். பிந்தைய இதழில், மறைந்த முதல்வருக்கு எதிராக, சசிகலா நடராஜனின்*

குடும்பத்தினர் சதி செய்ததால், விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று திரு.குருமூர்த்தி எழுதிய தலையங்கக் கட்டுரை உள்ளது, மேலும், இதுதான் சசிகலாவை போயஸ் கார்டனிலிருந்து வெளியேற்றியதற்கான காரணம் என்பது தெரிய வந்தது. இதை ஜெயலலிதாவே சோ-விடம் தெரிவித்திருதார்; அவர் தனது நண்பர்களுடன் அதனை பகிர்ந்து கொண்டார். அதன்பின்னர், 30.06.2020-அன்று வெளியான மற்றொரு இதழில் அவர் தனது தனிப்பட்ட கருத்தாக, "ஒரு நபர் ஆணையம் என்பது நேரத்தை வீணடிப்பதாகும்" என்றும், "அவர்களால் எதையும் கண்டுபிடிக்க இயலாது" என்றும், இவ்வாணையம் அப்போலோ மருத்துவர்கள் மற்றும் சில சாட்சிகளுக்கு அழைப்பாணை விடுப்பது துன்புறுத்துவதாகும், நடந்த சம்பவங்களை நீண்ட நாட்களுக்குப் பின்னர் நினைவுகூறுதல் என்பது சாட்சிகளுக்கு இயலாத ஒன்று என்றும் தெரிவித்துள்ளார். எனவே, தற்போதுள்ள ஆணையத்தைக் கலைக்க வேண்டுமெனப் பரிந்துரைத்தார். Ex. C.17 மற்றும் Ex.C.18 வெளியீடுகள் மூலமாக R1 மற்றும் R2 எதிரிகாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள் எந்த அளவிற்கு சரியாதாகவும் மற்றும் பொருண்மைக்கு தொடர்புடையனவாக இருக்கிறதா என்பதனை பின்னிட்டு வரக்கூடிய நிகழ்வுகளின் திருப்பம் மூலம் கருதப்படும். அதன் உள்ளடக்கங்கள் சூழ்நிலைகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவை என்பதாலும், 30.06.2020-அன்றைய வெளியீட்டின் இதழில் உள்ளடக்கங்களை ஆணையம் நிராகரித்தது. எனினும், C.17

*மற்றும் C.18 சாட்சியாவணங்கள் ஆணையத்தின் கூடுதல் ஆதாரங்களுடன் ஒப்பிட்டு ஆராய்யப்பட வேண்டும்.*

***13.3.*** *R.1 க்கு எதிராக கடுமையாக குற்றம்சாட்டியதாக கூறப்பட்டாலும், 28.12.2018 அன்று Ex.C.18 இன் பிரசுரத்தில் கூறப்பட்ட சதி என்று அழைக்கப்படுவது குறித்து R.1 தரப்பு வழக்கறிஞர் C.W.79 ஐ தனியாக குறுக்கு விசாரணை செய்யவில்லை. இதிலிருந்து R.1 தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுக்கவில்லை என்பது தெளிவாகிறது.*

## <u>14. மறைந்த முதல்வர் மற்றும் R.1 சசிகலா அவர்களின் வங்கிக் கணக்குகள்</u>

***14.1.*** *விசாரணையில், R1 வின் மருமகன் C.W.21 - விவேக் தனது உயர்கல்விக்காக வங்கிக்கடன் பெற்று, வெளிநாடு சென்றதாக ஆணையம் அறிந்தது. அதன்பிறகு, கடன் விவரம் குறித்து அறிய, வங்கி மேலாளர்களுக்கு ஆணையம் அழைப்புவிடுத்தது.*

***14.2.*** *C.W.38-திருமதி. மகாலட்சுமி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஸ்டெல்லா மேரிஸ் கிளையின் முதுநிலை மேலாளர், அங்கு, 2004 முதல் 2008 வரையிலும், 2014 முதல் 2016 வரையிலும் பணியாற்றியதாகத் தெரிவித்தார். அவர் C.W.21-திரு. விவேக், கல்விக்கடனாக ரூ.20,00,000/- (வங்கி கணக்கு எண்.168803290700001) பெறுவதற்கான விண்ணப்பத்தினை மண்டல அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து, R.1, ரூ.25 இலட்சம் டெபாசிட் செய்ததைக் கொண்டு, மேற்சொன்ன கடன் வழங்கப்பட்டது என்றும், கல்விக்கடன் கோரிய C.W.21, பல்கலைக்கழகத்திலிருந்து முறையான சான்று பெற்று விண்ணப்பித்திருந்தார் என்றும், இத்தொகைக்கு, R.1-இன் கணக்கிலிருந்து அசலும் வட்டியும் செலுத்தப்பட்டது என்றும் கூறினார். 2007 முதல் 2012 வரையிலான C.W.21-ன் கல்வி கடன் கணக்கு சான்றாவணம் Ex.X-4 ஆகும். இதற்கும் முதலமைச்சரது கணக்கிற்கும் சம்பந்தம் ஏதுமில்லை. C.W.148 இளவரசி அவர்களுக்கு, C.W.38-இன் வங்கிக்கிளையில் கணக்கு இல்லை; ஆனாலும் அவரது மகன் C.W.21-*

ஆல் பெறப்பட்ட கடனுக்கு உத்தரவாதம் அளித்திருந்தார். முதலமைச்சருக்கு தனது கிளையில் சம்பளக்கணக்கு இருந்தது என C.W.38 மேலும் தெரிவித்தார். ஒரு முறை, முதல்வருக்கு பிறந்தநாள் பரிசாக மிட்சுபிஷி மேண்ட்ரோ கார் அளிப்பதற்காக, அவரது வங்கியில் R.1 கடன் பெற்று, அது திருப்பிச் செலுத்தப்பட்டது. இதேபோல், மறைந்த முதல்வரும் R.1-இன் பிறந்தநாளுக்காக காரைப் பரிசளிப்பதற்காக கடன் பெற்று, அக்கடனும் திருப்பி செலுத்தப்பட்டது.

**14.3.** முதலமைச்சருக்கு வங்கி சேமிப்புக் கணக்கு 2007பிப்ரவரி முதல் 2015செப்டம்பர் வரை இருந்தது என C.W.38 மேலும் தெரிவித்தார். அது சான்றாவணம் Ex.C.11 எனக் குறிப்பிடப்பட்டது. அதில், பிப்ரவரி 2007-ல் ரூ.17,27,222/- வரவு இருந்தது. மேலும், 19.9.2015-அன்று நிலுவைத் தொகை ரூ. 9934.45-ஆக இருந்தது. அதற்கு மேல் அக்கணக்கில் எவ்விதப் பரிவர்த்தனையும் நடைபெறவில்லை.

**14.4.** மேற்கூறிய கணக்குகள் அல்லாமல், அ.இ.அ.தி.மு.க கட்சிக்காக ஒரு கணக்கு இருந்தது. அதில் அவ்வப்போது பணம் போடப்படும் என்றும், கட்சியின் உறுப்பினர் மகாலிங்கம் என்பவர் அதில் வரும் வட்டியினை வேறு கணக்கிற்கு பரிமாற்றம் செய்வார் என்றும் C.W.38 தெரிவித்தார்.

**14.5.** R.1-சசிகலா, அவர்களின் வங்கியில் 2007ஜூன் முதல் 2010ஜூன் வரை கணக்கு வைத்திருந்தார். அது Ex.C.12 எனக் குறிக்கப்பட்டது என C.W.38 மேலும் தெரிவித்தார். 16.06.2016-அன்று நிலுவைத் தொகை

*ரூ.3,69,371.00-ஆக இருந்தது. 09.06.2010-அன்று நிலுவைத்தொகை ரூ. 3,67,338.83-ஆக இருந்தது. இக்கணக்கில் மொத்தம் ரூ. 10,40,33,455.66 வரவும், ரூ.10,36,72,116.83 செலவும் இருந்தது. சான்றாவணம் Ex.C.13-லிருந்து, சசிகலா 2007 முதல் 2010 வரை ரூ.25,00,000 டெபாசிட் செய்ததும், அது வட்டியுடன் ரூ.32,00,000.00-ஆனது என்றும் தெரியவருகிறது. நமது எம்.ஜி.ஆர் வங்கிக் கணக்கிலிருந்து, 16.08.2008 அன்று கார் கடனாக ரூ.35,60,000.00 எடுக்கப்பட்டு, அது நவம்பர் 2012-ல் திருப்பிச் செலுத்தப்பட்டது, அது சான்றாவணம் Ex.C.14 எனக் குறிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, 2008-இல் நமது எம்.ஜி.ஆர் கணக்கில், மேலும் ஒரு கார் கடன் ரூ.19,50,000/- எடுக்கப்பட்டு, அது 2009-ல் திருப்பிச் செலுத்தப்பட்டது. அது சான்றாவணம் Ex.C.15 எனக் குறிக்கப்பட்டது. 2006 முதல் 2010 வரையிலிருந்த நமது எம்.ஜி.ஆர் வங்கிக் கணக்கு சான்றாவணம் Ex.C.16 எனக் குறிக்கப்பட்டது.*

***14.6.*** *C.W.34 திருமதி லீலா செல்வகுமாரி, மேளாலர் I.O.B., ஸ்டெல்லா மேரிஸ் கிளை, 11.06.2007 அன்று C.W-21 திரு. J.விவேக்கிற்கு ரூ.20 இலட்சம் கல்விக் கடன் வழங்கப்பட்டது என்பதை உறுதி செய்தார். மேற்சொன்ன கடன் வட்டியுடன் ரூபாய் 28,56,986-ஆக 19.01.2012 அன்று திருப்பிசெலுத்தப்பட்டது என C.W.34 தெரிவித்தார். அந்த வங்கி கணக்கு அறிக்கை Ex. X-4- ஆக குறியீடு செய்யப்பட்டது.*

***14.7.*** *C.W.34 மற்றும் C.W.38-இன் சாட்சியங்களிலிருந்து, வங்கியில் ரூ.25 லட்சம் டெபாசிட் செய்த பிறகு, R.1-இன் மருமகன் மற்றும் C.W.148-இளவரசியின் மகனான C.W-21 திரு. J.விவேக்கிற்கு ரூ.20*

*இலட்சம் கடன் வழங்கப்பட்டது. மேற்கூறிய கடன் முன்னர் கூறியவாறு திருப்பிச் செலுத்தப்பட்டது.*

***14.8.*** *மேலும் பல பரிவர்த்தனைகள் இருந்த போதிலும், இந்த ஆணையத்திற்கு அது தேவையில்லை என்றிருந்தாலும், மேலும் அவை இந்த பொருண்மைக்கு தொடர்பு இல்லாதவை என்பதாலும், தானாக முன்வந்து அளித்ததால் அதைனை இவ்வாணையம் பெற்றுக்கொண்டது.*

## 15. போயஸ் கார்டனிலிருந்து R.1 – சசிகலா அவர்களின் வெளியேற்றம், மறு-வருகை

*15.1.* *R.1, மறைந்த முதல்வரின் நெருங்கிய தோழி என்பது பதிவு செய்யப்பட்டது. ஜெ. ஜெயலலிதா 1982-ம் ஆண்டு அரசியலுக்கு வந்தபோது அவர்களது நட்பு மலர்ந்தது; அப்போது, டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் தமிழ்நாட்டின் முதல்வராகவும், அ.தி.மு.க. வின் தலைவராகவும் இருந்தார். R.1, டாக்டர் ஜெ.ஜெயலலிதாவுடன் அவரது போயஸ் கார்டன் இல்லத்தில் வசித்து வந்தார், டாக்டர் ஜெ. ஜெயலலிதா பதவியேற்ற பிறகு, போயஸ் கார்டன் இல்லம் அவரது முகாம் அலுவலகமாக இருந்தது. அவர் ஆட்சியில் இல்லாதபோதும், R.1 அவருடன் தொடர்ந்து வசித்து வந்தார். 2011 - ஆம் ஆண்டு அவர் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்த போது, மறைந்த முதல்வர் மற்றும் R-1 சசிகலா சொத்துக்குவிப்பு வழக்கு பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்தது. K. இராமானுஜம், ஐ.பி.எஸ்., புலனாய்வு காவல் துறைத்தலைவர் கூறுகையில், "டெகல்கா" என்ற பத்திரிக்கையின் பெங்களூரு வெளியீட்டில், R.1 சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினர் தமிழ்நாடு முதல்வருக்கெதிராக, பெங்களூரு ஹோட்டலில் சூழ்ச்சி செய்வதாகவும், பெங்களூரு வழக்கில் முதல்வர் தண்டிக்கப்பட்டால், அடுத்த முதல்வர் யார் என்பது குறித்து திட்டம் தீட்டியதாகவும், C.W.25-வின் பேட்ஜ்மேட்டான கர்நாடக மாநிலத்தின் காவல் துறைத்தலைமை இயக்குநர் DGP சங்கர் பிதாரி*

*C.W.25-க்கு (உளவுத்துறை) தகவல் அளித்து, ஒலி நாடாவுடன் (Voice Message) அதை முதல்வருக்கு (recorded voice message) அனுப்பி வைத்ததாகவும், எனினும், விசாரணையில், மேற்சொன்ன செய்தியை C.W.25, தான் படித்ததாகவும், ஆனால் அவர் சங்கர் பிதாரியிடமிருந்து எந்த தகவலும் பெறவில்லை என்றும், மறைந்த முதல்வருக்கு அத்தகைய தகவல் எதையும் தெரிவிக்கவில்லை என்றும், அது டெகல்கா இதழில் வெளியிடப்பட்டிருந்த தகவல் என்றும் கூறினார்.*

***15.2.** R.1 தனது வாக்குமூலத்தில், மறைந்த முதல்வர் தன்னை போயஸ் கார்டன் இல்லத்திலிருந்து சிறிது காலம் விலகியிருக்குமாறு தெரிவித்ததால், அவர் தனது நாத்தனார் திருமதி. இளவரசியுடன் (CW 148) திநகரில் C.W.14-உடன் வசிக்கத் தொடங்கினார் என்று கூறினார். C.W.14- கிருஷ்ணப்பிரியா, இளவரசியின் (C.W.148) மகள், R.1 மற்றும் C.W.148-ஐ பற்றி யாரோ அளித்த தவறான தகவலின் பேரில் R.1 சசிகலா மற்றும் தனது தாயார் இளவரசி (C.W.148) ஆகியோர் 2011-இல் போயஸ் கார்டனிலிருந்து வெளியேற்றப்பட்டனர் என்று தெரிவித்தார். தனது உறவினர்களான C.W.36 - V.திவாகரன் மற்றும் ராவணன் ஆகியோரின் கட்சி செயல்பாடுகள் குறித்தும், கட்சியில் பதவி வகிப்பவர்கள் பொதுமக்களிடம் எப்படி நடந்துகொள்கிறார்கள், அவர்களது குறைபாடுகள் பற்றி R.1 சசிகலாவிடம் கூற, அவர் அவற்றை மறைந்த முதல்வரிடம் தெரிவிப்பார் என்றும் C.W.14-கிருஷ்ணபிரியா தனது சாட்சியத்தில் கூறியுள்ளார்.*

*பக்கம் எண்.3-இல், C.W.14 கூறுகையில்,*

> *"19.11.2011-ல் சசிகலா கார்டனை விட்டு வெளியேறினார். எனது தாயாரும் சசிகலாவும் எனது வீட்டிற்கு நேரடியாக வந்தார்கள். சில நாட்களுக்குப் பிறகு விசாரித்ததில், அவர்களிடமிருந்து நான் தெரிந்துகொண்டது என்னவென்றால், திவாகர், சசிகலாவின் உறவினர் மற்றும் சிலர் முதல்வரை ஏமாற்றிவிட்டதாகவும், முதல்வர் தன்னைச் சுற்றி தவறு நடப்பதாகத் தெரிவித்ததாகவும், அதனால் சசிகலா வெளியேறினார். முதலமைச்சர், இராமானுஜம் என்பவர் அளித்த உளவுத்துறை அறிக்கை மூலம் அது தனக்கு தெரியவந்ததாகக் கூறினார். எனவே, சசிகலா கார்டனை விட்டு வெளியேறியதாக எனக்கு தெரிய வந்தது" என்றார்.*

***15.3.*** *மேலும், எந்த ஒரு அலுவலரோ, அமைச்சரோ R.1-க்குத் தெரியாமல் தலைமைச் செயலகத்தில் பதவியில் இருக்கமுடியாது என்றும், 2012-ஆம் ஆண்டுக்கு முன்னர் எப்பொருண்மையாயினும், அது R.1-ஆல் சம்பந்தப்பட்ட நபர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, மறைந்த முதல்வருக்குத் தெரிவிக்கப்பட்ட பின்னர் செயல்படுத்தப்படும். R.1 மீண்டும் போயஸ் கார்டனுக்கு வர 31.3.2012 அன்று முதல் அனுமதியளிக்கப்பட்டது. ஆனால், 2012-க்கு பிறகு மறைந்த முதல்வர், R.1-உடன் அரசியல் மற்றும் அலுவல்சார் கருத்துக்களில் சற்று விலகியே இருந்தார் எனவும், R.1 கார்டனை விட்டுச் சென்றபோது, சோ-வின் மகன் C.W.44 - R.ஸ்ரீராம் மற்றும் C.W.24 - P.H. மனோஜ் பாண்டியன் போயஸ் கார்டனில் இருந்தனர்*

*எனவும் C.W.14 கூறினார். ஆனால், C.W.44 விசாரிக்கப்பட்டபோது, அதை மறுத்ததுடன், தான் போயஸ் கார்டன் இல்லத்திற்குச் செல்லவில்லை என்றும் கூறினார்.*

*C.W.14, பக்க எண்.5 முதலாவது வரியில்:-*

> *“சசிகலா 19.11.2011-அன்று வெளியேற்றப்பட்ட போது, ஆசிரியர் “சோ” முதல்வருடன் இருந்தார் என்றும் அதற்குப் பிறகு, “சோ”-வின் மகன் கார்டனில் மூன்று மாதங்கள் முதல்வரின் ஆலோசகராக இருந்தார் என்றும் கூறப்படுகிறது. சசிகலா மீண்டும் கார்டனுக்குள் வருவதை சோ விரும்பவில்லை. மேலும், அவர் சசிகலாவின் குடும்பத்தினரையும் மற்றும் உறவினர்களையும் விரும்பவில்லை.” என்றார்.*

***15.4.*** *ஆணையத்தின் செயல்வரம்புகளுக்குள் வரும் பொருண்மைகள் குறித்த தகவல் ஏதேனும் கிடைக்குமா என்பதை அறிய, C.W.29- திரு.அம்ரேஷ் புஜாரி IPS., C.W.30- திரு. P.தாமரைக்கண்ணன் IPS., C.W.50 - திரு. S. ஜார்ஜ் IPS., மற்றும் C.W.25 - திரு. K. இராமானுஜம் IPS., ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். மறைந்த முதல்வர் R.1-ஐ போயஸ் கார்டனிலிருந்து வெளியே அனுப்பியது ஏனென்று தங்களுக்குத் தெரியாது என இந்த சாட்சிகள் தெரிவித்துள்ளனர். அவர்களது சாட்சியங்களிலிருந்து, 2011-ஆம் ஆண்டு, போயஸ் கார்டனிலிருந்து R.1-ஐ அனுப்புவது அவரது சொந்த முடிவு என்றும், R.1 மீதுள்ள சந்தேகங்கள் காரணமாக இருக்கலாம் என்றும் கருதலாம்.*

***15.5.*** *மறைந்த முதல்வரது சிகிச்சை அறைக்கு R.1-சசிகலா மட்டுமே சென்றார் என்பது தெளிவாகிறது. எனவே, மறைந்த முதல்வருடன் ஆரம்பத்திலிருந்து அவரது இறப்பு வரை உடனிருந்தவர்களான C.W.14 – J. கிருஷ்ணபிரியா, அவரது சகோதரர் C.W.21 - விவேக் மற்றும் C.W.17-டாக்டர் K.S. சிவகுமார் ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். போயஸ் கார்டனிலிருந்த பணியாளர்களான C.W.23 - திருமதி. ராஜம்மாள்-மறைந்த முதல்வரின் சமையளால்; C.W.18 – S.S. பூங்குன்றன் - கார்டனில் கட்சியின் செயல்பாடுகளை மேற்கொண்ட மறைந்த முதல்வரின் நம்பிக்கைக்குறியவர்; மற்றும் மறைந்த முதல்வரின் செயலாளர்களான C.W.20 –K.N.வெங்கட்ரமணன் ஐஏஎஸ்.,; C.W.33 - A. இராமலிங்கம், ஐ.ஏ.எஸ்.,; மறைந்த முதல்வரின் ஓட்டுநர்கள், C.W.22- K.T. கார்த்திகேயன், C.W.26-M.ஐய்யப்பன்; C.W.27 - C. கண்ணன்; C.W.31 – திரு. வீரபெருமாள், மறைந்த முதல்வரின் தனிப் பாதுகாவலர் ஆகியோரும் விசாரிக்கப்பட்டனர்.*

***15.6.*** *C.W.9 – திரு. J. தீபக் மறைந்த முதல்வரின் அண்ணன் (ஜெயக்குமார்) மகன், 14.12.2017 மற்றும் 02.06.2018 ஆகிய நாட்களில் விசாரிக்கப்பட்டார். C.W.9 விளக்கங்களுக்காக, மீண்டும் பின்னிட்ட நாளில் விசாரிக்கப்பட்டார். R.1-ஆல் தான் மறைந்த முதல்வருக்கு அவப்பெயர் வந்தது என்று அவர் தெளிவாகக் கூறினார்.*

*பக்கம் 7-ல் C.W.9 குறிப்பிடும்போது:-*

> *“சசிகலா 2011-ல் வெளியில் அனுப்பப்பட்டுத் திரும்பிய பிறகு இளவரசி, இளவரசியின் மகன், மகள்*

> *யாருக்குமே கார்டனில் அனுமதியில்லை. சசிகலா மட்டுமே கார்டனில் தங்க அனுமதிக்கப்பட்டார். சம்பந்தமில்லாத சசிகலாவின் கையாட்கள் ஆறு பேர் கார்டனில் தங்கியிருந்ததாகக் கூறுவது தவறு. என் அத்தையின் தேவைகளை அவ்வப்போது அறிந்துசெய்யும் திறனும், அத்தையின் மனநிலையை அறிந்து பேசக்கூடிய பக்குவமும் இருந்ததால்தான் என் அத்தைக்கு அவருடைய உதவி தேவைப்பட்டது."*

*பக்கம் 7-இல், C.W.9 மேலும் கூறியதாவது:-*

> *"நல்லது செய்யவேண்டும் என்ற எண்ணத்தில்தான் என் அத்தை கூறும் வழிமுறைகளை அவர் மேற்கொள்வார். ஆனால், பயனாளிகளுக்கு எதிரான தேவையற்ற புகார்களைப் பெறும்போதுதான், காரணத்துடன் அவர் அதிரடி நடவடிக்கை எடுத்து சசிகலா மீது கோப்பினைத் தூக்கியெறிவார்."*

***15.7.*** *C.W.22 – ஓட்டுநர் K.T கார்த்திகேயன் கூறுகையில், மறைந்த முதல்வர் 2011-ஆம் ஆண்டு, R.1 -ஐயும் அவரது குடும்ப உறுப்பினர்களையும் வெளியே அனுப்பியதாகவும், பின்னர், R.1-ஐ மட்டும் 2012-ஏப்ரல் முதல் திரும்பி வர அனுமதித்ததாகவும், மற்றவர்களை அவர் அனுமதிக்கவில்லை என்றும் கூறினார். மறைந்த முதல்வருக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால், அவரைத் துச்சமெனத் தூக்கியெறிந்துவிடுவார்; அவரை எளிதில் ஏமாற்ற முடியாது. அவர் தனக்கே உரிய பாணியில் விசாரித்து உண்மைகளைக் கண்டறிந்து, உறுதிப்படுத்திய பின்னர் அதை விட்டுவிடுவார் என்றார்.*

***15.8.*** *C.W.24 – P.H. மனோஜ் பாண்டியன், மறைந்த முதல்வரின் வழக்கறிஞர் மற்றும் கட்சி செயல்பாட்டாளர், தனது சாட்சியத்தில், R.1 வெளியேற்றப்பட்ட பிறகு, C.W.24—க்கும், மறைந்த பத்திரிக்கையாளர் சோ-வுக்கும் சில பொறுப்புகள் வழங்கப்பட்டன. மறைந்த முதல்வர், R.1–ஐ 2011-டிசம்பரில் வெளியே அனுப்பியதால், கார்டனில் பணிகளை C.W.24 நிர்வகித்து வந்தார். எனவே, C.W.24 மீதும், அவர் குடும்பத்தினர் மீதும் R.1 வெறுப்பும் காழ்ப்புணர்சியும் கொண்டிருந்தார். வழக்கு முடிந்ததும் சசிகலாவை வெளியே அனுப்பலாம் என்று C.W.24 யோசனை கூறியதாகவும், மறைந்த முதல்வர் தன்னையும் தன் பதவியையும் (தமிழ்நாட்டின் முதல்வர்) குறி வைத்துள்ளதால், R.1-சசிகலாவையும் அவரது குடும்பத்தினரையும் ஒரு நிமிடம் கூட கார்டனில் இருக்க அனுமதிக்கக்கூடாது என்பதனால்தான், சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினர் கார்டனிலிருந்து வெளியேற்றப்பப்பட்டனர் என்றும் கூறியுள்ளார். C.W.24-இன் சாட்சியத்தில், (பக்கங்கள் 5, 7 மற்றும் 8-ல்) அவர் அனைத்து பொறுப்புகளையும் ஏற்குமாறு மறைந்த முதல்வர் கேட்டுக்கொண்டதாகக் கூறியுள்ளார். மறைந்த முதல்வர் R.1 சார்பாக, பெங்களூரு வருமானத்திற்கு அதிகமான சொத்துக்குவிப்பு வழக்கில், ஆஜராக வேண்டாம் என்று கூறியதால், தானும் அந்த வழக்கில் R.1-க்காகத் தாக்கல் செய்திருந்த மெமோவைத் திரும்பப்பெற்றுக்கொண்டதாகக் கூறினார்.*

***15.9. C.W.31*** - ***திரு. வீரபெருமாள்,*** மறைந்த முதல்வரின் தனிப்பாதுகாப்பு அதிகாரி, தனது சாட்சியத்தில், 2011-நவம்பரில், சசிகலா வெளியே அனுப்பப்பட்டபோது, அவர் பணியில் இருந்ததாகவும், பத்திரிகையாளர் சோ அங்கு இருந்தாரென்றும், மறைந்த முதல்வர் கனத்த மனதுடன் R.1-ஐ வெளியில் அனுப்பினாரென்றும், புலனாய்வுத் துறை அறிக்கைதான் அதற்குக் காரணமா என்று ***C.W.31*** தனக்குத் தெரியாதென்றும், R.1 மீண்டும் 2012-ல் கார்டனுக்குத் திரும்பி வந்தாரெனவும் கூறினார்.

***15.10. C.W.33-திரு. A.இராமலிங்கம்,*** மறைந்த முதல்வரின் முகாம் அலுவலக செயலாளர், தனது சாட்சியத்தில், 2011-ஆம் ஆண்டு R.1 கார்டனை விட்டு வெளியேற்றப்பட்டபோது, தான் பணியில் இருந்ததாகவும், R.1 என்ன காரணத்திற்காக வெளியே அனுப்பப்பட்டார் என்று தனக்குத் தெரியவில்லை என்றும், R.1 மதிய உணவுக்கு முன்பாக வெளியே சென்றார் என்றும், உளவுத்துறையின் இரகசிய அறிக்கைதான் R.1-ஐ வெளியே அனுப்பப்பட்டதற்கான அடிப்படைக் காரணமா என்று தனக்கு தெரியவில்லையென்றும், 2012-ல் சசிகலா கார்டன் திரும்பி வந்த பிறகு மறைந்த முதல்வருடன் மிகவும் சகஜமாக இருந்தாரென்றும் C.W.33 கூறினார்.

***15.11.*** C.W.36 – டாக்டர். V. திவாகரன், R.1-இன் சகோதரர், தனது சாட்சியத்தில், மறைந்த முதல்வர் R.1 மீது நம்பிக்கை வைத்திருந்ததாகவும், அவரை தனது சொந்த சகோதரியாகவே கருதியதாகவும், R.1 மறைந்த முதல்வரை தனது பெற்றோராகவே

கருதி, கவனித்து வந்தாரெனவும் கூறினார். அவர் தனது சகோதரி R.1 வெளியேற்றப்பட்டதற்கான காரணம் தனக்குத் தெரியாது என்றும், ஜனவரி மாத இறுதியில் சென்னையில் ஒரு கட்சிக் கூட்டத்தில், மறைந்த முதல்வர் அவர்கள், தன்னால் ஒதுக்கி வைக்கப்பட்ட நபர்களிடம் யாரும் தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாதெனப் பேசினாரென்றும் கூறினார். 2011-இல், மறைந்த முதல்வர் C.W.36-ஐ கட்சியிலிருந்து நீக்கினார் எனவும், R.1 மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களிடமிருந்து விலகியே இருந்தார் எனவும், 2011-க்குப் பிறகு, தான், R.1-ஐ தொலைபேசியில் கூடத் தொடர்பு கொள்ளவில்லை என்றும் கூறினார். 2012-க்கு பிறகு, தான் அரசியல் பணிகளை கவனிக்காமல் தவிர்த்துக்கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். மூன்று மாதங்கள் கழித்து, மீண்டும் தன் சகோதரி கடிதமளித்த பின்னர் கார்டன் இல்லத்திற்குச் சென்றதாக செய்தித்தாள்களின் மூலமாகவே தான் அறிந்து கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**15.12.** C.W.42-திரு. **A.G.** பொன்மாணிக்கவேல், **I.G,** இரயில்வே, தனது சாட்சியத்தில், தான் விழுப்புரத்தில் பணியிலிருந்த போது, R.1 மற்றும் அவரது குடும்பத்தினர் போயஸ் கார்டன் இல்லத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர் என்பதை செய்தித்தாள்களில் படித்ததாக ஒருவர் கூறியதாகவும், தான் பதவியேற்ற காலத்திலிருந்து பணி மாற்றம் செய்யும் வரை R.1 குடும்பத்தினர் மறைந்த

முதல்வருக்கெதிரான சூழ்ச்சியில் ஈடுபடுவது போல தனக்குத் தகவலேதும் வரவில்லை எனவும் கூறினார்.

**15.13.** C.W.44 – திரு. R. ஸ்ரீராம், சோ-வின் மகன், விசாரிக்கப்பட்டிருந்த போதிலும், R.1 கார்டனிலிருந்து வெளியேற்றப்பட்டதோ, தனது தந்தை அங்கு சென்றதோ எதுவுமே தனக்குத் தெரியாது என்றும், மறைந்த முதல்வரிடம் எதைப்பற்றியும் தான் பேசியதில்லை என்றும் C.W.44 சாட்சியமளித்துள்ளார்.

**15.14.** C.W.45 – திரு. மருது அழகுராஜ், "நமது எம்.ஜி.ஆர்" (பின்னர் "நமது அம்மா" என மாற்றப்பட்டது) ஆசிரியர், R.1-சசிகலாவால் தான் அங்கிருந்து வெளியேற்றப்பட்டதாகக் கூறினார். எனவே, அவருடைய சாட்சியம் பற்றிக் கூறுவதற்கு ஏதுமில்லை.

**15.15.** மேற்சொன்ன சாட்சியங்களிலிருந்து, "டெகல்கா" என்ற பத்திரிக்கையில் வெளியான செய்தியின் அடிப்படையில், மறைந்த முதல்வரின் சொந்த விருப்பத்தின் பேரில் 2012 ஏப்ரலில் R.1 வெளியேற்றப்பட்டார். மறைந்த முதல்வருக்குக் கடிதம் அளிக்கப்பட்ட பின்னர் R.1 திரும்ப அழைக்கப்பட்டார் என்பது தெளிவாகிறது. R.1–இன் பிரமாணப்பத்திரத்தின் படி, முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் மறைவிற்குப் பின்னர், R.1, (மறைந்த முதல்வரால் வெளியேற்றப்பட்ட நவம்பர் 2011 முதல் 31.03.2012 வரையிலான சிறு இடைவெளி தவிர்த்து) போயஸ் கார்டனிலேயே இருந்து வருகிறார் என்பது தெளிவாகிறது.

***15.16.*** *மேற்கண்ட சாட்சியங்களிலிருந்து, பலத்த சந்தேகத்தின் பேரில்தான் R.1, போயஸ் கார்டனிலிருந்து மறைந்த முதல்வரால் வெளியேற்றப்பட்டார் என்பதும், அவர் இல்லாத சமயத்தில் C.W.24 – மனோஜ் பாண்டியன் போயஸ் கார்டனுக்கு வந்திகொண்டிருந்தார் மற்றும் சோ-வின் மகன் C.W. 44 ஸ்ரீராம் கட்சியின் அரசியல் வேலைகளை கவனித்துக்கொண்டார், மற்றும் R-1 போயஸ் கார்டனுக்கு மீண்டும் வந்ததை சோ விரும்பவில்லை. சிறு இடைவெளிக்குப் பின்னர், அரசியலில் தலையிட மாட்டார் என்ற கடிதத்தினை R.1-இடமிருந்து பெற்று, மறைந்த முதல்வர் அவரை போயஸ் கார்டனுக்குள் அனுமதித்தாலும், சற்று விலகியே இருந்தார் என C.W.14 சாட்சியம் அளித்துள்ளார். R.1, அவரது குடும்ப உறுப்பினர்கள் இதை எவ்வாறு எடுத்துக்கொண்டனர் என்பதைப் பின்னர் காணலாம்.*

## <u>16. மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன் அளிக்கப்பட்ட சிகிச்சை</u>

***16.1.*** *மறைந்த முதல்வர் சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், வெர்டிகோ, உயர் இரத்த அழுத்தம் போன்ற சில உடல்நலக் குறைபாடுகளுக்கு, அவரது இல்லத்திலிருந்தவாறே அவருக்குத் தெரிந்த மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்று வந்தார்; அவர்களில் சிலர் அப்போலோ மருத்துவமனையை சோர்ந்தவர்கள்.*

***16.2.*** *C.W.74 - டாக்டர் M. பாபு மனோகர், (அப்போலோ மருத்துவமனையில் பணிபுரிபவர்) தனது சாட்சியத்தில், மறைந்த முதல்வரை பதவிப்பிரமாணத்திற்கு ஒரு நாள் முன்பு, அதாவது 21.05.2016 அன்று அவருக்கிருந்த வியாதிகள் தொடர்பாக, அவரது இல்லத்தில் பார்த்ததாகவும், நடக்கும்போது சில சமயம் தலை சுற்றுவது போன்று உணர்வதாகவும், மற்றவருடைய ஆதரவும், உதவியும் தனக்கு தேவைப்படுவதாக மறைந்த முதல்வர் தெரிவித்ததாகவும், வெர்டிகோவினால் பாதிக்கப்பட்டிருந்ததால், அதற்கு C.W.74 மருந்துகள் பரிந்துரைத்ததாகவும் தெரிவித்தார். ஆனால், கடந்த கால மருத்துவ வரலாற்றை அறிய மருத்துவ பதிவு எதுவும் இல்லை.*

***16.3.*** *C.W.39 - டாக்டர் ஜெயஸ்ரீ கோபால், எண்டோகிரைனாலஜிஸ்ட் / நீரிழிவு நோய் மருத்துவர், பகுதிநேர அப்போலோ மருத்துவர், அவரது குடியிருப்பு பகுதியான இராஜா அண்ணாமலைபுரத்தில்*

சொந்தமாக கிளினிக் வைத்து நடத்தி வருபவர். மறைந்த முதல்வரின் நீரிழிவு நோய்க்காக, 2015 முதல் சுமார் 15 மாதங்களாக C.W.17 டாக்டர் K.S. சிவகுமார் மூலமாக சிகிச்சையளித்து வந்ததாகவும், அவரது நீரிழிவு, தைராய்டு நோய்க்கான மருந்தினைப் பரிந்துரைத்ததாகவும் தெரிவித்தார். தொடக்கத்தில், மறைந்த முதல்வருக்கு சர்க்கரையின் அளவு 250 முதல் 280 மீ.கி./டி.லி. வரை இருந்ததாகவும், 2016 மே மாதம் C.W.39, தான், நேரடியாக சிகிச்சையளித்து மருந்துகள் வழங்கி வந்ததாகவும், வாரம் ஒருமுறை ஊசி போட்டதாகவும், மறைந்த முதல்வரின் சர்க்கரையளவு கட்டுப்பாட்டுக்குள் இருந்ததாகவும், தைராய்டு சுரப்பு குறைவாக இருந்ததாகவும், அவருடைய உணவு கட்டுப்பாடின்மை மற்றும் உடற்பயிற்சியின்மையே அவரது உடல் பருமனுக்கு பொதுவான காரணிகள் என்றும் கூறினார். C.W.17, 2016-ஆகஸ்டு மாதம் C.W.39-ஐ தொலைபேசியில் தொடர்புகொண்டு, மறைந்த முதல்வருக்கு தோலில் தடிப்புகள் இருப்பதாகக் கூறியதன் பேரில், தான் ஸ்டீராய்டு மாத்திரைகள் அளித்ததாகவும், அடிக்கடி ஸ்டீராய்டு மாத்திரைகள் எடுத்துக் கொள்வதால் சர்க்கரையின் அளவு மிகவும் அதிகரிக்கும் என்பதால், அடிக்கடி சர்க்கரையளவை சரிபார்த்துக் கொள்ளும்படி C.W.17-இடம் கூறியதாகவும், அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பாக, அவரது போயஸ் கார்டன் இல்லத்திற்குச் சென்று சிகிச்சையளித்ததாகவும் C.W.39 சாட்சியமளித்துள்ளார்.

***16.4.*** *C.W.40 - டாக்டர். A. இராமச்சந்திரன், நீரிழிவியல் மருத்துவர், மறைந்த முதல்வர் R.2 - அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு சுமார் ஏழெட்டு மாதங்களுக்கு முன்பு, மறைந்த முதல்வரை கார்டனில் இரண்டு முறை சிகிச்சை நிமித்தமாகப் பார்வையிட்டு மருந்துச் சீட்டுகள் அளித்துள்ளார். முதல்வருக்கு இன்சுலின் எடுத்துக் கொள்ள கற்பிக்கப்பட்டது என்று C.W.40 கூறினார். அவர் மறைந்த முதல்வரைப் பரிசோதித்தபோது, அவருடைய சர்க்கரையின் அளவு சுமார் 300 மீ.கி./டி.லி. இருந்ததுடன், அவ்வப்போது ஏற்ற இறக்கமாகவும் இருந்துள்ளது. மறைந்த முதல்வரின் உணவுப் பழக்கவழக்கம் குறித்து C.W.40-க்குத் தெளிவாகத் தெரியாது என்றும், மறைந்த முதல்வருக்கு அளிக்கப்பட்ட மருந்தின் அளவு மிகவும் குறைவானது என்றும் ஆலோசனை கூறியுள்ளார். நீரிழிவு நோய்க்காக மறைந்த முதல்வர் தொடர்ந்து இன்சுலின் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், உணவுக் கட்டுப்பாடு குறித்த அறிவுரை வழங்கியதாகவும், ஆனால் அவர் அதைப் பின்பற்றவில்லை, உடற்பயிற்சியும் மேற்கொள்ளவில்லைம் எனக் கூறினார். அவர் மறைந்த முதல்வரைப் பரிசோதித்த போது, C.W.41-டாக்டர்.D.சாந்தாராம், C.W.39-டாக்டர்.ஜெயஸ்ரீ கோபால், மற்றும் C.W.17 ஆகியோர் அங்கிருந்ததாகவும், நீரிழிவு நோய்க்காக மறைந்த முதல்வர் தொடர்ந்து இன்சுலின் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், அதற்காக அவர் குறைந்த அளவு "Ryzodeg" இன்சுலின் மருந்து,*

மாத்திரைகள் பரிந்துரைத்ததாகவும், C.W.40 மறைந்த முதல்வரின் உணவுக் கட்டுப்பாடு குறித்து அறிவுரை கூறியதாகவும், அதன் பிறகு, C.W.39 மறைந்த முதல்வருக்கு சிகிச்சையைத் தொடர்ந்தார் என்றும், எத்தனை நாட்களாக இன்சுலின் எடுத்துக்கொண்டார் என்று தனக்கு தெரியாது என்றும் C.W.40 கூறியுள்ளார்.

***16.5.*** *C.W.41-டாக்டர் D.சாந்தாராம்*, ***எம்.டி.,*** *(பொது மருத்துவம்) தனது சாட்சியத்தில், மறைந்த முதல்வர் 2001-ல் முதலமைச்சராகப் பதவியேற்ற பின்னர், அப்போலோ மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் சென்றபோது, தான் மறைந்த முதல்வரை நேரில் பார்த்ததாகவும், 2014-வரை தான், மறைந்த முதல்வரை மூன்று முறை பார்த்ததாகவும், 2014 மற்றும் 2015-ல் ஆறேழு முறை சிகிச்சையளித்ததாகவும், 2001 முதல் 2014 வரை நீரிழிவு நோய்க்காக மறைந்த முதல்வர், C.W.41-இடம் முழுமையாக சிகிச்சை பெற்றுக்கொண்டதாகவும், 2014 வரை மறைந்த முதல்வரின் சர்க்கரையளவு மாத்திரைகளால் கட்டுக்குள் வைக்கப்பட்டிருந்ததாகவும், HbA1c, அதாவது மூன்று மாததின் சராசரி சர்க்கரை அளவு 7-க்குள் இருக்க வேண்டுமென்றும், ஆயினும், அவரது சர்க்கரையளவு இரண்டு முறை 7-க்கும் அதிகமாக இருந்ததாகவும், மருந்துகள் பரிந்துரைக்கப்பட்டன என்றும், உணவுக் கட்டுப்பாட்டின் அவசியம், கட்டாய நடைபயிற்சி மற்றும் சாதாரண உடற்பயிற்சி குறித்துத் தெரிவித்ததாகவும் கூறியுள்ளார்.*

***16.6.*** *C.W.131-டாக்டர். G. இரவிச்சந்திரன், R.2-அப்போலோ மருத்துவமனையில் தோல் நோய் மருத்துவர், தனது சாட்சியத்தில், மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பு, இருமுறை சிகிச்சைக்காக தான் போயஸ் கார்டன் இல்லத்திற்கு சென்றதாகவும், ஜூன் 2016-இல் முதல் முறையாக, C.W.17 - டாக்டர் K.S. சிவகுமாரது அழைப்பின் பேரில், தோல் நோய்க்கு சிகிச்சையளித்ததாகவும், இரண்டாவது முறையாக 30.06.2016-அன்று மறு ஆய்விற்குச் சென்றதாகவும், அதன்பின்னர் அனைத்தும் சரியாகிவிட்டதெனத் தனக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், C.W.17-இன் வேண்டுகோளுக்கிணங்க, 2016 செப்டம்பரில், பெண் தோல் நோய் மருத்துவர் C.W.130 - டாக்டர் பார்வதி பத்மநாபன் மறைந்த முதல்வரின் இருப்பிடத்திற்குச் சென்று சிகிச்சையளித்ததாகவும் கூறினார்.*

***16.7.*** *C.W.132-டாக்டர். U. மீனாட்சிசுந்தரம், R.2-அப்போலோ மருத்துவமனையின் நரம்பியல் நிபுணர், 2016-ல் மறைந்த முதல்வருக்கு இராமச்சந்திரா மருத்துவமனையில் "nerve conduction study" நடத்தியதாகக் கூறினார். ஆனால், இவ்வாணையத்தின் முன்பு, இது குறித்த ஆவணமேதும் காட்டப்படவில்லை.*

***16.8.*** *C.W.17 - டாக்டர் K.S. சிவகுமார், பொது அறுவை சிகிச்சையில் M.S., R.1 - இன் மூத்த சகோதரர் சுந்தரவதனத்தின் மருமகன். அவர், 1998-க்குப் பின்னர், மறைந்த முதல்வருக்கு சிகிச்சையளித்து வந்ததாகவும், (அதாவது, C.W.17, மருத்துவர்களைக் கலந்தாலோசித்து,*

*மறைந்த முதல்வருக்கு எத்தகைய மருத்துவரைக் கொண்டு சிகிச்சையளிக்க வேண்டுமோ, அத்தகைய மருத்துவரைத் தொடர்பு கொண்டு, சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ததாகவும்) மறைந்த முதல்வருக்கு நீரிழிவு நோய், இரத்தக் கொதிப்பு மற்றும் தைராய்டு போன்ற நோய்கள் இருந்ததாக, தான் தெரிந்துகொண்டதாகவும், அதன் காரணமாக உடல் பருமன் மற்றும் வயிற்றுக் கோளாறு ஏற்பட்டு, அதனால் எரிச்சல்மிகு குடல் நோய்க்குறி (irritable bowel syndrome) ஏற்பட்டதாகவும், 2015-க்கு முன்பே மறைந்த முதல்வர் மெதுவாக நடந்தாரெனவும், வெர்டிகோ மற்றும் தலைசுற்றல் இருந்தது என்றும், சில சமயம் நடுக்கம் ஏற்பட்டதென்றும், 2015-ல் ஸ்கேன் செய்து பார்த்தபோது, சர்க்கரை நோய் காரணமாக காலில் சர்க்கரை கட்டி இருப்பது தெரியவந்ததாகவும், பொதுவாக, மறைந்த முதல்வர் உணவுக் கட்டுப்பாடை கடைபிடிக்கமாட்டார் என்றும், அவர் C.W.17-ஐ தொலைபேசியில் அழைத்து, தனக்குள்ள நோய் குறித்துத் தெரிவிப்பார் என்றும், தான் அதற்குரிய சிறப்பு நிபுணர்களின் கருத்துக்களையும், மருந்துகளையும் வாட்ஸ்ஆப் மூலமாகப் பெற்றோ, வாங்கியோ மறைந்த முதல்வருக்கு வழங்குவார் என்றும், மறைந்த முதல்வருக்கு கை மற்றும் உடலின் சில பாகங்களில் ஏற்பட்ட தோல் வியாதிக்காக, தோல் நோய் மருத்துவர்களைத் தொடர்புகொண்டு, பரிந்துரைக்கும் மருந்துகளை எடுத்துக்கொண்டார் என்றும், மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு, அப்போலோ*

*மருத்துவர்கள் போயஸ் கார்டனுக்கு வந்து ECG மற்றும் ECHO எடுத்ததில், அவை சரியாகவே இருந்தது என்றும் கூறினார். C.W.17-ஐப் பொறுத்தவரை, "அம்மா அவர்களுக்கு சிறுநீரகக் கோளாறு ஏதுமில்லை; அவரது இரத்தக் கொதிப்பும் சதாரணமாகதான் இருந்தது" என்றும், அப்போலோ மருத்துவமனையை அவரே தனது சொந்த விருப்பத்தில் தேர்ந்தெடுத்தார் என்றும், அவர் 2014-ஆம் ஆண்டு பெங்களூரு சிறையிலிருந்து பிணையில் வந்ததிலிருந்து அவர் யாரையும் பார்க்கவில்லை என்றும், அப்போது அவர் மிகுந்த மன உளைச்சலுடன் இருந்தார் என்றும், இரத்தக் கொதிப்பும் ஏறக்குறைய சரியாகவே இருந்தது என்றும் கூறினார்.*

***16.9.*** *மேற்கூறிய சாட்சியங்களிலிருந்து அறிவதாவது:-*

*மறைந்த முதல்வருக்கு நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இல்லாததால், பல மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்றுள்ளார். C.W.17 - டாக்டர் K.S. சிவகுமார் மற்றும் மேற்சொன்ன மற்ற மருத்துவர்களின் சாட்சியங்களிலிருந்து, மறைந்த முதல்வருக்கு உடல் உபாதைகள் எப்பொழுது ஏற்பட்டாலும் அவர் அதை C.W.17-க்குத் தெரிவித்து, அவர் மற்ற சிறப்பு மருத்துவர்களைத் தொடர்பு கொண்டு, அவர்கள் பரிந்துரைக்கும் மருந்துச்சீட்டு அவருக்கு அளிக்கப்பட்டது. இவ்வாறு, மறைந்த முதல்வர், தனது பல்வேறு நோய்களுக்கான மருந்துகளை எடுத்துக்கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது. மறைந்த முதல்வர், 22.09.2016-க்கு மருத்துவமனையில் அனுமதிப்பதற்கு முன்பே நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம்,*

*வெர்டிகோ, தோல் வியாதி, தைராய்டு மற்றும் உடல் பருமன் போன்ற பல நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தார் என்பதும் அதற்குரிய சிகிச்சைகள் எடுத்துக்கொண்டார் என்பதும் மேற்சொன்ன அளவிற்கதிமான மருத்துவ சாட்சியங்களிலிருந்து அறியப்படுகிறது, ஆனால் அவருடைய பொதுவான உடல் நிலை திருப்திகரமாக இருந்ததாகவும், அவர் அவருடைய சாதாரண வேலைகளை செய்துகொண்டிருந்தார். 20.09.2016 நாளில் இருந்து, அவருக்கு சில உபாதைகள் வர தொடங்கியது.*

***16.10.*** *மேலே விவாதிக்கப்பட்டுள்ளவைகளிலிருந்தும், மொத்த சாட்சியங்களிலிருந்தும் மறைந்த முதல்வருக்கு, டாக்டர்.சாந்தாராம் மற்றும் பிற மூத்த மருத்துவர்களால் சிகிச்சை அளிக்கப்பட்டதென்பதும், படிப்படியாக அவர்கள் R.1-ஆல் மாற்றப்பட்டனர் என்பதும் அதற்குப் பின் வந்த மருத்துவர்களான டாக்டர்.வினோதன் மற்றும் டாக்டர்.ஹரிஹரன் ஆகியோர் மறைந்த முதல்வரின் குடும்ப மருத்துவர்களாகினர் என்பதும் பின்னர், ஒரு அறுவை சிகிச்சை நிபுணரான C.W.17-டாக்டர். சிவகுமார், மறைந்த முதல்வருக்கு ஏற்பட்ட நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான மருத்துவர் அல்ல, ஆனால் அவர் மறைந்த முதல்வரின் குடும்ப மருத்துவராக மாறினார் என்பதும் தெளிவாகிறது.*

## ***17. 20.09.2016 முதல் 22.09.2016 வரையிலான நிகழ்வுகள்***

***17.1.*** *20.09.2016 - அன்று வேறு மருத்துவர்கள் இருந்த போதிலும், R.1, சபரிமலை சென்றிருந்த C.W.17-டாக்டர் K.S. சிவகுமார் அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, மறைந்த முதலமைச்சருக்கு காய்ச்சல் இருப்பதைத் தெரிவித்து, அவரது பரிந்துரையின்படி, பாராசிடாமல் மருந்து மட்டுமே வழக்கமான இடைவெளியில் வழங்கப்பட்டது. அவருக்கு உடல்நிலை சரியில்லாத போதிலும், மாநகரப் போக்குவரத்துப் பேருந்துகளைத் துவக்கி வைத்தல், மெட்ரோ இரயில் துவக்கவிழா ஆகிய அரசு விழாக்களில் பங்குபெற 21.09.2016 அன்று தலைமைச் செயலகத்திற்குச் சென்றார். இதுவே மறைந்த முதல்வர் பங்குபெற்ற இறுதி விழா என்பது குறிப்பிடத்தக்கது. அவர் ஏழு பேருந்துகளில் மூன்றை மட்டுமே துவக்கி வைத்துவிட்டு, தலைமைச்செயலகத்திற்குள் சென்று மெட்ரோ இரயில் விழாவினை காணொலிக் காட்சி வாயிலாகத் துவக்கி வைத்தார். மத்திய அமைச்சர் மாண்புமிகு M. வெங்கையா நாயுடு, விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து பச்சைக்கொடியசைத்துத் துவக்கி வைத்தார். அப்போது, C.W.15 - டாக்டர் சுதா சேஷய்யன் மற்றும் C.W.12- அப்போதைய தலைமைச் செயலாளர் ஆகியோர் மறைந்த முதல்வருடன் இருந்தனர். அவர் வீட்டிற்குத் திரும்பும் போது மக்களுக்கும், போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கும் கையசைத்து, பிரியாவிடை அளிப்பதற்கு*

*வசதியாக ஓட்டுநர் C.W.22-விடம் மெதுவாகச் செல்லும்படி பணித்துள்ளார். சிறிது தூரம் சென்றதும், தனக்கு உடல்நிலை சரியில்லை என்று தனது ஓட்டுநருக்குத் தெரிவித்ததுடன் வேகமாகவும், நேரடியாக வீட்டிற்குச் செல்லுமாறும் அறிவுறுத்தினார். தனது இல்லத்தில் காரிலிருந்து இறங்கும்போது, புடவை அவரது கால்களில் பிணைந்ததால் நடப்பதற்கு சற்று தடுமாற்றம் ஏற்பட்டு, விழும் நிலையிலிருந்து சமாளித்து வீட்டிற்குள் சென்றார். 21.09.2016 அன்று விழாக்களிலிருந்து திரும்பிய அவர், கார்டனில் வசிப்பவர்களைத் தவிர வேறு எவரையும் சந்திக்கவில்லை.*

***17.2.*** *கிடைப்பெற்ற சாட்சியத்தின் அடிப்படையிலும், C.W.144-தனிப்பாதுகாப்பு அதிகாரி திரு. S. பெருமாள்சாமி அளித்த சாட்சியத்தின் அடிப்படையிலும், மறைந்த முதல்வர் அவரது அறைக்குச் சென்ற பிறகு எவரும் அவரைப் பார்க்கவில்லை. எனினும், C.W.17, 22.09.2016 அன்று, தான், மறைந்த முதல்வரைக் காண காலை 11.00 மணிக்கு கார்டனுக்குச் சென்றதாகவும், காய்ச்சல் எதுவும் இல்லை எனத் தன்னிடம் தெரிவித்ததாகவும் கூறினார். அதன் பின்னர், C.W.17, R.2-அப்போலோ மருத்துவமனைக்குச் சென்றதாகத் தெரிவித்தார். விசாரணையில், மறைந்த முதல்வர் தனது காலை செயல்பாடுகளை முடித்துவிட்டு, சோர்வாக இருந்ததால், ஓய்வெடுக்க வீட்டிற்குத் திரும்பியதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறினார். 22.09.2016 மாலை 4.00 மணிக்கு,*

*C.W.17 போயஸ் கார்டன் சென்று, பின்னர், ஒரு அறுவை சிகிச்சையை மேற்கொள்வதற்காக R.2-க்குச் சென்றார். அவரது இல்லத்திற்குத் திரும்பும் போது, R.1 - விடமிருந்து மாலை 7.00 மணிக்கு அவருக்கு வந்த அழைப்பில், முதல்வருக்கு இருமல் மற்றும் காய்ச்சல் இருப்பதாக R.1 தெரிவித்தார். C.W.17 குளித்து, இரவு உணவு முடித்து, இரவு 08:45 மணிக்கு கார்டனுக்குத் திரும்பினார். அப்போது, மறைந்த முதல்வர் படுக்கையிலிருந்தார், அவருக்கு இருமலும், மிதமான உடல் வெப்பநிலையும் இருந்தது. C.W.17 மறைந்த முதல்வரின் கால்களைப் பிடித்துக்கொண்டு, மறைந்த முதல்வரின் உடல்நலம் குறித்து விசாரித்தார்; அவர் நலமாக இருப்பதாகக் கூறினாலும், மூச்சு விடுவதில் சற்று சிரமம் இருப்பதை* ***C.W.17*** *கவனித்து, R.2 – அப்போலோ மருத்துவமனையிலிருந்து நெபுலைசரைக் கொண்டு வருமாறு கோரினார். மறைந்த முதல்வர் C.W.17-இடம் தெரிவித்துவிட்டு கழிவறைக்குச் சென்றார். C.W.17, R.1-ஐ மறைந்த முதல்வருடன் செல்லுமாறு பணித்தார். R.1 கழிவறைக்கு வெளியே நின்று கொண்டிருந்த போது, மறைந்த முதல்வர் படுக்கைக்குத் திரும்பினார். அப்போது, அவருக்குக் கடுமையான இருமல் இருந்தது. அவர் R.1 மற்றும் C.W.17 ஆகிய இருவர் மீதும் மயக்கமுற்று விழுந்தநிலையில், அவர்கள் உதவினர். உடனே, C.W.17, டாக்டர் ப்ரீத்தா ரெட்டியின் (அப்போலோ மருத்துவமனை தலைவரின் மகள்) கணவர் திரு.விஜயகுமாரிடம் பேசி ஆம்புலன்ஸ் அனுப்பக்கோரினார்.*

***17.3.*** *தகவல் கிடைத்த பத்து நிமிடத்தில், R.2 மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு ஆம்புலன்ஸை அனுப்பியது. இதற்கிடையில், அங்கிருந்து R.1 பணிப்பெண்ணிடம் ஓட்டுநரை அழைத்து காரைத் தயார் நிலையில் வைத்திருக்குமாறு கூறினார். பணிப்பெண், C.W.31 - R.வீரபெருமாளுக்கு தகவல் தெரிவித்து, அவர் ஒரு காரைத் தயார்படுத்துகையில், பெரிய காரைக் கொண்டு வருமாறு கூற, ஆம்புலன்ஸ் கார்டனை அடைந்தது.*

***17.4.*** *உடனடியாக, பணி மருத்துவர் C.W.56 - டாக்டர் சினேகாஸ்ரீ வேணுகோபால், C.W.71 - S. அனீஷ், நர்சிங் ஸ்டாஃப் மற்றும் C.W.68 - B. சுரேஷ் குமார், ஆம்புலன்ஸ் ஓட்டுநர் ஆகியோர் மேலே வந்து, முதல்வர் மயக்கமடைந்திருந்ததைக் கண்டனர். முதலுதவி அளித்த சமயத்தில், C.W.56 - மறைந்த முதல்வருக்கு ஆக்ஸிஜன் தேவை என்பதை அறிந்து கூற, C.W.71-அனிஷ் கீழே வந்து ஆம்புலன்ஸிலிருந்து ஆக்ஸிஜன் எடுத்து மேலே வந்தார். மறைந்த முதல்வரை நாற்காலியில் அமரவைக்கும் முயற்சியில், நாற்காலியிலிருந்து சரிந்ததால், ஸ்ட்ரெச்சரில் படுக்கவைக்கப்பட்டு, ஒவ்வொரு படிக்கட்டுகளாக மிகவும் கவனமாக இறக்கி ஆம்புலன்ஸில் ஏற்றினர். அதற்குள் மற்றொரு ஆம்புலன்ஸும் அங்கு வந்தது. R.1, C.W.17 மற்றும் செவிலியர் ஆகியோர் ஆம்புலன்ஸில் அவருடன் சென்று R.2-வை அடைந்தனர். C.W.17, மறைந்த முதல்வருக்கு மருத்துவ உதவி கேட்டு R.2 -விடம் தகவல் தெரிவித்தபோதிலும், எந்தவொரு சிறப்பு மருத்துவரையும்*

*அனுப்பவில்லை என்பது இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும். C.W.56, தனது சாட்சியத்தில், 22.09.2016 அன்று இரவு 10 மணிக்கு மறைந்த முதல்வர் சுயநினைவின்றி இருந்ததாகவும், மூச்சு விடுவதற்கு மிகவும் சிரமப்பட்டதாகவும், நாடித்துடிப்பு 70 ஆகவும், இதயத்துடிப்பு இருந்ததாகவும், இரத்தத்தில் ஆக்ஸிஜன் குறைவாக இருந்ததாகவும், அதனால் அவருக்கு ஐ.வி. பொருத்தப்பட்டது என்றும், அவருக்கு ஆக்ஸிஜன் அளிக்கப்பட்டது என்றும், ஸ்ட்ரெச்சரில் படுக்கவைக்கப்பட்டு, அவரைப் படிக்கட்டு வழியாக இறக்கி வந்து ஆம்புலன்ஸில் ஏற்றுவதற்கு சுமார் அரைமணி நேரமானது என்றும் C.W.56 சாட்சியமளித்துள்ளார்.*

***17.5.*** *22.09.2016 அன்று மறைந்த முதல்வருக்கு முதலுதவி செய்வதற்காக வந்த C.W.71-அனிஷ் என்பவர் மறைந்த முதல்வரை வாகனத்திற்குள் ஏற்றிய பிறகு, R.1 மற்றும் C.W.17 அதே ஆம்புலன்ஸில் அங்கிருந்து கிளம்புவதற்கு முன்னர் மற்றொரு ஆம்புலன்ஸூம் வந்தது என்றும் C.W.71 சாட்சியமளித்துள்ளார்.*

***17.6.*** *ஆம்புலன்சில், அவர்கள் மறைந்த முதல்வரை அழைத்தபோது, அவர் பதிலளிக்கவில்லை; எதுவும் பேசாமல் C.W.17-இன் கைகளை இறுகப் பிடித்துக்கொண்டார் என்று C.W.17 - டாக்டர் K.S. சிவகுமார் கூறினார். C.W.17-இடம் மறைந்த முதல்வர் பேசவில்லை என்பதற்கு இதுவே உறுதியான சான்றாகும். ஆம்புலன்ஸ் எட்டு நிமிடங்களில் மருத்துவமனையை அடைந்து, அவசர சிகிச்சை அறைக்குள் கொண்டு செல்லப்பட்டார். இந்நிகழ்வு வரையிலான அறிக்கை*

*மருத்துவமனையால் தயார் செய்யப்பட்டு, உயரதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. அப்போது, மறைந்த முதல்வரின் சர்க்கரை அளவு மிக அதிகமாகவும், ஆக்ஸிஜன் குறைவாகவும் காணப்பட்டது. மறைந்த முதல்வர் R.2 – அப்போலோ மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பின்னரே, அங்கு கூடியிருந்த மருத்துவக் குழுவினரால், உடனடியாக, அவசர கால சிகிச்சை அளிக்கப்பட்டது; இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, I.V பொருத்தப்பட்டது; ECG மற்றும் ECHO எடுக்கப்பட்டது. பின்னர், மறைந்த முதல்வருக்கு கத்தீட்டர் பொருத்துகையில் அவர் வலியால் கையை அசைத்தார்; ஆனால் எதுவும் பேசவில்லை.*

***17.7.*** *C.W.113 - டாக்டர். சுமணா மனோகர், தன் சாட்சியத்தில், 22.9.2016-அன்று இரவு மறைந்த முதல்வருக்கு அவசர சிகிச்சை அறையிலிருந்து CCU-விற்கு மாற்றப்பட்டபொழுது, வடிகுழாய் (கதீட்டர்) செலுத்த வேண்டுமென்று மருத்துவர்கள் கூறியதால் மகப்பேறு மருத்துவரான அவரை அழைத்தனர்.*

***17.8.*** *22.09.2016 அன்று இரவு 10.25 மணிக்கு, C.W.56 – டாக்டர். சினேகாஸ்ரீ வேணுகோபால் நோயாளியை முதலில் அவசர சிகிச்சை அறைக்கு அழைத்துச்சென்றார். ஆரம்ப நிலையில் நோயாளியைப் பற்றிய தகவல்களை பதிவு செய்யும் பதிவேட்டில் எழுதிய குறிப்புகள் பக்கம். 7 கோப்பு எண்.3 மற்றும் 4-ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:-*

*"H/O high grade fever intermittent since 3 days.*

*Rashes on the body - diagnosed. As atopic dermatitis with steroids since 2 days.*

*Took Paracetamol 30 minutes before.*

*Sudden onset breathing difficulty and drowsiness.*

*Diagnosed the issues CAP Vs Acute LV failure. Cardiology consult."*

***17.9.*** *கோப்பு எண்கள் 3 & 4-இல் (பக்கம் எண்.40 க்குப் பின்னர்) பக்கம் எண் 1 (வட்டமிடப்பட்டுள்ளது), அதில் 22.09.2016 அன்று டாக்டர். ரேமண்ட் பின்வருமாறு எழுதியுள்ளார்.*

*"giddiness, drowsiness known hypothyroid, diabetic, and hypertensive with h/s/o atopy – on steroid, Echo report LV mild MR, mild AR. ECG report."*

***17.10.*** *அப்போலோ மருத்துவமனை கோப்பு எண். 3 மற்றும் 4-ன் படி, 22.9.2016 அன்று இரவு 10.00 மணிக்கு மறைந்த முதல்வரின் இல்லத்திலிருந்து தொலைபேசி அழைப்பு பெறப்பட்டதாகவும், அப்போலோ மருத்துவமனையிலிருந்து இரவு 10.01 மணிக்கு ஆம்புலன்ஸ் வேன் அனுப்பப்பட்டதாகவும், இரவு 10.06 மணிக்கு போயஸ் கார்டனுக்கு சென்றடைந்ததாகவும், இரவு 10.15 மணிக்கு போயஸ் கார்டனிலிருந்து புறப்பட்டு, இரவு 10.25 மணிக்கு அப்போலோ மருத்துவமனையை சென்றடைந்ததாகவும், இதுசம்பந்தமான குறிப்புகள் டிரிப் ஷீட் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதே அறிக்கையில், மூச்சு விடுவதில் திடீர் சிரமம், மயக்கம், மூன்று*

*நாட்களாக காய்ச்சல் மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகியவையும் குறிப்பிடப்பட்டிருந்தன.*

***17.11.*** *கார்டனில் பணியிலிருந்த நபர், மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது குறித்து தலைமைச் செயலாளர் C.W.12 மற்றும் பிறருக்குத் தகவல் தெரிவித்தார். C.W.12 மற்றும் C.W.18-திரு. S.S.பூங்குன்றன் ஆகியோர் R.2-க்கு விரைந்தனர். மறைந்த முதல்வர் அவசர சிகிச்சையறையிலிருந்து ஸ்ட்ரெச்சரில் வெளியே வருகையில், C.W.17-இடம் தான் எங்கிருப்பதாகக் கேட்டதற்கு, C.W.12 பதிலளித்தார். அதற்கு மறைந்த முதல்வர் நகைச்சுவையாக, தனக்கு சுயநினைவிருந்திருப்பின் தன்னை அவர்களால் மருத்துவமனைக்கு அழைத்து வந்திருக்க முடிந்திருக்குமா எனக் கேட்டார்.*

***17.12.*** *C.W.101-டாக்டர் I.சத்தியமூர்த்தி, இதயவியல் நிபுணர், தனது சாட்சியத்தில், 22.9.2016 அன்று இரவு 10.15 மணிக்கு, மறைந்த முதல்வருக்கு வலது முட்டிக்கு கீழ் வீக்கம் இருந்ததுடன் அவர்களுக்கு மூச்சு விடுவதில் சிரமமும், அவருடைய இரத்தத்தில் ஆக்ஸிஜனின் அளவு மிகவும் குறைவாகவும் இருந்தது. அவர்களைப் பரிசோதித்தபோது, இதயத்தின் இடப்பக்கம் இரத்தக் கசிவு, வெஜிடேசன், தொற்று இருப்பது கண்டறியப்பட்டது எனத் தெரிவித்தார். (C.W.101-இன் சாட்சியம் – பக்க எண். 2, கடைசி 4 வரிகள்).*

***17.13.*** *C.W.104 - டாக்டர் ரேமண்ட் டோமினிக் சேவியோ, தீவிர சிகிச்சை மருத்துவர், தனது சாட்சியத்தில், 22.9.2016 அன்று இரவு 10.25 மணிக்கு, அவர் அவசர சிகிச்சை அறைக்கு வந்து, மறைந்த முதல்வருக்கு 30 நிமிடங்கள் முதலுதவி அளித்தார் என்றும், பிறகு தனது பொறுப்பில் இரண்டாவது தளத்திற்கு மறைந்த முதல்வரைக் கொண்டு செல்கையில், ஸ்ட்ரெச்சரில் அவர்களுக்கு நினைவு வந்தது என்றும் தெரிவித்தார். C.W.120 – டாக்டர். இராம் கோபாலகிருஷ்ணனுடன் கலந்தாலோசித்து, மறைந்த முதல்வருக்கு இதயத்தில் இதயமுடுக்கி (பேஸ்மேக்கரை) காத்திருப்பில் (ஸ்டேண்ட்பை) ஆக வைக்கப்பட்டது என்றும், செவிலியர்களின் கூற்றுப்படி, மறைந்த முதல்வருக்கு தடிப்புகள் கைகளில் ஆங்காங்கேயும், இடுப்புக்கீழே பிட்டத்தில் அதிகமாக இருந்ததாகவும், டயஸ்ட்டாலிக் ஹார்ட் பெயிலியர் இருப்பதும், ஆஸ்துமாவும் மூச்சுகுழாய் அழற்சியும், எரிச்சலுற்ற குடல் நோய்குறியும் (இரிடபுள் பவுல் சின்ட்ரோம்) (பக்க எண்.5, 3-6 வரிகள்) இருப்பதும் கண்டறியப்பட்டது என்றும், தொற்றிற்கு 22.09.2016 அன்றிலிருந்தே மருந்தும் வழங்கப்பட்டது என்றும், 23.9.2016 இரத்தப் பரிசோதனையில் "endococcus" என்ற பாக்டீரியா தொற்று கண்டறியப்பட்டது என்றும், நுரையீரலில் திரவ சேகரிப்பு இருந்தாவும், கதீட்டர் மூலமாக வெளியேற்றப்பட்டது என்றும், முதுகுத்தண்டு எலும்பு சற்று பலவீனமாகவும், கால்களில் உணர்வு*

*சற்று குறைவாக இருந்ததால் நடப்பதற்கு சிரமப்பட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.*

***17.14.*** *C.W.90 - டாக்டர் சாய்சதீஷ், மருத்துவர், தனது சாட்சியத்தில், 22.9.2016-அன்று இரவு 11.00 மணியிலிருந்து மறுநாள் காலை 11.00 மணிக்குள் மூன்று முறை சிகிச்சை நிமித்தமாக மறைந்த முதல்வரைப் பார்த்தார் என்றும், 22.9.2016 இரவு 10.30 மணிக்கு மருத்துவமனையில் பணியிலிருந்தபோது, அழைப்பின் பேரில் அவசர சிகிச்சை அறைக்குச் சென்று பாதி நினைவில், (semi- conscious) மூச்சு விடுவதற்கு சிரமப்பட்ட மறைந்த முதல்வரைப் பார்த்தார் என்றும், பரிசோத்தித்து, ECHO எடுத்து, மறைந்த முதல்வரின் கேஸ் ஹிஸ்டரியும் தெரிந்து கொண்ட பிறகு, மறைந்த முதல்வரின் இதய செயல்பாடு 60 சதவீதம் என்பதாகவும், தொற்று இருப்பதாகவும், அவர் செய்த பிரத்யேக இரத்தப் பரிசோதனையிலிருந்தும் அவருக்கு மாரடைப்பு இல்லையென்று முடிவு செய்து, இதயம் தொடர்பான நோயாகத் தெரியவில்லை என்றும் எழுதப்பட்டிருந்தது. அதிகாலை 02.00 மணிவரை, அந்த அறையில் அவரும், மற்ற மருத்துவர்களும் இருந்தனர் என்றும், அவருடைய சர்க்கரை அளவினைக் குறைக்கும்படி ஆலோசனை வழங்கி, காலை 11.00 மணிக்கு ICU-விற்கு வந்து மறைந்த முதல்வரைப் பார்த்தார் என்றும் தெரிவித்தார்.*

***17.15.*** *C.W.58 - ஜெய் ஆனந்த், C.W.36 – டாக்டர். V. திவாகரனின் மகன், தனது சாட்சியத்தில், 22.9.2016 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நள்ளிரவு கண்ணாடிக் கதவு வழியாக அவர்*

செவிலியர்களுடன் பேசிக்கொண்டிருந்ததை தான் பார்த்ததாகக் கூறினார்.

***17.16.*** *C.W.26 - M. ஐயப்பன், மறைந்த முதல்வரின் ஓட்டுநர், அவரது சாட்சியத்தில், 22.9.2016 அன்று இரவு 10.35 மணிக்கு மறைந்த முதல்வர் CCU அறையிலிருந்தபோது C.W.17 – இடம் பேசினார் என்றும், அந்த அறைக்குள் C.W.17 மற்றும் C.W.12 தலைமைச் செயலாளர் ஆகியோர் இருந்தனர் என்றும் கூறினார்.*

***17.17. C.W.****113 டாக்டர் சுமணா மனோகர் - மகப்பேறு மருத்துவர், மறைந்த முதல்வரின் பிறப்புறுப்பில் நோய்தொற்றினைக் கண்டறிந்து அதற்கு சிகிச்சையும் அளித்தார். அவர் மறைந்த முதல்வருக்கு 23.9.2016-லிருந்து 05.10.2016-வரை நாள்தோறும் காலையில் வெளிப்புற இன்பெக்ஷனுக்கான டிரஸ்ஸிங் செய்துள்ளார். மறைந்த முதல்வருக்கு கதீட்டர் மாற்றுவதற்காக 26.10.2016-அன்று மீண்டும் சந்தித்துள்ளார். பின்னர், மறைந்த முதல்வர் சிறப்பு வார்டுக்கு 19.11.2016 அன்று மாற்றப்பட்டார். மறைந்த முதல்வருக்கு பிட்டத்திலும் பிறப்புறுப்பிலும் தடிப்புகள் (ரேஷஸ்) இருந்தது. மறைந்த முதல்வருக்கு எரிச்சலுற்ற குடல் நோய்குறியும் (இரிடபுள் பவுல் சின்ட்ரோம்) மற்றும் நீண்ட நாட்கள் டயப்பர் அணிந்ததால் தொற்று ஏற்பட்டிருந்தது ஆனால் C.W. 113 இதனை யாரிடமும் கூறவில்லை. இரத்த பரிசோதனையில் ”enterococcus” என்ற கிருமி இருப்பது தெரிய வந்தது. மறைந்த முதல்வர் அவர்களின் இந்த சிகிச்சை குறித்து இரகசியம் பாதுகாக்கப்பட வேண்டுமென*

*C.W.113 கருதினார். இரண்டு நாள் சிகிச்சைக்குப் பின்னர் மறைந்த முதல்வர் தனக்கு இது எதனால் ஏற்பட்டது, எவ்வளவு நாட்களாக உள்ளதென்று தெரியாது என கூறினார்.*

***17.18.*** *C.W.33-A. இராமலிங்கம்**,** IAS, தனது சாட்சியத்தில், லண்டன் டாக்டர், டாக்டர். ரிச்சர்டு பீலே தொற்று நோயை கண்டறிந்து, அது பற்றி தெரிவித்தார் என கூறினார். C.W.53-டாக்டர் நளினி பிரபு, தனது சாட்சியத்தில் C.W.113 - டாக்டர் சுமணா மனோகர் மேற்சொன்ன நோய்த் தொற்றுக்கு சிகிச்சையளித்து மறைந்த முதல்வர் குணமடைந்தார் என்று கூறினார். C.W.83-டாக்டர் செந்தில்குமார், தனது சாட்சியத்தில், மறைந்த முதல்வருக்கு 'Enterococcus faecalis" தொற்று இருந்தது என்றும், அதைப்பற்றி தான் யாரிடமும் கூறவில்லை என்று தனது குறுக்கு விசாரணையின்போது கூறியுள்ளார். C.W.98 - டாக்டர் V. இராமசுப்பிரமணியன்**,** 22.09.2016 அன்று அவரளித்த சாட்சியத்தில் (பக்கம் 2, 11-13ஆம் வரிகள்) மறைந்த முதல்வர் அவர்களுக்கு நிமோனியா அல்லது சிறுநீரகக் குழாயில் தொற்று இருப்பதாக கருதப்பட்டது. இரத்தப் பரிசோதனையில், "enterococcus faecalis" கண்டறியப்பட்டது. இதயத்தில் நோய்த்தொற்று ஏற்பட அதுவே காரணமாக இருக்கக்கூடும் என்று சாட்சியமளித்துள்ளார்.* ***C.W.99-****டாக்டர்* ***Y.****விஜயசந்திர ரெட்டி**,** தன் சாட்சியத்தில், மறைந்த முதல்வர் அவர்களுக்கு பரிசோதனை செய்ததில் பிறப்புறுப்பு, சிறுநீர், (கல்சர் பாசிடிவ் ஆக இருந்தது), இதயத்தில் வால்வில் இரண்டு இடங்களிலும் (வெஜிடேசன்),*

நுரையீரலிலும் இரத்தத்திலும் நோய்த்தொற்று இருந்தது கண்டறியப்பட்டது. மறைந்த முதல்வருக்கு உணவுக்குழாய் (குடல்) வழியாக அந்த நோய்த்தொற்று இரத்தத்தில் கலந்திருக்கலாமெனக் கருதப்பட்டதாகக் கூறினார். **C.W.102-**டாக்டர் ரமேஷ்வெங்கட்ராமன், தனது சாட்சியத்தில், *"enterococcus faecalis"* என்ற பாக்டீரியா மலத்திலும் இரத்தத்திலும் இருந்தது. மேலும், இது டயபரால் உண்டாகியிருக்கலாம் எனவும் தெரிவித்தார். **C.W.104-**டாக்டர் ரேமண்ட் டோமினிக் சேவியோ**,** தனது சாட்சியத்தில் மறைந்த முதல்வர் அவர்களுக்கு இடுப்பில் தடிப்புகள் (ரேஷஸ்) இருந்தது என்றும், உடலிலிருந்து பரிசோதனைக்காக மாதிரி எடுக்கப்பட்டது என்றும் பாக்டீரியா டயபரினால் ஊடுருவ வாய்ப்புகள் அதிகம் என்றும் குறுக்கு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளார். **C.W.105 -** டாக்டர் பாலபிரகாஷ் தனது சாட்சியத்தில் 9-ஆம் பக்கத்தில், மறைந்த முதல்வர் அவர்களுக்கு முன்பு கூறியுள்ள தொற்றைத் தவிர, பிறப்புறுப்பில் *"Vaginal Candidiasis"* தொற்று இருந்தது என கூறினார்.

**17.19.** C.W.12 - டாக்டர். P. இராம மோகன ராவ், அப்போதைய தலைமைச் செயலாளர், தனது சாட்சியத்தில் மறைந்த முதல்வர் 22.9.2016 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகு, அவர் சுயநினைவு பெற்றார் எனவும், அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது அனைவருக்கும் தெரியும் என்பதால் பல்வேறு விதமான வதந்திகள் ஏற்படாமல் இருக்க, **R.2 -** மருத்துவமனையுடனும் C.W.17-உடனும் மறைந்த முதல்வரிடமும்

கலந்தாலோசனை செய்து, 23.9.2016 அன்று மறைந்த முதல்வரின் அனுமதியுடனும், அவருடைய அறிவுறுத்ததலின் பேரிலும், ஒரு செய்தி அறிக்கை வெளியிடப்பட்டது என்றும் கூறியுள்ளார்.

***17.20.*** இதன் மூலம் தெரிவது யாதெனில் மூன்று நாட்களாக உடல் நிலை சரியில்லாமலிருந்த மறைந்த முதல்வர், 22.09.2022 அன்று தனது இல்லத்தில் மயக்கமடைந்து சுயநினைவில்லாத நிலையில் ஆம்புலன்சில் அழைத்துச்செல்லப்பட்டு R.2 மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு முதலுதவியளிக்கப்பட்டு CCU அறைக்குச் சென்றபிறகு சுயநினைவிற்கு வந்தார்.

(A) அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மூன்று நாட்களுக்கு முன்பு அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோதிலும், பாராசிட்டாமல் மட்டுமே அளிக்கப்பட்டது என்பது சாட்சியத்திலிருந்து தெளிவாகிறது. C.W.17-டாக்டர் சிவகுமார் வந்த பிறகும், காய்ச்சல் ஏன் தொடர்கிறது என்பதை அவரால் கண்டறிய முடியவில்லை, அவரால் தகுந்த மருத்துவரைப் பார்க்கவோ, காய்ச்சலுக்கான காரணத்தைக் கண்டறியவோ எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

(B) அதிர்ஷ்டவசமாக, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகு, அவர் சுயநினைவற்ற நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், R.2 மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட உடனேயே, செப்சிஸ் இருப்பதைக் கண்டறிந்து, அவர்கள் சிகிச்சையைத் தொடங்கினர், பின்னர் அவர்கள் தொற்றுநோயைக் கண்டறிந்தனர்.

## <u>18. 23.09.2016 முதல் மருத்துவர்களின் சாட்சியங்கள் மற்றும் மருத்துவமனை பதிவுருக்கள்</u>

***18.1.*** *C.W.107 - டாக்டர் R. நரசிம்மன், மருத்துவர், தனது சாட்சியத்தில், 23.9.2016 அன்று அதிகாலை 4 மணிக்கும், பிறகு காலை 10 மணிக்கும் மறைந்த முதல்வரைப் பார்த்ததாக தெரிவித்தார். மறைந்த முதல்வர் அவரை அமரக்கூறி 30 நிமிடங்கள் பேசியதாகவும், அப்போது மறைந்த முதல்வர் அவர்கள் எந்தெந்த உணவுகளை தவிர்க்கவேண்டுமென்பது பற்றி அறிவுரை கூறியதாகவும், அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போதே, மறைந்த முதல்வர் தன்னிடம் "Private Life of Chairman Mao", என்ற புத்தகத்தை படித்திருக்கிறீர்களா என்று கேட்டதாகவும், அந்த புத்தகத்திலிருந்து தலைமை (Leadership) பண்புகளைக் கற்கலாம் என்றும் அவரையும் படிக்குமாறு அறிவுறுத்தியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.*

***18.2.*** *C.W.80 - டாக்டர் V.L. அருள்செல்வன், நரம்பியல் நிபுணர், அவரது சாட்சியத்தில், 23.9.2016 அன்று மதியம் 1.00 மணிக்கு மறைந்த முதல்வரின் வலது கையில் நடுக்கம் ஏற்பட்டது என்றும், இது மூளையில் ஏற்பட்ட அதிர்வினால் இருக்கும் என்றும், இது பொதுவாக நீரிழிவு நோயாலும், இரத்தக்கொதிப்பினாலும் ஏற்படக்கூடும் என்றும் கூறினார்". இதனால் மறைந்த முதல்வருக்கு பெராலஸிஸ் ஏற்பட்டுவிடும்" என்று C.W.80 கருதினார். ஆனால், அதுபோன்ற அறிகுறி எதுவும் மறைந்த முதல்வருக்கு ஏற்படவில்லை*

*என்றும், இருப்பினும் மூன்று முறை அவருக்கு வலிப்பு வந்தது என்றும், இது ஒவ்வொரு முறையும் இரண்டு கைகளிலும் மாறி வந்தது என்றும், ஒருமுறை 22.10.2016- அன்று அவரது முகத்தில் சிறிதளவே ஏற்பட்டதென்பதால் அது மற்றவர்களால் எளிதில் பார்த்துப் புரிந்துகொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.*

***18.3.*** *C.W.20 -* ***K.N.*** *வெங்கடரமணன், IAS, தனது சாட்சியத்தில், 23.9.2016 அன்று காலை 11.00 மணியளவில் மறைந்த முதல்வர் அவருடைய செயலாளர்களையும், C.W.12-அப்போதைய தலைமைச் செயலாளரையும் அழைத்து அவருக்கு உடல்நிலை சரியில்லாததால், மெடிக்கல் ஆப்சர்வேஷனில் நான்கைந்து நாட்கள் இருக்க வேண்டுமெனவும், அதற்குப்பிறகு அவர் குணமாவார் என்று கூறியுள்ளார்.* ***C.W.35-*** *சாந்தா ஷீலா நாயர், தனது சாட்சியத்தில், 23.9.2016 அன்று நண்பகல் 12.00 மணிக்கு மறைந்த முதல்வர் தன்னிடம் பேசியபோது, அவருடைய உடல்நலத்தைப் பற்றி தான் கேட்டதாகக் கூறினார்.* ***C.W.60-****டாக்டர்* ***M.****ரமா தேவி, தனது சாட்சியத்தில், 23.9.2016 அன்று மறைந்த முதல்வர் அவர்கள் பெரும்பாலும் மயக்கநிலையில் (செடேஷனில்) தூக்கத்திலிருந்ததாக கூறியுள்ளார்.* ***C.W.136-****அப்போதைய சுகாதாரத்துறைச் செயலாளர் தனது சாட்சியத்தில், 23.9.2016 அன்று அதிகாலை 5.00 மணிக்கு CCU வார்டில் அறை எண்.2008-ல் மறைந்த முதல்வர் இருப்பது தெரிந்தது என்றும்,* ***R.1,*** *இளவரசி மற்றும் குடும்பத்தினர், மறைந்த முதல்வரின் செயலாளர்கள், C.W.12 ஆகியோரும் சில அமைச்சர்களும் அப்போது*

*அங்கிருந்தார்கள் என்றும், அப்போது தான் விசாரிக்கையில், மறைந்த முதல்வரின் உடல் நிலையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அப்போலோ மருத்துவர்கள் கூறியதாகத் தெரிவித்தார்.* ***C.W.147-*** *டாக்டர்* ***M.*** *தம்பிதுரை (முன்னாள் மக்களவைத் தலைவர்) தனது சாட்சியத்தில், 23.9.2016 அன்று 5.00 மணிக்கு அவர் மறைந்த முதல்வரை அவசர சிகிச்சைப் பிரிவில் பார்க்க முற்பட்டதாகவும், ஆனால் மறைந்த முதல்வர் ஓய்வெடுத்துக்கொண்டிருந்ததால் அவரால் பார்க்க இயலவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.*

***18.4.*** *C.W.102-டாக்டர்.ரமேஷ்வெங்கட்ராமன், பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:-*

> *"On 24.09.2016 shock improving at 10:30 AM. Had lunch at 04:30 PM. endorsement made. AV Block at 04:30 PM (Page No.18 File No.3 & 4).*
> *24.09.2016 sugar 220 mg/dl. AV Block removal by Cardiologist at 03:00 PM. Patient does not want HFNC. 24.09.2016, 07:30 PM. Dr. Raymond made endorsement. Had fruit salad prior to this."*

***18.5.*** *C.W.60 - டாக்டர் ரமா தேவி, மயக்க மருந்து நிபுணர், 23.9.2016 அன்று அவர் மறைந்த முதல்வரின் அறையில் பணியமர்த்தப்பட்டு, பெரும்பாலும் அவரது வார்டிலேயே இருந்ததாகத் தெரிவித்தார். 23.9.2016 அன்று, பணிக்கு வந்தபோது, அவருக்கு LV failure, lung injury ஏற்பட்டு temporary pacemaker பொருத்தப்பட்டிருந்ததைக் கண்டதாகவும், அப்போது சுயநினைவோடு பேசினார் என்றும், உறங்குவதற்கும், வலியைக் குறைப்பதற்கும், அவருக்கு மருந்துகள்*

*வழங்கப்பட்டன என்றும் தெரிவித்தார். அவரைத் தவிர, மற்றொரு மூத்த மருத்துவரும் ICU-வில் இருந்தார். அவர் மறைந்த முதல்வரை முதலில் பார்த்தபோது அவர் Highly Risk Patient என குறிப்பிட்டிருந்தார், அதன்பின்னர் அவர் stable ஆனார்.*

***18.6.*** C.W.135 – *டாக்டர்.* L. F. *ஸ்ரீதர், மூத்த மருத்துவர் மற்றும் இதய அறுவை சிகிச்சை நிபுணர், தனது சாட்சியத்தில்* 26.9.2016-*அன்று* C.W.99 *டாக்டர்.*Y.*விஜயசந்திர ரெட்டி அவர்களுடன் சென்று மறைந்த முதல்வரைப் பார்த்தார்.* ECHO - *வைக் பார்த்தபோது, அவருக்கு* M.R *மைல்ட்- ஆக இருந்ததாகத் தெரிவித்தனர்.* **C.W.135** *மறைந்த முதல்வரின்* ECHO, X-ray -*வைப் பார்த்ததில் இரண்டு புறமும் வெள்ளையாக* (white) *நீர்கோர்த்து இருந்ததைக் கண்டார். மறைந்த முதல்வர் செப்டிக் ஷாக்கில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக* **C.W.135-***க்குத் தெரியவந்தது. அவர் மறைந்த முதல்வரை மருத்துவ ரீதியாகப் பரிசோதிக்கவில்லை என்றும்,* ECHO *மற்றும்* X-ray-*வைப் பார்த்து, மறைந்த முதல்வருக்கு இருந்த உடனே* M.R *ஏற்படவும் மற்றும் நுரையீரலில் நீர்கோர்த்ருக்கிறது என்றும், ஆனால் எவ்வளவு காலமாக இருந்ததென்று கூற முடியாது என்றும்,* ECHO *பார்த்ததில் வெஜிடேசன் தெரிந்ததாகவும், அது செப்சீஸ் காரணமாக*

ஏற்பட்டிருக்கலாம் என்றும், அப்போது பெர்பொரேசனும் மிகவும் சிறியதாக இருந்தது என்றும், அன்று மறைந்த முதல்வர் மூச்சு விடுவதில் கூட அதிகம் சிரமமில்லாமல் இருந்தார்கள் என்றும், B.P.-யும் நார்மலாக இருந்தது என்றும், மறைந்த முதல்வருக்கு ஒவ்வொரு வியாதிக்கும் மருந்துகள் அளித்தனால், அவர் நிலையாக (ஸ்டேபிள்) - ஆக இருந்தார் என்றும், மறைந்த முதல்வருக்கு இருந்த மற்ற உடல் உபாதைகளினால் இதயத்தின் வால்வில் பெர்பொரேசன் இருந்ததாலும், அவர் ஆபத்தான நிலையில் இருந்தாலும், அவர் நிலையாக (ஸ்டேபிள்) – ஆகவே இருந்தார் என்றும் கூறினார்.

*18.7.* மறைந்த முதல்வர் சுவாச நோய்த்தொற்றுக்கு உள்ளானதால், சில சமயங்களில் மூச்சு விடும்போது சீழ்க்கை (விசிலடிக்கும்) சத்தத்தை உணர்வதாக மருத்துவரிடம் தெரிவித்தார். அப்போது, C.W.107 சத்தத்தை பதிவுசெய்யலாம் எனக் கூற, பின்னர், C.W.17 இதைப் பதிவு செய்ய முயன்றபோது, அவரால் அதைச் சரியாகச் செய்ய முடியாததால், தியேட்டரில் முதல் வரிசையில் அமர்ந்திருப்பவரின் விசில் சத்தம் கேட்பது போலுள்ளது என அவர் C.W.17-இடம் தெரிவித்தார். (27.9.2016 அன்று டாக்டர் ரமேஷ் வெங்கடராமன் பணியில் இருந்தார், ஆடியோ எதுவும்

எடுக்கப்படவில்லை.) ஊசி மற்றும் மருந்துகளையும் அளித்த செவிலியர்களால் CCU சார்ட் நிரப்பப்பட்டது.

## ***19. அப்போலோவின் கோப்பு எண்.3 மற்றும் 4-ல் 22.09.2016 முதல் 27.09.2016 வரை உள்ள சிகிச்சையின் விவரங்கள்***

***22-09-2016- தொடக்கம்***

*On arrival patient drowsy with breathing difficulty, cyanosed, oxygen saturation - 45% in room air improved with NIV CPAP. Patient known case of Diabetes, systemic hypertension, hypothyroid on treatment, recent atopic dermatitis on steroid, H/o intermittent high grade fever - 2to 3 days, sudden onset of weakness following micturition.*

*BP- 140/100mmHg, RR -40/min ECG - PR prolonged. Trop T - negative. blood sugar - 526mg% ECHO - Mild MR, NO RWMA, mild AR, moderate PAH, mild TR, EF -67%*

*DOCTORS :Snehasri, YVC, VRS,Raymond, Sai Sathish, Narasimhan, Rajeev.*

*TREATMENT GIVEN*

*NRM -15litres of O2. Inj. Magnex, Azithromycin, Lasix. NIV BIPAP, Nebulisation. Left radial arterial line, Right IJV venous access, catheterised for urine. Temporary pacemaker was inserted by YVC.*

***23-09-2016***

*Alert, oriented, hemodynamic satisfactory.*

*Blood culture - Enterococci*

*ECHO - no vegetation on any of the valve*

***24-09-2016***

*Alert, oriented, On NIV USG done - mild hepatomegaly.*

*Dr. RV/RSK - Unable to examine as she prefers only female physicians. Examination was based on other female physician examination. Advised CT abdomen and pelvis with contrast, TEE. Not done as patient denied consent for the same.*

*Enterococcus sensitive to Ampicillin.*

*At 7.30pm, had mild retrosternal discomfort - not amounting to angina.*

*CT abdomen, chest and temporal bones - within normal limits*

***25-09-2016***

*Conscious, oriented on NIV. Shifted to CT room for CT abdomen, chest, temporal bone*

***26-09-2016***

*Patient was restless overnight. On NIV.*

*Complains of subjective feeling of chest discomfort.*

*ECG ordered - but patient refused.*

*Foley catheter changed.*

*TTE done - With suspicion of vegetation on AML side. Increase in MR compared to previous study.*

***27-09-2016***

*Conscious, oriented on NIV. Cough with wheeze. Nebulisation given."*

***19.1.*** *C.W.120 -* டாக்டர் ராம் கோபாலகிருஷ்ணன், தொற்று நோய் மருத்துவர், *24.09.2016* அன்று மறைந்த முதல்வரைப் பார்த்து

*எண்டோகார்டிடிஸ் நோய்க்கு சிகிச்சை அளித்தார். அவர் இதயத்தில் 14 மி.மீ. அளவுள்ள வெஜிடேசனால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. அறுவை சிகிச்சைக்கு அறிகுறியான Valve perforation and pulmonary oedema பற்றி அவர் 28.09.2016 அன்று கோப்பு எண் 5, பக்கம் எண் 47-இல் குறிப்பிட்டிருந்தார்.*

> *"It was diagnosed that there was vegetation measuring 14 mm in size in the heart of Amma, but that infection may have occurred a few days before it reached the heart."*

***19.2.*** *அவர் வெஜிடேசன் மற்றும் அதன் அளவைக் கண்டறிந்து, 28.9.2016 அன்று காலையிலேயே கோப்பு எண். 5, பக்கம் எண். 47 இல், வால்வு அறுவை சிகிச்சையை விரைந்து உரிய நேரத்தில் மேற்கொள்ள பரிந்துரைக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்.*

***19.3.*** *பல்வேறு மருத்துவர்களின் சான்றுகள் மற்றும் மருத்துவப் பதிவுகளிலிருந்து, மறைந்த முதல்வர் மயக்க நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அவசர சிகிச்சைப் பிரிவிலிருந்து வெளிவந்தபோது சுயநினைவடைந்தார். அவர்கள் அவரது நோய்த்தொற்றுகளுக்கு சிகிச்சையளித்து அதற்கான காரணங்களைக் கண்டறிந்தனர். அவர்கள் சிகிச்சையளித்து, அவரை வெற்றிகரமாக அனுமதித்த பத்து நாட்களில் குணமடையச் செய்தனர்.*

## *20. மறைந்த முதல்வருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையில் R.1 மற்றும் R.2-ன் பங்கு*

***20.1.*** *மேலே கூறப்பட்ட தலைப்பு குறித்து காண்பதற்குமுன், கடந்த பல ஆண்டுகளாக R.1 மட்டும் மறைந்த முதல்வருடன் இருந்தார் என்பதைக் குறிப்பிடுவது அவசியமாகும். 22.9.2016 அன்று அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது, R.1 அவர் அருகில் இருந்தார். R.2-மருத்துவமனைகளுக்கு மறைந்த முதல்வரை அவசரமாக அழைத்துச் சென்றார். மறைந்த முதல்வர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற அறைக்கு சசிகலா மட்டுமே அனுமதிக்கப்பட்டார் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன, மேலும், மறைந்த முதல்வருக்கு சிகிச்சை அளித்த அனைத்து மருத்துவர்களும் R.1-இடம் மட்டுமே நம்பிக்கை வைத்து, நோயாளியின் உறவினர்/குடும்ப உறுப்பினராகத் தேவைப்படும் அனைத்து ஒப்புதல் படிவங்களிலும் அவர் கையொப்பமிட்டார்.*

***20.2.*** *C.W.7-டாக்டர் பாலாஜி, R.1-மட்டும் அங்கு இருந்ததாகவும், மறைந்த முதல்வருக்கு வேறு யாரும் உதவவில்லை என்றும் கூறினார். C.W.9-தீபக், பக்கம் எண்.12-ல் மறைந்த முதல்வரின் சிகிச்சையை R.1 - மற்றும் அவரது குடும்பத்தினர் முடிவு செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அப்போலோவிலேயே சிகிச்சை தொடரப்படும் என்று அவருக்குக் கூறப்பட்டது. மறைந்த முதல்வர் ICU அறையிலிருந்து இரண்டாவது மாடியில் உள்ள மற்றொரு அறைக்கு*

அழைத்து வரப்பட்டபோது, ஜெயா டி.வி.யின் கேமரா மேன், R.2-இல் சிகிச்சை பெற்று வரும் மறைந்த முதல்வரை புகைப்படம் எடுத்தார், இது **R.1**-க்கும் திவாகரனுக்கும் இடையே நடந்த உரையாடலில் இருந்து C.W.9-க்கு தெரிய வந்தது. தனது சாட்சியத்தின் பக்கம் எண்.10-ல், சிகிச்சை குறித்து சசிகலா மட்டுமே முடிவு செய்ததாகவும், மருத்துவர்களுடன் கலந்துரையாடியதாகவும், C.W.14-கிருஷ்ணபிரியா கூறினார்.

**20.3.** C.W.17 - டாக்டர்.சிவக்குமார், அப்போலோ மருத்துவர்களால் அளிக்கப்படும் சிகிச்சை குறித்து R.1-க்கு தெரிவிக்கப்பட்டதாகவும், சிகிச்சைக்கு முன் அவரின் ஒப்புதல் பெறப்பட்டதாகவும், எடுத்துக்காட்டாக, மூச்சுக்குழாய் அறுவை சிகிச்சைக்கு (ட்ரக்கியோஸ்டமி) முன், R.1-இடம் மருத்துவர்கள் ஒப்புதல் பெற்றதாகவும் கூறினார். அவர்கள் தாங்களாகவே இரத்தப் பரிசோதனை மற்றும் சி.டி ஸ்கேன் செய்தனர் என்றும் ஆனால் செயல்முறைகளை செய்வதற்கு முன்னர் R.1-க்கு விளக்கமளிக்கப்பட்டு அதன்பின்னர் மட்டுமே மருத்துவர்களால் அந்த செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டன என அவர் சாட்சியத்தின் 12 ஆம் பக்கத்தில் தெரிவித்தார். C.W.47-ரேணுகா, மறைந்த முதல்வரைப் பார்க்க அவரின் அறைக்கு இரண்டு முறை R.1. வருவதை வழக்கமாகக் கொண்டதாக அவரது சாட்சியத்தின் பக்கம் எண்.1 இல் கூறியுள்ளார்.

***20.4.*** *மறைந்த முதல்வர் அழைத்தால், R.1. உள்ளே சென்று, 10 அல்லது 15 நிமிடங்களுக்குப் பிறகு திரும்புவார் என்றும், R.1.- இரண்டாவது மாடியிலோ அல்லது ICU அறையிலோ தங்கவில்லை என்று செவிலியர் C.W.49-ஷீலா தெரிவித்தார். C.W.53- நளினி, மறைந்த முதல்வர் அழைத்தால், செவிலியர்கள் R.1-க்குத் தகவல் தெரிவிப்பார்கள் என்றும், R.1 அந்த அறையில் சுமார் 15 நிமிடங்கள் இருப்பார் என்றும், அவர் உணவருந்தும்போது, வழக்கமாக R.1 இருப்பார் என்றும், அவ்வாறு ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை வந்து முதல்வரை சந்தித்துவிட்டு, R.1 தனது அறைக்கு செல்வார் என்றும் தெரிவித்தார். R.1 -ம் மறைந்த முதல்வரும் பேசிக்கொண்டிருக்கும் போது, மருத்துவமனை பணியாளர்கள் அறையில் இருக்க மாட்டார்கள் என்றும், கண்ணாடி அறைக்குச் செல்வர் என்றும், C.W.53 அவரது சாட்சியத்தில் பக்கம் எண்.3 இல் தெரிவித்தார்.*

***20.5.*** *C.W.58-ஜெய் ஆனந்த், மூத்த மருத்துவர்கள் R.1.-உடன் கலந்தாலோசித்து, சிகிச்சை குறித்து முடிவெடுப்பார்கள் என்று கூறினார். மருத்துவமனை மருத்துவர்கள் அடிப்படை சிகிச்சை செய்தாலும், படிவங்களில் தேவையான இடங்களில் R.1.-ன் கையெழுத்தை பெறுவார்கள். தலைமைச் செயலாளரிடமும் மருத்துவமனை நிர்வாகம் கையெழுத்துப் பெற்றது. R-1-னின் உறவினர்கள் 10 முதல் 15 பேர் R.2-மருத்துவமனைக்கு வந்தனர்.*

***20.6.*** *C.W.102-ரமேஷ் வெங்கடராமன், தனது சாட்சியத்தின் பக்கம் எண்.18-ல், மறைந்த முதல்வருக்கு மாரடைப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டபோது, R.1 பெரும் அதிர்ச்சி மற்றும் குழப்பத்திற்கு உள்ளானார். இந்த சாட்சியங்களிலிருந்து சிகிச்சை முறை குறித்து அப்போலோ மருத்துவமனை மருத்துவர்கள் R.1.-இடம் ஆலோசனை பெற்று, அவரது ஒப்புதலுடன்தான் சிகிச்சையைத் தொடர்ந்தனர். நிச்சயமாக, ட்ரக்கியோஸ்டமி செய்வதற்கு முன், தலைமைச் செயலாளரின் சம்மதம் பெறப்பட்டுள்ளது என்பது அவரது சாட்சியம் மற்றும் மருத்துவ பதிவுகளிலிருந்து தெரிய வருகிறது. அப்போலோ மருத்துவமனை ஏன் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை நம்பிக்கைக்கு எடுத்துக்கொள்ளவில்லை என்பது விளக்கப்படவில்லை.*

***20.7.*** *C.W.9-(பக்கம் எண்.8, கீழிருந்து 8வது வரி). அவர் கூறியபடி, சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினர் மட்டுமே சிகிச்சை குறித்து முடிவு செய்தனர். சிகிச்சையை இங்கேயே தொடரலாம் என்பதுதான் அவர்கள் தெரிவித்த ஒரே முடிவு. மாரடைப்பு வரும் வரை சிகிச்சை நீண்ட காலம் நீடித்ததா என்று கேட்டால், அது உண்மையாகிவிட்டது (பக்கம் எண். 9).*

***20.8.*** *C.W.14-கிருஷ்ணப்ரியா, (பக்கம் எண்.9-3 வது வரி கீழிருந்து) சிகிச்சை முழுவதும் சசிகலாவால் முடிவு செய்யப்பட்டது மற்றும் அவரது ஆலோசனையின் பேரில் மட்டுமே மருத்துவர்கள் அவருக்கு சிகிச்சை அளித்தனர்.*

***20.9.*** *திவாகரின் (பக்கம் எண்.7-3வது வரி) உறவினர்களான அப்போலோ மருத்துவர்கள் டாக்டர்.விக்ரம் அவரது மனைவியும், சிகிச்சையின் விவரங்களை அவ்வப்போது தெரியபடுத்தினர்.*

***20.10.*** *C.W.17-டாக்டர் சிவகுமார் (பக்கம் எண்.11, 7 வது வரி) - அப்போலோ மருத்துவர்கள் சசிகலாவிடம் என்னென்ன சிகிச்சைகள் அளிக்கலாம் என்று தெரிவித்த பின்னரே சிகிச்சைகள் அளித்தனர். எந்த சிகிச்சைக்கும், சசிகலாவிடம் அனுமதி பெற்ற பிறகே அப்போலோ மருத்துவர்கள் முடிவு செய்தனர். உதாரணமாக, மூச்சுக்குழாய் அறுவைசிகிச்சை (ட்ரக்கியோஸ்டமி) அளிக்க, சசிகலாவிடம் மருத்துவர்கள் அனுமதி பெற்றனர். அவர்களே ரத்தப் பரிசோதனை மற்றும் சிடி ஸ்கேன் செய்தனர். எந்த ஒரு "செயல்முறையை" செய்தாலும், சசிகலாவிடம் விளக்கிய பின்னரே, அதைச் செய்தனர்.*

***20.11.*** *(பக்கம் எண்.12- கீழிருந்து 4 வது வரி) திவாகரின் மகள் டாக்டர். ராஜமதாங்கி, மறைந்த முதல்வருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து நாள்தோறும் குறித்துக்கொண்டார். மறைந்த முதல்வருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து அவருக்குத் தெரியும். அவரது கணவர் டாக்டர். விக்ரம், ENT மருத்துவர், மூச்சுக்குழாய் அறுவைசிகிச்சையின் (ட்ரக்கியோஸ்டமி) போது உடனிருந்தார்.*

***20.12.*** *(பக்கம் எண்.13-6வது வரி) மருத்துவமனையில் சிகிச்சைக்காக மருத்துவர்கள் கையெழுத்து கேட்டபோது, 'உறவினர்' என்ற இடத்தில் சசிகலா மட்டும் கையெழுத்திட்டிருந்தார்.*

***20.13.*** *(பக்கம் எண்.19-2வது வரி) மறைந்த முதல்வருக்கு என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது என்பதை அறிந்துதான் சசிகலா கையெழுத்து இட்டிருந்தார். அப்போலோ மருத்துவமனையில், நானும் அப்போலோ மருத்துவர்களும் அவரிடம் விளக்கிய பின்னரே அவரிடம் சம்மதம் பெற்றோம்.*

***20.14.*** *(பக்கம் எண்.26-முதல் வரி) மறைந்த முதல்வருக்கு உணவு, மருந்து, சிகிச்சை தொடர்பான விஷயங்களில் சசிகலாவின் பங்கு அதிகம் என்று கூறப்பட்டால் அது சரிதான்.*

***20.15.*** *(பக்கம் 14-9வது வரி) அதற்கு முன்னதாக, சசிகலா மற்றும் உறவினர்களுடன் அப்போலோ மருத்துவர்கள் கலந்துரையாடி, பின்னர் 5.12.2016 அன்று இரவு 11.30 மணிக்கு ECMO துண்டிக்கப்பட்டது.*

**Tamilnadu Medical Services Corporation**
**No 134 Mint Street Opposite Ramar Temple,**
**Sowcarpeth**
**Chennai TN 600079**
**India**

Guest Name : Dr. Richard John Beale
Travel Agent :
Company : Apollo Hospitals Enterprise Ltd
Booked By :
Billing : Entire Bill to Company / BB - Ref EM Dtd 22/10

Invoice No. : 100436878 Date : 23.10.16
Page : 2 of 3 Reverse Charge : No
Rate Code : N3T7 Segment : COT
Rate : 9600 INR Package :
Room No / Type : 634 TKX
Confirmation No : 62845442 Guests : 1
Arrival : 22-OCT-16 16:59:00
Departure : 23-OCT-16 19:02:00
Membership :
PAN :
E-Mail :
Printed By / On : 105-001930 17-JUL-18 13:53:21

| Date | Description | Reference | Debit | Credit |
|---|---|---|---|---|
| 23.10.16 | KKC On ROOM | | 14.40 | |
| 23.10.16 | City Ledger | BTC | | 39,530.13 |
| | | **Total INR** | 39,530.13 | 39,530.13 |
| | | **Balance INR** | 0.00 | |
| | | **VAT INR** | 2,634.75 | |

| HSN CODE | DESCRIPTION | SALES | CGST TAX | SGST TAX | IGST TAX | CESS TAX |
|---|---|---|---|---|---|---|
| LIQUOR | Others | 4,542.42 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 998422 | WIFI/Internet | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 4.50 |
| 996332 | F&B | 6,285.18 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 999723 | SPA | 3,500.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 996311 | Rooms | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 43.20 |

***23.13.*** *டாக்டா ரிச்சாட் பீலே, 01.10.2016 அன்று, மறைந்த முதல்வரைப் பார்த்தபோது, அவர் சிகிச்சைக்காக விமானத்தில் அழைத்துச் செல்லப்படலாம் என்றும், அவரே ஏர் ஆம்புலன்ஸில் மறைந்த முதல்வருடன் செல்லத் தயாராக இருப்பதாகவும் C.W.17-இடம் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்குப் பிறகு, இரண்டாவது முறை, மறைந்த முதல்வருக்கு உடல்நலம் முன்னேற்றம் அடைந்துள்ளதாகவும் அதே சிகிச்சையத் தொடரலாம் என்றும் தெரிவித்தார். இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், 25.11.2016 அன்று, அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் சமின் ஷர்மா, ஆஞ்சியோ செய்யத் தயாராக இருந்தார். C.W.106-டாக்டர். பாபு ஆபிரகாம், இங்கிலாந்து மருத்துவர் டாக்டர் ரிச்சர்ட் பீலேயைத் தொடர்பு கொண்டு அறுவை சிகிச்சையை ஒத்திவைக்க ஒரு குறுக்குவழியைக் கண்டுபிடித்தார், அவர் "இப்போது தான் அவரது உடல்நலம் முன்னேறிக்கொண்டிருக்கிறது" என்று அமெரிக்க மருத்துவரிடம் தெரிவித்தார். எனவே, இங்கிலாந்து மருத்துவர் ஆஞ்சியோவை ஒத்திவைக்க பரிந்துரை செய்ததாக கூறினாலும், அவ்வாறு கூறியதற்கான எழுத்துமூல முகாந்திரமும் மருந்துவ குறிபேட்டில் குறிக்கப்படவில்லை. இந்த வகையில்,* ***C.W.106-*****டாக்டர் பாபு ஆபிரகாம், டாக்டர் ரிச்சர்ட் பீலே-ஐ சாக்குப்போக்கு காட்டி, மறைந்த முதல்வருக்கு அளிக்கப்படவிருந்த ஆஞ்சியோ சிகிச்சையை ஒத்திவைக்க ஒரு தந்திரம் செய்தார். இதன் காரணமாக, மறைந்த***

முதல்வருக்கு பிற்கால கட்டத்தில் இந்த சிகிச்சை மேற்கொள்ளப்படவில்லை, இதுவே அவரது துரதிர்ஷ்டவசமான மரணத்திற்கு காரணம் ஆகும்.

***23.14. நிறைவிற்காக*** *R-2* ***மருத்துமனையால் வழங்கப்பட்ட கட்டணத்தின் விவரங்கள்***, *(ஆனால் விசாரிக்கப்படாத மருத்துவர்கள்)* ***பின்வருமாறு அளிக்கப்பட்டுள்ளது*** –

*<u>மறைந்த முதல்வருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு, கட்டணம் செலுத்தப்பட்ட</u>*

| தொ. எண் | மருத்துவர்களின் பெயர் | விசாரிக்கப்பட வில்லை. | கட்டணம் |
|---|---|---|---|
| *1.* | டாக்டர். ரவி வர்மா, தீவிர சிகிச்சை மருத்துவர் | அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன; அவர் ஆஸ்டிரேலியாவில் இருந்ததால் விலக்கு அளிக்கப்பட்டது | *ரூ.2,00,000/-* |
| *2.* | டாக்டர். என். அசோக் *கட்டணம் செலுத்தப்பட்டது அப்போலோ மருத்துவமனை மருத்துவர்களின் பட்டியலில் இல்லை | அழைக்கப்பட வில்லை | *ரூ.1,00,000/-* |
| *3.* | டாக்டர். பி.வி. சந்திரசேகரன் இதய நோய் நிபுணர் | அழைக்கப்பட வில்லை | *ரூ.20,000/-* |
| *4.* | டாக்டர். கே.சாந்தி, இதய நோய் நிபுணர் | அழைக்கப்பட்டார், ஆனால், | *ரூ. 1,00,000/-* |

| | | | |
|---|---|---|---|
| | | விசாரிக்கப்பட வில்லை. | |
| 5. | டாக்டர். ரிச்சர்டு பீலே | ஆஜர் ஆவதற்காக மின்னஞ்சல் அனுப்பபட்ட து. விசாரிக்கப்பட வில்லை. | ரூ.49,81,200/- |
| 6. | டாக்டர். ஏ.கே. சீதாராமன் | கார்டியாக் அனெஸ்தீசியா | ரூ.1,00,000/- |
| 7. | மவுண்ட் எலிசபெத் ஆர்ச்சிட் மருத்துவமனை | பிசியோதெரபி ஸ்டுகள் | ரூ.1,29,09,319/- |

**<u>மறைந்த முதல்வருக்கு சிகிச்சையளித்த அப்போலோவைச் சாராத மருத்துவர்கள்</u>**

| தொ.எண் | மருத்துவர்களின் பெயர் | துறை | மருத்துவமனையின் பெயர் |
|---|---|---|---|
| 1. | டாக்டர். ராஜீவ் நரங் | இதய நோய் நிபுணர் | எய்ம்ஸ் |
| 2. | டாக்டர். சுனிதா நரெட்டி | தொற்று நோய் | அப்போலோ, ஹைதராபாத் |
| 3. | டாக்டர். ஜிகி டிவாடியா | துறைத்தலைவர், மயக்கவியல் மற்றும் தீவிர சிகிச்சை மருத்துவம் | டாடா மெமோரியல் மருத்துவமனை, மும்பை |
| 4. | டாக்டர். ஒ.சி.ஆபிரஹாம் | பேராசிரியர், தொற்று நோய்ப்பிரிவு | சிஎம்சி, வேலூர் |
| 5. | டாக்டர். ராஜீவ் சோமன் | பேராசிரியர், தொற்று நோய்ப்பிரிவு | PD ஹிந்துஜா மருத்துவமனை, மும்பை |
| 6. | டாக்டர். ராஜீவ் மேத்தா | நுரையீரலியல் மற்றும் தீவிர சிகிச்சை | அப்போலோ மருத்துவமனை, பெங்களூரு |

| | | | |
|---|---|---|---|
| *7.* | டாக்டர். கே.எம்.செரியன் | மூத்த இதய அறுவை சிகிச்சை நிபுணர் | பிரண்ட் லைன் லைஃப் மருத்துவமனை, சென்னை |
| *8.* | டாக்டர். ஸ்டூவர்ட் ரஸ்ஸல் | இதய நோய் நிபுணர் | ஜான் ஹாப்கின்ஸ் மருத்துவமனை, அமெரிக்கா |
| *9.* | டாக்டர். ஜெயன் பரமேஸ்வரன் | இதய செயலிழப்பு, இதய மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் | *Pap worth U.K* |
| *10.* | டாக்டர். சமீன் சர்மா | இதய நோய் நிபுணர் | மவுண்ட் சினாய் மருத்துவமனை |
| *11.* | டாக்டர். வெங்கட் எஸ் ராம் | இயக்குநர் | டெக்ஸாஸ் பிளட் பிரஸ்ஸர் இன்ஸ்டிடியூட், *USA* |
| *12.* | டாக்டர். சீமா | பிசியோதெரபிஸ்ட் | மவுண்ட் எலிசபெத் மருத்துவமனை, சிங்கப்பூர் |
| *13.* | டாக்டர்.மேரி | பிசியோதெரபிஸ்ட் | மவுண்ட் எலிசபெத் மருத்துவமனை |
| *14.* | டாக்டர்.ஜூடி | பிசியோதெரபிஸ்ட் | மவுண்ட் எலிசபெத் மருத்துவமனை |

## ***24. மாண்புமிகு ஆளுநரின் வருகை***

***24.1.*** *22.09.2016 அன்று R.2 மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்ட மறுநாளே, பிரதமர் மற்றும் ஆளுநர் சார்பாக ஆளுநர் மாளிகையிலிருந்து பூங்கொத்து அனுப்பப்பட்டன. அதற்கு மறைந்த முதல்வர் நன்றி தெரிவித்து கடிதம் அனுப்பினார். ஆளுநர், மறைந்த முதல்வரைப் பார்க்க, அப்போலோ மருத்துவமனைக்கு மூன்று முறை வந்ததாக, C.W.91- ரமேஷ் சந்த் மீனா, ஆளுநரின் செயலாளர் கூறினார். எய்ம்ஸ் மருத்துவர்களின் வருகையைப் பற்றி செய்தித்தாளில் படித்ததாகக் கூறினார். எய்ம்ஸ் மருத்துவர்களின் அறிக்கை ஆளுநருக்கு அனுப்பப்படவில்லை. 04.10.2016-ஆம் நாளிட்ட அப்போலோ செய்தி அறிக்கையில் மட்டும் அவர் தொடர் சிகிச்சையில் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. ஆளுநர் 01.10.2016 அன்று சென்னை வந்து, டாக்டர் பிரதாப் சி ரெட்டியை சந்தித்தார். எய்ம்ஸ் மருத்துவர்கள் மருத்துவமனைக்கு வந்ததும், ஆளுநருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர் 01.10.2016-அன்று அப்போலோ மருத்துவமனைக்கு வந்தார்.*

***24.2.*** *C.W.91 - ரமேஷ் சந்த் மீனா, 01.10.2016 அன்று மாலை 06:45 மணியளவில், தானும் ஆளுநரும் R.2 - அப்போலோ மருத்துவமனைக்குச் சென்றதாகவும், ஆளுநர் மறைந்த முதல்வரைப் பார்த்துவிட்டு, வெளியே வந்ததாகவும் கூறினார். மறைந்த முதல்வர் படுக்கையில் பல குழாய்களின் மத்தியில் காணப்பட்டார் (பக்கம் – 3).*

*மேலும் மறைந்த முதல்வரின் உடல்நிலை குறித்து, 01.10.2016-ஆம் நாளிட்ட Ex.C.19 செய்தியறிக்கையை ஆளுநர் வெளியிட்டார்.*

> *"C.W.91 - ரமேஷ் சந்த் மீனா தனது சாட்சியத்தில், மறைந்த முதல்வர் 22.09.2016 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது குறித்து, 23.09.2016 அன்று தனக்குத் தெரிய வந்தபோது, ஆளுநர் மற்றும் இந்திய பிரதமர் சார்பாக, மறைந்த முதல்வருக்கு இரண்டு பூங்கொத்துகள் வழங்கப்பட்டதாகவும், அதற்கு மறைந்த முதல்வர் மாலை 06:45 மணிக்கு பதிலளித்ததாகவும் கூறினார்".*

***24.3.*** *C.W. 91- தனது சாட்சியத்தில், மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் எழுதிய 6.10.2016-ஆம் நாளிட்ட கடிதத்தில், (Ex.C.40-உடன் இணைக்கப்பட்டுள்ளது) மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மயக்க நிலையில் இருந்த, மறைந்த முதல்வருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட வார்டிற்கு வருகை புரிந்ததாகவும், அச்சமயம் அவர் மயக்கத்தில் இருந்தார் என்றும், மேலும் சில நாட்களுக்கு அவர் மருத்துவமனையில் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்; ஆனால், அவர் கவலைக்கிடமான நிலையில் இருந்ததாக மாண்புமிகு ஆளுநர் பதிவு செய்யவில்லை என்று கூறினார். இருப்பினும், C.W.91 தனது சாட்சியத்தில் (பக்கம் எண்.3), ஆளுநர் அவரிடம், "அம்மா" கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும், அவர் பல குழாய்களுக்கு நடுவே இருப்பதாகவும் தெரிவித்ததாக, C.W.91 – ஆளுநர் மாளிகை செயலாளர் கூறினார். மேலும், C.W.91 தனது சாட்சியத்தில், மாண்புமிகு ஆளுநர் அவர்களால் மேதகு குடியரசுத்*

*தலைவருக்கு அனைத்தும் 6.10.2016-ஆம் நாளிட்ட Ex.C.40 கடிதம் மூலமாக தெரிவிக்கப்பட்டது என்று கூறினார்.*

***24.4.*** *ஆளுநர், ஆளுநர் மாளிகையை அடைந்ததும், C.W.91-இடம், அவர் மருத்துவமனையில் மறைந்த முதல்வர் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த அறைக்குள் நுழைந்தபோது, கதவுகள் திறக்கப்பட்டன என்றும், ஆனால் மறைந்த முதல்வருக்கு தொற்று ஏற்படக்கூடாது என்பதால் அவர் அறைக்குள் செல்லாமல் சற்று தூரத்திலிருந்தே பார்த்ததாகவும் தெரிவித்தார். மறைந்த முதல்வர், குழாய்களுக்கு நடுவே படுக்கையில் கவலைக்கிடமான நிலையில் இருப்பதையும் ஆளுநர் புரிந்து கொண்டார். இத்தகவல் குடியரசுத்தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டதாக C.W.91 கூறினார். ஆளுநர் மாளிகையின் செய்தி வெளியீடுகள்: 01.10.2016-ஆம் நாளிட்ட Ex.C.19, 07.10.2016-ஆம் நாளிட்ட Ex.C.21, 11.10.2016-ஆம் நாளிட்ட Ex.C.20, Ex.C.22; மற்றும் 22.10.2016 ஆம் நாளிட்ட Ex.C.23. ஆளுநரும், டாக்டர் பிரதாப் C ரெட்டியும் தங்களுடைய உடையில் உள்ளே சென்றுவிட்டு, அங்கிருந்து தங்கள் இடத்திற்குத் திரும்பினர். நோயாளியைப் பார்க்கும் போது, அவர்கள் எந்த சிறப்பு உடையையும் பயன்படுத்தவில்லை. மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது குறித்து, முதலில் அரசால் ஆளுநர் மாளிகைக்குத் தெரிவிக்கப்படவில்லை.*

***24.5.*** *இரண்டாவது முறையாக, ஆளுநர் 22.10.2016 அன்று காலை 11:30 மணிக்கு வருகை புரிந்தார். இதுவும் முதல் வருகை போலவே*

*நடந்தது. அவர்கள் வரவேற்கப்பட்டு, இரண்டாவது மாடியில் மறைந்த முதல்வரின் சிகிச்சை அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அப்போது, மறைந்த முதல்வர் படுக்கையில் சாய்வாக அமர்ந்திருந்தார். மறைந்த முதல்வர் சிகிச்சை பெறும் அறைக்குள் ஆளுநர் சென்றாரா அல்லது கண்ணாடிக் கதவு வழியாகப் பார்த்தாரா என்பது C.W.91 – ராம் சந்த் மீனாவுக்கு இந்த முறையும் தெரியவில்லை.*

***24.6.*** *C.W.91 - ரமேஷ் சந்த் மீனாவின் சாட்சியங்களிலிருந்து, மறைந்த முதல்வர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக C.W.91-க்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், மாண்புமிகு குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தில் ஆளுநர் அவ்வாறு குறிப்பிடவில்லை என்பது தெளிவாகிறது. 07.12.2016 ஆம் நாளிட்ட Ex.C.41-இல், மறைந்த முதல்வர் கவலைக்கிடமாக இருக்கிறார் என்ற முக்கிய தகவலைத் தெரிவிக்காமல், அரசியல் சூழல்களையும், அவர் மயக்கநிலையில் இருப்பதையும் மட்டுமே விவரித்திருந்தார்.*

***24.7.*** *C.W.91 தனது சாட்சியத்தில், மாண்புமிகு ஆளுநர், நான்கைந்து முறை அப்போலோ மருத்துவமனையில் மறைந்த முதல்வரின் உடல்நிலை குறித்து, C.W.7 - டாக்டர் P. பாலாஜியிடம் விசாரித்ததாகக் கூறியிருந்தபோதிலும், டாக்டர் பாலாஜி அவ்வாறு கூறவில்லை.*

***24.8.*** *C.W.17 - டாக்டர். K.S. சிவக்குமார் தனது சாட்சியத்தில், ஆளுநரை, R.2 - அப்போலோ மருத்துவமனையின் நுழைவாயிலில் அப்போதைய தலைமைச் செயலாளர், C.W.149–*

திரு.ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அப்போலோ மருத்துவமனைகளின் தலைவர் டாக்டர்.பிரதாப் *C.* ரெட்டி ஆகியோர் வரவேற்றனர். அவர்கள் வராண்டா வழியாக, இரண்டாவது மாடியில் இருந்த மறைந்த முதல்வர் சிகிச்சை பெற்று வரும் அறைக்கு ஆளுநரை அழைத்துச் சென்றனர். *R.1* - சசிகலா அறைக்கு வெளியே நின்று கொண்டிருந்தார், அவர் ஆளுநர் அளித்த பூங்கொத்தைப் பெற்றுக்கொண்டார் என்று கூறினார். மேலும், *C.W.17* - டாக்டர்.*K.S.* சிவக்குமாரின் கூற்றுப்படி, மறைந்த முதல்வரின் உடல் நிலையில் முன்னேற்றம் குறித்து, *R.1*-ஐ ஆளுநர் கேட்டறிந்தார். ஆளுநரின் இந்த வருகை பொதுவாக தலைமைச் செயலாளர் மற்றும் செயலாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்; ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இது மறைந்த முதல்வருக்குத் தெரிவிக்கப்படவில்லை என்பது **C.W.17**-இன் சாட்சியத்திலிருந்து தெளிவாகத் தெரிகிறது. ஆளுநர் மூன்று முறை *R.2* அப்போலோ மருத்துவமனைக்கு மறைந்த முதல்வரைக் காண வந்தார் என *C.W.17* மேலும் தெரிவித்தார். முதல் முறையில் அவர் *C.W.17* அங்கிருந்தபோது, ஆளுநர் மறைந்த முதல்வரை கண்ணாடிக் கதவு வழியாகவும், இரண்டாவது முறையில் மறைந்த முதல்வர் அவருக்கு வீசப்பட்ட பந்தினைப் பிடித்து திரும்ப வீசியவாறாக பிசியோதெரபி செய்துகொண்டிருந்ததையும் கண்டார். ஆனால் மறைந்த முதல்வர் ஆளுநரைக் கண்ணுற்றதாகத் தெரியவில்லை. ஆளுநர் சசிகலா-விற்கு பூங்கொத்து வழங்கும்போது *C.W.17* அங்கிருந்தார். மறைந்த முதல்வர்

ஆளுநரின் வருகையை அறியாமல் பிசியோதெரபி செய்து கொண்டிருந்தார்.

***24.9.*** *C.W.17 - டாக்டர் K.S. சிவக்குமார், தனது சாட்சியத்தில் பக்கம் எண் 14, மேலிருந்து 10வது வரியில் கூறியது:*

> *"மறைந்த முதல்வர் படுக்கையில் சாய்ந்த நிலையில் அமர்ந்திருந்த அவர், பிசியோதெரபி செய்துகொண்டிருந்தபோது ஒரு நர்ஸ் வீசிய பந்தை பிடித்து அதை மீண்டும் வீசினார், ஆளுநர் அதை பார்த்தார், ஆனால் மறைந்த முதல்வர் ஆளுநரைப் பார்க்கவில்லை. ஆளுநர் இரண்டாவது முறையாக வந்தபோது இது நடந்திருக்கலாம் என்றும், ஆளுநரின் வருகை முன்பே தெரிந்திருந்தது என்றும் சாட்சி கூறுகிறார், ஆனால் R.1 மறைந்த மறைந்த முதல்வரிடன் இதை தெரிவித்தாரா என்பது குறித்து எனக்கு தெரியாது"*

***24.10.*** *C.W.136 – அப்போதைய சுகாதாரத்துறைச் செயலாளர், ஆளுநரின் வருகைக்குப் பிறகு, மறைந்த முதல்வர் தனது பிசியோதெரபி சிகிச்சையைத் தொடர்ந்தார் என்றும், ஆளுநரைக் காத்திருக்கச் செய்யாமல், ஆளுநரை அவருக்காக காத்திருக்க வேண்டாம் என்னும் விதமாக, தனது கட்டை விரலைக் காட்டினார் என்றும் கூறினார். சிங்கப்பூர் பிசியோதெரபிஸ்டுகள் மறைந்த முதல்வருக்கு பயிற்சி அளித்துக்கொண்டிருந்தனர், ஆளுநரின் வருகையின் போது அவருக்குக் காட்டப்பட்ட பிசியோதெரபி*

*பயிற்சிகளை அவர் திரும்பத் திரும்பச் செய்து கொண்டிருந்தார் என சாட்சியளித்தார்.*

***24.11.*** *C.W.14- இளவரசியின் மகளான C.W.14 – டாக்டர் J. கிருஷ்ணப்ரியா, ஆளுநர் மறைந்த முதல்வரை இரண்டு முறை பார்வையிட்டதாகவும் இரண்டாவது முறை பார்த்தபோது மறைந்த முதல்வர் கை உயர்த்து காட்டினார் என்று தெரிவித்தார். C.W.72- அப்போலோ செவிலியர் ராஜேஸ்வரி மற்றும் C.W.17-ன் சாட்சியத்தின்படி, மறைந்த முதல்வர் ஆளுநரைப் பார்க்கவில்லை; மேலும் அவர்களும் அவருக்கு அது பற்றித் தெரிவிக்கவில்லை என்பது தெளிவாகிறது.*

***24.12.*** *C.W.9–J. தீபக், C.W.17-டாக்டர். K.S. சிவக்குமார், C.W.20 – K.N. வெங்கடரமணன் மற்றும் C.W.72-ராஜேஸ்வரி ஆகியோர் மறைந்த முதல்வருக்கான பிசியோதெரபி சிகிச்சைக்காக, சிங்கப்பூரிலிருந்து மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டதாகத் தெரிவித்தனர். மறைந்த முதல்வரை இரண்டாவது முறையாக ஆளுநர் பார்க்க வந்தபோது, மறைந்த முதல்வர் சிங்கபூரிலிந்து வந்த பிசியோதெரபிஸ்டுகளின் வழிகாட்டுதலின்படி, பிசியோதெரபி செய்துகொண்டிருந்தார். பிசியோதெரபிஸ்ட் செய்தது போல, மறைந்த முதல்வர் கைகளை மேலே நீட்டி, பக்கவாட்டில் மடக்குவதாகவும், ஆளுநர் கண்ணாடி கதவின் வழியாகப் பார்த்ததாகவும் அவர் கூறினார்.*

***24.13.*** *குறுக்கு விசாரணையின் போது C.W.72 - செவிலியர், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் காலை 11.00 மணிக்கு வருகை*

*தந்ததாகவும், அந்த நேரத்தில் பிசியோதெரபிஸ்டுகள் மறைந்த முதல்வருக்கு பிசியோதெரபி சிகிச்சை அளித்து வந்ததாகவும் கூறினார். சாட்சி மறைந்த முதல்வருக்கருகில் நின்றிருந்தார். கண்ணாடி கதவிற்கு வெளியே ஆளுநரும் மருத்துவர்களும் நிற்பதை சாட்சி கண்டார். மறைந்த முதல்வர் ஆளுநரைப் பார்க்கவுமில்லை, சாட்சியும் மற்றவர்களும் அவருக்கு மாண்புமிகு ஆளுநரின் வருகை குறித்துத் தெரிவிக்கவுமில்லை.*

***24.14.*** *குறுக்கு விசாரணையின் போது, R1 வழக்கறிஞர் ஆளுநரைப் பார்த்ததும் மறைந்த முதல்வர், தன் கட்டை விரலை உயர்த்தியதாகக் கூறிய பொழுது, அதை C.W.72 மறுத்ததுடன், இரண்டு சிங்கப்பூர் பிசியோதெரபிஸ்டுகள் மறைந்த முதல்வருக்கு சிகிச்சை அளித்ததாகவும், அவர் பிசியோதெரபி செய்து கொண்டிருந்த போது, தான் அவரருகில் நின்றிருந்ததாகவும் சாட்சி தெரிவித்தார்.*

***24.15.*** *C.W. 92 – டாக்டர் ராஜ் பிரசன்னா, மற்றும் C.W. 97 – டாக்டர் ராஜீவ் அன்னிகேரி அவர்களின் சாட்சியத்திலிருந்து அம்மா அவர்கள் பிசியோதெரபி உடற்பயிற்சி மட்டும் தான் செய்துகொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது மற்றும் மறைந்த முதல்வர் ஆளுநர் அவர்களின் வருகையை அறிந்திருக்கவில்லை, மேலும் அந்த சூழலில் ஆளுநரின் இரண்டாம் வருகையில் அம்மா அவர்கள் கட்டைவிரலை காட்டியிருப்பார் என்பதனை நம்புவது கடினம்.*

***24.16.*** *C.W.92 - டாக்டர். ராஜ் பிரசன்னா, மறைந்த முதல்வருக்கு 45 நிமிட இடைவெளியில், 59 நாட்கள், சுமார் 129 முறை பிசியோதெரபி*

*அளிக்கப்பட்டதாகக் கூறினார். படுக்கைப் புண் வராமல் இருக்க, படுக்கையின் அசைவுகளால் ஏற்படும் மசாஜ் காரணமாக மறைந்த முதல்வரின் நுரையீரல் நன்றாகச் செயல்படும் வகையில், அவர் சிறப்புப் படுக்கையில் படுக்க வைக்கப்பட்டார். 13.11.2016 அன்று மறைந்த முதல்வருக்கு பிசியோதெரபி அளிக்கப்பட்டதன் காரணமாக, மறைந்த முதல்வரின் உடல்நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டது.*

***24.17.** C.W.46 - டாக்டர் K. அர்ச்சனா, அந்த நேரத்தில், தான் பணியில் இருந்ததாகக் கூறினார், ஆனால் மறைந்த முதல்வர் ஆளுநரைப் பார்த்தாரா என்பதும், திரு. ராகுல் காந்தி மற்றும் திரு. வெங்கையா நாயுடு-வின் வருகைகள் குறித்தும் தனக்குத் தெரியாது என்றும் கூறினார்.*

***24.18.** C.W.16 - டாக்டர் சத்தியபாமா, ஆளுநர் முதலில் வந்தபோது, மறைந்த முதல்வர் மயக்க நிலையில் இருந்ததாகவும், R.1 - சசிகலா மற்றும் தலைமைச் செயலாளர் அங்கு இருந்ததாகவும் கூறினார். இரண்டாவது முறையில் ஆளுநர் R.1- ஐ சந்தித்தபோது, C.W.16 அங்கு இல்லை, மேலும் ஆளுநர் மறைந்த முதல்வரை கண்ணாடிக் கதவு வழியாகப் பார்த்தார். C.W.16-இன் கூற்றுப்படி, ஆளுநரும் R.1-ம் அறையில் பேசிக்கொண்டிருந்தனர்.*

***24.19.** C.W.31 - R. வீரபெருமாள், மறைந்த முதல்வரின் தனி பாதுகாப்பு அதிகாரி கூறுகையில், தான் பணியில் இருந்தபோது ஆளுநர் கண்ணாடி கதவு வழியாக மறைந்த முதல்வரைப் பார்த்ததாகவும்,*

இரண்டாவது முறை மறைந்த முதல்வர் ஆளுநரைப் பார்க்கவில்லை என்றும், மேலும் திரு. ராகுல் காந்தி மற்றும் துணைக் குடியரசுத்தலைவர் திரு. வெங்கையா நாயுடு ஆகியோர் வந்தபோது, அவர்களும் கண்ணாடிக் கதவு வழியாக மறைந்த முதல்வரைப் பார்க்காமல் R.1 - சசிகலாவிடம் பேசிவிட்டுச் சென்றனர் என்றும் கூறினார்.

***24.20.*** சில வாய்வழி சாட்சியங்களும் உள்ளன; 2016 நவம்பரில் ஆளுநர் இருந்தபோதும், 02.12.2016 மற்றும் 03.12.2016 வரை சென்னையில் அப்போலோ மருத்துவமனையின் ஒரு விழாவில் பங்கேற்றபோதும், அவர் மருத்துவமனைக்குச் செல்லவோ, நோய்வாய்ப்பட்ட முதல்வரைப் பார்க்கவோ இல்லை. அதேபோல, மறைந்த முதல்வரது உடல்நிலை குறித்து ஆளுநர் எந்த மருத்துவரிடமோ அல்லது ***C.W.91*** மூலமாகவோ விசாரித்தாரா என்பது குறித்த எந்த ஆதாரமும் இல்லை.

***24.21.*** மூன்றாவது வருகையைப் பொறுத்தவரை, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 04.12.2016 அன்று இரவு 11.45 மணிக்கு அப்போலோவுக்கு வந்து, அப்போலோ மருத்துவமனையின் தலைவரிடம் மறைந்த முதல்வரின் உடல்நிலை குறித்து கேட்டறிந்தார். அவர் ECMO-வில் இருப்பதை அறிந்ததும், மேதகு ஆளுநர் தரை தளத்திலிருந்து திரும்பி விட்டார். ஆகவே, மேதகு ஆளுநர் மூன்றாவது முறையாக மருத்துவமனைக்குச் சென்ற போதிலும், அவர் மறைந்த முதல்வருக்கு ECMO சிகிச்சையளிக்கப்பட்ட அறைக்குள்

செல்லவில்லை என்பது வெளிப்படையாகிறது. மறைந்த முதல்வருக்கு இதயம் செயலிழப்பு ஏற்பட்டது என்ற உண்மை தெரிந்த பிறகும் மேதகு ஆளுநர் அவரைப் பார்க்க இரண்டாவது மாடிக்குச் செல்லவில்லை. இதிலிருந்து அவரது உடல்நிலை முன்னேற்றமடையும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று R.2 மருத்துவமனை தலைவர் தெரிவித்திருக்க வேண்டும், அதனால் அவர் வெளியேறினார் என்பது தெளிவாகிறது.

(அ) அவரது முதல் வருகையின் போது அவர் குழாய்களுக்கு நடுவில் இருப்பதைக் கண்டார். மாண்புமிகு குடியரசுத் தலைவருக்கு அவர் கடிதம் எழுதியிருந்தாலும், அவர் வென்டிலேட்டரில் வைக்கப்பட்டதாகக் கூட குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவர் கவலைக்கிடமாக இருந்ததை அவர் குறிப்பாக குறிப்பிடவில்லை.

(ஆ) அவரது இரண்டாவது வருகையின் போது அவர் மறைந்த முதல்வர் பிசியோதெரபி செய்து கொண்டிருந்ததை கண்ணாடி கதவு வழியாக பார்த்தார். ஆனால் அவரது வருகை மறைந்த முதல்வருக்குத் தெரிவிக்கப்படவில்லை என்பது பிசியோதெரபிஸ்டுகள் R.2 மருத்துவமனை செவிலியர் மற்றும் C.W.17 ஆகியோரின் சான்றுகளிலிருந்து தெரியவருகிறது.

(இ) அவர் நவம்பர் 2016, மற்றும் 2.12.2016 மற்றும் 3.12.2016 ஆகிய நாட்களில் சென்னையில் இருந்து ஒரு விழாவில் கலந்து கொண்டாலும், நோய்வாய்ப்பட்ட முதலமைச்சரை அவர் பார்க்கவில்லை, அவரது

*உடல்நிலை குறித்து அவர் விசாரித்ததற்கு எந்த ஆதாரமும் இல்லை.*

*(ஈ) மூன்றாவது வருகையின் போது 4.12.2016 அன்று 11.45 மணிக்கு அவர் அப்போலோ மருத்துவமனைத் தலைவரை தரை தளத்தில் சந்தித்து கலந்துரையாடிய பிறகு, ECMO சிகிச்சையில் இருந்த மறைந்த முதல்வரைப் பார்க்காமல் அறையை விட்டு வெளியேறினார்.*

*(உ) இவ்வாறே, பொறுப்பு ஆளுநர் R.2- மருத்துவமனைக்குச் சென்று உடல்நலக்குறைவுற்ற மறைந்த முதல்வரை காணும் அவரது நடைமுறைகளை நிறைவு செய்தார்.*

## <u>*25. எய்ம்ஸ் மருத்துவர்களின் முதல் வருகை*</u>

***25.1.*** *மாநில அரசு மத்திய அரசுக்கு ஒரு கோரிக்கையை அனுப்பியது. அதன்படி அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் (AIIMS) நிபுணர்கள் குழுவை சென்னைக்கு வந்து மறைந்த முதல்வர் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க மத்திய அரசு நியமித்தது. சுகாதாரத்துறை அமைச்சர் எய்ம்ஸ் மருத்துவமனையின் இயக்குநருடன் கலந்தாலோசித்தப் பின்னர் மருத்துவர்களைத் தேர்வுசெய்து அவர் Ex.C.44 A என குறிப்பிடப்பட்டிருக்கும் 05.10.2016, ஆம் நாளிட்ட கடிதத்தை அனுப்பிய பிறகு எய்ம்ஸ் மருத்துவர்கள் அப்போலோ மருத்துவமனைக்கு வந்தனர். அதன்படி, கீழ்க்கண்ட மருத்துவர்கள் நியமிக்கப்பட்டனர்.*

*(1) C.W.84 - டாக்டர் நிதீஷ் நாயக், பேராசிரியர், இதயவியல் துறை,*

*(2) C.W.85 - டாக்டர் ஜி.சி. கில்னானி, பேராசிரியர், நுரையீரல் மருத்துவம் மற்றும் தூக்கக் கோளாறுகள் துறை,*

*(3) C.W.86 - டாக்டர். அஞ்சன் த்ரிகா, பேராசிரியர், அனஸ்தீசியா, கிரிட்டிகல் கேர் மற்றும் வலி மருத்துவம் துறை*

*(4) C.W.141 – டாக்டர். நிகில் டாண்டன், பேராசிரியர், உட்சுரப்பியல் துறை*

***25.2.*** *எய்ம்ஸ் மருத்துவர்கள் அப்போலோ மருத்துவமனைக்கு வந்தனர், அதன்பின்னர் அவர்கள் மதிப்பாய்வு செய்து அறிக்கையை புதுதில்லியில் உள்ள AIIMSன் இயக்குநரிடம் சமர்ப்பித்தனர். முதல்வரின் இறப்பிற்குப் பிறகு C.W.136, அப்போதைய சுகாதாரத்துறை செயலாளர், டெல்லியில் இருந்து தமிழக அரசின் சுகாதாரத்துறை செயலாளர் இவற்றை 17.03.2017 அன்று பெற்றுக்கொண்டார்.*

***25.3.*** *மேற்சொன்ன எய்ம்ஸ் மருத்துவர்களான C.W.84, C.W.85, C.W.86 மற்றும் C.W.141 ஆகியோர், 05.10.2016 முதல் 07.10.2016 வரை, மற்றும் 09.10.2016, 10.10.2016, 12.10.2016, 13.10.2016 மற்றும் 03.12.2016 ஆகிய நாட்களில் மறைந்த முதல்வரைப் பார்த்தனர். மறைந்த முதல்வருக்கு இதய செயலிழப்பு ஏற்பட்ட பின்னர் C.W.142- தேவ கௌரோ வேலாயுதம் அழைக்கப்பட்டு அவர் 05.12.2016 அன்று வந்து மறைந்த முதல்வரைப் பார்த்தார். இதிலிருந்து எய்ம்ஸ் மருத்துவர்கள் மறைந்தமுதல்வரின் சிகிச்சைத் தொடர்பாக அப்போலோ மருத்துவமனைக்கு நான்கு முறை வருகைப் புரிந்ததாகத் தெரியவருகிறது. C.W.85 - டாக்டர் ஜி.சி. கில்னானி, நுரையீரல் மருத்துவ நிபுணர் தலைமையில் எய்ம்ஸ் மருத்துவர்கள் குழு 05.10.2016 அன்று வந்தது.*

***25.4.*** *C.W.85 - டாக்டர் ஜி.சி. கில்னானி, அவர்கள் மத்திய அரசின் ஆணைப்படி புது டில்லியிலுள்ள எய்ம்ஸ் மருத்துவமனையின்*

இயக்குநரால் அனுப்பப்பட்டதன் பேரில் ஆலோசனை வழங்க அதாவது *"advisory capacity"* இல் வந்ததாக தெரிவித்தார்.

> *"I was the Leader of the team of Doctors deputed to oversee the treatment rendered at Apollo Hospital to Late Hon'ble C.M." (பக்கம் எண்1, 5 ஆம் வரி)*

***25.5.*** அவர்கள் மருத்துவமனைக்குச் சென்றபோது, மறைந்த முதல்வர் பல நோய்களுடன் ஆபத்தான நிலையில் பல குறைபாடுகளுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதை அவர் புரிந்துகொண்டார். 05.10.2016 அன்று, அவர் மறைந்த முதல்வரை மருத்துவமனையில் பார்த்தபோது, அவர் உயிர் காக்கும் கருவிகளுடன் பொருத்தப்பட்டிருந்தார், அவருடைய இரத்த அழுத்தம் மருந்துகளால் நிலையாக வைக்கப்பட்டிருந்தது. அவர் தனது வருகைகளின் போது ஒன்பது முறை அவரை உடல் ரீதியாக பரிசோதித்ததாக மேலும் உறுதிப்படுத்தினார்.

> *"On seeing her for the first time, my opinion was that she was critically ill suffering from multiple diseases. Though, mortality rate was high, recovery chances were there." (பக்கம் எண்.2, 1ஆம் வரி)*

***25.6.*** பெரும்பாலான இணை நோய்யுற்ற தன்மை பல ஆண்டுகளாக இருந்தன. அவர் கடந்த சில நாட்களாக சிறுநீர் தொற்று நோயால் அவதிப்பட்டு வந்தார், அதுவே செப்டிசீமியாவின் ஆரம்பக் காரணமாகும்.

***25.7.*** *சுகாதாரத் துறை செயலாளர் - C.W.136, 5.10.2016 அன்று எய்ம்ஸ் இயக்குநருக்கு கடிதம் எழுதியுள்ளார், மறைந்த முதல்வருக்கு சிகிச்சை அளிப்பது தொடர்பாக R.2- மருத்துவமனை மருத்துவர்களுக்கு உதவி செய்யக் கோரி, அவர்கள் அன்று மாலையே வந்தனர். எய்ம்ஸ் மருத்துவர்கள் தங்கள் வருகைகளின் போது, R.2 மருத்துவமனை மருத்துவர் டாக்டர் இராம் கோபாலகிருஷ்ணன் மற்றும் டாக்டர் ராஜீவ் சோமன் மற்றும் பாம்பேயைச் சேர்ந்த டாக்டர் ஜிகி டிவாடியா மற்றும் இங்கிலாந்து மருத்துவர் டாக்டர் ரிச்சர்ட் பீலே ஆகியோரால் ஏற்கனவே R.2 மருத்துவமனை நோய் விவர குறிப்புத்தாள் (கேஸ் ஷீட்டில்) செய்யப்பட்ட ஒப்புதல்களை அவர்கள் கவனத்தில் எடுத்துள்ளனர். மேற்சொன்ன அனைவரும் விரைவில் வால்வு அறுவை சிகிச்சை செய்ய பரிந்துரைத்துள்ளனர். எய்ம்ஸ் மருத்துவர்களின் முதல் வருகை பதிவு செய்யப்பட்ட போது மறைந்த முதல்வரின் இதய நோயைக் கருத்தில் கொள்ள எய்ம்ஸ் மருத்துவர்கள் போதுமான அக்கறை காட்டவில்லை என்பது அவர்களின் சான்றுகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அது அவர்களின் அறிக்கையிலும் குறிப்பிடப்படவில்லை.*

## *26. ட்ரக்கியோஸ்டமி (07.10.2016)*

***26.1.*** *27.09.2016 அன்று நடைபெற்ற காவேரி கூட்டத்திற்கு பிறகு, அன்று இரவு மற்றும் அடுத்த நாள் அதிகாலையில், மறைந்த முதல்வருக்கு இருமல் இருந்தது மற்றும் அவரது உடல்நிலையில் கடும் பின்னடைவு ஏற்பட்டதுடன் அவருக்கு மூச்சு விடுவதில் சிரமும் கடும் மூச்சுத்திணறலும் ஏற்பட்டது. அதன் பின்னர் அவர் வெண்டிலேட்டருடன் இணைக்கப்பட்டார். அவர் ஏழு நாட்களுக்கும் மேலாக வென்டிலேட்டர் துணையுடன் இருந்ததால், 07.10.2016 அன்று அதிகாலையில் C.W.74 - டாக்டர். பாபு மனோகர், மறைந்த முதல்வருக்கு மூச்சுக்குழாய் அறுவைசிகிச்சை (ட்ரக்கியோஸ்டமி) செய்த பிறகு, மறைந்த முதல்வர் மயக்க நிலையில் இருந்தார், 14.11.2016 க்குப் பிறகு அவரால் பேச முடிந்தது. மூச்சுக்குழாய் அறுவை சிகிச்சைக்குப் (ட்ரக்கியோஸ்டமி) பிறகும், அவர் வாய்வழியாகவே உணவை எடுத்துக் கொண்டார், மேலும் 14.11.2016 க்குப் பிறகு அவருக்கு பேசுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அப்போது ஐஸ்கிரீம் சாப்பிட்டால் தவறில்லை என்றும், அறுவை சிகிச்சைக்கு பிறகு நான்கைந்து நாட்களுக்கு மேல் பேச முடியாமல் போனதாகவும், அதன் பிறகு பேச பயிற்சி அளிக்கப்பட்டதாகவும் குறுக்கு விசாரணையில் கூறினார். ஒன்பது நாட்களுக்குப் பிறகு மூச்சுக்குழாய் அறுவைசிகிச்சை (ட்ரக்கியோஸ்டமி) செய்யப்படாவிட்டால், நுரையீரலின்*

*செயல்பாடு குறைந்து, அதன் விளைவாக மற்ற உறுப்புகள் சேதமடையவும் இதயம் செயலிழக்கவும் வாய்ப்பு இருந்தது. 7.10.2016 அன்று மேற்கொள்ளப்பட வேண்டிய சிகிச்சை தாமதமாகியிருந்தால் அவரது குரல்வளை சேதமடையும், அதன் காரணமாக மட்டுமே மூச்சுக்குழாய் அறுவைசிகிச்சை (ட்ரக்கியோஸ்டமி) செய்யப்பட்டது. அப்போது எய்ம்ஸ் மருத்துவர்களும் அங்கு இருந்தனர், அவர்களின் ஆலோசனைப்படியே அது நடந்தது. 14.11.2016 அன்று அவர் முன்னிலையில் மறைந்த முதல்வரை பேசும்படி கூறியபோது, அவர் நாமக்கல் ஆஞ்சநேயர் மற்றும் பிற கடவுள்களின் பெயரைக் குறிப்பிட்டார்.*

***26.2.** C.W.82 - டாக்டர் பாஸ்கரன், மயக்க மருந்து நிபுணர், தனது சாட்சியத்தில் 07.10.2016 அன்று அதிகாலை 4.15 மணிக்கு மறைந்த முதல்வர் மூச்சுக்குழாய் அறுவைசிகிச்சைக்காக (ட்ரக்கியோஸ்டமி) அழைத்து வரப்பட்டார், அவருக்கு மயக்க மருந்து அளிக்கப்பட்டது, காலை 6.15 மணிக்கு, அவர் மீண்டும் அறைக்கு அழைத்து வரப்பட்டார், ஒன்றரை மணி நேரத்தில் அவர் சுயநினைவுக்கு வந்தார் என தெரிவித்தார். C.W.74 - டாக்டர் பாபு மனோகர் CCU அறையில் மூச்சுக்குழாய் அறுவைசிகிச்சை (ட்ரக்கியோஸ்டமி) செய்ததாகவும், அந்த நேரத்தில் அரசு அதிகாரிகள் வெளியே காத்திருந்ததாகவும் அவர் கூறினார். இந்த ஆதாரங்களில் இருந்து சிகிச்சை அளித்த R-2*

*மருத்துவர்கள் இதய கோளாறை தவறி, செப்சிஸ் -க்கு மட்டுமே சிகிச்சை அளித்திருந்தனர் மற்றம் 26.09.2016 அன்றுதான் C.W. 120 – டாக்டர் ராம் கோபாலகிஷ்ணன் வெஜிடேஷன் இருப்பதாகவும் சந்தேகித்தார், மற்றும் 27-ஆம் நாள் இரவில் மறைந்த முதல்வருக்கு மூச்சுதிணறல் மற்றும் மூச்சுவிடுவதில் சிரமம் போன்ற பின்னடைவு காரணமாக, அவரை வென்டிலேட்டரில் பொறுத்தப்பட்டார் மேலும் 28.09.2016 அன்று காலை 10.30 மணிக்கு வெஜிடேஷனின் அளவு உறுதிசெய்யப்பட்டது. இந்த சான்றுகளிலிருந்து, போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்த பிறகு அவர் ஏழு நாட்களுக்கும் மேலாக வெண்டிலேட்டரில் இணைக்கப்பட்டிருந்தார் என்பதால், மூச்சுக்குழாய் அறுவைசிகிச்சை (ட்ரக்கியோஸ்டமி) 07.10.2016 அன்று செய்யப்பட்டது.*

## *27.* எய்ம்ஸ் மருத்துவர்களின் இரண்டாவது மற்றும் மூன்றாவது வருகைகள்

***27.1.*** *C.W.85- டாக்டர். G.C.கில்னானி, அவரது சாட்சியத்தில், 12.10.2016 அன்று அவரது வருகைக்குப் பிறகு, மறைந்த முதல்வரின் முன்னேற்றத்தைப் பொறுத்து, அவ்வப்போது வென்டிலேட்டர் நீக்கப்பட்டது என்று கூறினார். பொதுவாக, இரவு 10:00 மணிக்கு மற்றும் காலை 06:00 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில். அவர் வென்டிலேட்டரின் துணையுடன் இருந்தார்.:*

*"மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த காலத்தில் அவர் சுயமாக சுவாசிக்கவே இல்லை." (பக்கம் எண்.2, 9வது வரி) என்று அவர் கூறினார்.*

***27.2.*** *அவர் எப்படி சுவாசித்தார் என்ற கேள்விக்கு, வென்டிலேட்டரின் உதவியால் அல்ல என்றும், ஆனால் ஆக்ஸிஜனின் உதவியுடன் தான் என்றும் C.W.85 கூறினார். நுரையீரலுக்கு உள்ளே தொற்று இருப்பதையும், நுரையீரலுக்கு வெளியே திரவ சுரப்பு (Pleural Effusion) இருப்பதையும் அவர் கண்டறிந்தார். (பக்கம் எண்.2-12 வது வரி) சாட்சி, திரவத்தில் தொற்று இல்லை என்று அவர் தானாக முன் வந்து கூறினார். நிச்சயமாக, திரவத்தை வெளியேற்ற, குழாய் மூலம் tapping (அகற்றுதல்) செய்யப்பட்டது. அவ்வப்போது தொடர்ந்து திரவம் வெளியேற்றப்பட்டதாக அவரிடம் கூறப்பட்டது. அவர்கள்*

மருத்துவமனைக்குச் சென்று அப்போலோ மருத்துவர்கள் குழுவுடன் ஆலோசனை நடத்தினர்.

> *"We came in an advisory capacity", and "we had seen the treatment given to Late C.M." ( பக்கம் எண்.2, 17வது வரி)*
> *During the daytime she was on Oxygen and during night-time she was on ventilation.*
> *"During his third time visit (13.10.2016 to 15.10.2016) I have noticed that she was in sedation because she was on ventilation."*
> *(பக்கம் எண்.3 முதல் வரி)*
> *"According to me, the fluid collection in the Lungs (Pleural effusion) occurred due to fluid over-load." (பக்கம் எண்.3, 5வது மற்றும் 6வது வரிகள்)*

என்று சாட்சியளித்தார்.

***27.3.*** *C.W.84-* டாக்டர் நிதிஷ் நாயக், எய்ம்ஸ் மருத்துவர், மறைந்த மாண்புமிகு முதல்வரின் நாடித் துடிப்பு, இதயத் துடிப்புகளை நேரடியாக பரிசோதித்தார், இரண்டும் சரியாக இருந்தது. அவர்களால் கவனிக்கப்பட்டபடி, கட்டுப்படுத்த முடியாத சர்க்கரை, நுரையீரல் காயம், எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறி, சிறுநீர் தொற்று, செப்டிசீமியா, உடல் பருமன், எல்.வி ஃபெய்லியர் *(Diastolic Dysfunction)* போன்ற பல நோய்களால் அவர் அவதிப்பட்டதாக கூறினார். அவரது மறைவுக்குப் பிறகு பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அப்போலோ சிகிச்சை சுருக்கத்தில், குறிப்பிடப்பட்டிருந்த வெஜிடேஷனின் அளவும், சரியானது என்றும் கண்டறியப்பட்டது. பொதுவாக, இதயத்தின் வலது பக்கத்தில் உள்ள

ஆக்ஸிஜனற்ற இரத்த நுரையீரலுக்கு கொண்டு செல்லப்படுகிறது, அங்கு அது ஆக்ஸிஜனேற்றப்பட்டு இதயத்தின் இடது பக்கத்தை அடைந்து, இடது ஆட்ரியம் வழியாக இடது வென்ட்ரிக்கிளுக்குச் சென்று அது மிட்ரல் வால்வு வழியாகச் செல்ல வேண்டும். பொதுவாக, இந்த வால்வு 130 மி.லி இரத்தத்தை கொண்டுசெல்லும். இதில் 70 மி.லி. அயோர்டிக் வால்வு மூலம் எடுக்கப்படுகிறது மற்றும் 60 மி.லி. இடது வென்ட்ரிக்கிள் அறையில் இருக்கும். இது பொதுவான செயல்பாடு ஆகும். பொதுவாக, இந்த வால்வு சரியாகச் செயல்படவில்லை மற்றும் திறம்பட மூடவில்லை என்றால், அயோர்டா வால்வு வழியாகச் செல்ல வேண்டிய இரத்தம் இடது ஆட்ரியத்திற்குத் திரும்பும், இது regurgitation (மீளுருவாக்கம்) என்று அழைக்கப்படுகிறது. இந்த நிகழ்வில் மிட்ரல் வால்வில் வெஜிடேஷன் இருப்பதாக அப்போலோ மருத்துவமனை கண்டறியப்பட்டுள்ளது. C.W.84-டாக்டர் நிதிஷ் நாயக், அவரது சாட்சியத்தில் (பக்கம் எண்.2, 15வது வரி) மறைந்த முதல்வரை பரிசோதித்ததில், அறுவை சிகிச்சை தேவையில்லை என்று கூறினார்.

**27.4.** '2015 ESC Guidelines for the management of infective endocarditis', என்ற புத்தகத்தில் பக்கம் எண்.3083- ஐ காட்டியபோது, புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுடன் அவர் உடன்படுவதாகக் கூறினார். அந்த புத்தகத்தில் கூட முன்கூட்டியே அறுவை சிகிச்சை செய்வது பற்றி பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவரது கூற்றுப்படி, 40 வயதுக்கு மேற்பட்ட ஒரு நோயாளிக்கு, இதய அறுவை சிகிச்சைக்கு

*திட்டமிடப்பட்டிருந்தால், நோயாளியை அறுவை சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டின் ஒரு பகுதியாக ஆஞ்சியோகிராஃபிக்கு உட்படுத்தப்பட வேண்டும்.*

***27.5.*** *அவர் ஒரு "இதயவியல் மருத்துவர்". மறைந்த முதல்வருக்கு அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சையை மேற்பார்வையிடுவதற்கான குழுவில் ஒரு அங்கமாக இருக்குமாறு இந்திய அரசின் ஆணையைத் தொடர்ந்து, எய்ம்ஸ் இயக்குனரால் உத்தரவிடப்பட்டாலும், ஒவ்வொரு வருகைக்குப் பிறகும், அவர்கள் அறிக்கையைத் தயாரித்து எய்ம்ஸ் இயக்குநரிடம் அளித்துள்ளனர். மறைந்த முதல்வர் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக ஒரு சர்ச்சை எழுந்தையடுத்து அப்போதைய முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி, சுகாதாரத் துறைச் செயலரை பணித்து, எய்ம்ஸிடம் இருந்து அறிக்கையைப் பெற்றார், அவ்வறிக்கை 17.03.2017 அன்று அப்போதைய சுகாதாரத் துறைச் செயலராக இருந்த C.W.136-இடம் எய்ம்ஸ் இயக்குநரால் ஒப்படைக்கப்பட்டது.*

***27.6.*** *மருத்துவர்கள் குழுவுடன் அவற்றை ஆய்வு செய்த பிறகு, அவர்கள் அறிக்கைகளை வழங்கினர். எய்ம்ஸ் குழுவில் ஏன் இதய அறுவை சிகிச்சை நிபுணர் சேர்க்கப்படவில்லை என்று C.W. 84 - ரிடம் கேள்வி எழுப்பியபோது, "ஏனென்றால், அப்போலோ மருத்துவமனையில் முதல்வருக்கு சிகிச்சையளிக்க இதய அறுவை சிகிச்சை நிபுணர்கள் இருக்கிறார்கள்" (பக்கம் எண்.2, 19வது வரி) என கூறப்பட்டது.*

***27.7.*** *C.W.86 - டாக்டர் அஞ்சன் த்ரிகா, மயக்க மருந்து நிபுணர், நோயாளியையும், நோய் விவர குறிப்புத்தாளையும் (Case Sheet) பார்த்தது, அவர் ஒரு கவலைக்கிடமான நோயாளி என்பதை அவர் புரிந்துகொண்டதாகக் கூறினார். அவரது முன்னிலையில், அவரோ, அவரது மருத்துவர் குழுவோ அப்போலோ மருத்துவர்கள் குழுவோ அவருக்கு ஏற்பட்டிருந்த நோய்களைப் பற்றி அவரிடம் விளக்கி கூறவில்லை (ஏனெனில் அவர் வெண்டிலேட்டரில் இருந்தார்). நோயாளியின் நிலை மற்றும் வெஜிடேஷன் அளவைப் பொறுத்து அறுவை சிகிச்சை பரிந்துரைக்கப்படலாம் என்று அவர் 2 ஆம் – பக்கத்தில் கருத்து தெரிவித்தார்.*

> *"பொதுவாக, 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு டயஸ்டாலிக் செயலிழப்பு என்பது அசாதாரணமான ஒன்றல்ல. அறிகுறிகள் இல்லாமல் இருக்கலாம். வால்வில் வெஜிடேசன் இருந்தால் அறிகுறிகள் இருக்கலாம். நோயாளியின் நிலை மற்றும் வெஜிடேசனின் அளவைப் பொறுத்து அறுவை சிகிச்சை பரிந்துரைக்கப்படலாம்."*

***27.8.*** *எய்ம்ஸ் மருத்துவர்கள் அவர் இரண்டு வெஜிடேசனால் பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்தனர். இரண்டு தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணர்கள் மற்றும் இரண்டு தீவிர சிகிச்சை மருத்துவர்களும் early valve surgery-க்குப் பரிந்துரைத்தனர். அதன் பிறகு தான், AIIMS குழுநோயாளிக்கு pleural effusion மற்றும் pulmonary oedema இருப்பதைக்கண்டறிந்தது. வெண்டிலேசன் காரணமாக, அவருக்கு*

ட்ரக்கியோஸ்டமி செய்யப்பட்டது. அதன்பிறகும், எய்ம்ஸ் மருத்துவர்கள் அறுவை சிகிச்சைக்கு ஆலோசனை வழங்குவதற்கு என்ன அறிகுறியை எதிர்பார்த்தனர்? குறிப்பிடத்தக்கது என்னவெனில், எந்த அறுவை சிகிச்சை நிபுணரும் அழைக்கப்படவில்லை, அதேசமயம் மயக்கமருந்து நிபுணர் வரவழைக்கப்பட்டார். மேலும், எய்ம்ஸ் மருத்துவர்கள் R.2 மருத்துவமனையின் சிகிச்சையை "மேற்பார்வையிடவே" இங்கு வந்ததாகக் கூறுவார்கள் என்பதை ஆணையம் குறிப்பிட விரும்புகிறது. "மேற்பார்வை" என்பதன் பொருள் என்ன? "வேலை சரியாக நடக்கிறதா அல்லது மக்கள் சரியாக நடந்துகொள்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தயாரையாவது/ஏதாவது ஒன்றைப் பார்ப்பது" என்பது அகராதியின் பொருள். மேற்பார்வை என்பது "சரியான சிகிச்சை அளிக்கப்படுவதை அவர்கள் உறுதி செய்யவேண்டும்" என்பதாகும். இதைக் காண்கையில், அவர்கள், சென்ட்ரலைஸ்டு ஏ.சி., ஸ்டேட் கெஸ்ட் ஹவுஸ் கிடைத்தாலும், எக்சிகியூட்டிவ் கிளாஸ் ஏர்டிக்கெட் மற்றும் ஸ்டார் ஹோட்டல் வசதிகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. 75 நாட்களுக்கு மேல் உணவு வழங்கி, பலகோடிகள் செலவு செய்து இதையெல்லாம் விருந்தோம்பல் என்ற பெயரில் சுகாதாரத்துறைச் செயலாளர் ஏன் ஏற்பாடு செய்தார் என விசாரணையின் போது

பதிலுரைக்கவேண்டும். (மருத்துவர்களான அவர்கள் எக்ஸிகியூட்டிவ் வகுப்பிற்கு தகுதியானவர்களா?

**27.9.** C.W-141-டாக்டர்.நிகில் டாண்டன், AIIMS மருத்துவமனையின் உட்சுரப்பியல் மற்றும் வளர்சிதை மாற்றத் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் ஆவார். அப்போலோ மருத்துவமனையில் மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, 04.12.2016 அன்று காலை 09:00 மணிக்கு முன்பு ஒருமுறை அவரைச் சந்தித்ததாகக் கூறினார். அவர் அறைக்குச் செல்வதற்கு முன், அவரது நோய் விவர குறிப்புத்தாளைப் (Case Sheet) பார்த்துவிட்டு, அப்போலோ மருத்துவமனையில் உள்ள உட்சுரப்பியல் (Endocrinology) மருத்துவரிடம் கலந்துரையாடினார்.

பக்கம் எண்.1 மற்றும் 2ல் அவர் கூறியது:

> "நான் நோயாளியைப் பார்த்தேன், நான் அவரை மருத்துவ ரீதியாக பரிசோதிக்கவில்லை. நான் அவருக்கு எந்த சிகிச்சையும் அளிக்கவில்லை"
> "அவர்களின் சிகிச்சை முறையில் நான் தலையிடமில்லை." ……………………
> "நான் ஒரு CCU அல்லது தீவிர சிகிச்சை மருத்துவர் அல்ல என்பதால், அறுவை சிகிச்சை தொடர்பாக நான் அறிந்திருக்கவில்லை". .....அவருடைய அறையில் அதிகபட்சமாக ஏழு நிமிடங்கள்தான் இருந்தேன்."

**27.10.** C.W.7-டாக்டர் பாலாஜி, தொடர்பு அலுவலர், வருகை தரும் மருத்துவர்கள் நட்சத்திர ஓட்டல்களில் தங்குவதற்கு ஏற்பாடு செய்தார். உண்மையில், C.W.136 - சுகாதாரத் துறை செயலாளரின்

*விசாரணையின் போது, அவர்கள் ஹோட்டலுக்குச் சென்று எய்ம்ஸ் மருத்துவர்களுக்கு நன்றி தெரிவித்ததாகக் கூறினார், அவர்கள் மறைந்த முதல்வருக்கு மருந்துகளை பரிந்துரைக்காவிட்டாலும், சிகிச்சையை மேற்பார்வையிட்டதாகக் கூறியிருந்தார். சாட்சியங்களைப் படித்ததிலிருந்து, எய்ம்ஸ் மருத்துவர்கள் குழு R.2 மருத்துவமனையின் சிகிச்சை முறை சரியானது என்று சான்றளித்தனர். C.W.136 - அப்போதைய சுகாதாரத்துறைச் செயலாளர் மாநில விருந்தினர் மாளிகையை எய்ம்ஸ் மருத்துவர்களின் பயன்பாட்டிற்கு ஏன் வழங்கவில்லை/ பயன்படுத்தவில்லை என்பதையும், அவர்கள் ஏன் நட்சத்திர ஹோட்டல்களுக்கு மட்டும் எல்லா நேரங்களிலும் அழைத்துச் செல்லப்பட்டனர் என்பதையும் ஆணையத்தால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதை தற்செயலான நிகழ்வாக குறிப்பிடுகிறது. இது அப்போதைய சுகாதாரத்துறைச் செயலாளரால் பதிலளிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாகும், மேலும் அத்தகைய கவனிப்பும் விருந்தோம்பலுக்குப் பின்னர், எய்ம்ஸ் மருத்துவர்களிடமிருந்து "அறுவை சிகிச்சை தேவையில்லை" என்ற அறிக்கையை மட்டுமே அவர்களால் பெற முடிந்தது.*

***27.11.*** *சாட்சியங்களின்படி, AIIMS மருத்துவர்கள் இரண்டாவது மற்றும் மூன்றாவது முறை பார்வையிட்டனர், ஆனால் அவர்கள் 3.12.2016 அன்று தான் முதல் முறையாக அறுவை சிகிச்சை தேவையில்லை என்று கூறினர். டாக்டர். ராம் கோபாலகிருஷ்ணன், R.2*

மருத்துவமனை மருத்துவர், டாக்டர்.சமின் ஷர்மா, டாக்டர். ஜிகிடிவாடியா பாம்பே மருத்துவர் மற்றும் இங்கிலாந்து டாக்டர். ரிச்சர்ட் பீலே ஆகியோரின் கருத்தை அவர்கள் கருதிப்பார்த்தனரா என்பதற்கு அறிக்கை மற்றும் சாட்சியத்திலிருந்து எந்த குறிப்பும் கிடைக்கப்பெறவில்லை. அதன்பிறகு, டாக்டர் ஸ்டூவர்ட் ரஸ்ஸலிடம் வீடியோ கான்பரன்ஸ் மூலம் கலந்தாலோசிக்கப்பட்டர். 25.11.2016 அன்று தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர். சமின் ஷர்மா, நேரில் வந்து நோயாளியையும், நோய் விவர குறிப்புத்தாளைப் (Case Sheet) பார்த்துவிட்டு, ஆஞ்சியோ செய்ய ஒப்புக்கொண்டார். டாக்டர். நிதிஷ் நாயக், C.W.84, அறுவை சிகிச்சை தேவையில்லை என்று முதன்முறையாக 03.12.2016 அன்று எழுதியது ஏன் என்று தெரியவில்லை. 17.03.2017 அன்று அரசினால் பெறப்பட்ட அறிக்கை Ex.A.1 தொடர் எனக் குறியீடுப்பட்டதில் அவ்வாறு அவர் கூறியிருந்தபோதிலும், அதில் அவர்கள் அதற்கான காரணத்தைத் தெரிவிக்கவில்லை.

**27.12.** மறைந்த முதல்வருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையை மேற்பார்வையிட R.2 மருத்துவமனைக்குச் சென்றதாக எய்ம்ஸ் மருத்துவர்கள் குழுவினர் கூறினர். 3.12.2016 அன்று அறுவை சிகிச்சை தேவையில்லை என்று இதைப் பதிவு செய்த, 24 மணி நேரத்திற்குள் மறைந்த முதல்வருக்கு இதய செயலிழப்பு ஏற்பட்டதனை பார்க்கும்போது, இவ்வாணையம் மனம் வருந்தி அதிருப்தியை பதிவு செய்கிறது. இதுவும் மனதில் கொள்ளப்பட வேண்டும். எனவே,

இதிலிருந்து, மேற்கூறிய மருத்துவர்களின் கருத்துக்களை கவனிக்க எய்ம்ஸ் மருத்துவர்கள் தவறிவிட்டனர் என்பது தெளிவாகிறது, மேலும் இது ஆணையத்தால் அழுத்தமாக பதிவு செய்யப்பட்டது.

## *28. எய்ம்ஸ் மருத்துவர்களின் அறிக்கை*

***05.10.2016 முதல் 07.10.2016 வரை***

***28.1.*** *டாக்டர் G.C. கில்னானி, டாக்டர் அஞ்சன் ட்ரிகா மற்றும் டாக்டர் நிதீஷ் நாயக் ஆகியோர் அடங்கிய குழு அப்போலோ மருத்துவமனைகளுக்குச் சென்று, மறைந்த முதல்வருக்கு சிகிச்சை அளித்து வரும் அனைத்து நிபுணர்களுடனும் ஆலோசனை நடத்தினர். 05.10.2016 முதல் 07.10.2016 வரை வருகை தந்தது தொடர்பாக அவர்களது அறிக்கையில், மறைந்த முதல்வரின் மருத்துவ அறிக்கை மற்றும் நோய் பாதிப்புகள் பற்றிய விவரங்கள் உள்ளன. 22.09.2016 அன்று அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது, மாறுகின்ற-சுயநினைவுடன் (altered level of consciousness) மற்றும் குறைந்த இரத்த அழுத்ததுடன் இருந்தார் என்று அறிக்கை பதிவு செய்கிறது. முன்னர் 7 நாட்களாக அவருக்கு காய்ச்சல் இருந்ததாகவும், சிறுநீர் பாதையில் நோய்த்தொற்று இருப்பது கண்டறியப்பட்டு, வாய்வழி நுண்ணுயிர் எதிர்ப்பிகளுடன் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. அடோபிக் டெர்மடிடிஸிற்கான சிஸ்டமிக் கார்டிகோ-ஸ்டீராய்டுகள் அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது என்பது மேலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நேரத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள், அவருக்கு அளிக்கப்பட்ட நுண்ணுயிர் எதிர்ப்பிகள் (antibiotics) மற்றும் அவருக்கு அளிக்கப்பட்ட பூஞ்சை*

எதிர்ப்பு சிகிச்சையின் *(anti-fungal treatment)* விவரங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவரது *TTE, mitral annular calcification and mild mitral regurgitation* ஆகியவற்றை வெளிப்படுத்தியது. இடது வென்ட்ரிகுலர் சிஸ்டாலிக் செயல்பாடு சாதாரணமாக இருந்தாலும், டயஸ்டாலிக் டிஸ்ஃபன்ஷனுக்கான சான்றுகள் இருந்தன. இருபக்க திரவ சுரப்பு *(Bi-Pleural Effusion)* பதிவு செய்யப்பட்டுள்ளது.

***28.2.*** மேலும் *28.09.2016* அன்று, அவருக்கு கடுமையான மூச்சுத் திணறல் ஏற்பட்டதாகவும் சுயநினைவு நிலை மாறியதாகவும் *(altered level of consciousness)*, ப்ரான்கோ டயாலிசிஸ் மற்றும் நான் இன்வேசிவ் வெண்டிலேசனாலும் அவர் குணமாகாததால், மெக்கானிக்கல் வெண்டிலேசன் அளிக்கப்பட்டது என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. எய்ம்ஸ் குழு வருகை தந்த அன்று மறைந்த முதல்வர் முழுமையாக வென்டிலேட்டர் உதவியுடன் இருந்தார், மற்றும் மார்பு *x-rays* இலிருந்து, *pulmonary oedema* வைக் குறிக்கும் *bi-lateral pleural effusion and bilateral pulmonary infiltrates* இருந்தன. எய்ம்ஸ் குழு அவரைப் பரிசோதித்து, அறுவை சிகிச்சை அரங்கில் *ENT* அறுவை சிகிச்சை நிபுணரால் மூச்சுக்குழாய் அறுவை சிகிச்சை *(Tracheostomy)* செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. அதிகப்படியான அறுவை சிகிச்சை ஆபத்து, எண்டோகார்டிடஸ் தொற்றுக்கான முழுமையடையாத சிகிச்சை மற்றும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது மிதமான *regurgitation* அதிகரிக்காத காரணத்தால், இந்த நேரத்தில் உடனடியாக *mitral regurgitation* –க்கான

அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டாமென இதயநோய் நிபுணர் கருத்து தெரிவித்துள்ளார். இருப்பினும், அவர் வேறு எந்த ஒரு மாற்றத்தையும் கூர்ந்து கண்காணிப்பதற்கு பரிந்துரைத்தார், ஏனெனில் இது ஏற்படுத்தும் இன்பெக்டிவ் எண்டோகார்டிடிஸ் *(Infective endocarditis)* அறுவை சிகிச்சைக்கான அறிகுறியைத் தூண்டும். அதிகாலை *4.30* மணிக்கு அவர் பரிசோதிக்கப்பட்டார். *07.10.2016* அன்று மூச்சுக்குழாய் அறுவைசிகிச்சை *(Tracheostomy)* செய்யப்பட்டது, அதனால் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. மேலும் காலை *11* மணியளவில், அவர் வாய்மொழி கட்டளைகளுக்கு பதிலளித்தார். மறைந்த முதல்வர் முழுமையான வெண்டிலேட்டர் மற்றும் பிற மருந்துகளின் ஆதரவுடனும் இருந்தார். அவர் தொடர்ந்து உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாகவும், தற்போதைய நிலையில் இருந்து மீண்டு வர சிறிது காலம் ஆகும் என்றும் எய்ம்ஸ் குழுவினர் கருத்து தெரிவித்தனர்.

***<u>09.10.2016 மற்றும் 10.10.2016</u>***

***28.3.*** *C.W.85-* டாக்டர். *G.C.* கில்னானி, நெஞ்சுபகுதிக்கான எக்ஸ்ரேயில் *Lung Shadows* அதிகரித்திருப்பதிலிருந்து அவரது உடல்நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் கண்டார். சிகிச்சை அளிக்கும் மருத்துவரிடம் ஆலோசித்த பிறகு, நுரையீரலின் இருபுறமும் உள்ள திரவ சுரப்பு *(Pleural Effusion)* காரணமாக அவரது சுவாச அளவுருக்களில் மாற்றம் ஏற்பட்டதனால் அவருக்கு

உடல்நலத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக டாக்டர் *G.C.* கில்னானி கருத்துத் தெரிவித்தார். எதிர்மறை திரவ சமநிலையை அடைவதற்கும் திரவத்தை வெளியேற்றுவதற்கும் சிகிச்சையை தீவிரப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

***28.4.*** சிறுநீர் பாதையில் நோய்த்தொற்றை தொடர்ந்தது, மூச்சுகுழாய் அஸ்பிரேட் (நுரையீரலில் இருந்து சுரக்கும் திரவத்திலிருந்து) அதே பாக்டீரியா பரிசோதிக்கப்பட்டதால் மேலும் பொருத்தமான நுண்ணுயிர் எதிர்ப்பி *(antibiotics)* அளிக்கப்பட்டன, இது ஏழு நாட்களுக்கு தொடர முடிவு செய்யப்பட்டது. அவர் முழு மெக்கானிக்கல் வெண்டிலேசனில் இருந்தார், மேலும் உயிர்க்காக்கும் கருவிகளிலிருந்து விரைவாக மீள்வதற்காக மயக்க மருந்தின் அளவைக் குறைக்க விவாதிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. அவரது தற்போதைய நிலை குறித்து சுகாதாரத்துறை அமைச்சர் மற்றும் செயலாளரிடம் விளக்கப்பட்டது. மறைந்த முதல்வரின் உடல்நிலை மெதுவாக முன்னேறி வந்தது, ஆனால் உயிர்காக்கும் கருவிகளின் துணையுடன் நிலையாக இருந்தது மற்றும் அளிக்கப்படும் சிகிச்சையைப் பொறுத்து அவர் மருத்துவமனையில் நீண்ட காலம் அனுமதிக்கப்படவேண்டியிருக்கும் என தெரிவிக்கப்பட்டது.

***<u>13.10.2016 முதல் 15.10.2016</u>***

***28.5.*** *முதன் முதலில் மறைந்த முதல்வரைப் பார்த்த மருத்துவர்கள் மீண்டும் வந்தனர். அவர் இன்னும் உயிர்காக்கும் கருவிகளின் துணையுடன் இருந்தார். மேலும் ப்ளூரல் குழியில் திரவம் சேர்ந்திருந்தது, அது பிக்டெயில் வடிகுழாய் மூலம் வெளியேற்றப்பட்டது. அவர் வாய்மொழி கட்டளைகளுக்கு பதிலளித்தார் மற்றும் உதடு அசைவுகள் மூலம் தொடர்பு கொண்டிருந்தார் மற்றும் அவரது கால்களையும் அவரே நகர்த்தினார். CT ஸ்கேனுக்குப் பிறகு, AIIMS குழுவும், நிபுணர்களும் கூடி, திரவ சுரப்பிற்காக (Pleural Effusion) எந்த செயலிலும் தலையீடு செய்ய வேண்டாம் என்றும், எதிர்மறை திரவ சமநிலை மற்றும் உயிர் காக்கும் கருவிகளுடன் அதே சிகிச்சையைத் தொடரவும் முடிவு செய்தனர். 14.10.2016 அன்று டாக்டர் ஸ்டூவர்ட் ரஸ்ஸலுடன் வீடியோ கான்பரன்ஸ் நடந்தது. 15.10.2016 அன்று அவர் நன்றாக இருந்தார், அவருடைய இரத்த ஆக்ஸிஜன் அளவுருக்கள் மேம்பட்டன. அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகளை சந்தித்து, அவர் பூரண குணமடைய சிறிது காலம் ஆகும் என்று தெரிவிக்கப்பட்டது. 15.10.2016 அன்று மருத்துவர்கள் குழு வெளியேறும் முன் மருத்துவ முன்னேற்றம் சரியான விதத்தில் இருந்ததாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது ஊக்கமளிக்கும் விதத்தில் இருந்தது.*

***03.12.2016***

***28.6.*** *C.W.141-டாக்டர். நிகில் டாண்டன், எய்ம்ஸ் மருத்துவமனையின் உட்சுரப்பியல் துறையிலிருந்து, முந்தைய சந்தர்ப்பங்களில் அவரைச் சந்தித்த மூன்று மருத்துவர்களுடன் வந்தார். அவர் நன்றாக முன்னேறி வருவதாகவும், தொடர்ந்து பிசியோதெரபி செய்து வருவதாகவும் குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டது. அவர் ட்ரக்கியோஸ்டமியில் இருந்தார் மற்றும் இரவில் அவருக்கு குறைந்தபட்ச கவனிப்பே தேவைப்பட்டது. அவர் பகலில் குறைந்த அளவு ஆக்சிஜன் துணையுடன் முழு சுயநினைவுடன் இருந்தார். அவரால் 20 நிமிடங்கள் நாற்காலியில் உட்கார முடியும் ஆனால் நரம்புத்தசை பலவீனம் காரணமாக நிற்க முடியவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்பு செய்யப்பட்ட (electrophysiological study) மின் இயற்பியல் பரிசோதனையில் நரம்பியல் நிபுணரின் கருத்து விவாதிக்கப்பட்டது. மறைந்த முதல்வருக்கு பிசியோதெரபி தேவைப்படும், ஆனால் தீவிர நோயான பாலிநியூரோபதியைக் கருத்தில் கொண்டு, முழுமையாக குணமடைய குறைந்தது பல வாரங்கள் முதல் பல மாதங்கள் வரை ஆகும் என்று குழு கருத்து தெரிவித்தது. நாளமில்லா நோய்க்குறியியல் (Endocrine pathology) காரணமாக இரத்த அழுத்தத்தில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படுவதற்கு சாத்தியமில்லை என்றும், தற்போதைய நிலையில் non-invasive cardiology investigation அல்லது intervention சுட்டிக்காட்டப்பட்டது என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது. இங்கு ஆஞ்சியோ செய்யக்கூடாது என்று*

*கூறியுள்ளனர். 03.12.2016 அன்று எய்ம்ஸ் மருத்துவர்கள் கூறியது போல், கேஸ் ஷீட்டிலுள்ள வரிகளுக்கு இடையில் (கோப்பு எண்.4, பக்கம் எண்.566 இல்) குறிப்பிடப்பட்டுள்ளது:*

> *"S/B AIIMS doctor –*
> *no plan Coronary angio or MIBG/PET".*

***05.12.2016***

***28.7.*** *டாக்டர்.கில்னானி, டாக்டர் அஞ்சன் த்ரிகா, டாக்டர். R.K.நரங், டாக்டர். தேவகௌரோ, (இருதய மற்றும் வாஸ்குலர் அறுவை சிகிச்சை) ஆகியோர் மருத்துவமனைக்குச் சென்றனர். குழு டாக்டர் பிரதாப் C ரெட்டி மற்றும் முன்னணி மருத்துவர்களின் குழுவுடன் கலந்துரையாடியது, அவர்கள் மாரடைப்பு மற்றும் cardiopulmonary resuscitation-ஐப் பற்றியும் ECMO-வுடன் இணைக்கப்பட்டது பற்றியும் அவர்களுக்குத் தெரிவித்தனர், நரம்பியல் நிபுணரின் கருத்துப்படி, hypothermia (தாழ்வெப்பநிலை) காரணமாக, அவரது நரம்பியல் நிலைகளை மதிப்பிட முடியவில்லை. உடல் வெப்பநிலை இயல்பு நிலைக்கு கொண்டு வரப்பட்டது மற்றும் இரவு 10 மணியளவில், ECMO குழாயை இணைத்தது, பேஸ் மேக்கரை அணைத்தது ஆகியவை இதயம் செயல்படவில்லை என்பதைக் குறிக்கிறது மற்றும் உயிர் காக்கும் கருவிகளின் பயனற்ற தன்மையைக் குறிக்கும் அனைத்து அளவுருக்களும். நரம்பியல் முன்னேற்றம் எதுவும் இல்லை என்பதைக் குறிக்கிறது. தொடர்ந்து, டாக்டர் பிரதாப் C ரெட்டி தலைமையில் கூட்டம் நடந்தது, சிகிச்சை குழுவினர், மறைந்த முதல்வரின் குடும்ப உறுப்பினர்களுடன் உயிர் காக்கும் கருவிகளின்*

பயனற்ற தன்மை குறித்தும் தற்போதைய மருத்துவ நிலை குறித்து விவாதிக்கவும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்யப்பட்டது.

***28.8.*** *மாலை 04.12.2016 அன்று, 4.30 மணிக்கு இதயம் செயலிழந்த பிறகு அவருக்கு 45 நிமிடங்களுக்கு CPR அளிக்கப்பட்டு, பின்னர் ECMO உடன் இணைக்கப்பட்ட பிறகு, ECMO சிகிச்சையைத் தொடர முடியுமா, அப்படியானால், அதை எத்தனை நாட்களுக்கு நீட்டிக்க முடியும் என்பதை தெளிவுபடுத்திக் கொள்வதற்காக மறைந்த முதல்வரை பார்க்க இதயவியல் துறை பேராசிரியர் C.W.142 டாக்டர்.தேவாகொளரவ் வேலாயுதம் அவர்களின் உதவியை அப்போலோ மருத்துவமனை நாடியது. ECMO வைத் தொடர்வதால் எந்தப் பயனும் இல்லை என்று அப்போலோ மருத்துவர்களே முடிவு செய்து, அவரும் ஒப்புக்கொண்டார். ECMO எப்போது நிறுத்தப்படும் என்று கூறுவதற்கு அறுவை சிகிச்சை நிபுணராக கடைசி நிமிடத்தில் அவரை அழைத்ததாக அவர் மேலும் கூறினார். அவர் மாலை 5.00 மணிக்கு மருத்துவமனைக்கு வந்தார். 5.12.2016 அன்று. ECMO உடன் இணைப்பதால் மட்டும் ஒரு நபருக்கு உயிரளிக்க முடியாது என்று அவர் கூறினார். மேலும், 45 நிமிடங்களுக்கு CPR அளிக்கப்பட்ட பிறகும், எந்தப் பயனும் இல்லை என்றால், அவர்கள் நோயாளியை இறந்தவாராக உடனடியாக அறிவிப்பார்கள் என்று வலியுறுத்தினார். ECMO உடன் இணைப்பது இதயத்திற்கு புத்துயிர் அளிக்கும் முயற்சியாகும்.*

*பக்கம் 2 இல் அவர் பின்வருமாறு கூறியுள்ளார்.*

> *"Normally, if there was no recovery, even after 45 minutes CPR is done, we would declare."*

*சாட்சி 5.12.2016 அன்று AIIMS குழுவுடன் முதல் முறையாக R.2 மருத்துவமனைக்குச் சென்று, 5.12.2016 அன்று மாலை 5.00 மணிக்குப் பிறகு நோயாளியைப் பார்த்தார். (இரவு 11.30 மணிக்கு இறந்ததாக அறிவிக்கப்பட்டது). அப்பல்லோ மருத்துவமனையின் குறுக்கு விசாரணையில் (கோப்பு எண்.23 ECHO கார்டியோகிராம் மற்றும் ஹோல்டர் மானிட்டர் சோதனை அறிக்கையைப் பார்த்த பிறகு) அவரது இதய நிலை நன்றாக இருப்பதாகவும் அறுவை சிகிச்சை தேவையில்லை என்றும் கூறினார். அவரது சாட்சியத்தில் இருந்து அப்பல்லோ மருத்துவமனை எய்ம்ஸுக்கு தகவல் அளித்தது மறைந்த முதல்வர் ECMO உடன் இணைக்கப்பட்டு, ECMO சிகிச்சையைத் தொடரலாமா வேண்டாமா என்பதைக் கண்டறியுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார், இதற்காக மட்டுமே அவர் அழைக்கப்பட்டார் என்பது தெரியவருகிறது. R.2 மருத்துவமனையின் கோட்பாட்டின்படி, எந்த தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணரும் அவசியமில்லை, பிறகு ஏன் இந்த கடைசி நிமிடத்தில் C.W.142 அழைக்கப்பட்டார். இதுவே R.2 மருத்துவமனையின் சூழ்ச்சியை அம்பலப்படுத்துகிறது.*

## ***29. R.2 - அப்போலோ மருத்துவமனையில் மறைந்த முதல்வரின் உணவு முறை***

***29.1.*** *C.W.7 - டாக்டர். P.பாலாஜி, ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையின் மருத்துவர், அப்போலோ மருத்துவமனையில் பகுதிநேர மருத்துவராகவும் இருந்தார். மறைந்த முதல்வருக்கு சிகிச்சையளிக்கப்பட்ட நேரத்தில், அரசு மருத்துவராகவும், R.2 – அப்போலோ மருத்துவமனையில் தொடர்பு பணியில் ஈடுபட்டார். மறைந்த முதல்வருக்கு வெளி உணவு எதுவும் வழங்கப்படாமல் மருத்துவமனை உணவு மட்டுமே வழங்கப்பட்டது. மேலும், அவர் அடிக்கடி மெனுவை மாற்றிக் கொண்டிருந்தார். C.W.11 - ஷீலா பாலகிருஷ்ணன், தினமும் காலையில் நடக்கும் briefing சமயத்தில், அவருக்கு ஓட்ஸ் மற்றும் கஸ்டர்ட் ஆப்பிளும் குறைந்த அளவில் வழங்கப்பட்டதாக கூறினார். C.W.14 – J. கிருஷ்ணப்ரியா, தக்காளி சாதம், இட்லி, வெண் பொங்கல் மற்றும் ஐஸ்கிரீம் சாப்பிட்டதாகவும், ஒருமுறை திராட்சை எடுத்துக் கொண்டபோது இருமல் வந்ததாகவும் கூறினார். அவர், 28.09.2016 முதல் மயக்க நிலையில் இருந்ததாகவும், 07.10.2016 முதல் வென்டிலேட்டருடன் இணைக்கப்பட்டும், 15.10.2016 முதல் மயக்கநிலை குறைந்து, உணவை தானாகவே வாய்வழியாக எடுத்துக் கொண்டதாகவும், மருத்துவமனையின் அதிகாரியாக இருந்த, C.W.16 - டாக்டர். சத்யபாமா கூறினார். கேக் அல்லது இனிப்புகள் சாப்பிடுவதைத்*

*தவிர்க்கவில்லை என்றும், மருத்துவமனையில் கூட, அவ்வப்போது அவற்றை எடுத்துக்கொள்வதாகவும், C.W.17-டாக்டர்.K.S. சிவக்குமார் கூறினார். மருத்துவமனையின் சமையல் பிரிவில் அவரது சமையல்கார அம்மா அவருக்காகத் தயாரித்த உணவினை எடுத்துக்கொண்டார். மருத்துவமனையின் கட்டுப்பாட்டில் இருந்தபோதிலும், பழங்கள் மற்றும் இனிப்புகளை அவர் உட்கொண்டார். உயர்தர சாக்லேட் நிறத்தினாலான ஐஸ்கிரீம்களை எடுத்துக்கொண்டு, மிகச்சிறு அளவிலான அரிசி உணவையும் எடுத்துக் கொண்டார். சில சமயங்களில், பரிந்துரைக்கப்பட்ட உணவுக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, நிறைய கேக் மற்றும் இனிப்புகளை எடுத்துக் கொண்டார். நவம்பர் 2016-இல் அவருக்கு வைக்கப்பட்டிருந்த உணவுக் குழாய் அகற்றப்பட்டு, அவர் வாய்வழியாக உணவை எடுத்துக் கொண்டார். மருத்துவர்கள் உணவுக் கட்டுப்பாடுகளை விதித்திருந்தாலும், அவர் அவற்றை முழுமையாகப் பின்பற்றவில்லை. தான் விரும்பிய உணவை உட்கொள்வது மட்டுமே, தனது மகிழ்ச்சிதரும் செயல்களில் ஒன்று என்று கூறியிருந்தாரெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.*

***29.2.*** *C.W.22 - K.T. கார்த்திகேயன் மற்றும் C.W.26 - M. ஐயப்பன், மருத்துவமனையின் சமையலறையில் அவருக்கு உணவு தயாரிக்கப்பட்டதாகக் கூறினர். C.W.31 – R. வீரபெருமாள், வெளி உணவு அனுமதிக்கப்படவில்லை என்றும், மருத்துவமனை உணவு மட்டுமே எடுத்துக்கொண்டதாகவும் தெரிவித்தார். C.W.39 -*

டாக்டர்.ஜெயஸ்ரீ கோபால், அவருக்கு சர்க்கரையின்றி மில்க் ஷேக் அளிக்கப்பட்டதாகக் கூறினார். C.W.49 – C.V. ஷீலா, அவர் பொதுவாக ஒரு ஸ்பூன் சாதத்திற்கு மேல் சாப்பிடுவதில்லை என்றும், செவிலியர்கள் கட்டாயப்படுத்தினால் மட்டுமே இரண்டாவது ஸ்பூன் சாப்பிடுவார் எனவும் கூறினார். C.W.47 – டாக்டர். M.V. ரேணுகா, மறைந்த முதல்வர் உணவியல் நிபுணரின் ஆலோசனையின்படி, மருத்துவமனை உணவை மட்டுமே எடுத்துக் கொண்டார்; பொதுவாக, வெளியிலிருந்து உணவு அனுமதிக்கப்படுவதில்லை. உணவு தயாரிக்கும் இடத்திற்கு வெளியிலிருந்து உணவு வந்ததா என C.W.47-க்கு தெரியவில்லை. C.W.60 - டாக்டர். M. ரமா தேவி, அவர் உணவியல் நிபுணரால் பரிந்துரைக்கப்பட்ட உணவை எடுத்துக் கொண்டதாகவும், தனது சிறப்பு வேண்டுகோளின் பேரில், அவர் அடிக்கடி விரும்பிய உணவை எடுத்துக் கொண்டதாகவும் கூறினார்.

பக்கம் எண். 12-ல், கீழிருந்து 18-ஆவது வரியில், C.W.17 – டாக்டர். K.S. சிவக்குமார் கூறியதாவது:

> “அம்மாவின் வீட்டு சமையல்காரர், அம்மாவுக்குத் தேவையான உணவைத் தயாரிப்பதற்காக மருத்துவமனை சமையலறையில் இருந்தார். மருத்துவமனையின் உணவுக் கட்டுப்பாடுகளுக்கு எதிராக, அம்மா பழங்கள் மற்றும் இனிப்புகளை எடுத்துக் கொண்டார். மருத்துவமனையின் உணவுக் கட்டுப்பாடுகளை மீறி அம்மா உணவு

*உட்கொண்டதால், அம்மாவின் உடல் நலக்குறைவு குறைய வாய்ப்பில்லை என்று கூறுவது சரிதான். உணவுக் கட்டுப்பாடுகளின் முக்கியத்துவத்தைப் பற்றி அம்மாவிடம் நானும் விளக்கினேன், உணவுக் கட்டுப்பாடுகளைப் பற்றி அம்மா அறிந்திருந்ததுடன், அதன் முக்கியத்துவத்தையும் புரிந்துகொண்டார்."*

***29.3.*** *C.W.63 - ஹெலனா, செவிலியர், அவர் இனிப்பு, கேக் அல்லது பழங்களை எடுத்துக்கொள்வதை தான் பார்க்கவில்லை என்றும், ஆனால் தயிர் சாதத்தில், மாதுளை முத்துக்கள் தூவியும், இரவில் மினி இட்லி அல்லது உப்மா ஆகியவற்றை எடுத்துக்கொண்டார் எனவும் கூறினார். காலை 11:00 மணிக்கு, சில சமயங்களில், காபிக்கு பதிலாக மில்க் ஷேக் எடுத்துக்கொள்ளப்படுமெனவும், இரவில், பால், காபி, பழங்கள் போன்ற உணவுகளை சாப்பிடுவதில்லை எனவும், அவர் பேக்கரி பொருட்கள் எதையும் சாப்பிடுவதை, தான் பார்த்ததில்லை எனவும் அவர் கூறினார்.*

***29.4.*** *C.W.73 - டாக்டர். புவனேஸ்வரி சங்கர், காலையில் காபி சாப்பிட்டதாகவும், அதன் பிறகு சூப் மற்றும் காலை உணவும், அதனைத் தொடர்ந்து மதிய உணவும் சாப்பிட்டதாகக் கூறினார். அவருக்கு ஓரிரு முறை இனிப்புகள் வழங்கப்பட்டன; ஆனால் பேக்கரி பொருட்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அவர் வழக்கமாக சர்க்கரையில்லாத மில்க் ஷேக் எடுத்துக்கொள்வார்; வெளி உணவு அனுமதிக்கப்படவில்லை. தீபாவளியன்று ஒருமுறையும், தேர்தலில் அவரது கட்சி வெற்றி பெற்ற பிறகு*

மறுமுறையுமாக இரண்டு முறை இனிப்புகள் வழங்கப்பட்டன. அதுமட்டுமின்றி, அவர் விருப்பத்திற்கேற்ப, மலை வாழைப்பழம், விதையில்லா திராட்சை, மாம்பழம் ஆகியவற்றை எடுத்துக் கொள்வார் எனவும் உணவியல் நிபுணர் அவரது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டார். R2 அப்போலோ நிர்வாகம், அவருக்கான உணவினைத் தயாரிக்க அவரது சமையல்காரரை அனுமதித்து, அப்போலோவின் சமையல்காரர் அதைக் கண்காணித்தார்.

*பக்கம் எண். 8-இல், கீழிருந்து 8-ஆவது வரியில், C.W.73 கூறியதாவது:*

> *"06 மற்றும் 07.11.2016 நாட்களில் அன்று ரொட்டி, ஆப்பிள், இளநீர் 70 மி.லி. காலை 11.00 மணிக்கு சாம்பார் சாதம் என்று சொல்வது சரிதான். தயிர் சாதம், 12 மணிக்கு உருளைக்கிழங்கு ஒரு கப், 12.25 மணிக்கு பிஸ்தா ஐஸ்கிரீம், வெண்ணிலா ஸ்ட்ராபெரி ஐஸ்கிரீம் தலா 1 ஸ்பூன் மற்றும் இளநீர் 100 மி.லி. மற்றும் 2.30 மணிக்கு பிளாக் டீ 10 மி.லி., இரவு 4 ஸ்பூன் தயிர் சாதம், உருளைக்கிழங்கு மற்றும் மலை வாழைப்பழம், 07 மற்றும் 08.11.2016 நாட்களில் அன்றும் பெரும்பாலும் இதே வகையான உணவுகள் அம்மாவுக்கு வழக்கம் போல் வழங்கப்பட்டன."*

**29.5.** காலையில் அவருக்கு கிச்சடி, இளநீர், ஆப்பிள் துண்டுகள், திராட்சை, உருளைக்கிழங்கு ஃபிங்கர் சிப்ஸ், சாதம், ஐஸ்கிரீம் மற்றும் உருளைக்கிழங்கு பொரியல் போன்றவை 1200 கலோரிகள் என்று வரையறுக்கப்பட்டு வழங்கப்பட்டது. 06.11.2016 மற்றும் 07.11.2016 ஆகிய நாட்களில், மருத்துவர்களின் அனுமதியுடன் அவருக்கு

*சாம்பார் சாதம், உருளைக்கிழங்கு, பிஸ்தா, வெண்ணிலா மற்றும் ஸ்ட்ராபெரி ஐஸ்கிரீம் வழங்கப்பட்டது. அவருக்கு வெண்ணெயில் தோய்த்த பிரட் டோஸ்ட் மற்றும் குறைந்த அளவிலான உருளைக்கிழங்கு சிப்ஸ் வழங்கப்பட்டது. அவருக்கு வழங்க வேண்டிய உணவை அவர் மட்டுமே முடிவு செய்தார். மருத்துவர்களின் ஆலோசனைப்படி, அவருக்குத் தேவையான அளவு உணவு வழங்கப்பட்டது. அவர் எடுத்துக் கொண்ட உணவுக்கும் அவரது இதய செயலிழப்பிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், அவருக்கு வழங்கப்பட்ட உணவின் அளவு அவரது சொந்த விருப்பப்படியே இருந்தது என்றும் C.W.73 கூறினார். C.W.73 தலைமை உணவியல் நிபுணராக இருந்ததுடன், அவருக்கான உணவு அட்டவணையைத் தயாரித்து வந்தார்.*

***29.6.*** *C.W.77 - ஜோஸ்னமோல் ஜோசப், செவிலியர் தான் மெனுவைகூற, அப்போலோ கேன்டீன் அவற்றை அனுப்பும் எனவும், மறைந்த முதல்வர் மில்க் ஷேக், மலை வாழைப்பழம், உருளைக்கிழங்கு பொரியல், இளநீர், தயிர் சாதம் ஆகிய பலவகையான உணவு வகைகளை ஆர்டர் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால், அவர் கேக் அல்லது இனிப்பு எடுத்துக்கொள்ளவில்லை; இருப்பினும், ஒருமுறை ஹல்வா எடுத்துக் கொண்டார் எனவும் அவர் கூறினார்.*

***29.7.*** *C.W.106 - டாக்டர் பாபு K. ஆபிரகாம், அவர் விருப்பத்திற்கேற்ப உணவு வழங்கப்பட்டதாகவும், மற்ற உணவுகளை அவர்*

*மறுப்பதாகவும், அதனால் அவர் கேட்ட உணவுகளையே அவருக்கு வழங்கியதாகவும் கூறினார்.*

***29.8.*** *C.W.107 - டாக்டர் R. நரசிம்மன், மறைந்த முதல்வர் திராட்சை, அன்னாசி, தக்காளி, மலை வாழைப்பழம் மற்றும் பால் பொருட்களை குறைந்த அளவில் எடுத்துக் கொள்ளுமாறும், அதனால் அவரது நோய்களும் காய்ச்சலும் குறையும் என்று ஆலோசனை கூறியதாகவும், மறைந்த முதல்வர் அதை ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.*

***29.9.*** *இங்கு, முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது யாதெனில், பொட்டாசியம் மற்றும் சர்க்கரை உணவுகள் உட்கொள்வதை, அவரது உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, கட்டுப்படுத்த வேண்டியிருந்தாலும், அவருக்கு எவ்விதமான கட்டுப்பாடுமின்றி, மேற்கூறிய உணவுகள் தொடர்ந்து வழங்கப்பட்டன என்பது மேற்குறிப்பிட்டவற்றிலிருந்தும், கோப்பு எண்.A-17 உணவு அட்டவணையிலிருந்தும் காணலாம். உணவு தொடர்பாக, மேற்கூறிய பல்வேறு ஆதாரங்களை கவனமாக ஆய்வு செய்ததில், அவர், R.2 - அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது, உணவு/ஊட்டச்சத்து நிபுணரால் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்காமல் இருந்ததால், அவருடைய உடல்நிலை வேகமாக மோசமடைந்தது.*

***29.10.*** *இச்சமயத்தில் C.W.106-டாக்டர் பாபு ஆபிரகாம் மறைந்த முதல்வர் வெளிநாட்டிற்குச் சென்றிருந்தால், அந்த*

*மருத்துவமனையின் மற்ற நோயாளிகளைப் போல அவரும் ஒரு சாதாரண நோயாளியாக இருந்திருப்பார், மறைந்த முதல்வரை விட செவிலியர்கள் அதிக அதிகாரம் செலுத்தியிருப்பார்கள் எனக் கூறியதை இவ்வாணையம் நினைவுகூறுகிறது. அவர் R.2 மருத்துவமனையில் இருந்ததால் உணவுக் கட்டுப்பாட்டை உணவியல் நிபுணரால் வலியுறுத்த முடியவில்லை.*

## ***30. CCTV கேமரா தொடர்பான சாட்சியங்கள்***

***30.1.*** *நிகழ்வுகளின் தொடர்ச்சியை தீர்மானிப்பதற்கு முக்கிய சான்றாக அப்போலோ மருத்துவமனையின் CCTV காட்சிகள் அமையும் என இவ்வாணையம் துவக்கத்தில் கருதியது. ஆனால், விசாரணையின் போது, மருத்துவமனையில் மறைந்த முதல்வருக்கு சிகிச்சையளிக்கப்பட்ட இரண்டாவது மாடியில் பொருத்தப்பட்டிருந்த CCTV கேமராக்கள் வேண்டுமென்றே செயலிழக்கச் செய்யப்பட்டது என்பது பதிவு செய்யப்பட்டது. இதனால் அங்கு CCTV காட்சிகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.*

***30.2.*** *C.W.96 - R.2- அப்போலோ மருத்துவமனையின் சட்ட மேலாளர் திரு. S.M. மோகன் குமார், மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாளான 22.09.2016 அன்று இரவு 09:00 மணி முதல் அவர் மறைவு வரை CCTV கேமரா காட்சிகளை வழங்குமாறு ஆணையம் R.2- மருத்துவமனைக்கு கடிதம் (Ex.C.38) அனுப்பியதாகக் கூறினார். CCTV கேமராவில் 30 முதல் 45 நாட்களுக்கு மேல் பதிவாகாது என்றும், முந்தைய பதிவுகள் தானாக அழிந்துவிடும் என்றும், காவல் துறை அதிகாரிகளோ, நீதிமன்றமோ CCTV கேமராவைப் பாதுகாக்கும்படி கோரவில்லை என்றும் அவர் பதிலளித்தார் (Ex.C.39).*

***30.3.*** *P.W.4 - P.A ஜோசப் என்பவரால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு பொது நல வழக்கு (PIL) தாக்கல்*

செய்யப்பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நேரத்தில் மறைந்த முதல்வரின் உடல்நிலை குறித்து அறிய புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் கோரப்பட்டன. *R.2* – அப்போலோ மருத்துவமனை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தனது எதிர்மனுவைத் தாக்கல் செய்தது, இந்த ஆணையத்தின் முன் *Ex.P.8* எனக் குறிக்கப்பட்டது. அதில், *R.2* – அப்போலோ மருத்துவமனையின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி, மறைந்த இளங்கோ, காவல்துறை அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க, இரண்டாவது மாடியில் உள்ள *CCTV* கேமராக்களை அணைத்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளனர் மறைந்த டிராஃபிக் ராமசாமி தாக்கல் செய்த பொதுநல மனுவில், மறைந்த முதல்வருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்த புகைப்படங்கள், வீடியோ காட்சிகள் மற்றும் அது தொடர்பான முழுமையான தகவல்களை வெளியிட வேண்டும் என்று கோரியிருந்தார். இரண்டு ரிட் மனுக்களும் உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டன. அந்த ரிட் மனுக்களில், *CCTV* கேமரா காட்சிகளை பத்திரப்படுத்த எந்த ஆணையும் கோரப்படவில்லை. *CCTV* காட்சிகளை பாதுகாப்பது குறித்து காவல் துறையிடமிருந்து எந்த தகவலும் இல்லை என்று கூறப்படுகிறது. *CCTV* கேமராக்கள் அகற்றப்படவில்லை என்று கூறினார்.

***30.4.*** *C.W.12*-தலைமைச் செயலாளர், *CCTV* கேமராவை அணைப்பது குறித்து தனக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றும், அத்தகைய

*உத்தரவினை அவர் வழங்கவில்லை என்றும் கூறினார். R.2-மருத்துவமனையின் சார்பாக C.W.36 தாக்கல் செய்த பிரமாணப் பத்திரம் குறித்து வினவியபோது, C.W.12 அந்த வாக்குமூலத்தை நிராகரித்ததுடன், இது மாதிரி பதில் மனுவை தாக்கல் செய்திருப்பது R.2-வின் மெத்தனப் போக்கையும் பொறுப்பற்ற தன்மையையும் காட்டுகிறது என்று கூறினார். C.W.96, அவரது வாக்குமூலத்தின் 7-வது பத்தியில், காவல்துறை அதிகாரிகளின் வழிகாட்டுதலின்படி, இரண்டாவது மாடியில் உள்ள CCTV இயக்கப்பட்டும், அணைக்கவும் செய்யப்பட்டுள்ளது என்றும், இதைத் தான் தவறாகக் கருதவில்லை என்றும், அரசு அதிகாரிகளின் வழிகாட்டுதலின்படி இது செயல்படுத்தப்பட்டது என்ற கருத்தைக் கொண்டிருந்தார். அதே சமயம், C.W.96, காவல்துறையோ நீதிமன்றமோ அதைப் பாதுகாத்து வைத்திருக்குமாறு கேட்கவில்லை என்றும் கூறினார். C.W.12 ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவில்லை.*

***30.5.*** *C.W. 55 - திரு. K.N. சத்தியமூர்த்தி IG, மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது முதல் அவருக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிடுவது அவரது கடமைகளில் ஒன்றாகும் என்று கூறினார். R.2-மருத்துவமனையின் இரண்டாவது மாடியிலும், மின் தூக்கியின் அருகிலும், மற்றும் பிற இடங்களிலும், காவலர்கள் நிறுத்தப்பட்டனர். ஆகவே, அது ஒரு தனியார் மருத்துவமனை என்பதால், அங்கு கேமராவை வைப்பது தேவையற்றது என்று கருதியதால் அங்கு கேமராக்கள் வைக்கப்பட*

*வேண்டும் என்று அவர் வலியுறுத்தவில்லை. இரண்டாவது மாடியில் உள்ள CCTV கேமராக்கள் அகற்றப்பட்டதா அல்லது இயக்கப்பட்டதா என்பதை அவர் கவனிக்கவில்லையா என்ற கேள்விக்கு, அவர் அதை கவனிக்கவில்லை என்று பதிலளித்தார். அவரைப் பொறுத்தவரை, அது அவருக்குக் கீழ் உள்ள அதிகாரிகளின் கடமை. CCTV கேமராக்களை அகற்றுமாறும், பதிவு செய்ய வேண்டாம் என்றும் மருத்துவமனை அதிகாரிகளுக்கு தாம் அறிவுறுத்தவில்லை என்றும் அவர் கூறினார்.*

***30.6.*** *C.W.16 - சத்யபாமா, விதிமுறைகளின்படி CCTV கேமராக்கள் முறையாகப் பராமரிக்கப்பட்டு வருவதாகவும், அதைக் கண்காணிக்க தனி பிரிவு இருப்பதாகவும் கூறினார். CCTV கேமராக்களை அகற்ற யாரும் கோரவில்லை என்றும் அவர் கூறினார்.*

***30.7.*** *C.W.24. மனோஜ் பாண்டியன், மருத்துவமனையில் CCTV கேமரா இல்லாததை கவனித்ததாகக் கூறினார். R.2-மருத்துவமனையின் ஊழியர்களின் கூற்றுப்படி, 27 கேமராக்கள் மட்டுமே அணைக்கப்பட்டன, எனினும் சுவர்களில் இருந்து கேமராக்கள் அகற்றப்பட்டதாகத் தெரிகிறது ஆனால் அது அவருக்குத் தெரியவில்லை. முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், CCTV கேமராக்கள் அகற்றப்பட்டதாகவும், ஆனால் யாருடைய உத்தரவின் பேரில், எப்போது அந்த கேமராக்கள் அகற்றப்பட்டன என்பது தனக்குத் தெரியாது என்றும் C.W.31- வீரபெருமாள் கூறினார். C.W.33 - இராமலிங்கம், CCTV கேமராக்களை*

அணைக்க தான் எந்த அறிவுறுத்தலும் வழங்கவில்லை என்று கூறினார். C.W.46 - டாக்டர். அர்ச்சனா, CCTV கேமராக்களின் செயல்பாட்டை கண்காணிக்க சிறப்பு அறை இருப்பதாகத் தெரிவித்தார். C.W.61- K.விஜயலட்சுமி கூறுகையில், தாழ்வாரத்தின்(corridor) முன்பக்கத்தில் கேமராக்கள் எதுவும் இல்லை. C.W.144-பெருமாள்சாமி ASP மறைந்த முதல்வரின் அறைக்கு வெளியே CCTV கேமரா எதுவும் இல்லை என்றும், அதை அகற்றவோ, பதிவு செய்வதை நிறுத்தவோ அவர் எந்த அறிவுறுத்தலும் அளிக்கவில்லை என்றும் கூறினார். மேலும், மறைந்த முதல்வரது வீட்டுக்கு வெளியே CCTV கேமரா இல்லை. C.W.145-டாக்டர். M.சுதாகர், காவல் துறை அதிகாரி, இரண்டாவது தளம் தனது மேற்பார்வையில் இருப்பதாகவும், அங்கு கேமரா இருக்கிறதா என்பது தனக்குத் தெரியவில்லை என்றும், ஆனால் தாழ்வாரத்தில் ஒரு CCTV கேமராவைக் கண்டதாகவும் கூறினார்.

**30.8.** C.W.88 - திரு.சுப்பையா விஸ்வநாதன், தங்கள் மருத்துவமனையில் CCTV கேமரா வசதி இருந்ததாகவும், அவை அகற்றப்படவில்லை என்றும் கூறினார். அரசின் சம்மதத்துடன் கேமராக்கள் இயக்கப்படவில்லை. மறைந்த முதல்வரை ஸ்கேன் போன்றவைகளுக்கு அழைத்துச் செல்லப்படும் போதோ அல்லது ஸ்ட்ரெச்சரில் ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்கு மாற்றப்படும் போதோ கேமராக்கள் அணைக்கப்படும்; மற்ற நேரங்களில் அது செயல்படும். காவல்துறை அதிகாரிகளின்

*அறிவுறுத்தலின்படி, இரண்டாவது மாடியில் உள்ள கேமராக்கள் சீரான இடைவெளியில் அணைக்கப்பட்டு இயக்கப்படும் என மறைந்த தலைமை பாதுகாப்பு அதிகாரி இளங்கோ தெரிவித்தார்.*

***30.9.*** *C.W.96 - மோகன்குமாரின் சாட்சியத்திலிருந்து, அரசு அதிகாரிகள், C.W.136-சுகாதாரத்துறை செயலாளர் மற்றும் C.W.12 - அப்போதைய தலைமைச் செயலாளர் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி, CCTV கேமராக்கள் அணைக்கப்பட்டுள்ளன என்று கூறியுள்ளது, மேற்கூறிய ஆதாரங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. எனினும், தலைமைச் செயலாளரும் சுகாதாரச் செயலாளரும் முதல்முறை இவ்வாணையத்தின் முன் உறுதிப்படுத்திய அறிக்கைகளை மறுத்தோ, இது தொடர்பாக R.2-மருத்துவமனைக்கு எதிராக எந்த நடவடிக்கையோ எடுக்கவில்லை, மேலும் எந்த அறிக்கையும் அளிக்கவில்லை. மற்ற சாட்சிகளான C.W.16, C.W.24, C.W.31, C.W.33 மற்றும் C.W.44 ஆகியோர் CCTV கேமராக்கள் இருந்ததாகவும், ஆனால் அவை இயக்கப்படவில்லை என்றும், அறிவுறுத்தலின் பேரில் அவை அணைக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர். CCTV கேமராக்களை தான் கவனிக்கவில்லை என்று C.W.55 கூறினார். இந்த CCTV கேமராக்களை அணைத்து வைத்ததன் மூலமாக மட்டுமே, பாதுகாப்பு நடவடிக்கைகளில் குளறுபடி ஏற்பட்டது என முடிவு செய்துவிட முடியாது. C.W.55-இன் சான்றுகளிலிருந்து, பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது என்பதை அறிய முடிகிறது. எனவே, அதிகாரிகளின்*

*அறிவுறுத்தலின்படியே, CCTV கேமராக்கள் மருத்துவமனையால் அணைக்கப்பட்டதாக தெரிகிறது.*

***30.10.*** R.2 - *மருத்துவமனை* CCTV *கேமராக்களை அகற்றுவதற்கான சரியான காரணங்கள் எதுவும் இல்லை.* C.W.55 *மற்றும்* C.W.136 *அன்றைய சுகாதாரச் செயலாளரின் சாட்சியங்கள் மழுப்பலாக இருப்பதுடன், இது குறித்து,* C.W.96-*இன் வாக்குமூலம் சரியாக இருக்க வேண்டும். இரண்டாவது மாடியில்* CCTV *கேமராக்கள் காணப்பட்டது, மேலும்* CCTV *படங்கள் வெளியிடப்படுவதைத் தடுக்க அரசு / காவல்துறை அதிகாரிகளின் அறிவுறுத்தல்களின்படி, அவை செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.* ***மறைந்த முதல்வருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட இடத்தில் (மாடியில்) பலத்த பாதுகாப்பு இருந்ததுடன், அங்கு நுழையும் நபர்கள் கண்காணிக்கப்பட்டனர் என்றும், CCTV கேமராக்கள் அகற்றப்பட்டது பாதுகாப்பு நடவடிக்கைகளில் எவ்விதமான பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை எனவும் இந்த ஆணையம் முடிவு செய்கிறது.***

## ***31.*** **பெருவிரல் ரேகை குறித்த சட்சியங்கள்**

***31.1.*** *திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதி, அரவக்குறிச்சி மற்றும் தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களை தேர்தல் ஆணையம் அறிவித்தது. எனவே, மறைந்த முதல்வர் அ.இ.அ.தி.மு.க-வின் பொதுச் செயலாளராக இருந்ததால், போட்டியிட்ட வேட்பாளரின் பெயரை பரிந்துரைத்து, அதில் அவர் தனது கையொப்பத்தை இணைத்து, சின்னத்திற்கான சான்றிதழை வழங்கி, அது தேர்தல் அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டும். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதால், A மற்றும் B படிவங்களில், கையொப்பங்களுக்குப் பதிலாக, அவரது கட்டைவிரல் ரேகையைப் பெற, இந்திய தேர்தல் ஆணையத்தின் அனுமதிக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. 27.10.2016 அன்று மாலை 6.30 மணிக்கு தேர்தல் ஆணையத்தின் A மற்றும் B படிவங்களில் சான்றொப்பம் பெறும் நடவடிக்கைகளில், சான்றொப்பமிடுபவர்களில் ஒருவராக C.W.7 இருந்தார். தூக்க அட்டவணைப்படி, மாலை 6.00 முதல் 7.00 மணி வரை அவர் உறக்கத்தில் இருந்ததாகக் காணப்படுகிறது. அவர் தூங்கிக் கொண்டிருந்தாரெனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. C.W.7இன் கூற்றுப்படி, மறைந்த முதல்வரின் பெருவிரல் ரேகை 27.10.2016 அன்று மாலை 6.30 மணிக்கு பதியப்பட்டது என்றார். ஆனால், குறுக்கு விசாரணையின் பின்னர், சாட்சியத்தில் தனது கையொப்பத்தை*

*வைக்கும் நேரத்தில் அவர் மாலை 6.30 மணி என்பதை மாலை 6.00 மணி என்று திருத்தம் செய்தார்.*

***31.2.*** *C.W.7 ஆணையத்தின் முன் சாட்சியமளிக்கும் அதே நேரம் C.W.136 - சுகாதாரத்துறைச் செயலாளர் புதுதில்லியில் முகாமில் இருந்ததாகத் தெரிகிறது. செய்தியைப் பார்த்த பின்னர், C.W.136, ஊடகங்களில் தனது நேர்காணலில், C.W.7 - சான்றளிப்பதற்கு முன்னர், தொலைபேசியில் அவரிடமிருந்து அனுமதி பெற்றார் என்ற அறிக்கையை ஆட்சேபித்தார். ஆனால் அடுத்த நாள், C.W.7 ஆணையத்தின் முன் ஆஜரானார். அந்த ஒரு வாக்கியத்தை திருத்த விரும்புவதாகக் கூறினார். எனவே, அவர் சாட்சியமளிக்க அனுமதிக்கப்பட்டார். அந்த நாளில், அவர் சுகாதாரத்துறைச் செயலாளரிடம் தொடர்பு கொள்ளவில்லை என்றும், அது தவறு என்றும், முன்னர் அளித்த சாட்சியத்தைத் திருத்த விரும்புவதாகவும் கூறினார். இதற்கு அனுமதியும் அளிக்கப்பட்டது. சுகாதாரத் துறை செயலாளராக இருந்த C.W.136 அரசு மருத்துவர்களை எப்படி ஆதிக்கம் செலுத்தினார் என்பதை இது காட்டுகிறது.*

***31.3.*** *மறைந்த முதல்வரின் கட்டைவிரல் ரேகையைப் பெறுவது தனக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அது செய்யப்படவில்லை என்று C.W.11-ஷீலா பாலகிருஷ்ணன் கூறினார். மறைந்த முதல்வரது கையெழுத்தினைப் பெறுவது செயலாளர் இராமலிங்கத்தின் பொறுப்பு எனவும், கையெழுத்தினைப் பெறுவதற்கு அரசு எந்த ஆணையும்*

பிறப்பிக்கவில்லை என்றும், அவருக்கு எழுத்துப்பூர்வமாக எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை என்றும் *C.W.12* - இராம மோகன் ராவ் தெரிவித்தார்.

***31.4.*** *C.W.18-* பூங்குன்றன் கட்டைவிரல் ரேகையைப் பெற அப்போலோ மருத்துவரான டாக்டர் பாபு ஆபிரகாமிடம் கேட்டதாக கூறினார். மரபின்படி, மருத்துவமனையில் சிகிச்சை பெறும் போது ஒரு முதலமைச்சர் கட்டைவிரல் ரேகையை வைக்கும்போதெல்லாம், ரேகையைப் பெறுபவர்கள் தலைமைச் செயலாளர் அல்லது அரசு அதிகாரிகளான முதலமைச்சரின் தனிச்செயலாளர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஆனால் அத்தகைய அனுமதி கோரப்படவுமில்லை, அளிக்கப்படவுமில்லை என *C.W.20 – K.N.* வெங்கடரமணன், *IAS* கூறினார். *C.W.33* - திரு. இராமலிங்கம், *IAS,* மருத்துவமனையில் மறைந்த முதல்வரின் பெருவிரல் ரேகையை பெறும்போது, யாரும் தனக்கு தெரிவிக்கவில்லை என்று கூறினார். *C.W.147-* டாக்டர். *M.* தம்பிதுரை, மறைந்த முதல்வர் கட்சித் தலைவராக இருப்பதால், படிவம் *A* மற்றும் *B*-ல் பெருவிரல் ரேகையைப் பெறுவதற்கு எவருடைய அனுமதியும் பெற வேண்டிய அவசியமில்லை என்று கூறினார்.

***31.5.*** P.W.1, மறைந்த முதல்வரது கட்டைவிரல் ரேகை பெறப்பட்டபோது அவர் உயிருடன் இருந்திருக்க மாட்டார். மேலும், அதை பெங்களூர் சிறைச்சாலையில் இருக்கும்

ரேகையோடு ஒப்பீடு செய்ய வேண்டும் என்று கூறி, சென்னை உயர்நீதிமன்றத்தின் முன் O.P.NO.2/2017-இல் தேர்தல் மனுவைத் தாக்கல் செய்தார். இந்த ஆணையத்தின் வரம்பு மிகவும் குறுகியது என்பதால், இப்பொருண்மை விரிவாக விவரிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. அதேபோல், C.W.12, C.W.11, C.W.20 ஆகியோர் மருத்துவமனையில் இருந்தபோது, அவர்களுக்குத் தெரியாமல், கட்டைவிரல் ரேகையைப் பெற்றதற்கு எதிர்ப்பு தெரிவித்தபோதும், மறைந்த முதல்வர் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்ததால், அவர் தனது கட்டைவிரல் ரேகையைப் பதிவு செய்தது உறுதியாகிறது. எனவே, இதுதொடர்பாக விரிவாகக் ஆய்வு செய்ய தேவையற்றது.

## <u>32. ஆஞ்சியோ மற்றும் அறுவை சிகிச்சை தேவையா ?</u>

***32.1.*** *மறைந்த முதல்வர் 22.09.2016 அன்று மயக்கமடைந்த பின்னர், R.2 மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பல நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவர்களால் கண்டறியப்பட்டது. இரத்தப் பரிசோதனை அறிக்கைக்குப் பிறகு, பதிவுகளை ஆராய்ந்த R.2 மருத்துவமனை மருத்துவர்கள், எல்.வி. ஃபெய்லியர் மற்றும் தொற்று ஆகியவற்றால் அவர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவருக்கு வெஜிடேசன் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் தெரிவித்தனர். C.W.99-டாக்டர். Y.V.C.ரெட்டி ஒரு இதயநோய் நிபுணர், அவரது சாட்சியங்களில், மறைந்த முதல்வருக்கு mild regurgitation இருப்பதாகவும், ECHO செய்யப்பட்டதில் L.V. Diastolic Dysfunction அதாவது சிறிய அளவிலான இதய நோய் கண்டறியப்பட்டுள்ளதாகவும் கூறினார். ஆனால், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாளிலேயே அவருக்கு sepsis infection, நீரிழிவு நோய், இரத்தக்கொதிப்பில் ஏற்ற இறக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, நான்கைந்து நாட்களுக்குப் பின்னர் இதயக் கோளாறு இருப்பதை மருத்துவர்கள் உறுதி செய்தனர். மற்றொரு இதய மருத்துவரான C.W.120 - டாக்டர். இராம் கோபாலகிருஷ்ணனுடன் அழைக்கப்பட்ட C.W.103- டாக்டர் கார்த்திகேசன் மறைந்த முதல்வரைப் பரிசோதித்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பேஸ்மேக்கரை*

பொருத்தும்படியும், இரண்டாம் நபரது கருத்தைப் பெறவும் அறிவுறுத்தினார். டாக்டர் *Y.V.C.* ரெட்டி, டாக்டர் கர்த்திகேசன், *R-2* மருத்துவமனையின் இதயதுடிப்பு நிபுணர் மேலும், பேஸ்மேக்கரை பொருத்தவேண்டிய அவசியமில்லை என்று கூறினார். *C.W.120-* டாக்டர். இராம் கோபாலகிருஷ்ணன் பேஸ்மேக்கரை *standby*-ஆக பொருத்தினார்; ஆனால் அதை செயல்படுத்தவில்லை. அப்போலோ மருத்துவமனையின் அறிக்கையில் கோப்பு எண்.5, பக்கம் 47 முதல் 56 வரை, மருத்துவமனையில் அனுமதிக்கபட்ட நேரத்தில் கூட அவர் இதயப் பிரச்சினைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும், சிகிச்சையின் பின்னர் அவர் நிலையாக இருந்தார் என்றும் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது. இந்த சாட்சியத்திலிருந்து, அவருக்கு இதய நோய் இருப்பதையும், அப்போலோவால் தயாரிக்கப்பட்ட நோய் விவர குறிப்புத்தாளை (கேஸ் ஷீட்) படி, அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதும் அறியப்படுகிறது. அடுத்தடுத்த நாட்களின் பதிவேடுகள் அவர் வெவ்வேறு நாட்களில் சில முறை நெஞ்சு வலி இருந்ததாகக் கூறிய பதிவுகளைக் காட்டுகின்றன. அவர் வெஜிடேஷன், பெர்ஃபொர்ரேசன் மற்றும் *LV* ஃபெய்லியரால் பாதிக்கப்பட்டுள்ளார் என *R.2* மருத்துவமனை மருத்துவர்களால் கண்டறியப்பட்டுள்ளது.

**32.2.** டாக்டர். இராமசுப்பிரமணியம், *01.10.2016* வரை விடுப்பில் சென்றதால், *C.W.120* - டாக்டர்.இராம் கோபாலகிருஷ்ணன் *24.09.2016*- அன்று சிகிச்சையின் பொருட்டு மறைந்த முதல்வரைப் பார்த்ததாகத்

தெரிவித்தார். காய்ச்சலுக்காகவும், சுவாசத்தில் ஆக்ஸிஜன் பற்றாக்குறைக்காகவும் மறைந்த முதல்வருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. மறைந்த முதல்வருக்கு சிறுநீர்ப்பாதையில் நோய்த்தொற்று ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதால், சிகிச்சைக்காக முதன்முறையாக அவர் மறைந்த முதல்வரைப் பார்த்தார். பின்னர், அவர் "மறைந்த முதல்வரின் இதயத்தில் எண்டோகார்டிடிஸ் தொற்று" இருப்பதாகக் கண்டறிந்தார். மறைந்த முதல்வர் செப்டிக் ஷாக் காரணமாக செப்சிஸ் நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிறுநீர்ப் பாதை நோய்த்தொற்று, நிமோனியா காய்ச்சல் மற்றும் எண்டோகார்டிடிஸ் காரணமாக, மறைந்த முதல்வருக்கு செப்டிக் ஷாக் ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறினார். "இரண்டு நாட்கள் சிகிச்சைக்குப் பின்னர், இதற்கான மூல காரணம் எண்டோகார்டிடிஸ் என அவர் முடிவு செய்தார். மறைந்த முதல்வரின் இதயத்தில் 14 மி.மீ அளவிலான வெஜிடேசன் இருப்பதாகக் கண்டறியப்பட்டது, ஆனால் அத்தொற்று இதயத்தை அடைவதற்கு சில நாட்களுக்கு முன்பு நிகழ்ந்திருக்கலாம்." எண்டோகார்டிடிஸை குணப்படுத்த, மறைந்த முதல்வருக்கு ஆண்டிபயாடிக்ஸ் வழங்கப்பட்டது. என்டரோகாகஸ் என்று அழைக்கப்படும் கிருமிகள் மறைந்த முதல்வரின் இரத்தத்தின் மூலம் மட்டுமே இதயத்திற்குச் சென்றிருக்கும். 24.09.2016 முதல், ஒரு வாரத்திற்குத் தொடர்ச்சியாகவும், அதன்பிறகு C.W.98 - டாக்டர் இராமசுப்பிரமணியம் இல்லாதபோது, இரண்டு முறையும் அவர்

*மறைந்த முதல்வருக்கு சிகிச்சையளித்தார். மறைந்த முதல்வருக்கு வழங்கப்பட்ட சிகிச்சையில், என்டரோகாகஸ் கிருமிகள் அகற்றப்பட்டன. C.W.120-இன் திறன்மிகு சிகிச்சையால் மறைந்த முதல்வரின் Endocarditis குணப்படுத்தப்பட்டது.*

***32.3.*** *C.W.120 – இராம் கோபாலகிருஷ்ணன், 28.9.2016 அன்று காலை 10.30 மணிக்கு மருத்துவ கோப்புகளில் (கோப்பு எண் 5 - பக்கம் 48&47 மறுபுறம்) பின்வருமாறு ஒப்புதல் அளித்துள்ளார்.*

> *(1) இந்த கட்டத்தில் புதிய செப்சிஸ் எபிசோட் பற்றிய எந்த ஆதாரமும் இல்லை..............வால்வு பெர்ஃபொரேசன்.*
>
> *(2) Endocarditis cultures உகந்த மருத்துவ முறையில் அழிக்கப்பட்டுவிட்டன, வால்வு பெர்ஃபொரேசன் மற்றும் நுரையீரல் வீக்கம் ஆகியவை உள்ளன, இவை இரண்டும் அறுவை சிகிச்சைக்கான அறிகுறிகளாகும்.*
>
> *(3) ………….. வால்வு அறுவை சிகிச்சை மிக விரைவில் பொருத்தமான தருணத்தில் மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டது.*

*அந்த மருத்துவகுறிப்புகள் கோப்புகளில் இருந்து கீழே அளிக்கப்பட்டுள்ளது –*

FILE NO 05

(13)

48

AH-OF-NSG-12

Apollo HOSPITALS
TOUCHING LIVES

## IP CONSULTATION REQUEST

Ms. JAYALALITHAA J
68 Years Female IP NO: [illegible]
Bed No 2008 MD CCU Ward
UHID: [illegible]
Dr. CRITICAL CARE CONSULTANTS GRV

Date: 28/9/16 Time: 10$^{30}$ am.

Referred to Dr. - RGK

Speciality: ID.

Reason for Referral (Continuation ...)

- Inj FLUCONAZOLE 400 mg IV ~~stat~~ q 24h
- Inj. Cont ceftriaxone / amphicillin.

1230

Seen

- US both sides - chest
- Urine C/S
- Daily PCT

29/9/16

0930

Afebrile. $FiO_2$ reqmt : 30-40%.
Minimal norad
All cultures neg so far
WBC = 13 K ↓

→

47 (14) 736

A (1) No evidence of a new sepsis episode at point. The clinical deterioration is probably due to a flash pul edema episode (CHF / MR / valve perforation).
Will retain single broad spectrum agent till cultures neg at 48h.
(2) Enterococcal endocarditis : cultures have cleared, on an optimum medical regimen, has a valve perforation and pulmonary edema which are both indications for surgery.
(3) Retain fluconazole for Candida WCl in [illegible]

Suggest

- Minimize dose of hydrocortisone
- Daily PCT-Q
- NT-pro BNP today
- STOP POLYMYXIN B
- Continue fosfomycin / ampicillin / ceftriaxone / fluconazole.

Recommend valve surgery at the earliest suitable moment.

Every Entry to be Signed, Dated & Timed.

***32.4.*** *டாக்டர் சோமன் 28.9.2016-அன்றே, மறைந்த முதல்வருக்கு முன்கூட்டியே வால்வு அறுவை சிகிச்சைக்குப் பரிந்துரைத்தார். அவர் கேஸ் ஷீட்டிலேயே அதை எழுதியுள்ளார்" என்று ஆணையம் அவரிடம் கேட்டபோது, "டாக்டர். சோமன் ஒரு மார்பு (தொராசிக்) அறுவை சிகிச்சை நிபுணர் அல்ல என்றும், அவர் ஒரு தீவிரசிகிச்சை மருத்துவர் மட்டுமே" என்றும் C.W.99 மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கு பிறகு, அப்போலோ மருத்துவமனையால் விசாரித்தபோது பதிலளித்துள்ளார். டாக்டர் சமின் ஷர்மாவை மறைந்த முதலமைச்சரை சந்திக்க அழைத்துச்சென்றபொது பரிசோதனைக்குப் பின்னர், மருத்துவ பதிவுகளைப் பார்த்து "அவரே கொரோனரி ஆஞ்சியோகிராம் செய்யவும், அச்சிகிச்சை செய்ய தயாராகவும் இருந்தார், ஆனால் மருத்துவமனை நடவடிக்கை எடுக்கவுமில்லை, அறுவை சிகிச்சை செய்ய அவரை அனுமதிக்கவுமில்லை" கூறினார். இது குறித்துக் கேள்வி எழுப்பப்பட்டபோது, C.W.99 - டாக்டர்.Y.V.C. ரெட்டி, "ஒத்தி வைக்கப்பட்டது ஏனெனில், டாக்டர் ரிச்சார்ட் பீலே மறைந்த முதல்வருக்கு முன்னேற்றத்திற்கான அறிகுறிகள் இருந்தது என்றும், அறுவை சிகிச்சையை ஒத்தி வைக்கலாம்" என்றும் அறிவுரை கூறினார். "டாக்டர் ரிச்சார்ட் பீலே ஒரு தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணர் அல்ல என்பதில் சந்தேகமில்லை, அவர் ஒரு தீவிரசிகிச்சை மருத்துவராவார், அது சர்ச்சைக்கு அப்பாற்பட்டது. அவர் இங்கிலாந்து மருத்துவமனையில் பணிபுரிகிறார். 28.09.2016-அன்று*

*மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவுடனேயே டாக்டர்.சோமன் அறிவுறுத்திய பிறகும், அவர்கள் ஆஞ்சியோ செய்யவில்லை. C.W.99-ஐக் கேட்டபோது, அவர் ஒரு தீவிரசிகிச்சை மருத்துவர் மட்டுமே; அதனால் அவருக்கு அது குறித்து எக்கவலையும் இல்லை என்றும், டாக்டர். ரிச்சர்ட் பீலேயின் காரணமாக, டாக்டர். சமின் ஷர்மாவின் கருத்து கருதிப்பார்க்கப்படவில்லை என்றும், ஆஞ்சியோ ஒத்திவைக்கப்பட்டது என்றும், அதற்கு எந்த விளக்கமும் இல்லை என்றும் சாதாரணமாகக் கூறுகிறார். டாக்டர். ராஜீவ் சோமனின் மருத்துவக் குறிப்புகள் (கோப்பு எண்.5, பக்கம் எண்.220 மற்றும் 219, நாள் 28.9.2016 மாலை 5 மணிக்கு..), நண்பகலுக்குப் பிறகு பெர்ஃபொரேசன் காணப்பட்டதாக உறுதிபடுத்தியது. விரைவில் வால்வு அறுவை சிகிச்சை செய்ய பரிந்துரைக்கப்பட்டது.*

*அந்த மருத்துவகுறிப்புகள் கோப்புகளில் இருந்து கீழே அளிக்கப்பட்டுள்ளது -*

(1)

Dr. Soma

220

F-NSG-12

Apollo HOSPITALS
TOUCHING LIVES

**IP CONSULTATION REQUEST**

Date: 28/9/16 Time: 5pm

[illegible patient label]

Referred to Dr. Speciality:

Reason for Referral: Sunley Dr Soman

28/9/16 Thanks for ref.
> history reviewed.
H/o fever. brief use of steroids.
-22/9 c collapse, bradycardia ( ? due to
- stabilized 102 temp at home double Beta [illegible]
-TTE did not show veg. ↓ showed later || - RDG ↑↑ 180 → 360.
- 8/8 cultures ( E. faecalis pansusceptible )
WBC reduced with R
Amp. Ceftriaxone, Meropenem, Anidulafungin
TEE 1st time today morning ↓ No perforation seen || TEE now || perforation seen afternoon
PCT ↑ → ↓
1.9 → 1.4 → .28
Xray chest Fluctuating shadows more likely fluid

Every Entry to be Signed, Dated & Timed.

Imp: (1) IE. Infective Endocarditis
E. faecalis.
with mechanical disruption

Serial echo shows worsening along c the hemodynamic status.

Which can explain hemodynamic deterioration in the
1 ~~[illegible]~~ face of normalizing
~~[illegible]~~, PCT, BNP ↘ ↗
2 appropriate cidal therapy
3. very broad coverage for other organisms which could be considered such as GNB CRE, fungi;

(2) Less likely GNB as a 2nd infection for the above reasons.

(3) Rickettsial inf etc seem very unlikely.

suggested stabilization & early valve surgery asap.

Step up Fosfomycin 4 g x 4 times a d

Every Entry to be Signed, Dated & Timed.

***32.5.*** *அவர்கள் நடைமுறையைச் செய்திருக்க வேண்டும், ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. ஆச்சரியம் என்னவென்றால், இதுவும் விளக்கப்படவில்லை.*

***32.6.*** *C.W.112 - டாக்டர் இராமகிருஷ்ணன், ஒருவருக்கு இதயத்தில் 14மி.மீ வெஜிடேசன் இருந்தால், அறுவை சிகிச்சைதான் ஒரே தீர்வு என்றும், பொதுவாக, மற்ற நோய்கள் மற்றும் சிகிச்சைகள் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார். பொதுவாக, 14 மி.மீ வெஜிடேசன் இதயத்தில் ஏற்பட்டால், அதை ஆண்டிபயாடிக் மருந்துகளால் குணப்படுத்த முடியாவிட்டால், அறுவை சிகிச்சை மட்டுமே அடுத்த சிகிச்சையாகும் என்று கூறினால் அது சரிதான். அது வெடித்தால் அதன் பின் விளைவுகள் பக்கவாதம் அல்லது மாரடைப்பை ஏற்படுத்த வழிவகுக்கும் என்றால் அது சரிதான். இந்த அறுவை சிகிச்சை ஐரோப்பிய வழிகாட்டுதல்களில் முக்கியமானது எனக்கூறப்படுகிறது. ஆனால், சாட்சி கூறுகையில், ஆபத்து-நன்மை (Risk-benefit) விகிதத்தை குறித்தும் கவனிக்கப்பட வேண்டும். அறுவை சிகிச்சைக்கு செல்ல அமெரிக்க மருத்துவர் டாக்டர் ஷர்மாவின் வார்த்தைகளில் அர்த்தம் இருப்பதாகக் கூறினால், "நோயாளியின் நிலையைப் பார்த்தால் மட்டுமே கூறமுடியும்". மறைந்த முதல்வரை சிகிச்சைக்காக வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்வது குறித்து மருத்துவமனையில் ஒரு சர்ச்சை எழுந்தது. ஆஞ்சியோவும், அதைத்*

*தொடர்ந்து அறுவை சிகிச்சையும் சரியான நேரத்தில் செய்திருந்தால், பாதிப்பு ஏதும் ஏற்பட்டிருக்காது.*

***32.7.*** *C.W.90 - டாக்டர்.சாய் சதீஷ், 28-09-2016 அன்று மறைந்த முதல்வரைப் பரிசோதித்த பின்னர், ஒரு வாய்வழி ECHO மூலம் மறைந்த முதல்வரின் இதயத்தின் இடது மிட்ரல் வால்வில் சுமார் 13 மி.மீ. நோய்த்தொற்று இருந்தது என அவர் தெரிவித்தார். (TEE) இதயத்திற்கு மிக அருகில் எடுக்கப்பட்டது. 05.10.2016-அன்று மறைந்த முதல்வரின் இரத்தப் பரிசோதனையிலிருந்து பாக்டீரியா இருப்பதாகவும், அது இரத்த ஓட்டத்தில் அதிக அளவில் அதிகரிப்பதாகவும், எனவே மறைந்த முதல்வருக்குத் தொற்றுநோய் ஏற்பட்டதாகவும், அதன் காரணமாகத்தான் அவருக்கு மூச்சு விடுவதில் சிரமம் இருந்தது மற்றும் நுரையீரலுக்கு வெளியே திரவம் தேங்கி இருந்தது என்பதையும் அவர் கண்டறிந்தார். அதனால்தான் மறைந்த முதல்வருக்கு சுவாசிப்பதில் சிரமமும், நுரையீரலுக்கு வெளியே திரவம் தேங்கியும் இருந்தது. எக்கோவைப் பார்த்தபோது, வயதானதால், இரண்டு வால்வுகளைச் சுற்றி கால்சியம் இருந்தது என்றும் அவர் எழுதினார். 28-09-2016 அன்று மறைந்த முதல்வரின் மிட்ரல் வால்வில் சுமார் 12-14 மி.மீ அளவில் வெஜிடேசன் இருந்தது. பொதுவாக, இவ்வகையான நோயாளிகளுக்கு, நுண்ணுயிர் எதிர்ப்பிகள் (antibiotics) இரண்டு முதல் நான்கு வாரங்களுக்கு வழங்கப்பட வேண்டும்; அது குணப்படுத்தப்படாவிட்டால்,*

*அறுவை சிகிச்சை மட்டுமே மாற்று வழி என்றும், அறுவை சிகிச்சை, நோயாளிக்கு நோயாளி மாறுபடும் என்றும் சாட்சி கூறினார்.*

***32.8.*** *டாக்டர் பாபு ஆபிரகாம் 11.10.2016-அன்று இந்திய நேரப்படி, 11.00 மணிக்கு அமெரிக்க மருத்துவரான டாக்டர்.ஸ்டுவார்ட் ரஸ்ஸலுடன் ஒரு தொலைபேசி உரையாடலை நடத்தினார், அதில் டாக்டர் ஸ்டூவர்ட் ரஸ்ஸல் ஆஞ்சியோவுக்கு பரிந்துரைத்தார். இதை டாக்டர் பாபு ஆபிரகாம் பதிவு செய்துள்ளார் (கோப்பு எண் 4 பக்கம் 235). அவர் எழுதியிருந்தார். அமெரிக்க மருத்துவரிடம் சுருக்கமாக மருத்துவ வரலாற்றைக் அளித்ததாகவும் எழுதியிருந்தார் (1) அவரது தொடர்ச்சியான நுரையீரல் வீக்கத்திற்கு (recurrent pulmonary edema) மிட்ரல் ரெகர்கிடேஷன் (எம்ஆர்) காரணமாக இருக்கலாம் மற்றும் ஃபிளாஷ் நுரையீரல் எடிமாவின் எபிசோட்களின் போது மீண்டும் மீண்டும் ECHOs, TTE மற்றும் TEE செய்ததால் MR மோசமடைந்ததாகவும் விளக்கினார் மற்றும் (2) வெளிப்படையான அம்சங்கள் எதுவும் இல்லாவிட்டாலும், diastolic heart failure டயஸ்டாலிக் இதய செயலிழப்பு மோசமடைவதற்கான வாய்ப்பு இருந்தது. அவர் உடல்நிலை தேறி, மருத்துவ நடைமுறைக்கு தகுதியான பிறகு அவருக்கு ஒரு சிஏஜி செய்யலாம் என ஒரு நேரத்தில் அவர் ஆலோசனை கூறினார், இலண்டனைச் சேர்ந்த டாக்டர் ரிச்சார்ட் பீலே மற்றும் R.2 மருத்துவமனை மருத்துவர்கள் மறைந்த முதல்வர் உடல்நலம் தேறி வருவதாகவும், அதை ஒத்திவைக்க விரும்புவதாகவும் கூறினார், இதற்கு டாக்டர் ஸ்டுவார்ட் ரஸ்ஸல்*

ஆரம்பத்தில் ஆஞ்சியோ மற்றும் அறுவை சிகிச்சை செய்வதற்கு இது உகந்த நேரம் என்று கூறினார், ஆனால் டாக்டர் பாபு ஆபிரகாம் இது தேவையில்லை என்று கூறவே, டாக்டர் ஸ்டுவார்ட் ரஸ்ஸலும் அதை ஒத்திவைத்தார். இது அடுத்த நாள் 12.10.2016 மதியம் 2.00 மணிக்கு அவரால் மருத்துவகோப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆபிரகாம் தனது சொந்த கையெழுத்தில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

FILE NO: 04

Page No 236

# PROGRESS REPORT

Ms JAYALALITHAA J
68 Years Female IPNO.CMHIP152162
Bed No 2008 MD CCU Ward
UHID:AC01 000004*888
Dr. CRITICAL CARE CONSULTANTS GRP

225

Apollo HOSPITALS
TOUCHING LIVES

## PAIN ASSESSMENT SCALE

| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| No Pain | Just noticeable pain | Mild pain | Uncomfortable pain | Annoying pain | Moderate pain | Just bearable pain | Strong pain | Severe pain | Horrible pain | Worst pain |



| Date & Time | Pain Score | Doctor's Notes |
|---|---|---|
| ~~[illegible]~~ | | Notes by Dr Babu Abraham |
| 12.10.16 | | I had a telephonic discussion of patient's |
| 2 pm | | condition & management with Dr Stuart |
| | | Russell, cardiologist, at John Hopkin's, Baltimore |
| | | USA. This telephonic conversation was |
| | | made, at the request of the Health |
| | | Minister & Dr Sivakumar was fully aware |
| | | & approved of it. It occured at 11 pm IST |
| | | on 11.10.16 |
| | | I gave doctor Russel a brief history |
| | | of pt's ~~present~~ past medical history & |
| | | the events leading to her admission to |
| | | hospital this time & the course of events |
| | | since 22/10/16. |
| | | The main issues discussed were |
| | | (1) Possibility of the MR - being the cause |
| | | for her recurrent pulm. oedema. I did |
| | | explain to him that repeated ECHOs, both |
| | | TTE & TEE have ruled out worsening |
| | | MR or ring abscess from SBE & the Pulmonary |
| | | artery catheter demonstrated ~~as~~ no worsening |
| | | of MR during episodes of each pulm. oedema |

Please write daily notes in "SOAPE" (S-Subjective, O-Objective, A-Assess... E-Education)
Please sign after each entry & apply your stam...

**PROGRESS REPORT**

236

Apollo HOSPITALS
TOUCHING LIVES

PAIN ASSESSMENT SCALE

| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| No pain | Just noticeable pain | Mild pain | Uncomfortable pain | Annoying pain | Moderate pain | Just bearable pain | Strong pain | Severe pain | Horrible pain | Worst pain |



| Date & Time | Pain Score | Doctor's Notes |
|---|---|---|
| | | (2) Possibility of an IHD - worsening diastolic heart failure - even though there are no overt features. He advised a CAG, at some point, once we are [illegible] the clinical team, feel that she is stable for the procedure |
| | | (3) Possibility of a restrictive cardiomyopathy - like myocardial sarcoidosis or amyloidosis. Dw Dr YVC Reddy. There are absolutely no ECHO findings to suggest this |
| | | (4) How to manage the diastolic heart failure? He advised |
| | | (a) optimising β blockade |
| | | (b) Adding spironolactone once renal function improves |
| | | (c) Optimising diuresis - once renal function improves to keep her in negative balance |
| | | (d) ARB / ARB-I. No role, unless for bp control |
| | | [signature] |

Please write daily notes in "SOAPE" (S-Subjective, O-Objective, A-Assessment, P-Plan, E-Education)
Please sign after each entry & apply your stamp

***32.9.*** *ARDS காரணமாக, அறுவை சிகிச்சை தேவையா என்பது ஆய்வு செய்யப்பட வேண்டும். 25.11.2016 அன்று அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் சமீன் சர்மா நோயாளியையும், கோப்பு எண்.4, பக்கம் எண்.525-இல் பதிவு செய்யப்பட்டுள்ள கேஸ் ஷீட்டையும் பார்த்தார். அன்றே ஆஞ்சியோ செய்யத் தயாராக இருப்பதாக அமெரிக்க மருத்துவர் கூறினார். மேலும் இது எழுதப்பட்டுள்ளது,* ***"****கலந்துரையாடலுக்குப் பிறகு**, பல்மனரி எடிமாவின் இந்த எபிசோடுகள் டயஸ்டாலிக் இதய செயலிழப்பு காரணமாக இருப்பதாகவும்**, ஒரு கட்டத்தில் ஒரு கரோனரி ஆஞ்சியோகிராமிலிருந்து அவர் பயனடையலாம் எனவும் டாக்டர் ஷர்மா உணர்ந்தார்****".*** *கோப்பு எண் 4, பக்க எண் 525 & 526 இல் டாக்டர் பாபு*

Page No.: 523

AH-QF-NSG-11

## PROGRESS REPORT

Ms. JAYALALITHAA J
68 Years Female
Bed No.2008 CCU
UHID
Dr. CRITICAL CARE

Apollo HOSPITALS
TOUCHING LIVES

PAIN ASSESSMENT SCALE

| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| No pain | Just noticeable pain | Mild pain | Uncomfortable pain | Annoying pain | Moderate pain | Just bearable pain | Strong pain | Severe pain | Horrible pain | |

| Date & Time | Pain Score | Doctor's Notes |
|---|---|---|
| 25.11.16 | | Notes by Dr Babu Abraham |
| 10 pm | | Dr Samin Sharma (cardiologist) from Mount |
| | | Sinai Hospital, USA was invited by pt's family |
| | | to give an opinion on her cardiac status |
| | | He was briefed initially about her condition, |
| | | sequence of events since her admission on |
| | | 22nd September and about the repeated episodes |
| | | of pulmonary oedema she has been having, |
| | | associated with hypertension, tachycardia & |
| | | tachypnoea. He was also informed that the |
| | | frequency of these episodes had now |
| | | decreased, with the optimization of cardiac |
| | | medications including spironolacton, B blocker, |
| | | ARB, NTG and Ranolazen. This briefing |
| | | happened in chairman's office and was |
| | | attended by chairman, Dr Sathyabhama, |
| | | Dr YVC Reddy and me. After the discussion, |
| | | Dr Sharma felt that these episodes of |
| | | pulmonary oedema were due to diastolic |
| | | cardiac failure and that she would benefit |
| | | from a coronary angiography at some |
| | | point. He was then taken to see the |

Please write daily notes in "SOAPE" ( S-Subjective, O-Objective, A-Assessment, P-Plan, E-Education)
Please sign after each entry & apply your stamp

326

Page No.: 5

AH-OF-NSG-11

Apollo HOSPITALS
TOUCHING LIVES

# PROGRESS REPORT

Ms JAYALALITHAA J
[illegible]

## PAIN ASSESSMENT SCALE

| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| No pain | Just noticeable pain | Mild pain | Uncomfortable pain | Annoying pain | Moderate pain | Just bearable pain | Strong pain | Severe pain | Horrible pain | Worst pain |



| Date & Time | Pain Score | Doctor's Notes |
|---|---|---|
| | | patient. After assessing her, he discussed the need for CAG with her and proposed for the procedure to be done today, this evening itself. This decision was discussed with Prof Richard Beale, in London, over the phone. However considering that she was just recovering from a VAP, has very small lung reserve, is in pre renal azotemia and is on oral anticoagulation for DVT prophylaxis, a concensus was arrived at to post pone the procedure to a later date, once her general condition improves. Prof Richard too was in agreement with this decision. It was also agreed upon that CAG is not an emergency procedure for her & that it can be done in a planned fashion at an appropriate point of time later. This decision was then conveyed to the pt, her family and government officials by the treating team of doctors. |

Please write daily notes in "SOAPE" ( S-Subjective, O-Objective, A-Assessment, P-Plan, E-Education)
Please sign after each entry & apply your stamp

[signature]

***32.10.*** *C.W.142 - டாக்டர் தேவ கௌரவ் வேலாயுதம், இதயத்தில் உள்ள Endocarditis -க்கு, முதலில் antibiotics அளிக்கப்படும் என்றும், நான்கு வாரங்களுக்குப் பிறகும் கரையாமலிருந்து, அதன் அளவும் அதிகரிக்கவில்லை என்றால் அறுவை சிகிச்சையை பரிந்துரைக்க மாட்டார்கள் என்றும், அதன் அளவு 10 மி.மீ-ஐ விட அதிகமாகும்போது அறுவை சிகிச்சையைப் பரிந்துரைப்பர் எனவும் ஒப்புக்கொண்டார். மேலும், அவர் Ex.A.31, பக்க எண்.6-இல், மறைந்த முதல்வருக்கு small perforation-ஐச் சுற்றி, 12 முதல் 14 மி.மீ vegetation இருந்தது எனவும், 7 மிமீ சிறியளவிலான மற்றொரு vegetation பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் கூறினார். 14 மிமீ vegetation, நோய்த்தொற்றால் ஏற்பட்டதா அல்லது heart valve perforation–ஆல் ஏற்பட்டதா என்ற கேள்விக்கு, அது நோய்த்தொற்றால் மட்டுமே ஏற்பட்டது என்று அவர் உறுதியாகக் கூறினார். மேலும், perforation hole –க்கு மருந்து எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்றும், ஆனால் அது நோயாளிக்கு தீங்கு விளைவிக்காதெனில், அது புறக்கணிக்கப்படலாம் என்றும் ஒப்புக்கொண்டார். TEE உறுதிப்படுத்தியபடி, மிட்ரல் வால்வில் ஒரு துளை இருந்ததே, மறைந்த முதல்வருக்கு மருத்துவ ரீதியாக பின்னடைவு ஏற்பட்டதற்கான காரணமாக அமைந்ததா என்று கேட்கப்பட்டபோது, அதன் அளவு மற்றும் கசிவைப் பொறுத்தது என்று அவர் பதிலளித்தார்.*

***32.11.*** *மேலே உள்ள சாட்சியங்களிலிருந்து, மறைந்த முதல்வருக்கு இரத்தத்தில் "Enterococcus faecalis" என்ற தொற்று இருந்ததும், இதயத்தின் மிட்ரல் வால்வில் இரண்டு இடங்களில் vegetation இருந்ததும் மற்றும் நுரையீரலில் திரவம் சேர்ந்திருந்ததும் தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது. மேற்கண்ட பத்தியில் இருந்தும், சாட்சியங்களின் படியும் கூட, மறைந்த முதல்வருக்கு இதய நோய்கள் இருந்தன என்பது தெளிவாகிறது. சோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட வெஜிடேசன் மற்றும் பெர்ஃபொரேசனின் அளவு குறித்து எந்த சர்ச்சையும் இல்லை. 2015-ஆம் ஆண்டிலேயே அவை இருப்பதை அவர்கள் கவனித்தனர்; இருப்பினும், அது மோசமடையவில்லை, மருத்துவ ரீதியாக அது அவருடைய அன்றாட வாழ்க்கையை பாதிக்கவில்லை, எனவே, அறுவை சிகிச்சை தேவைப்படவில்லை. மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் C.W.134, சாட்சியத்தின் இந்த அம்சம் குறித்து, C.W.112 டாக்டர் ராமகிருஷ்ணன்- C.W.84, எய்ம்ஸ் இதய மருத்துவர், டாக்டர்.நிதிஷ் நாயக் மற்றும் C.W.142-தேவ கௌரவ், ஆகியோர் வெஜிடேசனின் அளவு மற்றும் சிகிச்சை முறைகள் குறித்தும் கூறியுள்ளனர்.*

***32.12.*** *ESC மருத்துவ வழிகாட்டுதல்களின்படி, Echocardiography, IE (Ineffective Endocarditis) என்பவை நோயறிதல் மற்றும் மேலாண்மையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக C.W.84 ஒப்புக்கொண்டார். புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தை அவர் மேலும் ஒப்புக்கொண்டார். இந்த புத்தகத்தில் கூட*

ஆரம்பநிலையில் அறுவை சிகிச்சை பரிந்துரைக்கப்படுகிறது. டாக்டர். ரமாதேவி-C.W.60 உட்பட சில மருத்துவர்கள், ESC வழிகாட்டுதல்களின்படி வெஜிடேசன் 10 மிமீக்கு மேல் காணப்பட்டால், அறுவை சிகிச்சை பரிந்துரைக்கப்படும் என தெரிவித்தனர். இங்கு, 04.12.2022 அன்று மாலை 4.20 மணிக்கு ECMO உடன் இணைக்கப்படும் வரை, மறைந்த முதல்வரை பரிசோதனை செய்ய தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணர்கள் எவரும் இல்லாத பட்சத்தில் அந்த காலகட்டத்தில்தான் தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணர்கள் உதவிக்கு அழைக்கப்பட்டனர்.

**32.13.** C.W.99, இதய மருத்துவர், டாக்டர்.செரியன், பம்பாயைச் சேர்ந்த டாக்டர்.ஜிகி டிவாடியா, டாக்டர்.கிரிநாத்-C.W.134 மற்றும் C.W.84-டாக்டர்.நிதிஷ் நாயக் ஆகியோரின் சாட்சியங்களின்படி, அறுவை சிகிச்சை தேவையில்லை என்று அனைவரும் கருத்து தெரிவித்துள்ளனர் என்பது தெரியவருகிறது. C.W.84-டாக்டர் நிதிஷ் நாயக், அவரது சாட்சியத்தில், மறைந்த முதல்வர் உயிர் காக்கும் கருவிகளின் உதவியுடன் இருந்தபோது, அவருடைய கோப்பைப் பார்த்த பிறகு, அறுவை சிகிச்சை தேவையில்லை என்று கருத்துத் தெரிவித்தார். டாக்டர்.செரியன் நோயாளியைப் பார்க்காமல், அறுவை சிகிச்சை தேவையில்லை என்று கூறியதாக தெரியவருகிறது. மேலும், நோய் விவர குறிப்புத்தாளை (கேஸ் ஷீட்) அவர் எந்தப் பதிவும் செய்யவில்லை என்றும், எழுத்துப்பூர்வமாக எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை எனவும் கூறப்பட்டது. C.W.134 -

டாக்டர் கிரிநாத் அவரது முதல் மற்றும் குறுக்கு விசாரணையின் போது, அவர் நாள்தோறும் நோய் விவர குறிப்புத்தாளை (கேஸ் ஷீட்) பார்த்ததாகவோ, அறுவை சிகிச்சை தேவையில்லை என்றோ, அவரது பரிசோதனைக்கு முன்போ வேறு எந்த நேரத்திலோ, எந்த ஒப்புதலையோ அல்லது எந்த கருத்தையோ எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கவில்லை. அவர் முதலமைச்சராக இருந்ததால் தான் எந்த தொகையும் பெறவில்லை என்று முதலில் மறுத்தாலும், அவரது கணக்கில் *R.2* மருத்துவமனையால் ரூபாய் ஒரு லட்சம் செலுத்தப்பட்டது என *R.2* மருத்துவமனை கூறியதை, அவர் மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, தொகை தனது கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொண்டார். மேலும், அவர் அதைப் பற்றி அறிந்திருக்கவில்லை என்றும், மேலும் அறுவை சிகிச்சை தேவையில்லை என்றும், அவர் *ARDS*–ஆல் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் கூறினார். பதிவுகளின்படி, அவர் மறைந்த முதல்வரை *04.12.2016* அன்று மாலை *6.00* மணிக்குப் பிறகு பார்க்கையில். *ECMO* உடன் இணைக்கப்பட்டிருந்தார். அவர் மறைந்த முதல்வரைப் பார்த்தது அதுவே முதல் முறையாகும். *R.2* மருத்துவமனையின் *C.W.107* நுரையீரல் நிபுணர் *ARDS* வியாதி குறித்து, இதய செயலிழப்புக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர், மறைந்த முதல்வருக்கு *ARDS* இருந்தது என்றும் அது தொற்றுநோயை ஏற்படுத்தியது என்றும் கூறினார். அவரது இதய செயலிழப்புக்கு

*இரண்டு வாரங்களுக்கு முன்புதான், ARDS கண்டறியப்பட்டது என்று C.W.75 கூறினார்.*

***32.14.*** *R.2 மருத்துவமனையின் சொந்த பதிவுகளின்படி, மறைந்த முதல்வர் 25.11.2016 வரை ஆஞ்சியோ அறுவை சிகிச்சைக்கு தகுதியானவராக இருந்தார் என்பது மேற்சொன்ன ஆதாரங்களிலிருந்து தெரியவருகிறது. ஆனால் R.2 மருத்துவமனையின் எந்த தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணரும் சிகிச்சை அளிக்க அவரை வாழ்நாளில் பார்க்கவிடவில்லை. இங்கு சிந்திக்க வேண்டிய விஷியம் யாதனில் R.2 மருத்துவமனை தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணர் எவரும் மறைந்த முதல்வர் சிகிச்சை அறைக்குள் நுழையவில்லை என்பதை உறுதி செய்வதில் மிகவும் எச்சரிக்கையாக இருந்தது. டாக்டர்.சமின் ஷர்மா ஆஞ்சியோ செய்ய ஒப்புக்கொண்டார், மேலும் அவர் அமெரிக்காவிலிருந்து வந்தார். ஆனால் மறைந்த முதல்வரின் உடல்நலம் முன்னேற்றம் அடைந்து வருவதால், அறுவை சிகிச்சை தேவையில்லை என்று டாக்டர் ரிச்சர்ட் பீலே தொலைபேசியில் அவரிடம் தெரிவித்தார். டாக்டர் ரிச்சர்ட் பீலே, மற்றும் R.2. மருத்துவமனை மருத்துவர்கள் அறுவை சிகிச்சையை ஒத்திவைத்தனர்.* ***இதனால், மறைந்த முதல்வருக்கு சிகைச்சையளிக்க அழைத்து வரப்பட்ட ஒரே தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணர், மிகவும் தேவையான ஆஞ்சியோ செயல்முறையை செய்ய வெற்றிகரமாக அனுமதிக்கப்படாததால் அவர் அமைதியாக இருக்க வேண்டியிருந்தது.***

***32.15.*** *அப்போலோவின் மருத்துவ அறிக்கையின் சுருக்கமான Ex.A-31 இன், 6 ஆம் பக்கத்தில் அவர்கள் மறைந்த முதல்வருக்கு இரண்டு வெஜிடேசன் இருப்பதாக்கக் குறிப்பிட்டுள்ளனர், அவற்றில் ஒன்று 12-14 மிமீ "சிறிய பெர்ஃபொரேஷனைச் சுற்றி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும் மற்றொன்று குறுகியதாக இருந்தது (7 மிமீ)'. இதயத்தில் உள்ள பெர்ஃபொரேசன் மருந்துகளால் அடைக்க முடியாது. இருப்பினும், நோயாளிக்கு எந்தத் தீங்கும் இல்லை என்றால், அதை விட்டுவிடலாம், மேலும் நோயாளியை மருத்துவ ரீதியாக பரிசோதிப்பதன் மூலம் அதை தீர்மானிக்க வேண்டும். அதற்கான காரணத்தைக் கண்டறிய TEE பரிசோதனையை மேற்கொண்டபோது, மிட்ரல் வால்வு அருகே துளை இருப்பது தெரிய வந்தது. மறைந்த முதல்வருக்கு சுவாசக் கோளாறுகள் இருந்ததாகக் கூற முடியுமா என்று கேட்டதற்கு, மருத்துவரீதியாக அளவு மற்றும் மிட்ரல் வால்வு கசிவு உள்ளதா என்பதைக் கவனித்தால் தான் பதில் சொல்ல முடியும் என்று பதிலளித்தார்.*

***32.16.*** *மறைந்த முதல்வருக்கு அப்போலோ மருத்துவர்கள் 75 நாட்கள் சிகிச்சையளித்தனர். 13 மிமீ அளவுள்ள வெஜிடேசன் காணப்பட்டால், நான்கு முதல் ஆறு வாரங்களுக்கு நுண்ணுயிர் எதிர்ப்பி மருந்துகளை (antibiotics) வழங்க வேண்டும் என்றும், அதற்குள் அதைக் கரைக்கவில்லை என்றால், அறுவை சிகிச்சை மட்டுமே மாற்றுவழியாகும் என்றும், அறுவை சிகிச்சை செய்யாவிட்டால், வெஜிடேசன் வெளியேறி இரத்தத்தில்*

கலக்கலாம் என்றும், அது மூளை அல்லது இதயத்திற்கும் செல்லலாம் என்றும் இதன் விளைவாக, பக்கவாதம் அல்லது திடீர் மாரடைப்பு ஏற்படலாம் என்றும் இதய மருத்துவர்களான *C.W.83* மற்றும் *C.W.90*, நுரையீரல் நிபுணரான *C.W.107*, தீவிர சிகிச்சை மற்றும் தூக்கக் கோளாறு மருத்துவரான *C.W.112*, தொற்று நோய் மருத்துவரான *C.W.120*, எய்ம்ஸ் மருத்துவர்களான *C.W.84* மற்றும் *C.W.142* ஆகியோர் ஒப்புக்கொண்டனர். இருப்பினும், *C.W.90* இன் சாட்சியத்திலிருந்து, *28.09.2016* அன்று எடுக்கப்பட்ட *TEE ECHO*-ஐப் பார்த்தபோது, இரத்தத்தில் பாக்டீரியா கலந்திருப்பதை மருத்துவர் கண்டார், அவர் இரத்த ஓட்டத்தில் ஏராளமான பாக்டீரியாக்களைக் கண்டார். மறைந்த முதல்வருக்கு தொற்று ஏற்பட்டதற்கும், சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டதற்கும் மற்றும் நுரையீரலில் திரவம் தேங்கியதற்கும் அதுதான் காரணம் என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், அவர்களின் சாட்சியங்களிலிருந்து, *perforation* மருந்துகளால் குணப்படுத்த முடியாது ஆனால் கசிவைப் பொறுத்து, அது தீங்கு விளைவிக்கும் என தெரியவருகிறது.

***32.17.*** *C.W.114* – டாக்டர்.மேத்யூ சாமுவேல், இதயவியல் மருத்துவர், ஒருவர் நுரையீரலில் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டிருந்தால், அதன் விளைவாக இதயத்தின் வலது பக்கத்தில் மாற்றம் ஏற்படும் என்று கூறினார். ஆனால் அவர் *25.10.2016* அன்று நோயாளியைப் பார்த்தார், அந்த நேரத்தில் அவர் இதயத்தில் பெர்ஃபொரேசனைக் கவனித்தார். இது இதயத்தின் வியாதியை அதிகரிக்கும்.

*கிரியேட்டினின் அளவைக் கண்காணிப்பது உள்ளிட்ட சிறுநீரக செயல்பாட்டை ஆராய்வதே முதல் சோதனை என்றும், அதன்பிறகு மட்டுமே ஆஞ்சியோகிராமின் நடைமுறைக்கு செல்ல வேண்டும் என்றும் அவர் ஒப்புக்கொண்டார். பொதுவாக வெஜிடேசனுக்கு ஒரு மாத்திரை நான்கு வாரங்களுக்கு அளிக்கப்பட்டும் அது கரைந்துவிடவில்லை என்றால், அறுவை சிகிச்சையே அடுத்த வழியாகும். ஆனால் மருந்து காரணமாக, வெஜிடேசனின் வளர்ச்சியைத் தடுக்கலாம், ஏனெனில் வெஜிடேசன் எந்த நேரத்திலும் வெடிக்கக்கூடும், மேலும் இது உடலின் எந்தப் பகுதியையும் பாதிக்கும். அறுவை சிகிச்சை நேரத்தில் கூட, வெஜிடேசன் வெடிப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்று சாட்சி தானாக முன்வந்து கூறுகிறார்.*

***32.18.*** *C.W.117-டாக்டர்.சுரேஷ் மாணிக்கவேல், நுரையீரல் நிபுணர், ஏழு வருட அனுபவத்துடன் 2016-இல் அப்போலோவில் சேர்ந்தார். மறைந்த முதல்வரின் உடல்நிலையைப் பொறுத்த வரையில், அழுத்தம் காரணமாக இதயத்தில் இருந்து இரத்தம் திரும்பியது என்று அவர் கருத்து தெரிவித்தார். நுரையீரல் வீக்கம் என்பது இதயம் பம்ப் செய்யும் செயல்முறையை மெதுவாக்குகிறது மற்றும் இரத்தத்தின் பின் அழுத்தத்தை குறைக்கிறது என்றும் கருத்து தெரிவித்தார்.*

***32.19.*** *C.W.135-டாக்டர். L.F. ஸ்ரீதர், இதய அறுவை சிகிச்சை நிபுணர், இதய வால்வில் துளை இருந்தால், அது முக்கியமானதாகும் என்றும் அவ்வாறு ஆஞ்சியோ செய்யும் போது, ஏதேனும் அடைப்பு உள்ளதா*

*என கண்டறிந்து, அடைப்பை உறுதி செய்த பின், அடுத்த அறுவை சிகிச்சையின் போது, வெஜிடேசன் மற்றும் பெஃபொரேசனுக்கு ஏதேனும் வால்வை பொருத்த வேண்டும் என்றால், அது பொருத்தப்படும், மேலும் ஆஞ்சியோவின் போது ஏதேனும் அடைப்பு கண்டறியப்பட்டாட்ல் அதற்கு சிகிச்சை அளிக்கப்படும் என்று பத்தி 3 இல் அவரது சாட்சியத்தில் அளித்துள்ளார். அவரது சாட்சியத்தின் 4வது பத்தியில் அவர் மறைந்த முதல்வருக்கு. 9x5 மி.மீ. வெஜிடேசன் இருந்ததாகவும் அது டாக்டர்.சந்திரசேகரால் தெரிவிக்கப்பட்டது என்றும் கூறினார். மேலும், அவரது சாட்சியத்தில், அறுவை சிகிச்சை தேவையா என்ற 14 மிமீ வெஜிடேசன் பற்றிய கேள்விக்கு, அவர் 13 மிமீக்கு கூட இது பரிந்துரைக்கப்படுகிறது என்றும் ஆனால் நோயாளியின் நிலையை மருத்துவ ரீதியாக பரிசோதித்த பின்னரே முடிவு எடுக்க முடியும் என்று கூறினார்.*

***32.20.*** *C.W.99- டாக்டர்.Y.விஜய் சந்திரா ரெட்டி, அவரது சாட்சியத்தின் 6வது பத்தியில், மறைந்த முதல்வருக்கு இதய அறுவை சிகிச்சை தேவையில்லை என்று கருத்து தெரிவித்திருந்தார். பக்கம் 10 இல், அவர் இதயத்தில் வலியைத் தவிர்க்க தடுப்பு மருந்துகளை உட்கொண்டதாகவும், அவருக்கு 'தெரிந்து இதய நோய்' இல்லை என்றும் கூறினார். R.2 -மருத்துவமனையின் குறுக்கு விசாரணையின் போது பக்கம் 11 இல் அவர் இதயத்தில் பிரச்சினைகள் இருப்பதாகக் கூறினார்; அவருக்கு PR இடைவெளி இருந்தது; மற்றும் அவர் Ex. A31*

*இல் பக்கம் எண்.4 இல், second degree conduction AV block என்று குறிப்பிட்டுள்ளார். மருத்துவமனையில் அனுமதித்த நாள் முதல் இறுதி வரையில் அவருக்கு மார்பு வலியோ அதற்கான அறிகுறியோ இல்லை என்றும் M.I க்கு அறிகுறிகள் இல்லை என்றும் கூறினார், ECHO விலும் மாரடைப்புக்கான எந்த அறிகுறியும் இல்லை. அவரது இரத்தத்தில் குறைந்த ஆக்ஸிஜன் மற்றும் ஹைபோக்ஸியா இருந்தது. அவருக்கு அதிக பொட்டாசியம், அதிக சர்க்கரை, குறைந்த சோடியம் மற்றும் குறைந்த பை-கார்பனேட் மற்றும் உயர் இரத்த அழுத்தம் இருந்ததால், அவருக்கு conduction பிரச்சனை இருந்தது என தெரிவித்துள்ளார்.*

***32.21.*** *C.W.99 அப்போலோவின் மறுவிசாரணைக்கு அழைத்தபோது, மறைந்த முதல்வர் இதய நோயாளியா என்று கேட்டதற்கு அவர் அனைவரும் அறிந்ததே! மறைந்த முதல்வர் ஐந்து மருந்துகள் தேவைப்படும் அளவிற்கு உயர் இரத்த அழுத்த நோயாளி எனவும், லேசான மிட்ரல் ரெகர்கேஷன் (Regurgitation), LV டயஸ்டாலிக் செயலிழப்பு (ஓராண்டுக்கு முந்தைய ECHO விலிருந்து காணப்படுகிறது) மற்றும் பல மருத்துவ பிரச்சினைகளின் ஒரு பகுதியாக இதய நோய் அவருக்கு இருந்தது என்று அவர் பதிலளித்தார். முதன்மை பிரச்சினை என்பது இதய நோயின் ஒரு சிறிய வடிவமாக தொடங்கி பல மருத்துவ பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் கூறினார்.*

***32.22.*** *ஆஞ்சியோ எடுக்கப்பட வேண்டும் என்று சில இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று R.2 மருத்துவமனை பதிவுகளிலிருந்து காணப்படுகிறது. 02.12.2016 அன்று கோப்பு எண் 4-ல் பக்க எண். 563-ல் நெப்ரோவின் சீராய்விற்கு பிறகு கொரோனரி ஆஞ்சியோகிராம் செய்யப்படுவது குறித்து முடிவெடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்து. ஆச்சரியப்படும் விதமாக, 03.12.2016 அன்று, ஒரு பதிவு உள்ளது, அதில் அது கூறப்பட்டுள்ளது:*

*“S/B AIIMS doctor –*

*no plan Coronary angio or MIBG/PET”*

*(as per File No.4, page No.566).*

*இவை இடையே எழுதப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. இருப்பினும், 3.12.2016 ஆம் நாளிட்ட AIIMS அறிக்கையில், மேலே உள்ளபடி எந்தப் பதிவும் இல்லை. எனவே R.2 மருத்துவர்கள் இதை பின்னர் சேர்த்துள்ளனர் என்பது நிரூபனமாகிறது.*

***On Day 7*** *: 28.09.2016 : She developed an acute episode of severe wheezing and breathlessness with worsening hypoxemia and was intubated and sedated. Echocardiography showed Left Ventricular Diastolie Dysfunction and mad mild Mitral Regurgitation and coronary blood vessels were of normal caliber.*

***On Day 8*** *: 29.09.2016 : Chest X-ray revealed worsening bilateral pulmonary infiltrates suggestive of pulmonary oedema and consolidation and leukocytosis was seen and additional antibiotics Diuretics, Vasopressors, lonotropes were administered along with nutrition and other supportive measures.*

***On Day 9*** *: 30.09.2016 : She had worsening of respiratory dynamics and Chest X-Ray revealed worsening pulmonary oedema requiring escalation of sedation, oxygen supplementation and Positive End Expiratory Pressure. (PEEP). Dr.Richard Beale, Intensivist from UK was invited to provide an expert opinion who evaluated the patient and suggested appropriate medication and discussed with family and Government officials the nature of the problems, need for prolonged ICU and hospital stay, guarded prognosis and an overall mortality of 40%. Pig tail catheters were inserted percutaneously bilaterally to drain multiple times the rapidly accumulating bilateral pleural effusion which was transudative in nature.*

***On Day 10 & 11 : 01*** *& 02.10.2016 : There was a gradual resolution in Chest X-ray infiltrates and pleural effusion with better*

*lung function and satisfactory haemodynamic parameters and was reviewed by Dr.Richard Beale. Doppler screening of upper and lower limbs venous system revealed no evidence of Deep Vein Thrombosis, blood and urine cultures were negative and WDC Count showed improvement. All central catheters were removed and Peripherally inserted central catheter line placed.*

***On Day 12 & 13*** *: 03 & 04.10.2016 : The same management was continued and ventilator weaning attempted but not continued since patient developed hypoxia.*

***On Day 14*** *: 05.10.2016 : A Pulmonary Artery catheter was placed to assess filing pressures of the heart and for guiding further treatment. Medication to improve diastolic function of the heart was started along with lonotropes and diuretics. An expert team appointed by Government of India from All India Institute of Medical Sciences, New Delhi consisting of Dr.Khilnani, Professor of Pulmonary Medicine, Dr.Anjan Trikha, Professor of Anaesthesia and Dr.Nitish Naik, Professor of Cardiology reached Apollo Hospital around 9.30p.m.. on 05-10-2016 and after a meeting with all specialists treating the Hon'ble Chief Minister examined her and found her to be critically ill and having pulmonary oedema with bilateral pleural effusion and advised Tracheostomy for the same and continuation of medical management and no surgical intervention at the present moment for the mitral regurgitation and that quite some time will be needed to recover from the present condition.*

***On Day 15*** *: 06-10-2016 : The expert team from AllMS, Dr.Richard Beale from UK and specialists from Apollo examined the patient again and found the clinical condition to be the same and*

*considering the recurrent episodes of pulmonary oedema, underlying co-morbidities, likely need for long term ventilarory support a consensus decision was made to perform an elective Tracheostomy.*

***<u>On Day 16</u>*** *: 07-10-2016 : Tracheostomy was done in the operation theatre by ENT Surgeon at 4.30 a.m. which was uneventful and she was responding to verbal commands and blood pressure was maintained with small doses of ionotropes and she was transfused one unit of O+ve compatible, screened, packed cell transfusion and was reviewed by the expert team from AIIMS, Dr.Richard Beale from UK and specialists from Apollo.*

***<u>On Day 17</u>*** *: 08-10-2016 : Chest X-Ray showed worsening of right lower and mid zone opacity suggestive of pleural effusion with basal atelectasis which was aspirated and found to be again transudative and negative for malignant cells and she was continued treatment with Diuretics.*

***<u>On Day 18</u>*** *: 09-10-2016 : She was transfused one unit of O+ve compatible, screened, packed red cells and isotonic albumin infusion. Repeat Chest X-Ray showed worsening of the right side opacity and appearance of new infiltrates on the left mid zone and Ultrasound chest showed reaccumulation of pleural effusion on both sides which were drained by placing pig tail catheters. Her Diabetes was well controlled. Urine culture revealed significant growth and tracheal aspirate (ET culture) insignificant growth and she was started on appropriate antibiotic in consultation with Dr.Khilnani the Pulmonology expert from AIIMS.*

***<u>On Day 19</u>*** *: 10-10-2016 : Dr.Khilnani the expert from AIIMS examined the Chief Minister again and found her condition slowly progressing and stable on life support and advised to reduce the*

*sedation to hasten recovery and said that she would require medical care in ICU for a longer period of time.*

***On Days 20 & 21*** *: 11 & 12-10-2016 : Sedation was gradually weaned off and patient tolerated ventilator weaning and was stable.*

***On Day 22*** *: 13-10-2016 : Patient was seen by the expert team from AIIMS, New Delhi Dr.Khilnani, Dr.Anjan Trikha and Dr.Nitish Naik and was found alert, responding to verbal commands and communicating with lip movements and could move her legs and feet on her own and tolerated pressure support ventilation.*

***On Day 23*** *: 14-10-2016 : CT Scan chest was taken which revealed ground glass opacities in both lung fields with pleural effusion and Dr.Khilnani and team advised to continue diuresis. Dr.Richard Beale from UK also came to see the Chief Minister and opined to continue the same treatment. All of them also participated in a video conference with Dr.Russel of John Hopkins Institute USA along with all treating Apollo physicians where each aspect of the medical reports and treatment was discussed and Dr.Russel completely agreed with the line of medical treatment of the Chief Minister.*

***On Day 24*** *: 15-10-2016 : Dr.Khilnani and team again examined the Chief Minister along with Dr.Richard Beale and found her better and her blood oxygen parameters were improving and opined that her clinical progress is encouraging.*

***On Day 25*** *: 16-10-2016 : Patient was again examined by Dr.Richard Beale and she was gradually transitioned to Bilevel ventilation.*

***On Day 26-30*** *: 17 to 21-10-2016 : Patient was placed on CPAP and pressure support and cardiac status remained stable and*

*medication titrated accordingly. Active and Passive Physiotherapy started and oral feeds were given during the day and naso-gastric feeding from 6 p.m.. to 8 a.m. Patient continued to interact and was able to communicate her needs to the nursing and medical team.*

***On Day 31-35*** *: 22 to 26-10-2016 : Dr.Richard Beale from UK examined the Chief Minister daily and pressure support was gradually weaned and oral feeds were encouraged while still maintaining enteral nutrition support. She was put on cardiac medication, sedation at night and diuretics and blood parameters were closely monitored and corrected appropriately. Back and perineal care was given along with active and passive physiotherapy.*

***On Day 36*** *: 27-10-2016 : Patient was improving and taking oral feeds and interacting and undergoing physiotherapy Around 6.30p.m.. Dr.Babu Abraham, ICU Consultant of Apollo Hospital called me to the MDCCU and informed that Mr.Poongundran, the Personal Assistant of the ADMK General Secretary handed over a letter from the Election Commission of India addressed to the Chief Election Commissioner of Tamil Nadu and another from the Chief Election Commissioner of Tamil Nadu permitting the patient Selvi J.Jayalalitha presently undergoing treatment at Apollo Hospital to affix her thumb impression on certain election papers which had to be attested by a Government doctor. Since I was the designated Government medical co-ordinator I agreed to obtain the same from her in my capacity as a gazetted officer and proceeded to her cubicle in the MDCCU along with Dr.Babu Abraham and read out the contents of the letter to her and she affixed her left thumb impression in the election papers placed on the food trolley and I attested the same and Dr.Babu Abraham*

*signed as witness. Mrs. Sasikala was present at the bed side at that time.*

***<u>On Day 37-38</u>*** *: 28 & 29-10-2016 : Patient was a febrile, alert and taking liquids. Oral nutrition support was added and patient was encouraged to take as much as proteins/calories as possible and her oral intake was closely monitored, Dr.Richard Beale from UK examined her again on 29th October.*

***<u>On Days 39-41</u>*** *: 30 to 01-11-2016 : Dr.Richard Beale advised adequately on the Chief Minister's treatment and found her progress very much satisfactory. Since she was not doing adequate active physiotherapy Dr.Richard Beale advised the Chief Minister to come to his hospital in UK for further treatment but the Chief Minister declined the suggestion and wanted to continue further treatment at Apollo hospital itself. During that time patient was made to sit on a wheel chair and active and passive physiotherapy given and blood sugar level was under good control and she was encouraged to take adequate protein and calories and supplemented with Amino acid infusion. Dr.Richard Beale examined her till 1st November and found her improvement very encouraging and wished her well and she thanked him for coming all the way to treat her and gave him a presentation as a token of appreciation for his services.*

***<u>On Day 42</u>*** *: 02-11-2016 : Patient was improving and placed on T-piece and she tolerated it well.*

***<u>On Day 43</u>*** *: 03-11-2016 : Arterial and Venous Doppler study of both lower limbs revealed good flow in all arteries with no evidence of Deep Vein Thrombosis.*

***On Days 44-52*** *: 04 to 12-11-2016 : Patient improved well and was transitioned to day time T-piece with minimal Oxygen requirement of 2 litres and nocturnal ventilation with minimal pressure support.*

***On Days 53-54*** *: 13 & 14-11-2016 : Patient was on oral diet and arterial line and urinary catheter removed. Tracheostomy tube downsized and speaking valve attached and patient was able to speak.*

***On Days 55-58*** *: 15 to 18-11-2016: Patient was able to maintain spontaneous breathing for almost 16 hours a day and was placed on pressure support ventilation between 11 p.m.. to 5 a.m. and tolerated it well and was taking adequate oral diet and continuing physiotherapy.*

***On Day 59*** *: 19-11-2016 : Due to overall improvement in patient status, the Chief Minister was shifted to a specially designed high dependency room in a wheel chair.*

***On Days 60- 64*** *: 20 to 24-11-2016 : Patient was doing well and took oral diet, continued physiotherapy and all vital parameters were normal.*

***On Day 65*** *: 25-11-2016 : The tracheostomy tube was downsized and given supportive care.*

***On Days 66-72*** *: 26 to 02-12-2016 : Patient was doing well, afebrile, sugar levels under control and cardiac status stable and was administered Appropriate antibiotic to treat respiratory infection.*

***On Day 73*** *: 03-12-2016 : The expert team from AIIMS, New Delhi Dr.Khilnani, Dr.Anjan Trikha, Dr.Nitish Naik and Dr.Nikhil Tandon visited Apollo hospital and had a meeting with the treating doctors and found the patient fully conscious and able to sit in the chair for 20 minutes. The team opined that no invasive cardiac*

*investigation or intervention was indicated in the present condition and emphasized the role of physiotherapy and rehabilitation and that it would take time (weeks to months) for complete recovery.*

*On the same day 03-12-2016 : She developed cough and increase in tracheal secretions and X-Ray Chest showed evolving left lower lobe infiltrate and a diagnosis of new onset pneumonia was made and culture of blood and tracheal secretions was sent and patient was started on an Antibiotic and was administered 4 litres / min of Oxygen and connected to the ventilator overnight.*

***On Day 74*** *: 04-12-2016 : She was placed back on tracheostomy mask and given 3-5 litres / min of Oxygen and had an episode of vomiting after having breakfast. At 4.20 p.m.. she complained of breathlessness and was found tachypnoeic (Breathless) with bilateral extensive wheezing and was placed on ventilator immediately and bronchodilator nebulisation and diuretic given. At 4.30 p.m.. patient developed ventricular tachycardia and was treated for the same. She again developed multiple premature (ventricular contractions and ventricular fibrillation and cardiac arrest and was given cardiopulmonary resuscitation for 45 minutes following which an open cardiac massage was done and put on ECMO (Extra Corporeal Membrane Oxygenation) and external cardiac pacemaker and put on hypothermia and on continuous haemodialysis and several units of compatible, screened Packed Red Cells, Fresh Frozen Plasma, Cryoprecipitate and Platelets were transfused and ionotrope infusion on flow and the serious condition of the patient informed to the family and the Government officials.*

***On Day 75*** *05-12-2016 : The expert team from AIIMS, New Delhi, Dr.Khilnani, Dr Anjan Trikha, Dr.Narang and Dr.Devagourou*

*evaluated the patient in the MDCCU around 5 p.m.. and had a discussion with the treating team of specialists and wanted the patient to be brought to normothermia to assess the status of the patient. Around 10 p.m.. on clamping the ECMO tube there was a rapid drop of blood pressure indicating the heart had no function. Also on momentarily switching off the pacemaker there was a straight line on ECG monitor and there was no neurological improvement as opined by the neurologists and all parameters denoted futility of support and the same conveyed to family members and Senior Ministers who understood the situation and consented for withdrawal of ECMO After withdrawal of ECMO patient was declared dead at 11.30 p.m.. on 05-12-2016 and cause of death was opined as Ventricular Fibrillation, Infective Endocarditis and Acute Respiratory Distress Syndrome.*

*(Sd./-Dr.Balaji)"*

***34.15.*** *R.2 மருத்துவமனை, மறைந்த முதல்வர் அனுமதிக்கப்பட்ட பிறகு, அவ்வப்போது மருத்துவ செய்தி அறிவிப்புகளை வெளியிட்டது. கிட்டத்தட்ட அனைத்து மருத்துவ செய்தி அறிவிப்புகளும் இங்கு அளிக்கப்பட்டுள்ளன. மேலும், R.2 மருத்துவமனை தயாரித்த பதிவுகளிலிருந்து மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அவரின் உடல்நிலைமையையும் ஆணையம் குறித்தது. C.W.7-டாக்டர் பாலாஜியும் அவரது உடல்நிலையை பதிவு செய்து, உடன் கணிப்புப் பட்டி தயாரித்து வைத்தார். தொடக்கத்தில் செய்தி அறிவிப்புகளில் அவரது நோய் பற்றிய முழு வெளிப்பாடு இல்லாமல் இருக்கலாம்.*

ஆணையம் மருத்துவ செய்தி அறிவிப்புகளில் அனைத்து நோய்களையும் குறிப்பாக அவரது நோய்த்தொற்றுகளை வெளிப்படுத்துவது கூடாது என்றும் அதேசமயம் அவரது இதய நோய்களை குறிப்பிடுவதில் தவறில்லை என கருதுகிறது. எப்படியிருந்தாலும், *C.W.88,* பொது மக்களுக்கு நோய்களை வெளிப்படுத்தாமல் இருப்பது நோயாளியின் தனியுரிமை என்று கூறினார்.

## *35.* *R.2 மருத்துவமனையின் தலைவர் டாக்டர். P.C ரெட்டியின் செய்தியாளர் சந்திப்பு*

***35.1.*** *2016, நவம்பர் மாதத் துவக்க வாரங்களின் மருத்துவப் பதிவுகனள பார்க்கும்போது, அதாவது தினசரிக் குறிப்புகள், அவர் இரத்த இயக்கவியல் ரீதியாக (hemodynamically stable) நிலையாக இருந்ததை வெளிப்படுத்துகிறது. பிசியோதெரபி செய்யப்பட்டது மற்றும் வென்டிலேட்டரிலிருந்து வெளியே எடுக்க டி-பீஸ் (T-Piece) பயன்படுத்தப்பட்டது. மேலும் சில மணிநேரங்களுக்கு அவர் அதைப் பொறுத்துக்கொண்டார். அவரது உறக்கம் மற்றும் விழித்திருக்கும் நேரங்கள் குறிக்கப்பட்டன. திரவ எதிர்மறை சமநிலையை அடைந்து நுரையீரல் வீக்கம் (pulmonary oedema) தொடர்ந்தது. இரத்தக்கொதிப்பில் ஏற்ற இறக்கங்கள் இருந்தன. வாய்வழியாக உணவு உட்கொள்ளப்பட்டது பதிவு செய்யப்பட்டுள்ளது; ஆனால் பொதுவாக போதுமானதாக இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சாக்ரல் பகுதியில் (sacral region) சில வலி மற்றும் தொடர் இருமல் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிலை பொதுவாக தொடர்ந்தது. இருமல், சிறிய அல்லது வேறு ஏதேனும் மற்றும், சுரத்தல் பற்றி மீண்டும் மீண்டும் குறிக்கப்பட்டுள்ளது. ஹீமோடைனமிக் நிலைத்தன்மை தொடர்ந்தும் மற்றும் டி-பீஸ் தொடர்ந்து இடையிடையே பயன்படுத்தப்பட்டது. நவம்பர் மாதத்தின் அடுத்தடுத்த நாட்களின் பதிவுகளை ஆய்வு செய்ததிலிருந்து,*

இக்காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அல்லது சரிவு ஏதுமில்லை

***35.2.*** அப்போலோ மருத்துவ பதிவுகளின் கோப்பு எண்.*4*-இன் படி, *2.12.2016* காலை *11.00* மணிக்கு *CCU* குழு மற்றும் டாக்டர் நளினி பிரபுவின் குறிப்புகளில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

*Diarrhoea 5 times yesterday last 11 p.m. 900 ml + 4 times bed wet. PSV from 10 p.m. to 5 a.m. has secretion thick whitish but reduced. Comfortable on Thermo vent. Pain abdomen. + Sugars 122, 180, 255 mg/dl. This morning 442 mg./dl. 4 hours of sleep*
*Intake oral 315, 13 gram protein last 24 hours.*
*IV 375 25 gm.*
*Conscious, alert, comfortable, No pain, Cooperated for physio able to stand without support for 10 seconds.*
*hip muscles are still weak need support.*
*BP 130/80 SPO2 100% on 02 2c/in*
*Trac collor RR 24/*
*3 to 4 pm. After informed consent nerve conduction study done.*
*Stable. Once bed wet.*
*4.20 p.m. to 5 p.m. During Mobilization developed giddiness. Immediately back to bed. BP 140/90 mm Hg. Cough increased BP. slot up to MAP 115 mm Hg. Legs crept + wheezing. Sugar 197 mg/dl. Placed PSV, Nebs. given. Suction done Thick Whitish secretion settled after 10-15 minutes. Again, Back care. passed small amount of loose stool Back on trace collor.*
*8.15 p.m. Episode of giddiness & hypolening during the Mobilization.*
*discussed with Sr.YVC / Dr. Senthil Advised to reduce 5mg Niteo Patch instead of 10 mg.*
*2.12.2016 Night 11 p.m. Events noted.*
*Had breathless evening during mobilization. connected to Bipap 715 at 10.30 p.m.*
*Complaint of breathless difficulty in breathing.*

இதில் குறிப்பிடதக்க வேண்டியது என்னவென்றால் மறைந்த முதல்வருக்கு அளிக்கப்பட்ட சர்க்கரை மருந்துகளின் தாக்கம் மற்றும் சர்க்கரை கட்டுப்பாடு எந்த அளவுக்கு இருந்தது என்பது தெளிவாக இல்லை.

**35.3.** டாக்டர். P.C. ரெட்டியின் நேர்காணலுடன் ஒப்பீடு செய்கையில், நோய்த்தொற்றுக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரை, அது சரியே. ஏனெனில், அதற்குண்டான சிகிச்சை முறைகளைப்பற்றி, முக்கியத்துவம் எதுவும் அளிக்கப்படவில்லை. ஆயினும், அக்காலகட்டத்தில் சுவாசக் கோளாறு உள்ளது என்பதும், தீவிர நோயுடன் தொடர்புடைய பாலிநியூரோபதி (polyneuropathy) தொடர்கிறது என்பதும் தெளிவாகிறது. ஆனால் நுரையீரல் வீக்கம் (pulmonary oedema and dependance on ventilation) மற்றும் செயற்கை சுவாசம் வழங்கப்படும் நிலை தொடர்ந்ததால், அவர் முழுமையாக குணமடைந்து, வீட்டிற்குச் செல்வது என்பது முற்றிலும் நேர்மாறான விஷயமாக இருந்தது. இத்தருணத்தில், மருத்துவமனையிலிருந்து வீடு திரும்புதல் (discharge) என்பது குறித்து கேள்வி இருக்க முடியுமா என்பது முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

## ***36. மருத்துவக்குழு அமைப்பதற்கான R.2-வின் மனு***

***36.1.*** *20.12.2016 அன்று, சுகாதாரத்துறைச் செயலாளரிடம் ஒரு பகுதியாக விசாரணை செய்யப்பட்டது, அவர் மறைந்த முதல்வரை வெளிநாடு அழைத்துச்செல்வது என்பது இந்திய மருத்துவர்களை அவமதிக்கும் செயலாக இருக்கும் என்று கூறினார். அதைத்தொடர்ந்து விசாரணை 04.01.2019-ஆம் நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டது. R.2-மருத்துவமனை, 21 துறைகளில் உலகத் தரம் வாய்ந்த நிபுணர்களை கொண்ட மருத்துவ குழுவை அமைப்பதற்கு 213/2018 இல் மனுவைத் தாக்கல் செய்தது. இந்த சாட்சியத்திற்குப் பின்னர், ஆணைய வழக்கறிஞர், தலைமைச் செயலாளர் மற்றும் சுகாதாரத்துறைச் செயலாளருக்கு பிரிவு 8B அறிவிப்பை வெளியிடுவதற்காக 214/2018-இல் மனுவைத் தாக்கல் செய்தார். இரண்டு விண்ணப்பங்களும் விசாரிக்கப்பட்டு, R.2-மருத்துவமனைக்கு அவர்களின் விருப்பம் மற்றும் செலவின் அடிப்படையில் எத்தனை மருத்துவர்களை வேண்டுமானாலும் விசாரிக்க சுதந்திரம் அளிக்கப்பட்டு, 22.01.2019-அன்று மனு எண்.213/2018-இல் ஆணையம் முடிவு செய்தது. மனு எண்.214/2018-ஐ பொருண்மையை குறித்து விசாரிக்கும் சமயத்தில் எடுக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டது.*

***36.2.*** *இவ்வாணையம் பிறப்பித்த ஆணையை எதிர்த்து, R.2-மருத்துவமனை 05.02.2019 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு*

ரிட் மனுவை தாக்கல் செய்தது, அதற்கு *W.P.Sr.No. 12098/2019* மட்டுமே வழங்கப்பட்டது. அம்மனுவில் சிகிச்சை போதுமானதா அல்லது இல்லையா என்ற பொருண்மையைக் கண்டறியும் அளவிற்கு இவ்வாணையம் செல்ல முடியாது என்று கூறியுள்ளனர். *W.P.No.44378/2016*-இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மனதில் வைத்துக் கொள்ளாமல், *R.2*-மருத்துவமனை இரண்டு ரிட் மனுக்களை, தாக்கல் செய்தது மற்றும் *W.P.No.3953/2019; W.P.No.3947/2019* முதல் ரிட் மனு, மனு எண்.213-இல் உள்ள ஆணைக்கு எதிராகவும், இரண்டாவது ரிட் மனு *R.2.* மருத்துவமனைக்கு எதிராக ஆணையம் பாரபட்சமாக இருப்பதாகவும் குற்றம் சாட்டியது.

***36.3.*** மிட்ரல் வால்வில் இரண்டு *vegetation*-ஆல் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு *Cardio Thoracic Surgeon* ஏன் மருத்துவர் குழுவின் தலைவராக இல்லை என்று ஆணையத்தின் வழக்கறிஞர் ஒரு கேள்வியை எழுப்பியதே, ஆணையத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்கு காரணம் ஆகும். சாட்சியால் மறுக்கப்பட்ட பின்னர் சாட்சிக்கு ஐரோப்பிய வழிகாட்டுதல்கள் புத்தகம் காண்பிக்கப்பட்டது. ஆணையத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இதுவும் ஒன்றாகும். மற்றொரு குற்றச்சாட்டு யாதெனில், *C.W.126* - டாக்டர் மதன்குமாரின் விசாரணையின் போது, அவர் நேரங்களை நொடிகளில் கூறினார், ஆனால் அது நிமிடங்களில் ஆணையத்தால் பதிவு செய்யப்பட்டது, எனவே சாட்சியங்கள் சரியாக பதிவு செய்யப்படவில்லை என்பது ஆகும். இருப்பினும், *sternotomy*

*செய்யும் போது, 10 வினாடிகளில் CPR-ஐ நிறுத்திவிட்டு 15 வினாடிகளுக்கு அறுவை சிகிச்சையைத் தொடர்ந்ததாக சாட்சி கூறியதாக ஆணையம் தெளிவாகக் கூறியது. ஆணையம், சாட்சியானது நிமிடங்களில் அல்ல, நொடிகளில் மட்டுமே கூறியதாக ம.எண்.1/2019 இல், ஒரு ஆணையைப் பிறப்பித்தது. ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னரும், R.2 மருத்துவமனை ஆணையத்தின் மீது மாண்புமிகு உச்சநீதிமன்றம் வரை இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.*

***36.4.*** *ஆணையத்தின் மீதான மற்றொரு குற்றச்சாட்டு யாதெனில், முன்னாள் முதல்வர் டாக்டர். M.G. இராமச்சந்திரன் அவர்களுக்கு, வெளிநாட்டில் அளிக்கப்பட்ட சிகிச்சை தொடர்பாக, சாட்சிகளிடம் கேள்விகள் கேட்கப்பட்டது ஆகும். இதற்கும் இந்த ஆணையம் விசாரிக்கின்ற பொருண்மைக்கும் எவ்விதத்தொடர்பும் இல்லை. C.W.67-C. கோவிந்தராஜன், R.2 மருத்துவமனையின் பதிவேடுகளைப் பராமரிப்பவரது சாட்சியத்திலிருந்து, மருத்துவமனையின் அனைத்து நோயாளிகளின் சிகிச்சை குறித்த கோப்புகளும், மருத்துவமனையினால் பதிவேடுகளைப் பாதுகாப்பதற்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட மூன்றடுக்குக் கட்டடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பது அறியவருகிறது.*

***36.5.*** *மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர் M.G.இராமச்சந்திரன் 1984-ம் ஆண்டு சென்னை, அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது, எடுக்கப்பட்ட*

அமைச்சரவை முடிவு தொடர்பான கோப்பு, பின்பற்றப்பட்ட நடைமுறைகளை அறிவதற்காக, 04.10.2018 அன்று, ஆணையம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அரசு செயலாளரிடமும், R.2 மருத்துவமனையிடமும் சில விவரங்களைக் கேட்டிருந்தது. இந்த செய்தி 25.01.2018 அன்று விரைவுச் செய்திச் சேவையில் (Express News Service) வெளியானதை அறிந்த MGR அமைச்சரவையில் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த டாக்டர் H.V. ஹண்டே, அப்போதைய முதல்வர் எடப்பாடி K. பழனிசாமியிடம் தலைமைச் செயலகத்தில் கோப்புகளை வழங்கினார்.

**36.6.** மருத்துவக் கட்டணங்களின் இரகசியம் ஆணையத்தால் வெளியிடப்பட்டது என்பது ஆணையத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட மற்றொரு குற்றச்சாட்டாகும். உண்மை என்னவெனில், R.2 மருத்துவமனை, மருத்துவக் கட்டணங்களை டாலர்களிலும் இந்திய ரூபாயிலும் வழங்கியிருந்தாலும், முழுத்தொகையையும் ஆணையத்திற்கு இந்திய ரூபாய் மதிப்பில் அளித்திருக்க வேண்டும். ஆவணங்களின் நகல்கள் மறுபுறம் வழங்கப்பட்ட பின்னரே ஆணையத்திற்கு வழங்கப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த ஆணையத்தால் 27.07.2018 அன்று மருத்துவக் கட்டணப் பட்டியலாக ரூ. 6,85,69,584/- பெறப்பட்டது. அதில் ரூ.41,13,304/- செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களால் 13.10.2016 அன்று காசோலையாக செலுத்தப்பட்டது. ஆணையம் விரும்பியிருப்பின், அவர்களது பொறியியல் பிரிவின் பொது

மேலாளர் - *C.W.87-* சேஷாத்ரி நாராயணன் தெரிவித்தவாறு, *R.2* மருத்துவமனையின் ஐந்தாவது மாடியில் சில கட்டிடங்களின் அங்கீகாரமற்ற கட்டுமானம் வெளிப்படுத்தப்பட்டிருக்கலாம்.

***36.7.*** ஆணையம் *22.01.2019*–ஆம் நாளிட்ட, மனு எண். *213/2018,* பத்தி எண்.*41*-இல், *R.2* மருத்துவமனை சாட்சிகளை விருந்தினர்களாகக் கருதியதாகவும், ஆணையம் அவர்களுக்கு நாற்காலிகளை வழங்கியதாகவும் கூறியது. பெரும்பாலான *R.2.* மருத்துவமனை மருத்துவர்கள் செப்டம்பர் *2018*க்கு முன்னரும், சிலர் நவம்பர் *2018-*இலும் விசாரிக்கப்பட்டனர் *R.2* மருத்துவமனை, மருத்துவர் சாட்சிகள் கேள்விகளை எழுப்பி துன்புறுத்தப்பட்டதாக ஆணையத்திற்கு எதிராக ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தது. *R.2* மருத்துவமனை உயர் நீதிமன்ற விவாதத்தின் போது சில மருத்துவ சாட்சிகளின் கையொப்பங்கள் அடங்கிய இணைப்புடன் ஒரு மனுவை தாக்கல் செய்தது. தட்டச்சு செய்யப்பட்ட தாள்களின் தொகுப்பை விசாரணை செய்ததில், இந்த ஆணையத்தால் விசாரணை செய்யப்படாத டாக்டர் *K.*சாந்தி என்ற ஒருவரும் மேலே குறிப்பிட்ட இணைப்பில் கையெழுத்திட்டுள்ளார் என்று ஆணையம் குறிப்பிட்டது. ஆணையத்தின் மீது மருத்துவ சாட்சிகளுக்கு ஏதேனும் குறைகள் இருந்திருந்தால், *R.2* மருத்துவமனையின் சார்பில் ஆஜரான இரண்டு வழக்கறிஞர்களுக்கும் தெரிவித்திருப்பார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், இது ஐந்து மாதங்களுக்கும் மேலாக, காலம் கடந்த நிலையில், முதன்முறையாக உயர்நீதிமன்றத்தில்

*முன்வைக்கப்பட்ட ஒரு குற்றச்சாட்டாகும். எனினும், R.2 மருத்துவமனை தாக்கல் செய்த ரிட் மனுக்கள் முடிக்கப்பட்டன.*

***36.8.*** *மாண்புமிகு உயர் நீதிமன்றத்தின் மேற்கூறிய ஆணைகளுக்கு எதிராக, R.2 - அப்போலோ மருத்துவமனை ஏப்ரல் 2019-இன் இறுதிக்குள் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. மேலும் அவை SLP (C) 10189 மற்றும் 10190 / 2019 என எண்ணிடப்படிருந்தன. மேலும், 26.04.2019-அன்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் விசாரணை ஆணையத்தின் உள்ள அனைத்து நடவடிக்கைகளுக்கும் தடை விதித்ததுடன், நான்கு வாரங்களுக்குள் அறிவிப்பை திருப்பியனுப்பவும் ஆணையிட்டது.*

***36.9.*** *அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட W.P.Sr.No.12098/2019 தொடர்பாக பக்கம் எண்.23, பத்தி எண்.32 இல் W.P.No.3947/2019 இல், பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:j*

> *"It is submitted that W.P.Sr.No.12098 of 2019 was filed on 25.01.2019 and the same was returned. However, the said W.P.Sr.No.12098 of 2019 has not been re-presented as the Petitioner Hospital wishes to add subsequent facts / events that happened during the period between 25.01.2019 and 04.04.2019. Hence the Petitioner Hospital is filing this fresh Writ Petition."*

***36.10.*** *அப்போலோ மருத்துவமனைகளால் தாக்கல் செய்யப்பட்ட SLP இல், தட்டச்சு செய்யப்பட்ட தாள்களின் (பக்கம் 1 முதல் 599 வரை) பக்கம் எண்.452 பாரா எண்.32-இல் அப்போலோ மருத்துவமனை நிறுவனங்கள் பின்வருமாறு கூறியுள்ளன:*

*32. It is submitted that this Petitioner Hospital has not filed any other petition or suit seeking similar relief and craves leave of this Hon'ble Court by way of this Petition under Article 226 of the Constitution of India."*

**36.11.** மாண்புமிகு உயர் நீதிமன்றத்தின் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆவண தொகுப்புலில் (Typedset of Papers) பத்தி எண் 32-ல், வேண்டுமென்றே மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் செல்லும்போது மாற்றப்பட்டுள்ளது. மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் முன் இந்த பத்தி வேண்டுமென்றே மாற்றப்பட்டது. காரணம், அநேகமாக, R.2 முதல் நிகழ்வில் W.P.Sr.No. 12098/2019 போதுமான தன்மை மற்றும் போதாமை ஆகியவற்றை ஆணையத்தால் எடுத்துக்கொள்ள முடியாது எனக் கூறி, ஆணைய பொருண்மையை கேள்வி எழுப்பியது. அப்போலோ மருத்துவமனை 12வது பிரதிவாதியாக வரிசைப்படுத்தப்பட்ட W.P.No.44738/2016 இன், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை உணர்ந்த பிறகு, R.2 மருத்துவமனை இரண்டு ரிட் மனுக்களை தாக்கல் செய்தது, அது இறுதியில் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தை அடைந்தது.

**36.12.** தமிழ்நாடு அரசு தடை உத்தரவை இரத்து செய்ய மனு ஏதும் தாக்கல் செய்யாமல் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில், எதிர் பிரமாணப் பத்திரத்தைத் மட்டுமே தாக்கல் செய்தது. 15.10.2019 நாளிட்ட கடிதத்தின் மூலம் விசாரணை ஆணையம் விடுத்த கோரிக்கையின் பேரில், மாநில அரசு 10.12.2019 அன்று தடையை ரத்து செய்ய கோரி மனுவை தாக்கல் செய்தது. அவை கோவிட்-19 தொற்று பரவிய

காலகட்டம் என்பதால், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் ஆன்லைன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது மற்றும் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளைப் பார்த்து, ஆணையம் அரசிற்கு அனுப்பிய 16.10.2020-ஆம் நாளிட்ட கடிதத்தின்படி, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் பட்டியலிலிருந்து வழக்கை நீக்கக்கூடாது என்று மனுவை தாக்கல் செய்ய வேண்டும் என்று கோரியது.

**36.13.** அதன்பிறகுதான், வழக்கு விசாரணைக்கு பட்டியலிடப்பட்டு, அவ்வப்போது ஒத்திவைக்கப்பட்டு, 25.11.2020 அன்று மாண்புமிகு இரண்டு நீதிபதி கொண்ட அமர்வு, வழக்கை பகுதியாக விசாரித்து, எழுத்துப்பூர்வ சமர்ப்பித்தல்களைத் தாக்கல் செய்வதற்காக ஒத்திவைத்தது. அப்போலோ மருத்துவமனை 04.12.2020 அன்று எழுத்துப்பூர்வ சமர்ப்பித்தலைத் தாக்கல் செய்தது. மேலும், விசாரணை ஆணையம் 08.12.2020 அன்று எழுத்துப்பூர்வ சமர்ப்பித்தலை முறையாகத் தாக்கல் செய்தது. அதன்பின்னரே, இந்த வழக்கு 09.12.2020 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நான்கு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

**36.14.** அதன்பின்னர், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் 30.11.2021 ஆம் நாளிட்ட ஆணையில், சிவில் மேல்முறையீட்டு எண்கள் - 7856-7857/2021 (SLP (C) எண்கள் 10189-10190 /2019 -இல் இருந்து அனுமதி வழங்கியதன் மூலமாக), அப்போலோ ஹாஸ்பிட்டல் எண்டர்பிரைசஸ் லிமிடெட் தாக்கல் செய்த மேற்படி மனுக்களை முடிவுக்கு கொண்டு வந்தது.

***36.15.*** *மாண்புமிகு உச்சநீதிமன்றம் (நீதிபதிகள் எஸ். அப்துல் நசீர் மற்றும் கிரஷ்ணா முராரி) பின் வரும் சட்டத்தின் முக்கியமான கேள்வியை கருத்தில் கொண்டது –*

> *“இவ்வாணையம் கட்டாயமாக வரையறுக்கப்பட்ட பொருண்மைக்குட்பட்டு செயல்பட கடமைபட்டுள்ளது என்று தீர்மானிக்க மாண்புமிகு உயர்நீதி மன்றம் தவறியதா என்றும் மற்றும் மறைந்த முதலமைச்சருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையில் அலட்சியபோக்கிற்கான சாத்தியக்கூறு உள்ளதா என்ற கேள்விகள் குறித்து விசாரணைசெய்ய முடியாது மற்றும் அத்தகைய கண்டுபிடிப்புகளுக்கு நிபுணத்துவம் தேவை என்பதாலும் மற்றும் அத்தகைய விசாரனை தன்மை இவ்வாணையத்திற்கு தேவையா?*

***36.16.*** *30.11.2021-ஆம் நாளிட்ட மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் ஆணை பின்வருமாறு:*

> *"(7) வழக்குக்கு தீர்வு காண ஆணையத்திற்கு உதவ ஒரு மருத்துவ* குழுவை *அமைப்பது நியாயமானது மற்றும் சரியானது என்று நாங்களும் கருதுகிறோம். இதற்காக, மறைந்த தமிழ்நாடு முதல்வருக்கு ஏற்பட்ட நோய்களுக்கான துறைகளில் சிகிச்சையளிக்கும் நிபுணர்கள் அடங்கிய குழுவை நியமிக்குமாறு புதுதில்லியின் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் (எய்ம்ஸ்) இயக்குநரை கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு அமைக்கப்பட்ட மருத்துவக்* குழுவிற்கு, *ஆணையம்*

நடவடிக்கைகளின் முழுமையான பதிவுகளை அளிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தேவையில்லை. அவ்வாறு நியமிக்கப்பட்ட மருத்துவ குழு, ஆணையத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் பங்கேற்கவும், அறிக்கையின் நகலை ஆணையத்திற்கு வழங்கவும் அனுமதிக்கப்படுகிறது. அத்தகைய அறிக்கையின் நகல் மேல்முறையீட்டாளருக்கும் - மருத்துவமனை மற்றும் எதிர்மனுதாரர் எண்.3-க்கும் வழங்கப்பட வேண்டும்."

***36.17.*** இந்த ஆணைகள், *21.12.2021-அன்று* பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. சான்றிட்ட நகலினை *05.01.2022* அன்று பெற்றது. அதன்பின்னர், இவ்வாணையம் தனது பணியைத் தொடங்கி, இரண்டு மாதங்களுக்குள் அவர்களை விசாரித்தது.

## *37. எய்ம்ஸ் மருத்துவக் குழு அமைத்தல்*

***37.1.*** *30.11.2021-ஆம் நாளிட்ட, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகிணங்க, AIIMS மருத்துவர்களைக் கொண்ட மருத்துவ குழுவை அமைக்க AIIMS-ஐத் தொடர்பு கொள்ளுமாறு 29.12.2021-ஆம் நாளிட்ட கடிதத்தின் மூலம் விசாரணை ஆணையம் மாநில அரசிடம் கோரியது.*

***37.2.*** *அதன்பிறகு, 19.01.2022 அன்று 11.01.2022 ஆம் நாளிட்ட கடிதம் இந்த ஆணையத்தால் பெறப்பட்டது. அதில் புது தில்லி, AIIMS மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர், மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில், நிபுணர்களின் கருத்துபெற குழு அமைப்பதற்காக வழக்கு தொடர்பான முழுமையான மருத்துவப் பதிவுகளின் நகல்களை அனுப்புமாறு கோரியுள்ளார்.*

***37.3.*** *மேற்படி கடிதத்திற்கு பதிலளிக்கும் விதமாக, ஆணையமானது எய்ம்ஸ் மருத்துவக் குழுவின் அறிக்கை, ஐந்து எய்ம்ஸ் மருத்துவர்களின் சாட்சியங்கள், அப்போலோ மருத்துவமனையின் சிகிச்சைச் சுருக்கம் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் அரசுக்கு அனுப்பப்பட்ட 29.12.2021 ஆம் நாளிட்ட கடிதம் ஆகியவற்றை இணைத்து, 20.01.2022 ஆம் நாளிட்ட கடிதத்தை, புது தில்லி எய்ம்ஸ் இயக்குநருக்கு ஆணையம் அனுப்பியது. ஆணையம், மாண்புமிகு*

*உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, மருத்துவர்கள் குழுவை அமைக்குமாறு எய்ம்ஸ் இயக்குநரிடம் கேட்டுக்கொண்டது.*

***37.4.*** *இதற்கிடையில், AIIMS, புது தில்லி மருத்துவக் குழுவின் பொறுப்பதிகாரி, 01.02.2022-ஆம் நாளிட்ட செயற்குறிப்பினை அனுப்பினார். அது 08.02.2022 அன்று இந்த ஆணையத்தால் பெறப்பட்டது. அதில் AIIMS இயக்குநர் பின்வரும் எட்டு மருத்துவர்களைக் கொண்ட ஒரு மருத்துவக் குழுவை அமைத்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தார்.*

*(1) டாக்டர். நிகில் டாண்டன், பேராசிரியர் & தலைவர். உட்சுரப்பியல் துறை- தலைவர்.*

*(2) டாக்டர். ராஜீவ் நரங், பேராசிரியர், இதயவியல் துறை - உறுப்பினர்.*

*(3) டாக்டர்.அனந்த் மோகன், பேராசிரியர் & தலைவர், நுரையீரல் மருத்துவத் துறை. - உறுப்பினர்.*

*(4) டாக்டர்.விமி ரெவாரி, பேராசிரியர், மயக்கவியல் துறை -உறுப்பினர்.*

*(5) டாக்டர் நிதீஷ் நாயக், பேராசிரியர், இதயவியல் துறை -உறுப்பினர்.*

*(6) டாக்டர்.வி. தேவகௌரவ், பேராசிரியர், CTVS உறுப்பினர்.*

*(7) டாக்டர் அனந்த் நவீன் கே. ரெட்டி, மருத்துவமனை நிர்வாகத் துறை-உறுப்பினர் செயலாளர்.*

*(8) டாக்டர்.விஷால் போகட், மருத்துவமனை நிர்வாகத் துறை - கூர்நோக்குநர்.*

***37.5.*** *மேற்கூறிய எட்டு மருத்துவர்களைக் கொண்ட குழுவில், தொடர் எண்கள்.1, 5 மற்றும் 6 ஏற்கனவே மாநில அரசின்*

*கோரிக்கைக்கு இணங்க, மறைந்த முதல்வருக்கு சிகிச்சை அளித்தனர். மேலும், அவர்கள் ஏற்கனவே விசாரிக்கப்பட்டனர். மறைந்த முதல்வரைப் பார்க்க R.2-மருத்துவமனையில், 05.10.2016 முதல் 05.12.2016 வரை அவர்களின் வருகையின் அடிப்படையில் எய்ம்ஸ் இயக்குநரிடம் அறிக்கைகளை அளித்தனர். அதன்பிறகு, எய்ம்ஸ் இயக்குநர் பின்வரும் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட மருத்துவக் குழுவை மீண்டும் அமைத்துள்ளார் எனத் தெரிவித்து, புது தில்லி, எய்ம்ஸ் மருத்துவக் குழுவின் பொறுப்பு அலுவலர் , 09.02.2022 ஆம் நாளிட்ட நடைமுறைகளை அனுப்பினார்:-*

*1) டாக்டர். சந்தீப் சேத், பேராசிரியர், இதயவியல் துறை - தலைவர்.*

*2) டாக்டர். அனந்த் மோகன் பேராசிரியர் & தலைவர், நுரையீரல் மருத்துவத் துறை - உறுப்பினர்.*

*3) டாக்டர்.விமி ரேவரி, பேராசிரியர், மயக்கவியல் துறை -உறுப்பினர்.*

*4) டாக்டர்.மிலிந்த் ஹோடே, பேராசிரியர், CTVS துறை – உறுப்பினர்.*

*5) டாக்டர். ராஜேஷ் கட்காவத், பேராசிரியர், உட்சுரப்பியல் துறை - உறுப்பினர்.*

*6) டாக்டர். ஆனந்த் நவீன் K. ரெட்டி, மருத்துவமனை நிர்வாகத் துறை-உறுப்பினர் செயலாளர்.*

***37.6.*** *மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளின்படி, ஆணையம், விசாரணை நடவடிக்கைகள் தொடங்குவது பற்றி விவாதிப்பதற்காக, 16.2.2022 அன்று நடைபெறும் ஒரு கூட்டத்தில் பங்கேற்க, R.1 மற்றும்*

*R.2 தரப்பு வழக்கறிஞருக்கு 09.2.2022 அன்று ஒரு கடிதத்தை அனுப்பியது.*

***37.7.*** *இதற்கிடையில், புது தில்லி, எய்ம்ஸ், மருத்துவக் குழுவின் தலைவர், 17.02.2022 ஆம் நாளிட்ட செயல்முறைகளை அனுப்பினார், அதில் 14.02.2022 அன்று மாலை 4.00 மணிக்கு மருத்துவக் குழு நடத்திய ஆன்லைன் கூட்டத்தில் மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்ற உத்தரவுகளுக்கிணங்க, நிபுணர் கருத்துக்காக மருத்துவக் குழு அமைக்கப்படுவதற்கு, வழக்கு தொடர்பான மருத்துவ பதிவுகளின் முழுமையான தொகுப்பின் நகல்களை அனுப்ப விசாரணை ஆணையத்தைக் கோர முடிவு செய்யப்பட்டிருந்தது.*

***37.8.*** *ஆணையத்தால் 16.02.2022 அன்று புதியநீதிமன்ற அறையில் நடத்தப்பட்ட விசாரணையில், R.2 மருத்துவமனை தரப்பு வழக்கறிஞர் திரு.கே.மனோஜ்மேனன், அனைத்து மருத்துவப் பதிவுருக்கள் மற்றும் பிற ஆவணங்கள் விசாரணை ஆணையத்தால் மருத்துவகுழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் என்று கூறினார். மிகவும் சுவாரசியமான கேள்வி என்னவென்றால், 14.02.2022 அன்று AIIMS மருத்துவக்குழு எடுத்தமுடிவு, 25.02.2022 அன்றுதான் இந்த ஆணையத்திற்குக் கிடைத்தது. இது, ஆணையத்திற்குத் தெரிவிக்கப்படுவதற்கு முன்பே, R.2-க்கு முழுமையாகத் தெரிந்திருக்கிறது. அதனால்தான், 16.2.2022 அன்று ஆணையத்தின் முன் R.2 தரப்பு வழக்கறிஞர் தெரிவித்ததற்கு மருத்துவகுழு தான் காரணம் என்பதும், இது எய்ம்ஸ் மருத்துவகுழுவிற்கும் அப்பல்லோ*

*மருத்துவமனை நிர்வாகத்திற்கும் இடையே உள்ள தொழில்முறைத் தொடர்பை தெளிவாக நிரூபிப்பதாக அமைகிறது. மேற்கூறிய வாய்மொழி கோரிக்கையின் அடிப்படையில், 16.02.2022 மற்றும் 17.02.2022 ஆகிய நாட்களில், மருத்துவப் பதிவுருக்களின் 30 தொகுதிகள் 154 சாட்சிகளின் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்ட சாட்சியங்கள் ஆகியவற்றை எய்ம்ஸ் மருத்துவக்குழுவின் தலைவருக்கு ஆணையம் அனுப்பியது. ஆணையத்திடம் அனைத்து மருத்துவமனைப் பதிவுருக்களைக் கோரிய 14.02.2022-ஆம் நாளிட்ட எய்ம்ஸ் மருத்துவக்குழுவின் கடிதம், 25.02.2022 அன்றுதான் ஆணையத்தால் பெறப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில், மருத்துவக்குழு தனது கருத்தைத் தெரிவித்திருந்தாலும், ஆணையத்தால் எந்த அளவிற்கு நம்பக் கூடிய நியாயமான அறிக்கையாக அது இருக்கும்.*

***37.9.*** *தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் சென்னை அமர்வுக்கான வளாகத்தில், 7.3.2022 முதல் எய்ம்ஸ் மருத்துவக் குழுவின் முன்னிலையில் ஆணையம் காணொலிக் காட்சி மூலம் தனது விசாரணையைத் தொடங்கியது. அதில் தலைவர் மற்றும் ஏழு உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர். R.1 இன் வழக்கறிஞர் 7.3.2022 மற்றும் 8.3.2022 அன்று எட்டு மருத்துவர் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தார். முதலாவதாக, C.W.80-டாக்டர் அருள் செல்வனிடம் எய்ம்ஸ் மருத்துவக் குழுவின் தலைவர் கேள்வி எழுப்பினார், அவர் பின்வருமாறு பதிலளித்தார்:*

கேள்வி: கடைசியாக கலந்துகொண்ட நரம்பியல் நிபுணராக, பல்வேறு நேரங்களில் செய்யப்பட்ட மருத்துவ பரிசோதனைகள் மற்றும் EEG முடிவுகளை தயவுசெய்து விவரிக்கவும்.

பதில்: 04.12.2016 அன்றும் 05.12.2016 அன்று காலையிலும், இடது கண் சிமிட்டியது; ஒளியை உணர்ந்தது. மாலையில் நடந்த பரிசோதனையில் கண்களின் பாவை ஒளியை உணரவில்லை.

**37.10.** இரண்டாவது நிகழ்வில், 8.3.2022 அன்று, C.W.131-டாக்டர் ரவிச்சந்திரன் - தோல் மருத்துவர் விசாரணையின் போது, எய்ம்ஸ் மருத்துவக் குழு, C.W.130-டாக்டர். பார்வதி பத்மனாபனால் மறைந்த முதல்வருக்கு அளிக்கப்பட்ட ஸ்டீராய்டு மருந்துகள் குறித்து கேள்விகளை எழுப்பியது. இது குறித்து தனக்குத் தெரியாது என்று அவர் கூறினார். எய்ம்ஸ் மருத்துவக் குழுவின் இந்தக் கேள்வியைக் கருத்தில் கொண்டு, தோல் மருத்துவர் C.W.130 - டாக்டர். பார்வதி பத்மநாபனை மீண்டும் அழைத்து விசாரிப்பது உகந்தது என ஆணையம் கருதியது. எனவே, அவர் 22.03.2022 அன்று விசாரிக்கப்பட்டார். எய்ம்ஸ் மருத்துவக் குழு, செப்டம்பர் 2016 இல், மறைந்த முதல்வருக்கு அளிக்கப்பட்ட ஸ்டீராய்டு மருந்தின் அளவைக் கேட்டது. அவர் 2016-ஆம் ஆண்டின் முற்பகுதியில் தான் மறைந்த முதல்வரைப் பார்த்தார் என்றும், செப்டம்பரில் அல்ல என்றும் பதிலளித்தார். அவர் இரண்டு நாட்களுக்கு 20 மி.கி, இரண்டு நாட்களுக்கு 10 மி.கி மற்றும் ஒரு நாளைக்கு 5 மி.கி, என ஏப்ரல் 2016-இல் ஐந்து நாட்களுக்கு மருந்து வழங்கினார். R.1 தரப்பு

வழக்கறிஞரோ *R.2* தரப்பு வழக்கறிஞரோ அவரைக் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

***37.11.*** *C.W. 102 – தனது 19.04.2022-ஆம் நாள் சாட்சியத்தில் நுரையீரலின் இருபுறமும் 10.10.2016 முதல் 13.10.2016 வரை தினசரி தோராயமாக 1200மி.லி., 1070 மி.லி., 1040 மி.லி., 600 மி.லி., வெளியேற்றப்பட்டதாக ஒப்புக்கொண்டார். இதில் வினோதமானது என்னவென்றால், 19.04.2022 அன்று மருத்துவக் குழுவின் முன்னிலையில் இந்த பதில் அளிக்கப்பட்டாலும், அந்த வெஜிடேஷன் காரணமாக மட்டுமே இரண்டு நுரையீரல்களிலும் ஒரு லிட்டருக்கு மேல் திரவ சுரப்பு (Fluid secretion) இருந்தது மருத்துவக் குழுவிடம் சுட்டிக்காட்டப்பட்டது. விசாரணையின் முதல் நாளான 07.03.2022 அன்று மருத்துவக் குழு தோல் மருத்துவரிடம் ஸ்டிராய்டு அளவு குறித்து கேள்விகள் (எது ஒரு நபரின் உயிருக்கு உடனடி அச்சுறுத்தலை ஏற்படுத்தாது) என்று கேட்டிருந்தாலும், மற்றும் C.W. 80 அருள்செல்வனிடம், சில கேள்விகளை கேட்டும் மருத்துவக் குழு அவர்களின் அறிக்கையில் இந்த சாட்சியம் மறைந்த முதல்வரின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருந்தபோதிலும் கருத்தில் கொள்ளவில்லை. C.W. 48 – டாக்டர் S.A. பிரசன்னா, தனது சாட்சியத்தில் தனது பணி நேரத்தில் மறைந்த முதலவருக்கு நுரையீரலிருந்து திரவம் எடுக்கப்பட்டபோது, அவர் மிகவும் வலி உள்ளதாக கூறினார்.*

***37.12.*** *பிப்ரவரி, 2022 இல், R.2 – மருத்துவமனை தரப்பு வழக்கறிஞர், 23 மருத்துவ மற்றும் துணை மருத்துவ சாட்சிகளின் பெயர்களை*

*விசாரணைக்காக மீண்டும் அழைக்க வேண்டும் என்று தாக்கல் செய்திருந்தாலும், அவர்கள் சில பெயர்களை விட்டும், சிலரை சேர்த்தும் இறுதியாக, 17 பணி மருத்துவர்கள் , ஒரு தொழில்நுட்ப வல்லுநர் மற்றும் அவர்களின் சட்ட மேலாளர் ஆகியோரை மட்டுமே மீண்டும் அழைத்தனர். உண்மையில் அவர்கள் இந்த ஆணையத்தின் முன் ஏற்கனவே விசாரணை செய்யப்பட்டவர்களாவர். C.W.148- இளவரசி, (R.1 இன் மறைந்த சகோதரரின் மனைவி) C.W.149–திரு ஓ.பன்னீர்செல்வம், ஆய்வக அறிக்கை மற்றும் கோப்புக்களை பார்வையிட்ட அரசு மருத்துவர்கள் C.W.150-டாக்டர் நந்தகுமாரன் மற்றும் C.W.151-டாக்டர். ரவி ஆகியோரின் விசாரணை AIIMS மருத்துவக் குழுவின் முன்னிலையில் 21.03.2022 மற்றும் 22.03.2022 அன்று நடத்தப்பட்டது மற்றும் அவர்களுடைய அறிக்கையில் Ex.A1 – வரிசையில் (எண். 4 முதல் 8 ) ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. R-2 மருத்துவமனையால் தாக்கல் செய்யப்பட்ட மனு எண். 27/2022 -ல் R-1 தரப்பு வழக்கறிஞர் 30.03.2022 அன்று R-1 தரப்பில் மேலும் எந்த நேரடிசாட்சியம் இல்லை என்று ஒப்புதல் கையொப்பம் அளித்துள்ளார்.*

***37.13.*** *அப்போலோ மருத்துவமனை அளித்த சாட்சியங்களின் பட்டியலின்படி, அவர்களின் நாள் மற்றும் நேரத்திற்கு வசதியாக, மருத்துவர் சாட்சிகள் 05.04.2016, 06.04.2022, 18.04.2022 மற்றும் 19.04.2022 ஆகிய நாட்களில் விசாரிக்கப்பட்டனர். எய்ம்ஸ் மருத்துவக் குழுவின் முன்னிலையில் வீடியோ கான்பரன்சிங் மூலம் மொத்தம்*

எட்டு விசாரணை நாட்களில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். P.W.8- புகழேந்தி, அவர் செயல்வரம்பின் முதல் பகுதியைப் பற்றி மட்டுமே பேசுவதாக எய்ம்ஸ் மருத்துவக் குழுவிற்கு முறையாகத் தெரிவிக்கப்பட்ட பிறகு, 26.04.2022 அன்று ஆணையத்தின் புதிய நீதிமன்ற அறையில் விசாரிக்கப்பட்டார். சாட்சிகள் விசாரணை 26.4.2022 அன்று முடிவடைந்தது. விசாரணை ஆணையம் முன்பு விசாரிக்கப்பட்ட அனைத்து சாட்சிகளின் மொழிபெயர்க்கப்பட்ட சாட்சியங்களின் நகல்களையும், எய்ம்ஸ் மருத்துவக் குழுவின் பரிசீலனைக்காக, அவ்வப்போது அனுப்பியது.

**37.14.** மனு ஏ.எண்.213/2018-இல், ஆணையத்தின் முன் விசாரிக்கப்படும் சிறப்பு மருத்துவர்கள்/மருத்துவமனையின் பெயர்களை R.2 குறிப்பிடவில்லை. எனினும், அவர்கள் விரும்பும் எத்தனை மருத்துவர்களையும் அவர்கள் தரப்பில் விசாரணை செய்ய ஆணையம் அனுமதித்தது. மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் வழக்கு தீர்வுசெய்யப்பட்டதற்கு பிறகு, R.2 மருத்துவமனை அவர்களின் மனுவில் குறிப்பிட்டுள்ளபடி, வேறு எந்த சிறப்பு மருத்துவரையும் அழைக்காமல் அவர்களின் சொந்த மருத்துவர்களில் சிலரை மட்டுமே மீண்டும் அழைத்தது.

**37.15.** இவ்வாணையம் 22.01.2019-ஆம் நாளிட்ட உத்திரவின் மூலமாக மனு எண்.213/2018 -வில், பத்தி 4(iv)-இல் ஆணையம் தனது தரப்பு சாட்சியங்களை மூட இருப்பதால், எதிர்மனுதாரர்கள் தங்களது தரப்பு சாட்சிய பட்டியலை தயார் செய்ய அறிவுறுத்தப்பட்டிருந்தனர். பத்தி

*22*-ல் *R-1* தரப்பு வழக்கறிஞர் ஒரு சாட்சியத்தை மட்டும் விசாரிக்க முடிவெடுத்துள்ளதாக ஆணையத்திடம் கோரப்பட்டது. பத்தி *23*-ல் *R-1* தரப்பு வழக்கறிஞர் மற்ற சிலரையும் விசாரிக்க இருப்பதாக கோரப்பட்டது. அதன்பிறகு *R-2* மருத்துவமனை எந்த சாட்சிகளையும் ஆஜர் படுத்தவில்லை மற்றும் அவர்கள் இந்த ஆணையை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரை சென்று தோல்வியுற்று, மேலும் உச்சநீதி மன்றத்தால் *30.11.2022* அன்று இவ்வாணை உறுதிசெய்யப்பட்டது. சுருக்கமாக உச்ச நீதிமன்ற ஆணையில் கூறப்பட்டவை முன்னரே இவ்வாணையத்தால் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***37.16.*** மேலும், அவர்கள் *30.03.2022* அன்று இவ்வாணையத்தின் முன்பு கோரிக்கை வைக்கப்பட்டு, *R-1* தரப்பு வழக்கறிஞரால் *30.03.2022* அன்று ஒப்புதல் கையெப்பம் இட்டு அவர்கள் தரப்பில் எந்த சாட்சியையும் திருமதி *V.K.* சசிகலா சார்பாக விசாரிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு, அந்தந்த எதிர்மனுதாரர்கள் தங்களை விசாரித்துக்கொள்ளாமல் இவ்வாணையத்தின் கருத்தினை நடத்தையின் மூலமாக மறுக்க இயலா தடைக்கு *(Estoppel by Conduct)* உட்படுத்தப்படுவர்.

***37.17.*** தமிழில் சாட்சியமளித்த மற்றும் உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்த அரசியல் பிரமுகரான *P.W.8* – திரு.புகழேந்தியைத் தவிர, சாட்சிகளை ஆணையம் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளுக்கிணங்கி வீடியோ கான்பரன்சிங் மூலம் எய்ம்ஸ்

மருத்துவக் குழுவின் முன்னிலையில் விசாரித்தது. *P.W-8* இன் சாட்சியத்தை பதிவு செய்த பிறகு, ஆங்கில மொழிபெயர்ப்பின் நகல் *AIIMS* மருத்துவக் குழுவிற்கு அனுப்பப்பட்டது.

***37.18.*** மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் ஆணைப்படி, ஆணையம், மாநில அரசின் வாயிலாக எய்ம்ஸ்-க்கு கடிதம் அனுப்பியதைத் தொடர்ந்து, எய்ம்ஸ் மருத்துவமனை ஒரு மருத்துவக்குழுவை அமைத்தது. அவர்கள் முன்னிலையில், R.2 மருத்துவமனை விரும்பியபடி, அவர்கள் விரும்பும் சில மருத்துவர்கள் திரும்ப அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். எனவே, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகள் ஆணையத்தால் முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

## *38. திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களின் சாட்சியம் (அப்போதைய துணை முதல்வர்)*

***38.1.*** *மறைந்த முதல்வர் அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், முதலமைச்சரின் பணிகளைச் செய்ய முடியாததால் திரு. ஓ.பன்னீர்செல்வம் அமைச்சரவையில் 2-ஆம் நபராக இருந்து, குறிப்பிட்ட துறைகளின் பணிகளை மேற்கொண்டு வந்தார். எனவே, அவரை விசாரிப்பது பயனுள்ளதாக இருக்கும் என்று ஆணையம் கருதியது. எனவே ஆணையம் திரு.ஓ.பன்னீர்செல்வத்துக்கு அழைப்பாணை அனுப்பியது.*

***38.2.*** *முன்னாள் துணை முதல்வர் திரு ஓ.பன்னீர்செல்வம் 20.12.2018 அன்று ஆணையத்தில் ஆஜராகுமாறு 12.12.2018 அன்று ஆணையம் அழைப்பாணை அனுப்பியது. 19.12.2018 அன்று விசாரணை செய்ய திட்டமிடப்பட்ட எய்ம்ஸ் மருத்துவர்கள் C.W.141-டாக்டர். நிகில் டாண்டன் மற்றும் C.W.142-டாக்டர்.வி.தேவகௌரவ் ஆகியோரின் விசாரணை நாள் முழுவதும் நடந்தது. மேலும், 19.12.2018 அன்று நடைபெற இருந்த C.W.144-பெருமாள்சாமி மற்றும் C.W. 145-டாக்டர்.சுதாகர் ஆகியோரின் விசாரணை 20.12.2018 அன்றுக்கு ஒத்திவைக்கப்பட்டது. எனவே, 20.12.2018 அன்று விசாரணை நடத்த திட்டமிடப்பட்டிருந்த திரு.ஓ.பன்னீர்செல்வம் விசாரணையை ஆணையமே தானாக நிறுத்தியது.*

***38.3.*** *08.01.2019 அன்று ஆஜராகுமாறு திரு ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆணையம் மீண்டும் அழைப்பாணை அனுப்பியது. 05.01.2019 அன்று, 08.01.2019 அன்று சட்டசபை கூட்டத்தொடர் இருப்பதாகவும், அன்று ஆஜராக முடியாது என்றும், அவரது விசாரணையை ஒத்திவைக்குமாறும் மனு தாக்கல் செய்தார். R.1-தரப்பு வழக்கறிஞர் 03.01.2019 அன்று மனு எண். 4/2019 –ஐத் தாக்கல் செய்தார். எனவே, இரு தரப்பு வழக்கறிஞர்களின் கோரிக்கையை ஏற்று, 08.01.2019 அன்று திட்டமிடப்பட்டிருந்த திரு.ஓ.பன்னீர்செல்வத்தின் விசாரணை 23.01.2019-க்கு ஒத்திவைக்கப்பட்டது.*

***38.4.*** *23.01.2019 அன்று ஆணையத்தில் ஆஜராகுமாறு திரு ஓ.பன்னீர்செல்வத்துக்கு மீண்டும் ஆணையம் அழைப்பாணை அனுப்பியது. 22.01.2019 அன்றே அவர், 23.01.2019 மற்றும் 24.01.2019 ஆகிய நாட்களில் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற உள்ளதாகவும், 23.01.2019 அன்று ஆணையத்தில் ஆஜராக முடியாத நிலையில் இருப்பதாகவும், ஆணையத்திற்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்து, விசாரணையை ஒத்திவைக்குமாறு கோரியிருந்தார். எனவே, விசாரணை 29.01.2019க்கு ஒத்திவைக்கப்பட்டது.*

***38.5.*** *29.01.2019 அன்று அவர் ஆணையத்தில் ஆஜராகுமாறு ஆணையம் மீண்டும் அழைப்பாணை அனுப்பியது. 25.1.2019 அன்று, அவர் சார்பில் அவரது வழக்கறிஞர் விசாரணையை ஒத்திவைக்க கோரியிருந்தார்._அப்போலோ மருத்துவமனை W.P.SR.No.12098/2019*

*தாக்கல் செய்ததால், 25.01.2022 அன்று, திட்டமிடப்பட்ட விசாரணை 19.02.2019க்கு ஒத்திவைக்கப்பட்டது.*

***38.6.*** *19.2.2019 அன்று அவர் ஆணையத்தின் முன் ஆஜராகுமாறு ஆணையம் மீண்டும் அழைப்பாணை அனுப்பியது. அவர் தாக்கல் செய்த மணு எண்.23/2019 –ஐயும் நிலுவையில் உள்ள ரிட் மனுவையும் கருத்தில் கொண்டு திட்டமிடப்பட்ட விசாரணை 28.02.2019 க்கு ஒத்திவைக்கப்பட்டது. அதன் பிறகு, இந்த பொருண்மை மாண்புமிகு உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, 26.04.2019 அன்று இடைக்காலத் தடை விதிக்கப்பட்டு, திட்டமிடப்பட்ட விசாரணை நிறுத்தப்பட்டது.*

***38.7.*** *அதன்பின்னர், ஆணையம் அழைப்பாணை அனுப்பியவாறு, அவர் 21.03.2022 மற்றும் 22.03.2022 ஆகிய நாட்களில் இந்த ஆணையத்தின் முன் ஆஜரானார். அவரது வாக்குமூலம் C.W.149-ஆகப் பதிவு செய்யப்பட்டு, குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். சட்டசபைக் கூட்டத்தின் காரணமாகவும், உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பு ஆகிய இரண்டு நிகழ்வுகளில் மட்டுமே அவர் விசாரணையை ஒத்திவைக்கக் கோரினார்; R.2 - மருத்துவமனையால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள் மற்றும் அதைத் தொடர்ந்து மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் காரணமாக தாமதம் ஏற்பட்டது, இது பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது.*

***38.8.*** *அவர் C.W-149 ஆக விசாரிக்கப்பட்டார். அவரது சாட்சியத்தின் போது, எந்த சூழ்நிலையில் மறைந்த முதல்வர் மரணமடைந்தார் என்பதை அறிய அவர் "தர்மயுத்தம்" (நீதிக்கான போராட்டம்) எனப்படும் போராட்டத்தை நடத்தியதாக ஒப்புக்கொண்டார். மறைந்த முதல்வரின் நினைவிடம் அருகே செய்தியாளர்களுக்கு பேட்டியளித்து மறைந்த முதல்வரின் மரணத்திற்கான காரணம் குறித்து சந்தேகம் எழுப்பியதையும் அவர் ஒப்புக்கொண்டார். விசாரணை நடத்த ஆணையம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கையை அவர் தான் வைத்தார். ஆனால், அவருக்குத் தெரிந்த வரையில், மறைந்த முதல்வரின் மரணம் இயற்கைக்கு மாறானது என்ற சந்தேகம் இல்லை என்று அவர் தனது சாட்சியத்தில் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். ஒரு குறிப்பிட்ட கேள்விக்கு, மறைந்த முதல்வரின் உடல்நிலை குறித்தும் அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் குறித்தும் தனக்குத் தெரியாது என்று கூறியுள்ளார். மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அன்று நள்ளிரவு 12 மணியளவில் அவர் அதைப் பற்றி அறிந்திருந்தார். ஆனால் மறைந்த முதல்வர் என்ன நோயினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்று அவருக்குத் தெரியவில்லை. அவர் 23.09.2016 அன்று காலை 11.30 மணியளவில் அப்போலோ மருத்துவமனைக்கு வந்தார். மருத்துவமனைக்கு வந்ததும் அவரது உடல்நிலை குறித்து யாரிடமாவது விசாரித்தீர்களா என்ற கேள்விக்கு, தலைமைச் செயலாளர் C.W.-12-யிடம் கேட்டபோது, மறைந்த*

முதல்வர் நிலையாக இருந்ததாக தெரிவித்தார் என கூறினார். தொற்று பரவும் என்று கூறி மறைந்த முதல்வரைப் பார்க்க மருத்துவமனை அதிகாரிகள் யாரையும் அனுமதிக்கவில்லை என்பதால் அவர் மறைந்த முதல்வரைப் பார்க்க முயற்சிக்கவில்லை என்று கூறினார். சுகாதாரத் துறை அமைச்சர் அவரிடம், மறைந்த முதல்வருக்கு நன்முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் அவர் நலமாக இருக்கிறார் என்றும் கூறினார். ஆனால் மறைந்த முதல்வரின் உடல் நலக்குறைவு குறித்து அவரிடம் குறிப்பாக எதுவும் கூறவில்லை. அவர் மறைந்த முதல்வருக்கு இதய பிரச்சனை இருந்தது என்பதை C.W.146 மறைந்த முதல்வர் இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, சுகாதாரத் துறை அமைச்சர் மூலம் தெரிந்து கொண்டார். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நான்கைந்து நாட்களில் அவருக்கு இதயக் கோளாறு இருப்பது கண்டறியப்பட்டது என்பதை C.W.146 அறியவில்லை. மறைந்த முதல்வரின் இதயக் கோளாறுகள் குறித்து மருத்துவர்கள் என்ன முடிவு செய்தார்கள் என்பது அவருக்குத் தெரியவில்லை. அரசு மருத்துவக் குழுவை நியமித்தது அவருக்குத் தெரியும். அரசு மருத்துவர்கள் யாரும் அவருக்கு சிகிச்சை குறித்து தனிப்பட்ட முறையில் தெரிவிக்கவில்லை. அவருக்கு ஏற்கனவே டாக்டர் பாபு மனோகரை தெரியும் என்பதால், மறைந்த முதல்வரின் குரல்வளை அறுவை சிகிச்சை (டிரக்கியோஸ்டமி) பற்றி அவரிடம் கூறினார். மறைந்த முதல்வருக்கு சிகிச்சை அளிக்க எய்ம்ஸ் மருத்துவர்களை அழைத்த சுகாதாரத்துறைச் செயலாளரின்

*மார்புப் பகுதியில், X-ray fluffy shadow suggestive of pulmonary oedema-வைக் காட்டியது. Clinically correlation செய்யப்பட்டது. YVC-யிடமிருந்து கருத்து பெறப்பட்டது. நோயாளியை மயக்க நிலையில் வைக்க திட்டமிடப்பட்டது. பின்வரும் மருந்துகள் Ivabrad, Metoprolol, Aspirin, Rosuvastatin சேர்க்கப்பட்டன. NTG patch சேர்க்கப்பட்டது. There was a need to rule out coronary ischemia (decrease in blood supply to heart) என டாக்டர் பாபு ஆபிரகாமின் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 05-10-2016 அன்று, நோயாளி மயக்க நிலையில் வென்டிலேட்டரில் இருந்தார். சுயநினைவுடன், எளிய கட்டளைகளுக்குப் பதிலளிப்பவராக, வலியால் கை, கால்களை அசைத்தார். Pulmonary artery catheter வைக்கப்பட்டிருந்தது. TEE செய்யப்பட்டது vegetation அதிகரித்ததாகக் தெரியவில்லை. இரவு 11 மணிக்கு எழுதப்பட்ட குறிப்புகளில், எய்ம்ஸ் குழு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போலோ மருத்துவர் குழுவுடன் நோயாளியைப் பற்றி ஆலோசிக்கப்பட்டது. Tracheostomy மற்றும் நீடித்த ICU care தேவை என விவாதிக்கப்பட்டது. 6.10.2016 அன்று எய்ம்ஸ் மருத்துவர்கள் பார்வையிட்டு, அவர்கள் அப்போதைய நிலையிலான சிகிச்சைக்கு ஒப்புதல் அளித்தனர். காய்ச்சல் இருந்ததால் குரல் வளை அறுசவ சிகிச்சை (Tracheostomy) அடுத்த நாள் திட்டமிடப்பட்டது.*

*7.10.2016 அன்று காலை 5 மணிக்கு குரல் வளை அறுசவ சிகிச்சை (Tracheostomy) செய்வதற்காக அறுவை சிகிச்சை அரங்கிற்கு மாற்றப்பட்டு, குரல் வளை அறுசவ சிகிச்சை (Tracheostomy) செய்யப்பட்டது. அழைப்பிற்கு நோயாளி கண்களைத் திறந்தார். வென்டிலேட்டர் ஆதரவுடன் saturation 100% ஆக இருந்தது. Shoulder twitching clinically and there was no ictal (seizure) activity, EEG செய்யப்பட்டது. 8.10.2016 அன்று நோயாளியின் மருத்துவ நிலை அவ்வாறே தொடர்ந்தது. மயக்க நிலை குறைந்ததால் நோயாளி விழிப்பு நிலையிலும், கூறுவதைப் புரிந்து கொள்பவராகவும் இருந்தார். நிபுணர் கருத்துக்காக எய்ம்ஸ் டாக்டர் கில்னானிக்கு நெஞ்சுப்பகுதிக்கான X-ray அனுப்பப்பட்டது. 12.10.2016 அன்று, நோயாளி உறக்கத்தில் இருந்தார், இடையிடையே உறங்கினார் மற்றும் tracheostomy-யிலும் ventilator உதவியுடனும் இருந்தார். டாக்டர்.பாபு ஆபிரகாம், அமெரிக்காவிலுள்ள ஜான் ஹாப்கின்ஸ்-இன் இதயநோய் நிபுணர் டாக்டர். ஸ்டூவர்ட் ரஸ்ஸலுடன் தொலைபேசியில் கலந்துரையாடி, coronary angiogram-க்கு பரிந்துரைத்தார். 14.10.2016 அன்று, நோயாளி நெஞ்சுப்பகுதிக்கான CT-க்காக மாற்றப்பட்டார். டாக்டர் கில்னானி தலைமையிலான எய்ம்ஸ் குழு நோயாளியை பார்வையிட்டு மதிப்பீடு செய்தது. 15.10.2016 அன்று, எய்ம்ஸ் குழு மற்றும் டாக்டர் ரிச்சர்டு பார்த்தனர். 17.10.2016 அன்று சிங்கப்பூர் குழுவினரால் பிசியோதெரபி அளிக்கப்பட்டது. 18.10.2016 அன்று வென்டிலேட்டர் இணைப்பிலிருந்து எடுக்கவும், மயக்க நிலையைக் குறைக்கவும் திட்டமிடப்பட்டது. அவருக்கு முந்தைய நாள் flash pulmonary oedema இரண்டு*

*தடவை இருந்தது. அது (டாக்டர் சத்யபாமா, டாக்டர் MRG, டாக்டர் ISM, டாக்டர் செந்தில், டாக்டர் நரசிம்மன், டாக்டர் YVC ரெட்டி, டாக்டர் வெங்கட், டாக்டர் சுப்பையா, டாக்டர் பாபு ஆபிரகாம் ஆகியோர் கொண்ட) பல்துறை மருத்துவர் குழுவுடன் விவாதிக்கப்பட்டது. அடுத்த 72 மணிநேரத்திற்கு coronary ischemia-க்கான சிகிச்சையை மேம்படுத்த முடிவு செய்யப்பட்டது. Risks of deterioration of renal functions எதிர்பார்க்கப்பட்ட போதிலும், coronary angiography-க்கு திட்டமிடப்பட்டது. மற்ற இதயநோய் நிபுணரிடமிருந்து கருத்தைப் பெற பரிந்துரைக்கப்பட்டது. மாலையில் நோயாளி விழித்திருந்தார். 19-10-2016 அன்று, எழுதப்பட்ட குறிப்புகளில் நோயாளி விழித்திருந்ததாகவும், சைகைகளால் தொடர்புகொண்டதாகவும், கேள்விகளைக் கேட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 21.10.2016 அன்று நோயாளி உறக்கத்தில் இருந்தாலும், arousable நிலையில் இருப்பதாகவும், கடந்த 48 மணி நேரமாக, no flash pulmonary oedema என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 22.10.2016 அன்று, நோயாளி எளிய கட்டளைகளுக்கு பதிலளித்தார்; கை, கால்களில் proximal muscle weakness இருந்தது. 23.10.2016 அன்று proximal muscle weakness-காக கை, மற்றும் கால்களை அசைப்பதற்கான பயிற்சிக்கு திட்டமிடப்பட்டது. 26.10.2016 அன்று, minor hemodynamic instability இருந்தது என்பது அவர்களது மருத்துவக் குறிப்புகளில் இருந்தது. 27.10.2016 அன்று, நோயாளி tracheostomy and ventilator support-இல் இருந்தார். முகத்தின் இடது பக்கம் twitching (muscle movement) இருப்பதை மருத்துவர்*

குறிப்பிட்டிருந்தார். இரவு 10 மணியளவில் irritable-ஆக இருந்த அவர் வீட்டிற்கு செல்ல விரும்பினார். நோயாளி ventilator-ஐத் துண்டித்தும் பொறுத்துக்கொண்டார். பின்னர் ventilator-இன் அவசியம் குறித்து அவருக்கு விளக்கப்பட்டு நோயாளி ஒப்புக்கொண்டார். 28.10.2016 அன்று மதியம் 2 மணியளவில் an episode of hypoglycaemia இருந்தது. Facial twitching காணப்படவில்லை. வாய்வழி உணவு எடுத்துக்கொள்வது நிறைவாக இல்லாவிடில், NG குழாயை மீண்டும் சொருக திட்டமிடப்பட்டு, நோயாளிக்கு விளக்கப்பட்டது. 29.10.2016 அன்று இரவு முழுவதும் ectopics (ஒழுங்கற்ற இதயத் துடிப்பு) இருந்தது. Ectopics-க்காக 12 முன்னணி ECG மற்றும் இதயநோய் நிபுணர்களது கருத்தினைப் பெறத்திட்டமிடப்பட்டது. டாக்டர். ரிச்சர்ட் பீலே வருகைபுரிந்து, உணவுமுறையை மேம்படுத்த ஆலோசனை கூறினார். நோயாளி கடுமையான நெஞ்சு வலி இருந்ததாகத் தெரிவித்தார் - அறிகுறிகளுக்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. திரையில் (monitor) ECG மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை. 30.10.2016 அன்று, Trop T elevate செய்யப்பட்டது >190 (இதயத்திற்கு இரத்த ஓட்டம் குறைந்தது; இது லேசான மாரடைப்புக்கான அறிகுறியாகும்); நோயாளி 12 lead ECG-ஐ மறுத்தார். எனவே 12 lead ECG-எடுக்கப்படவில்லை. மீண்டும் Trop T - உயர்த்தப்பட்டது. 31.10.2016 அன்று கை, கால்களின் வலிமை ஓரளவு மேம்பட்டு, நோயாளியால் கட்டிலுக்கு அருகில் காலை வைத்து உட்கார முடிந்தது. இரவு 7 மணிக்கு ECG, நெஞ்சுப்பகுதிக்கான X-ray ஆகியவை எடுக்கப்பட்டன. ECG 29.10.16-அன்று இருந்ததைப்

போலவே V1, V2 மற்றும் V3 இல் T wave inversion-ஐக் காட்டியபோதிலும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாளுடன் ஒப்பிடும்போது புதியதாக உள்ளது என்று குறிப்புகளில் எழுதப்பட்டுள்ளது. இது டாக்டர்.YVC-க்கு தெரிவிக்கப்பட்டு, ஆஸ்பிரின் மற்றும் statin-னைத் தொடர அறிவுறுத்தப்பட்டது. 1.11.16 அன்று T piece trial-க்கு திட்டமிடப்பட்டது. Trop T positive - ஆக இருந்தது. ECG முன்பு போலவே இருந்தது. அவரால் 12 நிமிடங்கள் உட்கார முடிந்தது. 02.11.2016 அன்று, 30 நிமிடங்களுக்கு T piece trial செய்யப்பட்டது. O2 10L/min -க்கு சுயமாக சுவாசம் இருந்தது குறிப்பிடப்பட்டது. நோயாளி ஒரு மணி நேரம் mask breathing-ஐ பொறுத்துக்கொண்டார்.

ஒரு மணி நேரம் கழித்து, அவர் மீண்டும் வென்டிலேட்டர் உதவியில் வைக்கப்பட்டார். 03.11.2016 அன்று ECHO, அதே அளவையும், MR அதே அளவு vegetation-ஐயும் காட்டின. T piece பிற்பகல் 2.12 முதல் 5.25 வரை முயற்சிக்கப்பட்டது. பின்னர் மீண்டும் வென்டிலேட்டர் உதவியுடன் வைக்கப்பட்டார். 04.11.2016 அன்று, வயிற்று வலி இருப்பதாகத் தெரிவித்தார். நோயாளி நான்கு மணிநேர T piece-ஐ எதிர்கொண்டார். 05.11.16 அன்று நோயாளிக்கு நுரையீரல் வீக்கம் (pulmonary oedema) ஏற்பட்டது, அதற்கு Lasix சிகிச்சை அளிக்கப்பட்டது. நோயாளி எடுத்துச் செல்லத்தக்க வென்டிலேட்டருடன் சக்கர நாற்காலிக்கு மாற்றப்பட்டார். அடுத்த நாட்களில் T piece சோதனை செய்யப்பட்டது. நோயாளிக்கு அடுத்தடுத்த நாட்களில் நுரையீரல் வீக்கம் ஏற்பட்டது, அதற்கு Lasix சிகிச்சை

*அளிக்கப்பட்டது. அடுத்தடுத்த நாட்களில், பகலில் T piece trial வழங்கப்பட்டது, மேலும் அவருக்கு நுரையீரல் வீக்கம் ஏற்பட்ட போது, Lasix மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. 14.11.2016 அன்று டாக்டர். பாபு மனோகர், டாக்டர்.செந்தில்குமார் மற்றும் டாக்டர்.நளினி பிரபு ஆகியோரால் downsizing to No.6 Shileys fenestrated cuffed tube செய்யப்பட்டது. மாலை சுமார் 6.15 மணியளவில், நோயாளிக்கு செயல்முறையை விளக்கிய பிறகு, speaking valve வைக்கப்பட்டது. நோயாளி சாதாரண குரலில் தெளிவாகப் பேசினார். 16.11.2016 அன்று மூச்சுக்குழாய் tracheal mask-உடன் அவரை அமர வைத்தபோது, நோயாளிக்கு desaturated to 84%, ectopics – VPCs ஆக இருந்தது திரையில் காணப்பட்டது. Lasix-உடன் சிகிச்சையளிக்கப்பட்டது மற்றும் 4L/O2 உடன் saturation மேம்படுத்தப்பட்டது. 17.11.2016 அன்று மதியம் 2.15 மணிக்கு, inner tube, fenestrated tube, PM valve என மாற்றப்பட்ட போது, நோயாளி சுவாசிப்பதற்கு சிரமப்பட்டார்; இதற்கு mucous plug காரணமாக இருக்கலாம்.*

*18.11.16 அன்று, மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை T piece ventilation அளிக்கப்பட்டது. டாக்டர் பாபு மனோகரால் Inner cannula மாற்றப்பட்டது. பின்னர் tracheal mask-இல் வைக்கப்பட்டது. 19.11.2016 அன்று, நோயாளி காலை 6 மணி முதல், T piece-இல் இருந்தார், காலை 8 மணிக்கு tracheal cuff deflate செய்யப்பட்டது. நோயாளி, T piece 5L O2 உடன் சக்கர நாற்காலிக்கு மாற்றப்பட்டார். அவர் சக்கர நாற்காலியில் வார்டுக்கு மாற்றப்பட்டார்; மாற்றப்பட்டதால் குறிப்பிடத்தக்க*

*மாற்றம் ஏதுமில்லை. ஒரு மணி நேரம் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தார்; பின்னர் படுக்கைக்கு மாற்றப்பட்டார். Inner Cannula Fenestrated-ஆக மாற்றப்பட்டது. நோயாளி நன்கு பொறுத்துக்கொண்டார். Tracheal mask-உடனான Speaking valve, ஐந்து நிமிடங்கள் tolerate செய்யப்பட்டது. பின்னர் நோயாளிக்கு சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டதுடன் இருமலும் இருந்தது, Speaking valve அகற்றப்பட்டது மற்றும் inner cannula மாற்றப்பட்டது.*

*20.11.16 அன்று காலை 5 மணி முதல் T piece-இல் இருந்தார்; காலை உணவு வழங்கப்பட்டது. இருமல் குறைந்து secretions thin-ஆக இருந்தது. மதியம் ஒரு கப் தயிர் சாதம் சாப்பிட்டார். நோயாளி படுக்கையின் நுனியில் 15 நிமிடங்கள் அமர வைக்கப்பட்டார்.*

*அவர் ஆர்வத்துடன் பிசியோதெரபி செய்தார். 21.11.2016 அன்று, cuff உடனான tracheal mask deflate செய்யப்பட்டது. இருமல் இருந்தது. T piece-உடன் நன்றாக உறங்கினார். அவரால் குறைந்தபட்ச உதவியுடன் தன் உடலின் மேற்பகுதியை உயர்த்த முடிந்தது; வலிமை மேம்பட்டது. 22.11.2016 அன்று, நோயாளி பகலில் தூக்கத்தில் இருந்தார் மற்றும் வாய்வழியாக உணவு எடுத்துக்கொள்வது குறைவாகவே இருந்தது. அவர் இடையிடையே T piece-இல் இருந்தார். இருமலில் thick secretions இருந்தன. 10-15 நிமிடங்கள் சக்கர நாற்காலியில் உட்கார வைக்கப்பட்டு, மீண்டும் படுக்கைக்கு மாற்றப்பட்டார். 23.11.2016 அன்று அவர் வாய்வழியாக உணவை எடுத்துக் கொண்டார். காலை 11.45 மணிக்கு அடிவயிற்றில் வலி இருப்பதாகத் தெரிவித்தார். நோயாளிக்கு மூச்சு*

விடுவதில் சிரமம் இருந்தது. பிற்பகல் 3.45 மணியளவில், நோயாளிக்கு *tachypneic* (சுவாச வீத அதிகரிப்பு), *breathing heavily, bilateral wheeze and basal crackles* ஆகியவை இருந்தன. முன்பு எடுக்கப்பட்ட நெஞ்சுப்பகுதிக்கான *X-ray*-யில் இடது பக்கத்தில் தொடர் திரவ வெளியேற்றம் காணப்பட்டது.

நோயாளிக்கு அடிக்கடி ஏற்பட்ட இருமல் 24.11.2016 அன்று குறைந்தது. முந்தையநாள் பிற்பகல் 3.30 மணியளவில் அவருக்கு *episode of pulmonary oedema* ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. பல *VPC*-க்கள் இருந்தன. ஆய்வக முடிவுகளுக்குப் பிறகு, *Magnesium correction* வழங்கப்பட்டது. *VPC*-க்கள் நின்றுவிட்டன. காலை 6.30 மணி முதல் இருந்த *T piece ventilation* மற்றும் *cuff* காலை 9 மணிக்கு முற்றிலும் நீக்கப்பட்டது. நோயாளி 5+5 நிமிடங்கள் படுக்கைக்கு அருகில் கால்களை தொங்கவிட்டு உட்கார வைக்கப்பட்டு, உதவியுடன் 10 வினாடிகள் எழுந்து நின்றார். இருமல் குறைவாக இருந்தது, *Secretions thick*-ஆகவும் *rusty*-ஆகவும் இருந்தது.

25.11.2016 அன்று, அமெரிக்காவிலுள்ள மவுண்ட் சைனி மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் சமின் ஷர்மா (இதய மருத்துவர்) மறைந்த முதல்வரது குடும்ப உறுப்பினர்களால் அழைக்கப்பட்டு, நோயாளியைப் பார்த்தார். மருத்துவமனையின் தலைவரது அலுவலகத்தில் நோயாளியின் உடல்நிலை குறித்து அவருக்கு விளக்கப்பட்டது. *Diastolic cardiac failure*-ரால் இந்த நுரையீரல் வீக்கம் அவ்வப்போது ஏற்பட்டதாகவும், ஒரு கட்டத்தில் கரோனரி ஆஞ்சியோகிராஃபி ***(coronary angiography)*** மூலம்

பயனடைவார் என்றும் டாக்டர் சர்மா கருதினார். நோயாளியைப் பார்த்து, மதிப்பீடு செய்த பிறகு, அவருடன் **CAG-**இன் (கரோனரி ஆஞ்சியோகிராம்) அவசியத்தைப் பற்றி விவாதித்து, அன்று மாலையே செய்ய வேண்டிய செயல்முறைகளை எடுத்துரைத்தார். இலண்டனில் உள்ள டாக்டர் ரிச்சர்ட் பீலேவுடன் கலந்தாலோசித்த பிறகு, அவரது அறிவுறுத்தலின்படியும், ஒருமித்த கருத்துப்படியும் நடைமுறை ஒத்திவைக்கப்பட்டது. இந்த முடிவு குடும்ப உறுப்பினர்கள், நோயாளி மற்றும் அரசு அதிகாரிகளுக்கு சிகிச்சை குழுவால் தெரிவிக்கப்பட்டது. மதியம் 2.00 மணிக்கு டிரக்கியோஸ்டமி *(Tracheostomy)* குழாய் அகற்றப்பட்டு *No.4 Shiley tube* பொருத்தப்பட்டது. *Fenestrated* டியூப் வைக்கப்பட்டு, நோயாளிக்கு *desaturation* ஏற்பட்டதால், உடனடியாக *non – fenestrated tube* வைக்கப்பட்டது. 26.11.2016 அன்று காலை 7.55 மணி முதல் 8.50 மணி வரை பிசியோதெரபி செய்தபோது இதயத் துடிப்பு நிமிடத்திற்கு 46-38 ஆகக் குறைந்தது. இதயத் துடிப்பு இயல்பு நிலைக்குத் தானாகத் திரும்பியது. மதியம் 1.30 மணிக்கு இதே போல் நடந்தது. டாக்டர் பாபு ஆபிரகாம் தனது குறிப்புகளில் *T piece trial-*ஐ நிறுத்திவிட்டு, வென்டிலேட்டருடன் இணைக்க திட்டமிடப்பட்டதாக எழுதியுள்ளார். 27.11.2016 அன்று, நோயாளி *pressure support ventilation-*இல் இருந்தார். 28.11.2016-அன்று *YVC-*ஆல் 27.11.2016 மதியம் 2 மணி முதல் *Holter monitoring-*இல் வைக்கப்பட்டது. 28.11.2016 அன்று *TT grams stain-*இல் ஒரு சில *pus cells* காணப்பட்டது; பாக்டீரியாக்கள் இல்லை. 29.11.2016 அன்று, நோயாளி *tracheal mask and*

*intermittent pressure support ventilation-இல் இருந்தார். மாலை 5 மணியளவில், மயக்கம் ஏற்படுவதாகக் கூறியதால், நோயாளி பிசியோதெரபியை மறுத்துவிட்டார். 30.11.2016 அன்று, நோயாளி எபிகாஸ்ட்ரிக் பகுதியைச் சுற்றி(epigastric region) எரிச்சலுடன் கூடிய வலி (vague burning pain) இருப்பதாகத் தெரிவித்தார். அதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ECG மானிட்டரில் எந்த மாற்றமும் காணப்படவில்லை. 1.12.2016 அன்று, குறிப்புகளில், வலது கண்ணில் discharge இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது, அதற்காக குடும்ப உறுப்பினர்கள் அவர்களின் கண் மருத்துவரிடம் கேட்டு, சொட்டு மருந்து பரிந்துரைக்கப்பட்டது. இரவு 7 மணிக்கு, நோயாளி Mobilisation-க்கு மறுத்தார், அவர் காலையிலிருந்து ஐந்து முறை மலம் கழித்ததில், இரண்டு முறை இளகியவாறாக இருந்தது. அதன் பின்னர், அவர் மயக்கம் ஏற்படுவதாகக் கூறினார். 02.12.2016 அன்று மூச்சுக் குழாயிலிருந்து thick secretions இருந்தது. கண்களில் Congestion குறைந்தது. நோயாளிக்கு வயிற்று வலி இருந்தது. பிசியோதெரபிக்கு ஒத்துழைத்தார் மற்றும் நோயாளி 10 விநாடிகள் உதவியின்றி நிற்க முடிந்தது. மாலை 4.20 மணிக்கு, நோயாளிக்கு நகர்தலின்போது மயக்கம் ஏற்பட்டது. இரத்தக்கொதிப்பு அதிகரித்தது; நோயாளி மீண்டும் படுக்கைக்கு திரும்பி, positive pressure ventilation-ல் வைக்கப்பட்டார். டாக்டர்.YVC உடன் விவாதிக்கப்பட்டு நைட்ரோபேட்ச் (Nitropatch dosage) குறைக்கப்பட்டது. இரவு 11 மணிக்கு, மூச்சு விடுவதில் சிரமம் மற்றும் PCO2, 60% ஆகவும், பொட்டாசியம்*

*அளவு - 5.76 என்று அதிகரித்தது. அவர் BIPAP உதவியுடன் நன்றாக உறங்கினார் என்பதும், கோப்பு எண்.4 பக்கம் எண்.563 இல், nephro மதிப்பாய்வுக்குப் பிறகு கரோனரி ஆஞ்சியோகிராமுக்கான திட்டம் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*03.12.2016 அன்று, காலை 10.30 மணியளவில், இரத்தத்தில் ஆக்ஸிஜனின் அளவு குறைந்து, சுவாச விகிதம் அதிகரித்தது. அதற்கு Lasix மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. பல சீழ் செல்களும் (pus cells) gram positive cocci-யும் உள்ளன என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. எய்ம்ஸ் குழு பார்வையிட்டு, அதே சிகிச்சையைத் தொடரவும், கரோனரி ஆஞ்சியோகிராம் அல்லது MIBG/PET-க்கு திட்டமிடுமாறும் அறிவுறுத்தியது. பிற்பகல் **4.10** மணியளவில்**,** கெட்டியான திரவசுரப்புகளுடனான இருமலுக்குப் பின்னர்**,** நோயாளி சுவாசிப்பதில் சிரமம் இருப்பதாகத் தெரிவித்தார்**.** நோயாளி BIPAP-உடன் இணைக்கப்பட்டார். டாக்டர்.ரமேஷ்-இன் ஆலோசனைப்படி, ஆன்டிபயாடிக் (Antibiotics) மருந்துகள் அளிக்கப்பட்டன. அடுத்த ஆலோசனை பெறப்படும் வரை pressure support ventilation-ஐத் தொடர்ந்து வழங்க முடிவு செய்யப்பட்டது. 04.12.16 அன்று அதிகாலை 3.40 மணியளவில் அவருக்கு இருமல் ஏற்பட்டது, அது மெதுவாகக் குணமானது. காலை 8.35 மணியளவில், tracheal mask மாற்றப்பட்டது, secretions rusty மற்றும் கெட்டியாகவும் உட்குழாயை ஓரளவிற்கு அடைத்தும் இருந்தது; அது சுத்தம் செய்யப்பட்டு மாற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து, நோயாளிக்கு சுவாசம் சீராக இருந்தது. அவர் காலை உணவு*

*எடுத்துக்கொள்ளவில்லை. அவர் காலை 11.00 மணிக்குப் பிறகு cornflakes-உடன் பால் எடுத்துக் கொண்டார். நோயாளி 10-15 நிமிடங்கள் படுக்கையிலிருந்து எழுந்து மீண்டும் படுக்கைக்குத் திரும்பினார். டாக்டர் ரமா தேவி, மதிய உணவு எடுத்து வரப்படுவதைப் பார்த்து, நோயாளி மதிய உணவு சாப்பிட்டதாக எழுதியதாகக் கூறியுள்ளார்; ஆனால் நோயாளி மதிய உணவை எடுத்துக்கொள்வதை அவர் பார்க்கவில்லை, அவர் tracheal mask-இல் இருந்தார். மதியம் 1.20 மணியளவில் நோயாளி ஒருமுறை வாந்தி எடுத்தார். டாக்டர்.ரமேஷ் வாந்திக்கு மருந்து அளித்தார். அதில் நோயாளி மாலை 4.20 மணிக்கு மூச்சு விடுவதில் சிரமம் இருப்பதாகக் கூறினாரெனவும், அவர் PSV-உடன் இணைக்கப்பட்டாரெனவும் INNER CANNULA தூய்மையாக உள்ளது கண்டறியப்பட்டது (அடைப்பு ஏற்படவில்லை) எனவும் டாக்டர். ரமாதேவி குறிப்புகளை பின்னிட்டு எழுதியிருந்தார். O2 (ஆக்சிஜன்) 10லி முதல் 15லி வரை அதிகரிக்கப்பட்டது மற்றும் திரவ சுரப்பு தடிமனாக இருந்ததை டாக்டர் ரமேஷிடம் தெரிவித்தார். மூச்சுத்திணறல் இருந்தது. உரிய மருந்துகளுடன் நெபுலைசேஷன் (nebulisation) தொடர்ந்து அளிக்கப்பட்டது. சுவாசிப்பதில் ஏற்பட்ட சிரமம் நீங்காமல் நோயாளிக்கு அசௌகரியம் ஏற்பட்டது; காணப்பட்ட VPC, பின்னர் VF-ஆக மோசமடைந்தது. CPR ஆரம்பித்து மூன்று முறை shock அளிக்கப்பட்டது. Resuscitation அளிக்கும் போது இதயத்திற்கான உரிய மருந்துகள் வழங்கப்பட்டன; இதயநோய் நிபுணருக்குத் தெரிவிக்கப்பட்டது; பொட்டாசியம் செறிவு அதிகரிப்பதை சரிசெய்ய*

*சிகிச்சை அளிக்கப்பட்டது; CPR தொடரப்பட்டது; மின் அமைப்பு நிறுவப்படவில்லை. ECMO குழு தயார்நிலைப்படுத்தப்பட்டது. கருவிழி விரிவடைந்தும் எதிர்செயலாற்றாமலும் இருந்தது. கண் இமைப்பதும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ECMO குழு வந்து, ஸ்டெர்னோடமிக்குப் பிறகு, மாலை 5.30 மணிக்கு central ECMO நிறுவப்பட்டது, டயாலிசிஸ் (Dialysis) தொடங்கப்பட்டது. இதயம் நின்றதால், இடது வென்ட்ரிக்கிள் (ventricle) வென்ட் வைக்கப்பட்டது. அதே நிலை இருந்ததால், இன்ட்ரா கார்டியாக் மசாஜ் (intra cardiac massage) செய்யப்பட்டது. Pacing செயல்பாடு மட்டுமே காணப்பட்டது. மாலை 5 மணிக்கு, நளினி மற்றும் டாக்டர். P.C.ஜெயின் செய்த ECHO-இல், அவரது இதய செயல்பாட்டின் போது, போதுமான அளவு LV contractility இருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 5.12.16 அன்று மதியம் 12 மணிக்கு, நோயாளி அறுவை சிகிச்சை அரங்கிற்கு மாற்றப்பட்டார், குறிப்புகளில், அதிகாலை 4 மணிக்கு இதய செயல்பாடு தீவிரமாக (intrinsic cardiac activity) இருப்பதாகவும், 5.30 மணிக்கு, intrinsic rhythm இல்லை மற்றும் pacing rhythm இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மாலை 4.10 மணிக்கு, விழிகள் சமமின்றி வெளிச்சத்திற்கு எதிர்வினையாற்றியது. மாலை 5 மணியளவில், வெப்பநிலையை 37.5 டிகிரிக்கு அதிகரித்த பிறகு, நரம்பியல் பரிசோதனைக்கு எய்ம்ஸ் மருத்துவர்கள் அறிவுறுத்தினர். Grave prognosis விளக்கப்பட்டது. குறிப்புகளின்படி, இரவு 11 மணிக்கு, ECMO மற்றும் பிற உறுப்பு ஆதரவு சிகிச்சையைத் தொடர்வது பயனற்றது என்று அப்போலோவின்*

*சிகிச்சைக் குழுவால் முடிவு செய்யப்பட்டதற்கு AIIMS குழுவும் உடன்பட்டது. எனவே, உயிர்காப்பு கருவிகளின் உதவிகளை (life sustaining supports) திரும்பப் பெற பரிந்துரைக்கப்பட்டது நோயாளி 05.12.2016 அன்று இரவு 11.30 மணிக்கு இறந்துவிட்டார் என அறிவிக்கப்பட்டது.*

## *44.* மருத்துவர்களின் செயல்முறைகள் – டெர்னோடமி மற்றும் எக்மோ *(STERNOTOMY and ECMO)*

***44.1.*** *சாட்சியங்கள் மற்றும் மருத்துவமனை பதிவுகளின்படி, மறைந்த முதல்வருக்கு 04.12.2016 அன்று மாலை 4.20 மணிக்கு இதய செயலிழப்பு ஏற்பட்டதால், மருத்துவர்கள் குழு வார்டுக்கு விரைந்தது. அந்த நேரத்தில், அங்கிருந்த C.W.60, C.W.102 - டாக்டர் ரமேஷ்-ஐ அழைக்க, மருத்துவர்கள் குழு வார்டுக்கு விரைந்தது. ECMO குழு வரும் வரை electric shock தொடர்ந்து வழங்கப்பட்டது. அப்போதும் ரிதம் வரவில்லை; இதயத்துடிப்பும் குறைவாகவே இருந்தது.*

***44.2.*** *04.12.2016 அன்று மாலை 4.20 மணிக்கு, C.W.65 – மகேஸ்வரியும், செவிலியர் C.W.61-விஜயலட்சுமியும் மறைந்த முதல்வருக்கு நெபுலைசரைப் பொருத்தும் போது, திரையில் அவரது இதயத்துடிப்பு இரண்டு முதல் மூன்று முறை மாறியதாகவும், அவரது கண்கள் மேல்நோக்கியது என்றும் கூறினர். உடனடியாக அங்கிருந்த மருத்துவர் அவரது இதயத்திற்கு shock அளித்தும் மீண்டும் செயல்படாததால், அவர்கள் அறுவை சிகிச்சை நிபுணரை அழைத்தனர். அச்சமயத்தில், அங்கிருந்த C.W.60 டாக்டர் ரமாதேவி, C.W.102-டாக்டர். ரமேஷ் வெங்கட்ராமன் ஆகியோர் CPR-ஐத் தொடங்கினர்.*

***44.3.*** *C.W.60 - டாக்டர். M. ரமா தேவி தனது சாட்சியத்தில், இதய நோய் நிபுணர் டாக்டர் ஜெயினை அழைத்த பின்னர், அவர் shock அளித்தார் என்று கூறினார். டாக்டர் ரமேஷ் அங்கிருந்தார் என C.W.60 கூறியிருந்த போதிலும், கோப்பு எண். 4, பக்கம் 572-இல் தொலைபேசி அழைப்பின் பேரில், டாக்டர் ரமேஷ் மருத்துவமனைக்கு வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலில், ECHO cardiogram செய்யப்பட்டு பின்னர் இதயத்திற்கு மசாஜ் மற்றும் shock வழங்கப்பட்டது.*

***44.4.*** *மருத்துவமனையிலிருந்த C.W.118-பிரகாஷ் சந்த் ஜெயினும் இதில் பங்குபெற்றார். தங்கள் வசிப்பிடத்திலிருந்த, பிற மருத்துவர்களான, C.W.119 - டாக்டர் T. சுந்தர், C.W.126 - டாக்டர் மதன் குமார் ஆகியோர் அழைக்கப்பட்டு, அவர்களும் மருத்துவமனையை அடைந்து, sternotomy நடைமுறையில் இணைந்து ECMO-வுடன் இணைத்தனர்.*

***44.5.*** *C.W.59 – திருமதி, M. நளினி, ECHO டெக்னீசியன், 4.12.2016 அன்று மதியம் 03.50 மணிக்கு, மறைந்த முதல்வரின் இதயத்திற்கு மாரடைப்புக்குப் பிந்தைய ECHO எடுத்தார். அவர் அந்த அறைக்குள் செல்லும்போது மறைந்த முதல்வரின் இதயத்திற்கு மசாஜ் செய்துகொண்டிருந்தனர். நோயாளிக்கு மாலை 04:20 மணிக்கு சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டது. அதன் பின்னரே இதய செயலிழப்பு ஏற்பட்டது என்று கோப்பு எண். 4, பக்கம் எண் 575-இல் குறிப்பிடப்பட்டுள்ளது.*

***44.6.*** *C.W.125 - காமேஷ், C.W.100- மதிவாணன், C.W.122- பஞ்சாபிகேசன் மற்றும் ஒரு அருண் ஆகியோர் ஒரு மணி நேரம் மாறிமாறி இதய மசாஜ் செய்தனர். மருத்துவர்கள் அரை மணி நேரம் மசாஜ் செய்தனர்.*

***44.7.*** *C.W.102 - டாக்டர் ரமேஷ் வெங்கட்ராமன், இந்த நடைமுறைக்கு, பொதுவாக அவர்கள் 20 நிமிடங்கள் எடுத்துக்கொள்வர்; ஆனால் அவசர நிலை காரணமாக, 10 நிமிடங்களுக்குள் முடிக்கப்பட்டது.* ***Sternotomy*** *செய்யும் நேரத்தில்,* ***CPR*** *செய்ய இயலாது என்று கூறினார்.*

***44.8.*** *C.W.112-டாக்டர் இராமகிருஷ்ணன், மறைந்த முதல்வர் மாலை 05.30 மணிக்கு ECMO-வுடன் இணைக்கப்பட்டார் எனத் தெரிவித்தார். பொதுவாக, அவரை ECMO-வுடன் இணைக்க ஒரு மணி நேரம் ஆகும். ஆனால், 45 நிமிடங்களில் அவருடைய இதயக்குழாய்கள் எடுக்கப்பட்டு அவற்றுடன் இணைக்கப்பட்டன. கட்டரைப் (cutter) பயன்படுத்தி sternotomy செய்யப்பட்ட பின்னரே ECMO-வுடன் இணைக்க உரிய குழாய்கள் இணைக்கப்பட்டன. இதயம் செயலிழந்தவுடன், இதய மசாஜ் அளிக்கப்பட்டது. பின்னர் shock அளிக்கப்பட்டது. அதன் பிறகு இரண்டும் மாறிமாறி அளிக்கப்பட்டது. அவை பயனற்றுப்போகவே, மாலை 5:30 மணியளவில் ECMO-உடன் இணைக்க முடிவு செய்யப்பட்டது. கட்டர் உதவியுடன் ஸ்டெர்னோடமி செய்ய 20-30 நிமிடங்கள் ஆகும்.*

*அந்த நேரத்தில், மார்பெலும்பு தவிர வேறு எந்த வகையிலும் அவரது உடல் அசையாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.*

***44.9.*** *C.W.119 - டாக்டர். T. சுந்தர், மறைந்த முதல்வருக்கு 45 நிமிடங்கள் CPR வழங்கப்பட்டதாகவும், Sternotomy சுமார் 10 நிமிடங்களுக்குள் செய்யப்பட்டது என்றும் கூறினார். அதன்பிறகு, 15 நிமிடங்களுக்குள் ECMO-உடன் இணைக்கப்பட்டது. சருமத்தைக் கிழிக்கும் போதும், கட்டரின் உதவியுடன் வெட்டும்போதும், CPR செய்ய இயலவில்லை; அவை செய்யப்படவில்லை; அதற்கு சில நொடிகள் ஆகியிருக்கும் என்று அவர் கூறினார்.*

***44.10.*** *C.W.126 - டாக்டர் மதன் குமார், இதய மாற்று அறுவை சிகிச்சை நிபுணர், CPR பலனளிக்கவில்லை என்று கருதிய பிறகு, அவர்கள் ஸ்டெர்னோடமி அறுவை சிகிச்சை செய்தனர், அதற்கு பத்து நிமிடங்கள் ஆனது. மசாஜ் செய்யும் போது, ஸ்டெர்னோடமி அறுவை சிகிச்சையை நிறுத்தியும், ஸ்டெர்னோடமி செய்யும் போது, மசாஜ் செய்வதை நிறுத்தியும் செய்தனர்; இதற்கு, சில நொடிகள் பிடித்தது. அவர்கள் 5 முதல் 10 நொடி ஸ்டெர்னோடமி செய்து நிறுத்திவிட்டு மீண்டும் 25 முதல் 30 நொடி இதய மசாஜ் செய்தனர்.*

***44.11.*** *C.W.123 - டாக்டர் மினல் M வோரா, மயக்க மருந்து நிபுணர், ECMO குழுவினருடன் சேர்ந்து sternotomy செய்யத் தொடங்க அவர்கள் எடுத்துக்கொண்ட நேரம் 30 நிமிடங்கள் என்றார். அவரது இதயம் முழுமையாக செயல்படுவதை நிறுத்திய பின்னரே, அவர்கள் sternotomy செய்தனர். அவரது இதய செயலிழப்புக்குப் பிறகு, CPR*

செய்த பிறகும் இரத்த ஓட்டத்தில் தானாக சுழற்சி எதுவும் ஏற்படவில்லை. Sternotomy செய்த பிறகு, CPR செய்ய இயலாது. அவர்கள் sternotomy செய்தபோது, CPR செய்தனர். அந்த நேரத்தில், அவர் இதயத்தில் எந்த துடிப்பும் காணப்படவில்லை.

**44.12.** மேற்கண்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து, CPR செய்து shock அளித்த பின்னர், மறைந்த முதல்வரின் இதயத் துடிப்பில் revival இல்லை என்பது தெளிவாகிறது. மேலும், ஸ்டெர்னோடமி செய்ய முடிவு செய்யப்பட்டு, கட்டரைப் பயன்படுத்தி 20 நிமிடங்களில் செய்யப்பட்டது மற்றும் அந்த நேரத்தில் உடல் அசைக்கப்படவில்லை. C.W.102 – டாக்டர் ரமேஷ் வெங்கட்ராமன் மற்றும் C.W.112-டாக்டர்.இராமகிருஷ்ணன், CPR செய்யும் போது, ஸ்டெர்னோடமி செய்ய முடியாது என்றும், நோயாளியின் உடல் அசைக்கப்படாமல் இருப்பது உறுதி செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டனர்.

**44.13.** மேற்கூறியவைகளிலிருந்து, ஸ்டெர்னோடமி செய்யும் போது அவர்கள் உடலை அசைக்கவில்லை என்பது தெளிவாகிறது. மேலும், CPR செய்யப்படவில்லை என்று திட்டவட்டமாகக் கூறினர். C.W.126, CPR மற்றும் sternotomy ஒரே நேரத்தில் செய்யப்பட வேண்டும் என்று கூறினார். C.W.126-டாக்டர் மதன்குமார் மட்டும் CPR மற்றும் sternotomy ஒரே நேரத்தில் செய்யப்பட்டது என்றார். C.W.123 - டாக்டர்.மினல் M வோரா CPR செய்யும் போது இரத்த ஓட்டம் தானாக ஏற்படவில்லை என்றும், இதயத்துடிப்பு இல்லை என்றும் கூறினார். 11.10.2018,

*13.11.2018 ஆகிய நாட்களில் C.W.102 விசாரிக்கப்பட்டார். C.W.126, 29.11.2018 அன்று விசாரிக்கப்பட்டதில், ஒரே நேரத்தில் செய்யப்பட்டதாக சாதாரணமாகக் கூறினார். அதனால்தான் அவர், ஆணையம் நேரத்தை சரியாகப் பதிவு செய்யவில்லை; மேலும், நேரங்கள் நொடிகளில் கூறப்பட்டுள்ளன, ஆனால் அது நிமிடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று ஆட்சேபம் தெரிவித்தார். C.W.112-டாக்டர் இராமகிருஷ்ணன் மற்றும் C.W.102-டாக்டர். ரமேஷ் வெங்கட்ராமன் ஆகிய சாட்சிகள் நேரத்தை நிமிடங்களில் கூறியிருந்தனர். ஒவ்வொரு சாட்சிகளால் அளிக்கப்பட்ட நேரம் ஆணையத்தாலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. முதலில் ஸ்டெர்னோடமி துவங்கப்பட்ட போது CPR நிறுத்தப்பட்டது என்று சாட்சி கூறினார். அதனைத்தொடர்ந்து, அது மாறி மாறி செய்யப்பட்டது என்றார். முன்னர் பதிவுசெய்யப்பட்ட சாட்சியத்தினை, ஆணையம் சரியாகப் பதிவு செய்யவில்லை என்ற கூற்றை C.W.126 கூறினார். எனினும், தனியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.*

## *45. மருத்துவக்குழுவின் அறிக்கை*

*45.1. 04.08.2022-ஆம் நாளிட்ட எய்ம்ஸ் மருத்துவக் குழுவின் அறிக்கை இந்த ஆணையத்தால் 08.08.2022 அன்று மின்னஞ்சல் மூலமும், 18.08.2022 அன்று அஞ்சல் மூலமும் பெறப்பட்டது. அதன் அம்சங்கள் பின்வருமாறு:-*

*45.2. முதல் பத்தியில், மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணை மற்றும் மருத்துவக்குழுவின் தலைவர், ஐந்து உறுப்பினர்கள் மற்றும் ஓர் உறுப்பினர் செயலாளரின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது என்பது மருத்துவக்குழுவினால் விவரிக்கப்பட்டிருந்தது. பின்னர், மறைந்த முதல்வரின் சிகிச்சை தொடர்பான பதிவுருக்களை கருத்து வாரியாக மறு ஆய்வு செய்ததன் சுருக்கம் விவரிக்கப்பட்டிருந்தது.*

*45.3. பல்வேறு தரப்பினரால் அழைக்கப்பட்ட சாட்சிகளின் அனைத்து விசாரணைகளையும், அவர்களின் வாய்மொழி அறிக்கைகளையும் கேட்டறிந்த மருத்துவக் குழு, ஆணையம் அமைக்கப்பட்டதிலிருந்து ஆணையம் வழங்கிய அனைத்து ஆவணங்களையும், மறைந்த முதல்வர் அனுமதிக்கப்பட்ட, சென்னை அப்போலோ மருத்துவமனையின் மருத்துவப் பதிவுகளையும் ஆய்வு செய்தது. கதிரியக்க ஆய்வுகள் மற்றும் எக்கோ கார்டியோகிராம்கள், பிற அனைத்து மருத்துவப் பதிவுகள் மற்றும் பரிசோதனைகளை ஆய்வு செய்தது பின்வரும் முடிவுக்கு வழிவகுத்தது.*

*அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட நிகழ்வுகளின் வரிசை:-*

*(1) அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பு, மறைந்த முதல்வருக்கு நீரிழிவு, வெர்டிகோ, அடோபிக் டெர்மடிடிஸ், எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறி (Irritable Bowel Syndrome), ஹைப்போ தைராய்டு, நாட்பட்ட மூச்சுக்குழாய் அழற்சி (Chronic Bronchitis) ஆகியவற்றிற்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. தோல் பிரச்சனைக்காக சிறிது காலம் ஸ்டீராய்டுகள் பயன்படுத்தப்பட்டன. 5-7 நாட்களுக்கு குடல் இயக்க அதிகரிப்புடன் (increased bowel movements) முன்னதாக காய்ச்சல் இருந்தது கண்டறியப்பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பு மறைந்த முதல்வருக்கு அறுவை சிகிச்சை நிபுணரான, C.W.17-Dr.K.S. சிவக்குமாரால் சிகிச்சையளிக்கப்பட்டது.*

*(2) அப்போலோவில் அனுமதி: 22.09.2016 அன்று அனுமதிக்கப்பட்டபோது, மறைந்த முதல்வர் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவிலும், பின்னர் அவசர சிகிச்சை அறைக்கும் மாற்றப்பட்டார்.*

*(3) அவசர சிகிச்சை அறை: அவசர சிகிச்சை அறையில் அளிக்கப்பட்ட சிகிச்சை, பரிசோதனை முடிவுகள் மற்றும் அவருக்கு பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளின் பெயர்கள்.*

*(4) MDCCU-வில், NIV தொடரப்பட்டது, நீடித்த PR-க்காக தற்காலிக pacemaker பொருத்தப்பட்டது; Wenckebach, பிராடிகார்டியா (bradycardia), ஹைபோடென்ஷன் மற்றும் நடைமுறைகள் செய்யப்பட்டதுடன் மருந்துகளும் பரிந்துரைக்கப்பட்டன.*

*(5) ஆரம்ப ஆய்வுகள் பற்றி: (அ) Blood Culture என்டோரோகோகஸ் மற்றும் அதற்கான செயல்முறை செய்யப்பட்டது (ஆ) பிற மருந்துகள் பரிந்துரைக்கப்பட்டன (இ) Transthoracic echos செய்யப்பட்டது: 3-வது நாள் மிட்ரல் வால்வில் vegetations இருக்கலாம் எனவும், சுமாரானது முதல் மிதமானது வரையிலான Mitral regurgitation-ம் இருக்கலாமென சந்தேகிக்கப்பட்டது, மருந்துகள் பரிந்துரைக்கப்பட்டன (ஈ) நெஞ்சுப்பகுதி CT எடுக்கப்பட்டது.*

*(6) அடுத்த கட்டமாக, 4-ஆம் நாள் உடல்நிலை மோசமடைதலில் ஆரம்ப நிலையும் பின்னர், (அ) மூச்சுத்திணறல்: மெத்தில்பிரெட்னிசோலோன் (Methylprednisolone) வழங்கப்பட்டது, நெபுலைசேஷன் அதிகரிக்கப்பட்டது (ஆ) TTE ECHO உயர்ந்துள்ள MR மற்றும் LA அளவைக் காட்டியது, abscess CTVS கருத்து பெறப்படவில்லை மற்றும் அறுவை சிகிச்சை தேவையில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது (இ) Anidulafungin அளிக்கப்பட்டது, Noradrenaline மற்றும் டோபமைன் அளவு குறைக்கப்பட்டது மற்றும் (ஈ) சிறிது நேரத்திற்குப் பின்னர் முன்னேற்றம் ஏற்பட்டது.*

*(7) உடல்நிலை திடீரென மோசமடைந்ததால், செப்டம்பர் 28-ஆம் நாள் Ventilation/Intubation செய்யப்பட்டது:*

> *(அ) அப்போலோவின் டாக்டர்.சந்திரசேகரால் TOE ECHO எடுக்கப்பட்டது:*
> *calcify-செய்யப்பட்ட 12-14 மி.மீ அளவிலான 2 vegetation உடன் AML-இன் சிறிய perforation, மிதமான MR. தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு*

ஒரு வருடத்திற்கு முன்பு அதே எக்கோ கார்டியோகிராஃபரால் எடுக்கப்பட்ட மிதமான *MR* இருந்தது. *CTVS* கருத்து பெறப்பட்டது .... டாக்டர்.*K.M.*செரியன், *M.R.* கிரிநாத் மற்றும் *L.F.*ஸ்ரீதர் ஆகியோரின் அறுவை சிகிச்சையல்லாமல் மருத்துவ சிகிச்சைக்கான முடிவு.

(ஆ) *Intubation*-க்குப் பிறகு நுரையீரல் *infiltrates* மோசமடையத் துவங்கியது. ரிச்சர்ட் பீலே உட்பட மேற்கொண்டும் மருத்துவர்கள் ஆலோசிக்கப்பட்டனர். லெவோசிமெண்டன் *(Levosimendan)* உள்ளிட்ட பல்வேறு மருந்துகள் வழங்கப்பட்டன.

(இ) வருகை புரிந்த மருத்துவர்களான டாக்டர். கில்னானி, டாக்டர். அஞ்சன் ட்ரிகா, டாக்டர். நிதிஷ் நாயக் ஆகியோர் அளிக்கப்பட்டு வந்த சிகிச்சைக்கு உடன்பட்டனர்.

(ஈ) அக்டோபர் 7-ஆம் நாள் ட்ரக்கியோஸ்டமி செய்யப்பட்டது.

(8) அக்டோபர் 14:-

(அ) *Consolidation, infiltrates* மற்றும் *interstitial edema* தோன்றியது.

(ஆ) *USA* மருத்துவர்களான டாக்டர். ஸ்டூவர்ட் ரஸ்ஸல் மற்றும் *UK*-வின் டாக்டர். ஜெயன் பரமேஸ்வர் ஆகியோர் டயஸ்டாலிக் இதய செயலிழப்பை தெரிவித்தனர். ஆஞ்சியோகிராம் தேவையில்லை என்று அப்போலோவைச் சேர்ந்த டாக்டர் மேத்யூ சாமுவேல் கூறினார்.

(இ) *Serial Echos* எந்த மாற்றத்தையும் காட்டவில்லை.

(9) *T Piece* மாற்றம் நவம்பர் 2 முதல் முயற்சிக்கப்பட்டது:

*(அ) பேச்சுக்கான சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.*

*(10) நவம்பர் மாத இதய மதிப்பீடு:*

*(அ) டாக்டர் சமீன் சர்மா மதிப்பீடு செய்தார்*

*(ஆ) அனைத்து மருத்துவர்களின் ஒருமித்த கருத்து: மருத்துவ மேலாண்மை*

*(இ) 29.11.16 ஹோல்டர் (Holter) செய்யப்பட்டது: VPC அடிக்கடி செய்யப்பட்டது:*

*(11) டிசம்பர் 3:*

*(அ) எய்ம்ஸ் மருத்துவர்கள் மீண்டும் பார்த்து, சிகிச்சையை ஏற்றுக்கொண்டனர்.*

*<u>மருத்துவக் குழுவின் கருத்து:</u> "மேலே உள்ளவை எய்ம்ஸ் மருத்துவக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்ட தற்காலிக நிகழ்வுகளின் வரிசை முறையாகும். மேலும், அவை உண்மையில் சரியானவை என்று கண்டறியப்பட்டது. முன்னாள் முதல்வருக்கான சிகிச்சை சரியான மருத்துவ முறையின்படி இருந்ததுடன் வழங்கப்பட்ட சிகிச்சையில் குறைகள் ஏதும் கண்டறியப்படவில்லை".*

*மருத்துவப் பதிவுருக்களின் அடிப்படையில், இறுதி நோயறிதலில் சுவாச நோய்த்தொற்றுடன் பாக்டீரிமியா மற்றும் செப்டிக் ஷாக் ஆகியவை கண்டறியப்பட்டது. அப்போலோ பதிவுருக்கள், அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவக் கருத்துப்படி, மிட்ரல் வால்வில் மிட்ரல் ரெகர்கிடேஷன் உடனான இன்ஃபெக்டிவ் எண்டோகார்டிடிஸ் மற்றும் அறுவை சிகிச்சை தேவைப்படாத first degree AV block இருந்தது. இதய செயலிழப்புக்கான ஆதாரமும் இருந்தது.*

மருத்துவமனையில் அனுமதிக்கையில் இருந்த கட்டுப்பாடற்ற நீரிழிவு நோய்க்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. உயர் இரத்த அழுத்தம், ஹைப்போ தைராய்டு, ஆஸ்தாமடிக்(*asthamatic*) மூச்சுக்குழாய் அழற்சி (*asthamatic bronchitis*), எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறி (*irritable bowel syndrome*) மற்றும் அடோபிக் டெர்மடிடிஸ் ஆகியவையும் இருந்தன. *AIIMS*-ல் உள்ள மருத்துவக் குழு மேற்கண்ட இறுதி நோயறிதலுடன் உடன்படுகிறது.

***45.4.*** *Heart vegetation*-ஐப் பொறுத்தவரை, மருத்துவக் குழுவின் கருத்துப்படி, *vegetation MR*, நுரையீரலில் *perforation* மற்றும் மிதமான *MR*, இவை அனைத்தையும் பதிவுசெய்த பிறகு, *ECHO* எடுத்து, இரண்டு *vegetation* மற்றும் *perforation* இருப்பதைக் கண்டறிந்த டாக்டர்.சந்திரசேகரின் கருத்துக்கு இணங்குகிறது. முன்னர் இதே எக்கோ கார்டியோகிராஃபரால் *ECHO* எடுக்கப்பட்டதால், முந்தைய ஆண்டிலேயே இது கவனிக்கப்பட்டது. டாக்டர்.*K.M.*செரியன், *C.W.134*-டாக்டர். *M.R.*கிரிநாத் மற்றும் *C.W.135*-டாக்டர்.*L.F.* ஸ்ரீதர் ஆகியோரிடமிருந்து *CTVS* மருத்துவ முறைக்கான கருத்து பெறப்பட்டது; அறுவை சிகிச்சைக்கான கருத்து ஏதும் பெறப்படவில்லை.

***45.5.*** *C.W.120*- டாக்டர். இராம் கோபாலகிருஷ்ணன் அவர்களின் சாட்சியத்தின்படி, *UK* மருத்துவர் டாக்டர் ரிச்சர்டு பீலே, டாக்டர், சமீன் சர்மா மற்றும் டாக்டர் ஸ்டூவர்ட் ரஸ்ஸல் ஆகியோர் *early valve surgery*/ஆஞ்சியோ செய்யப் பரிந்துரைத்தனர். ஆனால், டாக்டர்

ரிச்சர்ட் பீலேவின் பெயரால், R.2 மருத்துவமனை அதை ஒத்திவைத்தது. டாக்டர் சமின் ஷர்மாவின் கருத்தும் புறக்கணிக்கப்பட்டது. எய்ம்ஸ் மருத்துவக் குழுவின் அறிக்கையில் இந்த அத்தியாவசியக் கருத்துக்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. அந்த மருத்துவர்களின் கருத்தை அவர்கள் எவ்வாறு தவிர்த்தனர் என்பதற்கான எந்த குறிப்பும் இல்லை. ஒரு சந்தர்ப்பத்தில், அவர்கள் 14.10.2016 அன்று டாக்டர் ஸ்டூவர்ட் ரஸ்ஸல்-ன் பெயரைக் குறிப்பிட்டனர். ஆஞ்சியோஸ் அவசியம் என்ற மூன்று மருத்துவர்களின் கருத்தையும் பொருட்படுத்தாமல், R.2 மருத்துவமனை அளித்த சிகிச்சை சரியானது என்ற முடிவுக்கு மருத்துவக் குழு வந்துள்ளது.

**45.6.** இங்கு, ஆஞ்சியோகிராம் செய்யுமாறு ஆலோசனை வழங்கிய C.W.120-டாக்டர் இராம் கோபாலகிருஷ்ணன், அமெரிக்க மருத்துவர்கள் மற்றும் டாக்டர் ரிச்சர்ட் பீலே ஆகியோரின் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கருத்தை ஆணையம் கருதிப்பார்க்க வேண்டும். இங்கு, மருத்துவக் குழு, நம்பர்.1-ஆக இருக்கும் டாக்டர்.செரியன்-இன் கருத்தான அறுவை சிகிச்சை தேவையில்லை என்பதைச் சார்ந்தே இருந்தது. R.2 மருத்துவமனை டாக்டர்.செரியன் நேரில் சென்று பதிவுகளைப் பார்த்ததாகக் கூறினாலும், அவர் எழுத்துப்பூர்வமாக எந்தக் கருத்தையும் கேஸ் ஷீட்டில் தெரிவித்ததாகவோ, சிகிச்சைக்கான கட்டணம் செலுத்தப்பட்டது என்பதை நிரூபிக்கவோ எந்த ஆதாரமுமில்லை. R.2 மருத்துவர்கள்

மட்டுமே, டாக்டர் செரியன் அறுவை சிகிச்சை எதுவும் தேவையில்லை என்று ஆதாரம் எதுவும் இல்லாமல் கருத்துத் தெரிவித்ததாகக் கூறினர்.

**45.7.** மேலும், டாக்டர் எம்.ஆர்.கிரிநாத்தை ஒரு புகழ்பெற்ற அறுவை சிகிச்சை நிபுணராக ஆணையம் அங்கீகரிக்கிறது. R.2 மருத்துவமனையின் மருத்துவப் பதிவுகளில் (30 தொகுதிகள்), மருந்து விளக்கப்படம், தூக்கம் பற்றிய அட்டவணை, மருத்துவ ஆலோசனை, ஒவ்வொரு நாளைய முன்னேற்றம், அவரது உடல் நலப்பின்னடைவு போன்றவை பின்னிட்டு, முறையாகப் பதிவு செய்யப்பட்டு ஆணையத்தின் முன் மதிப்பாய்விற்காக வைக்கப்பட்டுள்ளன. இங்கு, மறைந்த முதல்வரது வாழ்நாளில் அவரது அறைக்குச் சென்றது குறித்தோ, அவர் பதிவுகளைப் பார்த்தது குறித்தோ, டாக்டர்.எம்.ஆர்.கிரிநாத்தின் கையொப்பம் எதையும் ஆணையத்தால் அறிய இயலவில்லை. மேலும், அவர் எந்த நேரத்திலும், எந்த கேஸ் ஷீட்டிலும் எழுத்துப்பூர்வமாக தனது கருத்தைத் தெரிவிக்கவில்லை. அதேபோல், R.2 மருத்துவமனைப் பதிவுகள் மற்றும் டாக்டர்.எம்.ஆர்.கிரிநாத்தின் சான்றுகளின்படி, 04.12.2016 அன்று அவர் மறைந்த முதல்வரை மாலை 06.00 மணிக்குப் பின்னர், அதாவது, ECMO-உடன் இணைக்கப்பட்ட ஒரு மணி நேரத்திற்குப் பிறகு பார்த்ததை நிரூபிக்கவும் எந்தப் பதிவும் இல்லை. அவர் R.2 மருத்துவமனையில் பணிபுரிந்தாலும், நோயாளியைப் பார்க்கவில்லை; எந்த குறிப்பையும் செய்யவில்லை என்பது

*ஒப்புக்கொள்ளத்தக்கது; மேலும், அவரது சாட்சியங்கள் இந்த ஆணையத்தால் பரிசீலிக்கப்பட இயலாது. எனவே, அவரது சாட்சியம் ஒரு பக்கச்சார்பானதாகக் கருதப்பட்டு முற்றிலும் நிராகரிக்கப்படுகிறது.*

***45.8.*** *டாக்டர்.எல்.எப்.ஸ்ரீதரின் சாட்சியத்தை பரிசீலிக்கும்போது, 28.09.2016-அன்று கேஸ் ஷீட்டைப் பார்த்த நால்வரில் அவரும் ஒருவர். 28.09.2016 அன்று காலை 10:30 மணிக்கு செப்சிஸ் மற்றும் சிறுநீர்த் தொற்றுக்கான சிகிச்சை மட்டும் அளிக்கப்பட்டபோது, vegetation/perforation கண்டறியப்பட்டு, அதன்பிறகுதான் நிகழ்வுகள் நகர்ந்தன. எனவே, டாக்டர்.L.F.ஸ்ரீதர் 28.09.2016-அன்று பதிவுகளை சரிபார்த்ததில் எவ்வித முக்கியத்துவமும் இருக்க முடியாது. மேலும், அது "இதய சிகிச்சை" எனும் வரம்பிற்குள் இல்லை. அடுத்து, 04.12.2016 அன்று மாலை 04.30க்குப் பிறகு, ஸ்டெர்னோடமி செய்யும் நேரத்தில் மட்டுமே நோயாளியையும் கோப்பினையும் பார்த்துள்ளார்.*

***45.9.*** *எனவே, மருத்துவக்குழுவால் குறிப்பிடப்பட்ட மூன்று மருத்துவர்களும், தாங்கள் கேஸ் ஷீட்டைப் பார்த்ததாகவோ, சிகிச்சை செய்ததாகவோ, டாக்டர் சமின் ஷர்மா, ஸ்டூவர்ட் ரஸ்ஸல், U.K டாக்டர் ரிச்சர்ட் பீலே போல எந்த கருத்தையும் தெரிவித்ததாகவோ எந்த ஒப்புதலும் அளிக்கவில்லை. எனவே, இது தொடர்பாக, மருத்துவக்குழுவின் கருத்து அடிப்படையற்றதாகும். எந்த முடிவுக்கும் வருவதற்கு முன், அவர்கள் எந்த மருத்துவர்களின்*

*சாட்சியங்களையோ, ஆவணக் கருத்துக்களையோ பரிசீலிக்கவுமில்லை, பார்க்கவுமில்லை மதிப்பீடு செய்யவுமில்லை என்பதை நிரூபிக்க இதுவே போதுமானதாகவுள்ளது. ஆணையத்தால் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு மருத்துவக்குழுவிற்கு அனுப்பப்பட்ட மருத்துவர்களின் சாட்சியங்கள் மருத்துவக்குழுவினால் முறையாகக் கருதிப்பார்க்கப்படவில்லை.*

***45.10.*** *மருத்துவக்குழுவின் அறிக்கையில், 7(a)-ஆவது பத்தியில், நுரையீரல் infiltrates மோசமாகிவிட்டதாகவும், டாக்டர் ரிச்சர்ட் பீலே உள்ளிட்ட, மேலும் பல மருத்துவர்களை ஆலோசித்து அவர்களால் கூறப்பட்ட பல்வேறு மருந்துகள் பயன்படுத்தப்பட்டதாகவும் மருத்துவக் குழு தெரிவித்தது. மேலும், அவர்களால் பயன்படுத்தப்பட்ட பல்வேறு மருந்துகளையும், U.K. டாக்டர் ரிச்சர்ட் பீலே-வின் பெயரையும், குறிப்பிட்ட மருத்துவக் குழுவானது, அவரால் அனைத்துக் கோணங்களிலும் ஆய்ந்து அளிக்கப்பட்ட மிகப்பயனுள்ள நீண்ட ஆறு பக்க அறிக்கை அவர்களால் பரிசீலிக்கப்படாமல் எந்த நியாயமுமின்றி முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.*

***45.11.*** *பத்தி 7(b)-யைப் பொறுத்தவரை, வருகை புரிந்த எய்ம்ஸ் குழுவினரான டாக்டர்.கில்னானி, டாக்டர். அஞ்சன் ட்ரிகா மற்றும் டாக்டர்.நிதிஷ் நாயக் ஆகியோர் அளிக்கப்பட்டு வந்த சிகிச்சைக்கு உடன்பட்டனர். சுருக்கமாக, டாக்டர் கில்னானி மற்றும் டாக்டர்*

*நிதீஷ் நாயக் இருவரும் மரணத்திற்கான காரணம் குறித்து முற்றிலும் எதிர்மாறான காரணங்களைக் கூறியுள்ளனர். டாக்டர்.நிதிஷ் நாயக் (இதய மருத்துவர்), தனது சாட்சியத்தின் 7-ஆவது பத்தியில், இந்த நோயாளியின் இதய செயலிழப்பு ARDS மற்றும் டயஸ்டாலிக் செயலிழப்பினால் ஏற்பட்டதாகக் கூறினார். ஆனால், டாக்டர்.கில்னானி, பக்கம் எண்.5-இல் பல காரணங்களால் ஏற்பட்ட மாரடைப்பின் காரணமாக மரணம் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கூறினார். அதேபோல், அவர்களிருவரும் R.2 மருத்துவமனையின் சிகிச்சையை மேற்பார்வை மட்டுமே செய்ததாகவும், நோயாளிக்கு எந்த மருந்தையும் பரிந்துரைக்கவில்லை என்றும் கூறினர். அத்தகைய சூழ்நிலையில் அவர்கள் எதற்காக வந்தனர்.*

***45.12.** C.W.84, தனது சாட்சியத்தின் பக்க எண்.7-இல் R.2 மருத்துவமனையால் அனைத்து சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது என்றும், அவர் வெறுமனே மேற்பார்வையிட்டார் என்றும் கூறினார். C.W.85-இன் சாட்சியத்தின் 2-ஆம் பக்கத்தில், அவர்கள் ஆலோசனை நிலையில் மட்டுமே வந்ததாகவும், மறைந்த முதல்வருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையைப் பார்த்ததாகவும் குறிப்பிட்டார்.*

***45.13.** அடுத்ததாக, டாக்டர்.அஞ்சன் ட்ரிகா, C.W.86-இன் கருத்துகளை மருத்துவக் குழு பரிசீலித்தது. அவர் முன்னிலையில் மருத்துவ நெறிமுறைகளுக்கு எதிராக, நோயாளிக்கு என்ன நோய்கள் என்பதை தானோ, அவரது மருத்துவர் குழுவோ (எய்ம்ஸ்) அப்போலோ மருத்துவர்களோ விளக்கவில்லை என்று கூறினார். அறிக்கையின் 8-*

ஆவது நெடும்பத்தியைப் பொறுத்தவரை, டாக்டர் ரஸ்ஸல் மற்றும் ஜெயன்பரமேஷ்வர் *(UK)* ஆகியோரைக் கலந்தாலோசித்து, அவர்கள் டயஸ்டாலிக் ஹார்ட் ஃபெயிலியர் அறியப்பட்டதாக மருத்துவக் குழு தெரிவித்தது. டாக்டர். ஸ்டூவர்ட் ரஸ்ஸலுக்கு நோயாளியின் சுருக்கமான வரலாறு, டாக்டர் பாபு ஆபிரகாம் (கோப்பு எண்.4) அவர்களால் விளக்கப்பட்டபோது, ஒரு கட்டத்தில், அவர் *CAG*-யை பரிந்துரைத்தார், நோயாளி, செயல்முறைகளுக்கு ஏற்புடையவராக இருப்பதாக சிகிச்சைக்குழு உணருமாயின், *CAG* செய்யப்படலாம் எனப் பரிந்துரைத்தார். *CAG* செய்யத் தேவையில்லை என்று அவர் ஒருபோதும் கூறவில்லை. அப்போலோ அறிக்கையில், அவர் நிலையாக இருப்பதாகவும், முன்னேற்றமடைந்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

**45.14.** மேலும், டாக்டர் ஜெயன்பரமேஸ்வரன் இந்த ஆணையத்திற்குப் புதுமுகம் ஆவார்; அவரது பெயர் சிகிச்சையின் சுருக்கத்தில் மட்டுமே உள்ளது; அவர் ஆணையத்தால் விசாரிக்கப்படவில்லை; எந்த கட்டணமும் பெறவில்லை. மருத்துவக் குழு தெரிவித்தது போல, 14.10.2016 அன்றோ, வேறு எந்த நேரத்திலோ அப்போலோ மருத்துவர்கள் கேஸ் ஷீட்டில் *diastolic heart failure* குறித்த எந்தப் பதிவும் செய்யவில்லை.

**45.15.** *C.W.114*-டாக்டர். மேத்யூ சாமுவேல் ஒரு மருத்துவர். மேலும், அவர் தனது சாட்சியத்தில் (பக்கம் எண்.2), இதயத்தின் செயல்பாடு பலவீனமாக இருந்ததாகவும், அனைத்து முக்கிய உறுப்புகளுக்கும்

இரத்த ஓட்டம் கணிசமாகக் குறைந்திருந்ததாகவும், இதுவே அவரது இதயத்தின் நோயெனவும் தெளிவாகக் குறிப்பிட்டார். நுரையீரலில் ஏதேனும் குறைபாடு இருந்தால், இதயத்தின் வலது பக்கத்தில் அறிகுறி இருக்கும். *perforation*-இன் காரணத்தால், இதய நோய் அதிகரித்தது என்றும் கூறினார். இந்நிலையில், ஆஞ்சியோகிராம் அல்லது *intervention* தேவையில்லை என்று டாக்டர் மேத்யூ சாமுவேல் கூறியதை மருத்துவக் குழு எதனடிப்படையில் அங்கீகரித்தது என்பது அறியப்படவில்லை.

**45.16.** *C.W.141*-நிகில் டாண்டன், எண்டோகிரைனாலஜி மருத்துவர், அப்போலோவின் சிகிச்சையில் தான் தலையிடவில்லை என்றும், அறுவை சிகிச்சை குறித்து தனக்குத் தெரியாது என்றும், ஏழு நிமிடங்கள் அவரது அறையில் இருந்ததாகவும் கூறினார்.

**45.17.** *40* மி.லி., இரத்தக் கசிவையும் *(*கோப்பு எண்.*3&4, 57*-ஆம் பக்கத்தின்படி*), Vegetations* மற்றும் அவற்றின் விளைவுகளையும் அறிந்திருந்த *R.2* மருத்துவமனையால், *28.09.2016* அன்றே குறிப்பிடப்பட்ட *perforation* குறித்து மருத்துவக்குழு கவனிக்காது ஏன் என்பதற்கான பதில் அறியப்படவில்லை.

**45.18.** இந்த எய்ம்ஸ் மருத்துவர்களின் சாட்சியங்களிலிருந்து, அவர்கள் ஐந்து முறை வருகை புரிந்திருந்தாலும், மேற்பார்வை மட்டுமே செய்ததாகக் கூறியுள்ளனர். மேலும் அவர்களால் மரணத்திற்கான காரணத்தை ஒருமித்தவாறாகக் கூற இயலவில்லை என்பது தெளிவாகிறது.

***45.19.*** *ஆணையம் அறிக்கையை ஆழ்ந்தாராய்ந்துள்ளது.*

***45.20.*** *மருத்துவக் குழுவின் அறிக்கையைப் பொறுத்தவரை, ஆணையம் பத்தி 6 வரை உடன்படுகிறது. மேலும், இந்த அறிக்கையில் மற்ற இடங்களில் ஆணையமே இந்த நிகழ்வுகளை விவரித்துள்ளது. எனினும், அறிக்கையின் பத்தி 7(a)-ல் உள்ள சில அம்சங்களுடன் ஆணையத்தால் உடன்பட இயலவில்லை. R.2 மருத்துவமனையின் டாக்டர் சந்திரசேகர், 28.9.2016 அன்று TOE ECHOவைப் பார்த்து, AML, மிதமான MR-இன் சிறிய பெர்ஃபொரேசனுடன் கூடிய 12-14மி.மி. கால்சியம் (calcified) கொண்ட இரண்டு வெஜிடேசனைக் கண்டறிந்தார் என்பது சரியானது. இந்த நோயறிதலை வேறு எந்த மருத்துவ நிபுணரும் மறுக்கவில்லை. எனவே, இது மருத்துவ ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டது. மறைந்த முதல்வரின் உயிருக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்திய இந்த வெஜிடேசன்களுக்கு குறைந்தது 28.9.2016 முதற்கொண்டாயினும், குறிப்பாக, இதய தொராசிக் துறையின் நிபுணர்களால் சிகிச்சை திட்டமிடப்பட்டிருக்க வேண்டும்.*

***45.21.*** *பத்தி 7(a)-ல், டாக்டர்.K.M.செரியன், டாக்டர்.M.R.கிரிநாத் மற்றும் டாக்டர்.L.F. ஸ்ரீதர் ஆகியோர் அறுவை சிகிச்சை முதன்மையானதல்ல என்று கருத்துத் தெரிவித்ததாக குழுவால் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், சம்பந்தப்பட்ட காலத்தில் பராமரிக்கப்பட்ட முழு மருத்துவப் பதிவேடுகளையும் (கேஸ் ஷீட்) கூர்ந்தாராய்ந்தால்,*

டாக்டர்.செரியன் அல்லது டாக்டர்.கிரிநாத் நோயாளியை உடல்ரீதியாகப் பரிசோதித்ததாகவோ, *ECHO* மற்றும் பிற பரிசோதனை அறிக்கைகளைப் பார்த்தாகவோ தெரியவில்லை. டாக்டர்.செரியன் ஆணையத்தின் முன் *R.2* மருத்துவமனையால் விசாரிக்கப்படவில்லை. டாக்டர் கிரிநாத் *C.W.134*-ஆக விசாரிக்கப்பட்டார். *04.12.2016*-அன்று *ECMO* சிகிச்சையில் இருந்தபோதுதான் நோயாளியை நேரடியாகப் பரிசோதித்ததாக அவர் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். அவர் நோயாளியை அதற்கிடையே பார்க்கவில்லை/நோயாளியின் மருத்துவப் பதிவுகளை ஆய்வு செய்யவில்லை என்று திட்டவட்டமாக ஒப்புக்கொண்டார். அவர் வெஜிடேசன்களுக்கு அறுவை சிகிச்சையைப் பரிந்துரைக்கவில்லை என்று கூறவில்லை. டாக்டர்.ஸ்ரீதர் *C.W.12*-ஆக விசாரிக்கப்பட்டார். *28.09.2016*-அன்று செப்சிஸ் நோய்க்காக நோயாளியைப் பரிசோதித்ததாக அவர் கூறியுள்ளார். இரண்டு வெஜிடேசன்கள் உள்ளன என்ற கண்டறிதலுக்கு உடன்பட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார். இருப்பினும், அறுவை சிகிச்சை தேவையில்லை என்று அவர் கருத்து தெரிவிக்கவில்லை. வெஜிடேசன், பெர்ஃபொரேசன் மற்றும் அறுவை சிகிச்சை பற்றி குறுக்கு விசாரணையில் அவரிடம் குறிப்பாகக் கேட்கப்பட்டபோது, நோயாளிக்கு மிகவும் முக்கியமான பிரச்சினை வெஜிடேசன்கள் மற்றும் பெர்ஃபொரேசன் தான் என்றும், அதற்கு தீவிர சிகிச்சை முற்றிலும் அவசியம் என்றும் அவர் குறிப்பாகக் கூறினார். சிகிச்சைக்கான திட்டம் குறித்து அவரிடம்

மேலும் வினவியபோது, இக்கேள்வி அறுவை சிகிச்சை நிபுணரிடம் தான் கேட்கப்பட வேண்டும் என்றும், தன்னிடமல்ல என்றும் தெரிவித்துள்ளார். எனவே, அறுவை சிகிச்சை தேவையில்லை என்று பரிந்துரைத்ததாக அவர் கூறவில்லை.

***45.22.*** *முன்னரே குறிப்பிட்டவாறு, இந்த மூன்று மருத்துவர்களும் அறுவை சிகிச்சையின்றி, மருத்துவ சிகிச்சைக்கு மட்டுமே கருத்துத் தெரிவித்ததாக கேஸ் ஷீட்டில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மிக வினோதமாக, 07.12.2016 அன்று மறைந்த முதல்வரின் மறைவுக்குப் பிறகு, R.2 மருத்துவமனை தயாரித்த சிகிச்சைச் சுருக்கத்தில், இந்த மூன்று மருத்துவர்களும் அறுவை சிகிச்சைக்காக அல்லாமல் மருத்துவ சிகிச்சைக்காக மட்டுமே பரிந்துரைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மருத்துவச் சுருக்கம் என்பது மொத்த மருத்துவப் பதிவுருக்களின் சுருக்கமான அறிக்கையாக இருக்க வேண்டும் என்பது வெளிப்படையானது. மருத்துவப் பதிவுருக்கள் / கேஸ் ஷீட்டுகளில் காணப்படாத எந்த விவரங்களும் அத்தகைய சுருக்கத்தில் இருக்கக்கூடாது. எனவே, டாக்டர் செரியனை விசாரிக்காததாலும், டாக்டர் கிரிநாத் மற்றும் டாக்டர் ஸ்ரீதர் அவர்களின் சாட்சியங்களில் ஒப்புக்கொள்ளப்பட்டதாலும் கூறப்பட்ட இந்த மூன்று மருத்துவர்களின் கருத்துக்கள் பற்றி கேஸ் ஷீட்டில் எதுவும் இல்லாத நிலையில், சிகிச்சை சுருக்கத்தில் உள்ள அறிக்கை நிராகரிக்கப்பட வேண்டும். எனவே, டாக்டர் செரியன், டாக்டர் கிரிநாத் மற்றும் டாக்டர் ஸ்ரீதர் ஆகியோர் அறுவை*

*சிகிச்சைக்கெதிராக எக்கருத்தையும் தெரிவிக்கவில்லை என ஆணையம் முடிவுசெய்கிறது.*

***45.23.*** *ஆனால், மருத்துவக் குழு, சிகிச்சையின் சுருக்கத்தை மட்டுமே கருத்தில் கொண்டுள்ளது. எனவே, இம்மருத்துவர்கள் அறுவை சிகிச்சைக்கு எதிராகக் கூறியதாக எய்ம்ஸ் அறிக்கையின் பத்தி 7(a)-இல் பதிவு செய்யப்பட்டுள்ள அறிக்கை உண்மையில் சரியானது அல்ல. எனவே, இந்த அறிக்கையின் பத்தி 7(a)-இல் உள்ள இப்பகுதி ஆணையத்தால் நிராகரிக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.*

***45.24.*** *இத்தருணத்தில், C.W.120 - டாக்டர் இராம் கோபாலகிருஷ்ணனின் சான்றுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவரைப் பொறுத்தவரை, 28.09.16 - அன்று வெஜிடேசன்கள் மற்றும் பெர்ஃபொரேசன்கள் கண்டறியப்பட்டவுடன் early valve surgery தேவை என்று அவர் கருத்துத் தெரிவித்தார். அவரது கருத்து ஏன் அப்போலோ மருத்துவமனையால் ஏற்கப்படவில்லை என்பது தெரியவில்லை. நன்கு தெரிந்த காரணங்களுக்காக, அப்போலோ மருத்துவமனைக்கு மேற்சொன்ன மருத்துவரை அதன்பிறகு ஆலோசிக்க அழைக்கவில்லை.*

***45.25.*** *இங்கிலாந்தைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற டாக்டர் ரிச்சர்ட் பீலேயின் அறிக்கை கருதிப்பார்க்கப்பட வேண்டும். அவர் இருமுறை நோயாளியைப் பார்த்தார். 2 வெஜிடேசன்கள் மற்றும் பெர்ஃபொரேசன்கள் உள்ளன என்பதை அவர் ஒப்புக்கொண்டார்.*

ஆறு பக்கங்கள் கொண்ட அவரது விரிவான அறிக்கையில் ஆஞ்சியோகிராம் செய்ய வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளார்.

***45.26.*** *சாட்சியாக விசாரிக்கப்படாவிட்டாலும் டாக்டர் சமீன் சர்மாவின் கருத்து, டாக்டர் பாபு ஆபிரகாம் பதிவு செய்த கேஸ் ஷீட்டில் காணப்படுகிறது. அமெரிக்காவிலிருந்து பிரபல தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் சமின்சர்மா வரவழைக்கப்பட்டு, 25.11.2016 அன்று அவர் நோயாளியைப் பரிசோதித்தார். உடனடியாக ஆஞ்சியோகிராம் செய்ய வேண்டுமென அவர் பரிந்துரைத்தார். நோயாளியும் அதற்கு ஒப்புக்கொண்டார் என்பதும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதே நாளில் ஆஞ்சியோகிராம் செய்ய அந்த மருத்துவர் முன்வந்தார். ஆனால், ஆஞ்சியோகிராம் செய்ய அவரை R.2 அப்போலோ மருத்துவமனை அனுமதிக்கவில்லை. தொலைபேசியில் டாக்டர் ரிச்சர்டு பீலே ஆஞ்சியோகிராம் செய்ய பரிந்துரைக்கவில்லை என்று R.2 விளக்கமளித்தது. ஆனால், இது குறித்து டாக்டர் பீலேயிடமிருந்து எந்த அறிக்கையும் இல்லை. மேற்குறிப்பிட்டபடி, 01.10.2016-அன்று டாக்டர் பீலே தான் ஆஞ்சியோகிராம் செய்ய பரிந்துரைத்தார்.*

***45.27.*** *டாக்டர்.ஸ்டுவர்ட் ரஸ்ஸல், வால்வு அறுவை சிகிச்சையில் சிறப்பு நிபுணர் ஆவார். அவரிடம் 11.10.2016 (IST 11.00 AM)-அன்று தொலைபேசியில் ஆலோசனை பெறப்பட்டதில், உடனடியாக ஆஞ்சியோகிராம் செய்ய வேண்டும் என்று அவர் கருத்துத் தெரிவித்ததாக பதிவுகள் தெரிவிக்கின்றன. நன்கு அறியப்பட்ட*

காரணங்களுக்காக, இக்கருத்து அப்போலோ மருத்துவமனையால் பரிசீலிக்கப்படவில்லை. அப்போலோ மருத்துவமனையிலிருந்து ஏற்றுக்கொள்ளத்தக்க விளக்கம் எதுவும் பெறப்படவில்லை.

***45.28.*** *எய்ம்ஸ் மருத்துவக் குழு, அறிக்கையின் பத்தி 7(a)-இல், மேற்கண்ட அம்சங்களைக் குறிப்பிடாமல், டாக்டர் செரியன், டாக்டர் கிரிநாத் மற்றும் டாக்டர் ஸ்ரீதார் ஆகியோரை மட்டுமே குறிப்பிட்டுள்ளது.*

***45.29.*** *பரிந்துரைக்கப்பட்ட டயஸ்டோலிக் இதய செயலிழப்புக்கு (Diastolic Heart failure) USA, மருத்துவர் டாக்டர்.ஸ்டூவர்ட் ரஸ்ஸலிடம் ஆலோசனை பெறப்பட்டதாக, பத்தி 8-இல், குழு பதிவு செய்துள்ளது. ஆஞ்சியோகிராம் அல்லது அறுவை சிகிச்சை தேவையில்லை என்று அப்போலோவைச் சேர்ந்த டாக்டர் மேத்யூ சாமுவேல் கூறியது பத்தி 8-இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர், ஆஞ்சியோகிராம் அல்லது அறுவை சிகிச்சையைப் பரிந்துரைத்த, பல புகழ்பெற்ற பன்னாட்டு மருத்துவர்களின் கருத்தை நிராகரித்தது சரியான முடிவா இல்லையா என்பதை குழு ஆராய்ந்திருக்க வேண்டும். ஆனால், இதில் எந்த அம்சங்களையும் குழு பரிசீலிக்கவில்லை.*

***45.30.*** *இறுதிக்கு முந்திய பத்தியில், முன்னாள் முதல்வரின் சிகிச்சை சரியான மருத்துவ செயல்முறையின்படியே இருந்தது என்றும், வழங்கப்பட்ட சிகிச்சையில் பிழைகள் எதுவும் கண்டறியப்படவில்லை என்றும் குழு இயம்பியுள்ளது. மேற்கூறிய*

*இறுதி நோயறிதலுடன் மருத்துவக் குழு உடன்படுவதாகவும் தெரிவித்துள்ளது.*

***45.31.*** *ஆஞ்சியோகிராம் அல்லது வெஜிடேசன்கள் மற்றும் பெர்ஃபொரேசனுக்கான அறுவை சிகிச்சையைப் பொறுத்தவரையில், குழுவின் இறுதிக் கருத்தை ஆணையத்தால் ஏற்க முடியவில்லை. மருத்துவ அறிவியலில் ஆணையம் நிபுணத்துவம் பெறா நிலையில், பொதுவாக, மருத்துவ நிபுணர்களின் கருத்துப்படி ஆணையம் இணங்க வேண்டும்.*

***45.32.*** *மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளின் தொகுப்பில், முடிவின் துல்லியத்தை ஆய்வதற்குத் தேவையான அளவுகோல்களை நிபுணத்துவம் பெற்றவர் வழங்கவில்லையெனில், அந்நிபுணரின் கருத்து நிராகரிக்கப்படலாம் என்று பலமுறை தெரிவிக்கப்பட்டுள்ளது.*

***45.33.*** *சாட்சியங்கள் சட்டம் ஆணையத்திற்கு முழுதும் பொருந்தாது என்பதை ஆணையம் அறிந்துள்ளது. இருப்பினும், வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்கான செயல்முறையைப் பின்பற்ற, ஆணையம், சாட்சியங்கள் சட்டத்தின் பிரிவு-45 மற்றும் நீதித்துறை ஒழுங்குமுறையின்படி சில தீர்வுகளை ஆய்ந்தது.*

***45.34.*** *மகாராஜா அக்ரசென் மருத்துவமனை மற்றும் பிறருக்கு எதிராக மாஸ்டர் ரிஷப் ஷர்மா மற்றும் பலர் - (2020) 6 SCC 501, (சிவில் மேல்முறையீட்டு எண்.6619/2016), பூஜா ஷர்மா மற்றும் பலருக்கு எதிராக மகாராஜா அக்ரசென் மற்றும் பலர் (சிவில்*

மேல்முறையீடுகள் எண்.6619/2016 எண்.9461/2019 வழக்கில், மருத்துவ நடைமுறைகளின்படி, 32 வாரங்களுக்கும் குறைவான கர்ப்பகாலத்திற்கு முன் பிறந்த மற்றும் 1500 கிராமுக்கு குறைவான எடையுள்ள குழந்தை, கட்டாயமாக பரிசோதிக்கப்பட வேண்டும். ஆர்ஓபி சோதனை (ROP test) நடத்தப்பட்டதாக எய்ம்ஸ் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், அது செய்யப்படவில்லை. மேலும், மருத்துவமனையின் தவறை மறைப்பதற்காகவே இந்த இடைச்செருகல் எனத் தோன்றியது. மருத்துவப் பதிவுருக்கள் ஆய்வு செய்யப்பட்டு, AIIMS-ஆல் அமைக்கப்பட்ட மருத்துவக் குழுவின் கருத்து புறக்கணிக்கப்பட்டு, தேசிய ஆணையத்தின் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் விவாதிக்கப்பட்ட பின்னர், பின்வருவது கருதிப்பார்க்கப்பட்டது:-

> "ஒரு நீதிமன்றம், நிபுணரின் சாட்சியங்களுக்குக் கட்டுப்படாது; ஆலோசனை நோக்கத்திற்காக மட்டுமே கருதிப்பார்க்கப்படும். நோயாளிக்கு அளிக்கப்படும் சிகிச்சையில் நிலையான நெறிமுறைகள் பின்பற்றப்பட்டதா என்பதை, மருத்துவப் பதிவுருக்களை கவனமாக ஆராய்ந்த பிறகு, நீதிமன்றம் தன் சொந்த முடிவை எட்ட வேண்டும். முடிவுகளின் துல்லியத்தை ஆய்வதற்குத் தேவையான அறிவியல் அளவுகோல்களை நீதிமன்றத்திற்கு வழங்குவதே ஒரு நிபுணர் சாட்சியின் கடமையாகும். இதனால் சாட்சியங்களால் நிரூபிக்கப்பட்ட உண்மைகளுக்கு

இந்த அளவுகோலைப் பயன்படுத்தி, நீதிமன்றத்தால் தன்னிச்சையான முடிவை எடுக்க முடியும். அத்தகைய சாட்சியங்களை ஏற்றுக்கொள்ளவோ, அதற்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதை தீர்மானிக்கவோ நீதிமன்றத்தால் மட்டுமே முடியும்.

## ***46. ஆணையத்தின் கருத்துக்கள்***

***46.1.*** *மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் ஏற்பட்ட சில குறிப்பிடத்தக்க நிகழ்வுகள், வழக்கின் உண்மை விவரங்களைப் போலவே, வழக்கு குறித்து எடுக்கப்பட வேண்டிய முடிவுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் அவை தவிர்க்க முடியாதவை ஆகின்றன.*

***46.2.*** *மிகச்சிறப்பான சினிமா வாழ்க்கையுடன், எம்.ஜி.ஆர் என்று அழைக்கப்படும் எம்.ஜி.இராமசந்திரனின் மறைவுக்குப் பின்னர், தமிழகத்தில் சிறந்த அரசியல் வாழ்க்கையையும் கொண்டிருந்த மறைந்த முதல்வர், 25 ஆண்டுகளுக்கும் மேலாக அ.இ.அ.தி.மு.கவில் தன்னிகரில்லாத தலைமையாக வலம் வந்தார்.*

***46.3.*** *மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பின்னர், தனது போயஸ் கார்டன் இல்லத்தில் தனியாக வசித்து வந்தார், மறைந்த முதல்வருக்கும், அவரது நெருங்கிய நண்பரும் ஆலோசகருமான R.1 இருவருக்குமிடையேயான புரிதல்களின் அடிப்படையில், R.1 போயஸ் கார்டன் இல்லத்திற்கு இடம் பெயர்ந்தார்; இருவருக்குமிடையேயான இணக்கம், ஒற்றுமையினால் அவர்களிருவரும் "உடன்பிறவா சகோதரிகள்" என்றழைக்கப்பட்டனர்.*

***46.4.*** *அப்போதுதான் விதியின் சதியால், பெங்களூருவில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்த சொத்துக்குவிப்பு வழக்கில் மறைந்த முதல்வர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டாரெனில், கட்சியையும் முதல்வர் பதவியையும் அபகரிக்க, R.1 மற்றும் அவரது குடும்பத்தினர் இரகசிய சதித்திட்டம் தீட்டியதாக, பெங்களூரில் டெஹல்கா என்ற பத்திரிகையில் வெளியான செய்தியின் அடிப்படையில், மறைந்த முதல்வருக்கு புலனாய்வுத் துறையின் இரகசியத் தகவல் கசிந்து, நிலைதடுமாறி, இருவருக்கிடையேயான உறவு கசந்து பிரிவினைக்கு வழிவகுத்தது. 2011-ஆம் ஆண்டு டிசம்பரில் R.1 போயஸ் கார்டனை விட்டு வெளியேறும்படியானது. இது அதிகாரத்தின் மீதான ஒரு அதீத ஆசையாத் தோன்றும்.*

***46.5.*** *2011-ஜனவரியில் நடைபெற்ற அ.இ.அ.தி.மு.க மாநாட்டில் மறைந்த முதல்வர் R.1–ஐக் கடுமையான வார்த்தைகளால் தாக்கினார். R.1 நம்பிக்கை துரோகம் செய்ததாக வெளிப்படையாகக் குற்றம் சாட்டப்பட்டார். அப்போது மறைந்த முதல்வரின் வெறுப்புக்குள்ளான R.1-உடன் எவ்விதத் தொடர்பும் இருக்கக்கூடாது என்று கட்சித் தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் எச்சரிக்கப்பட்டனர். இருவருக்குமிடையேயான நட்புரிமை மறைந்து பிரிவினை ஏற்பட்ட இந்நிகழ்வு, சில சமயங்களில் உண்மை, கற்பனையினும் வலிமையானது என்பதைத் தெளிவாக்குகிறது.*

***46.6.*** *R.1, மறைந்த முதல்வரிடம் நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டு, இருவருக்குமிடையேயான கருத்து வேறுபாடுகள்*

களையப்பட்டு, சமரசத்தினால், 31.03.2012 அன்று மறைந்த முதல்வர் மற்றும் R.1 இருவரும் போயஸ் கார்டனில் மீண்டும் ஒன்றாக வசிக்கத் தொடங்கினர். இருவருக்குமிடையேயான உறவு இயல்பானதாகத் தோன்றினாலும், பிளவிற்கு முன்னர் இருந்ததைப் போல நட்புரிமை இல்லை என்பதை கிடைக்கப்பெறும் பதிவுகளிலிருந்து அறியலாம். இதனால், மறைந்த முதல்வர் 22.09.2016-அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் வரை R.1 குழப்பநிலையிலேயே இருந்துவந்தார்.

**46.7.** நவம்பர் 2011-இல், R.1 மறைந்த முதல்வரால் போயஸ் கார்டனிலிருந்து வெளியே அனுப்பப்பட்டார் என்பது R.1-இன் உறுதிமொழிப்பத்திரத்திலிருந்து அறியலாம். C.W.14-கிருஷ்ணப்ரியா, C.W.17-சிவகுமார், C.W.23 ராஜம்மாள் ஆகியோரும் இதையே கூறினர். மேலும், C.W.18, C.W.20 மற்றும் C.W.21 ஆகியோரும் R.1-ஐ மறைந்த முதல்வரின் வீட்டிலிருந்து வெளியேற்றப்படுவது குறித்துத் தெரிவித்திருந்தனர். சில கசப்பான உறவுகளால், மறைந்த முதல்வர் R.1 மற்றும் அவரது உறவினர்களை போயஸ் கார்டனை விட்டு வெளியேறுமாறு கூறியிருப்பார். ஆனால், ‘டெஹல்கா’வில் வெளியான கட்டுரையை உருவாக்கியவர் யார் என்பது கண்டறியப்படவில்லை. C.W.25தான் அக்கட்டுரையைப் பற்றிக் கூறியுள்ளார். ஆனால், தனக்கு தனிப்பட்ட முறையில் எதுவும் தெரியாது என்றும், Tehelka.com-இலிருந்து தான் தெரிந்து கொண்டதாகவும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

***46.8.*** *2012-ஏப்ரலில், மறைந்த முதல்வர் அரசியலிலும் அ.தி.மு.க கட்சியின் நடவடிக்கைகளிலும் R.1 தலையிடுவதில்லை என்ற உறுதியைப் பெற்ற பின்னரே R.1-ஐ மீண்டும் தன்னில்லத்தில் இணைத்துக்கொண்டார். இருப்பினும், அவர் R.1-இன் மற்ற குடும்ப உறுப்பினர்களை போயஸ் கார்டனுக்குத் திரும்ப அனுமதிக்கவில்லை.*

***46.9.*** *2012-ஏப்ரலில், மீண்டும் போயஸ் கார்டன் இல்லத்திற்குத் திரும்பியதிலிருந்து, மறைந்த முதல்வரின் இறப்பு வரை, அவருக்கு உதவுவதுடன் அவருடைய அனைத்துத் தனிப்பட்ட கடமைகளையும் R.1 கவனித்துக் கொண்டிருந்தார்.*

***46.10.*** *2015-இல், ஒருமுறை மறைந்த முதல்வர் உடல்நலப் பரிசோதனைக்காகச் சென்றபோது, LV dysfunction இருப்பது கண்டறியப்பட்டது என்பதற்கு ஆதாரங்கள் ஏதுமில்லை. சாட்சியங்களின்படி, இதயநோய் நிபுணரிடம் இதற்கான சிகிச்சை எதுவும் எடுக்கப்படவில்லை.*

***46.11.*** *20.9.2016 அன்று, C.W.17 சபரிமலைக்குச் சென்றிருந்ததால், R.1 அவரிடம் தொலைபேசியில் உதவி கோரியதற்கு, C.W.17, காய்ச்சலுக்கு பாராசிட்டாமல் வழங்குமாறு R.1-இடம் கூறினார். R.1, மறைந்த முதல்வருக்கு பாராசிட்டாமல் வழங்கியதால் காய்ச்சல் சரியானதாகக் கூறியுள்ளார். மீண்டும் இடையிடையே காய்ச்சல் ஏற்பட்டதால், C.W.17-இன் ஆலோசனையின் பேரில், வழக்கமான இடைவெளியில் பாராசிட்டாமல் மாத்திரையை மீண்டும்*

எடுத்துக்கொண்டார். அதுவும் ஆதாரமாக உள்ளது (அவர் அனுமதிக்கப்பட்டதில் R.2 மருத்துவமனையால் பதிவு செய்யப்பட்ட நோயாளியின் மருத்துவ வரலாற்றைப் பார்க்கவும்) மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு, பாராசிட்டமால் வழங்கப்பட்டது. அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு மறைந்த முதல்வரின் உண்மையான உடல்நிலையை அறிய ஆணையத்திற்கு வேறு எந்த ஆதாரமும் இல்லை.

**46.12.** மறைந்த முதல்வர், உடல்நிலை சரியில்லாமல் இருந்த போதிலும், தலைமைச்செயலகத்திற்கு ஏழு பேருந்துகள் தொடங்கி வைக்கும் விழா மற்றும் வீடியோ கான்பரன்ஸ் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட மெட்ரோ ரயில் விழாவில் கலந்து கொள்ளச் சென்றார் என்பது அப்போதைய தலைமைச் செயலாளர் C.W.12 இன் சாட்சியமாகும். 21.09.2016 அன்று காலை 10.00 மணிக்குப் பிறகு அவர் சுமார் 45 நிமிடங்கள் தலைமைச்செயலகத்தில் இருந்தார். R.1-இன் கூற்றுப்படி, அவர் உடல்நிலை சரியில்லாததைக் கருத்தில் கொண்டு, தலைமைச்செயலக வருகையைத் தவிர்க்க R.1 அறிவுறுத்தினார்; ஆனால் மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு, காணொலி காட்சி மூலம் மெட்ரோ ரயிலை பச்சைக் கொடியசைத்துத் தொடங்கி வைக்க இருப்பதால் மறைந்த முதல்வர் விழாவில் பங்கேற்பது அவசியமாகிறது என்று தெரிவித்திருந்தார். அவர் தலைமைச் செயலகத்திற்குச் சென்று, வீட்டிற்குத் திரும்பும்போது, C.W.26-

*ஓட்டுநர், C.W.12 - தலைமைச் செயலாளர், C.W.11-ஷீலா பாலகிருஷ்ணன்-சிறப்புப் பணி அதிகாரி ஆகியோரால் குறிப்பிடப்பட்டது. விழாவின் போது மறைந்த முதல்வருக்கு பின்னடைவு ஏற்பட்டது என்று இந்த சாட்சிகள் யாரும் தெரிவிக்கவில்லை. ஆனால், வீடு திரும்பும் போது, சாலை ஓரங்களில் கட்சிக்காரர்கள் நிற்கும் தூரம் வரை மெதுவாகச் செல்லுமாறும், அதன்பின்னர், அவருக்கு உடல் நலமின்மையால் விரைந்து செல்லுமாறும் C.W-26 - ஓட்டுநரிடம் தெரிவித்து போயஸ் கார்டனை அடைந்தார்.*

***46.13.*** *இந்த சாட்சியங்களிலிருந்து, 21.09.2016 அன்று, மறைந்த முதல்வருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்துள்ளது என்ற R.1-இன் அறிக்கை மறைந்த முதல்வர் மூன்று நாட்களாக அதிக காய்ச்சலில் இருந்தார் என்பதும், அதற்காக அவர் பாராசிட்டாமல் எடுத்துக்கொண்டார் என்பதும் தெளிவாகிறது.*

***46.14.*** *21.09.2016 அன்று, காலை 11.00 மணிக்குப் பிறகு, போயஸ் கார்டனை அடைந்ததும், அவர் காரிலிருந்து இறங்கும்போது, தன் நிலை தடுமாறி கீழே விழவிருந்து, சமாளித்து, தனித்து வீட்டிற்குள் சென்றார். இந்த சாட்சியங்களிலிருந்து, வீடு திரும்பியதும், மறைந்த முதல்வர் உடல்நிலை சரியில்லாமல், காரிலிருந்து இறங்கும் போது தன்-நிலை இழந்தும் அவரால் வீட்டிற்குள் வர முடிந்தது என இந்த ஆணையம் முடிவுசெய்கிறது.*

***46.15.*** *21.09.2016 - அன்று அவர் தனது வீட்டிற்குத் திரும்பியபோது, இடையிடையே காய்ச்சலுக்கான பாராசிட்டாமல் மாத்திரைகள் உட்கொண்டதைத் தவிர, அவரது உடல்நிலையில் பின்னடைவு எதுவும் இல்லை என்று பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களிலிருந்து தெரிகிறது. அவரது சாட்சியத்தின்படி, 22.09.2016 அன்று காலை 11.00 மணியளவில், C.W.17 கார்டனிலிருந்து அழைப்பு வந்ததும், போயஸ் கார்டனுக்கு வந்து, மறைந்த முதல்வரின் உடல்நிலை குறித்து விசாரித்தார். அவர் கூறியபடி, அவர் நலமாக இருப்பதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. எனவே, அவர் திரும்பிச் சென்றார். மறைந்த முதல்வரின் தனிப்பட்ட மருத்துவராக இருந்தும், மறைந்த முதல்வரை ஏன் நேரடியாக பரிசோதிக்கவில்லை, வேறு மருத்துவரிடம் ஆலோசனை பெறவோ, மருத்துவமனைக்குச் செல்லவோ அவர் ஏன் அறிவுறுத்தவில்லை என்பது குறித்து அவர் விளக்கவில்லை. மறைந்த முதல்வர் இரண்டு நாட்களுக்கும் மேலாக காய்ச்சலால் அவதிப்பட்டு வந்ததால், அவருக்கு போதுமான கவனிப்பு மற்றும் அதிக எச்சரிக்கையுடன் அவரது காய்ச்சலுக்கான காரணம் மற்றும் அறிகுறிகளைக் கண்டறிந்து சிகிச்சை முறையைப் பரிந்துரைத்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு செய்திருந்தால், 22.09.2016 காலையிலேயே அவரை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, அவர் பாதிக்கப்பட்ட நோய்க்கு நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களால் பரிசோதித்து, சிகிச்சையை முடிவு செய்திருக்க முடியும். C.W.17 - ஐக்*

குற்றஞ்சாட்டவோ, அவரது அலட்சியத்திற்காக அவர்மீதான தவறுகளைக் கண்டறியவோ ஆணையத்தால் இயலாது என்ற நியாயமான அனுமானத்திற்கு வழிவகுக்கிறது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

***46.16.*** *அதே நாளில், அதாவது 22.09.2016 அன்று, C.W.17, மீண்டும் மாலை 4 மணிக்கு போயஸ் கார்டனுக்குச் சென்று மறைந்த முதல்வரின் உடல் நலம் குறித்து கேட்டறிந்தார் என்றும் அவர் நலமாக இருப்பதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டது என்றும் அவர் வேறு சில நோயாளிகளின் அறுவை சிகிச்சைக்காக R.2 மருத்துவமனைக்குச் சென்றார் என்றும் R.2-மருத்துவமனையில் அறுவை சிகிச்சை முடிந்து நீலாங்கரையில் உள்ள அவரது வீட்டில் இருந்தபோது, R1 செல்போனில் அவரை அழைத்து, மறைந்த முதல்வர் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதால் போயஸ் கார்டனுக்கு வரும்படி கூறினார் என தெரிவித்தார். மேலும் அவர் இரவு 8.45க்கு பிறகு மறைந்த முதல்வரின் வீட்டை அடைந்ததாகவும் கூறினார். அவர் கூறியபடி, வீட்டின் முதல் தளத்தில், மறைந்த முதல்வரின் படுக்கை அறைக்குள் அவர் நுழைந்தபோது. R1 ஏற்கனவே மறைந்த முதல்வருடன் பேசிக்கொண்டிருந்தார். அதன்பிறகு, மறைந்த முதல்வருக்கு சில முறை இருமல் வந்தது, அவரிடம் விசாரித்தபோது, அவர் ஏற்கனவே மருந்து சாப்பிட்டுவிட்டதாகச் சொன்னார். பிறகு மறைந்த முதல்வர் தன் படுக்கையில் சாய்ந்தார். அவர் மறைந்த முதல்வரின் கால்களைப்*

பிடித்துக் கொண்டு, அவரது உடல்நிலையைக் கண்காணிக்க வேண்டி அங்கேயே தங்குவதாகக் கூறினார். ஆனால் மறைந்த முதல்வர் அவர் அங்கு தங்க தேவையில்லை என்று கூறினார். மறைந்த முதல்வர் பல் துலக்குவதற்காக (தூங்குவதற்கு முன்) குளியல் அறைக்குச் சென்றார். வழக்கத்திற்கு மாறாக அவர் சிறிது நேரம் குளியலறையில் இருந்தார், இது R1 இன் அறிக்கை மற்றும் C.W.17 இன் சாட்சியம் தான். எனவே, C.W.17 குளியலறையில் சென்று பார்க்குமாறு R.1 ஐக் கேட்டுக் கொண்டார். எவ்வாறாயினும், பத்தி 29 இல் உள்ள அவரது வாக்குமூலத்தில் R1, குளியலறைக்கு செல்லும் போது, மறைந்த முதல்வர் அவரே வெளியே வந்து தன் படுக்கையை நோக்கி நடந்தார். படுக்கையை அடையும் போது, மீண்டும் அவர் கடுமையாக இரும ஆரம்பித்தார், அவர் படுக்கையை நெருங்கும் நேரத்தில், அவர் மயங்கி அவர்கள் இருவர் மீதும் விழுந்தார். R1 மற்றும் C.W.17 அவரைப் பிடித்தனர். அவர் R1 தோளில் விழுந்தார். R1 படுக்கையில் அமர்ந்து அவரைப் படுக்கையில் படுக்க வைத்தார், அந்த நேரத்தில் அவர் முழுமையாக மயக்கமடைந்தார். R.1 தனது வாக்குமூலத்தில், C.W.17 மறைந்த முதல்வரின் பாதங்களை மசாஜ் செய்தார் என கூறினார்.

**46.17.** உடனே, C.W.17 R.2 அப்போலோ மருத்துவமனைகளின் தலைவரின் மகள் ப்ரீத்தா ரெட்டியின் கணவரை அழைத்து, மறைந்த முதல்வரை அழைத்துச் செல்ல ஆம்புலன்ஸ் கேட்டார். 10 நிமிடங்களில் R2 மருத்துவமனையிலிருந்து ஆம்புலன்ஸ் வந்தது.

*C.W.56-டாக்டர் சினேகஸ்ரீ மற்றும் C.W.71-அனிஷ், பாராமெடிக்கல் ஊழியர், ஆம்புலன்சில் வந்தனர். C.W.56 மறைந்த முதல்வரின் படுக்கையறைக்கு விரைந்து மறைந்த முதல்வருக்கு போதுமான ஆக்ஸிஜன் சப்ளை இல்லை என்று கண்டுபிடித்து ஆக்ஸிஜனை அளிக்க முடிவு செய்தார். ஆம்புலன்ஸ் வேனிலிருந்து ஆக்சிஜன் சிலிண்டர் படுக்கையறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மறைந்த முதல்வருக்கு மாஸ்க் மூலம் ஆக்ஸிஜனை செலுத்தி அவரை நாற்காலியில் உட்கார வைத்தார். அவர் மயக்கத்தில் இருந்ததால், அவரால் நாற்காலியில் அமர முடியாமல் சறுக்கினார், பின்னர் படுக்கை அறைக்கு ஸ்ட்ரெச்சர் கொண்டு வரப்பட்டது. அவரை ஸ்ட்ரெச்சரில் படுக்க வைத்து படிக்கட்டு வழியாக ஆம்புலன்சில் ஏற்றிச் சென்றனர். R2 மருத்துவமனையில் உள்ள மருத்துவப் பதிவேடுகளில் பதிவாகியுள்ளபடி, ஆம்புலன்ஸ் இரவு 10.15 மணிக்கு மருத்துவமனையை அடைந்தது. C.W.56-டாக்டர். சினேகாஸ்ரீ அவரைப் பரிசோதித்து, R2 மருத்துவமனை C.W.17 விவரித்த வரலாற்றைப் பதிவு செய்துள்ளது மற்றும் அதுவரை அவர் அவசர சிகிச்சைப் பிரிவில், சுயநினைவு பெறவில்லை.*

***46.18.*** *மேற்கண்ட சாட்சியங்களிலிருந்து, மறைந்த முதல்வர் இரவு 9.45 மணிக்கு R2 மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். எந்த தாமதமும் இல்லை, ஆனால் சாட்சியங்களிலிருந்து சில மிகவும் கவலையளிக்கும் சூழ்நிலைகள் வெளிவருகின்றன. மறைந்த முதல்வர் ஒரு சாதாரண நபர் அல்ல, மாநிலத்தின் மாண்புமிகு*

*முதல்வர். அவருக்கு உடல்நலப் பிரச்சினைகள் இருப்பது அனைவரும் அறிந்ததே.*

***46.19.*** *2015 ஆம் ஆண்டில், அவருக்கு LV Failure இருப்பது கண்டறியப்பட்டது. 22.09.2016 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு, அவருக்கு இடைவிடாத கடுமையான காய்ச்சல் இருந்தது, அதற்காக பாராசிட்டமால் அளிக்கப்பட்டது. 22.09.2016 அன்று காலை போயஸ் கார்டனில் அவரை ஏன் பரிசோதிக்கவில்லை என்பதற்கு C.W.17- இடம் பதில் இல்லை.*

***46.20.*** *முதல்வருக்கான தனிப்பட்ட மருத்துவராக இருப்பதால், C.W.17, சிகிச்சை அளிப்பதற்காக அவரைப் பரிசோதித்திருக்க வேண்டும் எதிர்கால சிகிச்சையின் போக்கையும் பரிந்துரைக்க அவரிடம் கலந்தாலோசிக்க வேண்டும். ஆணையத்தின் பார்வையில் இது அவரது பங்கில் உள்ள சுத்த அலட்சியம் எனலாம். ஆலோசனைக்குப் பிறகு சரியான நோயறிதல் தேவைப்பட்டது மற்றும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு முன்பே அழைத்துச் செல்லப்படுவதற்கான சாத்தியக்கூறுகளை நிராகரிக்க முடியாது. அத்தகைய நிகழ்வில், இரவு 9.45 மணிக்கு நிகழ்ந்ததைத் தவிர்த்திருக்கலாம்.*

***46.21.*** *R1 இன் வாக்குமூலம் மற்றும் C.W.17 இன் ஆதாரத்தின்படி. மறைந்த முதல்வர், 22.09.2016 அன்று இரவு 10.25 மணியளவில், R2 மருத்துவமனைக்கு சுயநினைவற்ற நிலையில், கொண்டு*

*வரப்பட்டார். அவரை R2 மருத்துவமனைக்கு அழைத்துச்செல்வது குறித்த தகவல் கிடைத்ததும், R2 மருத்துவமனைக்கு விரைந்ததாக அப்போதைய தலைமைச் செயலாளர் C.W.12 கூறினார். C.W.56-R.2 மருத்துவமனையின் டாக்டர் சினேகஸ்ரீ அவசர சிகிச்சை பிரிவில் மறைந்த முதல்வரைப் பரிசோதித்து அவர் மயக்கத்தில் இருந்ததாக பதிவு செய்தார்.* ***இந்த சாட்சியங்களிலிருந்து, மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, அவர் சுயநினைவின்றி இருந்தார் என்பது தெளிவாகத் தெரிகிறது.***

***46.22.*** *அந்த நேரத்தில், C.W.56 நோயாளியின் வரலாற்றை மருத்துவ பதிவேட்டில் கோப்பு எண். 3 & 4 இன் பக்கம் எண்.7, இல் பதிவு செய்துள்ளார். தகவல் C.W.17 ஆல் வழங்கப்பட்டது. இதுவே ஆரம்பகால மருத்துவப் பதிவு. நோயாளியின் வரலாற்றைப் பொறுத்தவரை, அது பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது:*

> *"H/O high grade fever intermittent since 3 days.*
> *Rashes on the body- diagnosed. As atopic dermatitis with steroids since 2 days.*
> *Took Paracetamol 30 minutes before.*
> *Sudden onset breathing difficulty and drowsiness.*
> *Diagnosed the issues CAP Vs Acute LV failure. Cardiology consult."*

***46.23.*** *மற்ற இரண்டு அப்போலோ மருத்துவர்கள் அவசர சிகிச்சை பிரிவில் அவரைப் பரிசோதித்தனர். மாஸ்க் மூலம் ஆக்சிஜன் சப்ளை செய்வதை மருத்துவர்கள் குழு தொடர்ந்தது. முதற்கட்ட நோயறிதல்*

மருத்துவர்களால் செய்யப்பட்டது, அது *22.09.2016* அன்று *10.30 P.M.* மணிக்கு கீழ்க்கண்டவாறு பதிவு செய்யப்பட்டது;

> *"giddiness, drowsiness known hypothyroid, diabetic, and hypertensive with h/s/o atopy– on steroid, Echo report LV mild MR, mild AR. ECG report."*

***46.24.*** அவசர அறையிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டபோது அரை மணி நேரத்திற்குப் பிறகு அவர் சுயநினைவுடன் இருந்தார்.

***46.25.*** உடனே அவர் *CCU* க்கு மாற்றப்பட்டார். அவர் மாற்றப்பட்டபோது சாட்சியத்தின்படி, *C.W.12* - தலைமைச் செயலாளர் மருத்துவமனைக்கு வந்தார். அப்போது அங்கிருந்த *C.W.31- R.*வீரபெருமாள், *PSO,* அவர் எங்கே இருக்கிறார் என்று அவரிடம் கேட்டதற்கு, தலைமைச் செயலாளர் *R.2* மருத்துவமனையில் இருப்பதாகவும், மயக்கமடைந்ததால் அழைத்து வரப்பட்டதாகவும் பதிலளித்தார். இந்தச் சான்றுகளிலிருந்து, அவர் சுயநினைவு பெற்றாலும், அவர் தூக்கத்தில் இருந்தார் என்பதைத் அறிய முடிகிறது. *CCU* விற்கு மாற்றப்பட்ட பிறகு, மருத்துவமனையின் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள், *C.W.17, R.1* மற்றும் பலர் *CCU* விலிருந்து வெளியேற்றப்பட்டனர். இருப்பினும், மருத்துவர்கள் மறைந்த முதல்வரை *CCU* இல் சுமார் ஒரு மணி நேரம் பரிசோதித்தனர்.

***46.26.*** மறைந்த முதல்வருக்கு மருத்துவ சிகிச்சை நல்ல பயனளித்ததுடன் கிட்டத்தட்ட மீண்டுக்கொண்டிருந்தார். அனுமதிக்கப்பட்ட நேரத்தில் இருந்து, மருத்துவர்கள் "செப்சிஸ்"

*நோய்த்தொற்றில் மட்டுமே கவனம் செலுத்தி, அது Endococcus பாக்டீரியா என கண்டறிந்து, அவர்க்கு உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்ட 27.9.2016 நள்ளிரவு வரை அதற்கு சிகிச்சை அளித்தனர். எப்படியிருந்தாலும், பின்னடைவுக்கு வழிவகுத்த இதய பிரச்சினைகளுக்கு சிகிச்சையளிக்கத் தவறிவிட்டனர்.*

***46.27.*** *27.9.2016 அன்று R.2 மருத்துவமனையில் உள்ள சிகிச்சை அறையில் காவிரி நதிநீர் பிரச்சனை கூட்டம் நடைபெற்றது. 27.9.2016 அன்று, நள்ளிரவில், அவருக்கு உடல்நலத்தில் பின்னடைவு ஏற்பட்டது, அவர்கள் இதயத்தில் பெர்ஃபொரேசன் இருப்பதைக் கண்டறிந்தனர். 28.9.2016 அன்று காலை 10.30 மணியளவில் C.W.120- டாக்டர் இராம் கோபாலகிருஷ்ணன்,* ***அவர் பெர்ஃபொரேசன் மற்றும் சந்தேகத்திற்கிடமான வெஜிடேசனால் அவதிப்படுவதைக் கண்டறிந்தார், மேலும் இவை ஆரம்பகால அறுவை சிகிச்சைக்கான அறிகுறிகள் என்று அவர் குறிப்பு செய்திருந்தார்.*** *அன்று மாலை 5.00 மணியளவில், டாக்டர் ராஜீவ் சோமன், தொற்று நோய் ஆலோசகர், பம்பாய், பதிவுகளை ஆய்வு செய்து சரிபார்த்த பிறகு, ஆரம்ப வால்வு அறுவை சிகிச்சைக்கு பரிந்துரை செய்து குறிப்புகளை செய்தார். பம்பாயைச் சேர்ந்த டாக்டர் ஜிகிடிவாடியாவும் கேஸ் ஷீட்டுகளைப் படித்து தனது கருத்தை எழுதினார். அதன்பிறகு, செப்சிஸுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது, மேலும் அவர் வென்டிலேட்டர் மாஸ்குடன் வென்டிலேட்டரில் இருந்தார்.*

***46.28.*** *01.10.2016 அன்று டாக்டர் ரிச்சர்டு பீலே செப்சிஸ்-க்கு சிகிச்சை அளித்த பின்னர் அவரால் வழங்கப்பட்ட அறிக்கையில்,* **அது கவனிக்கப்படாவிட்டால் மாரடைப்பு அல்லது பக்கவாதம் ஏற்படலாம் என்று குறிப்பிட்டுக் (பக்க எண். 6) கூறப்பட்டுள்ளது***. C.W-17 டாக்டர்.சிவகுமார் தனது சாட்சியத்தில்,* **டாக்டர் ரிச்சர்டு பீலே வெளிநாட்டு சிகிச்சைக்கு பரிந்துரைத்ததாகவும் தானே ஏர் ஆம்புலன்ஸில் உடன் செல்வதாகத் தெரிவித்ததாகவும் கூறினார்.**

***46.29.*** *UK மருத்துவர் டாக்டர் ரிச்சர்டு பீலே-வின் வருகையைத் தொடர்ந்து, 05.10.2016 அன்று C.W.136 சுகாதாரத்துறை அமைச்சர் எய்ம்ஸ் இயக்குநருக்கு மருத்துவர்கள் குழு அமைப்பதற்காக மருத்துவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். மயக்கவியல் மருத்துவர் மற்றும் பிற துறை நிபுணர்களை அவர் கேட்டிருந்தாலும், குறிப்பாக, கார்டியோ தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணர் அவர் கேட்கவில்லை.*

***46.30.*** *எய்ம்ஸ் மருத்துவர்கள் குழு 05.10.2016-அன்று மாலை பார்வையிட்டது. ஐந்து முறை வருகை புரிந்திருந்தாலும், R.2 மருத்துவர்கள் அளித்த சிகிச்சையை மட்டுமே கண்காணித்ததாக அவர்களின் சாட்சியத்தில் கூறப்பட்டிருந்தது. மேலும், மறைந்த முதல்வருக்கு அவர்கள் எந்த சிகிச்சையோ மருந்தோ பரிந்துரைக்கவில்லை; 07.10.2016 அன்று டிரக்கியோஸ்டமி செய்யப்பட்டது. வழக்கமான சிகிச்சையளிக்கப்பட்டு, அவர்*

அனுமதிக்கப்பட்ட 15 நாட்களுக்குள் செப்சிஸ் முற்றிலும் குணமாக்கப்பட்டது.

***46.31.*** அதன்பின்னர், 75 நாட்களில், 60 நீண்ட நாட்கள் R.2 மருத்துவமனையில் நுரையீரல் மற்றும் இதய நோய்களுக்கு மட்டும் C.W.99-டாக்டர்.Y.விஜய் சந்திர ரெட்டி மற்றும் C.W.106-டாக்டர். பாபு ஆபிரகாம் மூலம் சிகிச்சையளிக்கப்பட்டது. எய்ம்ஸ் மருத்துவர்களான, C.W.84 - டாக்டர். நிதிஷ்நாயக் மற்றும் C.W.142 - டாக்டர். தேவ கௌரவ் வேலாயுதம் ஆகிய இருவரும் தமது சாட்சியத்தில், வெஜெடேசன் கண்டறியப்பட்டால், நோயாளியின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, அறுவை சிகிச்சை ஒன்றே மாற்று என்று ஒப்புக்கொண்டுள்ளனர். R.2 மருத்துவமனை, அமெரிக்கா, ஜான் ஹாப்கின்ஸ் நிறுவனத்தின் இருதயநோய் நிபுணர், டாக்டர். ஸ்டூவர்ட் ரஸ்ஸலை 11.10.2016 அன்று தொலைபேசியில் தொடர்பு கொண்டதில் அவரும் கரோனரி ஆஞ்சியோகிராமிற்கு ஆலோசனை கூறியிருந்தார்; அதேசமயம், R.2 மருத்துவர்கள், அப்போதுதான் அவர் முன்னேற்றம் அடைந்து வருவதாக பதிலளித்ததால், ஆஞ்சியோவை திட்டமிட்ட முறையில் செய்யலாம் என்று டாக்டர். ஸ்டூவர்ட் ரஸ்ஸல் தெரிவித்துள்ளார். டாக்டர். ஸ்டூவர்ட் ரஸ்ஸலை 11.10.2016 அன்று தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்தாலும், அது 12.10.2016 அன்றுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர், நவம்பர் 2016-இல், R.2

*மருத்துவமனைப் பதிவுகளின்படி எய்ம்ஸ் உட்பட எந்த வெளி மருத்துவர்களும் பார்க்கவில்லை.*

***46.32.*** *நவம்பர் 2016-இல் அவரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு நிலையாக இருந்ததால், AIIMS மருத்துவர்கள் அழைக்கப்படவில்லை என்றும், அதே சிகிச்சை தொடர்ந்தது என்றும் R.2 மருத்துவமனை நிர்வாகம் கூறியது.*

***46.33.*** *C.W.110 - டாக்டர். V.C.பார்த்தசாரதி, கண் மருத்துவர், 28.09.2016 அன்று மாலை சுமார் 05:00 மணியளவில், மறைந்த முதல்வரின் விழித்திரையில் ஏதேனும் 'ராத்ஸ்பாட்' கண்டறியப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க மருத்துவமனை அதிகாரிகள் அவரிடம் கேட்டனர். மேலும், அவர் சோதித்ததில், அவ்வாறு எதுவும் காணப்படவில்லை.*

***46.34.*** *C.W.76 - டாக்டர். சஜன் கருணாகர் ஹெட்கே, மறைந்த முதல்வருக்கு முதுகுவலியின் காரணமாக, 13.11.2016 அன்று அழைக்கப்பட்டதாகத் தெரிவித்தார். அவர் வந்து, சில நாட்களுக்கு வலி நிவாரணி மருந்துகளை பரிந்துரைத்ததுடன், மேலும் வலி தொடர்ந்தால் MRI ஸ்கேன் செய்ய வேண்டும் என்று தெரிவித்தார். ஆனால், அதிர்ஷ்டவசமாக அவர் மாத்திரையிலேயே குணமடைந்தார். மறைந்த முதல்வருக்கு என்பதால் R.2 மருத்துவமனை இத்தகு சிறு உபாதைகள்கூட, உடனடியாக கவனித்து சிகிச்சையளிக்கப்பட்டது. ஆனால், ஆஞ்சியோகிராமைப் பொறுத்தவரையில், C.W.120-யால் தெரிவிக்கப்பட்டவாறு, மறைந்த*

*முதல்வர் அது குறித்து அறிந்திருக்கவில்லையென்பதால், R.2 மருத்துவமனை அதை ஒத்திவைத்தது.*

***46.35.*** *பின்னோக்கிப் பார்த்தால், மறைந்த முதல்வருக்கு 2000-ஆம் ஆண்டு மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் சாந்தாராம் மற்றும் பல புகழ்பெற்ற மருத்துவர்களால் அவரது நோய்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. பின்னர், R.1-இன் உறவினர் டாக்டர்.வினோதன், அவரது மரணத்திற்குப் பின்னர், டாக்டர்.சிவக்குமார் ஆகியோர் முந்தைய மருத்துவர் குழுவிற்குப் பதிலாக, மறைந்த முதல்வருக்கு எல்லா நேரத்திலும் மருத்துவ சிகிச்சையை அளித்து வந்தனர். பொதுமக்களின் உயர்மட்டத் தலைவரான மறைந்த முதல்வரின் உடல்நலத்தைப் பேணுவதற்கும், சிகிச்சையளிப்பதற்குமான பொறுப்பினை C.W.17 செவ்வனே செய்தார் என்பது நிருபிக்கபடவில்லை. அப்பல்லோ மற்றும் எய்ம்ஸ் ஆகியவை அறுவை சிகிச்சை/ஆஞ்சியோ செய்ய வேண்டியதில்லை என்பதை ஒப்புக்கொண்டன. இந்நிலையில், இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உள்ள புகழ்பெற்ற மருத்துவ நிபுணர்களுடனான ஆலோசனைக்குப் பின்னர், மிகப்பொருத்தமான சிகிச்சை முறைக்குத் தேவையான அனைத்து முயற்சிகளும் R.1-ஆல் செய்யப்பட்டிருக்க வேண்டும். வியக்கத்தக்க வகையில், மற்ற அனைவரையும் புறந்தள்ளி, மறைந்த முதல்வரின் நலனுக்கான பொறுப்பை ஏற்க முன்வந்தவர்கள், குறிப்பாக, மறைந்த முதல்வர் மருத்துவமனையிலிருந்தபோது, அவரைச் சுற்றியிருந்த, அவரால்*

*சலுகை பெற்ற சிலரே, அவருடைய விதியை வழிநடத்தினர். அவரது சரியான உடல்நிலை மற்றும் சிகிச்சையின் போக்கைப் பற்றிய நம்பத்தக்க, உண்மையான நிகழ்வுகளை வெளிப்படுத்தாததால், சிகிச்சையின் முழு விவரமும் வெளிப்படைத்தன்மையின்றி இரகசியமாக்கப்பட்டது.*

***46.36.** ஆணையத்தால் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களை ஆய்வு செய்கையில், நோயாளி சுயநினைவுடன் இருந்தபோதும், அவரது உடல்நலப் பிரச்சினைகள் மற்றும் செய்யப்பட வேண்டிய சிகிச்சை முறைகள் குறித்து அவருக்குத் தெரிவிக்கப்படவில்லை என்பது தெரியவருகிறது. நோயாளி இருளில் வைக்கப்பட்டது ஏன் என்பதும், பொறுப்பு முதல்வர், அமைச்சரவை சகாக்கள் மற்றும் அதிகாரிகள் ஏன் நம்பத்தக்கவர்களாகக் கருதப்படவில்லை என்பதும் புதிராகவே உள்ளது. இவ்விவகாரம், R.2 மற்றும் R.1 ஆகியோர் தங்கள் நோக்கத்திற்கேற்ப செயல்புரிவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியே என்றுதான் கருதத்தோன்றும். மேலும், இதன் திட்டங்களனைத்தும் அறிவார்ந்த வகையில் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.*

***46.37.** மறைந்த முதல்வர் மருத்துவமனையிலிருந்த 75 நாட்களில், முதல் நான்கு நாட்கள் தனது நோய்களுக்கு திறம்பட சிகிச்சை பெற்றார். மேலும், மருத்துவப்பதிவுகளின்படி, sepsis infection Enterococcus faecalis bacteria, நீரிழிவு, இரத்தக்கொதிப்பு போன்ற உடல்நலப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டார். இருப்பினும், அவர் மருத்துவமனையிலிருந்த மீதமுள்ள நாட்களில், இதயம்,*

நுரையீரல் வீக்கத்திற்கான சிகிச்சை பெற்றிருக்க வேண்டும். மறைந்த முதல்வருக்கு இருந்த இந்த மோசமான பல உபாதைகள் குறித்த உண்மை யாருக்கும் தெரிவிக்கப்படாதது ஏனென்பது திகைப்பூட்டுவதாக உள்ளது.

***46.38.*** *C.W.120-டாக்டர் இராம் கோபாலகிருஷ்ணன், 28.09.2016 அன்று காலை 10.30 மணியளவில், கேஸ் ஷீட்டில் (கோப்பு எண்.5, பக்கம் எண்.48 மற்றும் 47 பின்னிட்டவாறாக) ஒப்புதல் அளித்துள்ளது பின்வருமாறு:-*

> *இந்நிலையில் புதிய செப்சிஸ் எபிசோட் பற்றிய எந்த ஆதாரமும் இல்லை………………… வால்வ் பெர்ஃபொரேசன்.*
>
> *எண்டோகார்டிடிஸ் கல்ச்சர் ஒரு உகந்த மருத்துவ முறையில் அகற்றப்பட்டுவிட்டன, வால்வு பெர்ஃபொரேசன் மற்றும் நுரையீரல் வீக்கம் ஆகியவை உள்ளன. இவையிரண்டும் அறுவை சிகிச்சைக்கான அறிகுறிகளாகும்.*
>
> *…………..பரிந்துரைக்கப்பட்ட வால்வு அறுவை சிகிச்சை மிக விரைவில் பொருத்தமான தருணத்தில்.*

***46.39.*** *28.9.2016 அன்று மாலை 5 மணிக்கு டாக்டர். ராஜீவ் சோமனின் மருத்துவக் குறிப்புகள் (கோப்பு எண்.5, பக்கம் எண்.220 மற்றும் 219) நண்பகலுக்குப் பின்னர் பெர்ஃபொரேசன் காணப்பட்டதாகவும், **early valve surgery** பரிந்துரைக்கப்பட்டதாகவும் ஒரு குறிப்பு உள்ளது.*

***46.40.*** *01.10.2016-அன்று UK மருத்துவர் ரிச்சர்டு பீலே, உடனடியாக, தனது வருகைக்குப் பின்னர், ஆறு பக்க அறிக்கையின் பக்க எண்.4-இல், இந்த நடவடிக்கைகளுக்குப் பின்னரும் நுரையீரல் வீக்கம் தொடர்ந்தால், கரோனரி ஆஞ்சியோகிராம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படலாம் என்று குறிப்பிட்டுள்ளார். பக்க எண்.6-இல், எவ்விதமான மருத்துவ கவனிப்பு வழங்கப்பட்டாலும்,* ***cardio vascular events-****ஆன பக்கவாதம் அல்லது மாரடைப்பு ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன என்று தெரிவித்தார். அவர் C.W.17-இடம் தான் ஏர் ஆம்புலன்ஸில் மறைந்த முதல்வருடன் துணையாகச் செல்லத்தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்*

***46.41.*** *டாக்டர் பாபு ஆபிரகாம் (கோப்பு எண்.4 பக்கம் 235) 11.10.2016 அன்று, இந்திய நேரப்படி இரவு 11.00 மணிக்கு அமெரிக்கா மருத்துவரான டாக்டர். ஸ்டூவர்ட் ரஸ்ஸலுடனான ஒரு தொலைபேசி உரையாடலுக்குப் பின்னர் ரஸ்ஸல் ஆஞ்சியோவைப் பரிந்துரைத்தார் எனப்பதிவு செய்திருந்தார். மிட்ரல் ரிகர்ஜிடேசன் (REGURGITATION) ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து சில சமயங்களில் சிஏஜிக்கு அவர் அறிவுரை கூறினார், ஒருமுறை அவர்நிலையாகி, மருத்துவ நடைமுறைக்கு தகுதியானார்.*

***46.42.*** *ஆரம்பத்தில் டாக்டர் ஸ்டூவர்ட் ரஸ்ஸல் ஆஞ்சியோ மற்றும் அறுவை சிகிச்சை செய்வதற்கு ஏற்ற நேரம் இதுவெனக் கூறினார், ஆனால், டாக்டர் பாபு ஆபிரகாம் அது தேவையில்லை என்று கூற, டாக்டர் ஸ்டூவர்ட் ரஸ்ஸலும் அதை ஒத்திவைத்தார்*

***46.43.*** *மேலும் அப்பல்லோ மருத்துவர் C.W.83-டாக்டர்.செந்தில்குமார், டாக்டர். செரியனும் அறுவை சிகிச்சை தேவையில்லை என்றாரென பதிவுகளிலிருந்து தெரிய வருகிறது. மும்பை மருத்துவர், டாக்டர்.ஜிகிடிவாடியா, 28.9.2016-அன்று கோப்பு எண்.5-ல் பக்கம் எண்.216-ல் அவர் வெண்டிலேட்டருடன் இணைக்கப்பட்டிருந்ததாகவும், வெஜிட்டேசன் மற்றும் பெர்ஃபொரேசன் மற்றும் எம்.ஆர். (MR) ஆகியவை கவனிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இதய அறுவை சிகிச்சை தேவையில்லை என்று அவர் ஒருபோதும் குறிப்பிடவில்லை. அறுவைசிகிச்சை தேவையில்லை என்று டாக்டர்.செரியன் கருத்துத் தெரிவித்ததாக C.W.83 கூறினாலும், டாக்டர்.செரியன் குறிப்பு எதுவும் அளிக்கவில்லை; நோயாளியையோ/கேஸ் ஷீட்களையோ அவர் கண்ணுற்றதாக குறிப்பு எதுவும் இல்லை; பதிவுகளேதும் கிடைக்கப்பெறவில்லை*

***46.44.*** *பொதுவாக, மறைந்த முதல்வரது நிலையிலான ஒரு முக்கியப்பிரமுகருக்கு சிகிச்சையளிக்கும் பொறுப்பில் உள்ள அதிகாரிகள், வழக்கமான/சம்பிரதாய நெறிமுறைகள் உட்பட நோயாளியின் நோய், உடல்நிலை மற்றும் சிகிச்சையின் போக்கினைத் தெரிவிக்கும் கடப்பாடுடையவர்களாவர். நோயின் தன்மை குறித்து, நோயாளியிடம் தெளிவுபடுத்தி, உரிய ஒப்புதலைப் பெற வேண்டும், நோயாளி புரிந்து கொள்ளும் நிலையில் இல்லையெனில், அவரது நெருங்கிய உறவினர்கள் அல்லது நலன்*

*விரும்பிகளிடம் விளக்கி, அவர்களது ஒப்புதலைப் பெற வேண்டும். நீதி, நியாயம் மற்றும் மருத்துவ நெறிமுறைகளுக்கிணங்கி, சம்பந்தப்பட்ட நபர்களிடம் உரிய ஆலோசனை பெறப்பட்ட பின்னர், அத்தகு விளக்கம் அளிக்கப்பட வேண்டும். <u>இக்கோணத்தில், சிகிச்சையின் நடைமுறை தவறு என்று யாரும் எதிர்க்க இயலாது என்பதுடன், நியாயம் வெளிப்படையானதாக இல்லை.</u>*

***46.45.*** *அப்பல்லோவின் சில மருத்துவர்கள், அறுவை சிகிச்சை தேவையில்லை என்று கருத்துத் தெரிவித்திருத்தது உண்மையே. எனினும், சிகிச்சையின் எந்த நேரத்திலும், சிகிச்சை முறை குறித்து கருத்து வேறுபாடு ஏற்பட்ட போதிலும், எந்தவொரு இதய அறுவை சிகிச்சை நிபுணரும் மறைந்த முதல்வருக்கு அளிக்கப்படும் சிகிச்சையில் கலந்துகொள்ளும்படி அழைக்கப்படவில்லை என்பதும் உண்மையே. மருத்துவர்களும், அறுவை சிகிச்சை நிபுணர்களும் முரண்பட்ட கருத்துக்களிலிருந்து இணைந்து, நோயாளியின் நன்மைக்காக ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்திருப்பின், அது நலமாய் இருந்திருக்கும். ஆனால், இந்நிகழ்வில், இது குறித்து எதுவும் செய்யப்படவில்லை. குறிப்பிடத்தக்க வகையில், முழு சிகிச்சை வழிமுறைகளும் உடனிருந்த R.1 உட்பட அப்போதைய சுகாதாரத்துறைச் செயலாளர், சுகாதாரத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், டாக்டர் Y.V.C. ரெட்டி, டாக்டர். பாபு ஆபிரகாம் ஆகியோரின் சிறப்பு கவனித்திற்கு உட்பட்டே நடைபெற்றுள்ளது*

***46.46.*** *C.W.3 டாக்டர் ஆர். முத்துசெல்வன் மறைந்த முதல்வருக்கு அவரது வீட்டில் சிகிச்சை அளித்துள்ளார், மற்றும் அப்போலோ மருத்தவர்களுக்கு உதவ மாநில அரசால் நியமிக்கப்பட்டார். வெளிநாட்டு மருத்துவர்களை கருத்து கேட்டது போல் இவரை கேட்கவில்லை என்பது குறிப்பிடதக்கது.*

***46.47.*** *உடல்நிலை மோசமாகிக் கொண்டிருக்கும் மறைந்த முதல்வரைக் காப்பாற்றும் ஒட்டுமொத்த முயற்சியில் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பற்றிய தகவலைப் பெறும் நோக்கில், மேற்சொன்ன வினாவினை சாட்சியிடம் முன்வைக்க இந்த ஆணையம் விழைந்தது. சுகாதாரத்துறையின் செயலாளரது C.W.136 சாட்சியானது, புறக்கணிக்கும் வகையிலான, பொறுப்பற்ற பதில், மிகவும் வருத்தமளிப்பதுடன் எதுவும் முறையாக இல்லை என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் விதமாக இருந்தது.*

***46.48.*** *விடாப்பிடியாக, சிறந்த மற்றும் திறன்மிகு சிகிச்சைக்காக மறைந்த முதல்வரை வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்லாதது ஏன் எனக் கேள்வி எழுப்பப்பட்டபோது, அத்தகைய நடவடிக்கை நமது இந்திய மருத்துவர்களை அவமானப்படுத்தும் செயலாக இருக்கும் என்ற அப்போதைய சுகாதாரத்துறைச் செயலாளரின் பதில் வியப்பில் ஆழ்த்தியது. தன்முனைப்புடன் செயல்பட வேண்டிய நேரம் இதுவல்ல என்பதையும், மறைந்த முதல்வரி விரைந்து குணமடைவதைப் பற்றி மட்டுமே அனைவரும் அக்கறை கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதையும் இங்கு குறிப்பிடலாம்.*

***46.49.*** *சுகாதாரத்துறைச் செயலாளரின் கூற்று சரியெனவே எடுத்துக்கொண்டாலும், மறைந்த முதல்வரி-க்கு சிகிச்சையளிப்பதற்காக, மருத்துவர்கள் UK-விலிருந்தும் மற்றும் பிசியோதெரபிஸ்ட் சிங்கப்பூரிலிருந்தும், R.2 மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டனர். இந்நிலை இந்திய மருத்துவர்களின் தன்முனைப்பிற்கு அழுத்தமளிப்பதாக இல்லையா? அப்போதைய சுகாதாரத்துறைச் செயலாளர், மறைந்த முதல்வரி-க்கு வெளிநாடு சிகிச்சை அளிப்பதைத் தவிர்ப்பதற்காகத்தான், இந்திய மருத்துவர்கள் அவமதிப்பு என்ற கருத்தை முன்வைத்தார் (ஆனால், இது கற்பனையானது, மிகவும் தவறானது) என்ற கருத்திற்கு ஆளானார்.*

***46.50.*** *சுகாதாரத்துறை செயலாளரது கூற்றின் பொய்த்தன்மையை இது வெளிப்படுத்துவதுடன், இது போன்ற தகவல்கள் அப்போதே உடனுக்குடன் அரசிற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தால், நோய்வாய்ப்பட்ட முதல்வரை மேற்கொண்டும் உயர் சிகிச்சைக்காக வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்வதா, இல்லையா என்பதை ஆய்வு செய்ய, அரசுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கும் என்பதுடன், சரியான முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டதா என்பது குறித்து அமைச்சரவையிலும் அரசால் பரிசீலிக்கப்பட்டிருக்கும். அரசிடம் நம்பிக்கை கொண்டிராமல், சிகிச்சையின் முழு நடைமுறையும் R.1, அவரது மருத்துவ உறவினர்கள் மற்றும் ஒரு சிலரின் தனிப்பட்ட "குழு"-வின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளது.*

***46.51.*** *R.2 மருத்துவமனை நிர்வாகத்தின் தரப்பில் பெரும் புறக்கணிப்பு இருப்பதாக இந்த ஆணையம் கருதுகிறது. R.2 மருத்துவமனையில் 75 நாட்கள் சிகிச்சையில் இருந்தவர், அப்போதைய ஆளும் கட்சியின் சிகரம் தொட்ட, உயர்நிலையிலிருந்த தலைவியே தவிர, வேறொருவரல்ல. மறைந்த முதல்வரின் உடல்நிலையில் நிச்சயமற்ற மற்றும் நம்பமுடியாத உபாதைகள் இருந்தன.*

***46.52.*** *இங்கு சற்று சுவையான மற்றும் முரணான செய்தி என்னவெனில், கால்நடை மருத்துவரான சுகாதாரத்துறைச் செயலாளர் தகுதியின் அடிப்படையில், ஒரு மருத்துவர் என்று கூறாமல் இருப்பதே உகந்தது. அமெரிக்கா, பாம்பே, U.K.-ஐச் சேர்ந்த மருத்துவர்கள் இதய அறுவை சிகிச்சை அவசியம் தேவை என்று கருத்து தெரிவித்தது மனதில் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறிருக்க, எப்படி, எவ்வகையில் இந்நோக்கம் புறக்கணிக்கப்பட்டது என்பது R.2 மருத்துவமனையால் விளக்கப்படவில்லை. ஆஞ்சியோகிராம் செய்வதற்கு அடிப்படைத் தேவையான இரத்தத்தில் கிரியேட்டினின் அளவு உரிய நேரத்தில், சரியாக இருந்தும், அவ்வப்போது ஒத்திவைக்கப்பட்டு, நோயறிதல் செயல்முறையான ஆஞ்சியோகிராம் கூட ஏன் செய்யப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. மேற்கூறிய நடைமுறையில் இதய சிகிச்சை சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படாமல் தவிர்க்கப்பட்டது ஏனென்று விளக்கப்படவில்லை. இவ்வாறு*

இருந்தபோதிலும், *R.2* மருத்துவமனை நோயாளியைப் பார்க்கவோ அல்லது அவரிடமிருந்து கருத்தைப் பெறவோ தங்கள் சொந்த தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணரைக் கூட அனுமதிக்கவில்லை.

***46.53.*** அப்போலோ மருத்துவமனையின் தலைவர் டாக்டர் பிரதாப் சி. ரெட்டி, 12.11.2016 அன்று மறைந்த முதல்வரின் உடல்நிலை குறித்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தது சாட்சியத்தில் உள்ளது, மேலும் இது பத்திரிகை மற்றும் மின்னணு ஊடகங்களில் குறிப்பாக “தி இந்து" மற்றும் "தி டெக்கான் குரோனிக்கிள்" பின்வருமாறு வெளியானது:

> “ஜெயலலிதாவின் நோய்த்தொற்று முழுமையாகக் கட்டுக்குள் இருந்தது, அவர் மருத்துவமனையிலிருந்து அனுப்பப்பட்டதும் அவர் விரும்பிய இடத்திற்குச் செல்லலாம். அவர் மருத்துவமனியிலிருந்து செல்வது அவருடைய முடிவைப் பொறுத்தது. எந்த தேதியும் குறிப்பாக இல்லை. திரும்பிச் செல்ல அவர் புத்துயிர் பெற்று உடல்நலம் தேறுவது அவசியம்”

***46.54.*** இந்த நேர்காணல் மறைந்த முதல்வர் ஆபத்திலிருந்து மீண்டுள்ளதாகவும், அவர் முழுமையாக நலமுடன் இருப்பதாகவும், இனி மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் உணர்த்தியது. ஆனால், இந்த அறிக்கையில் விரிவாக விவாதிக்கப்பட்ட மருத்துவப் பதிவுகள் மற்றும் மருத்துவர்களின் சான்றுகள் மூலம் தெரியவந்த உண்மை முற்றிலும் வேறானது. டாக்டர்.பிரதாப் சி.ரெட்டியின் மேற்கண்ட கூற்று உண்மைக்கு

புறம்பானது என்பதைக் கவனிப்பதில் இந்த ஆணையம் வருந்துகிறது. உலகப் புகழ் பெற்ற அப்படிப்பட்ட மருத்துவமனையின் தலைவர், ஊடகங்களுக்கு இப்படி ஒரு பொறுப்பற்ற கருத்தைத் தெரிவித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இதுபோன்ற பொய்யான அறிக்கையை வெளியிடுவதற்கு அவருக்கு ஏதேனும் அழுத்தம் அளிக்கப்பட்டதா? ஊடகங்களுக்கு இப்படி ஒரு அறிக்கையை வழங்குமாறு யாரிடமிருந்தேனும் அழுத்தமோ அல்லது கோரிக்கையோ இருந்ததாக வைத்துக் கொண்டாலும், அவர் அப்படி ஒரு பொய்யான அறிக்கையை வெளியிட்டிருக்கக் கூடாது. பொய்யான அறிக்கையின் பின்னணி என்ன என்பதும் தெரியவில்லை. அவரது வாக்குமூலத்தில், அவர் எந்த சூழ்நிலையில் மேற்கண்ட அறிக்கையை வெளியிட்டார் என்பதை விளக்கவில்லை, இது அவருக்கு தெரிந்த வகையிலும் கூட தவறானது. அவர் ஆணையத்தின் முன் ஒரு தரப்பாக இருந்தாலும், நியாயமான வாய்ப்பைக் கோருகிறார், மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் எதிர்கொண்ட சூழ்நிலைகளை விளக்க ஆணையத்தின் முன் சாட்சியாக தன்னை விசாரிக்க அவர் விரும்பவில்லை. அவரது நிலையில் உள்ள ஒருவர் ஊடகங்களுக்கு இதுபோன்ற கருத்தை வெளியிடுவது முற்றிலும் எதிர்பாராதது. இதுபோன்ற தவறான அறிக்கையால் மக்கள் அலைக்கழிக்கப்பட்டிருப்பார்கள். டாக்டர் பிரதாப் சி. ரெட்டியின்

இந்த நடத்தை மிகவும் கண்டிக்கத்தக்கது, இதற்கு முழுமையான விசாரணை தேவைப்படலாம்

***46.55.*** *25.11.2016 அன்று, நியூ யார்கிலுள்ள மவுண்ட் சினாய் மருத்துவமனையின் இதயவியல் பேராசிரியர் டாக்டர். சமின் சர்மாவை நோயாளியின் உறவினர்கள் அழைத்துவந்ததாக டாக்டர். பாபு ஆபிரகாம் குறிப்பெழுதியுள்ளார். டாக்டர். சமின் சர்மா மறைந்த முதல்வரை பரிசோதித்து அவரின் மருத்துவ அறிக்கைகளை பார்த்தபின்னர், அன்றே ஆஞ்சியோகிராம் செய்ய ஒத்துக்கொண்டு, அன்றே ஆஞ்சியோ செய்ய தயாராகினார்.*

***46.56.*** *அதே மருத்துவமனையில் பணிபுரியும் டாக்டர் M.R.கிரிநாத்தும் விசாரிக்கப்பட்டார். அறுவை சிகிச்சை தேவையில்லை என்றும் அவர் பரிந்துரைத்தார், ஆனால் அவர் ஒருபோதும் கேஸ் ஷீட்டில் எந்தப் பதிவும் செய்யவுமில்லை மாரடைப்பு ஏற்படுவதற்கு முன் அவர் நோயாளியைப் பார்க்கவுமில்லை. மொத்தத்தில், R.2 மருத்துவமனையின் ஒரு மருத்துவர் C.W.120- டாக்டர். இராம் கோபாலகிருஷ்ணனும் மற்ற மருத்துவமனைகளின் மூன்று மருத்துவர்களும் ஆஞ்சியோகிராமுக்கு பரிந்துரைத்துள்ளனர். இருப்பினும், எய்ம்ஸ் மருத்துவர் C.W.84-நிதிஷ் நாயக், அறுவை சிகிச்சை தேவையில்லை என்று கூறினார். மறைந்த முதல்வர் ARDS நோயால் பாதிக்கப்பட்டிருந்ததால், டாக்டர் கிரிநாத் –உம் அறுவை சிகிச்சை தேவையில்லை என்று கூறினார். R.2 மருத்துவமனையின் நுரையீரல் நிபுணரான C.W.107-டாக்டர் நரசிம்மன், மறைந்த*

முதல்வரின் இதயம் செயலிழப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, அவருக்கு நோய்த்தொற்று ஏற்படுத்திய *ARDS* ஏற்பட்டதென்று கூறினார். *C.W.75*-டாக்டர். *J.R* சுப்ரமணியம், மறைந்த முதல்வரின் இதயம் செயலிழப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்புதான் *ARDS* கண்டறியப்பட்டதாகக் கூறினார். சாட்சியங்கள் மற்றும் *R.2* மருத்துவமனை பதிவுருக்களிலிருந்து, *25.11.2016* வரை, அவர் ஆஞ்சியோவுக்கு உகந்தவாறாக இருந்தார், (கோப்பு எண்.*4*, பக்கம் எண்.*526*). *26.11.2016* அன்று *TT* குழாயின் அளவைக் குறைத்துள்ளனர் (கோப்பு எண்.*4*, பக்கம் எண்.*528* - சுவாசக் குழாய்). எய்ம்ஸ் மருத்துவர் *C.W.84*-டாக்டர் நிதிஷ் நாயக் தனது சாட்சியத்தின் போது, இதய அறுவை சிகிச்சை நிபுணரை தங்கள் குழுவில் சேர்க்க பரிந்துரைக்கவில்லை, ஏனெனில் மறைந்த முதல்வரை கவனித்துக்கொள்ள அப்போலோ மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணர்கள் உள்ளனர் என்று கூறினார்.

***46.57.*** ஏற்கனவே விவாதிக்கப்பட்டபடி, மறைந்த முதல்வருக்கான சிகிச்சை *R.1* –இன் அறிவுறுத்தல்களின்படி *R.2* மருத்துவமனையால் முடிவு செய்யப்பட்டது, இது சாட்சியங்களாலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. பெங்களூரு ஹோட்டலில் *R.1*-ன் குடும்ப உறுப்பினர்கள் முதல்வர் பதவியை குறிவைத்து சதித்திட்டம் தீட்டியதாக டெகல்கா பத்திரிக்கையில் ஏற்கனவே செய்தி வெளியானதாக *R.1* மீது குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், சிகிச்சை தொடர்பாக யாருக்கும் தெரியபடுத்தாமலும் ரகசியம்

*காத்தும், அவரின் சிகிச்சைக்காக வெளி மருத்துவர்களை வரவழைத்தது போல் காட்சிபடுத்தி மறைந்த முதல்வரின் இதயத்திலிருந்த சிறிய வெஜிடேசனுக்கு கூட அந்த வெளி மருத்துவர்கள் பரிந்துரைத்த ஆஞ்சியோ/அறுவை சிகிச்சையோ early வால்வ் அறுவை சிகிச்சையோ செய்யவிடாமல், இம்முறை R.1 மிகவும் எச்சரிக்கையுடன் மருத்துவமனையில் செயல்பட்டதாக ஆணையம் சந்தேகிக்கிறது. அவர்களை நம்ப வைப்பதற்காகவே, இந்த மருத்துவர்கள் அனைவரும் R.2 மருத்துவமனையால் வரவழைக்கப்பட்டனர். அவரது உடல்நிலையை சரிசெய்ய வேண்டும் என்ற உண்மையான எண்ணம் அவர்களுக்கு இருந்திருந்தால், அவர்கள் ஒரு தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணரை நியமித்து, அவரிடமிருந்தும் கருத்தைப் பெற்று, அதற்கேற்ப சிகிச்சையைத் தொடர்ந்திருப்பர். இந்த மில்லியன் டாலர் கேள்விக்கு இன்னும் பதில் இல்லை.*

***46.58.*** *இந்நிலையில், 03.10.2016 ஆம் நாளிட்ட "தி டைம்ஸ் ஆஃப் இந்தியா" நாளிதழில் வெளிவந்த செய்தி பற்றி குறிப்பிடுவது பொருத்தமாகும். அவர் சிகிச்சை பெற்று வருவதாகவும், குணமடைய இன்னும் சில நாட்கள் மருத்துவமனையில் தங்கியிருப்பது அவசியம் என்றும் R2 மருத்துவமனை வெளியிட்ட செய்திக் குறிப்பைப் பார்த்து, முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி மறைந்த முதல்வர் காய்ச்சல் மற்றும் நீர்ச்சத்து குறைபாடு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கை*

அளித்துள்ளபோது, இதற்கிடையில், புதுடெல்லியில் காவிரி நதிநீர் பிரச்சனை கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு. அவர் மருத்துவமனையில் அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்களை சந்தித்து காவிரி நதிநீர் பிரச்சினை குறித்து விவாதித்ததாகவும், தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையை கூறும் திறன் கொண்டதாகவும் செய்திகள் வெளியாகின. மருத்துவமனையில் என்ன நடந்தது என்பது குறித்த புகைப்படம் வெளியிடப்பட வேண்டும் என முன்னாள் முதலமைச்சர் தெரிவித்துள்ளார். ஆனால், அது பொதுமக்களுக்கு வெளியிடப்படவில்லை. அது மட்டுமே வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும். மேலும், அவரது சிகிச்சை மற்றும் உடல்நிலை குறித்த மர்மம் அப்போதுதான் தெளிவாகும் என்று அவர் கூறினார். ஆனால், அது புறக்கணிக்கப்பட்டது. செல்வி ஜெ ஜெயலலிதாவுடன் பல்வேறு கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தாலும், அவர் விரைவில் குணமடைய வாழ்த்தினார். முன்னாள் முதல்வர் எதிர்பார்த்தது துரதிஷ்டவசமாக நடந்தேறியது.

***46.59.*** *ஆணையம், R.1 இன் வழக்கறிஞரிடம், USA-விலிருந்து டாக்டர் சமின் சர்மாவை அழைத்தது யார் என்ற கேள்விக்கு, பதில் கிடைக்கவில்லை. அதை அறிந்தவர் C.W.17 தான் என R.1 பதிலளித்தார். R.1 தனது பங்கிற்கு டாக்டர் சமின் சர்மாவை அழைத்தது யார் என்ற கேள்விக்கு, பதில் அளிக்காமல், மாறாக, டாக்டர் பாபு ஆபிரகாம் பதிவுருக்களில் என்ன எழுதியிருந்தார் என்று கூறினார். பொதுவாக, C.W.17 ஆணையத்தால் கேட்கப்பட்ட*

அனைத்துக்கேள்விகளுக்கும் பதிலளித்த நாகரிகமான சாட்சியமாவார். மிகுந்த திறன்வாய்ந்த புலனாய்வுத் துறையினரிடம் அனைத்து விவரங்களுடனும் கேட்கப்பட்ட போதும் கூட, இது குறித்து எந்த பதிவுருக்களும் அவர்களிடம் இல்லை என்ற பதிலே ஆணையத்திற்குக் கிடைக்கப்பட்டது. ஆணையத்தால், இந்த அளவிற்கான ஒத்துழைப்பில் மென்மேலுமான உண்மைகளை வெளிக்கொணர தன்னாலான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டது; ஆனால் அடையப்பெறவில்லை.

***46.60.*** *சுகாதாரத் துறை அமைச்சர் C.W.146-Dr.விஜயபாஸ்கர், ஒரு கேள்விக்கு தனது சாட்சியத்தில், டாக்டர்.ஸ்டூவர்ட் ரஸ்ஸலுடனான தொலைபேசி உரையாடல் குறித்தும் டாக்டர். சமின் சர்மா அமெரிக்காவிலிருந்து வந்தது குறித்தும் தனக்குத் தெரியும் என்று பதிலளித்தார். டாக்டர் ராஜீவ் சோமன், மருத்துவமனைக்கு வந்ததாகவும், ஆனால் இந்த இரண்டு மருத்துவர்களும் கூறிய கருத்தை அவர் அறியவில்லை என்றும் கூறினார். மறைந்த முதல்வருக்கான சிகிச்சை நடைமுறையின் போது தலைமைச் செயலாளரும், சசிகலாவும் கையெழுத்திட்டதைக் குறித்து கேள்வி எழுப்பியபோது. அவர் அதுகுறித்து அவருக்கு தெரியாது என கூறினார். மறைந்த முதல்வருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து அப்பல்லோ மருத்துவமனைதான் முடிவு செய்தது என்று அவர் கூறினார்.*

***46.61.*** *C.W.148-இளவரசி மற்றும் C.W.149 திரு. ஓ.பன்னீர்செல்வம் விசாரிக்கப்பட்டதில், மூன்று மருத்துவ பதிவுருக்களைக் குறிக்கும் வகையில், C.W.150 டாக்டர்.நந்தகுமாரனின் அறிக்கை Ex.C.51 எனவும், C.W.151 டாக்டர் ரவியின் அறிக்கை Ex.C.53 எனவும் குறியிடப்பட்டுள்ளது. ஸ்டான்லி மருத்துவமனையின் இதயவியல் பேராசிரியர் டாக்டர். R. நந்தகுமார் அளித்த அறிக்கை, Ex.C.54 என குறியிடப்பட்டுள்ளது. இறுதியாக 26.4.2022 அன்று P.W.8-புகழேந்தியின் விசாரணையில் நேரடி சாட்சியம் முடிவடைந்தது. P.A.ஜோசப் தாக்கல் செய்த கோரிக்கைகள் 30.03.2022 அன்றும், புகழேந்தி தாக்கல் செய்த கோரிக்கைகள் 09.05.2022 அன்றும் தள்ளுபடி செய்யப்பட்டது. 2018-ஆம் ஆண்டின் மனு.எண்.214-இல் உள்ள கோரிக்கையும், 2022-ஆம் ஆண்டின் மனு.எண்.49-இல் உள்ள விண்ணப்பமும் ஒன்றே; மேலும் மேற்கூறிய கோரிக்கைகள் பொருண்மையுடனும் பதிலளிக்கப்பட்டுள்ளது. பொருண்மையில் பதில் அளிக்கப்பட்டுள்ளதால், இரண்டு விண்ணப்பங்களும் முடித்து வைக்கப்பட்டன.*

***46.62.*** *C.W. 43 – பதர் சைய்யத், C.W.57 – அலோக் குமார், மேலாளர், பேங்க் ஆப் இந்தியா, எல்லாடா கிளை, C.W. 111 – ஜெயந்தி, கதிரியியக்க நிபுணர், C.W.133 – டாக்டர் சிவஞானசுந்தரம், உட்சுரப்பியல் நிபுணர், C.W.137 – சிவயோகம், C.W.138 – தேவிகா மற்றும் C.W.139 – பூமிக்கா, பணிப்பெண்கள் மற்றும் C.W.143 – பீட்டர் கிரேக் ஜோன்ஸ், கொடநாடு எஸ்டேட் விற்றவர் ஆகியோரை இந்த*

*ஆணையம் விசாரணை செய்தது, ஆனால் அவர்களின் சாட்சியம் இந்த ஆணையத்தின் பொருண்மைக்கு தொடர்பில்லை என்பதால் இந்த அறிக்கையில் விவாதிக்கப்படவில்லை.*

***46.63.*** *C.W.18-பூங்குன்றன், 4.12.2016 அன்று பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மறைந்த முதல்வரின் சிகிச்சை அறையில் சலசலப்பு ஏற்பட்டதாகக் கூறினார். C.W.65-மகேஸ்வரி, செவிலியர், தான் மதியம் 2.00 மணியளவில் பணிக்கு வந்ததாகக் கூறினார். அவரை மறைந்த முதல்வர் தொலைக்காட்சியை அணைக்கச் சொன்னதாகவும், சிறிது நேரம் கழித்து அவருக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.*

***46.64.*** *C.W.59-நளினி, 4.12.2016 அன்று, பிற்பகல் 3.50 மணிக்கு முன் ECHO எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டதாகக் கூறினார். ஆனால் எந்த நேரத்தில் இதய செயலிழப்பு ஏற்பட்டது என்று அவருக்கு தெரியவில்லை. ஆனால் அவர் 3.50 p.m என உறுதிப்படுத்தினாள். இன்ஸ்ட்ருமென்ட் கிளீனர் C.W.125-காமேஷின் சாட்சியத்துடன் C.W.59 இன் சாட்சியத்தை இணைத்து, அவர் C.W 100-மதிவாணன், C.W 122-பஞ்சபகேசன் மற்றும் அருண், மூன்று இன்ஸ்ட்ருமென்ட் கிளீனர்கள் மற்றும் டாக்டர் ரமேஷ் ஆகியோருடன் இணைந்து இதய மசாஜ் செய்தார். CPR மாற்றாகச் செய்யப்படலாம், எனவே அவர்கள் பயிற்சி பெறாத நபர்களின் உதவியைப் பெற்றனர். பின்னர் ஸ்டெர்னோடமி செய்யப்பட்டது. C.W.119 மற்றும் C.W.112 இன் சான்றுகளின்படி, உடல் அசைக்கப்படாமல், 15 நிமிடங்களுக்கு*

ஸ்டெர்னோடமி செய்யப்பட்டது. *CPR* செய்யும் போது ஸ்டெர்னோடமி செய்ய முடியாது என்று சொன்னார்கள், ஆனால் *C.W.126*-டாக்டர் மதன்குமார் *CPR* மற்றும் ஸ்டெர்னோடமியை ஒரே நேரத்தில் செய்யலாம் என்று கூறினார்

***46.65.*** *04.12.2016* அன்று மாலை *3.50* மணிக்கே. *C.W.59*-எக்கோ டெக்னீஷியனின் கூற்றுப்படி, மாரடைப்பு என்றால் என்னவென்று அவருக்குத் தெரியும், மேலும் *(1)* இதயம் செயல்படுகிறதா *(2)* *pericardial* உள்ளதா மற்றும் *(3)* வால்வுகளிலிருந்து கசிவு ஏதும் இல்லை போன்ற மூன்று பொருண்மைகளைக் கவனித்தார். அப்போது அங்கிருந்த *duty doctor C.W.60,* இதய ரிதத்தில் மாற்றம் இருப்பதாக வி.பி.சி மானிட்டரில் அவரால் கவனிக்கப்பட்டதாகவும் இதயத்தின் *VF* மாறியது, இதயம் மட்டும் அதிர்ந்தது, இரத்த ஓட்டம் இல்லை என்றும் கூறினார்

***46.66.*** மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், *CPR* உடன் ஒரே நேரத்தில் ஸ்டெர்னோடமி மேற்கொள்ளப்பட்டது மற்றும் அது சம்பந்தமாக, உடல்நிலை மோசமடைந்துக்கொண்டிருந்த மறைந்த முதல்வருக்கு சிகிச்சையளிக்க மூன்று அறுவை சிகிச்சை நிபுணர்கள் அழைக்கப்பட்டனர். ஸ்டெர்னோடமி செயல்முறையைத் தொடங்குவதற்கு முன்பு *CW-60* கூறியது போல் மறைந்த முதல்வருக்கு இரத்தப்போக்கு அல்லது இரத்த ஓட்டம் எதுவும் இல்லை, இதுவே அவர் அப்போது உயிருடன் இல்லை என்பதைக் குறிக்கிறது

***46.67.*** *ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையின் டீன், C.W.127-டாக்டர். R.ஜெயந்தி, நாள்தோறும் சுமார் 12000 பேர் தனது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக தனது சாட்சியில் கூறினார். CPR மற்றும் ஸ்டெர்னோடமி பற்றி அவரிடம் கேட்டபோது, உடலில் இரத்த ஓட்டம் இருந்தால் ஸ்டெர்னோடமியின் போது, தோல் வெட்டப்பட்டால், இரத்தம் வர வேண்டும் என்றும், CPR செய்தால் அதிக இரத்தம் வெளியேறும் என்றும் கூறினார்*

***46.68.*** *C.W.123-டாக்டர். மினல் M வோரா -இன் மற்றொரு சாட்சியமும் உள்ளது. 04.12.2016 அன்று நள்ளிரவு 1 மணிக்கும் 2 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில், மறைந்த முதல்வரின் இதயத்தில் சில நிமிடங்களுக்கு ரிதம் கண்டதாகவும், மறைந்த முதல்வர் ECMO உடன் இணைக்கப்பட்ட பிறகு அவரின் கண் இமைகள் திறைந்து மூடியதாகவும், அவர் சுவாசித்ததாகவும் பின்னிட்டு 05.12.2016 அன்று காலை 9.45 மணிக்கு அது பதிவுசெய்யப்பட்டது எனவும் அவரின் முதன்மை விசாரணையில் தெரிவித்தார் (கோப்பு எண்.5, பக்கம் எண் 224). அவரது குறுக்கு விசாரணையில் (பக்கம் எண்.10), அதிகாலை 3.25 மணிக்கு 30 நிமிடங்களுக்கு தானாக ரிதம் இருந்ததாகக் கூறினார் (5.12.2016 அன்று அதிகாலை 4.45 மணிக்கு கோப்பில் எழுதப்பட்டது). C.W80-டாக்டர். A.L. அருள்செல்வன் மீண்டும் அழைக்கப்பட்ட போது, எய்ம்ஸ் மருத்துவக் குழுவின் முன்னிலையில், 4.12.2016 இரவு மற்றும் 5.12.2016 அதிகாலையில் அவரது இடது pupilliary response காணப்பட்டதாக அவரது சாட்சியத்தில் கூறினார். C.W.17 தனது*

சாட்சியத்தில் 5.12.2016 அன்று அதிகாலை 3.25 மணிக்கு 30 நிமிடங்களுக்கு மறைந்த முதல்வரின் இதயம் செயல்பட்டதை குறித்து தனக்கு தெரிவிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர்கள் மறைந்த முதல்வரின் வாயில் straw வைத்து, GAG ஐ கண்டணர் அதுவும் அவருக்குத் தெரிவிக்கப்படவில்லை. எம்பாமிங் செய்வதற்கு 10-15 மணி நேரத்திற்கு முன்பே மரணம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று கூறிய C.W.15-டாக்டர் சுதா சேஷய்யனின் சாட்சியத்துடன் ஒப்பிடும் போது, மேற்கண்ட கூற்றை ஏற்க முடியாது

**46.69.** மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான C.W.15-டாக்டர் சுதா சேஷய்யன், இரவு 11.30 மணியளவில் எம்பாமிங் தொடங்கியபோது, மறைந்த முதல்வர் எம்பாமிங் செய்வதற்கு 10 முதல் 15 மணி நேரத்திற்கு முன்பே இறந்து விட்டார் என கணடறிந்தார். மேலும், மறைந்த முதல்வர் ECMO இல் இருந்தபோது, மரணத்தை அறிவிக்க, R.2 மருத்துவமனை 5.12.2016 அன்று AIIMS குழுவை வரவழைத்தது, அப்போதுதான் முதல் முறையாக தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணரிடம் ஆலோசனை பெற வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். எய்ம்ஸ் மருத்துவர்கள் 5.12.2016 அன்று மாலை 5.00 மணியளவில் வந்து, நோயாளியின் உடல் வெப்பநிலையை சாதாரண உடல் வெப்பநிலைக்கு (normothermia) கொண்டு வருமாறு மருத்துவமனை அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டனர், மேலும் அவர்கள் இரண்டு முதல் மூன்று மணி நேரம் கழித்து பரிசோதித்து, இதய செயல்பாடு எதுவும் காணப்படவில்லை

*என்று கருத்துத் தெரிவித்தனர். எனவே மறைந்த முதல்வரை ECMO இலிருந்து நீக்க அறிவுறுத்தினர். மாற்று அறுவை சிகிச்சை செய்யும் எண்ணமில்லாத போது ஏன் அவரை சாதாரண உடல் வெப்பநிலைக்கு அவர்கள் கொண்டுவந்தனர் (normothermia) என்பதை அவர்களால் விளக்க முடியவில்லை. இதிலிருந்து, C.W.59 இன் சாட்சியத்தின்படி, மாலை 3.50 மணிக்கு மறைந்த முதல்வரின் மரணம் உறுதி செய்யப்பட்டது என்பதும், CPR, ஸ்டெர்னோடமி மற்றும் AIIMS மருத்துவர்கள் குழுவை அழைத்தது முற்றிலும் நேரத்தை போக்குவது மற்றும் வீணானது என்பதும் மிகவும் தெளிவாகிறது AIIMS மருத்துவரரான C.W.142-டாக்டர். V.தேவ கௌரவ் பக்கம் எண்.2 இல், CPR செய்து 45 நிமிடங்களுக்குப் பிறகும், இதயம் செயல்படவில்லை என்றால், அவர்கள் அந்த நோயாளி இறந்ததாக அறிவிப்பார்கள் என்று கூறினார். அவருடைய இதயம் மீண்டும் செயல்படாது என்றும் அதை செயல்படுத்த முடியாது என்றும் நன்கு அறிந்த அவர்கள், ஏதோ ஒரு உள்நோக்கத்துடன் நேரத்தை நீட்டித்தனர்*

***46.70.*** மேற்கூறிய *சான்றுகளிலிருந்து, சுயநலம் கருதி மறைந்த முதல்வருக்கு மூளைச் சாவு ஏற்படாதது போல் தங்களைத் திருப்திப்படுத்துவதற்காக R.2 கேஸ் ஷீட்டில் ஒப்புதல் அளித்துள்ளது என்பது தெளிவாகிறது, ஆனால், 28.9.2016 முதல் அவர் இறக்கும் வரை, ஏதேனும் குறைபாடு உள்ளதா என்பதை தெளிவுபடுத்தக்கூடிய ஒரு சாதாரண ஆஞ்சியோகிராம் செய்ய யாரும்*

ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை ஆணையம் புரிந்து கொள்ள முடியாமல் திணறுகிறது. அதற்கான காரணமும் கோப்புகளில் குறிப்பிடப்படவில்லை, இது தொடர்பாக யாரிடமும் எந்த அறிக்கையும் இல்லை

***46.71.*** மறைந்த முதல்வரின் இறந்த நேரம் முக்கியத்துவம் வாய்ந்ததும் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்துவதுமாகும். இறப்பு நேரம் அதிகாரப்பூர்வமாக 05.12.16, அன்று இரவு 11:30 மணி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனையில் மறைந்த முதல்வரின் இறுதி நேரத்தில் அவரை கவனித்துக்கொண்ட பாராமெடிக்கல் பணியாளர்களின் சாட்சியங்களுக்கும் இதற்கும் பெருமளவில் வேறுபாடுள்ளது, 04.12.16 அன்று பிற்பகல் 3:50 மணிக்கு முன்பே மறைந்த முதலமைச்சருக்கு இதய செயலிழப்பு ஏற்பட்டது என்றும், **இதயதில் மின்சார செயல்பாடு எதுவும் இல்லை** மற்றும் இரத்த ஓட்டம் இல்லை என்பதே அவரின் உடல்நிலையை கண்காணித்து வந்த செவிலியர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பணி மருத்துவர்களின் தெளிவான சாட்சியங்களாகும்.

***46.72.*** எக்கோ கார்டியோகிராம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நோயறிதல் நடைமுறைகளால் கூட மறைந்த முதல்வர் பயன்பெற தகுதியற்றவராக அறிவிக்கப்பட்டார். அப்படி இருக்கும்போது, மறைந்த முதல்வருக்கு தாமதமாக CPR செய்யப்பட்டது. சாட்சிகளின் சாட்சியத்தின் படி மாலை 4:20 மணிக்கு CPR தொடங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இந்த ஆணையத்தால் விசாரிக்கப்பட்டபோது

*மருத்துவமனையின் கருவி சுத்தம் செய்பவர்கள் மூன்று பேரால் CPR செய்யப்பட்டது. வியக்கத்தக்க வகையில், மறைந்த முதல்வரின் உடலில் மின் முறை மற்றும் இரத்த ஓட்டம் நிறுத்தப்பட்டபிறகும் அவரின் அந்த மாறமுடியாத நிலையில், அவரின் உடலில் CPR செயல்முறை தொடங்கப்பட்டது.*

***46.73.*** *மறைந்த முதல்வரின் மருமகன், CW-9 தீபக்கின் சாட்சியத்தின் படி, மறைந்த முதல்வரின் மரண நேரத்தை மிகவும் துல்லியமாக நிர்ணயிக்க முடியும். நோயுற்ற மறைந்த முதல்வரை அருகிலிருந்து கவனித்துக்கொண்ட மற்றும் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது நடந்த நிகழ்வுகளையும் முன்னேற்றங்களையும், அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையையும் அவ்வப்போது முழுமையாகத் தெரிந்த அவரின் ஓட்டுநர் மற்றும் CW-18 பூங்குன்றன் ஆகிய இருவரின் தகவலின் அடிப்படையில், 04.12.2016 அன்று (சஷ்டி திதி 02:26 AM, தமிழ் பஞ்சாங்கம்– www.prokerala.com) அன்று மதியம் 3:00 முதல் 3:30 மணி வரை என மறைந்த முதல்வரின் இறந்த நேரத்தைக் கருத்தில் கொண்டு, அவர் இறந்த முதலாம் ஆண்டு நினைவை CW-9 அனுசரித்தார் என்பது அவரது சாட்சியமாகும்.*

# டிசம்பர் 04, 2016 பஞ்சாங்கம் • கார்த்திகை 19

துன்முகி வருடம் கார்த்திகை 19, ஞாயிற்றுக்கிழமை, December 04, 2016 பஞ்சாங்கம் -

**திதி :** 02:26 AM வரை பஞ்சமி பின்னர் சஷ்டி

**நட்சத்திரம் :** உத்திராடம் 09:07 AM வரை பிறகு திருவோணம்

**யோகம் :** துருவம் 05:45 AM வரை, அதன் பின் வியாகாதம்

**கரணம் :** பவம் 01:58 PM வரை பிறகு பாலவம் 02:26 AM வரை பிறகு கௌலவம்.

இன்றைய பஞ்சங்கம் தமிழ் காலண்ட

**டிசம்பர் 04 (ஞாயிற்றுக்கிழமை**

***46.74.*** *இந்த ஆணையத்தின் பார்வையில், மறைந்த முதல்வர் 04.12.2016 அன்று பிற்பகல் 3:50 மணிக்கு காலமானார். CPR மற்றும் ஸ்டெர்னோடமி பயனற்றவை என்பதுடன், அவரது மரணத்தை அதிகாரப்பூர்வமாக அறிவிக்க தாமதத்திற்கான காரணமாக தந்திரமாகப் பயன்படுத்தப்பட்டன*

***46.75.*** *திரு.ஓ.பன்னீர்செல்வம், மறைந்த முதல்வரது நெருங்கிய வட்டாரத்தைச் சேர்ந்தவர் என்பதுடன், அவரது வாழ்வின் அனைத்து நிகழ்வுகளையும் அறிந்திருந்தார்.*

***46.76.*** *மறைந்த முதல்வரின் மறைவுக்குப் பிறகு, சிறிதும் காலத்தினை தாழ்த்தாமல் தமிழக முதல்வர் பதவிக்கு தன்னைப் பொருத்திக் கொள்ளத் தயார் நிலையிலிருந்து, மறைந்த முதல்வரின் வாரிசாக அவர் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது தற்செயலான நிகழ்வல்ல/நிகழ்வாகத் தோன்றவில்லை.*

***46.77.*** *அதிகாரமையத்தின் மர்மமான சூழ்ச்சிகளால் புதிதாகக் கிடைத்த பதவி அவருக்கு நீண்டகாலம் நீடிக்கவில்லை, ஏமாற்றத்தினால் கோபமடைந்த திரு.ஓ.பன்னீர்செல்வம், அரசியல்லாபத்தை அடையும் நோக்கில் 2017 பிப்ரவரியில் "தர்மயுத்தம்" தொடங்கினார். ஒரு அமைதியான பார்வையாளராக இருந்த அவர், R.2 மருத்துவமனையில் என்ன நடந்தது, குறிப்பாக சிகிச்சை முறையில் என்ன நடந்தது என்பதை அவர் முழுமையாக அறிந்திருந்தார். தனது பதவியை இழந்தபின்னர், அவர் "தர்மயுத்தத்தை" நாடி, சிபிஐ விசாரணையைக் கோரினார்*

***46.78.*** *எனினும், விதிப்படி, துணை முதல்வர் பதவிக்கு அவர் தன்னைப் பொருத்திக் கொள்ள வேண்டியிருந்தது, இதுவும் வல்லவனின் தந்திரமாக இருக்கலாம். அவர் விரும்பியதில் ஒரு பகுதி மட்டுமே அவருக்குக் கிடைத்திருப்பினும், மாற்றத்தின் மாறாத தன்மையாக, ஒரு புதிய பரிமாணத்தில், செய்தித்தாளில் வெளியான மறைந்த முதல்வரது மறைவில் மறைந்துள்ள மர்மம் பற்றிய பொதுமக்களின் அறிக்கைகள், வதந்திகள் மற்றும் சந்தேகங்களைக் கொண்ட செய்தியினடிப்படையிலேயே இந்த ஆணையம் அமைக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்.*

***46.79.*** *அவர், இந்த ஆணையம் அமைக்கப்பட்டதற்கான காரணங்களை நிராகரித்துள்ள இந்நிகழ்வு, ஒரு முக்கிய சாட்சி, நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு விரோதமாக மாறுவதை நினைவூட்டுவதுடன், நேர்மையாகவும், நியாயமாகவும், நிகழ்வுகளின் உண்மைச்சூழலை வெளிக்கொணரும் நோக்கத்துடன் அமைக்கப்பட்ட இந்த விசாரணை ஆணையத்தில் தாக்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பதாக அமைகிறது.*

***46.80.*** *அப்போலோ மருத்துவமனை மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் SLP தாக்கல் செய்து 26.04.2019 அன்று தடை உத்தரவு பெற்றது. அதன்பிறகு, இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு, இறுதியாக, 30.11.2021 அன்று மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் தீர்க்கப்பட்டது. மாண்புமிகு உச்சநீதி மன்றத்தின் ஆணையின் 7வது பத்தி, பின்வருமாறு:*

*"(7) வழக்கை தீர்ப்பதில் ஆணையத்துக்கு உதவ ஒரு மருத்துவக் குழுவை அமைப்பது நியாயமானது மற்றும் சரியானது என்று நாங்கள் கருதுகிறோம். இந்த நோக்கத்திற்காக, புதுதில்லியின் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் (AIIMS) இயக்குநரிடம், மறைந்த தமிழ்நாடு முதல்வருக்கு பாதிக்கப்பட்ட நோய்களுக்கான துறைகளின் நிபுணர்கள் அடங்கிய குழுவை பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு நியமிக்கப்பட்ட மருத்துவக் குழு, ஆணையத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் பங்கேற்கவும், அறிக்கையின் நகலை ஆணையத்திற்கு வழங்கவும் அனுமதிக்கப்படுகிறது. அத்தகைய அறிக்கையின் நகல் மேல்முறையீட்டாளருக்கும் - மருத்துவமனை மற்றும் 3 ஆம் எதிர்மனுதாரருக்கும் வழங்கப்பட வேண்டும்.*

***Original Text:***

*"(7) We are also of the view that it is just and proper to constitute a Medical Board to assist the Commission in disposal of the case. For the purpose, we request the Director, All India Institute of Medical Sciences (AIIMS), New Delhi, to nominate a panel of doctors, specialist in the fields of treatment of the ailments as suffered by late C.M. of the Tamil Nadu. Needless to say that the Commission has to furnish the said Medical Board, so constituted, with complete records of the proceedings. The Medical Board, so appointed, is permitted to participate in all further proceedings of the Commission and furnish a copy of the report to the Commission. A copy of such report shall also be furnished to the appellant – Hospital and respondent no.3."*

***46.81.*** *மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளுக்கு இணங்க, மருத்துவக் குழுவை அமைக்க ஆணையம் 21.12.2021 ஆம் நாளிட்ட கடிதத்தை அரசுக்கும் 20.01.2022 ஆம் நாளிட்ட கடிதத்தை புது தில்லி எய்ம்ஸ் இயக்குநருக்கும் அனுப்பியது. அதன்பிறகு, எய்ம்ஸ் மருத்துவக் குழு 01.02.2022 நாளிட்ட நடவடிக்கைகளைத் தெரிவித்தது, இது 08.02.2022 அன்று இந்த ஆணையத்தால் பெறப்பட்டு, R.1 மற்றும் R.2 தரப்பு வழக்கறிஞர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. பின்னர், R.2 தரப்பு வழக்கறிஞர், விசாரிக்கப்பட வேண்டிய சாட்சிகளின் பட்டியலைக் குறிப்பிட்டு மனு தாக்கல் செய்தார். தேசிய பசுமைத் தீர்ப்பாயம், சென்னை பெஞ்ச் மற்றும் அரசிடமிருந்து தேவையான அனுமதியைப் பெற்று ஆணையம், 7.3.2022 அன்று எய்ம்ஸ் மருத்துவக் குழுவின் முன்னிலையில், தேசிய பசுமைத் தீர்ப்பாய மெட்ராஸ் பெஞ்ச் வளாகத்தில் வீடியோ கான்பரன்ஸ் மூலம் சாட்சிகளை விசாரிக்கத் தொடங்கியது. ஆணையத்தால் வீடியோ கான்பரன்ஸ் மூலம் விசாரிக்கப்பட்ட எட்டு விசாரணைகளில் எய்ம்ஸ் மருத்துவக் குழுவும் பங்கேற்றது.*

***46.82.*** *அதன்பிறகு மருத்துவக் குழு அமைக்கப்பட்டது. எய்ம்ஸ் மருத்துவக்குழு சில கோப்புக்களை பரிசீலித்து மறைந்த முதல்வர் தொடர்பான நிகழ்வில் சரியான நடைமுறைகள் முறையாக கடைபிடிக்கப்பட்டதாக முடிவுசெய்தது.*

***46.83.*** *விண்ணப்பங்களுக்கு தீர்வு காணப்பட்ட பிறகு, ஆணையம் எய்ம்ஸ் அறிக்கைக்காக காத்திருந்தது. எய்ம்ஸ் அறிக்கை*

பெறப்படாததால், ஆணையம் எய்ம்ஸ் மருத்துவக் குழுவை தொடர்பு கொண்டது. ஆணையம் 8.7.2022 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக எய்ம்ஸ் -இடம் அறிக்கையைக் கோரியது, அதற்கு எய்ம்ஸ், மருத்துவக் குழு உறுப்பினர்களில் இருவர் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளனர் என்றும், அவர்கள் 1.8.2022 அன்றுதான் இந்தியாவுக்குத் திரும்புவார்கள் என்றும், அதன் பிறகு ஆகஸ்ட் முதல் வாரத்தில் அவர்கள் அறிக்கையை அனுப்புவார்கள் என்றும் பதிலளித்தது. எய்ம்ஸ் மருத்துவக் குழுவின் அறிக்கையை மட்டும் 18.08.2022 அன்று ஆணையம் பெற்றது; நகல்கள் பெறப்படவில்லை.

## ***47. முடிவுரை***

***47.1.*** *அரசால் ஏற்படுத்தப்பட்ட செயல்வரம்புகளின் முதல் பகுதி, மறைந்த முதல்வர் 22.09.2016-அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்கு வழிவகுத்த சூழ்நிலைகள் தொடர்பானதாகும்.*

***47.2.*** *2011-நவம்பரில், R.1 மறைந்த முதல்வரால். "டெஹல்கா" இதழில் வெளியான செய்தியின் அடிப்படையில் வெளியேற்றப்பட்டார் பிறகு, R.1- இடமிருந்து உறுதிமொழி பெறப்பட்டு, போயஸ் கார்டனுக்குள் மீண்டும் அனுமதிக்கப்பட்டார்.*

***47.3.*** *C.W.14-இன் சாட்சியத்தின்பட, 2012-ல் பொது குழு கூட்டத்தின் போது கூட மறைந்த முதல்வர், R.1 மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை வார்த்தைகளால் தாக்கினார். R.1-இன் மறு-வருக்கைக்குப் பிறகு R.1-க்கும் மறைந்த முதல்வருக்கும் இடையே முன்பு இருந்ததைப்போல, நல்லுறவு சுமூகமானதாக இல்லை.*

***47.4.*** *எனினும், R.1 சில வருடங்கள் நீடித்தபோது, திடீரென மறைந்த முதல்வர் போயஸ் கார்டனில் மயங்கி விழுந்து R.2-மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்குப் பிந்தைய நிகழ்வுகள், R.1-ஆல் இரகசியமாக்கப்பட்டன.*

***47.5.*** *மறைந்த முதல்வர், 22.9.2016-அன்று இரவு சுயநினைவற்ற நிலையில், போயஸ் கார்டன் இல்லத்திலிருந்து அப்போலோ*

மருத்துவமனைக்குச் செல்வதற்கு வழிவகுத்த நிகழ்வுகள் மற்றும் அவரது பொதுவான உடல்நிலை குறித்து ஆணையம் விரிவாக விசாரித்தது. மறைந்த முதல்வர் உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம், கட்டுப்பாடற்ற நீரிழிவு நோய், ஹைப்போ தைராய்டிசம், நாள்பட்ட வயிற்றுப்போக்குடன் எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறி *(Irritable Bowel Syndrome with Chronic Diarrhoea)* மற்றும் நாள்பட்ட மூச்சுக்குழாய் அழற்சி *(Chronic Seasonal Bronchitis)* ஆகியவற்றால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்தார் என்பது ஆணையத்திற்கு அளிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்ததிலிருந்து அறியப்படுகிறது. மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னரே மூன்று நாட்களாக அவருக்கு அதிக காய்ச்சல் இருந்ததையும், அதற்காக *C.W.17* - டாக்டர். சிவகுமாரின் ஆலோசனையின் பேரில் பாராசிட்டாமல் மாத்திரைகளை அவர் எடுத்துக் கொண்டார் என்பதையும் ஆணையம் ஏற்கனவே கண்டறிந்துள்ளது.

***47.6.*** மறைந்த முதல்வர் தனது வீட்டின் முதல் மாடியிலுள்ள தனது அறையின் குளியலறையிலிருந்து திரும்பி படுக்கையை அடைந்தபோது மயங்கிவிழுந்தார். அப்போது அவருடன் அங்கிருந்த *R.1*-திருமதி. வி.கே.சசிகலா மற்றும் *C.W.17* ஆகியோர் அவரைத் தாங்கிப் பிடித்தனர். *C.W.17* விரைந்து ஆம்புலன்ஸ் சேவைக்காக அப்போலோ மருத்துவமனைக்கு உடனடியாகத் தகவலளித்து, ஆம்புலன்ஸில் வந்த மருத்துவர் மற்றும் துணை

மருத்துவப் பணியாளர்கள் உடனடியாக முதல்வருக்கு மாஸ்க் மூலம் ஆக்ஸிஜன் வழங்கி முதலுதவி அளித்தனர். மயங்கி விழுந்த முதல்வர் சிறிதும் தாமதிக்காமல் கீழிருந்த ஆம்புலன்சில் அப்போலோ மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். முதல்கட்ட நோயறிதலுக்குப் பிறகு, முதல்வர் *ICU*-வுக்கு மாற்றப்பட்டபோது, ஸ்ட்ரெச்சரில் இருந்த அவருக்கு சுயநினைவு வந்தது. இவ்வாறு, ஆணையம் மறைந்த முதல்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு வழிவகுத்த சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்களை சுருக்கமாக அளிக்கிறது. சற்றும் தாமதிக்காமல் உடனடியாக போதுமான கவனத்துடன் முதல்வரை அப்போலோ மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல *R.1* உட்பட வீட்டிலிருந்த நபர்களின் ஈடுபாட்டில் அசாதாரணமான அல்லது இயற்கைக்கு மாறான நடத்தையோ எதையும் ஆணையம் கண்டறியவில்லை. இவ்வாறு ஆணையத்தின் செயல்வரம்பின் முதல் பகுதிக்கு ஆணையம் பதிலளித்துள்ளது.

*47.7.* செயல்வரம்பின் பிற்பகுதியைப் பொறுத்தவரையில், இது மறைந்த முதல்வருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையுடன் தொடர்புடையது. அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நேரத்திலிருந்து இறக்கும் வரை ஒவ்வொரு கட்டமாக முதல்வரின் உடல்நிலையை ஆணையம் விரிவாக விசாரித்தது. மறைந்த முதல்வர் கட்டுப்பாடற்ற நீரிழிவு நோய், மாறுபட்ட இரத்த அழுத்தம் *(fluctuating Blood Pressure)*, தைராய்டு, உடல் பருமன், எரிச்சல் கொண்ட குடல்

நோய்க்குறி *(Irritable Bowel Syndrome),* வயிற்றுப்போக்கு மற்றும் மூச்சுக்குழாய் அழற்சி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டார் என்ற பல்வேறு மருத்துவர்களின் நோயறிதலையும் ஆணையம் பதிவு செய்துள்ளது. அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே, அவருக்கு சிறுநீர்த் தொற்று காரணமாக "செப்சிஸ்" ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. இந்த நோய்த்தொற்று *"Enterococcus faecalis"* என்றழைக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து, அவரது இதயத்தில் இரண்டு வெஜிடேசன் மற்றும் பெர்ஃபொரேசனும் இருப்பதாகவும், அதன் விளைவாக *regurgitation* ஏற்பட்டதாகவும் மருத்துவர்கள் கண்டறிந்தனர். இந்த நோய்களின் தொடர்ச்சியாக, முதல்வருக்கு *pleural effusion*-உடன் *pulmonary oedema* இருந்தது. அப்போலோ மருத்துவர்கள் மற்றும் வெளியிலிருந்து வரவழைக்கப்பட்ட மருத்துவர்களின் மேற்கூறிய கண்டறிதலுக்கு, எய்ம்ஸ் மருத்துவக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

***47.8.*** இதிலிருந்து, செப்சிஸ் நோய் கண்டறியப்பட்டு அதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டாலும், 26.09.2016-அன்று வெஜிடேசன் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டது என்பதும், அதன்பின்னர், 28.09.2016-அன்று அது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது.

***47.9.*** 27.09.2016-அன்று காவிரி நதிநீர்க் கூட்டத்தில் தலைமைச் செயலாளரால் மறைந்த முதல்வருடன் புகைப்படம் (வெளியிடப்படுவதற்காக) எடுக்கக் கோரப்பட்டு, மறைந்த முதல்வரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவர்கள் புகைப்படக்

கலைஞருக்காகக் காத்திருந்தபோது, இராமலிங்கம், ஐ.ஏ.எஸ்., மருத்துவமனையில் புகைப்படம் எடுக்கத் தேவையில்லை எனக்கூறியதாக PSO பெருமாள்சாமி தெரிவித்தார்.

**47.10.** மறைந்த முதல்வருக்கு 27.09.2016-அன்று இரவு மூச்சுத்திணறல் ஏற்பட்டதன் காரணமாக, அவருக்கு வென்டிலேட்டர் பொருத்தப்பட்டது. மறுநாள் காலை (28.09.2016), TEE பரிசோதனை செய்யப்பட்டதில், முதல்வருக்கு இதயத்தில் இரண்டு வெஜிடேசனும் பெர்ஃபொரேசனும் இருப்பதை C.W.120-இராம் கோபாலகிருஷ்ணன் உறுதிப்படுத்தினார்.

**47.11.** 28.09.2016-அன்று TEE செய்ததிலிருந்து பெர்ஃபொரேசன் மற்றும் 20-40 மி.லி. இரத்தக் கசிவு கண்டறியப்பட்டதாக R.2-மருத்துவர்கள் டாக்டர். சந்திரசேகர், டாக்டர்.ஒய்.வி.சி. ரெட்டி, டாக்டர்.எல்.எப்.ஸ்ரீதர் மற்றும் டாக்டர். கே.சாந்தி ஆகியோரால் கோப்பு எண். 3 மற்றும் 4, பக்க எண். 55-இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**47.12.** 01.10.2016-அன்று டாக்டர் ரிச்சர்ட் பீலே-வால் செப்சிஸ் மற்றும் வெஜிடேசன் கண்டறியப்பட்டது. மேலும், இது அவரது அறிக்கையின் பக்கம் எண். 4 மற்றும் 6-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இது முந்தைய பத்திகளில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

**47.13.** C.W.106 - டாக்டர் பாபு ஆபிரகாம் 11.10.2016-அன்று அமெரிக்க மருத்துவரான டாக்டர் ஸ்டூவர்ட் ரஸ்ஸலைத் தொடர்பு கொண்டதில் அவரால் பரிந்துரைக்கப்பட்ட ஆஞ்சியோ-வும் செய்யப்படவில்லை. C.W.102, 19.04.2022-ஆம் நாளிட்ட தனது சாட்சியத்தில், நுரையீரலின்

இருபுறமும் திரவம் சேர்ந்திருப்பதாகவும், 10.10.2016 முதல் 13.10.2016 வரை தோராயமாக நாள்தோறும் 1200 மி.லி., 1070 மி.லி., 1040 மி.லி. மற்றும் 600 மி.லி திரவம் வெளியேற்றப்பட்டதாகவும் தெரிவித்தார். இதில் விசித்திரமானது என்னவெனில், 19.04.2022 அன்று மருத்துவக் குழுவின் முன்னிலையில் இப்பதில் அளிக்கப்பட்டிருந்தாலும், அந்த வெஜிடேசனின் காரணமாகத்தான் இரு நுரையீரல்களிலும் ஒரு லிட்டருக்கும் மேல் திரவச் சுரப்பு சேந்திருந்தது என்பது மருத்துவக் குழுவுக்கு சுட்டிக்காட்டப்பட்டது. விசாரணையின் முதல் நாளான 07.03.2022-அன்று தோல் மருத்துவரிடம் ஸ்டிராய்டின் அளவைப் பற்றி மருத்துவக் குழு கேள்விகளை எழுப்பினாலும்; (இது ஒரு நபரின் உயிருக்கு உடனடி ஆபத்தை ஏற்படுத்தாது) மருத்துவரான C.W.80- டாக்டர். அருள்செல்வனிடம் மேலும் சில கேள்விகளைக் கேட்டிருந்தாலும்; இந்த சாட்சியம் மறைந்த முதல்வரின் உயிர் குறித்து முக்கியமானது என்றாலும் மருத்துவக் குழு இந்த சாட்சியத்தை குறித்து தங்கள் அறிக்கையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. C.W. 48 – டாக்டர் S.A. பிரசன்னா, தனது சாட்சியத்தில் தனது பணி நேரத்தில் மறைந்த முதலவருக்கு நுரையீரலிருந்து திரவம் எடுக்கப்பட்டபோது, அவர் மிகவும் வலி உள்ளதாக கூறினார்.

**47.14.** மறைந்த முதல்வர் எந்த நேரத்திலும் டிஸ்சார்ஜ் செய்யப்படுவார் என R.2 மருத்துவமனையின் தலைவரால் 12.11.2016-அன்று செய்தியாளர் சந்திப்பிற்கு அளிக்கப்பட்ட பேட்டியில்

தெரிவிக்கப்பட்டிருந்தது. அவரது அறையில் நடந்த கூட்டத்தில், மறைந்த முதல்வருக்கு "செப்சிஸ்" ஏற்பட்டதாகவும், அவருக்கு இரத்தத்தில் தொற்று இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். *R.2* மருத்துவமனையின் தலைவர் டாக்டர். பிரதாப் சி.ரெட்டியால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், செப்சிஸ் நோய் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அவர் வெஜிடேசன் மற்றும் பெர்ஃபொரேசன் பற்றி குறிப்பிடப்படவில்லை. அதற்கான காரணம் தெரியவில்லை.

***47.15.*** எய்ம்ஸ் மருத்துவர்களே தாங்கள் மேற்பார்வையிட மட்டுமே வந்ததாகவும், மருந்து எதுவும் பரிந்துரைக்கவில்லை என்றும் கூறியுள்ளனர். அவர்கள் ஐந்து முறை *R.2* மருத்துவமனைக்கு வருகை புரிந்திருந்தாலும், எதிர்பார்த்தபடி எந்த மருத்துவ சிகிச்சை நெறிமுறையையும் கடைப்பிடிக்கவில்லை. அறுவை சிகிச்சை தேவையில்லை என்று டாக்டர்.செரியன் பரிந்துரைத்ததாக *C.W.83* கூறினாலும், அவர் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கவில்லை.

***47.16.*** உண்மையை எடுத்துரைக்கும் சந்தர்ப்பங்களும் ஒளி வெள்ளம் போல் உள்ளன. அமெரிக்காவைச் சேர்ந்த புகழ்பெற்ற கார்டியோ தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் சமின் ஷர்மா, *25.11.2016* அன்று மருத்துவமனையில் மறைந்த முதல்வரைப் பரிசோதித்து, மருத்துவக் பதிவுருக்களை ஆய்வு செய்து, மறைந்த முதல்வர் சுயநினைவுடன் இருந்தபோது, அவருடன் விவாதித்து, முன்மொழியப்பட்ட சிகிச்சைக்கு மறைந்த முதல்வர் ஒப்புதல்

அளித்தார். மறைந்த முதல்வரின் இதயத்தில் வளர்ந்த வெஜிடேசன் மற்றும் இதர உடல்நல லோளாறுகளைக் கருத்தில், உயிர் காக்கும் இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்பது மேற்சொன்ன அமெரிக்க மருத்துவரின் கருத்தாக இருந்தது.

***47.17.*** மேற்சொன்னவை, 25.11.2016 அன்று C.W.106 - டாக்டர் பாபு ஆபிரகாமால் எழுத்துப்பூர்வமாக அளிக்கப்பட்டிருந்தது. புத்திசாலிப் பெண்மணியான மறைந்த முதல்வர் அவருக்கு இதய அறுவை சிகிச்சை செய்ய முடிவெடுக்கப்பட்டவுடனேயே அதன் முக்கியத்துவத்தைக் கருதி அவர் அதற்கு ஒத்துக்கொண்டிருப்பார். இரண்டு மாதங்களுக்குப் பின்னர், இங்கிலாந்திலுருந்து வந்த தீவிர சிகிச்சை மருத்துவரின் கருத்துப்படி, இதய அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய அவசியமில்லை என்று அம்முடிவு மாற்றப்பட்டது. ஆனால், அன்று மருத்துவரீதியாக மறைந்த முதல்வரைப் பரிசோதிக்காத இங்கிலாந்து மருத்துவர், எழுத்துப்பூர்வமாக அல்லாமல் நேரடியாக வாய்மொழியாகக் கருத்துத் தெரிவித்தார் என்று கூறப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. R.2 மருத்துவமனையில் பணிபுரியும் C.W.106-டாக்டர் பாபு ஆபிரகாம், அறுவை சிகிச்சை தேவையில்லை என்ற இங்கிலாந்து மருத்துவரின் வாய்வழிக் கருத்தை மட்டுமே மேற்கோள் காட்டியுள்ளார் (கோப்பு எண்.4, பக்கம் எண்.525). இம்முடிவை மாற்றுவதற்கான உரிமை, அமெரிக்க மருத்துவரைத் தவிர, R.1-உம் பெற்றிருந்தார்; நெருக்கடியின் போது முடிவெடுக்கும் திறன் பெற்றவர்கள்,

*கார்டியோ தொராசிக் அறுவை சிகிச்சையைத் தொடராமல் தவறிழைத்திருக்கலாம். இது அமெரிக்க மருத்துவரின் கருத்துப்படி, மறைந்த முதல்வரின் உயிரைக் காப்பாற்றும் விளைவை ஏற்படுத்தியிருக்கலாம்.*

***47.18.*** *அன்றே நடைமுறையைச் செய்ய ஒப்புக்கொண்ட டாக்டர் சமின் ஷர்மாவின் கருத்தை முதல்வர் ஏற்றுக்கொண்ட பின்னர், இம்மாற்றம் பின்னிட்டு யோசனையாக வந்துள்ளது. டாக்டர் சமின் சர்மா ஆஞ்சியோ செய்ய தயாராக இருந்து, மறைந்த முதல்வரும் அதை ஏற்றுக்கொண்ட பிறகு, நுரையீரல் நிபுணரான டாக்டர் பாபு ஆபிரகாம் ஏன் டாக்டர் ரிச்சர்ட் பீலேவை அழைக்க வேண்டும் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்பது R.2 மருத்துவமனை ஆவணங்களின் பதிவுகளிலிருந்து தெளிவாகிறது. எனவே, ஆஞ்சியோவைத் தவிர்ப்பதற்காக, சில அதிகாரம் பெற்றோருக்கு உதவ, டாக்டர்.பாபு ஆபிரகாம், தீவிர மருத்துவரான டாக்டர். ரிச்சர்ட் பீலே, அறுவை சிகிச்சையைத் தள்ளிப்போடலாம் என்று கருத்து தெரிவித்ததாக ஒரு தந்திரம் செய்து, அமெரிக்க மருத்துவர், தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணருக்கு ஆலோசனை வழங்கினார் என்று ஆணையம் முடிவு செய்கிறது.*

***47.19.*** *R.2 மருத்துவமனை பதிவுருக்ககளின்படி, (கோப்பு எண்.4, பக்கம் எண்.525) 25.11.2016 அன்று நோயாளியின் உறவினர்தான் டாக்டர் சமின் ஷர்மாவை அழைத்து வந்ததாக, C.W.102-டாக்டர் பாபு ஆபிரகாம் கூறியுள்ளார்.*

***47.20.*** *R.1-இன் வாக்குமூலத்தில் அவர் டாக்டர் சமின் ஷர்மாவைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார், ஆனால் அவரை ஏற்பாடு செய்தவர் யார் என்று குறிப்பிடப்படவில்லை. குறுக்கு விசாரணையில், R.1-இன் வழக்கறிஞரால் C.W.135 மற்றும் C.W.136 ஆகியோரிடம் கேட்கப்பட்டபோது, டாக்டர் சமின் ஷர்மா R.1-இன் உறவினர்களால் அழைத்து வரப்பட்டதாகத் தெரிவித்தனர். இது C.W.17-க்கு மட்டுமே தெரியும்; ஆனால் அனைத்தையும் விளக்கிய பின்னர், இம்மருத்துவரை ஏற்பாடு செய்தவரின் பெயரை அவர் குறிப்பிடவில்லை. ஆணையம் தேவையான அனைத்து விவரங்களையும் அளித்து, S.P., S.B., C.I.D. மயிலாப்பூர், சென்னைக்கு கடிதம் அனுப்பியது. ஆனால், எஸ்.பி. அலுவலகத்தில் எந்த விவரமும் இல்லை என்பது அவர்களது பதிலாக இருந்தது. விமான நிலையத்திலிருந்து கூட அவர்கள் எளிதாகக் கண்டுபிடித்திருக்கலாம்; R.1 சம்பந்தப்பட்டதால், துறை ஏன் எதையும் வெளிப்படுத்தவில்லை என்பதை ஆணையத்தால் புரிந்து கொள்ள இயலவில்லை.*

***47.21.*** *C.W.106-டாக்டர் பாபு ஆபிரகாம் R.2 மருத்துவமனைக் குறிப்புகளில் இவற்றைப் பதிவு செய்திருந்தார்; அது தொடர்ந்து ஆஞ்சியோ செய்யபடும் என்று அப்போது எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறிருக்கையில், ஆஞ்சியோவை ஒத்திவைக்க UK மருத்துவர், டாக்டர். ரிச்சர்ட் பீலே தொலைபேசியில் பரிந்துரைத்ததாகக் கூறியது என்பது அறுவை சிகிச்சை தொடரப்பட வேண்டாம் என்ற C.W.106-இன் முடிவை அறிவித்தது. இம்முடிவு, டாக்டர். ரிச்சர்ட் பீலேவின்*

*முந்தைய கருத்துடன் நேரடியாக முரண்படுகிறது. இதற்கிடையே நிகழ்ந்தவற்றை யூகங்களால் வரையறுக்க இயலாது, ஆனால், சூழ்நிலைகளிலிருந்து பெறப்படும் நியாயமான மற்றும் தவிர்க்கமுடியாத அனுமானம் என்னவெனில், சரியான நேரத்தில் ஆஞ்சியோ செய்யப்படாமல் இருக்க R.1 ஒருவரால் திறமையாக உத்தி கையாளப்பட்டுள்ளதென்பதாகும்.*

***47.22.*** *செயல்வரம்பின் இரண்டாம் பாகத்தைப் பற்றி விவாதிக்கையில், ஆணையத்தின் முன் அளிக்கப்பட்ட சாட்சிகளும் ஆவணங்களும் அடுத்தடுத்த நிகழ்வுகளை மறுபரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வர ஆணையத்தை வழிநடத்தியது. அவ்வாறன்றி ஆணையம் தனக்கு அளிக்கப்பட்டிருந்த பணியை முழுமையாக நிறைவுசெய்திருக்க முடியாது. எதிர்நிகழ்வுகளை ஆணையத்தால் இதைவிட சிறப்பாக நிரூபித்திருக்க முடியாது.*

***47.23.*** *அப்போதைய துணை முதல்வராக இருந்ததால் அனைத்தையும் அறிந்த திரு.ஓ.பன்னீர்செல்வம், முதல்வர் பதவியை விட்டு விலகியதும் தர்மயுத்தத்தைத் தொடங்கினார். தற்போதைய சூழலைக் கருத்தில் கொண்டு, எந்த சந்தேகமும் இல்லையென்றும், பொதுமக்கள் மற்றும் ஊடகங்களின் வதந்திகளுக்காகத்தான் இந்த ஆணையத்தின் நியமனம் தேவைப்பட்டது என்றும் கூறினார். இங்கு கூறப்படும் அரசியல் குறித்த கண்ணோட்டங்கள் தற்செயலானவை மட்டுமே தவிற; தற்போதைய அரசியல் சூழ்நிலைக்கு எந்த தொடர்பும் இல்லை.*

***47.24.*** *மறைந்த முதல்வர் இறந்த நேரம் 5.12.2016 அன்று இரவு 11.30 மணி என R.2 மருத்துவமனையால் அறிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் C.W.59 மற்றும் C.W.9 ஆகியவர்களின் சாட்சியங்களின் அடிப்படையில் மறைந்த முதல்வர் இறந்த நேரம் 4.12.2016 அன்று மதியம் 3.00 மணி முதல் 3.50. மணிக்குள் ஆகும்.*

***47.25.*** *ஆணையத்தின் மீது நம்பிக்கை வைத்து, இந்த விவகாரத்தைத் தொடர அனுமதித்ததற்காக, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் அமர்விற்கு தனது நன்றியையும் மரியாதையையும் ஆணையம் இதன் மூலம் தெரிவிக்கிறது.*

***47.26.*** *இரு கட்சியினரும் அரசியல் ரீதியாக வேறுபட்ட சித்தாந்தங்களைக் கொண்டிருந்தாலும், ஆணையத்தின் மீது நம்பிக்கை வைத்து விசாரணையைத் தொடர அதன் பதவிக் காலத்தை நீட்டித்ததற்காக தமிழ்நாடு அரசுக்கும் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வருக்கும் ஆணையம் நன்றி தெரிவிக்கிறது.*

***47.27.*** *பதிவிலுள்ள சாட்சியங்களை ஆய்வு செய்த பின்னர், ஆணையம் சரியான முடிவுக்கு வருவதற்கான, சில கருத்துகளை, நிகழ்வுகளை மறுபரிசீலனை செய்து மீண்டும் ஒருமுறை சுட்டிக்காட்டுகிறது:-*

> *அ. சதித்திட்டம் டெஹல்காவில் வெளியிடப்பட்டதன் விளைவாக, மறைந்த முதல்வர் நவம்பர் 2011-இல் போயஸ் கார்டனிலிருந்து R.1-ஐ வெளியேற்றினார். அப்போது பத்திரிகை ஆசிரியர் சோ-வும் உடனிருந்தார்.*

*ஆ. C.W.14, மறைந்த முதல்வருக்கு R.1 மீதும், அவரது உறவினர்கள் மீதும் சந்தேகம் ஏற்பட்டதால், இளவரசி உள்ளிட்டோரை போயஸ் கார்டனிலிருந்து வெளியேற்றினார்.*

*இ. மறைந்த முதல்வர், 2012-ஜனவரியில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் R.1 மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டாம் என்று கட்சி உறுப்பினர்களை எச்சரித்தார்.*

*ஈ. மறைந்த முதல்வர் R.1-ன் மறு-வருகையை, R.1 வழங்கிய உறுதிமொழிக் கடிதத்தின் அடிப்படையில் மட்டுமே அனுமதித்தார்.*

*உ. C.W.14-கிருஷ்ணப்ரியாவின் சாட்சியத்தின்படி, R.1-க்கும், மறைந்த முதல்வருக்குமிடையே நல்லுறவு இல்லை.*

*ஊ. மறைந்த முதல்வரின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப சேவை செய்ததால், R.1-ஐ மட்டுமே போயஸ் கார்டனுக்குள் மீண்டும் நுழைய அனுமதித்ததாக C.W.9 ஒப்புக்கொள்கிறார்.*

*எ. மறைந்த முதல்வர் தன்னுடன் பேசியதில்லை என C.W.148-இளவரசி கூறுகிறார்.*

*ஏ. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகு, மருத்துவமனையில் R.1-இன் உறவினர்களால் பத்து அறைகள் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன.*

*ஐ. நோய்களைப் பற்றி R.2. மருத்துவர்கள் R.1-க்குத் தகவல் தெரிவித்தனர்; R.1 மறைந்த முதல்வருக்கு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தினர்.*

*ஒ. இதயத்தில் வெஜிடேசன், பெர்ஃபொரேசன் மற்றும் diastolic dysfunction ஆகியவை கண்டறியப்பட்டன. இதற்காக C.W.120, UK மருத்துவர் டாக்டர் ரிச்சர்ட் பீலே, US மருத்துவர் டாக்டர் ஸ்டூவர்ட் ரஸ்ஸல் மற்றும் அமெரிக்காவிலிருந்து R.2 மருத்துவமனைக்கு வந்த டாக்டர் சமின் ஷர்மா ஆகியோர் ஆஞ்சியோ/அறுவை சிகிச்சையைப் பரிந்துரைத்தனர். ஆனால், அவரது கடைசி மூச்சு வரை ஏன் அது நடக்கவில்லை.*

ஓ. இரண்டு நுரையீரல்களிலிருந்தும் (ஒரு நாளைக்கு சுமார் 1000 மிலி) பெருமளவிலான திரவம் வெளியேற்றப்படுவதைக் கருத்தில் கொண்டாவது, மருத்துவமனையில் ஆதரவாக நெருங்கிய உறவினர் இல்லாத மறைந்த முதல்வர் மீது சில அனுதாபங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஔ. R.2 மருத்துவமனையால் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுவதாகக் கூறப்படுவதைத் தவிர, வேறு எந்த ஆதாரங்களும் அல்லது ஆவணங்களும் ஆணையத்தின் முன் வைக்கப்படவில்லை.

ஃ. டாக்டர் ரிச்சர்ட் பீலே மறைந்த முதல்வரை சிகிச்சைக்காக வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்லத் தயாரென்று கூறியிருந்தும், அது ஏன் நடக்கவில்லை?

அஅ. டாக்டர் சமின் ஷர்மா ஆஞ்சியோ செய்வதைப்பற்றி விளக்கியபின், அவரும் அதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால், அது ஏன் நடக்கவில்லை?

அஆ. மறைந்த முதல்வரின் மறைவுக்குப் பிறகு, 11.02.2017 அன்று நடந்த அடுத்தடுத்த நிகழ்வுகள்

ஆணையம், மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, R.1-ஐக் குற்றம் சாட்டுவதை தவிர, வேறு எந்த முடிவுக்கும் வர இயலாது.

**47.28.** இந்த அனைத்து கருத்துக்களிலிருந்தும், R.1 - V.K.சசிகலா, C.W.17- K.S.சிவகுமார், அப்போதைய சுகாதாரத்துறைச் செயலாளர் C.W.136- டாக்டர்.J.இராதாகிருஷ்ணன் மற்றும் அப்போதைய சுகாதாரத்துறை அமைச்சர் C.W.146 - டாக்டர். C. விஜயபாஸ்கர் ஆகியோர் குற்றம் செய்தவர்களாக ஆணையம் முடிவு செய்து, விசாரணைக்கு பரிந்துரைக்கிறது.

***47.29.*** *C.W.99-டாக்டர்.Y.V.C. ரெட்டி மற்றும் C.W.106-டாக்டர்.பாபு ஆபிரகாம் மறைந்த முதல்வருக்கு சிகிச்சை அளித்துள்ளனர். அவர்கள் பம்பாய், UK மற்றும் USA மருத்துவர்களை அழைத்து, ஆஞ்சியோ/அறுவை சிகிச்சை செய்வதற்கான கருத்தைப் பெற்றாலும், ஒருதனிப்பட்ட நபரின் கட்டாயத்தினால் சட்டவிரோதமாக இலக்கை அடைவதற்காக அதை வெற்றிகரமாக செயல்படுத்தினர் எனவே, விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.*

***47.30.*** *C.W.12 - அப்போதைய தலைமைச் செயலாளர் டாக்டர் இராம மோகன ராவ்–ஐப் பொறுத்தவரை, செயல்முறைகளுக்காக (procedural aspects) பல்வேறு நாட்களில் 21 படிவங்களில் கையொப்பமிடுவது குறித்து அவர் அரசுக்கு கடிதம் வாயிலாகத் தெரிவிக்கவில்லை என்பதைத் தவிர, ஆணையம் அவருக்கு எதிராக குறைகள் எதையும் காணவில்லை; நிச்சயமாக, இது ஒரு நபரால் (முக்கியஸ்தரால்) செய்யப்பட்ட மாபெரும் குற்றமாகும்; குறிப்பாக, இது முதல்வரது உயிர் தொடர்பானது என்பதால், அதற்கான விளைவுகளை நிச்சயம் பெறுவார். எனவே, விசாரணைக்கு பரிந்துரைக்கப்படுகிறது.*

***47.31.*** *அதேபோல, R.2 மருத்துவமனையின் தலைவர் டாக்டர்.பிரதாப் சி. ரெட்டி, உண்மைகளை தெரிவிப்பதற்கான அதிகாரம் பெற்ற நபராக இருந்தும், செய்தியாளர் சந்திப்பில் மறைந்த முதல்வர் எந்த நேரத்திலும் டிஸ்சார்ஜ் செய்யப்படலாம் என்ற ஒரு பொய்யான அறிக்கையை வெளியிட்டார். இரண்டாவதாக, அவர் தனது அறையில் அடிக்கடி விளக்கக்கூட்டத்தை நடத்திய போதிலும்,*

*மறைந்த முதல்வரின் உடல்நலக்குறைவு மற்றும் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்த உண்மை நிலையை வெளிப்படுத்தத் தவறியதால் இது விசாரிக்கப்பட வேண்டியதாக ஆணையம் கருதுகிறது.*

***47.32.*** *ஆணையம், இந்த அறிக்கையைத் தயாரிக்க உதவிய அனைத்து நல்-உள்ளங்களின் மதிப்புமிக்க சேவைகளை உளமாரப் பாராட்டுகிறது. உலகப் பொதுமறையாம் பொய்யாமொழிப்புலவரின் இருவரிகளை இங்கு பொருத்தமான மேற்கோள்களாக ஆணையம் கருதி நினைவூட்டுகிறது: -*

*"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்*
*வாய் நாடி வாய்ப்பச் செயல்."*

-*அதிகாரம் 95 -* ***மருந்து*** *- குறள்: 948*

கலைஞர் உரை:

நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன?

இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும் (உடல் நோய்க்கு மட்டுமின்றிச் சமுதாய நோய்க்கும் இது பொருந்தும்)

*"காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா*
*வேலாள் முகத்த களிறு."*

-அதிகாரம் 50 - **இடனறிதல்** - குறள்: 500

டாக்டர். மு.வரதராசன் விளக்கம்:

வேல் ஏந்திய வீரரைக் கோர்த்தெடுத்த கொம்பு உடைய

யானையையும், கால் ஆழும் சேற்று நிலத்தில் அகப்பட்டபோது நரிகள் கொன்றுவிடும்.



***நீதியரசர் திரு. அ. ஆறுமுகசுவாமி***

***விசாரணை ஆணையம்***

# பிற்சேர்க்கைகள்

*1. Deposition Copies*

*i. Commission Witnesses - 151 Nos.*

| C.W. Nos. | Name of the Witness | Date of Chief Examination | Date of further Examination | Date of Cross Examination | Recalled on | No. of Pages |
|---|---|---|---|---|---|---|
| 1. | Dr.R.Vimala | 23.11.2017 | -- | 28.03.2018 | -- | 5 |
| 2. | Dr.R.Narayana Babu | 23.11.2017 | -- | 28.03.2018 | -- | 3 |
| 3. | Dr.R.Muthu Selvan | 05.12.2017 | -- | 06.04.2018 | -- | 8 |
| 4. | Dr.B.Kala | 05.12.2017 | -- | 06.04.2018 | -- | 5 |
| 5. | Dr.S.Tito | 06.12.2017 | -- | 06.04.2018 | -- | 5 |
| 6. | Dr.P.Dharmarajan | 07.12.2017 | -- | 06.04.2018 | -- | 6 |
| 7. | Dr.P.Balaji | 07.12.2017 | 25.01.2018<br>14.02.2018<br>15.02.2018 | 06.04.2018 | -- | 23 |
| 8. | Dr.M.N.Sankar | 12.12.2017 | -- | 06.04.2018 | -- | 7 |
| 9. | J.Deepak | 14.12.2017 | -- | 02.06.2018 | -- | 12 |
| 10. | Dr.MK.Muralitharan | 19.12.2017 | -- | 07.04.2018 | -- | 5 |
| 11. | Smt.Sheela Balakrishnan | 20.12.2017 | 11.01.2018 | 07.04.2018 | -- | 16 |
| 12. | Dr.P.Rama Mohana Rao | 21.12.2017 | -- | 07.04.2018<br>24.10.2018 | -- | 21 |
| 13. | Prof.Dr.S.Dinesh | 22.12.2017 | -- | 07.04.2018 | -- | 4 |
| 14. | Smt.J.Krishnapriya | 02.01.2018 | -- | 16.04.2018 | -- | 11 |
| 15. | Dr.Sudha Seshayyan | 03.01.2018 | -- | 16.04.2018 | -- | 5 |
| 16. | Dr.Sathyabama | 04.01.2018 | -- | 16.04.2018<br>05.09.2018 | -- | 8 |
| 17. | Dr.K.S.Sivakumar | 08.01.2018 | 14.03.2018<br>02.05.2018 | 26.05.2018<br>03.12.2018 | -- | 39 |
| 18. | S.S.Poongunran | 09.01.2018 | 18.04.2018<br>04.07.2018 | 02.06.2018<br>20.07.2018 | -- | 14 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *19.* | *Dr.N.Swaminathan* | *12.01.2018* | *--* | *16.04.2018* | *--* | *3* |
| *20.* | *K.N.Venkataramanan, IAS* | *30.01.2018* | *15.03.2018* | *16.04.2018* | *--* | *11* |
| *21.* | *J.Vivek* | *13.02.2018* | *09.03.2018* | *16.04.2018* | *--* | *10* |
| *22.* | *K.T.Karthikeyan* | *15.02.2018* | *02.06.2018 04.07.2018* | *30.04.2018 20.07.2018* | *--* | *14* |
| *23.* | *Smt.M.Rajammal* | *20.02.2018* | *--* | *16.04.2018* | *--* | *6* |
| *24.* | *P.H.Manoj Pandian* | *21.02.2018* | *--* | *25.09.2018* | *--* | *23* |
| *25.* | *K.Ramanujam, (Retd.) IPS* | *22.02.2018* | *--* | *Dispensed with* | *--* | *6* |
| *26.* | *M.Ayyappan* | *23.02.2018* | *08.03.2018* | *Dispensed with* | *--* | *7* |
| *27.* | *C.Kannan* | *06.03.2018* | *--* | *Dispensed with* | *--* | *5* |
| *28.* | *J.K.Tripathy, IPS* | *12.03.2018* | *--* | *Dispensed with* | *--* | *3* |
| *29.* | *Amaresh Pujari, IPS* | *13.03.2018* | *--* | *Dispensed with* | *--* | *4* |
| *30.* | *P.Thamarai Kannan, IPS* | *16.03.2018* | *--* | *Dispensed with* | *--* | *4* |
| *31.* | *R.Veeraperumal* | *27.03.2018* | *--* | *26.05.2018* | *--* | *11* |
| *32.* | *R.Srinivasan* | *28.03.2018* | *--* | *26.052018* | *--* | *4* |
| *33.* | *A.Ramalingam, IAS* | *17.04.2018* | *--* | *02.06.2018* | *--* | *17* |
| *34.* | *Leela Selvakumari* | *30.04.2018* | *--* | *Dispensed with* | *--* | *2* |
| *35.* | *Santhasheela Nair, IAS* | *30.04.2018* | *--* | *26.05.2018* | *--* | *5* |
| *36.* | *Dr.V.Dhivaharan* | *03.05.2018* | *--* | *Dispensed with* | *--* | *10* |
| *37.* | *M. Sheela Priya, IAS* | *04.05.2018* | *--* | *Dispensed with* | *--* | *3* |
| *38.* | *P. Mahalakshmi* | *04.05.2018* | *10.07.2018* | *10.07.2018* | *--* | *4* |
| *39.* | *Dr.Jayashree Gopal* | *08.05.2018* | *10.07.2018* | *10.07.2018* | *--* | *9* |
| *40.* | *Dr.A.Ramachandran* | *08.05.2018* | *--* | *24.09.2018* | *--* | *3* |
| *41.* | *Dr.D.Shantharam* | *09.05.2018* | *10.07.2018* | *10.07.2018* | *--* | *7* |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *42.* | *A.G.Ponn Manickavel, IPS* | *25.05.2018* | *--* | *Dispensed with* | *--* | *3* |
| *43.* | *Bader Sayeed, Ex.MLA* | *25.05.2018* | *--* | *Dispensed with* | *--* | *3* |
| *44.* | *R.Sriram* | *04.06.2018* | *--* | *Dispensed with* | *--* | *4* |
| *45.* | *Marudhu Azhaguraj* | *04.06.2018* | *--* | *13.11.2018* | *--* | *17* |
| *46.* | *K.Archana* | *05.06.2018* | *--* | *24.09.2018* | *--* | *9* |
| *47.* | *M.V.Renuka* | *05.06.2018* | *--* | *07.08.2018* | *--* | *5* |
| *48.* | *Dr.S.A.Prasanna* | *06.06.2018* | *--* | *07.08.2018* | *--* | *5* |
| *49.* | *C.V.Sheela* | *06.06.2018* | *--* | *07.08.2018* | *--* | *3* |
| *50.* | *S.George, (Retd.)IPS* | *13.06.2018* | *14.06.2018* | *--* | *--* | *7* |
| *51.* | *Dr.P.S.J.Vikram* | *14.06.2018* | *--* | *Dispensed with* | *--* | *5* |
| *52.* | *Dr.D.Raj Madhanghi* | *14.06.2018* | *--* | *Dispensed with* | *--* | *5* |
| *53.* | *Dr.Nalani Prabhu* | *27.06.2018* | *--* | *24.09.2018* | *--* | *6* |
| *54.* | *Prema Anthony* | *27.06.2018* | *--* | *24.09.2018* | *--* | *7* |
| *55.* | *K.N.Sathyamurthy, IPS* | *28.06.2018* | *--* | *14.11.2018* | *--* | *17* |
| *56.* | *Dr.Snehasree Venugopal* | *03.07.2018* | *--* | *24.09.2018* | *--* | *8* |
| *57.* | *Alok Kumar* | *04.07.2018* | *--* | *13.11.2018* | *--* | *3* |
| *58.* | *Jai Anand Dhivakaran* | *05.07.2018* | *--* | *Dispensed with* | *--* | *5* |
| *59.* | *M.Nalini, Echo Technician* | *05.07.2018* | *--* | *24.09.2018* | *--* | *4* |
| *60.* | *Dr.M.Rama Devi* | *06.07.2018* | *--* | *24.09.2018* | *--* | *10* |
| *61.* | *Vijayalakshmi.K* | *06.07.2018* | *--* | *24.09.2018* | *--* | *4* |
| *62.* | *Dr.Shilpa* | *12.07.2018* | *--* | *24.09.2018* | *--* | *4* |
| *63.* | *Helena* | *12.07.2018* | *--* | *--* | *--* | *5* |
| *64.* | *Dr.Padmavathy.R* | *13.07.2018* | *--* | *13.07.2018 25.09.2018* | *--* | *6* |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *65.* | *V.Maheswari* | *13.07.2018* | *--* | *13.07.2018* | *--* | *3* |
| *66.* | *Dr.S.Venkataraman* | *17.07.2018* | *--* | *17.07.2018 25.09.2018* | *--* | *4* |
| *67.* | *Govindarajan.C* | *17.07.2018* | *--* | *17.07.2018 27.09.2018* | *--* | *6* |
| *68.* | *B.Suresh Kumar* | *18.07.2018* | *--* | *27.09.2018* | *--* | *4* |
| *69.* | *M.Gnanasekaran, SO* | *18.07.2018* | *--* | *05.10.2018* | *--* | *4* |
| *70.* | *Samundeeswari.P* | *19.07.2018* | *19.07.2018* | *19.07.2018 27.09.2018* | *--* | *5* |
| *71.* | *Anish.S* | *19.07.2018* | *--* | *27.09.2018* | *--* | *4* |
| *72.* | *Rajeswari* | *24.07.2018* | *--* | *27.09.2018* | *--* | *5* |
| *73.* | *Dr.Bhuvaneswari Shankar* | *24.07.2018* | *--* | *27.09.2018* | *--* | *9* |
| *74.* | *Dr.M.Babu Manohar* | *25.07.2018* | *--* | *27.09.2018* | *07.03.2022* | *10* |
| *75.* | *Dr.J.R.Subramaniam* | *26.07.2018* | *--* | *04.10.2018* | *--* | *5* |
| *76.* | *Dr.Sajan Karunakar Hegde* | *27.07.2018* | *--* | *04.10.2018* | *--* | *5* |
| *77.* | *Josnamol Joseph* | *27.07.2018* | *--* | *--* | *--* | *6* |
| *78.* | *Dr.K.R.Palaniswamy* | *06.08.2018* | *--* | *28.09.2018* | *--* | *4* |
| *79.* | *K.Swaminathan* | *20.08.2018* | *--* | *04.10.2018* | *--* | *5* |
| *80.* | *Dr.V.L.Arulselvan* | *20.08.2018* | *--* | *20.08.2018 25.09.2018* | *07.03.2022* | *9* |
| *81.* | *Dr.R.Ravikumar* | *20.08.2018* | *--* | *04.10.2018* | *--* | *3* |
| *82.* | *Dr.K.Bhaskaran* | *20.08.2018* | *--* | *27.09.2018* | *--* | *4* |
| *83.* | *Dr.R.Senthilkumar* | *21.08.2018* | *--* | *27.09.2018 14.11.2018* | *05.04.2022* | *16* |
| *84.* | *Dr.Nitish Naik, AIIMS* | *23.08.2018* | *--* | *24.08.2018* | *--* | *9* |
| *85.* | *Dr.G.C.Khilnani, AIIMS* | *23.08.2018* | *--* | *24.08.2018* | *--* | *12* |
| *86.* | *Prof. Dr.Anjan Trikha, AIIMS* | *23.08.2018* | *--* | *24.08.2018* | *--* | *4* |
| *87.* | *S.Seshadri Narayanan* | *05.09.2018* | *--* | *04.10.2018 11.10.2018* | *--* | *7* |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *88.* | *Subbiah Viswanathan* | *07.09.2018* | *25.09.2018*<br>*05.10.2018* | *--* | *--* | *6* |
| *89.* | *T.Anand*<br>*(Namathu MGR)* | *07.09.2018* | *--* | *05.10.2018* | *--* | *3* |
| *90.* | *Dr.Sai Satish* | *10.09.2018* | *--* | *27.09.2018* | *--* | *5* |
| *91.* | *Ramesh Chand Meena, IAS* | *11.09.2018* | *--* | *05.10.2018* | *--* | *18* |
| *92.* | *Dr.Raj Prasanna,*<br>*HOD & Chief Physiotherapist* | *12.09.2018* | *--* | *Accepted the cross-examination of Apollo counsel* | *--* | *4* |
| *93.* | *Dr.C.Vignesh,*<br>*EDIC Consultant* | *12.09.2018* | *--* | *Accepted the cross-examination of Apollo counsel* | *--* | *4* |
| *94.* | *Dr.Meera Krishnakumar* | *28.9.2018* | *--* | *28.09.2018* | *--* | *3* |
| *95.* | *Dr.A.Dhava Palani* | *28.9.2018* | *--* | *28.09.2018* | *05.04.2022* | *8* |
| *96.* | *S.M.Mohan Kumar* | *28.9.2018* | *24.10.2018* | *28.09.2018*<br>*24.10.2018* | *06.04.2022* | *11* |
| *97.* | *Dr.Rajeev Annigeri* | *03.10.2018* | *--* | *03.10.2018* | *--* | *3* |
| *98.* | *Dr.V.Ramasubramanian* | *03.10.2018* | *--* | *03.10.2018* | *19.04.2022* | *9* |
| *99.* | *Dr.Y.Vijaya Chandra Reddy* | *09.10.2018* | *17.12.2018* | *17.12.2018* | *18.04.2022* | *40* |
| *100.* | *P.Mathivanan, CCU Technician* | *09.10.2018* | *--* | *14.11.2018* | *--* | *3* |
| *101.* | *Dr.I.Sathya Murthy* | *10.10.2018* | *--* | *10.10.2018* | *--* | *6* |
| *102.* | *Dr.Ramesh Venkataraman* | *11.10.2018* | *--* | *13.11.2018* | *19.04.2022* | *21* |
| *103.* | *Dr.A.M.Karthigesan* | *12.10.2018* | *--* | *12.11.2018* | *--* | *5* |
| *104.* | *Dr.Raymond Dominic Savio* | *12.10.2018* | *--* | *14.11.2018* | *19.04.2022* | *13* |
| *105.* | *Dr.Bala Prakash* | *22.10.2018* | *--* | *22.10.2018* | *--* | *7* |
| *106.* | *Dr.Babu Kuruvialla Abraham* | *22.10.2018* | *--* | *22.10.2018* | *18.04.2022* | *25* |
| *107.* | *Dr.R.Narasimhan* | *23.10.2018* | *--* | *23.10.2018*<br>*13.11.2018* | *06.04.2022* | *12* |
| *108.* | *Dr.Paul Ramesh.T* | *23.10.2018* | *--* | *14.11.2018* | *06.04.2022* | *9* |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *109.* | *Dr.K.Sundar* | *15.11.2018* | -- | *15.11.2018* | -- | *4* |
| *110.* | *Dr.V.C.Parthasarathy* | *15.11.2018* | -- | *15.11.2018* | -- | *2* |
| *111.* | *R.Jayanthi* | *15.11.2018* | -- | *15.11.2018* | -- | *2* |
| *112.* | *Dr.N.Ramakrishnan* | *19.11.2018* | -- | *19.11.2018* | *07.03.2022* | *9* |
| *113.* | *Dr.Sumana Manohar* | *20.11.2018* | -- | *20.11.2018* | -- | *4* |
| *114.* | *Dr.Mathew Samuel* | *20.11.2018* | -- | *20.11.2018* | -- | *5* |
| *115.* | *Dr.P.Prabu* | *22.11.2018* | -- | *22.11.2018* | -- | *3* |
| *116.* | *Dr.R.Ashok Kumar* | *22.11.2018* | -- | *22.11.2018* | -- | *2* |
| *117.* | *Dr.Suresh Kumar Manickavel* | *23.11.2018* | -- | *23.11.2018* | -- | *4* |
| *118.* | *Dr.Prakash Chand Jain* | *23.11.2018* | -- | *23.11.2018* | -- | *4* |
| *119.* | *Dr.T.Sunder* | *26.11.2018* | -- | *26.11.2018* | *07.03.2022* | *10* |
| *120.* | *Dr.Ram Gopalakrishnan* | *27.11.2018* | -- | *27.11.2018* | -- | *5* |
| *121.* | *Yuvashree.G* | *27.11.2018* | -- | *27.11.2018* | -- | *2* |
| *122.* | *R.Panjabikesan* | *27.11.2018* | -- | *27.11.2018* | -- | *3* |
| *123.* | *Dr.Minal Vora* | *28.11.2018* | -- | *28.11.2018* | -- | *9* |
| *124.* | *Dr.Sudhakar* | *28.11.2018* | -- | -- | -- | *2* |
| *125.* | *S.R.Kamesh, CCU Technician* | *28.11.2018* | -- | *28.11.2018* | *07.03.2022* | *4* |
| *126.* | *Dr.Madhan Kumar* | *29.11.2018* | -- | *29.11.2018* | *08.03.2022* | *14* |
| *127.* | *Dr.R.Jayanthi* | *30.11.2018* | -- | *30.11.2018* | -- | *3* |
| *128.* | *Punitha, EEG Technician* | *30.11.2018* | -- | *30.11.2018* | -- | *2* |
| *129.* | *Dr.Murlidhar Rajagopalan* | *04.12.2018* | -- | *04.12.2018* | -- | *3* |
| *130.* | *Dr.Parvathi Padmanabhan* | *04.12.2018* | -- | *04.12.2018* | *22.03.2022* | *4* |
| *131.* | *Dr.G.Ravichandran* | *05.12.2018* | -- | -- | *08.03.2022* | *6* |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *132.* | *Dr.U. Meenakshi Sundaram* | *05.12.2018* | *--* | *05.12.2018* | *08.03.2022* | *6* |
| *133.* | *Dr.D.Sivagnana Sundaram* | *06.12.2018* | *--* | *06.12.2018* | *--* | *3* |
| *134.* | *Dr.M.R.Girinath* | *07.12.2018* | *--* | *07.12.2018* | *18.04.2022* | *17* |
| *135.* | *Dr.L.F.Sridhar, Cardiac Surgeon* | *10.12.2018* | *--* | *10.12.2018* | *--* | *6* |
| *136.* | *Dr.J.Radhakrishnan* | *14.12.2018* | *--* | *14.12.2018*<br>*20.12.2018*<br>*04.01.2019* | *--* | *20* |
| *137.* | *A.Sivayogam* | *14.12.2018* | *--* | *14.12.2018* | *--* | *2* |
| *138.* | *B.Devika* | *14.12.2018* | *--* | *14.12.2018* | *--* | *2* |
| *139.* | *I.Boomika* | *14.12.2018* | *--* | *--* | *--* | *2* |
| *140.* | *C.Ponnaiyan* | *18.12.2018* | *--* | *18.12.2018* | *--* | *14* |
| *141.* | *Dr.Nikhil Tandon, AIIMS* | *19.12.2018* | *--* | *19.12.2018* | *--* | *4* |
| *142.* | *Dr.V.Devagourou Velayoudam, AIIMS* | *19.12.2018* | *--* | *19.12.2018* | *--* | *8* |
| *143.* | *Peter Craig Jones* | *19.12.2018* | *--* | *--* | *--* | *2* |
| *144.* | *S.Perumalsamy* | *20.12.2018* | *--* | *03.01.2019* | *--* | *12* |
| *145.* | *Dr.M.Sudhakar* | *20.12.2018* | *--* | *20.12.2018* | *--* | *7* |
| *146.* | *Dr.C.Vijayabaskar* | *21.01.2019* | *--* | *21.01.2019* | *--* | *13* |
| *147.* | *Dr.M.Thambidurai* | *22.01.2019* | *--* | *22.01.2019* | *--* | *8* |
| *148.* | *J.Elavarassi* | *21.03.2022* | *--* | *21.03.2022* | *--* | *4* |
| *149.* | *O.Panneerselvam* | *21.03.2022*<br>*22.03.2022* | *--* | *22.03.2022* | *--* | *20* |
| *150.* | *Dr.M.Nanda Kumaran* | *22.03.2022* | *--* | *-* | *--* | *2* |
| *151.* | *Dr.R.Ravi* | *22.03.2022* | *--* | *-* | *--* | *2* |

*ii. Petitioner Witnesses - 8 Nos.*

***LIST OF PETITIONERS' WITNESSES***

| PW No. | Name of the Witness | Date of Appearance | Present Stage | No. of Pages |
|---|---|---|---|---|
| 1. | Dr. P. Saravanan | 22.11.2017<br>23.11.2017 | Cross Examined | 7 |
| 2. | Thiru. K. Madhavan | 06.12.2017<br>15.12.2017 | Cross Examined | 4 |
| 3. | Tmt. J. Deepa | 13.12.2017 | Cross Examined | 10 |
| 4. | Thiru. P.A. Joseph | 20.12.2017 | Cross Examined | 4 |
| 5. | Thiru. Madurai Balan | 09.01.2018 | Cross Examined | 3 |
| 6. | Thiru. B.Balamurugan | 22.01.2018 | Cross Examined | 5 |
| 7. | Thiru. Annor P.G. Jagadeesan | 30.04.2018 | Cross Examined | 3 |
| 8. | Thiru V.A. Pugazhendi | 26.04.2022 | Cross Examined | 5 |

*2. Exhibits:*

***LIST OF APOLLO HOSPITAL EXHIBITS***

| Sl. No. | Exhibit No. | Description |
|---|---|---|
| 1 | Ex.A1 series (9 documents) | 1. True copy of the Certificate of accreditation from Joint Commission, International(JCI) |
| | | 2. Copy of Death summary (dated (07.12.2016) |

| | | |
|---|---|---|
| | | 3. *Copy of Dr.Richard Beale's Report (01.10.2016)* |
| | | 4. *Copy of 1st Report by AIIMS team of doctors (dated 05.10.2016 to 07.10.2016)* |
| | | 5. *Copy of 2nd Report by AIIMS team of doctors (dated 09.10.2016 to 10.10.2016)* |
| | | 6. *Copy of 3rd Report by AIIMS team of doctors (dated 13.10.2016 to 15.10.2016)* |
| | | 7. *Copy of 4th Report by AIIMS team of Doctors (dated 03.12.2016)* |
| | | 8. *Copy of 5th Report by AIIMS team of Doctors (dated 05.12.2016)* |
| | | 9. *Closed cover containing a Compact Disk of Press Release (dated 17.12.2016)* <br> *Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018.* |
| *2* | *Ex.A2* | *Emergency Ward Reports (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *3* | *Ex.A3* | *Case Sheet (Daily Reports) Progress Report (Daily) (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *4* | *Ex.A4* | *Progress Report Daily (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *5* | *Ex.A5* | *In-patient consultation (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *6* | *Ex.A6* | *Doctor Instruction Sheet (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *7* | *Ex.A7* | *Drug Chart Medicine Part-I (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |

| | | |
|---|---|---|
| 8 | Ex.A8 | Drug Chart Medicine Part-II (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018) |
| 9 | Ex.A9 | CCU Master Part-I (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)_ |
| 10 | Ex.A10 | CCU Master Part-II (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018) |
| 11 | Ex.A11 | CCU Master Part-III (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018) |
| 12 | Ex.A12 | Fall Risk Assessment Form (About Risk & Fall of Patient) (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018.) |
| 13 | Ex.A13 | Diabetic Chart (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018) |
| 14 | Ex.A14 | Consent Forms (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018) |
| 15 | Ex.A15 | Investigation Chart (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018) |
| 16 | Ex.A16 | Position Chart (for position of patient in bed) (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018) |
| 17 | Ex.A17 | Food and Fluid Chart (Diet) (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018) |
| 18 | Ex.A18 | Pressure Ulcer for risk assessment & treatment Chart (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018) |
| 19 | Ex.A19 | Sleep Chart (about sleeping pattern of the patient) (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018) |

| | | |
|---|---|---|
| *20* | *Ex.A20* | *Blood Transfusion Record (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *21* | *Ex.A21* | *Blood Gas & Blood Component Report (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *22* | *Ex.A22* | *Biochemistry Reports (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *23* | *Ex.A23* | *Cardiology Reports (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *24* | *Ex.A24* | *Hemetology Reports (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *25* | *Ex.A25* | *Intravenous Flow Chart (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *26* | *Ex.A26* | *Microbiology Reports Part-I (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *27* | *Ex.A27* | *Microbiology Reports Part-II (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *28* | *Ex.A28* | *Radiology Reports (CT & Others)* |
| *29* | *Ex.A29* | *Radiology Reports (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *30* | *Ex.A30* | *ECG Reports (Marked during the Cross-examination of C.W.67 dated 17.07.2018)* |
| *31* | *Ex.A31* | *Treatment Summary of the patient (Marked during the Cross-examination of C.W.88 dated 07.09.2018)* |
| *32* | *Ex.A32* | *Guidelines for provision of Nutrition Society of Critical Care Medicines (SCCM) and American Society for Parenteral and Enteral Nutrition* |

| | | |
|---|---|---|
| | | *(A.S.P.E.N) (Marked during cross-examination of C.W.73).* |
| *33* | *Ex.A33* | *A Prospective Multicenter Study on Causes and Characteristics of Death in Intensive Care Units (Marked during cross-examination of C.W.83).* |
| *34* | *Ex.A34* | *Plan Sketch of Apollo Hospital Building before 2016-17 ((Marked during cross-examination of C.W.87).* |
| *35* | *Ex.A35* | *Plan Sketch of Apollo Hospital Building during 2016-17 ((Marked during cross-examination of C.W.87).* |
| *36* | *Ex.A36* | *Plan Sketch of Apollo Hospital Building After 2016-17 ((Marked during cross-examination of C.W.87).* |
| *37* | *Ex.A37* | *Resolution passed by Board of Directors of Apollo Hospital dated 24.01.2007 (Marked during Chief-examination of C.W.96).* |
| *38* | *Ex.A38* | *Plan Sketch of Apollo Hospital Building marking the room of last breath of Late C.M. Selvi J Jayalalithaa (Marked during cross-examination of CW-89 on 04.10.2018.* |
| *39* | *Ex.A39* | *Plan showing the II Floor of the building of Apollo Hospital at the time of admission of Late Hon'ble Chief Minister Selvi J Jayalalithaa.* |
| *40* | *Ex.A40* | *Plan showing the II Floor of the building of Apollo Hospital during the hospitalization of Late Hon'ble Chief Minister Selvi J Jayalalithaa.* |

| | | |
|---|---|---|
| *41* | *Ex.A41* | *Plan showing the II Floor of the building of Apollo Hospital after the death of Late Hon'ble Chief Minister Selvi J Jayalalithaa.* |
| *42* | *Ex.A42* | *Press Release of Apollo Hospital dated 21.10.2016 (marked during the cross-examination of CW-96 on 24.10.2018).* |
| *43* | *Ex.A43* | *Copy of photo showing the visit of the C.M. to Apollo Hospital where the brother of Deputy C.M.* |
| *44* | *Ex.A44* | *Copy of photo of press meet of CW-146 (Mr.C.Vijayabaskar)* |
| *45* | *Ex.A45* | *ECG and Cardiograph related documents submitted by C.W.80 on 07.03.2022* |
| *46* | *Ex.A46* | *Medical Lab report submitted by C.W.96 on 06.04.2022.* |

***LIST OF COMMISSION EXHIBITS***

| *Sl. No* | *Exhibit No.* | *Date of Marking* | *Description* | *Produced by* |
|---|---|---|---|---|
